# மெஹர் பிரபு

## (MEHER PRABHU)

**இக்கால அவதார புருஷரின் வருகை**
**(ADVENT OF THE AVATAR)**

# மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு

## (MEHER BABA'S LIFE HISTORY)

**குறுகிய தமிழாக்கம்**
**(TAMIL TRANSLATION - ABRIDGED)**

## தொகுப்பு நான்கு

## (VOLUME FOUR)

**1931 - 1932**

# இறைவனின் அன்பளிப்பு

இடம், காலம், பொருள் இவற்றை இறைவனன்றி வேறு யாரறிவர்? எது, எங்கு, எப்படி, எப்போது நடக்கவேண்டுமோ அதை நடத்துபவனும் அவனே! தனிப்பட்ட மனிதனால் முடிவது கையளவாக இருந்தாலும் கடவுளின் கருணையால் நிகழ்வது கடலளவு. இருந்தும் அனைத்தையும் தனிமனிதன் செய்வதுபோலத் தோற்றமளிக்கச் செய்வது மாயையின் கைவண்ணம்; இதுவே, இந்த இறை நாடகத்திற்கு இறைவன் எழுதிய திரை, கதை, வசனம்.

மெஹர் பாபாவின் வரலாற்றுத் தொகுப்பிற்கு உயிரூட்டம் அளித்தவர் அவரே என்றாலும், உருவாக்கம் தந்த நூலாசிரியர் அவருடைய நெருங்கிய மண்டலியில் ஒருவரான,

ஸ்ரீ பாவ் கல்சூரி.

இந்தி மொழியில் கவிதை வடிவில் உருவகம் கொடுக்கப்பட்ட வரலாறு, உரைநடை பாணியில், ஆங்கிலத்தில் ஆக்கம் தந்தவர், மெஹர் பாபாவின் அரவணைப்பில் இருந்த,

ஸ்ரீ ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா.

மொத்தத்தில் ஏறக்குறைய 6000 பக்கங்கள், 20 தொகுப்புகள். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆங்கிலத்தில் வெளியிட்டவர்,

ஸ்ரீ லாறன்ஸ் ரைட்டர்.

இந்த வரலாற்றுத் தொகுப்பு, நாளடைவில், பல மொழிகளில் முழுமையாக அல்லது குறுகிய வடிவில் வெளிவந்துள்ளது. தமிழ் மக்களுக்கும் இது ஒரு பொக்கிஷமாக அமைய வேண்டும் என்ற ஆர்வத்தில் சமர்ப்பணம் செய்பவர்:

**தமிழாக்கம் & புத்தக வடிவமைப்பு:**
கு. ராதாகிருஷ்ணன்
வேலம்மாள் ராதாகிருஷ்ணன்
முகேஷ் சிவகுமார்
நித்யகலா நிர்மல்
பூனா, டிசம்பர், 2020
✉ vela.radhakrishnan@gmail.com
✆ +91 9225631113

REV:02/23.11.2024

# பிரபஞ்சத்தின் இறைவன்

பிரபஞ்சத்தின் அதிபதி அவதார புருஷர் ஒருவரே; அது அவருடைய பொறுப்பு மட்டுமே. பிரபஞ்சத்தை வாழ வைப்பதும், அதன் உந்துதலால் பரிணாம வளர்ச்சியைப் பராமரிப்பதும் அவரது பணி. அத்தகைய உலகளாவிய பணியை, உலகின் படைப்பில் வாழும் அனைத்திற்கும், அனைவருக்கும் அவதார புருஷர் ஒருவரே செய்ய முடியும். உண்மையில், கற்பனை செய்ய இயலாத நிலையில் இருக்கும் ஒருவர், அவதார புருஷர் செயல்படும் அவரது உலகளாவிய மனதின் கண நேர பார்வை வழியாக, பரிணாம காலச்சுழற்சியில் யுகம் யுகமாக, பல கோடிக்கணக்கான உலகங்கள், எண்ணிலடங்கா பௌதீக வடிவங்கள், சக்திமிக்க சூட்சும மற்றும் ஆழ்மன உடல்கள் வெளிப்படுவதைக் காண்பது சாத்தியம்.

பிரபஞ்சம் என்று அழைக்கப்படும் இந்த மாபெரும் அமைப்பின் தனிமுதலான அழகு மற்றும் அற்புதத்திலிருந்து அவதார புருஷர், ஒவ்வொன்றிலும், ஒவ்வொருவரிடத்திலும், இறை ஞானம் மற்றும் இறை உணர்வுடன் மானிடனாக உருவெடுத்து, பிரபஞ்சத்தின் இறைவனாக பூமியில் அவதரிக்கிறார். அவர் ஒவ்வொரு துளியையும் உள்ளடக்கும் பெருங்கடலாக, எல்லையில்லா உணர்வற்ற நிலையின் அளவிறுதியற்ற தன்மையை ஒவ்வொரு துளியிலும் அனுபவிக்கிறார் - மேலும் இந்த உணர்வற்ற கடலின் எல்லையற்ற நிலையே, பிரபஞ்சமாகப் பார்க்கப்படுகிறது. பிரபஞ்சத்திற்கு அதன் சுயமான அறுதிப்பொருள் எதுவும் இல்லை - ஒன்றுமில்லாத தன்மை; அதன் பொதுவான இறுதி அர்த்தத்தில் மாயை.

இந்த மாயையைப் பாதுகாத்து பராமரிப்பவர் யார்? அது ஒன்றும் இல்லாத நிலையில் இருப்பதானால் ஏன் இருக்க வேண்டும்? மாயை, உண்மைப்பொருளைத் தக்கவைத்துக் கொள்வதானால், எந்த சக்தி மாயையைத் தக்கவைக்கிறது? 'அன்பு'. அவதார புருஷர் மாயையை நேசிப்பதன் மூலம் அதைத் தக்கவைத்துக் கொள்கிறார்; மேலும் அவர் தனது முழு வாழ்க்கையையும் பிரபஞ்சத்திற்கு அர்ப்பணிப்பதன் மூலம், இந்த மாயையைப் பேணி பாதுகாக்கிறார். இது அவரது அறுதியான, நிலையாக நீடிக்கும் பணி, காலங் காலமாக, காலச்சுழற்சிக்குப் பின் சுழற்சியாக இப்படித் தொடர்ந்து கொண்டிருக்கிறது, ஏனெனில் இது கடல்மயமாக்கப்பட்ட அவரது தனிப்பட்ட வாழ்வின் பொருளாகும். பிரபஞ்சம் அவருடைய அன்பினால் நிலைத்திருக்கிறது, அந்த அன்பின் நிமித்தம் அவர் பிரபஞ்சத்தில் வருகிறார்.

அவதார புருஷர் மாயையைப் பேணி பாதுகாக்கவும், அதே நேரத்தில், அதைக் கடக்கும் ஆயத்த நிலையில் இருப்பவர்களை மாயையிலிருந்து விடுவிக்கவும் வருகிறார். அத்தகைய ஆயத்த நிலையில் இருப்பவர்கள், அவர்களின் சுய 'அகந்தை-மனதை' அடைந்ததற்கான உரிய விலையைத் தந்தவர்கள். அவதார புருஷர் பிரபஞ்சத்தின் மாயத் தன்மையைப் பேணி, பராமரிக்கிறார், ஏனெனில் பிரபஞ்சத்தில் வியாபித்திருக்கும் சக்தி - எல்லையில்லா உணர்வற்ற நிலைக்கும், எல்லையில்லா உணர்வு நிலைக்கும்

இடையிலான ஓர் இறை சக்தி. இரண்டு எல்லையில்லா சக்திகள் ஒன்றிணையும்போது, அது உறுதியான இறுதி விளைவுகளை - அதாவது பிரபஞ்சத்தின் உருவாக்கம், பாதுகாத்தல், அழித்தல் மூன்றையும் - ஏற்படுத்துகிறது. அவதார புருஷர் ஒரே நேரத்தில் எல்லையில்லா உணர்வற்ற நிலையையும், எல்லையில்லா உணர்வையும் கொண்டிருப்பதால், அவர் பூமியில் பௌதீக உடலில் வாழும் வேளையில், இந்த இரு எல்லையற்ற நிலைகளும் அவரது வாழ்வோடு ஒன்றிணைக்கப்படுகின்றன; இக்காரணத்தால் எல்லையில்லா உணர்வற்ற நிலையிலிருந்து, எல்லையில்லா உணர்வு நிலையை நோக்கிப் பயணம் செய்யும் அனைவருக்காகவும் அவர் செயல்படுகிறார். ஒவ்வொரு துளியும் கடலாக மாற வேண்டும். பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வோர் உயிரினத்திற்கும் உணர்வின் ஆழமான ஓர் உலகளாவிய உந்துதலை வழங்குவதன் மூலம், அவர் ஒவ்வொரு நிலையிலும் இதைச் செய்கிறார்; இது பிரபஞ்சத்தின் பரிணாம வளர்ச்சியிலும், பூமியில் தனிநபர்களின் ஆன்மீக ஈடுபாட்டிலும் மிகப்பெரிய உற்சாகத்தை ஏற்படுத்துகிறது.

இந்த வரலாறு காணாத வாழ்க்கை வரலாற்றின் நான்காவது தொகுப்பு, அவதார் மெஹர் பாபாவின் வாழ்க்கையின் பதினைந்து மாதங்களை - ஆகஸ்ட் 1931 முதல் நவம்பர் 1932 வரை - உள்ளடக்கி, அவர் முழு உலகத்துடனும் எவ்வளவு ஆழமாக இணைந்திருக்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறது. இந்தத் தொகுப்பு முழு உலகெங்கிலும் தொடர்ச்சியான பயணங்களின் ஒன்றாகும் - கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளை ஒரு பொதுவான பிணைப்பில் ஒன்றிணைக்க மெஹர் பாபாவின் விரிவான முயற்சிகளை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. மெஹர் பாபா உலகத்தில் அவரது பணியின் முக்கியத்துவத்தை மண்டலிக்கு விளக்கினார்:

**“எனது உலகளாவிய படைப்பை நீங்கள் ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது. எனது அவதார காலகட்டத்தில், நான் உலகை முழுவதுமாக சுத்திகரிக்க வேண்டும். இந்த மாற்றியமைக்கும் செயல்முறை ஆயிரம் ஆண்டுகள் நீடிக்கும். எனது அவதார காலகட்டத்தின் மிகப் பெரிய பணி, கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளை ஒன்றிணைப்பதாகும். நான் உலகளாவிய அவதார புருஷர், முந்தைய வருகைகளைப் போல, கிழக்கு அல்லது மேற்குக்கான தனித்தனி அவதாரம் அல்ல; நான் முழுப் பிரபஞ்சத்தையும் சேர்ந்தவன். இதனால்தான் மேற்கத்தியர்கள் எனது வலையில் எளிதாகச் சிக்கிக் கொண்டு, என்னை நேசிக்கவும் முடிகிறது. நான் வலையை வீசினேன், மீன்கள் பிடிபட்டன. இப்போது இந்த மீன்கள் வலையிலிருந்து தங்களை விடுவிக்க விரும்பவில்லை.”**

மெஹர் பாபாவின் மேற்கத்திய பயணத்தைக் குறித்து அவர் கூறியதாவது:

**நான் மேற்கத்திய நாடுகளுக்கு வருவது, புதிய மதங்கள் அல்லது ஆன்மீக சமூக அமைப்புகளை நிறுவுவதற்காக அல்ல, அதே வேளையில், மதத்தை அதன் உண்மையான அர்த்தத்தில் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்**

**என்பதே அடிப்படை நோக்கம். உண்மையான மதம் என்பது சரியான மனோபாவத்தை வளர்த்துக் கொள்வதில்தான் உள்ளது, இது இறுதியில் - பிரபஞ்சம் முழுவதும் ஓர் எல்லையில்லா இறைவன் மட்டுமே இருப்பதைக் காணும்; ஒருவர் உலகில் வாழும் வேளையில், அத்துடன் ஒன்றிவிடாமல், அனைவருடனும், அனைத்துடனும் இணக்கமாக இருக்கச் செய்யும்; ஒருவர் அனைத்து உலக கடமைகள் மற்றும் விவகாரங்களில் கலந்துகொள்ளும் நேரத்தில், அவற்றின் எல்லா முடிவுகளிலிருந்தும் முற்றிலும் விலகியிருக்கச் செய்யும்; கலை, அறிவியல் இரண்டிலும் ஒரே தெய்வீகத்தை ஒருவர் காணவும், மேலும் அன்றாட வாழ்க்கையில் மிக உயர்ந்த உணர்வு நிலையையும், பிரிக்க முடியாத ஆனந்தத்தை அனுபவிக்கவும் வழிவகுக்கும்.**

**உலகின் அனைத்து பெரிய, அங்கீகரிக்கப்பட்ட மதங்கள், அவற்றின் கட்டமைப்புகள் தடுமாறுவதை நான் காண்கிறேன். மேற்கத்திய நாடுகள் குறிப்பாக, பொருள் வளங்களை நோக்கி வெகுவாக சாய்ந்திருக்கின்றன, இது, நம் அறிவுக்குத் தெரிந்து, விழிப்புணர்வை அடைந்த காலத்திலிருந்து போர், கொள்ளைநோய் மற்றும் நிதி நெருக்கடிகளைக் கொண்டு வந்துள்ளது. பொருள்முதல்வாதத்தை நான் வெறுத்து, நிராகரிப்பதாகப் புரிந்து கொள்ளக்கூடாது; இது ஒன்றுதான் முக்கிய இலக்காகவும் கருதப்படக்கூடாது, ஆனால் இறுதி இலக்குக்கு ஒரு வழிமுறையாக இருக்க வேண்டும் என்று நான் கூறுகிறேன்.**

**உலகின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், பொற்காலத்தை நிலைநாட்டுவதற்கும் 'லீக் ஆஃப் நேஷன்ஸ்'** (LEAGUE OF NATIONS) **போன்ற ஒழுங்கமைக்கப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்கத்திய நாடுகளின் சில பகுதிகளில், குறிப்பாக அமெரிக்காவில், மதத்தின் உண்மை தன்மையை அறிந்து கொள்ளாமல், உண்மைப்பொருளைப்** (TRUTH) **பற்றி அறிவுபூர்வமாகப் புரிந்துகொள்ள முயற்சிக்கப்படுகிறது, இது இருளில் ஒன்றைத் தேடுவது போன்றது.**

**ஒரே சரத்தில் கோர்க்கப்பட்ட மணிகள் போல் அனைத்து மதங்களையும், வழிபாட்டு முறைகளையும் ஒன்றாகக் கொணர்ந்து, தனிப்பட்ட மற்றும் கூட்டுத் தேவைகளுக்குப் புத்துயிர் வழங்க விரும்புகிறேன். இதுவே மேற்கத்திய நாடுகளுக்கான எனது பணி. கவலை கொண்டிருக்கும் இந்த உலகத்தில், நான் கூறும் அமைதியும் நல்லிணக்கமும் வெகு தொலைவில் இல்லை.**

முந்தைய அவதார புருஷர்கள் அல்லது தீர்க்கதரிசிகளோடு ஒப்பிடும் வேளையில், அனைத்து மனிதர்களும் அணுகும் வகையில் மெஹர் பாபா தனித்துவமானவர். ஐரோப்பியர்கள் அல்லது அமெரிக்கர்கள், ஜப்பானியர்கள் அல்லது சீனர்கள், சிங்களத்தார் அல்லது எகிப்தியர்கள், முஸ்லிம்கள் அல்லது இந்துக்கள், அனைவரும் நேரடி தொடர்பில் வரும் விதத்தில் பாபா தன்னை வெளிப்படுத்தி, குருநாதரின் வடிவத்தில் கடவுளுடன் இயற்கையான தொடர்பை உருவாக்கினார். இது ஆன்மீகத்தின் பழைய தவறான கருத்துக்களை

முறியடிக்கிறது; மதத்தை நாடாமல், கடவுளை மனிதனின் அன்றாட வாழ்க்கையின் ஒரு முக்கிய அங்கமாக மாற்றுவது, உண்மையிலேயே மெஹர் பாபா கொண்டு வந்த மிகப் பெரிய பொக்கிஷங்களில் ஒன்றாகும். மெஹர் பாபா மனிதனின் இயற்கை உலகின் பாரம்பரியத்தையும், தெய்வீக பிறப்புரிமையையும் மீட்டெடுத்தார், முழு உலகத்திற்கும் அவதார புருஷராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். தனது உலகளாவிய வெளிப்பாட்டின் போது, மெஹர் பாபா அனைவரையும், படைப்பில் உள்ள அனைத்தையும் நேசிக்கிறார் என்பதை உலகிற்கு வெளிப்படுத்துவார்.

## முன்னுரை வழங்குபவர்:
## க.வீரமணி, பொது மேலாளர் (ஓய்வு), டாடா மோட்டர்ஸ்.

அன்பான தமிழ் நெஞ்சங்களுக்கு எனது பணிவான வணக்கங்கள். ஆன்மீகத்தின் அடித்தளமான, அவதார் மெஹர் பாபாவின் முதல் மூன்று தொகுப்புகளையும் படித்து, என்னைப் போல நீங்களும் பரவசம் அடைந்திருப்பீர்கள். இந்த மூன்று தொகுப்புகளில் பாபாவின் இளமைப்பருவம், இறை உணர்வு, சீடர்களின் வட்ட அமைப்பு, நாடு முழுவதும் நடைப்பயணம், பேருந்து, கப்பல் வழி பயணம், சிறுவர்களுக்கு இலவச கல்வி, மருத்துவமனை, ஆன்மீக உபதேசங்கள், மெஹர் பாபாவின் மௌனம், இரகசிய புத்தகம், மெஹராஷ்ரமம், பிரேமாஷ்ரமம், இமயமலை, குவெட்டா, காஷ்மீர் பயணம் இதுபோன்ற பல நிகழ்வுகளைப் படம்பிடித்துக் காட்டியதுபோல், ஒவ்வொரு கட்டத்திலும், வாழும் வழிமுறைகளை மெஹர் பாபா கற்றுத்தந்தார் என்றால் மிகையாகாது.

இந்த நான்காவது தொகுப்பில், 1931 ஆகஸ்ட் முதல் 1932 நவம்பர் வரையிலான சில முக்கிய நிகழ்வுகளை குறிப்பிட விரும்புகிறேன்.

முதல் முறையாக மெஹர் பாபா, இங்கிலாந்திற்குப் பயணம் செய்யும் கப்பலில், லண்டன் வட்டமேசை மாநாட்டில் பங்கேற்கச் சென்ற மஹாத்மா காந்தியுடனான சந்திப்பின் நிகழ்வுகள் ஒவ்வொன்றும் தற்செயலாக நடப்பதுபோலத் தோன்றினாலும், இறைவன் அவற்றை வழிநடத்தும் முறைகளை, மனித மனம் புரிந்துகொள்ள மறுத்தாலும், இதயம் அவற்றை அறிந்து கொள்ளும் என்பதைத் திடமாக நம்பலாம். மெஹர் பாபா, அவருடைய இரகசிய புத்தகத்தின் ஒரு பகுதியை முதல் முறையாக, காந்திக்குப் படிக்கக் கொடுத்தது அவருடனானத் தொடர்பை வெளிப்படுத்துவது மட்டுமல்லாமல் இந்திய தேசத்தின் மேம்பாட்டிற்காக, பாபா, காந்தியை ஒரு கருவியாகப் பயன்படுத்தும் விதம் அற்புதம். இந்தத் தொடர்பு பல ஆண்டுகள் இந்திய தேசத்தின் விடுதலைக்கான அடித்தளம் அமைப்பதுவரைத் தொடர்ந்தது. காந்தியைப் பற்றிய மெஹர் பாபாவின் கருத்துரை, ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களையும் ஆய்வதுபோல வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. இது இறைவனின் வெளிப்பாடு; நாம் அறிய வேண்டிய உண்மை.

இரண்டாவதாக, வெளியளவில் முன்பின் தெரியாத மேற்கத்திய மக்கள் காந்தம் இரும்பை ஈர்ப்பது போல, மெஹர் பாபாவுடன் வந்திணைந்து, அவரை இயேசுவின் இரண்டாவது வருகை என்று நிபந்தனையற்ற முறையில் ஏற்றுக்கொள்ளும் விதம் ஒருவரை மெய்ச்சிலிர்க்க வைக்கும். இது உடலளவிலான சம்பந்தம் அல்ல, பரமாத்மாவின் உயிரளவிலான சம்பந்தம்; அவருக்காக உயிரையே அர்ப்பணம் செய்யும் பந்தம். மெஹர் பாபாவை முதன்முதலாக சந்தித்த ஒவ்வொருவரின் அனுபவங்களை அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

மேற்கத்திய மக்கள் மெஹர் பாபாவிடம் எழுப்பிய, ‘ஆன்மீகத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு நாளும் ஏதாவது செய்வதை வழக்கத்தில் கொள்ள வேண்டுமா?’ போன்ற பல கேள்விகளுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்:

**“காலையில் உங்கள் முகத்தைக் கழுவி, சுத்தம் செய்த பின்னர், என்னை ஐந்து நிமிடங்கள் தியானம் செய்யுங்கள், தனியாக, சலிக்காமல், தனிமைப்படுத்தப்பட்ட இடத்தில் செய்யுங்கள். நான் உங்களை ஆன்மீக ரீதியில் வழிநடத்துவேன், வார்த்தைகளால் அல்ல. நான் உங்களோடு இருப்பதை நீங்கள் உணர்வீர்கள்.**

**“என்னைப் பார்த்ததும் மக்களின் கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. அவர்கள் கடவுளை நேசிப்பதில்லை என்று சொல்லும்போதும் கூட என்னை நேசிக்கிறார்கள். ஏனெனில் நான் ஆசைகளிலிருந்து முற்றிலும் விடுபட்டவன்; தலை முதல் பாதம் வரை அன்பால் நிறைந்தவன்; இது என்னிடம் வரும் அனைவரையும் சாதி, மதம், நிறம், பெரியவர், சிறியவர் எனும் வேறுபாடுகளை மறந்து நேசிக்கத் தூண்டுகிறது.”**

பாபா, லண்டனிலிருந்து, துருக்கி, இத்தாலி வழியாக அமெரிக்காவிற்கு, கப்பலில் புறப்பட்டு நியூயார்க் சென்றார். நியூயார்க் நகரில் பாபா அளித்த நேர்காணலில், **“உலகத்தில் வாழுங்கள், அதே வேளையில், எல்லாம் உலகம்தான் என்று எண்ணாமல், பற்றற்றவராக இருங்கள்; உங்கள் கடமைகளைத் தொடர்ந்து செய்யுங்கள்; ஆனால் மாயையின் பிடியில் சிக்கிவிடாதீர்கள். ஒருபோதும் கவலைப்பட வேண்டாம், சிரமங்களுக்கு மத்தியிலும் மகிழ்ச்சியாக இருக்க முயற்சி செய்யுங்கள்.**

**“நித்திய, நிரந்தர வாழ்வும் நானே! நானே கிருஷ்ணா, நானே புத்தா, நானே இயேசு! இப்போது நான் மெஹர் பாபா”** என்று பறைசாற்றினார். பின்னர் அவர்களிடம் பாபா, ‘**கிழக்கத்திய நாடுகளில் மக்கள் என்னை வழிபடுகிறார்கள்; மேற்கில் மக்கள் என்னை நேசிக்கிறார்கள்**’ என்று கூறினார்.

1932, ஜனவரி 1ஆம் நாள், ஏறக்குறைய ஐந்து மாத பயணத்திற்குப் பின்னர் இந்தியா வந்தபோது, காந்தியின் வேண்டுகோளுக்கிணங்கி டாக்டர். அம்பேத்கரை சந்தித்து அறிவுரைகள் வழங்கினார்.

மெஹர் பாபாவின் இரண்டாவது மேற்கத்திய பயணத்தின்போது, ‘லண்டன் ஸன்டே எக்ஸ்பிரஸ்’ பத்திரிகையின் ஆசிரியர் ஜேம்ஸ் டக்ளஸ், பாபாவை சோதிக்கும் பல தந்திரமான கேள்விகளைத் தயார் செய்து, பாபாவைப் பார்த்ததும் பேசமுடியாமல் வியர்த்து நடுங்கினார். பாபா, அவரை ஆறுதல் படுத்தி, அவருடைய கேள்விகளுக்கு அளித்த சிறப்புமிக்க பதில்கள் எந்த ஒரு நாத்திகனையும் சிந்திக்கத் தூண்டும். ஒரு சில கேள்விகளுக்கான மெஹர் பாபாவின் பதில்களை மட்டும் பார்ப்போம்:

“இன்று எந்த மதம் உயர்ந்ததாகக் கருதப்படுகிறது?”

**“ஒரே கடவுளை உணர்ந்து கொள்வதற்கான வெவ்வேறு பாதைகள் இருப்பதால், எல்லா மதங்களையும் சமமாக நான் கருதுகிறேன்!”**

“நீங்கள் எந்த மதத்தை நம்புகிறீர்கள்?”

**“நான் ஜாதி மதங்களுக்கு அப்பாற்பட்டவன். எல்லா மதங்களும் எனக்குச் சொந்தமானவை, ஆனால் எனக்கு எந்த ஜாதி, சமூகம் அல்லது மதத்துடனும் சிறப்பான உறவு எதுவும் இல்லை. நான் கடவுளோடு ஒன்றிணைந்து இருக்கிறேன், கடவுள் ஒவ்வொன்றிலும், ஒவ்வொருவரிடமும் இருக்கிறார்.”**

“உலகில் தீமை இருக்கிறதா?”

**“இல்லை, தீமை என்ற எதுவும் இல்லை”** என்று பாபா பதிலளித்தார்.

“அப்படியானால், திருட்டு, கொலை, கற்பழிப்பு, துரோகம், நேர்மையற்ற தன்மை, ஒழுக்கக்கேடு, சித்திரவதை போன்ற ஆயிரத்து ஒரு தீமைகளை நீங்கள் எவ்வாறு விளக்குகிறீர்கள்?

**“அவை நல்லது எனும் அளவுகோலில் அதிக அளவில் அல்லது குறைந்த அளவில் இருக்கும்.”**

பாபா மேலும் விளக்கிக் கூறுகையில், **“நான் கூறியது போல், உலகில் பேரின்பத்தைத் தவிர வேறொன்றும் இல்லை. உலகம் தீமை என்று அழைப்பது நன்மையின் மிகக் குறைந்த அம்சமாகும்.”**

“நிச்சயமாக, நிச்சயமாக,” டக்ளஸ் அறிவித்தார். “எவ்வளவு எளிதானது! இதுபோன்ற ஒரு எளிய விஷயத்தை மக்கள் ஏன் புரிந்து கொள்ள முடியாது என்பது ஆச்சரியமளிக்கிறது! “உங்கள் ரகசிய செய்தி அல்லது சிறப்பு அறிவுரை ஏதாவது?”

**“அகந்தையை அழித்தல்.”**

இவ்வாறு ஜேம்ஸ் டக்ளஸின் கேள்விகள் தொடர்ந்தன, பாபாவின், இதயத்தை நெகிழச் செய்யும் பதில்கள் டக்ளஸை திக்குமுக்காடச் செய்தன.

இரண்டாவது அமெரிக்க பயணத்தின் தொடக்கத்தில், பாபா அனைத்து பத்திரிகை ஆசிரியர்களுக்கும் பொதுவாக ஒரு கருத்துரையை வழங்கினார். தொடர்ந்து ஹாலிவுட்டில் வழங்கிய நேரடி பேட்டிகளும், உரைகளும் காலத்தால் அழியா இறைவனின் சிறப்புமிக்க அறிவுரைகளாக என்றென்றும் இருக்கும். இந்த முழு விளக்கங்களையும் முன்னுரையில் முன்வைக்க முடியாது; புரிந்து படித்தால் மனதிற்கு மருந்தாகவும், இதயத்திற்கு விருந்தாகவும் இருக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. நான் பெறும் இன்பம் இந்தத் தமிழ் உலகமும் அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் உங்கள் பயணத்திற்கு வாழ்த்துக் கூறி நிறைவு செய்கிறேன்.

ஜெய் பாபா.

# நிகழ்வுகளின் காலவரிசை

**1931**
- ஆகஸ்ட் **29,** மெஹர் பாபா, மும்பை கப்பல் தளத்திலிருந்து, எஸ்.எஸ்.ராஜ்புத்னா கப்பலில் முதல் மேற்கத்திய பயணம்.

**1931**
- செப்டம்பர் **9,** மெஹர் பாபா - மஹாத்மா காந்தி எஸ்.எஸ்.ராஜ்புத்னா கப்பலில் முதல் சந்திப்பு

**1931**
- மார்ஸெல்லஸ், பாரிஸ், ஃபோக்ஸ்டன் வழியாக லண்டன் வருகை
- செப்டம்பர் **13 - 24,** கூம்ப் மார்ட்டின், டெவன்ஷர் விஜயம்

**1931**
- செப்டம்பர் **21,** பூனாவில் ஹஸ்ரத் பாபாஜான் அவரது உடலைத் துறந்தார்

**1931**
- செப்டம்பர் **29,** கென்ஸிங்டன், **32,** ரஸ்ஸல் சாலை, லண்டன் - கவிஞர்கள், விஞ்ஞானிகள், இசைக்கலைஞர்கள் மெஹர் பாபாவுடன் சந்திப்பு

**1931**
- அக்டோபர் **2,** மெஹர் பாபா - காந்தி சந்திப்பு, கிங்ஸ்லி ஹால் சமூக மையம், ப்ரோம்லி-பை-பௌ, லண்டன்

**1931**
- அக்டோபர் **3 – 6,** துருக்கி பயணம் - வெனிஸ், பெல்கிரேட், ஸோஃபியா வழியாக இஸ்தான்புல் வருகை

**1931**
- அக்டோபர் **14-18,** மிலான் வருகை. இத்தாலி ஆல்ப்ஸ் மலை

**1931**
- அக்டோபர் **27** - நவம்பர் **6,** எஸ்.எஸ். ரோமா கப்பலில் நியூயார்க் - முதல் அமெரிக்கா பயணம் - மெஹர் பாபா ஹார்மன் ரிட்ரீட் வருகை

**1931**
- டிசம்பர் **5,** வட ஜெர்மன் லாயிட் லைனர் எஸ்.எஸ். ப்ரெமன் கப்பலில் ஃபிரான்ஸ் நகரை நோக்கிப் பயணம்

**1931**
- டிசம்பர் **11,** ஷெர்பர்க் துறைமுகம் வழியாக பாரிஸ் பயணம்
- டிசம்பர் **16,** மார்ஸெல்லஸ் துறைமுகத்திற்கு ரயிலில் பயணம்

**1931**
- டிசம்பர் **18,** எஸ்.எஸ். நர்குண்டா கப்பலில் இந்தியா பயணம்
- டிசம்பர் **22,** 'போட் ஸெட்' - எகிப்து வருகை

**1932**
- ஜனவரி **1,** மும்பை, இந்தியா வருகை
- ஜனவரி **3,** மெஹர் பாபா - காந்தி சந்திப்பு - மணி பவன், காம்தேவி, மும்பை

| | |
|---|---|
| **1932** | • மார்ச் 24, மெஹர் பாபாவின் இரண்டாவது இங்கிலாந்து பயணம் - இத்தாலிய கப்பல் 'கோன்டே றோஸ்ஸோ' |
| **1932** | • ஏப்ரல் 4 - 6, வெனிஸ் வருகை - 'ஸெயின்ட் மார்க்ஸ்' சதுக்கம், 'கிராண்ட்' கால்வாய் - காண்டுலாவில் சவாரி - வெனிஸிலிருந்து மிலானுக்குப் பயணம் |
| **1932** | • ஏப்ரல் 7, லண்டன் வருகை<br>• ஏப்ரல் 17, டெவன்ஷர் மையம் வருகை |
| **1932** | • ஏப்ரல் 27, பாரிஸ் ஈஃபில் கோபுரம், லுகானோ சுவிட்சர்லாந்து, மவுண்ட் ஜெனரோஸோ வருகை |
| **1932** | • ஏப்ரல் 30, மெஹர் பாபாவின் தந்தையார் ஷெரியார்ஜி காலமானார். |
| **1932** | • மே 7 - 9, பாரிஸ், புலோக்ன், ஃபோக்ஸ்டன் - (படகில்) லண்டன் வருகை<br>• மே 14, ப்ரேமன் கப்பலில் இரண்டாவது அமெரிக்கா பயணம் ஆரம்பம் |
| **1932** | • மே 24, மெஹர் பாபா, ஒரு சிறிய இளஞ்சிவப்பு பூவை எலிஸபெத்திடம் கொடுத்து அன்றைய தேதியைக் குறித்து வைக்கக் கூறிய நிகழ்வு |
| **1932** | • மே 29, லாஸ் ஏஞ்சலஸ் ஹாலிவுட் வருகை |
| **1932** | • ஜூன் 4, மான்டேரி கப்பலில் ஹொனலுலு புறப்பட்டனர்<br>• ஜூன் 11, ஜப்பானின் எம்பரஸ் கப்பலில் சீனா நான்கிங் பயணம் |
| **1932** | • ஜூன் 28, ஷாங்ஹாயிலிருந்து கைசர்-இ-ஹிந்த் கப்பலில் மும்பை பயணம்<br>• ஜூலை 1-15, ஹாங் காங், சிங்கப்பூர், கொழும்பு, மும்பை வருகை |
| **1932** | • ஜூலை 16 - 29, மும்பையிலிருந்து அதே கப்பல் கைசர்-இ-ஹிந்தில் மார்ஸெயில்ஸ் நகருக்கு பயணம், ஸான்டா மார்கரிட்டா வருகை |
| **1932** | • ஆகஸ்ட் 6, அஸிஸி மலை குகையில் பாபாவின் ஏகாந்தவாசம் |
| **1932** | • ஆகஸ்ட் 8, ஃபுளோரன்ஸ், போர்குண்டோ மவுண்ட் மான்டேஸெரி வருகை (ஜீஸஸ் முதன் முதலில் ஸெயிண்ட் ஃபிரான்சிஸ்க்கு காட்சி அளித்த இடம்) |

1932
- ஆகஸ்ட் **11,** போர்ட ஃபினோ பயணம்

1932
- ஆகஸ்ட் **17 - 18,** வெனிஸ் வருகை. ஸெயின்ட் மார்க்ஸ் சதுக்கத்திற்கு விஜயம்

1932
- ஆகஸ்ட் **20 - 29,** 'ஆஸோனியா' கப்பலில் எகிப்து பயணம் - கெய்ரோ, போர்ட் ஸாயீட் - எம்.வி. விக்டோரியாவில் இந்தியாவுக்குப் பயணம்.

1932
- செப்டம்பர் **5,** மும்பை, நாசிக் வருகை

1932
- செப்டம்பர் **13,** மெஹர் பாபா - டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் சந்திப்பு

1932
- செப்டம்பர் **21,** சாஞ்சி, ராம்ஜூ இருவரும் பூனா ஏர்வாடா சிறையில் இருந்த மஹாத்மா காந்தியுடன் சந்திப்பு

1932
- தொடரும்...

# பொருளடக்கம்


இறை கீதத்தை மீட்டும் மேற்கத்திய நாடுகள் - காந்தியுடன் முதல் சந்திப்பு........................................................ 3

இறை கீதத்தை மீட்டும் மேற்கத்திய நாடுகள் - லண்டன், டெவன்ஷர்................................................................ 26

மேற்கத்திய நாடுகள் - இஸ்தான்புல் (துருக்கி)............... 72

இறை கீதத்தை மீட்டும் மேற்கத்திய நாடுகள் - நியூ யார்க் (அமெரிக்கா)................................................................ 80

எகிப்து வழியாக இந்தியா வருகை....................................130

இரண்டாவது இங்கிலாந்து பயணம் - லண்டன், டெவன்ஷர்..................................................................157

லுகானோ, சுவிட்சர்லாந்து ....................................................185

இரண்டாவது அமெரிக்கா பயணம் - நியூயார்க், ஹாலிவுட், கலிஃபோர்னியா ..................................................206

ஹொனலுலு, ஜப்பான், சீனா வழியாக இந்தியா வருகை ..........................................................................................250

மூன்றாவது ஐரோப்பிய பயணம் போர்டஃபினோ, ஸான்டா மார்கரிட்டா (இத்தாலி)........................................256

கெய்ரோ – எகிப்து வழியாக இந்தியா வருகை................280



மெஹர் பாபா, **1931**



எஸ்.எஸ்.ராஜ்புத்னாவில் முதல் மேற்கத்திய பயணம், **1931**

# இறை கீதத்தை மீட்டும் மேற்கத்திய நாடுகள் - காந்தியுடன் முதல் சந்திப்பு

**(The West Learns To Sing)**

1931, ஆகஸ்ட் 29ஆம் நாள், மெஹர் பாபா, மும்பை துறைமுகத்திலிருந்து, 'எஸ்.எஸ்.ராஜ்புத்னா' கப்பலில் பயணத்தைத் தொடங்கினார். காலம் அதைக் களிப்போடு உற்றுநோக்கிக் கொண்டிருந்தது. உடன் சென்றவர்கள் ஆகா அலி, மற்றும் இரண்டு மண்டலி சாஞ்சி, ருஸ்தம். மருத்துவ பரிசோதனைக்காக, அன்று காலையில் அனைவரும் கப்பல் தளத்தில் இருக்கவேண்டியது அவசியம்; இறுதியில் கப்பல் மதியம் ஒரு மணிக்குப் புறப்பட்டது.

பாபாவின் மேற்கத்திய பயணம் குறித்து மும்பையில் எவருக்கும் தெரியாத பட்சத்தில், கப்பல் தளத்தில் பாபாவிற்குப் பிரியாவிடை அளிக்க ஒருவரும் வரவில்லை. மெஹர் பாபா அவருடைய திட்டப்படி, இரகசியமாக இந்தியாவை விட்டு வெளியேறினார்; நாசிக் நகரில் வாழ்ந்து வந்த ஆண், பெண் மண்டலிக்கும், பாபா ஐரோப்பாவிற்குப் பயணம் மேற்கொள்வது தெரியாமல் மறைக்கப்பட்டது.

சில நாட்களுக்கு முன்பு, மஹாத்மா காந்தி லண்டனில் நடக்கும், இந்திய நாட்டின் சுதந்திரத்தைக் குறித்த வட்ட மேசை மாநாட்டில் பங்கேற்க ஒப்புதல் அளித்தார்; அதற்காக காந்தி, மெஹர் பாபா பயணம் செய்யும் அதே கப்பலில் இங்கிலாந்து சென்று கொண்டிருந்தார். மெஹர் பாபாவை வழியனுப்ப ஒருவரும் வராதபோதும், காந்தியுடன் வந்த ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டம் (ஜவஹர் லால் நேருவும் உடனிருந்தார்) அவர்களுக்குத் தெரியாமலேயே அவதார புருஷருக்குப் பிரியாவிடை அளித்தது.

விஷ்ணு நாசிக் திரும்பி வந்து, பாபாவின் இங்கிலாந்து பயணத்தைக் குறித்து ஆண், பெண் மண்டலிக்குத் தெரிவித்த வேளையில், அனைவரும் திகைத்துப் போயினர். ஒரு மாதத்திற்கு முன்பு பிம்பல்காவ்ம் பஸ்வந்தில் பாபாவை சந்தித்தபோது, அவருடைய பரிதாபகரமான உடல்நிலையை நினைத்து மண்டலி ஆச்சரியமும், வேதனையும் அடைந்தனர். பாபா, அவரது பயணத்தைக் குறித்து இரகசியமாக இருந்ததன் ஒரு காரணம், மண்டலியில் சிலர் அவருடன் செல்ல விருப்பம் தெரிவித்திருக்கக் கூடும் என்பதால்தான்.

மெஹர் பாபாவின் மண்டலியில் பலர் ஆச்சரியம் அடைந்தாலும், பாபா அயல்நாட்டு அன்பர்களைத் தனது அரவணைப்பில் கொண்டு வருவதை எண்ணி மகிழ்ச்சியடைந்தனர். "நமக்காக பாபா ஒரு போலி நாடகத்தை அரங்கேற்றினார்" என்று பாபாவின் தம்பி ஜால் நகைச்சுவையாகக் கூறினார். "இந்தப் பயணத்தை ரகசியமாக வைத்திருக்காவிடில், நம்மில் பெரும்பாலோர் அவருடன் செல்லத்

தொந்தரவு செய்திருப்போம்" என புவாஸாஹேப் கருத்துத் தெரிவித்தார். இத்தகைய உணர்வுபூர்வமான கருத்துக்கள் பரிமாறப்பட்டாலும், பரஸ்பர நல்லெண்ண சிந்தனையில் அன்பிற்குரியவரின் அற்புதமான சூழ்ச்சியை நினைத்து அகமகிழ்ந்தனர்.

கெ.ஜெ. தஸ்தூர், நடந்ததை நினைத்து, கலக்கமடைந்து, சிந்தனையில் ஆழ்ந்தார்: "நான் இல்லாமல் பாபா இங்கிலாந்து செல்வதை என்னால் நம்ப முடியவில்லை; என்னிடம் எம்.ஏ., எல்.எல்.பி பட்டங்கள் உள்ளன. என்னைப் போன்ற கற்றறிந்த ஒருவரை பாபா எப்படி விட்டுச் சென்றிருக்க முடியும்?

"சாஞ்சி, ருஸ்தம் இருவரையும் அவர் உடன் அழைத்துச் செல்வதன் காரணம்தான் என்ன? நான் 'மெஹர் மெஸேஜ்' பத்திரிகையின் ஆசிரியர், அவருடன் மேற்கத்திய நாடுகளுக்குச் செல்ல மிகவும் பொருத்தமானவன். 'நான் அவரோடு இங்கிலாந்திற்குச் செல்வேன்' என்று கூறி இருந்தேன். என்னை உடன் அழைத்துச் செல்லவில்லை என்பதை என்னால் நம்ப முடியவில்லை." தஸ்தூரின் மனம், அதிர்ச்சியில் இந்த அவமானத்தைத் தாங்கிக்கொள்ள முடியாமல், பாபாவிற்கு எதிராக ஆத்திரமடைந்தது. இது, அவர் உண்மையில் பாபாவிடம், எத்தகைய அன்பைக் கொண்டிருந்தார் என்பதை வெளிப்படுத்தியது. 'மெஹர் பாபாவின் போதனைகளை எனது இரத்தத்தால் எழுதுவேன்' என்று பறைசாற்றிய அவருக்கு, பாபாவால் ஏவப்பட்ட அம்பு ஒரு பாடமாக அமைந்தது.

அரபிக்கடல் பயணம் மிகவும் அசௌகரியமாக இருந்ததால் ருஸ்தம், சாஞ்சி இருவரும் உடல்நலமின்றி படுக்கையில் வீழ்ந்தனர். ருஸ்தம் விரைவில் குணமடைந்தாலும், சாஞ்சி மூன்று நாட்கள் படுக்கையில் இருக்க வேண்டியதாயிற்று. குருநாதர், சீடனுக்கு சேவை செய்வதை, சாஞ்சி விரும்பவில்லை எனினும், பாபா அவருக்கு உதவியாக இருந்து, கவனித்த விதம் சாஞ்சியின் இதயத்தை நெகிழ வைத்தது.

ஆனால், அதிவிரைவில், தவிர்க்க முடியாத 'பாபாவின் அம்பு எய்தல்' ஆரம்பமானது. பாபா, சாஞ்சியிடம், "**உங்களை நான் எதற்காக அழைத்து வந்தேன்? நீங்களோ நோய்வாய்ப்பட்டு, படுக்கையில் உள்ளீர்கள்; ருஸ்தம் அவர் விருப்பப்படி கப்பலில் பவனி வருகிறார்**." பாபாவின் 'தாக்குதலை' சாஞ்சி ஒரு நாள் தாங்கிக் கொண்டார்; அடுத்த நாள், அவரது பொறுமையை முற்றிலும் இழந்த நிலையில், சாஞ்சியின் கடுமையான பதில்கள், பாபாவின் கண்களில் கண்ணீரை வரவழைத்தன. பின்னர் அதற்காக, சாஞ்சி பெரிதும் மனம் வருந்தினார்.

கப்பலில் பயணம் செய்யும் வேளையில், மெஹர் பாபாவின் பெயர், பயண விபரங்கள் அனைத்தும் மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டன. பயணத்தின் போது, பாபா அவரது அறைக்குள் தனியாக அமர்ந்து, சில நாட்கள் எவரையும் சந்திக்கவில்லை; என்றாலும், அவர் தினமும் அதிகாலையிலும், மாலை நேரத்திலும் எவரும் இல்லாத வேளையில், கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கப்பல் தளத்தில் உலாவச் செல்வது வழக்கம். உணவைப் பொறுத்தவரையில், அவர் தனது அறையில், சைவ உணவை மட்டுமே உண்டு வந்தார்.

மஹாத்மா காந்தி, பெரும்பாலும் பயண வேளையில் கப்பல் தளத்தில், மாலையில் பிரார்த்தனையில் ஈடுபடுவதும், பின்னர் ஒரு குறுகிய உரையை வழங்குவதையும் வழக்கமாகக் கொண்டார். அவர் வழக்கமான வெள்ளை வேட்டி அணிந்திருந்ததைக் குறித்து பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**அவரது சுய தோற்றம் பற்றிய கர்வம், விருப்பம் மட்டுமே அவர் இப்படி உடையணிவதற்குக் காரணம். மேலும், இங்கிலாந்து குளிர் பிரதேசம் ஆகையால் அதற்குரிய ஆடையை அணிய வேண்டியது அவசியம்.**"

1931, செப்டம்பர் 2 அன்று, காந்தியை ஒரு மணி நேர தனிப்பட்ட சந்திப்பிற்காக அழைக்கும் விருப்பத்தை மெஹர் பாபா தெரிவித்தார். மறுநாள் காலையில், கப்பல் 'ஏதன்' நகரில் நின்ற வேளையில், பாபா வெளியே வரவில்லை. பிற்பகலில் கப்பல் தளத்தில் உலாவ வந்தபோது, காந்தி சற்று தொலைவில் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்த அவ்வேளையில், அவரைச் சுற்றி ஒரு பெரிய கூட்டம் வந்து சேர்ந்ததும், பாபா மண்டலியுடன் கப்பலின் வேறொரு பகுதிக்கு நகர்ந்து, பின்னர், அவரது அறைக்கு ஓய்வெடுக்கச் சென்றார்.

அன்று மாலை, பயணிகள் கூட்டத்தில் பிரார்த்தனையின் முக்கியத்துவம் குறித்து காந்தி ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார், அதில் ருஸ்தமும் பார்வையாளராகக் கலந்து கொண்டார். காந்தி தனது வாழ்வில் பிரார்த்தனை ஒரு முக்கியமான பாகம் என்பதை எடுத்துரைத்து, அது அவருக்கு மிகையான மன அமைதியை அளிப்பதாக விளக்கினார்:

"உலகின் மிகப் பெரிய ஆசிரியர்களில் மூவர் - புத்தர், இயேசு, முஹமது - பிரார்த்தனையின் மூலமாக இறை ஒளியைக் கண்டனர்; மேலும் பிரார்த்தனை இல்லாமல் வாழ முடியாது என்பதன் மாசற்ற சாட்சியத்தையும் விட்டுச் சென்றனர்."

காந்தியின் இந்த அறிவிப்பு, சாஞ்சி, ருஸ்தம் இருவரிடையே நீண்ட, நெடிய வாக்கு வாதத்திற்கு வழிவகுத்தது. அவர்கள் இந்த விஷயத்தை பாபாவின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்: "புத்தர், இயேசு, முஹமது போன்ற குருநாதர்கள், சில நேரங்களில், கடவுளிடம் 'பிரார்த்தனை' செய்தனர் என்று காந்தி குறிப்பிட்டார்" எனக் கூறினர்.

அதைக்கேட்டு மெஹர் பாபா இவ்வாறு பதிலளித்தார்:

"**காந்தியைப் போன்றவர்கள், அவதார புருஷர்களைப் பற்றி எதுவும் அறியாதவர்கள், ஆகையால் இதுபோன்ற விஷயங்களை, தவறாகக் கருத்தில் கொண்டு குறை கூறக்கூடாது. அவர்களுக்கு உண்மையின் அனுபவம் இல்லை. பிரார்த்தனை மூலம், அவதார புருஷர் எனும் நிலையை அடைய முடியும் என்று கூறுவது தவறான கருத்து. அவதார புருஷர்கள் இறைநிலையை அடைவதற்கு முன்னர், அனுபவிக்கும் 'நிர்விகல்ப-சமாதி'** (நான் கடவுள்) **என்ற நிலையை, பிரார்த்தனைக்குரிய நிலை என்று அவர்கள் தவறாகக் கூறுகின்றனர்.**

"**'நிர்விகல்ப-சமாதி'** (NIRVIKALPA SAMADHI) **எனும் இறைநிலையை அடைந்த பின்னர், அவதார புருஷர் 'ஸாஹஜ்-சமாதி'** (SAHAJ SAMADHI - இறை உணர்வு + உலக உணர்வு) **என்ற இரண்டாவது நிலைக்குள் நுழைகிறார். இந்த**

‘ஸாஹஜ்-சமாதி’ என்ற இறைநிலையில், அவதார புருஷர் அவரை எல்லோராகவும், எல்லாமாகவும் அனுபவிக்கிறார்; மேலும் அவதார புருஷர், அப்பாற்பட்ட நிலையில் (BEYOND STATE) இருக்கும் உருவிலா இறைவனை, உலகின் நன்மையைக் கருதி பிரார்த்தனை செய்யும் வேளையில் அதை, சாதாரண மக்கள் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். அவதார புருஷர் அவருக்காக அல்லாமல், பிறரின் நன்மைக்காகப் பிரார்த்தனை செய்கிறார். உண்மையாகச் சொல்லப்போனால் அவதார புருஷர் ‘பிரார்த்தனையின் அம்சமான பரிபூரண இறைவன்.’”

1931, செப்டம்பர் 4 அன்று பாபா இவ்வாறு குறிப்பிட்டார், **“காந்தி என்னை சந்திக்க வருவதாக இருந்தால், அவருக்கும், அவரைச் சார்ந்துள்ள அனைவருக்கும் நல்லது.”**

வட்டமேசை மாநாட்டைப் பற்றி ருஸ்தம், சாஞ்சி இருவருக்கும் பாபா இவ்வாறு விளக்கினார்:

**காந்தி, அந்த மாநாட்டில் கலந்து கொண்டாலும், அவருக்கு எவ்விதமான செல்வாக்கும் இராது. முதலில் அவர், இதர பிரதிநிதிகளுடன் சென்றிருக்க வேண்டும்; அவர்கள் அங்குமிங்கும் அலைபாயும் மனநிலையிலிருந்து, இறுதியாக முல்தான் நாட்டுக்குச் சென்றனர்; ஆனால் அந்த நேரத்தில், சில குறைபாடுகளைக் கருத்தில் கொண்டு காந்தி தயங்கினார். அவர்களின் கோரிக்கைகளுக்கு எந்தவித தீர்வும் கிட்டாத நிலையில், திடீரென மாநாட்டில் கலந்து கொள்ள காந்தி இணக்கம் தெரிவித்தார்.**

**இதிலடங்கிய முக்கிய விஷயம் என்னவெனில், காந்தி சில காரணங்களுக்காக, மாநாட்டில் பங்கெடுக்க விரும்பாததால், அவர் இறுதிவரை மறுத்திருக்க வேண்டும். கோரிக்கைகளில் உடன்பாடு ஏற்படுவது வரை, அவர் மாநாட்டில் கலந்து கொள்ளாமல் இந்தியாவில் இருந்திருக்க வேண்டும். முன் பின் முரண்பட்ட சிந்தனைகளால் கடைசி நிமிடத்தில் மாநாட்டில் கலந்துகொள்ள முடிவு செய்தார். கௌரவத்தை இழந்த நிலையில், இப்போது மாநாட்டில் அவர் எதையும் சாதிக்க இயலாது. வட்ட மேசை மாநாட்டில், வெவ்வேறு கட்சிகளிடையே கருத்து வேறுபாடுகள் நிலவும்; எவரும் எதையும் ஒப்புக் கொள்ளாத சூழ்நிலையில், காந்தியின் செல்வாக்கு பயனற்றதாகிவிடும்.**

சாஞ்சி “ஏன்” என்று கேட்டார்.

பாபா, எழுத்துப்பலகை வழியாக பதிலளித்தார்: **காந்தியின் செல்வாக்கு ஏற்கனவே குறைந்துவிட்டது. அவர் ஒவ்வொரு கட்சியையும் திருப்தி படுத்த விரும்புகிறார், அதுவே அவரது பலவீனமாக மாறுகிறது. அவர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் எதிரும் புதிருமான, முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கும் போது, அவர் எப்படி எல்லோரையும் மகிழ்விக்க முடியும்?**

இந்தியாவில், பல அரசியல் கட்சிகள், மதங்கள் அனைத்திற்கும் ஒரே பொதுவான நோக்கம் - சுதந்திரத்தை அடையப்பெறுவது. ஆனால் அவர்களிடையே ஒரு தரப்பினர் கூட, உள் விவகாரங்களைப் பொறுத்தவரையில், மற்றொரு தரப்பினருடன் விட்டுக்கொடுத்து, ஒத்துப்போகாத சூழ்நிலை உருவாகியுள்ளது. வலுவான கட்சியாகக் கருதப்படும் (இந்திய தேசிய) காங்கிரஸ் கூட, மத வேறுபாடுகளின் துர்நாற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் மற்றும் தீண்டத்தகாத சமுதாயங்களும், அவற்றின் மிகப்பெரிய கட்சிகளும் தேசிய காங்கிரஸின் செல்வாக்கிலிருந்து விலகி, அந்தக் கட்சியை மட்டுமின்றி காந்தியையும் எதிர்த்துப் போராடுகின்றனர்.

காந்தியைப் பின்பற்றுபவர்கள் அல்லது சுதந்திரம் குறித்த கேள்வியில் குறைந்தபட்சம் அவருடன் உடன்பட்டு, ஒன்றிணைந்து செல்பவர்களின் குறிக்கோள்களும் வேறுபட்டுள்ளன. சரோஜினி நாயுடு, பண்டித் மால்வியா இருவரும் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பதைப் பாருங்கள். காந்தி, அனைவரும் காதி (கையால் நெய்யப்பட்ட கைத்தறி பருத்தி ஆடைகளை) பயன்படுத்துவதைத் தீவிரமாகப் பரிந்துரைக்கிறார், ஆனால் திருமதி நாயுடு, சுதந்திர போராட்டத்தில் சக ஊழியராக இருந்தும், பட்டு ஆடைகளை அணிகிறார். காந்தி, சாதி சமயத்தை, குறிப்பாக, தீண்டாமை ஒழிப்பை ஆதரித்து, தீவிரமாகப் பிரசாரம் செய்கிறார்; அவருடைய முக்கிய போராட்டத் தளபதி மால்வியா அதைக் கடைப்பிடிக்கவில்லை. வெளிநாட்டினர் தயாரிக்கும் உணவை உண்பது சமய பற்றற்றது என்று நினைத்து மால்வியா தனது சமையல்காரரை இங்கிலாந்திற்கு அழைத்துச் செல்கிறார். காந்தியின் இந்தக் கட்டளையை ஏற்றுக் கொள்ளாமல் ஆயிரக்கணக்கானோர் காங்கிரஸ் கட்சியில் உள்ளனர்; அதனால்தான் கட்சி வலுவாக இல்லை; இதன் விளைவாக எதிர்காலத்தில் நிலைமை மோசமாக இருக்கும்.

காந்தி, பிரம்மச்சரியத்தை ஆதரிக்கிறார்; அதே வேளை அவரே திருமணம் செய்து அவர் தனது மகனின் திருமணத்தையும் ஏற்பாடு செய்தார். இது போன்ற பல விஷயங்களை அவர் பரிந்துரைக்கும் வேளையில், அவற்றை நடைமுறையில் கடைப்பிடிப்பதில்லை. அவரால் செய்ய முடியாத அல்லது செய்யப்படாத விஷயங்களை ஏன் பிரசாரம் செய்ய வேண்டும்?

காந்தியின் குணாதிசயத்தில் உள்ள இந்தப் பண்புதான் - ‘தனது தோற்றம் பற்றிய கர்வம்’, ‘முன் பின் முரண்பட்ட தன்மை’ ஆகிய இரண்டு பெரிய குறைபாடுகளுடன் இணைந்து - அவரது செல்வாக்கைப் படிப்படியாக இழக்கச் செய்கிறது; மேலும் ஒரு காலத்தில் அவரைப் போற்றி புகழ்ந்தவர்கள், இன்று எதிர்ப்பைத் தெரிவிக்கின்றனர். ஷௌகத் அலி, காந்தியின் நெருங்கிய தோழராக இருந்தவர், இப்போது கடுமையான எதிரியாக இருக்கிறார். ஏன்?

இந்து, முஸ்லிம்களுக்கு இடையிலான மத விரோதம், பகை மற்றும் மிகப்பெரிய பிளவுதான் இதற்குக் காரணம். தேசிய காங்கிரஸில் கூட ஒவ்வோர் அரசியல் நடவடிக்கையையும், செயலையும் தங்கள் மத வெறித்தனத்துடன் வண்ணமயமாக்கும் அளவுக்கு, இரண்டு பக்கங்களிலும் உள்ள மத வெறியர்கள் இந்த வெறுப்பை ஊக்குவித்து, வளர்த்து வருகின்றனர்; மேலும் இது காந்தியால் அதிகாரம் வழங்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. இது பெரும் விரோதத்திற்கு வழிவகுத்து, காங்கிரஸ் கட்சியை இப்போது பலவீனப்படுத்துகிறது.

அவரது (காந்தியின்) தோற்றம், செயல் பற்றிய கர்வம் குறித்து நான் என்ன சொல்ல முடியும்? அளவுக்கு அதிகமான விஷயம் எப்போதும் ஒரு மனிதனைக் கெடுத்துவிடும். ஏழாவது வானுலகத்திற்கு உயர்த்தி, 'மஹாத்மா காந்திக்கு ஜெய்' என்று கூக்குரலிட்டது அவரை இந்த நிலைக்குத் தள்ளியுள்ளது.

'இந்த விஷயங்கள் அனைத்தும் அவரது தலைக்குள் நுழைந்து அவரை (காந்தியை) பைத்தியமாக்கியுள்ளன' என்ற கசப்பான கருத்தை ஷௌகத் அலி குறிப்பிட்டுள்ளார்.

அது தவிர, அவருக்கு நெருக்கமான உதவியாளர்கள், ஒவ்வொரு செயலிலும் டாம்பீகத்தை வெளிப்படுத்தி குழப்பங்களை ஏற்படுத்தியது, 'காந்தியும் அதை விரும்புகிறார்' என்பதைத்தான் குறிக்கும். ஆனால் அது அதிகப்படியான பாராட்டு மற்றும் புகழின் இயல்பான விளைவு. அனுதினமும் நடக்கும் இந்தப் பொதுவான மற்றும் தனிப்பட்ட நிகழ்ச்சி, சம்பவங்கள் அனைத்தும், வரம்பைத் தாண்டிவிட்டன. இதுபோலத் தோற்றமளிக்கும் நிகழ்ச்சிகளை ஒரு விவேகமுள்ள பார்வையாளர் அல்லது நேர்மையான ஆத்மாவிடமிருந்து மூடி மறைப்பது என்பது முடியாத காரியம். எனவே, ஒரு கட்டத்தில் அவரைப் போற்றி, புகழ்ந்தவர்கள் பலர், நாளடைவில் அவரை விட்டு விலகினர்.

ஆன்மீக சத்குருக்கள், அவர்கள் விரும்பும் எதையும், எல்லாவற்றையும் செய்ய முடியும். ஒரு குருநாதர், அவராகவே கடைப்பிடிக்காத விஷயங்களைப் பற்றி அருளுரை வழங்கவும், மேலும் அவரது ஆன்மீக நோக்கங்களைக் கருத்தில் கொண்டு, நடைமுறையில் உள்ள நிலைமைகளுக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்ப, காரியங்களைச் செய்யவும் முடியும், ஏனெனில், அவர் அனைத்திலிருந்தும் நித்தியமாக, நிரந்தரமாக விடுபட்டவர், ஆகையால் செயல்களின் விளைவுகளைத் தவிர்க்க முடியும். இதை, (இறைநிலையை எட்டாத) சாதாரண உலக மனிதனால் ஒருபோதும் செய்ய இயலாது எனும்போது, சிறிதளவேனும் 'ஆன்மீகத் தென்றலின் வாசனை வீசாத' ஒருவரால் எப்படி முடியும்?

இதுபோன்ற பிரசங்கங்கள் மற்றும் பகட்டான நிகழ்வுகளின் பிற்போக்குமிக்க விளைவுகள் பேரழிவைத் தரக்கூடியவை; இதனால், காந்தி தனது அபிமானிகள் மற்றும் ஆதரவாளர்களை, படிப்படியாக இழக்க

**நேரிட்டது. இவ்வாறு காந்தியின் செல்வாக்கு, பின்னடைவை சந்திக்கும் வேளையில், இளைஞர்களின் எழுச்சி மேலோங்கி நிற்கும்; அப்போது அதன் செயல்பாடு ரஷ்ய இனவாதத்தை** (கம்யூனிஸ்ட்) **ஒத்திருக்கும்.**

**நாட்டின் சுதந்திரத்திற்கான நோக்கத்தில் ஜவஹர்லால் நேரு, காந்தியுடன் பக்கபலமாக இருந்தாலும், அவரது கருத்துக்கள், மதம் மற்றும் நடவடிக்கைகள் காந்தியிடமிருந்து முற்றிலும் மாறுபட்டவை.**

செப்டம்பர் 5ஆம் நாள், பிரிட்டனைக் குறித்து மெஹர் பாபா கூறியதாவது:

**இதற்கு முந்தைய சுற்று வட்டமேசை மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்வைத் தவிர, வேறு எதையும் பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்காது. புதிய அரசாங்கத்தின் பிரதமர், மெக்டொனால்டு** (McDONALD) **தவிர, எவருக்கும் எந்த விஷயத்திலும் இந்தியா மீது அனுதாபம் கிடையாது. வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வதால் காந்தியும் கூட, ஏற்கனவே வழங்கப்பட்ட முடிவைத் தவிர, வேறு எதையும் அடையப்போவதில்லை. அவரது தனிப்பட்ட ஆளுமை மற்றும் செல்வாக்கு எந்த விளைவையும் ஏற்படுத்தாது. மோதல்களைத் தவிர்க்கும் நோக்கத்தில் காந்தி, மாநாட்டில் எதையும் விட்டுக்கொடுக்க முயன்றால், காங்கிரஸ் அதை ஏற்றுக்கொள்ளாது.**

**‘இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே இந்தியாவில் உள்நாட்டுப் போர் வெடிக்கும்**’ என்று பாபா தெரிவித்தார்.

**“ஒருவரையொருவர் படுகொலை செய்யும் ஒரு பயங்கரமான கிளர்ச்சி உருவாகும். அதன் பிரதிபலிப்பு ஐரோப்பியர்கள் மீதும் இருக்கும். இந்தியர்களுக்கும் அயல் நாட்டினருக்கும், குறிப்பாக ஐரோப்பியர்கள் மற்றும் ஆங்கிலேயருக்கும் இடையே ஒரு வலுவான உள்நாட்டுப் போர் உருவாகும்”** என்று பாபா கூறினார்.

செப்டம்பர் 7ஆம் நாள், பாபா இவ்வாறு கூறினார்:

**இந்து, முஹமதியர்களுக்கு இடையே ஒற்றுமையின்மை காரணமாக, தேசியவாதத்தின் பொதுவான ஊக்கம் மற்றும் சுதந்திரத்தை அடைவதற்கான நோக்கம் இரண்டையும் தியாகம் செய்யவேண்டியதாகிறது; மேலும், இந்த விஷயத்தில் மதத்தைக் கொண்டுவருவதன் மூலம், அவர்கள் தத்தமது சொந்த முயற்சிக்குத் தீங்கு விளைவிக்கிறார்கள். எவரும் மதம் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்வதில்லை; இந்தச் சண்டை, சச்சரவுகள் அனைத்திற்கும் மதங்களால் உருவாக்கம் தரப்பட்ட மனிதனின் மதம் பிடித்த தன்மையே மூலகாரணம்.**

**பல்வேறு காரணங்களுக்காக, காந்தியின் செல்வாக்கு, பிரிட்டிஷ் மக்களிடம் மட்டுமல்லாமல் அவரது சொந்த மக்களான இந்தியர்கள் இடையிலும் கணிசமான அளவிற்குத் தோல்வியை சந்திக்கும். காந்தியின் செல்வாக்குக் குறையும் தருணத்தில், ‘வகுப்புவாத கொள்கை**’ (கம்யூனலிஸம் - COMMUNALISM) **தழைத்தோங்கி உள்நாட்டுப் போருக்கு வழிவகுக்கும்.**

**இவை அனைத்தும் ஏழ்மையான இந்தியாவிற்கும், பிரிட்டனுக்கும் துன்பகரமானது. ஆனால், உலகில் அமைதி மற்றும் செழிப்புக்கான புதிய சகாப்தத்தின் உதயத்திற்கு முன்பாக, சோகமான காலகட்டங்களைக் கடக்க வேண்டியுள்ளது, ஏனெனில், இது இப்படி விதிக்கப்பட்டுள்ளது.**

1931, செப்டம்பர் 7 அன்று கப்பல், எகிப்து நாட்டின் 'போட் ஸெட்' (PORT SAID) துறைமுகத்தில் நிறுத்தப்பட்ட போது, பாபா மண்டலியுடன் தரை இறங்கி அரை மணி நேரம் கடற்கரையில் நடந்து சென்றார்.

அடுத்த நாள், பத்திரிகை நிருபர் தெஹ்மங்கர், சாஞ்சியை எதிர்கொண்டு "மெஹர் பாபா அவரது மௌனத்தை எப்போது கைவிடப்போகிறார்?" என்று வினவினார்.

சாஞ்சி இதை பாபாவிற்குத் தெரிவித்ததும், பாபா இவ்வாறு பதிலளித்தார், "**பலத்த காற்று வீசும் போது, நீங்கள் உங்கள் குடையைத் திறக்க முயற்சித்தால், அது அங்குமிங்கும் தள்ளப்பட்டு, அதைப் பிடிப்பது மிகவும் கடினமாகிவிடும். ஆனால் காற்று வீசாமல் அதிக வெயில் மற்றும் மழை காலங்களில், நீங்கள் இயற்கையாகவே உங்கள் குடையைத் திறப்பீர்கள். அதுபோல, காற்று வீசாத வேளையில், 'வெப்பம்' அல்லது 'மழை' இவற்றின் அறிகுறிகள் தென்பட்டால், நான் எனது மௌனத்தை விட்டுவிடுவேன்.**"

பயணத்தின் போது, மெஹர் பாபா, காந்தியை சந்திக்க ஆவலாக இருப்பது போலத் தோன்றியது, மேலும் பாபா அடிக்கடி கூறி வந்தார், "**எப்போதும் இது இப்படித்தான் நிகழும்: நான் பார்வையாளர்களை அனுமதிக்காத போது, 'உங்களைப் பார்க்க ஏன் எங்களை அனுமதிக்கவில்லை?' என்று மக்கள் புகார் கூறுகிறார்கள், இவ்வேளையில் நான் எனது தனிப்பட்ட காரணங்களுக்காக, சில நபர்களைப் பார்க்க விரும்பினால், அவர்கள் எந்த விருப்பத்தையும் காட்டாமல் இருக்கிறார்கள். இப்போது நாம் காந்தியைத் தொடர்பு கொள்ள முயற்சிப்பதை மறந்துவிட வேண்டும்; மிகவும் காலதாமதம் ஆகிவிட்டது.**"

அதன் பின்னர், அவரது கவலையை வெளிப்படுத்திய பாபா கூறினார், "**காந்தி ஒரு நல்ல மனிதர்; அவர் என்னை சந்திப்பது அவருக்குப் பெருமளவில் நன்மை பயக்கும். நான் அவரை மிகவும் நேசிக்கிறேன், அவருடைய சொந்த நலனுக்காக அவரை சந்திக்க விரும்புகிறேன்.**"

இதற்கிடையில், காந்திக்கு அறிமுகமானவர் ஜாம்ஷெட் மேத்தா (கராச்சி மேயர், பாபாவிற்கு நெருக்கமானவர்) கப்பலில் காந்தியை, தொலைத்தந்தி வழியாகத் தொடர்பு கொண்டு, அதே கப்பலில் பயணம் செய்யும் மெஹர் பாபாவை சந்திக்குமாறு அவரை வற்புறுத்தினார். செப்டம்பர் 8ஆம் நாள், செவ்வாய்கிழமை, இரவு 9 மணியளவில், காந்தி அவருடைய செயலாளர் மஹாதேவ் தேசாயுடன் பாபாவின் அறைக்கு வந்தார். காந்தியை அறிமுகப்படுத்தியதும் அவர் பாபாவை உற்றுநோக்கி, "நான் உங்களைப் பற்றி நிறைய படித்திருக்கிறேன்; கடவுள் சித்தத்தில் ஒரு நாள் உங்களைப் பார்க்க

விரும்பினேன்; ஆனால் அது இவ்வளவு விரைவில் நடக்கும் என்று நான் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை."

மெஹர் பாபா அவரை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியாக இருந்ததை வெளிப்படுத்தி "**உங்களிடம் போதிய நேரம் உள்ளதா**?" என்று எழுத்துப்பலகை மூலம் வினவினார்.

"ஆம், நான் உங்களுடன் அமர்ந்து, நீங்கள் கூறுவதைக் கேட்க வந்துள்ளேன்" என்று காந்தி பதிலளித்தார்.

ஸக்கோரியில் உபாஸனி மஹாராஜை சந்தித்தது குறித்து காந்தி கூறியபோது, மஹாராஜ், பாபாஜான் இருவரையும் பற்றி அவருக்கு பாபா விரிவாக விளக்கினார். "**உபாஸனி மஹாராஜ் என்னுடைய குருநாதர் மட்டுமின்றி பரிபூரணமான சத்குரு**" என்று கூறி முடித்தார்.

1924ஆம் ஆண்டு பாபாவின் அறிவுறுத்தல்களின்படி, ருஸ்தம், குஜராத்தி மொழியில் எழுதப்பட்ட உபாஸனி மஹாராஜின் வாழ்க்கை வரலாற்றின் (ஸக்கோரின சத்குரு) பிரதியை, காந்திக்கு அனுப்பியிருந்தார். புத்தகத்தைப் படித்த பின்பு, காந்தி, மஹாராஜை சந்திக்க ஸக்கோரிக்குச் சென்றார். ஆனால், அன்று, மஹாராஜ் வரவேற்கத்தக்க மனநிலையில் இல்லாததால், காந்தியை விரும்பத்தகாத முறையில் நடத்தினார். மஹாராஜின் துஷ்பிரயோக மொழியால் மனமுடைந்த காந்தி, ஸக்கோரியின் பிரசித்தி வாய்ந்த குருநாதரை நினைத்து மிகவும் கலக்கமடைந்தார். குருநாதர்களின் வழிகளும், முறைகளும் உலகிற்கு மர்மமாகத் தோன்றும். உள்ளளவில் காந்தியின் தொடர்பு, மெஹர் பாபாவுடன் இருந்ததால், மஹாராஜ் அவரை இவ்விதமாக நடத்தினார்.

மெஹர் பாபா அவரது சுய வாழ்வின் அனுபவங்களை, சுருக்கமாக, காந்தியிடம் விவரித்தார் - பாபாஜான் அவரை ஈர்த்தது, சாய்பாபாவின் பிரகடனம், கண்டோபா கோயிலில் மஹாராஜுடன் நடந்த சம்பவம், பலமுறை ஸக்கோரிக்குப் பயணம் செய்து மஹாராஜை சந்தித்தது, உலக உணர்வைத் திரும்பப் பெறும் வேளையில் அடைந்த இடர்பாடுகள், மெஹராபாத்தில் ஆஷ்ரமங்கள் அமைத்தது, அவருடைய எண்ணிலடங்கா உபவாசம் மற்றும் ஏகாந்தவாசங்கள், கடந்த ஆறு வருடகால மௌனம், மேலும் அவருடைய இரகசிய சிறப்பு புத்தகம் எழுதி முடித்தது.

அப்போது, அவர்களிடையே உரையாடல் ஆங்கிலம், குஜராத்தி மொழிகளின் கலவையாக இருந்தது:

காந்தி உடனே, "அந்த இரகசிய புத்தகம் எங்கே?" என வினவினார்.

அருகிலிருந்த பெட்டகத்தைக் காட்டி பாபா, "**அதில் உள்ளது**" என்றார்.

"நான் அதைப் படிக்கலாமா?" காந்தி கேட்டார்.

"**உங்களிடம் அதற்கான நேரம் உள்ளதா**?" பாபா எழுத்துப்பலகை வழியாகக் கேள்வி எழுப்பினார்.

"ஏன் இல்லை? நான் அதைப் படிப்பதற்கான நேரத்தை ஒதுக்க முடியும். நான் நிச்சயமாக அதைப் படிப்பேன். அதை என்னிடம் கொடுங்கள்" என்றார்.

மெஹர் பாபா, உடனே, பேச்சின் தலைப்பை மாற்றி, இவ்வாறு எடுத்துரைத்தார்: "**எங்கும் பேரானந்தம் ஒன்றுதான் உள்ளது, வேறு எதுவும்**

**இல்லை, ஆனால் மக்களுக்கு அது தெரியாது. சொற்பொழிவுகளைக் கேட்பதிலும், புத்தகங்களைப் படிப்பதிலும் எந்த பயனும் இல்லை. கடவுளை நேரடியாக அனுபவிப்பது ஒன்றுதான் இன்றியமையாதது. அந்த அனுபவம் தானாக நிகழ்வது, தன்னிச்சையானது; வலுக்கட்டாயமாக அடைய முடியாதது.**"

காந்தி அவரது நடவடிக்கைகளைக் குறித்து இவ்வாறு குறிப்பிட்டார், "நான் என்ன செய்தாலும், அதற்கான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். இறுதியில் எதுவாயினும், உள்ளளவில் நான் அனைத்தையும் கடவுளிடம் விட்டுவிடுகிறேன். எனது பொறுப்பை என்னால் கைவிட முடியாது. கடவுள் ஒருவரைத் தவிர, எனது பொறுப்பை என்னால் மறுக்க முடியாது என்பது எனது நம்பிக்கை."

"**ஆனால் அந்த எண்ணம் இருக்கக்கூடாது**" என்று பாபா அவருக்கு விளக்கினார். "**நான் செய்கிறேன்... நான் நினைக்கிறேன்... நான் துறக்கிறேன்... நான் துன்பப்படுகிறேன்... பிறருக்காக எல்லாவற்றையும் நான் செய்கிறேன்...' இந்த எண்ணங்கள் இருக்கக்கூடாது. பிறருக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில், ஒருவர் கடவுளை அறிந்து, புரிந்து கொள்ள முயன்றால், அது பயங்கரமான மனப்படிவங்களை உருவாக்கும்.**"

"தயவுசெய்து, உங்களின் ஏதேனும் அறிவுரையை எனக்கு வழங்குங்கள்" என்று காந்தி கேட்டுக்கொண்டார்.

"**வட்ட மேசை மாநாட்டு விவாதங்கள் முடிந்ததும், தனியாக, ஓர் இடத்தில் அமர்ந்து, 24 மணி நேரம் கடவுளை மட்டுமே சிந்தனை செய்யுங்கள். உங்கள் இறுதி இலக்கை அடைவதற்கு, இது சிறந்த, எளிதான மற்றும் குறுகிய வழியாகும். அந்தக் காலகட்டத்தில் வந்து என்னுடன் சில நாட்கள் இருங்கள்.**"

அதற்கு காந்தி பதிலளித்தார், "கடவுளே அதைக் கொண்டு வருவார்; அவர் எனக்குப் புரியவைத்து, உரிய சூழ்நிலைகளை உருவாக்குவார். நான் அந்த நாளை ஆர்வத்துடன் எதிர்பார்க்கிறேன்." பின்னர் அவர், "மேலும், நீங்கள் பேசுவதைக் காண விரும்புகிறேன்" என்றார்.

காந்தி கூறியதைக் கேட்டு, பாபா, தலையை மட்டும் அசைத்தார்.

மெஹர் பாபாவின் இரகசிய புத்தகத்தைப் படிப்பது குறித்து காந்தி, அந்தப் புத்தகம் இருந்த பெட்டகத்தைச் சுட்டிக்காட்டினார். "**துரதிர்ஷ்டவசமாக அதன் திறவுகோல் இந்தியாவில் உள்ளது**" என்று பாபா பதிலளித்தார்.

"நான் அதைத் திறக்க ஏற்பாடு செய்கிறேன்" என்றார் காந்தி.

பெட்டகத்தை காந்தியிடம் கொடுத்து பாபா விளக்கினார்: "**அதைத் திறந்து, புத்தகத்தை அப்படியே என்னிடம் எடுத்து வாருங்கள்; நீங்கள் படிக்க வேண்டிய பகுதியை நான் உங்களுக்குக் காட்டுகிறேன்.**"

"நிச்சயமாக; அதைப் படிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்" காந்தி பதிலளித்தார்.

பாபா அவரை எச்சரித்தார், "**கவனமாக இருங்கள். இன்று வரை நான் எவரையும் அதைப் பார்க்கக்கூட அனுமதிக்கவில்லை - என்னுடைய**

**மண்டலியையும் சேர்த்து. இதைப் படிக்கும் முதல் நபராக, நான் உங்களுக்கு மட்டும் தருகிறேன். நீங்கள் அதைப் படிக்கலாம், ஆனால் வேறு எவரையும் அனுமதிக்க வேண்டாம்"**

"நிச்சயமாக. நான் மிக்க மகிழ்ச்சியடைவேன்."

மெஹர் பாபா அப்போது பேச்சின் தலைப்பை மாற்றி, காந்திக்கு இவ்வாறு அறிவுறுத்தினார்:

**ஏழைகளின் முன்னேற்றத்திற்காக நீங்கள் பாடுபடுகிறீர்கள், தியாகங்களைச் செய்கிறீர்கள். நீங்கள் விவசாயிகளை நேசிக்கிறீர்கள். இது மிகவும் உன்னதமான, உண்மையான சேவை. ஆனால் அவர்களின் இடர்பாடுகளுக்கு நீங்கள் பொறுப்பு என்று நினைக்க வேண்டாம், ஏனெனில் இதுபோன்ற எண்ணங்கள் உங்களில் மனப்படிவங்களை விளைவிக்கும். இதைப் பற்றிய சிந்தனை இருப்பதால், அது சிக்கலை உருவாக்கும்.**

**நீங்கள் அனைவரையும் மகிழ்விக்க, திருப்தி படுத்த முயற்சிக்கிறீர்கள்; பிறரின் உணர்வுகளைப் புண்படுத்த விரும்பவில்லை. ஆனால் இந்தியாவில் இருக்கும் பல்வேறு கட்சிகள், சாதிகள் மற்றும் மதங்களைக் கருத்தில் கொண்டு, நீங்கள் அனைவரையும் மகிழ்விக்க முடியாது.**

**இந்துக்களை மகிழ்விக்க முயற்சித்தால், நீங்கள் முஸ்லிம்களின் உணர்வுகளைக் காயப்படுத்துவீர்கள், அதுபோல நேர்மாறாகவும் நிகழும். நீங்கள் பிற கட்சிகளை மகிழ்விக்க முயற்சிப்பதை, காங்கிரஸை சார்ந்தவர்கள் விரும்ப மாட்டார்கள். இதனால், எப்பொழுதும் நீங்கள் ஓர் அழுத்தத்தில் இருக்கிறீர்கள். ஆனால் இனிமேல், உங்கள் செயல்களின் முடிவுகளை எப்போதும் கடவுளிடம் விட்டு விடுங்கள், அது உங்களுக்குத் திருப்தியைத் தரும். உங்கள் நோக்கம் நல்லது மட்டுமின்றி மிகவும் பாராட்டத்தக்கது, அதுவே உன்னதமான வெகுமதி.**

காந்தி ஒப்புக் கொண்டார், "நான் பரிபூரண நிலையை இன்னும் அடையவில்லை மேலும் என்னில் பல குறைபாடுகள் உள்ளன, அவற்றை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். எனது பலவீனங்களை அறிந்து, அவர்கள் அனைத்தையும் சமாளிக்க வேண்டியது அவசியம். என்ன நடந்தாலும் அது கடவுள் சித்தம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது."

ஜாம்ஷெட் மேத்தாவைப் பற்றி காந்தி குறிப்பிட்டார், "அவர் கராச்சியில் மிகவும் பெருமைக்குரிய, கௌரவமான நபர். நான் உங்களை, ஸ்ரீ பாபா ஸாஹேபைப் பார்த்தேன் என்று இன்றிரவு அவருக்குத் தொலைத்தந்தி அனுப்புவேன். ஜாம்ஷெட் முன்கூட்டியே இதைத் தெரிவித்திருந்தால் நான் உங்களுடன் அதிக நேரம் செலவிட்டிருக்க முடியும். இந்த நேரம் மீண்டும் எப்போது வரும்?

"ஏர்வாடா சிறைச்சாலையில் நான் இருந்த வேளையில், உங்கள் 'மெஹர் மெஸேஜ்' எனும் மாத இதழைப் பெற்றுக்கொண்டேன். அந்த நேரத்தில், பல குழப்பங்கள் காரணமாக, அதை மேலோட்டமாகப் பார்த்தேனே தவிர, எனக்குப் படிக்க நேரம் கிட்டவில்லை; ஆனால் அதைப் படித்த பின்பு, நான் ஒரு நாள்,

உங்களை சந்திக்க விரும்பினேன். இப்போது அந்த நாள் விடிந்து, உங்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நாளை நான் வரும் வேளையில் நீங்கள் எழுதிய புத்தகத்திலிருந்து நான் படிக்க வேண்டியதைத் தேர்ந்தெடுத்து எனக்குக் கூறுங்கள், அன்புடன் ஏற்றுக்கொள்வேன்" என்றும் கூறினார்.

பாபாவின் மௌனத்தைப் பற்றி, காந்தி கருத்துத் தெரிவிக்கையில், "உங்கள் மௌனத்தைக் கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன். ஏழு ஆண்டுகள்! நான் வாரத்திற்கு ஒரு முறை மௌனம் கடைப்பிடிக்கிறேன். உங்கள் மௌனத்திற்கு முன்னால் இது ஒன்றுமே இல்லை. மௌனத்தின் முக்கியத்துவத்தை நான் புரிந்துகொள்கிறேன். நீங்கள் ஏழு ஆண்டுகளாக மௌனம் கடைப்பிடிக்கிறீர்கள், எப்போதாவது பேசும்போது, என்ன அசம்பாவிதங்கள் நடக்கும் என்பதை எண்ணி நான் ஆச்சரியப்படுகிறேன்!"

அன்று இரவு 10:30 மணிக்குப் புறப்படுவதற்கு முன்பு, காந்தி லண்டனில் அவர் தங்கும் இடத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்தார்; பாபா அதை ஏற்றுக்கொண்டார்.

1931 செப்டம்பர் 9 அன்று, ருஸ்தம், சாஞ்சி, ஆகா அலி மூவரையும் அவரது அறைக்கு அழைத்து, மெஹர் பாபா சில உருது ஈரடி கவிதைகளை விளக்கினார்:

**காகம், அன்னநடைப் போட முயன்ற போது,**
**அது தனது சொந்த நடையை மட்டுமே இழந்தது.**
**ஃபர்ஹாத், மன்னர் குஷ்ரோவைப் பின்பற்ற முயற்சித்த போது,**
**அவரது பணி அனைத்தும் பாழாய்போனது.**
**இறுதியில் நீங்கள் ஏமாற்ற மாட்டீர்கள்**
**என்பதை நாங்கள் அறிவோம்.**
**ஆனால் நீங்கள் பதிலளிக்கும் நேரத்தில்,**
**நாங்கள் சாம்பலாகி இருப்போம்.**

பிற்பகலில், கப்பல் 'மெஸினா' நகரைக் கடக்கும்போது, காந்தி, அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள், மேலும் மெஹர் பாபா, ஆகா அலி, சாஞ்சி, ருஸ்தம் ஆகியோருடன் பல பயணிகள், கப்பலின் மேல்தளத்தில் ஒன்று கூடினர். ஏதன் நகரில் கப்பலில் ஏறிய இந்திய அரசியல்வாதி ஷௌகத் அலி, பாபாவிற்கு மரியாதையுடன் வணக்கம் தெரிவித்தார்; பின்னர் அவருடன் அரை மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார்.

பாபாவைப் பார்த்த காந்தி, இருகரம் கூப்பி வணங்கி அவரை அணுகினார். அவர்கள் ஒன்றாக நின்றபோது, புகைப்படக் காரர்கள் படங்களை எடுக்கத் தொடங்கினர். சில நிமிடங்களில், காந்தி, "நான் இப்போது உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கிறேன். இந்தப் புகைப்படக்காரர்கள் நம்மை ஒரு கணம் ஓய்வெடுக்க அனுமதிக்க மாட்டார்கள்" என்று குறிப்பிட்டார். அவர்களின் உணவைப் பற்றிய சுருக்கமான கலந்துரையாடலின் போது பாபா, காந்தியிடம் பிளீடரின் கடுமையான உபவாசத்தைப் பற்றி விளக்கினார்.

அதைத் தொடர்ந்து, பேச்சின் தலைப்பு காதியை நோக்கித் திரும்பியது. பாபாவிடம் காந்தி கேட்டார், “எனக்குப் புரியவில்லை நான் என்ன குற்றம் செய்தேன் என்று! பாமர மக்களின் மேம்பாட்டிற்காக, சுழல் சக்கரம் (கை ராட்டினம்) என்ற யோசனையை நான் முன்வைத்தேன். எதுவாயினும் இன்றிரவு உங்களை சந்திப்பேன். தற்போது, எனக்கு ஒரு சில முக்கியமான வேலைகள் உள்ளன; இரவில் எப்படியேனும் வருவேன்.”

காந்தி அன்று இரவு ஒன்பது மணிக்கு பாபாவின் அறைக்கு வந்தார். அவ்வேளையில் அவர், பாபாவின் ‘இரகசிய புத்தகம்’ அடங்கிய பெட்டகத்தை, கப்பல் பணியாளரின் உதவியுடன் திறந்து, எடுத்து வந்தார். பாபா அவருக்கு ‘படைப்பு’ என்ற தொடரின் சில அத்தியாயங்களைப் படிக்குமாறு கொடுத்தார்.

அவர்களிடையே பிற்பகலில் நடந்த உரையாடலைக் குறிப்பிட்டு, பாபா இவ்வாறு விளக்கினார்:

**உணவு மற்றும் காதி குறித்த விஷயத்தை தெளிவுபடுத்த விரும்புகிறேன். பல ஆண்டுகளாக நான் சைவ உணவையே உண்டு வருகிறேன். நான் கல்லூரியில் படிக்கும் வேளையில், ஒரு முறை கூட உணவைத் தவறவிட்டால் அமைதி இழந்து, மன எரிச்சல் அடைந்தது உண்டு. நேற்றிரவு நான் உங்களுக்குத் தெரிவித்தது போல, பாபாஜானுடனான சந்திப்பு, அவர் எனக்களித்த இறை முத்தம் - அதற்குப் பிறகு, நான் உணவு விஷயத்தில் முற்றிலும் அலட்சியமாகிவிட்டேன். ஒரு முறை, பதினொரு மாதங்களுக்கு (1914ஆம் ஆண்டு), நான் வலுவற்ற தேநீர் மட்டுமே அருந்தி வந்தேன். அந்த நேரத்தில், அற்புதமான விஷயம் என்னவெனில், நான் உண்ணவில்லை என்ற எண்ணமே எனக்கு இருந்ததில்லை. நான் என்ன செய்தேன் என்று எனக்குத் தெரியாது, என்றாலும், மிக்க ஆரோக்கியமாக இருந்தேன்.**

**பதினொரு மாதங்களாக உணவு உண்ணாதது மட்டுமின்றி, நான் சிறிதளவும் தூங்கவில்லை. திறந்த கண்களோடு படுத்திருந்தேன். எனது பெற்றோர் மிகவும் கவலைக்குள்ளாயினர். எனது தாயார் முதலில் என்னைப் பைத்தியம் என்றே நினைத்தார். பரூச்சா என்ற சிறந்த மருத்துவர், எனக்கு ‘மார்ஃபின்’ ஊசி மருந்தைக் கொடுத்தும், எந்த பயனும் இல்லை.**

**அந்தக் காலகட்டத்தில் எனக்கு, தூக்கம் என்பது அறவே இல்லை.**

**அதற்குப் பிறகு நான் உணவு உண்ண ஆரம்பித்தபோது, (சைவ உணவு) அதற்கு ஒரு நிலையான நேரம் இல்லை. அடிக்கடி நான் சில நாட்கள், அல்லது மாதக்கணக்கில் உபவாசம் இருந்தேன். பால், வலுவற்ற தேநீர் அல்லது தண்ணீர் மட்டுமே உட்கொள்வது வழக்கம், ஆனால் நான் தொடர்ந்து உபவாசம் இருந்தேன். தண்ணீர் மட்டுமே அருந்திய போதிலும், ஒரு நாளைக்கு 25 மைல் தூரம் நடந்து செல்வதை வழக்கமாகக் கொண்டேன். அவ்வப்போது விரும்பினால் மட்டுமே சிறிதளவு உண்டு வந்தேன்.**

**பல ஆண்டுகளாக, எனது மண்டலியும் இப்போது சைவ உணவை மட்டுமே உண்டு வருகிறார்கள். ஒரு முறை நீங்கள் ஏர்வாடா சிறையில்**

**இருந்தபோது, என்னுடைய மண்டலியில் 20 பேரை மட்டும் இரண்டு மூன்று மாதங்களுக்கு, பால் மட்டும் அருந்தி உபவாசம் இருக்கச் செய்தேன். அவர்களில் எவருக்கும் எந்த அசௌகரியமும் ஏற்படவில்லை.**

**என்னுடைய மண்டலியில் பிளீடர் என்பவர், கடந்த இரண்டரை ஆண்டுகளாக, பால் மட்டும் அருந்தி வாழ்ந்து வருகிறார்; மிகவும் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறார். அது மட்டுமின்றி, அவர் அறை ஒன்றில் தனியாக அடைக்கப்பட்டு, எவருடனும் பேசாமல், கடுமையான மௌனத்தைக் கடைப்பிடிக்கிறார். மேலும், படிக்கவும், எழுதவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதற்கும் மேலாக, நான் எப்பொழுதும் எனது பயணத்தில் மும்முரமாக இருப்பதால், அவரை சந்திக்கும் வாய்ப்பும் மிக அரிது. இருந்தாலும், அவர் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதை, பிற மண்டலி வழியாகத் தெரிந்து கொள்கிறேன்.**

“பால் மட்டும் அருந்தி தனிமையில் இருப்பதாவது பரவாயில்லை; ஆனால் எவருடனும் பேசாமல், படிக்கவும் எழுதவும் செய்யாமல் இருப்பது மிகவும் சிரமமான ஒன்று” என்று காந்தி இடையே குறிப்பிட்டார்.

மெஹர் பாபா, ‘ஆமாம்’ எனத் தலை அசைத்து மீண்டும் தொடர்ந்தார்.

**கோலாப்பூரில் தீக்ஷித் எனும் மற்றுமொரு நெருங்கிய பக்தர், ஒரு பள்ளிகூடத்தில் ஆசிரியராகப் பணிபுரிகிறார். அவர் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக, பாலுடன் வாழைப்பழத்தையும் உண்டு வருகிறார். மிகவும் ஆரோக்கியமாக இருந்து, நாள் முழுவதும் பணிபுரிகிறார். திருமணமாகி மனைவியுடன் இருந்தபோதும், அவரை ஒருபோதும் தீண்டுவதில்லை; இதுவே உண்மையான, முழுமையான பிரம்மச்சரிய வாழ்க்கை. அவர் தனது வாழ்க்கையை இளைஞர்களின் சேவைக்காக அர்ப்பணித்துள்ளார்.**

“தீக்ஷித் என்பவரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்ததாக ஞாபகம்; இது அவராகத்தான் இருக்க வேண்டும்” என்று காந்தி கூறினார்.

“மெஹர் பாபா ஸாஹேபை விரைவில் சந்திக்கும்படி அவர் என்னிடம் கேட்டிருந்தார்; இருந்தும், அந்த நேரத்தில் நான் எனது பணியில் மும்முரமாக இருந்ததால், ஒரு நாள் அவரை சந்திக்கும் நோக்கத்தில் கடிதத்தை என்னுடன் வைத்திருக்கிறேன்” என்றும் காந்தி எடுத்துரைத்தார்.

மெஹர் பாபா, உணவு பற்றிச் சுருக்கமாகக் கூறி முடித்தார்: **இதை இப்படிக் கூறலாம்: பால் ஒரு சிறப்பான உணவு; அது உடலைப் பாதுகாத்து மனதைத் தூய்மைப்படுத்துகிறது. மேலும் மனம் தூய்மையாகும்போது, அதைக் கட்டுப்படுத்துவது மிகவும் சுலபம். ஆசைகள் குறைந்துவிடும், இது ஆன்மீகத்தில் நாட்டம் உள்ளவர்களுக்கு அவசியமானது, ஏனெனில் மனம் கட்டுப்பாட்டில் இல்லாமல், ஆன்மீகப் பாதையில் எந்த முன்னேற்றமும் இல்லை. ஆசைகளும் ஏக்கங்களும் நீடிக்கும் வரை, மனதைக் கட்டுப்படுத்த முடியாது. எனவே, அந்த நிலைப்பாட்டிலிருந்து பார்க்கும்போது, பால் ஒரு சிறந்த உணவு.**

அதற்கு காந்தி, “என் அனுபவமும் அதுதான். நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க பால் அவசியம்” என்று பதிலளித்தார்.

உரையாடலின் தலைப்பை மாற்றி, பாபா கூறினார்:

**இப்போது நான், காதி பற்றிய விஷயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நீங்கள் சொல்வது போல், எல்லாவற்றிற்கும் இரண்டு பக்கங்கள் உள்ளன - ஒன்று பொருள் சம்மந்தப்பட்டது, மற்றொன்று ஆன்மீகம். பொருளைப் பொறுத்தவரை இரண்டு முக்கிய விஷயங்கள் உள்ளன: அது மலிவாக இருக்க வேண்டும், மேலும், ஒருவரின் பூர்வீக நாட்டுடன் சார்ந்து இருக்க வேண்டும்.**

**நான் எப்பொழுதும் சுத்தமான, எளிமையான ஆடைகளை அணிகிறேன். பல ஆண்டுகளாக, நான் ஒரு கடினமான கம்பளி** (கம்லி) **போர்வைலிருந்து தயாரிக்கப்பட்ட கோட்டு ஒன்றை அணிந்து வந்தேன். காதியை விரும்பும் எனது மண்டலியில் பலர், அதைப் பயன்படுத்த அனுமதிக்கிறேன். ஆனால் நான் இதைப் பற்றி எவருக்கும் அறிவுரை வழங்குவதில்லை, ஏனெனில் நானே செய்யாத விஷயங்களை, பிறரைச் செய்யச் சொல்வது சரி ஆகாது. உதாரணமாக, புகைப்பிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையான ஒருவர், புகைப்பிடிக்க வேண்டாம் என்று பிறருக்குச் சொல்வது சரியல்ல.**

**நீங்கள் காதியைக் குறித்துப் பிரச்சாரம் செய்வது பாராட்டத்தக்கது. இது மலிவாகவும், துணியை நெசவு செய்யும் ஏழைகளின் வாழ்வாதாரமாகவும் விளங்கும். எனவே, எல்லா வகையிலும் நல்லது. அதைப் பயன்படுத்த விரும்புவோர் அப்படியே செய்யலாம். ஆனால், நான் விளக்கிய சில காரணங்களுக்காக, இதை அணியும்படி பிறரை நான் கேட்க முடியாது.**

சிறிது நேரத்திற்குப் பிறகு, பாபா தொடர்ந்தார்:

**இப்போது உங்களுக்கு நான் ஒரு விஷயத்தைக் கூறுகிறேன். நான் மாமிசம், மீன் போன்ற அசைவ உணவுகளை உண்ணாததால் பார்சிகள் என்னை இழிவு படுத்தி, சைத்தான் என்று அழைக்கிறார்கள். நான் மது அருந்துவதில்லை, மோசமாக நடந்து கொள்வதில்லை. பொதுவாக பார்சியைப் பற்றிய அவர்களின் வரையறை என்னவெனில், அவர்கள் அசைவ உணவை உண்டு, மது அருந்தி, ஒழுக்கக்கேடான வாழ்க்கையை வாழ்வது; அதே நேரத்தில் ஸத்ரா, கஸ்தி** (பூணூல்) **போன்ற மத அடையாள சின்னங்களை அணிந்து கொள்வது, நெருப்புக் கோயிலுக்குச் செல்வது, பூசாரி வர்க்கத்திற்கு முக்கியத்துவம் வழங்குவது. இப்படி அவர்களின் நடத்தையால், அவர்களே உண்மையில் சைத்தான்கள்! சுருக்கமாகச் சொன்னால், ஒரு பார்சி தான் விரும்பியதைச் செய்யலாம், ஆனால் அவர் மத சின்னங்களை வெறுமனே அணிந்தால் அவர் ஓர் உண்மையான ஸொராஸ்டிரியன் என்று கருதப்படுகிறார்.**

**ஸொராஸ்டிரிய இனத்தைச் சார்ந்த, கர்னல் எம்.எஸ். ஈரானி, ஒரு முறை மெஹராபாத்திற்கு வந்தார். அந்த நேரத்தில், நான் மேசை வடிவிலான ஒரு சிறிய அறையில் தங்கியிருந்தேன், அது அவருக்கு ஒரு கோழி கூண்டு போலத் தோற்றமளித்தது; மெஹராபாத்தின் கடினமான, எளிமையான**

**சூழ்நிலை அவருக்கு அவ்வளவு இணக்கமாக இல்லை. போலி சாதுக்கள், புனிதர்களின் தகுதியற்ற தவறுகளை வெளிப்படுத்தும் நோக்கத்தில், தினசரி பத்திரிகைகளில் என்னையும் சேர்த்து அவதூறான பதிவுகளை வெளியிட்டார்.**

**கர்னல் ஈரானியின் நடவடிக்கைகள் என்னைப் பற்றிய தவறான புரிதலுக்கு ஓர் எடுத்துக்காட்டு. அவர் உண்மையில் எனது நண்பர், ஏனெனில் அவரும் என்னுடையவர். எனது நண்பர்கள், எதிரிகள் அனைவருள்ளும் இருக்கும் ஆத்மா ஒன்றே ஒன்று. ஒருவர் தனது கன்னத்தை இதமாக வருடினாலும், அல்லது அதே கையால் தன்னை அறைந்தாலும், அவர் வருத்தப்படுவது இல்லை, ஏனெனில் அது ஆறுதலாக இருந்தாலும், வலி எடுத்தாலும் அது அவரது கைதான். அதேபோல், என் மீது அக்கறை உள்ளவர்கள், என்னை விமர்சிப்பவர்கள் அனைவரும் என்னுடையவர்கள். அனைத்தும் எனக்குச் சொந்தமானது, அனைத்தும் சமமானது.**

கர்னல் ஈரானியைப் பற்றிக் குறிப்பிட்டதும், காந்தி, “அவர் பெல்காவ்மில் வாழ்ந்து வந்த கர்னல் ஈரானிதானே?” என்று கேட்டார். அவர் 1927ஆம் ஆண்டு பெல்காவ்ம் சிவில் மருத்துவமனையில் உயர் அதிகாரியாகப் பணிபுரிந்தார் என்று சாஞ்சி பதிலளித்தார்.

காந்தி உடனே, “ஆமாம், அவரை எனக்குத் தெரியும்” என்றார்.

பார்ஸிகளைப் பற்றி காந்தி கருத்துத் தெரிவிக்கையில், “அவர்கள் எனது ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரித்து, எனக்குத் துணையாக இருந்தனர். மும்பையின் பார்சிகள் உண்மையில் அதிசயமிக்க செயல்களைச் செய்துள்ளனர்!”

காந்தி தனது சிறைவாசம் குறித்து, “எனக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டபோது, அது உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் ஒரு விதத்தில் ஓய்வெடுக்க வாய்ப்பாக அமைந்தது. அன்றாட வாழ்க்கையின் எண்ணற்ற தொந்தரவுகளிலிருந்து நான் விலகி இருந்து, இந்தியாவின் நிலைமையைக் குறித்து, படிக்கவும், சிந்திக்கவும் வேண்டிய நேரத்தை வழங்கியது” என்று குறிப்பிட்டார்.

மெஹர் பாபா, அவ்வேளையில் எதிர்கொண்ட எதிர்ப்பைப் பற்றி மேலும் விளக்கினார்:

**“கர்னல் மற்றும் பார்சிகள் எனக்கு எதிராக இருப்பது ஏன்? நான் மாமிசம் உண்பதில்லை, மது அருந்துவதில்லை. அவர்களைப் பொறுத்தவரை, அவர்களின் மதத்தின் போதனை என்பது, உண்பது, அருந்துவது மேலும் அவர்கள் விரும்பிய வண்ணம் மகிழ்ச்சியாக இருப்பது - ஸத்ரா, கஸ்தி** (பூணூல்) **அணிந்து கொள்வது, பொதுவாக செல்வத்துடன் செழிப்பான வாழ்க்கையை வாழ்வது - இது அவர்களுக்குப் போதுமானது.**

**“இதற்கெல்லாம் பூசாரி வர்க்கமே பொறுப்பு. அவர்கள் அனைத்திலும் தடையாக இருக்கிறார்கள்.** காந்தியைப் பார்த்து, **“இந்தியா சுதந்திரம் அடைந்ததும், இதை முதலில் செய்யுங்கள்: அனைத்து புரோகிதர்கள், தஸ்தூர்கள், முல்லாக்களைக்** (இந்து, ஸொராஸ்ட்ரிய, முஸ்லிம் பாதிரியார்கள்) **கைது செய்யுங்கள்! வன்முறையைப் பயன்படுத்த வேண்டாம்,**

ஆனால் அவர்களுடன் உறுதியாக நடந்து கொள்ளுங்கள், அவர்களைத் தீவிரமான முறையில் கையாளுங்கள், ஏனெனில் இது ஒரு முக்கியமான, மிகப்பெரிய பணியாகும். நீங்கள், அவர்கள் அனைவரையும் ஏர்வாடா சிறைக்கு அனுப்பினால் ஒழிய, அவர்கள் முன்னேற மாட்டார்கள்; மாறாக, அனைத்தும் மோசமாகிவிடும்!"

பாபா இவ்வாறு கூறி முடித்தார், "யார் ஒருவருக்கு எல்லாமே பூஜ்ஜியமாக இருக்கிறதோ, அவருக்கு 'அதுவாக' அல்லது 'இதுவாக' இருந்தால் என்ன? அனைத்தும், அனைவரும் அவருக்கு சமம்."

இந்தியாவில் தற்போதைய அரசியல் நெருக்கடி குறித்து, மெஹர் பாபா, காந்தியிடம் கூறினார்:

இந்து, முஸ்லிம் ஒற்றுமை பற்றிய கேள்விக்கு முதலில் தீர்வு காணவேண்டும். முடிந்தவரை அவர்களுக்கு, தனி வாக்காளர் தொகுதிகளை அனுமதிக்க வேண்டும். அவர்கள் ஒன்றுபட்டு அதிகாரத்திற்காகப் போராடட்டும். கூட்டு வாக்காளர் முறை நல்லது, ஆனால், முஸ்லிம்கள் தனி வாக்காளர் தொகுதிகளை விரும்புகிறார்கள்; எனவே, இப்போதைக்கு அவர்கள், தனியாக வைத்துக் கொள்ளட்டும். அவர்களே, பின்பு கூட்டு வாக்காளர்களை ஆதரிப்பார்கள், அதற்குப் பிறகு, சற்று நிரந்தரத் தன்மை நிலவும். ஆனால், நீங்கள் இப்போது கூட்டு வாக்காளர்களுக்கு முயற்சித்தால், அது எதிர்ப்பை சந்திக்கும்.

இயன்றவரை, லண்டனில் நடக்கும் மாநாட்டில் உங்கள் கோரிக்கைகளை உறுதியாக முன்வைக்கவும். நீங்கள் என்ன நினைத்தாலும், எதைச் செய்ய முடிவு செய்தாலும், அதை உங்கள் உரிமையாகக் கோருங்கள். அதை வழங்கலாமா? வேண்டாமா? என்பதை ஆங்கிலேயர்கள் முடிவு செய்யட்டும், ஆனால் நீங்கள், உங்கள் கோரிக்கைகளில் விடாமுயற்சியுடன் இருக்க வேண்டும். ஆங்கிலேயர்கள் எல்லாவற்றையும் (இந்தியாவிற்கு முழு ஆதிக்க உரிமையை) வழங்குவது சந்தேகத்திற்குரியது, ஏனெனில், முதல் சுற்று வட்டமேசை மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவை அவர்கள் அப்படியே கடைப்பிடிப்பார்கள்.

ஆங்கிலேயர்கள் எதையும் கொடுக்கவில்லை என்றாலும், நீங்கள் வெறுங்கையுடன் திரும்பி வரும் சூழ்நிலை உருவானாலும், கவலைப்பட வேண்டாம், ஏனெனில் எந்த உடன்படிக்கைக்கு நீங்கள் வந்தாலும் அது நல்லது.

நீங்கள் அவ்வாறு செய்யாவிட்டால், அதை, வேறு எவரும் செய்ய மாட்டார்கள். எனவே சாத்தியமாகச் செயல்படக்கூடிய சில முடிவுகள் இருக்கட்டும். இல்லையென்றால், நீங்கள் ஒத்துழையாமையை (அதற்கு பதிலாக) வழங்க வேண்டும். தற்போதைய அரசியல் சூழலையும், சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு, வன்முறை வெடிக்கக்கூடும்; இதைக் கட்டுப்படுத்த மிகவும் கடினமாக இருக்கும். இளைஞர்கள் வன்முறையைத் தழுவினால், அது மிகவும் அழிவுகரமானதாக இருக்கும், மேலும் இந்தியாவின் ஆன்மீக நிலைபாட்டிற்குத் தீங்கு விளைவிக்கும்.

**வட்டமேசை மாநாட்டிலிருந்து நீங்கள் வெறுங்கையுடன் திரும்பி வருவதாக இருந்தால், அஹிம்சை முறையில், சட்ட ஒத்துழையாமை இயக்கத்தைப் பின்பற்றினால், அது மிகச் சிறந்ததாக இருக்கும். அதிக துன்பங்களை அனுபவிப்பது, இப்போது இந்தியாவிற்குத் தீங்கு விளைவிக்காது. இந்த வேதனைகள், எதையும் தாங்கும் தயார் நிலையை உருவாக்கும். உண்மையில், ஒவ்வொரு நல்ல முடிவுக்கும் மூல காரணம் துன்பம். இந்தியா ஆன்மீக மகத்துவத்தின் - அவதார புருஷர்கள் மற்றும் குருநாதர்களின் - பூமியாகக் கருதப்படுகிறது. இந்த ஆன்மீக மகத்துவத்தைத் தக்கவைக்க, துயரங்களைத் தாங்கும் வலிமை இருக்க வேண்டும். ஐரோப்பா, பொருட்கள் சார்ந்த பெருமையில் உள்ளது; ஆனால், அது மாறவேண்டும்.**

**தீண்டாமை** (ஹரிஜன மக்களுக்கு எதிரான தவறான எண்ணம்), **இந்தியாவில் மற்றுமொரு பெரிய பிரச்சினை. இது பிராமணர்கள் இழைக்கும் அநீதி; மிகப்பெரிய தீமை; அவர்கள் ஆழமாக வேரூன்றிய கடந்த கால மனப்படிவங்களைக் கொண்டவர்கள், எளிதில் அழிக்கமுடியாதவை.**

**இந்தியாவில் எந்தவொரு சமூகமும் சீரழிய முக்கிய காரணமாக இருப்பவர்கள் பூசாரி வர்க்கம், தங்கள் சுயநல நோக்கங்களுக்காக மத சடங்கு சம்பிரதாயங்களை நிலைநிறுத்தி, சமுதாய முன்னேற்றத்திற்கு பெரும் முட்டுக்கட்டையாக உள்ளனர்.**

மெஹர் பாபாவின் இந்தக் கருத்துரைகளுடன் இரவு 10 மணிக்கு, சந்திப்பு நிறைவுற்றது. புறப்படுவதற்கு முன்பு காந்தி, அவர் தங்கி இருக்கும் தர்மசாலைக்கு (ஸெராய்) வருமாறு மீண்டும் அழைப்பு விடுத்தார். பாபாவும் **“நிச்சயமாக”** என்று கூறி அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

அடுத்த நாள், 1931, செப்டம்பர் 10, சாஞ்சியை பல முறை காந்தியின் அறைக்கு அனுப்பி, பாபா எழுதிய வேறு சில சொற்பொழிவுகள் மற்றும் செய்திகளையும் அனுப்பி வைத்து, அதைப் பற்றிய காந்தியின் கருத்தைக் கேட்டார். இருப்பினும், பகலில் பாபாவை சந்திக்க, காந்திக்கு எந்த வாய்ப்பும் இல்லாமலாயிற்று.

இரவு உணவு மற்றும் மண்டலியுடன் கலந்துரையாடலுக்குப் பிறகு, பாபா ஓய்வெடுக்கச் சென்றார். சிறிது நேரத்தில், திடீரெனக் கதவைத் தட்டும் ஓசை; பாபாவைப் பார்க்க காந்தி மீண்டும் வந்திருந்தார், “என்னை மன்னியுங்கள்; இன்று நான் சற்று காலதாமதமாக வந்துவிட்டேன். நீங்கள் ஓய்வெடுக்கிறீர்கள் என்றால் நான் பிறகு வருகிறேன்” என்று கூறினார்.

மெஹர் பாபா கதவைத் திறந்து, **“வாருங்கள், வந்து அமருங்கள்”** என்று சைகையால் தெரிவித்து, **“உங்களிடம் போதுமான நேரம் உள்ளதா?”** என்று வினவினார்.

“உங்கள் வார்த்தைகளைக் கேட்க, நான் எப்படியேனும் நேரத்தை ஒதுக்க முடியும். நீங்கள் தயங்காமல் விளக்கலாம். பாருங்கள், நான் என் இருக்கையில் அமர்ந்துவிட்டேன். நீங்கள் விரும்பும் வரை நான் அமர்ந்திருப்பேன். இந்த வாய்ப்பு எனக்கு மீண்டும் எங்கிருந்து கிடைக்கும்?”

காந்தி மிகவும் மகிழ்ச்சியான மனநிலையில் காணப்பட்டார், மேலும் தனது எழுத்துக்கள் குறித்த காந்தியின் கருத்துக்களை அறிந்துகொள்ள பாபா விரும்பினார். காந்தி இவ்வாறு எடுத்துரைத்தார்:

உங்களுடைய எழுத்துக்கள், (உரைகள், விளக்கங்கள்) அவற்றின் அசல் வடிவத்தில் இருக்க வேண்டும், இல்லையெனில் அவை இனிமையை இழந்துவிடுகின்றன. உங்களுடையது உங்களுடையதுதான்; அதைப் பிறரின் கைவண்ணத்துடன் ஒப்பிட முடியாது. நான் உங்கள் சொற்களில் புதைந்துள்ள உண்மையைப் புரிந்து கொண்டேன்; அனைத்தையும் நான் கரைத்து, குடித்து, ஜீரணித்தேன். நீங்கள் தெரிவிக்க விரும்புவதை நான் தெளிவாகப் புரிந்து கொண்டேன்.

ஆனால் இதர, புதிய அனுபவமற்ற கைகளால் எழுதப்படுவதைப் பின்பற்றுவது கடினம். எடுத்துக்காட்டாக தஸ்தூருக்கு இலக்கணம், மொழியில் மட்டுமே கண்ணும் கருத்தும் உள்ளது, மேலும் உங்கள் அசல் சொற்களின் இனிமையை அது கொன்றுவிடுகிறது. ஒரு விஷயத்தைப் பற்றிய உங்கள் விளக்கத்திலும், தஸ்தூரின் மொழிபெயர்ப்பிலும் வானத்திற்கும் பூமிக்கும் இடையிலான பெரிய வித்தியாசம் உள்ளது! நீங்கள் "போ" என்று சொல்வது வெறும் சொல் அல்ல. இந்தச் சொல்லின் பின்னால் போகத்தூண்டும் உங்களின் சக்தி பொதிந்துள்ளது. தஸ்தூரின் மொழிபெயர்ப்பில் அது இல்லை.

எடுத்துக்காட்டாக, எனது மகன் ஒரு மரத்தில் ஏறிவிட்டான் என்று வைத்துக் கொள்வோம், ஆனால் இப்போது அவன் இக்கட்டான நிலையில் மாட்டிக்கொண்டான், அவனால் மேலும் ஏறவோ, கீழே இறங்கவோ முடியாமல் தொங்கிக்கொண்டே இருக்கிறான். அவ்வேளையில் நான் ஒரு மெத்தையை எடுத்து வருகிறேன் என்று அவனிடம் சொல்கிறேன், ஆனால் நான் திரும்பி வரும் வரை அவனால் மரத்தைப் பற்றிக் கொண்டிருக்க முடியுமா என்பது சந்தேகமே; அவன் கீழே விழுந்தால், நான் அவனை நிரந்தரமாக இழந்து விடக்கூடும். எனவே, கடவுளை மனமார நினைவில் வைத்துக் கொண்டு, நான் அவனிடம், 'குதி! கீழே குதி!' என்கிறேன்; அவனைப் பற்றிப் பிடிக்க எனக்கு வேண்டிய வலிமை இல்லை என்றாலும், நான் எனது கைகளை உயர்த்த, அவன் குதிக்கிறான்; இருவரும் காயப்படவில்லை.

சிறுவன் இவ்வளவு உயரத்திலிருந்து குதிக்கத் தயாரானது, நான் அவனை குதிக்கச் சொன்னதால் அல்ல. நிச்சயமாக இல்லை, இந்த வார்த்தைகளுக்குப் பின்னால், ஒரு தந்தையின் அன்பும், நம்பிக்கையும் இருந்தன. குழந்தை நினைக்கிறது: 'நான் எனது தந்தையின் கைகளில் விழுவேன், அவர் என்னைக் காப்பாற்றுவார்' என்று! இந்த நம்பிக்கை மற்றும் தைரியத்துடன் அவன் குதிக்கிறான்; நான் அவனைப் பிடிக்கிறேன்; அவன் காப்பாற்றப்படுகிறான். இதேபோல, நீங்கள் சொல்வதிலும், நான் அல்லது வேறு ஒருவர் சொல்வதிலும் மிகப் பெரிய வேறுபாடு உள்ளது.

உங்கள் புத்தகத்தைப் பொறுத்தவரை, நீங்கள் ஆங்கிலத்தில் உங்கள் கையால் (புத்தகத்தில்) எழுதியது, நீங்கள் வெளிப்படுத்த விரும்பும் அனைத்தையும் ஆங்கில மொழியில் எழுதுவது என்பது மிகவும் சிரமம்.

இதுபோன்ற படைப்புகள், சமஸ்கிருதம் அல்லது குஜராத்தி மொழியில் எழுதப்பட வேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன்.

முதல் மற்றும் முக்கியமாக, சில அல்லது பெரும்பாலான சொற்களுக்கு ஆங்கிலத்தில் பொருத்தமான, அவற்றின் உண்மையான அர்த்தத்தை வெளிப்படுத்தும் சொற்கள் இல்லை. உதாரணமாக, 'அவித்யா' எனும் சொல்லுக்கு ஆங்கிலத்தில் 'அறியாமை' என்று அர்த்தம்; அதாவது, அறிவின் குறைபாடு. ஆனால் 'அறியாமை' என்ற சொல் 'அவித்யா'வின் உண்மையான அர்த்தத்தையும், உட்கருத்தையும் குறிப்பிடுவதில்லை, அதை ஒருபோதும் பிரதிபலிக்க முடியாது. 'அவித்யா' என்றால் 'அவித்யா', வேறு ஒன்றும் இல்லை! அதை மொழிபெயர்க்க முடியாது.

இவ்வாறு கூறுவதன் காரணம் என்னவென்றால், உங்கள் எழுத்துக்களை என்னால் பின்பற்ற முடிந்தாலும், பிறருக்கு இது கடினமாக இருக்கலாம். எனவே உங்கள் எழுத்துக்கள் குஜராத்தியில் அமைந்தால், அது சிறப்பாகவும், மிக்க பயனுள்ளதாகவும் இருக்கும் என்பது எனது கருத்து.

பாபா குறிப்பிட்டார், "**இதையெல்லாம் நான் ஆங்கிலத்தில் எழுதுவதைவிட பாரசீக மொழியில் மிகச் சிறப்பாக எழுத முடியும், ஏனெனில் பாரசீக மொழியில் அதற்கு இணையான ஸூ:ஃபி சொற்கள் உள்ளன. பாரசீகம் அல்லது குஜராத்தி மொழியில் எழுதுவதைப் போல் ஆங்கிலத்தில், இந்த விஷயங்களை அவ்வளவு தெளிவாக விளக்க முடியாது**."

எழுத்துப்பலகை வழியாக விளக்கிக் கொண்டிருந்த சாஞ்சியைப் பார்த்து, காந்தி கூறினார்:

திரு. தஸ்தூருக்கு, நான் எழுதுவதாகக் குறிப்பிட்டு கடிதம் எழுதுங்கள் - ஸ்ரீ பாபா ஸாஹேபின் உரைகள், சொற்பொழிவுகள் மற்றும் செய்திகளை வெளியிடும் போது, மொழி நடைக்கு, குறைந்த அளவில் முக்கியத்துவம் அளிக்கும்படி அவரிடம் கூறுங்கள். மேலும், மொழியின் அழகு, இலக்கணத்தை விட அசலான சொற்களும், அதன் ஆழமான பொருளும் மாறாமல் இருப்பதில் அதிக கவனம் செலுத்துமாறும் அவருக்கு எழுதுங்கள். மொழியை மெருகூட்டுவதில் என்ன தேவை இருக்கிறது? அவ்வாறு செய்வது அத்தகைய சிறந்த கருத்துக்களுக்கு அநீதி இழைப்பது போலாகும். நான் சொல்வதை, தஸ்தூர் ஏற்றுக்கொண்டால், ஒவ்வொரு முறையும் அவர் பாபாவின் எழுத்துக்களை மாற்றும்போது பத்திரிகையில் அவர் எழுதுவதாக ஒரு கீழ்க்குறிப்பையும் வெளியிட வேண்டும்.

தொடர்ந்து, இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் குறித்து நடந்த கலந்துரையாடலுக்குப் பிறகு, "**நான் உங்களிடம் கூறியது போல, முடிந்தவரை முயற்சி செய்யுங்கள்**" என்று கூறி, பாபா சந்திப்பை நிறைவு செய்தார்.

பாபாவும் மண்டலியும் அடுத்த நாள் மார்ஸெயில்ஸ் (MARSEILLES) (ஃபிரான்ஸ்) துறைமுகத்தில் இறங்க இருந்தனர். பாபாவின் அறையிலிருந்து வெளிவருவதற்கு முன்னால், காந்தி, பாபாவிடம், "நாளை, மார்ஸெயில்ஸ்

துறைமுகத்தில் இருக்கும் கூட்டத்திலிருந்து என்னை விடுவிக்க முடிந்தால், நான் உங்களை சந்திப்பேன்" என்று கூறினார்.

காந்தி அப்போது பாபாவிடம், "நீங்கள் எப்போது உங்கள் மௌனத்தைக் கைவிடப் போகிறீர்கள்? நீங்கள் பேசும் முதல் சொற்களைக் கேட்க நான் மிகவும் ஆவலாக உள்ளேன். நீங்கள் விரைவில் பேசமாட்டீர்களா? அது விரைவில் நடக்கும் என்று நம்புகிறேன். நீங்கள் மௌனமாக இருந்து, மக்களிடையே இவ்வளவு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் போது, பேச ஆரம்பித்தால் என்னவாகும் என்பதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. நீங்கள் விரைவில் பேச வேண்டும்!"

"**நான் அதற்காகக்தான் காத்திருக்கிறேன். விரைவில் பேசுவேன். நேரம் நெருங்கிவிட்டது**" என்று பாபா பதிலளித்தார்.

எஸ்.எஸ். ராஜபுத்னா, மார்ஸெயில்ஸ் துறைமுகத்தை 1931, செப்டம்பர் 11ஆம் நாள் சென்றடைந்தது. அன்று காலை 8 மணிக்கு, முதன் முதலாக மெஹர் பாபா அவரது பாதங்களை ஐரோப்பிய மண்ணில் பதித்தார். மெரடித் ஸ்டார், ஹெர்பெர்ட் டேவி (HERBERT DAVY) இருவரும் பாபாவை அன்புடன் வரவேற்கக் காத்திருந்தனர். பாபா ஒரு வெண்ணிற அங்கியும், பழுப்பு நிற கோட்டும் அணிந்து, அவரது கழுத்து மற்றும் தலையைச் சுற்றி ஓர் இளஞ்சிவப்பு மஃப்ளரைப் போர்த்தியிருந்தார். 1928 டிசம்பரில், மெரடித் ஸ்டார், (அப்போது வயது 41) இந்தியாவிலிருந்து திரும்பிச் சென்ற பின்பு, தொடர்ந்து அவருடன் கடிதப் போக்குவரத்து நடைபெற்றது. மெரடித் ஸ்டார் மூலமாக பாபா மேற்கத்திய நாடுகளுடன் ஓர் இணைப்பை ஏற்படுத்தினார்.

கப்பலை விட்டு வெளியேறிய பாபா, மண்டலியுடன், ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜெனீவா ஹோட்டலுக்குச் சென்றார். பாபா அவசரமாக வெளியேறினார், அவருக்கும் காந்திக்கும் இடையில் வேறு எந்த சந்திப்பும் நிகழவில்லை.



மெஹர் பாபா, கென்ஸிங்டன், 32, ரஸ்ஸல் சாலை, **1931**



கிட்டி டேவி



மெரடித் ஸ்டாருடன்
மெஹர் பாபா



கிழக்கு சால்லகூம்ப், செப்டம்பர் **1931**
ஹெர்பெர்ட் டேவி, மெஹர் பாபா, ஸில்லா க்ளூஸ், ஆகா அலி

# இறை கீதத்தை மீட்டும் மேற்கத்திய நாடுகள் - லண்டன், டெவன்ஷர்

(**London, Devonshire**)

மெரடித் ஸ்டார் இந்தியாவிலிருந்து திரும்பி வந்து, 1929 ஜூலை மாதத்தில், இங்கிலாந்தின் டெவன்ஷர் நகரில் அமைந்த கூம்ப் மார்டினில், மெஹர் பாபாவின் பெயரில் தியான மையம் ஒன்றை நிறுவினார்.

இங்கிலாந்தின் இந்த இரகசிய தோட்டத்தில் நிரம்பி இருந்த 'பறவைகளின் ஏக்கம் நிறைந்த' கீதத்தைக் கேட்டு, அவதார புருஷர் மேற்கு நோக்கி விரைந்து பறந்து வந்தார்.

அன்று பிற்பகல் 1:30 மணிக்கு, மேற்கத்திய உடை அணிந்து, பாபா, மண்டலி, மெரடித், ஹெர்பெர்ட் ஆகியோருடன் மார்ஸெயில்ஸ் துறைமுகத்திலிருந்து லண்டன் நகருக்கு ரயிலில் புறப்பட்டார்.

ரயிலில் அமர்ந்திருந்த வேளையில், பாபா, ஹெர்பெர்ட்டை நோக்கிப் புன்முறுவல் செய்து, ஹெர்பெர்ட்டின் அம்சங்களும் உடலமைப்பும் வஜிஃப்தரைப் போல் இருப்பதாகக் குறிப்பிட்டார். ஹெர்பெர்ட், பாபாவின் விருப்பத்திற்கிணங்கி அனைத்து - உணவு, பயணம், தங்கும் இடம் போன்ற - ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தார்.

செப்டம்பர் 12 அன்று காலை 5.30 மணிக்கு, அனைவரும் பாரிஸ் நகரம் வந்தபோது, அங்கே, ஒரு பிரிட்டிஷ் பெண்மணி 'இனிட் எலிஸா கோர்ஃப்' (ENID ELIZA CORFE) பாபாவை எதிர்நோக்கி நின்றார்; டெக்ஸாக்கோ ஆயில் கம்பெனியில் (TEXACO OIL CO) பணிபுரிந்து வந்த இனிட் (வயது 39), மெரடித், மார்கரெட் ஸ்டார் இருவரின் நண்பர்.

அவர்கள் 'புலாய்ன்' (BOULOGNE), ஃபோக்ஸ்டன் (FOLKESTONE) வழியாக ரயில் மற்றும் (பியரிட்ஸ்) படகில் தங்கள் பயணத்தைத் தொடர்ந்து, பிற்பகல் 4:15 மணிக்கு லண்டன் நகரின் விக்டோரியா ரயில் நிலையத்தைச் சென்றடைந்தனர். மஹாத்மா காந்தி ஃபோக்ஸ்டன் வரை, அதே ரயிலில் பயணம் செய்து, அங்கிருந்து ரகசியமாக, கார் மூலம் லண்டனுக்குச் சென்றார்.

லண்டன் ரயில் நிலையத்தில் மஹாத்மா காந்தியை வரவேற்க ஏராளமான மக்கள் காத்திருந்தனர்; ஆனால் மறைமுகமாகப் பயணித்த பிரபஞ்சத்தின் இறைவனைப் பொறுத்தவரை, அவருக்காக ஒரு சிலர் மட்டுமே காத்திருந்தனர். இருப்பினும், இந்த சிலர், தங்கள் இதயங்களில் ரீங்காரம் செய்யும் இறை கீதத்தை இசைக்க வந்தவர்கள்; உண்மையான அன்பின் நாயகனை மட்டுமே, பரவசமான இதய கீதத்துடன் ஏற்றுக்கொள்கிறார்கள். பாபா, அவர்களைப் பார்த்த மகிழ்ச்சியில் அனைவருடனும் கைகுலுக்கினார். 'கிட்டி டேவி' (KITTY DAVY), 'டிக் & ஆட்ரே இன்ஸ்' (DICK AUDREY INCE) ஆகியோர் பாபாவைப் பார்த்து, திகைத்துப் போயினர்; கண்ணிமைக்காமல் கௌதாரி பறவைகள் சந்திரனைப் பார்ப்பது போல, பாபாவை உற்று நோக்கினர்! அவ்வேளையில்,

அவர்களின் கடந்த கால வாழ்க்கைப் புத்தகத்தின் எத்தனைப் பக்கங்களை அவதார புருஷர் புரட்டிப் பார்த்து, பரிசீலனை செய்து, இறை கீதத்தால் இதயத்தை விழிப்படையச் செய்தார் என்பதை அவர்களால் கற்பனை செய்ய முடியவில்லை. பாபாவின் மௌனம் அவர்களின் இதயங்களில் பேசிக் கொண்டிருந்தது; அந்த உரையாடலை இதயங்களால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். காலம் பதிவு செய்யும் ஒவ்வொரு நிகழ்வையும் வார்த்தைகளில் வெளிப்படுத்த முடியாது.

ஹெர்பெர்ட் டேவி (வயது 32) கல்லூரியில் மருத்துவ பட்டப்படிப்புப் பயின்று வந்தபோது, மெரடித் ஸ்டார், மெஹர் பாபாவின் பெயரில், டெவன்ஷரில் நிறுவிய தியான மையத்தைப் பற்றி, ஒரு நண்பர் மூலமாகக் கேள்விப்பட நேர்ந்தது. ஹெர்பெர்ட் தனது சகோதரி ‘கேத்ரின் டேவி’ உடல் நலம் குன்றி இருந்ததால், ஓய்வெடுக்க டெவன்ஷர் உகந்ததாக இருக்கும் என்ற எண்ணத்தில் மெரடித்தை சந்தித்தது, மெஹர் பாபாவைப் பற்றி அறிய ஒரு வாய்ப்பாக அமைந்தது.

முதல் உலகப் போரின் போது இந்தியாவில், இராணுவத்தில் பணிபுரிந்து வந்த ஹெர்பெர்ட், தியானம் மற்றும் ஆன்மீகத்தில் அதீத ஆர்வம் கொண்டிருந்தார். அவர், வெவ்வேறு கிழக்கத்திய குருநாதர்களின் வாழ்க்கையைக் கற்றறிந்ததால், மெஹர் பாபாவை ஏற்றுக்கொள்வதில், அவருக்கு சிரமம் ஏதுமில்லை. அவர் தனது சகோதரிக்கு, மெஹர் பாபாவின் பெயரில் எழுப்பிய தியான மையத்தைப் பற்றிக் கடிதம் எழுதினார். கேத்ரின் ‘கிட்டி’ லாரா டேவி, வயது 40, இசை ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார்; ஹெர்பெர்ட்டின் கடிதத்தைப் படித்ததும், அவர் டெவன்ஷர் புறப்பட்டுச் சென்றார். 1931 ஜூலை மாதத்தில் மெஹர் பாபாவின் வருகையைக் குறித்த தொலைத்தந்தி வந்தபோது ஹெர்பெர்ட், கிட்டி இருவரும் டெவன்ஷரில் இருந்தனர்.

ஹெர்பெர்ட், மெஹர் பாபாவைப் பற்றிய விபரங்களைக் கேள்விப்பட்டதும், ஏதோ இனம் புரியாத ஈர்ப்பு சக்தியை உணர்ந்தார். அவர், தனது மருத்துவ பயிற்சியைக் கைவிட முடிவு செய்து, அதற்கு பதிலாக, சீனாவில் லீக் ஆஃப் நேஷன்ஸ் (LEAGUE OF NATIONS) அமைப்பின் கீழ் ஆங்கில பேராசிரியராக ஒரு பதவியை ஏற்றுக்கொண்டார். அதன் மூலம் அவர் பெரிய அளவில் சம்பாதித்து, பாதியை மெஹர் பாபாவின் தியான மையம் மற்றும் இதர தேவைகளுக்கு நன்கொடையாக வழங்க முடியும் என்று எண்ணினார்.

கிட்டி, விக்டோரியா ரயில் நிலையத்தில், பாபா மற்றும் மண்டலியை எதிர்நோக்கிக் காத்திருந்தார். மஹாத்மா காந்தியை வரவேற்க ஆயிரக்கணக்கான மக்கள் காத்துக்கொண்டிருந்த அதே வேளையில், கிட்டி தனது அன்பிற்குரியவருக்காகக் காத்திருந்தார் - தன்னை அறியாமலேயே அவரது இதயத்தில் இடம் பிடித்தார். விரைவில் நிகழவிருக்கும், ஐரோப்பிய மக்களின் விழிப்புணர்வைத் தூண்டும் முக்கியமான பணியில் பங்கெடுக்க, கிட்டி ஆயத்தமாகி வந்தார்.

‘கென்ஸிங்டன் (KENSINGTON), 32, ரஸ்ஸல் சாலை’யில் அமைந்த தனது பெற்றோரின் இல்லத்தில், மெஹர் பாபா தங்குவதற்கு ஹெர்பெர்ட் ஏற்பாடு செய்திருந்தார். ரயில் நிலையத்திலிருந்து பாபா, காரில் டேவியின் இல்லத்தைச் சென்றடைந்தார். பெட்டி படுக்கைகளை எடுத்துவர கிட்டி, ருஸ்தத்திற்கு உதவியாக இருந்து, வேறொரு காரில் பாபாவைப் பின்தொடர்ந்தார். சில பொருட்களை டெவன்ஷருக்கு அனுப்பி வைக்கும் பொறுப்பை இனிட் ஏற்றுக்கொண்டார். மஹாத்மா காந்தியைப் பார்க்கக் காத்திருந்த மக்கள், சாலையில் வரிசையாக நின்றனர். ஆனால் பிரிட்டிஷ் அதிகாரிகள், ஆர்ப்பாட்டத்தைத் தவிர்க்கும் நோக்கத்தில், காந்தி சென்ற காரை ரகசியமாக வேறு வழியில் ஓட்டிச் சென்றனர். காலம் இதை இப்படிப் பார்த்தது: மன்னர்களுக்கெல்லாம் மன்னர் அந்த வழியே கடந்து சென்றபோது, அவர்கள் காரில் மஹாத்மா காந்தி என்று நினைத்த நபருக்கு பதிலாக, அவர்களுக்குத் தெரியாமலேயே, மெஹர் பாபா அவர்களைக் கடந்து சென்றது ஒரு சிறப்பான, அதிர்ஷ்டவசமான நிகழ்வு.

பேரரசரை யார் தான் அடையாளம் காண முடியும்? அவரைப் பற்றி அறிய, பல வாழ்க்கைகளின் தியாகம் தேவை. ஒருவர் அவரிடம் அனைத்தையும் ஒப்படைத்துவிட்டு, ஒன்றும் இல்லாதவன் போல், அவரது வீட்டு வாசலில் நின்று கையேந்த வேண்டும். இதனால் தான் பேரரசரைச் சுற்றி ஒரு சிலரே இருக்கின்றனர். அவர்களுக்கு எதையும் கொடுக்காமல், அவர்களுக்கு நெருக்கமாக இருக்கும், பிரியமான அனைத்தையும் பறித்து, எதுவும் தேவையில்லாத நிலையை உருவாக்க வேண்டும். மாறாக அவர்கள், தம் வசம் இருப்பதை இழந்து, தங்கள் சுமையைக் குறைக்க விரும்புகிறார்கள்; இப்படி, பேரரசருக்கு அடிமைகளாக மாறுவதன் மூலம், மாயை எனும் திரையை என்றென்றும் கிழித்தெறிகிறார்கள்.

அவதார புருஷர் எப்பொழுதும் அத்தகைய அடிமைகளைத் தேடும் முனைப்பில் இருக்கிறார்; அதற்காக அவர்களிடையே வந்து, நட்பை விதைக்கிறார். மெஹர் பாபா மேற்கத்திய நாடுகளுக்கு வந்ததன் உண்மையான காரணம், அவரோடு இணைந்தவர்களுக்குத் தன்னை வெளிப்படுத்துவதே.

மெஹர் பாபா வந்த கார், மெதுவாக லண்டன் நகரின் வீதிகளில் செல்லும்போது, காலம் ஒரு நாள் இந்தக் காட்சியின் முரண்பாட்டை கவனிக்கும். “உலக மக்களே, காந்தியைக் காண காத்திருக்கிறீர்கள். நீங்கள் இன்னும் பேரரசரின் நட்பைப் பெறத் தயாராக இல்லை. உங்கள் நேரம் இன்னும் வரவில்லை. பேரரசர் உங்களுடையவர், உங்களோடு ஒன்றியவர், ஆனால் நீங்கள் அவரை இன்னும் கண்டு கொள்ளவில்லை. உங்கள் கண்கள் திரையால் மூடி மறைக்கப்பட்டுள்ளன, எனவே நீங்கள் அவரைப் பார்க்க முடியவில்லை.”

மெஹர் பாபா பயணம் செய்த கார், நேரடி பாதையில் செல்லாமல், கென்ஸிங்டன் அருகில் ‘வெளியுறவு அலுவலகம்’, ‘டவ்னிங் வீதி’யைக் (DOWNING STREET) கடந்து சென்றபோது, ஹெர்பெர்ட், ‘பக்கிங்ஹாம் அரண்மனை’, (BUCKINGHAM PALACE) ‘பாராளுமன்ற கட்டிடத்தை’ச் சுட்டிக்காட்டினார். பாபாவின் பார்வை அரண்மனையில் விழாமலில்லை. அதைக் கடந்து சிறிது தூரத்தில் அமைந்த

டேவியின் வீட்டை வந்தடைந்ததும், (இறை அன்புக்காக ஏங்கும்) மற்றுமொரு பெண்மணி, 'மேரி மார்கரெட் கிராஸ்க்' (MARY MARGARET CRASKE) மெதுவாகக் கதவைத் திறந்தார் - திறந்த அதே கணத்தில், குருநாதர் ஏற்கனவே அமர்ந்திருக்கும் சிம்மாசனத்தின் இதய வாயிலும் தானாகவே திறந்தது.

மார்கரெட் கிராஸ்க் (வயது 38), அந்த ஆண்டு மார்ச் மாத இறுதியில் டெவன்ஷருக்கு ஓய்வெடுக்கச் சென்ற வேளையில், மெஹர் பாபாவைப் பற்றிய விபரங்களை அறிந்து கொண்டார். ரஷ்யாவின் டியாகலெஃப் (DIAGHILEV) பாலேயின் (கூட்டு நடனக்குழு) முன்னாள் உறுப்பினரும், ஒரு பிரபல நடனக் கலைஞருமான இவர், லண்டனில் ஒரு பாலே பள்ளியை 'மேபெல் ரையன்' (MABEL RYAN) என்ற சக ஊழியருடன் நடத்தி வந்தார்.

மெஹர் பாபாவுடனான சந்திப்புக்கு வழிவகுத்த நிகழ்வுகளை மார்கரெட் கிராஸ்க் நினைவு கூர்ந்தது பின்வருமாறு:

நான் 'குர்ட்ஜீஃப்', (GURDJIEFF), 'உஸ்பென்ஸ்கி' (OUSPENSKY) மற்றும் பிற ஆழ்ந்த எழுத்தாளர்களைப் பற்றிப் படித்துள்ளேன், ஆனால் நான் தேடுவதை ஒருபோதும் கண்டுகொள்ளவில்லை. 1929--1931, இரண்டு வருடங்களில், நான் பெருமைப்படும் விதத்திலிருந்த அனைத்தும் மறைந்துவிட்டன. எனது தந்தை, தாய், நான் அன்புடன் காதலித்த ஒருவர் மூவரும் மறைந்துவிட்டனர்; மேலும், 'டியாகலெஃப்' இறந்தார், 'ஆனா பவ்லோவா'வும் மறைந்தார். இந்த நிகழ்வுகள் என்னை மிகுந்த வேதனைக்குள்ளாக்கியது. இதற்கு முன்னால், கடவுளைத் தேடி எனது வாழ்க்கையைக் கழித்தேன், இப்போது அதுவெல்லாம் முட்டாள்தனம் என்று நினைத்தேன். நான், இனிமேல் அதைப் பற்றி நினைக்கப் போவதில்லை - போதும், போதும் என்றாகி விட்டது! அடுத்து என்ன செய்வது என்று தீர்மானிக்க முடியாமல், இந்த சூழ்நிலையிலிருந்து என்னை மீட்கும் நோக்கத்தில், எங்கேயேனும் செல்ல முடிவு செய்தேன்.

தெற்கு இங்கிலாந்தில் ஹேஸ்டிங்ஸ் (HASTINGS) நகருக்குச் செல்லும் வழியில் (அங்கு, என்னை ஒரு நடனப் போட்டிக்கு நடுவராக அழைத்திருந்தனர்) டோரோதியா என்ற பெண்மணியை சந்தித்தேன்; அவர் விக்டோரியா இரயில் நிலையத்தில் என்னை அணுகி, நான் எங்கே போகிறேன் என்று கேட்க, நான் அவரிடம் கூறியதும், அவர், "எவ்வளவு அற்புதம்! எனது தேனிலவை நான் அங்கேதான் கழித்தேன்" என்றார். அந்தப் பெண்மணியும் அங்கே செல்ல விரும்பினார், ஆனால் போதிய பணம் இல்லாததால், நான் அவருடைய கட்டணத்தைச் செலுத்தி, இருவரும் ஒன்றாகச் சென்றோம்.

செல்லும் வழியில், ஈஸ்டர் விடுமுறை நாட்களில், நான் தனியாக, நண்பர்களிடமிருந்து விலகி, எங்கேயேனும் செல்ல விரும்புகிறேன் என்று குறிப்பிட்டேன். மெரடித் ஸ்டாரால் நடத்தப்படும் டெவன்ஷரின் 'அற்புதமான இடம்' குறித்து, அந்தப் பெண்மணி என்னிடம் கூறினார். அவரே மெரடித்திற்குக் கடிதம் எழுதி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். அது ஆன்மீகம் சம்பந்தப்பட்ட தியான மையம் என்பதை அவர் என்னிடம் சொல்லவில்லை (எனக்குத் தெரிந்திருந்தால் நான் அங்குச் சென்றிருக்க மாட்டேன்.) நான் டெவன்ஷருக்குப்

புறப்படும் அதே நாளில், அந்தப் பெண்மணி என்னைப் பார்க்க மீண்டும் வந்தவர், “ஓ, வேறு ஒரு விஷயம் நான் மறந்துவிட்டேன்; தினமும் நான்கு மணி நேரம் தியானம் செய்யவேண்டும்!” என்றார்.

இறுதியாக நான், 1931ஆம் ஆண்டு ஈஸ்டர் பண்டிகை நாட்களில், கிழக்கு சால்லகூம்ப் (EAST CHALLACOMBE) சென்று மார்கரெட் ஸ்டாரை சந்தித்தேன். ஒரு மலையில் அமைந்த கல் வீடு, இரண்டு மைல் தூரம், கரடு முரடான வயற்காடு வழியாக நடந்து செல்ல வேண்டியிருந்தது. நான் வரவேற்பு அறைக்கு நடந்து செல்லும் வேளையில், வலது புற சுவரை அலங்கரித்த பாபாவின் சித்திரத்தைப் பார்த்து, “அது யார்?” என்று கேட்க, மெரடித், மெஹர் பாபாவைப் பற்றி என்னிடம் கூறினார்.

நான் திடீர் அதிர்ச்சியில் மாட்டிக்கொண்டேன். அந்த நேரத்திலிருந்து, ஏதோ என்னுள் நிகழ்ந்தது எனக்குத் தெரியும். நான் இரண்டு வாரங்கள் டெவன்ஷரில் தங்கியிருந்தேன்; இறுதியில், மெரடித், “நீங்கள் ஐந்து வருடங்கள் கடினமாக உழைத்து, ஒவ்வொரு நாளும் தியானம் செய்தால், மெஹர் பாபா வரும் வேளையில் அவரை சந்திக்கும் தகுதியை நீங்கள் அடையப்பெறுவீர்கள்” என்றார்.

ஆனால் மெஹர் பாபா, ஐந்தே மாதங்களில் வந்தார்! நான் கடவுளைக் கைவிட்டு விட்டதால், அவர் என்னிடம் வர முடிவு செய்தார்.

டேவியின் வீட்டில் பாபாவுடனான தனது முதல் சந்திப்பை மார்கரெட் தெளிவாக நினைவு கூர்ந்தார்:

வாசல் மணி ஒலித்ததும், நான் முன் கதவைத் திறந்தேன். கீழ்ப்படியில் நம்பமுடியாத அளவுக்கு, மிகவும் அழகான ஒருவர் நின்று கொண்டிருந்ததைப் பார்த்தேன். பரிபூரண சக்தியின் அடையாளமாக எதுவும் தென்படவில்லை. ஆனால், மென்மையான தன்மை, கருணை, அன்பு நிறைந்த அவரது பார்வை, அளவிட முடியாத அளவிற்கு என் இதயத்தைத் தொட்டது. அவர் படிகளில் ஏறி, என் மீது ஒரு பார்வையை வீசிச் சென்றார்; தொடர்ந்து மெரடித், சாஞ்சி மற்றும் இருவர் படிக்கட்டுகளில் ஏறிச் (குழந்தைகள் நர்ஸரி தளம்) சென்றனர். நான் முன் அறையில் அமர்ந்திருந்தேன். சில நிமிடங்களில் மெரடித் மாடிப்படிகளில் இறங்கி வந்து, “மெஹர் பாபா உங்களைப் பார்க்க விரும்புகிறார்” என்று பெருமையுடன் கூறினார்.

பதட்டத்தில் நான், “அவர் முதலில் வேறொருவரைப் பார்க்க விரும்பமாட்டாரா?” என்றேன்.

மெரடித் என்னைக் கடுமையாகப் பார்த்து, “மெஹர் பாபா உங்களைப் பார்க்க விரும்புகிறார்” என்றார். நான் உடனே மூன்று அடுக்கு மாடிப்படிகளில் ஏறி, எனது வாழ்க்கையின் மிகவும் முக்கியமான தருணத்தில் எனது குருநாதரை சந்திக்கச் சென்றேன்.

அவர் ஒரு நாற்காலியில் அமைதியாக அமர்ந்து, வேறொரு நாற்காலியை எடுத்து வந்து அதை அவருக்கு எதிரில், நெருக்கமாக வைக்குமாறு சாஞ்சியிடம் சைகையால் தெரிவித்தார். பின்பு பாபா, என்னை அதில் அமர அழைத்தார். ஓரிரு கணங்கள் தீவிரமான அமைதி நிலவியது, பின்னர் அவரது

கண்களைப் பார்க்க வேண்டியது முக்கியம் என்ற வலுவான உணர்வு எனக்கு ஏற்பட்டது. தைரியத்தை வரவழைத்து நான் அவ்வாறே செய்தேன்; ஆழமாக - என்னால் இயன்றவரை ஆழமாக - பாபாவின் கண்களை உற்று நோக்கினேன்.

நான் பார்த்ததைப் பற்றிக் கூற எதுவும் இல்லை; உண்மையில் எனக்குத் தெரியாது. அந்த நிமிடத்திலிருந்து, அவர் எந்தக் கடினமான சூழ்நிலைகளை எனக்கு வழங்கியிருந்தாலும், அவர் ‘அன்பு மற்றும் வாழ்வின் மொத்த உருவமாக இருப்பதில்’ எந்த சந்தேகமும் இல்லை என்பது மட்டும் எனக்குத் தெரியும்.

மார்கரெட் பின்பு சாஞ்சிக்கு எழுதினார்:

ஒரு முறை பாபாவை சந்தித்ததும், ஒருவரின் வாழ்நாள் முழுவதும் அந்த நிமிடம் வரை நடந்து கொண்டிருந்தது எனவும், அந்த வாழ்க்கை கடுமையான மூடுபனி, மேகங்கள், புயல்கள் வழியாகப் பாதுகாப்பாகச் செல்ல, அவர் வழிகாட்டிக் கொண்டிருந்தார் என்றும், அதனால் அவரை சந்திக்க முடிந்தது என்பதும் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. அவருடனான அந்த முதல் சந்திப்பு, விரைந்தோடும் நேரத்தைத் தடுத்து நிறுத்தக் காரணமாக அமைந்தது. வாழ்வில் வேறு எதுவும் நடக்கவில்லை, வேறு எதுவும் நடந்திருக்க முடியாது என்பது போலத் தோன்றியது.

குருநாதரின் பார்வையில் என்ன அதிசயங்கள் நிகழக்கூடும்! ஆழ்ந்த மரியாதைக்குரிய இந்த நடன ஆசிரியை, அந்த நிமிடத்திலிருந்து அன்பிற்குரியவரிடம் வெகுவாக ஈர்க்கப்பட்டு, என்றென்றும் அவரது காலடியில் இருந்தார்.

பாபாவுக்கென கிட்டியின் அறை, தயாராக வைக்கப்பட்டு இருந்தது; வந்து சேர்ந்த சில நிமிடங்களில், பாபா அசௌகரியமான ஆங்கில உடையை கழற்றிவிட்டு, அவரது வழக்கமான வெள்ளை ஸத்ராவை அணிந்தார். பாபா மற்றும் மண்டலிக்கு, சாதம், காய்கறி, கனி வகைகள் உணவாக வழங்கப்பட்டது. கிட்டி, மார்கரெட் இருவரையும் அழைத்து, பாபா ஒவ்வொரு திராட்சைப்பழத்தை அளித்து, அவர் வழங்கும் பிரசாதத்தின் முக்கியத்துவத்தை விளக்கிக் கூறினார்; அவர் கனிவாக மார்கரெட்டைப் பார்த்து, **“உங்கள் அன்புதான் என்னை இங்கே** (இங்கிலாந்திற்கு) **அழைத்து வந்தது”** என்றார்.

மெஹர் பாபா, மார்கரெட்டிடம் டெவன்ஷருக்கு வர வேண்டும் என்று கூறி, அவர் ‘**பாபாவின் வட்டத்து சீடர்**’ என்பதையும் தெரிவித்தார். மார்கரெட், முதலில், தனக்கு நடனக்கலை பள்ளிக்கூடம் இருப்பதை எடுத்துக் கூறி, மறுப்புத் தெரிவித்தார், ஆனால் பாபா உடன் வருமாறு வலியுறுத்திக் கூறினார்.

கிட்டி டேவி பாபாவின் ஸத்ராவில் ஒரு சிறிய கிழிசல் இருப்பதை கவனித்து அதை சரி செய்ய விரும்பினார், ஆனால் வெட்கப்பட்டு அமைதியாக இருந்தார். ஸத்ராவில் கிழிந்த இடத்தைச் சுட்டிக்காட்டி, பாபா, கிட்டியிடம், **“எனது அங்கி கிழிந்துள்ளது, எனவே அதை சரி செய்ய வேண்டும். எனக்கு சேவை செய்யும் இந்த வாய்ப்பை அடையப் பெற்றது உங்களின் அதிர்ஷ்டம்.**

**இது சேவையின் ஆரம்பம்; நீங்கள் எனக்காகச் செய்ய வேண்டியது ஏராளம்**" என்று கூறினார்.

தேய்ந்து கிழிந்த ஆடைகளில் இந்தப் பேரரசன்! என்ன ஒரு முரண்பாடு! ஆனால் அவரது அழகு அங்கேதான் உள்ளது. எல்லையில்லா செல்வந்தர்; சொல்லப்படாத பொக்கிஷத்தின் அதிபதி; தேய்ந்து, கிழிந்த ஆடைகளை அணிவதில் மகிழ்ச்சி அடைகிறார். அவருக்கு எதுவுமே தேவையில்லை, முழுமையாக, பரிபூரணமாக இருப்பவர், எப்பொழுதும் தனது பொக்கிஷத்தைப் பிறருக்கு அள்ளி வழங்குபவர்; இங்கேதான் அவருடைய அழகு, மகிமை அனைத்தும் இருக்கிறது.

முதலில், கிட்டி மற்றும் சக தோழிகள் அனைவரையும் வெட்கம் ஆட்கொண்டது. ஆனால் வெட்கப்பட எதுவும் இல்லை. அவர்கள் ரயிலில் குதூகலத்துடன் பயணம் செய்யும் போது, கிட்டி, பாபாவின் ஸத்ராவை எடுத்து, தைத்து, சரிசெய்து கொண்டிருந்தார்; அதே வேளையில் பாபா, கிட்டிக்கு உணவு பரிமாறினார். அது அவருடைய அன்பின் வெளிப்பாடு. ஒருவரின் ஆழ்ந்த ஏக்கங்களைக் குறித்து வெட்கப்பட வேண்டியது இல்லை. அதை, கிட்டி, புரிந்து கொண்டார், ஏனெனில், அவர் ஸத்ராவைத் தைக்கும் போது, பாபாவின் அன்பான பார்வை, கிட்டியின் இதயத்தை எல்லையில்லா மகிழ்ச்சியால் நிரப்பியது.

மெஹர் பாபா, டேவியின் வீட்டிலிருந்த முதல் நாள், அவரை சந்திக்கப் பலர் வந்தனர். பாபா, தனித்தனியாக ஒவ்வொருவரையும் சந்தித்தார். அதற்குப் பிறகு, ஹெர்பெர்ட், மெரடித், கிட்டி, மார்கரெட் மற்றும் சிலரை பாபா சந்தித்து, தனிப்பட்ட முறையில் கலந்துரையாடினார். இந்த சந்தர்ப்பத்தில், பால் ராப்ஸனின் (PAUL ROBESON) இசைத்தட்டுகள் இசைக்கப்பட்டன.

மெரடித் 'புதிதாக வந்தவர்களுக்கு', தியானத்தின் முக்கியத்துவம், ஒருமுகப்படுத்தல், தீவிர ஆர்வம் இவற்றை வலியுறுத்தி, குருநாதர் முன்னிலையில் குறைவாகப் பேசுவது, அடக்கம், தீவிரத்தன்மை, நிதானமான மனப்பான்மையை வெளிப்படுத்துவது இவை அனைத்தும் முக்கியம் என்பதை அறிவுறுத்தினார். இதன் விளைவாக, பாபாவின் மகிழ்ச்சிமிக்க, அன்பான வரவேற்பு இருந்த போதிலும், புதிதாக வந்தவர்கள், மனம் விட்டு அணுக முடியாத முறையில் அமைதி காத்தனர். வெளிப்படையான, திறந்த மனதுடன் இருப்பதை மெஹர் பாபா விரும்பினாலும், அப்போது அவர்களுக்கு பாபா அதை விளக்கவில்லை. இது, பாபா அங்கு வந்த முதல் நாள் இரவு; மறுநாள் காலையில் அவர்கள் 'கூம்ப் மார்ட்டின்' கிராமத்திற்குப் புறப்பட வேண்டியிருந்தது.

உலக நிலைமையைக் குறித்து பாபா, "**போர் தவிர்க்க முடியாதது, ஏழு மாதங்களில் போர் உருவாகும்**" என்று குறிப்பிட்டார்.

ஹெர்பெர்ட் டேவியை நோக்கி, "**நீங்கள் என்னுடைய கண்காணிப்பில், எனது நேரடி உத்தரவின் கீழ், சீனாவில் பணிபுரிய வேண்டும்**" என்று விளக்கினார்.

மெரடித் ஸ்டாரிடம், "**நீங்கள் கூம்ப் மார்ட்டினில் செய்ய வேண்டிய பணி ஏராளம் உள்ளது. ஆன்மீக மையங்கள் ஆங்காங்கே நிறுவப்பட**

**உள்ளன, குறிப்பாக அமெரிக்கா, துருக்கி, ரஷ்யா, பெர்சியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில், டெவன்ஷரில் அமைந்தது போல் ஆன்மீக மையங்கள் உருவாக வேண்டும்**" என்று பாபா விளக்கினார்.

பாபா அன்றிரவு கிட்டியின் அறையில் தூங்கினார், அவருடன் ஆகா அலியும் இருந்தார். சாஞ்சி, ருஸ்தம் இருவரும் ஹெர்பெர்ட்டின் அறையில் தங்கினர்; பாபாவின் அறிவுறுத்தல்களின்படி, அனைவரும் இந்தியாவிலிருந்து தத்தமது பெட்டி படுக்கைகளைக் கொண்டு வந்து (பாபாவையும் சேர்த்து) தரையில் தூங்கினர்.

கிட்டி டேவியின் பெரிய சகோதரி மே க்ளூஸின் (MAY CLUSE) மகள் 'ஸில்லா' (ZILLA), பதினைந்து வயது இளம் பெண், மெஹர் பாபாவை சந்திக்க விரும்புவதாக, தாய் மாமா ஹெர்பெர்ட்டிடம் கூறினார். ஹெர்பெர்ட், முதலில் 'இளம் பெண் குருநாதரின் தொடர்பில் வருவது முறையாகுமா?' என்று நினைத்து, தயக்கத்துடன், மறுநாள் காலை உணவு வேளையில் பாபாவிடம் கேட்டார்; பாபா அவரைப் பார்க்க மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டார். இதற்கிடையில் அதிகாலை வேளையில், சிறுமி தூங்கும்போது பாபா, ஸில்லாவின் அறைக்குள் கால் கட்டைவிரல் நுனியில் ஓசையின்றி மெதுவாக நடந்து சென்று, அவரைக் குனிந்து பார்க்க, ஸில்லா கண்களைத் திறந்து, பாபாவை முறைத்துப் பார்த்தார். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்முறுவல் செய்தனர்; எதுவும் பேசவில்லை.

ஸில்லாவின் அறைக்கு வெளியே வந்து, பாபா, கிட்டியிடம், ஸில்லாவைப் பற்றிக் குறிப்பிட்டார், "**அவளுடைய கடந்த காலத்தையும், எதிர்காலத்தையும் நான் காண்கிறேன். அவள் எனக்காகச் செய்ய வேண்டிய பணி மிகப் பெரிது. செவ்வாய்கிழமையன்று உங்களுடன் அவளையும் டெவன்ஷருக்கு அழைத்து வாருங்கள்.**"

மெஹர் பாபாவைப் பார்த்த நேரத்திலிருந்து கிட்டி, இனம் புரியாத ஆனந்தத்தில் பெரிதும் மனம் நெகிழ்ந்து போனார்; இரவில் தூங்க முடியாமல் தவித்தார். கிட்டி, மார்கரெட்டுடன் ஒரு அறையைப் பகிர்ந்து கொண்டு, தரையில் தனியாகத் தூங்கினார். கிட்டி பாதித் தூக்கத்தில் 'அவர் மிகவும் அற்புதமானவர், மிகவும் அழகானவர்!' என்று முணுமுணுத்தார்; ஆனால் இந்த சம்பவம், தூக்கத்திலிருந்து விழித்த பின்னர் அவருக்கு முற்றிலும் நினைவில்லாமல் இருந்தது.

1931, செப்டம்பர் 13ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை, காலை ஏழு மணிக்கு, பாபாவும் குழுவும் லண்டனிலிருந்து 232 மைல் தொலைவில் அமைந்த கூம்ப் மார்ட்டினுக்குக் காரில் புறப்பட்டனர். மெஹர் பாபா வாசலைக் கடந்து வெளியே நடந்து கொண்டிருந்த வேளையில், கிட்டியிடம், '**அவர் வாழ்வில் முக்கியமாக அடைய விரும்புவது ஏதேனும் உள்ளதா?**' என்று வினவ, கிட்டி தன்னிச்சையாக, தயங்காமல், விரைவாக பதிலளித்தார், "நேசிக்கும் திறனை அதிகரிப்பதோடு, சேவையில் ஈடுபடும் வாய்ப்புகள் மட்டுமே" மேலும் ஒரு

கணம் சிந்தித்து, பின்னர், "ஆம், தானாகத் தோன்றும் நற்குணம்" என்று கூறினார்.

அதற்கு பாபா, "**நீங்கள் இவை அனைத்தையும் மிகக் குறுகிய காலத்தில் அடையப் பெறுவீர்கள்**" என்று பதிலளித்தார்.

பயண நேரத்தில் ஆச்சரியப்படும் விதத்தில், சூரியன் பிரகாசித்துக் கொண்டிருந்தது; அதைப் பார்த்த ஓட்டுநர் "இன்றைய நாள் இந்த ஆண்டின் மிகச் சிறந்த நாள்!" என்று குறிப்பிட்டார். இங்கிலாந்தில் செப்டம்பர் நாட்களில் சூரியன் பிரகாசிப்பதைக் காண்பது அரிய, வரவேற்கத்தக்க சந்தர்ப்பமாகும். 'ஆனால் இறைவனே சூரியனாக அவர்களுடன் இருந்தபோது, வெளிச்சம் எப்படி இல்லாமல் இருக்க முடியும்?' என்று காலம் குறிப்பிட்டது. மேலும் 'இங்கிலாந்து நாட்டில், இலையுதிர்காலத்தில் கூட பூமியில் சூரியன் அதன் ஒளியைப் பொழிவதன் மூலம், பயபக்தியுடன் இறைவனின் அவதாரமான மெஹர் பாபாவை வணங்கியது' என்று காலம் அறிவித்தது.

அவர்கள் கிரேட் வெஸ்ட் சாலை (GREAT WEST ROAD), ஸ்லாவ் (SLOUGH), ரெடிங் (READING), நியூபரி (NEWBURY), மால்பரோ (MARLBOROUGH), சிப்பன்ஹம் (CHIPPENHAM), பாத் (BATH), வெல்ஸ் (WELLS), க்ளாஸ்டன்பரி (GLASTONBURY), ப்ரிட்ஜ்வாட்டர் (BRIDGEWATER), டான்டன் (TAUNTON), ஸவுத் மோல்டன் (SOUTH MOLTON) வழியாகச் சென்றனர். பாபா, காரின் பின் இருக்கையில் அமர்ந்திருந்தார்.

வழியில், பாபா தனது தலை மற்றும் முகத்தை, திடீரென ஒரு போர்வையால் மறைத்துக் கொண்டார்; கை விரல்கள் தனித்தன்மை மிக்க வேகத்தில் அதிர்ந்தன. அதற்குப் பிறகு பாபா, அவர் முக்கியமான ஆன்மீகப் பணியில் ஈடுபட்டுக்கொண்டு இருந்ததாகத் தெரிவித்தார்.

பத்து மணி நேர பயணம், மாலை ஐந்து மணிக்கு பாபா, கூம்ப் மார்ட்டின் வந்து சேர்ந்தார். அங்கு பல மேற்கத்திய பக்தர்கள் மெஹர் பாபாவின் வருகைக்காகக் காத்திருந்தனர். அவர்களில் எஸ்தர் ராஸ் (ESTHER ROSS) அவரது சகோதரன் கென்னத் (KENNETH), மைலோ ஷாட்டக் (MILO SHATTUCK), ரிச்சர்ட் மேயர், (RICHARD MAYER) மார்கரெட் ஸ்டார், டாம் ஷார்ப்லி (TOM SHARPLEY), திருமதி. ஹெல்மர் (MRS. HELMER), சார்லஸ் பர்டம், இனிட் கோர்ஃப், டோரதி கஸின்ஸ் (DOROTHY COUSINS) ஆகியோர் அடங்குவர், இவர்கள் அனைவரும் பாபாவின் இங்கிலாந்து பயணத்திற்கு வேண்டிய அனைத்தையும் செய்தனர்.

மெஹர் பாபா, நெடுநேர பயணத்தால் களைப்பாக இருந்தார், ஒவ்வொருவரையும் பார்த்துப் புன்முறுவல் செய்தார்; ஆனால் நின்று பேசவில்லை, மார்கரெட் ஸ்டாரின் கண்களில் நீர் பொங்கி வழிந்ததை அவரால் தடுக்க முடியவில்லை. அந்தக் கண்ணீர், ஆழ் இதயத்தில் நெருப்பை எரியச் செய்து, வலி - ஏக்கத்தால் ஏற்பட்ட வலி, இன்பம் இரண்டையும் நல்கியது.

பாபாவை வரவேற்கக் காத்திருந்த பலரில், போஸ்டன் நகரிலிருந்து வந்த ஒரு வயதான அமெரிக்க பெரியவர், 'தாமஸ் அகஸ்டஸ் வாட்ஸன்' (வயது 77), அவரது மனைவி 'எலிஸபெத்'துடன் வந்திருந்தார். இருவரும் கடந்த ஆகஸ்ட் மாதம், ஒரு வாரம் டெவன்ஷரில் தங்கி இருந்து, பாபாவை சந்திக்க மறுபடியும்

வந்தனர். தொலைபேசியைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் வாட்ஸன், 'அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல்'லுடன் பணிபுரிந்தார், ஓய்வுபெற்ற நாளிலிருந்து ஆன்மீக ஞானத்தைத் தேடி அலைந்தார்.

தியான மையத்தில் நுழைந்து, மேல் மாடியில் தனது அறைக்கு அடி எடுத்து வைக்கும் முன்பு, பாபா ஒரு கணம் நின்று வாட்ஸனின் தலையில் அவரது கையை வைத்ததும், அது வாட்ஸனிடம், உள்ளளவில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது; அந்த வயதான பெரியவர், ஒரு குழந்தையைப் போல் அழுதார்; அவர் இதயம் அன்பால் நிரம்பி வழிந்தது.

மெஹர் பாபாவை முதன் முதலில் சந்தித்துப் பேசியதைக் குறித்து வாட்ஸன் தனது நாட்குறிப்பில் இவ்வாறு பதிவு செய்திருந்தார்:

நான் அறைக்குள் நுழைந்த போது பாபா அங்கு அமர்ந்திருந்தார். அவர் என்னைப் பார்த்துப் புன்னகைத்தார்; அவர் எனது தோளில் அன்பாகத் தொட்டதும், மின்னல் போல் என்னைத் தாக்கிய ஒளி - நொடிப்பொழுதில் அன்பு என்றால் என்ன... அன்பு எதுவாக இருக்க முடியும்... கடவுளின் அன்பு என்ன... என்ற அறிவை எனக்குத் தந்தது. இதுவரை நான் உணர்ந்து அனுபவித்த அன்பு அனைத்தும் ஏழ்மையானது, பலவீனமான, அற்பமான ஒன்று என்று தோன்றியது. நான் ஒரு பச்சிளம் குழந்தையைப் போல் உணர்ந்தேன். இந்த உலகில் நான் கற்றுக்கொள்ள இன்னும் என்ன இருக்கிறது?

மெஹர் பாபாவுடன் இருந்த வேளையில் இதுபோன்ற சம்பவங்களை கவனித்த சாஞ்சி, வாட்ஸனை அருகிலிருந்த நூலகத்திற்கு அழைத்துச் சென்றார். வாட்ஸன், ஏறக்குறைய பதினைந்து நிமிடங்கள் தொடர்ந்து கண்கலங்கி அழுது, பின்னர் அமைதியானார். அவரது கண்களில் கண்ணீர் நிரம்பி வழிய, அமைதியான குரலில், "நீங்கள் பாபாவுடன் எவ்வளவு காலமாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"**ஏழு வருடங்கள்**" சாஞ்சி பதிலளித்தார்.

இதைக் கேட்ட வாட்ஸன், சாஞ்சியின் தோளில், ஒரு தந்தை தனது குழந்தையை அணைப்பது போலக் கையை வைத்து, "எனது மகனே, இவ்வளவு பெரிய மாட்சிமை மிக்க ஒருவரின் அருகில் வாழும் நீங்கள், எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்பதை உணர்ந்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"ஆமாம் ஐயா, நான் பெரிய அதிர்ஷ்டசாலி என்பதை அறிவேன்" என்று சாஞ்சி பதிலளித்தார். "நான் அவருக்கு அருகில் இருப்பதே அவருடைய அருளால்தான்."

சில நிமிட மௌனத்திற்குப் பிறகு, வாட்ஸன் இவ்வாறு வெளிப்படுத்தினார், "எனது 77 வருட வாழ்க்கையில், இன்று நான் தெய்வீக அன்பு என்ன என்பதை அனுபவபூர்வமாக, முதல் முறையாகக் கண்டுகொண்டேன். மெஹர் பாபா என்னைத் தொட்ட அந்த நொடிப்பொழுதில் இதை நான் உணர்ந்தேன்."

"அத்தகைய பாக்கியம் ஒரு சிலருக்கு மட்டுமே வழங்கப்படுகிறது" என்று சாஞ்சி கூறினார்.

காலம் இதை இப்படி விளக்கியது: "வாட்ஸன் கேட்காமலே, அவரது

அடித்தளத்தை பாபா அதிர வைத்தார். வாட்ஸனின் இதயம் மலர்ந்து, ஒரு புதிய ஒளியை - யுகங்களின் இருளை அகற்றும் ஒளியைக் காணமுடிந்தது.

“குருநாதரின் ஆன்மீகப் பணி எவ்வாறு வெளிப்படுகிறது என்பதற்கு இது ஓர் அருமையான எடுத்துக்காட்டு.” மெஹர் பாபா, இதுவரை வெளிப்படுத்தாத, இங்கிலாந்திலிருந்து அமெரிக்கா செல்லும் திட்டத்தில், தாமஸ் வாட்ஸன் ஒரு சிறப்பு ஊடகமாகச் செயல்பட ஆயத்தமானார்.

மெஹர் பாபா தங்கும் அறை, மேல் மாடியில் இருந்தது; தெற்கு திசை, கூம்ப் மார்டினின் வளமையான வனப்பகுதியும், பள்ளத்தாக்கும் சூழ்ந்து அமைந்திருந்தது.

மெரடித் பார்வையாளர்களை, குறுகிய நேர்முக சந்திப்பிற்காக, பாபாவின் அறைக்கு அழைத்துச் செல்வதும், அதே வேளையில், ஒரு நாளைக்கு நான்கு மணி நேர தியானம் கடைப்பிடிக்க வலியுறுத்துவதும் வழக்கம். ‘தியானத்தின் இலக்கு குருநாதர்’ எனும் போது, அவர், உடன் இருக்கும் வேளையில் தியானத்தில் ஈடுபடுவது முறையாகாது என்பதை மெரடித் புரிந்துகொள்ளத் தவறிவிட்டார். இதுபோன்ற விரும்பத்தகாத விதிமுறைகள் இருந்த நேரத்தில், பாபா அவரது அறையிலிருந்து நழுவி, ருஸ்தம், சாஞ்சி தங்கியிருந்த ‘பால் பண்ணை’ அறைக்குச் சென்றதை, மெரடித் தடுக்க முயற்சித்தார்.

அடுத்த நாள் அதிகாலையில் பாபா, பால் பண்ணைக்குச் சென்று, அங்கிருந்த மரக்கட்டிலில் அமர்ந்து மண்டலியுடன் உரையாடிக் கொண்டிருந்தார். ஹெர்பெர்ட், சாஞ்சி, ருஸ்தம் மூவரும் ஒரே அறையைப் பகிர்ந்து கொண்டனர்; ஆகா அலி பாபாவுடன் இருந்தார்.

அன்று காலையில், மழை பொழிந்தது, மெஹர் பாபா ஒவ்வொருவரையும் தனித்தனியாக சந்தித்தார். ஒரு பல்துறை வல்லுனர், ‘சார்லஸ் பெஞ்சமின் பர்டம்’ (CHARLES BENJAMIN PURDOM), வயது 48, பெயர் பெற்ற எழுத்தாளர், நாடக விமர்சகர், கணக்காளர், ‘எவ்ரிமேன்’ பத்திரிகையின் ஆசிரியர், அந்த ஆண்டின் ஆரம்பத்தில், விடுமுறை நாட்களில் டெவன்ஷருக்கு விஜயம் செய்திருந்தார்; தொடர்ந்து மெரடித்துடன் தொடர்பில் இருந்தார். பாபாவை சந்தித்ததும், சார்லஸ் பர்டம், “ஏதோ கல் போன்ற ஒன்று என் இதயத்தில் நுழைந்து, கரைந்து போகாமல் அங்கேயே சிக்கியிருப்பதாக நான் உணர்கிறேன். அது என்ன என்று மிகவும் குழம்பிப் போய் இருக்கிறேன்” என்று பாபாவிடம் முறையிட்டார்.

பாபா எழுத்துப்பலகை வழியாக, “**இது இங்கு நிலவும் ஆன்மீக சூழலின் மின் அதிர்வுகள் மற்றும் கதிர்களின் விளைவு**” என்று குறிப்பிட்டு, அவரைத் தனது அருகில் அமருமாறு சைகையால் தெரிவித்தார். சில நிமிடங்களில் பாபா, அவர் எப்படி உணர்கிறார் என்று கேட்டார்.

“பரவாயில்லை; நன்றாக, அமைதியாக உணர்கிறேன்” என்றார் சார்லஸ் பர்டம்.

சார்லஸ் பர்டம் பின்னர் ‘எவ்ரிமேன்’ பத்திரிகையில், மெஹர் பாபாவுடனான தனது அனுபவங்களைக் குறித்து எழுதினார்:

கிழக்கு தேசத்திலிருந்து வந்த ஒரு பரிபூரண குருநாதருடன் உருவான தனிப்பட்ட தொடர்பை ‘ஒரு வாய்ப்பு’ (ஆனால், சந்தேகமின்றி அதற்கு வேறு பொருத்தமான பெயர் தேவை) என்றே கூறுவேன். பெரியதாகவும், பிரகாசமாகவும் உள்ள, அவரது கண்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, முகத்தை ஒளிரச் செய்கின்றன.

அவர் மிகுந்த நகைச்சுவை உணர்வைக் கொண்டவர்; முதல்தர கிரிக்கெட் வீரர் என்று கூறப்படுகிறது. அவர் ஒரு குழந்தையின் எளிமையும் யுகங்களின் ஞானமும் இணைந்த தன்மையை அடையப் பெற்றவர். அவர் பேசுவதில்லை, ஆனால் எழுத்துப்பலகை மூலம் தொடர்பு கொள்கிறார் என்றாலும், நான் அவருடன் நீண்ட நேரம் உரையாடினேன். ஆனால் அவருடன் பேசுவது என்பது முக்கியமான விஷயம் அல்ல; அவரோடு ஒரே இடத்தில் இருப்பது ஒன்றே போதுமானது.

14ஆம் நாள், ஏறக்குறைய அரை மணி நேரம், பாபா, தாமஸ் வாட்ஸனுக்கு மனதின் வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களைப் பற்றி விளக்கி, மனம் எவ்வாறு பிரபஞ்சத்தை அனுபவிக்கிறது என்பதையும் விவரித்தார். “**நமது பார்வை, உள்நோக்கித் திரும்பும் வேளையில், நாம் கடவுளைத் தேடத் தொடங்குகிறோம். கடவுளை அடைய, இரண்டு விஷயங்கள் தேவை: ஒன்று, தூய்மையான நடத்தை, மற்றொன்று தன்னலமற்ற சேவை**” என்று மெஹர் பாபா சுட்டிக்காட்டினார்.

வாட்ஸன் உடனே பாபாவிடம், “நான் இப்போது என்ன செய்ய முடியும்? வயதாகிவிட்டது, அதிக சேவையைச் செய்ய பலவீனமாக இருக்கிறேன்; ஆனால் நீங்கள் பரிந்துரைக்கும் வேறு வழியில் நான் உதவ முடியும்” என்றார்.

“**கவலைப்படாதீர்கள், நான் உங்களுக்கு, பின்னர் அறிவுறுத்துவேன்**” என்று பாபா சைகையால் தெரிவித்தார்.

மதிய உணவுக்குப் பிறகு, பாபா கடலோரப் பாறைகளில் நடந்து சென்றார். பலர் உடன் சென்றனர். மாலையில் மெரடித் தனது கவிதைகளை உரத்த குரலில் (ஒவ்வொரு கவிதைக்கும் இடையே சில நிமிட மௌனம் கடைப்பிடித்து) வாசித்தார்.

அன்றைய தினம் மெஹர் பாபாவை சந்தித்த மற்றுமோர் அதிர்ஷ்டசாலி பெண்மணி, ‘கேத்ரின் ஆனா டோல்ஹர்ஸ்ட்’ (KATHERINE ANNA TOLHURST), வயது 26, ‘கிம்’ (KIM) என்று அழைக்கப்பட்ட அவர், ஒரு புத்திசாலி, சிவப்பு நிற தலைமுடியுடன் கூடிய இளம் பெண்; அவருக்கு புத்த மதத்தில் ஆர்வம் அதிகம். மேலும் லண்டனில் பாபாவை சந்தித்த, தற்காப்பு கலை ஆசிரியரான கோய்ஸுமியின் கீழ் ஜூடோ பயின்று வந்தார். கோய்ஸுமி, கிம்மிடம் - மெஹர் பாபா, மெரடித் ஸ்டார் மற்றும் டெவன்ஷரில் அமைந்த ஆசிரமத்தைப் பற்றிக் கூறினார்: “இதை நீங்கள் விரும்புவீர்கள்” என்று கோய்ஸுமி அவருக்கு உறுதியளித்தார். ‘வாழ்வின் இரகசியங்களையும், அவற்றின் உண்மையான

பதில்களையும் தேடிக் கண்டுகொள்வதை எப்போதும் நம்புபவர்' என்று கிம், மெரடித்திற்குக் கடிதம் எழுதினார்.

கிம் ஒரு முறை, அதைத் தொடர்ந்து நடந்த நிகழ்வுகளின் வரிசையை நினைவு கூர்ந்தார்:

நான் ஒரு குருநாதரை சந்திக்கும் தயார் நிலையில் இருப்பதாகக் கூறி, டெவன்ஷர் ஆஷ்ரம மையத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்து, மெரடித் எழுதியிருந்தார். எதுவாயினும் என்ன நடக்க உள்ளது என்பதை அறியாமலேயே நான் டெவன்ஷருக்குப் புறப்பட்டேன்.

அடுத்த நாள் மாலையில் ஸ்ரீ மெஹர் பாபா என்னை அழைப்பதாக மெரடித் தெரிவித்தார். அப்போது நான் மாடியில் அமைந்த அவரது சிறிய அறைக்குள் சென்றேன், (அது துறவிகளின் வீடுபோலத் தோற்றமளித்தது. உண்மையில் பல அடி கனமான சுவர்களைக் கொண்ட மிகப் பழைய பண்ணை வீடு). பாபா வெள்ளை நிற உடையில் ஒரு படுக்கையில் அமர்ந்திருந்தார்.

என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை - ஒருபோதும் தெரியப் போவதுமில்லை. எனக்குத் தெரிந்ததெல்லாம், நான் பாபாவின் காலடியில் கண்ணீர் பெருக அழுதுகொண்டு இருப்பதைக் கண்டேன், இதற்கு முன்பு நான் இப்படி அழுததில்லை என்று நினைக்கிறேன்.

எனது கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. நான் மகிழ்ச்சியடையவில்லை என்றோ, மகிழ்ச்சியாக இருந்தேன் என்றோ நினைக்கவே இல்லை. கடந்த காலத்தில் எனக்கு நடந்த அனைத்தையும், நான் ஏக்கத்தில் வருந்திய எல்லாவற்றையும் கண்ணீர் கழுவியிருக்கலாம். அனைத்தையும் இழந்து, ஒரு புதிய விடிவு உதயமானது போல, மிகவும் லேசான தூய்மையான, மனநிலையை உணர்ந்தேன்.

என்னுடைய அழுகை எவ்வளவு காலம் நீடித்தது என்று எனக்குத் தெரியாது; என்னால் சொல்லவும் முடியாது. இது காலத்தையும் கடந்தது. எழுத்துப்பலகை மூலம் பாபா, '**அவர் என் அருகில் அமர வேண்டும்**' என்று கூறியதை மட்டும் சாஞ்சியின் குரலில் கேட்டேன். யாரோ என்னை அழைத்துச் சென்றார்கள். நான் படுக்கையில் ஆழ்ந்த தூக்கத்தில் விழுந்தேன். என்ன நடந்தது என்பதை என்னால் விளக்க முடியவில்லை. ஏதோ பல்லாண்டு காலத்திற்கு முன்பு நடந்தது போன்ற ஓர் உணர்வு; மிகவும் ஆழமான மனப்படிவங்களை மனதில் வேரூன்றச் செய்தது.

நான் எப்பொழுதும் ஜீஸஸ் கிறிஸ்துவை நேசித்தேன்; ஜீஸஸை சித்தரிக்கும் ஓவியங்களில், ஒரு குழந்தையாக நான் அறிந்த அவரைப் போன்றவர் மெஹர் பாபா என்று எனக்குத் தோன்றியது. இந்த மிகப்பெரிய அன்பை, இந்த மேன்மையான இரக்கத்தன்மையை நான் உணர்ந்தேன். என்னைக் குறைகூறி, கடுமையாகக் கண்டிக்கும் அளவுக்கு ஒரு பெரிய களங்கம் என்னில் இருந்தபோதிலும், பாபாவின் பார்வையில் அவர் புரிந்துகொள்ளும் தன்மையும், இரக்க குணமும் தவிர வேறு எதுவும் இல்லை; கண்டனம் என்ற பேச்சுக்கு இடமே இல்லை. அந்த நிலைப்பாடுதான் எனக்கு அவரிடம் வெற்றியைத் தந்தது என்று நினைக்கிறேன். எவ்வளவு தான் சிற்றின்ப உணர்வுகளோடு நான்

இருந்திருந்தாலும், மேலும், கீழ்ப்படியும் தன்மையின்றி, நன்றி உணர்வற்று அல்லது கண்டுகொள்ளாத போக்கில் நான் இருந்திருந்தாலும் - 'பாபா என்னிடம் எந்தக் குறைகளைக் கண்டிருந்தாலும் - ஒருவர் இறுதியில் என்னவாக வேண்டும் என்பதை மட்டுமே அவர் கருத்தில் கொண்டார்' என்பதை வெளிப்படுத்தியதாக எனக்குத் தோன்றியது. உண்மையில் நான் சொல்லக்கூடியது அவ்வளவுதான்.

அடுத்த நாள் காலையில் கிம் சாதாரண மனநிலையில் விழித்தெழுந்தார், ஆனால் அதற்குப் பிறகு, தொடர்ந்து பாபாவின் அருகில் இருப்பதையே விரும்பினார்.

1931 செப்டம்பர் 15 அன்று, மெஹர் பாபா, சார்லஸ் பர்டமிடம் அவர் எப்படி உணர்கிறார் என்று கேட்டார். அவர் தலையிலிருந்த அனைத்தும் இதயத்திற்குள் நுழைந்து விட்டதாகவும், அவர் மார்பில் ஏதோ எரிவதுபோல் உணர்வதாகவும் பதிலளித்தார்.

நேர்முக சந்திப்பிற்குப் பிறகு, பாபா அனைவருடனும் பள்ளத்தாக்குக்கு நடந்து சென்றார், அங்கு மெரடித், மார்கரெட் இருவரும் பாபாவைப் பற்றிய பாடல்களைப் பாடினர். அவ்வேளையில் மெஹர் பாபா ஓர் அற்புதமான மனநிலையில் இருந்தார்; உலகத்திற்கான தனது ஆன்மீகப் பணியைப் பற்றி முதன்முறையாக குறிப்பிட்டார்; மேலும் அவர் அவதார புருஷர் என்பதை வெளிப்படுத்தினார்.

மானிடனால் அறியப்பட்ட உலக வரலாற்றில், அவதார புருஷர், பூமியின் அரைக்கோளத்தின் மேற்கத்திய மண்ணைப் புனிதப்படுத்துவது இதுவே முதல் முறையாகும். தனது தோட்டத்துப் பறவைகளை விடுவிக்கும் நோக்கத்தில், அவர்களை நோக்கி பயணிப்பதன் மூலம், அனைவரையும் தனது அன்பின் கூண்டில் அடைத்து வைத்திருந்தார். முதன்முறையாக, மெஹர் பாபா இங்கிலாந்தில் வாழும், தன்னை நேசிக்கும் மக்களுக்கு அவர் அவதார புருஷர், உலகம் நீண்ட காலமாகக் காத்திருந்த கிறிஸ்து என்று வெளிப்படையாகத் தெரிவித்தார். அதேசமயம் இந்தியாவில், அவருடைய பக்தர்கள் அனைவரும் அவரை ஒரு சத்குரு என்றே குறிப்பிடுகிறார்கள். கடவுள், உலகின் கிழக்கு பாகத்தில் பிறவி எடுத்தாலும், அவர் முதன்முதலில் தன்னை, மேற்கத்திய நாட்டில் அவதார புருஷர் என்று வெளிப்படுத்தினார்.

அந்த நாள், வாட்ஸன், பாபாவிடம், "உங்களைப் போன்ற ஒரு மேன்மைமிகு ஆன்மீக குருநாதருக்கான நாடு அமெரிக்கா. நீங்கள் அங்குச் செல்ல வேண்டும். உங்கள் அனுமதி இருந்தால், உங்களுக்கும், உங்கள் குழுவினருக்கும் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் நான் செய்வேன். அமெரிக்க மக்களின் சார்பாக, நீங்கள் அமெரிக்காவிற்கு வருமாறு எனது மனமார்ந்த அழைப்பை உங்களுக்கு விடுக்கிறேன்" என்றார்.

தாமஸ் வாட்ஸனின் அன்பான வரவேற்பில் மெஹர் பாபா தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார், ஆனால் அவரது அழைப்பை மறுத்துவிட்டார். முதலில் ஐரோப்பாவில் ஐந்து அல்லது ஆறு மையங்களை நிறுவி, அதற்குப்

பின்னர், அமெரிக்காவில் குடியேறும் எண்ணத்தை வெளிப்படுத்தினார். வாட்ஸன் பாபாவை மீண்டும் வற்புறுத்தவே, இறுதியாக அவரது நிலையான வேண்டுகோளின் பேரில், பாபா அமெரிக்கா செல்ல ஒப்புக்கொண்டார். உண்மையில், பாபா அமெரிக்காவிற்குச் செல்ல விரும்பினார், ஆனால் அவரது வழிகளும், முறைகளும் சில நேரங்களில் வெளிப்படையாகத் தெரிவதில்லை. பாபா அந்த அழைப்பை ஏற்றுக்கொண்ட பின்பு, வாட்ஸனும் அவரது மனைவியும் மெஹர் பாபாவின் வருகைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய அமெரிக்கா புறப்பட்டுச் சென்றனர்.

அன்றைய தினம், வாட்ஸன் அவரது டயரியில் குறிப்பிட்டிருந்தார்:

செப்டம்பர் 18ஆம் தேதி இங்கிலாந்திலிருந்து செல்ல முடிவு செய்துள்ளோம். நான் மெஹர் பாபாவை நேருக்கு நேர் சந்தித்த முதல் பார்வையில், அவர் உலகளாவிய அன்பை உடையவர், கடவுள் என்பதை அறிந்து கொண்டேன். இதை நான் அவருடன் ஒரு வருடம் இருந்திருந்தாலும் அறிந்துகொள்ள முடிந்திருக்குமா என்று எண்ணிப் பார்க்கிறேன்.

அமெரிக்கா வரும்போது பாபா அவரது தலைமுடியைத் திருத்தம் செய்து, வழக்கமான உடை அணிய வேண்டும்; இல்லையேல் பாபாவின் ஆன்மீகப் பணியைப் பொறுத்தவரையில், அது சம்பந்தப்பட்ட தலைவர்களின் செல்வாக்கைப் பெற முடியாது. அதற்கு பதிலாக, அவரைச் சுற்றி அரைகுறை கவிஞர்கள், ஆவேசப் பேர்வழிகள், உணர்ச்சிவயமிக்கவர்கள் மட்டுமே மிகையாக இருப்பார்கள்.

அமெரிக்காவில் மெஹர் பாபாவின் ஆன்மீகப் பணிக்காக அவருடைய தொடர்பில் வந்த மற்றுமோர் இளைஞன் 'ஆல்பர்ட் மைலோ ஷாட்டக்'. 25 வயதான மைலோ, மஸாசூஸட்ஸின் ஒர்ஸ்டரைச் சேர்ந்த ஓர் இளம் கவிஞர். 1928ஆம் ஆண்டு ஹார்வெர்டில் பட்டம் பெற்று, பிரபல பயண விரிவுரையாளரான 'ரிச்செர்ட் ஹாலிபர்ட்டன்' என்பவரின் செயலாளராக அவருடன் அமெரிக்க தேசத்தில் சுற்றுப்பயணம் செய்தார்.

ஹார்வர்ட் பட்டதாரி பள்ளியில் ஒரு செமஸ்டர் முடித்ததும், நாடக பேராசிரியர் 'தோர்ன்டன் வைல்டர்', மைலோவிற்கு 1000 டாலரை வழங்கினார். அதற்குப் பிறகு நடந்ததை மைலோ அவரது டயரியில் குறிப்பிட்டிருந்தார்: 'நீங்கள் விரும்பும் இடத்திற்குப் போகலாம்... வேண்டிய நகரங்களுக்குச் செல்லலாம்... ஆனால், ஒரு மனிதனாகத் திரும்பி வரவேண்டும்...' கண்ணுக்கு எட்டாத ஊரெல்லாம் போய் வந்தேன். இறுதியாக, ஒரு பொதுவான சலசலப்பில், 1930 ஏப்ரல் முட்டாள் தினத்தன்று, டெவன்ஷர் வந்து மெரடித் ஸ்டாரை சந்தித்தேன். அங்குதான் எனது நிஜமான வாழ்க்கை, வடிவம் பெறத் தொடங்கியது; பழைய, எதிர்கால அனுபவங்கள் அனைத்தும் உண்மையின் விளக்கமாக மாறியது."

மைலோ ஒரு சிறிய தனியார் சிறுவர் பள்ளியில் ஒன்றரை வருடம் ஆசிரியராகப் பணிபுரிந்தார். ஆன்மீகத்தில் ஆர்வமுள்ள சிலரைத் தொடர்புகொண்டு, மெஹர் பாபாவைப் பற்றியும், அவருடைய இங்கிலாந்து

வருகையைப் பற்றியும் எடுத்துச் சொல்ல, 1931ஆம் ஆண்டு கோடையில், மெரடித், மைலோவை அமெரிக்காவிற்கு அனுப்பி வைத்தார்.

மெஹர் பாபாவைப் பற்றி முதலில் வாட்ஸனிடம் கூறியது மைலோ தான். அதைத் தொடர்ந்து, ஹேங்காக் பண்ணையில் வாழ்ந்து வந்த 'மால்கம் பி. ஸ்க்லோஸ்' (MALCOLM SCHLOSS), 'ஜீன் அட்ரியல்' (JEAN ADRIEL) இருவரையும் மைலோ சந்தித்து, மெஹர் பாபாவைப் பற்றியும், அவர் மேற்கத்திய நாட்டுக்கு வரவிருப்பதையும் தெரிவித்தார்.

மால்கம், ஜீன் இருவரும் ஓர் ஆன்மீக மையத்தை உருவாக்கத் திட்டமிட்டனர் - அங்கே மௌனம் மற்றும் தியான சூழலில் மக்கள் தங்கள் உள்ளளவிலான ஆன்மீக வளங்களைக் கண்டுகொள்ளும் நோக்கில், அவ்வப்போது வந்து கலந்துகொள்ள முடியும். மேலும் அவர்கள், மெஹர் பாபாவை சந்திக்கவும், மெரடித்தின் தியான மையத்திற்கு விஜயம் செய்யவும், இங்கிலாந்திற்குச் செல்லவும் மிக்க ஆவலாக இருந்தனர்; ஆனால் நிதி சூழ்நிலைகள் அவர்களைத் தடுத்தன. இருப்பினும், அவர்கள், மெரடித்திற்கு எழுதிய கடிதங்களை பாபாவிடம் காட்டியதும், பாபா சிரித்துக்கொண்டே, **"அவர்கள் என்னுடையவர்கள், அவர்கள் என்னை சந்திப்பது மிகவும் அவசியம்"** என்று குறிப்பிட்டார்.

மால்கம், ஜீன் இருவரும் நண்பர்களின் உதவியுடன் (குறிப்பாக தாமஸ் வாட்ஸனிடமிருந்து வந்த அறிமுகமில்லாத காசோலை) 1931, அக்டோபர் மாதம் இங்கிலாந்து செல்லப் போதுமான பணத்தைச் சேர்த்து வைத்தனர். ஆனால், அவர்கள் இங்கிலாந்திற்கு வரவேண்டாம் என்று மெரடித் ஸ்டாரிடமிருந்து தொலைத்தந்தி வந்தது; '**மெஹர் பாபா அமெரிக்காவிற்கு வர இருப்பதாகவும், அவர்கள் இருவரும் பாபா மற்றும் மண்டலியின் விருந்தோம்புநர்களராக இருந்து, நிகழ்வுகளைக் கண்காணிக்க வேண்டும் என்பது பாபாவின் விருப்பம்**' எனவும் குறிப்பிட்டிருந்தார்.

எனவே, பாபாவை சந்தித்து வாட்ஸன் அமெரிக்கா திரும்பிய போது, ஜீன், மால்கம் இருவரும் பாபாவின் வருகைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் மும்முரமாக இருந்தனர். நியூயார்க் நகருக்கு வெளியே நாற்பது மைல் தொலைவில், 'க்ராட்டன்' (GROTON) நதிக் கரையில் பாபாவும் அவரது குழுவும் தங்குவதற்காக ஓர் இடத்தைத் தேர்வு செய்தனர். இது 'ஹார்மன் ரிட்ரீட்' (HARMON RETREAT) என்று அழைக்கப்பட்டது, மேலும் 350க்கும் மேற்பட்ட ஆன்மீகத்தில் ஆர்வமுள்ள ஆத்மாக்களுக்கு, மெஹர் பாபாவின் வருகையைப் பற்றித் தெரிவிக்கப்பட்டது. ஜீன், மால்கம் இருவரும் இந்த நடவடிக்கைகளில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டனர். மேலும் பாபாவின் வருகை குறித்து, மெரடித்துடன் வழக்கமான கடிதப் போக்குவரத்துத் தொடர்ந்தது.

இதற்கிடையில் கிட்டி, ஸில்லா இருவரும் அன்றிரவு ஒன்பது மணிக்கு டெவன்ஷருக்கு வந்து பாபாவை சில நிமிடங்கள் சந்தித்தனர்.

அதைத் தொடர்ந்து, அடுத்த நாள் காலையில், 1931 அக்டோபர் 16ஆம் நாள், பாபா, ஹெர்பெர்ட்டுக்கு அவருடைய எதிர்கால பணி குறித்து

அறிவுறுத்தினார். ஏற்கனவே குறிப்பிட்டபடி, லீக் ஆஃப் நேஷன்ஸின் கீழ் ஆங்கில இலக்கிய பேராசிரியராக, சீனாவில் ஒரு பணியை ஹெர்பெர்ட் ஏற்றுக்கொண்டார்; உடனடியாக, சீனாவிற்குச் செல்லுமாறு பாபா அவருக்கு அறிவுறுத்தினார். ஹெர்பெர்ட், பாபாவின் கால்களைப் பற்றிக்கொண்டு, ஒரு குழந்தையைப் போல் அழுதார். அவர் பாபாவிடம், "உங்களுக்காக என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. நான் உங்களுக்கு வாக்குறுதியளித்தேன், ஆனால் என்னால் அதை நிறைவேற்ற முடியவில்லை" என்றதும், கவலைப்பட எந்தக் காரணமும் இல்லை என்று பாபா சமாதானப் படுத்தினார்; அனைத்தும் சரியாகிவிடும் என்று கூறி, பாபா பின்பு ஹெர்பெர்ட்டுக்கு, கீழ்வரும் அறிவுரைகளை வழங்கினார்:

"**சைவ உணவையே உண்ணுங்கள். புகைபிடிக்கவோ அல்லது மது அருந்தவோ வேண்டாம். தினமும் ஒன்று முதல் இரண்டு மணி நேரம் தியானம் செய்யுங்கள். உங்கள் ஓய்வு நேரத்தில், சீன மக்களுடன் ஒன்றிணைந்து, அவர்களுடன் நட்புடன் இருங்கள். இது தவிர, நீங்கள் அவர்களுடன் வேறு என்ன செய்ய வேண்டுமோ, அதை நீங்கள் உள்ளளவில் அறிவீர்கள். ஒருபோதும் அபின்** (போதைப்பொருள்) **உட்கொள்ள வேண்டாம்.**

"**ஆங்கிலம் மற்றும் சீன மக்களுடன் நட்பாக இருங்கள். எளிமையான வாழ்க்கையை நடத்துங்கள். ஆர்வமுள்ளவர்களிடம் என்னைப் பற்றிப் பேச நீங்கள் இரண்டு வாரத்திற்கு ஒரு முறையாவது ஒரு கூட்டத்தை நடத்த வேண்டும். கவலைப்பட வேண்டாம், உங்கள் கடமைகளை மனசாட்சியுடன் நிறைவேற்ற வேண்டும். நான் உங்களைப் பார்க்கச் சீனாவிற்கு வருவேன்.**"

பாபா மதிய வேளையில், ஹெர்பெர்ட், மெரடித், மார்கரெட், கிட்டி, ஸில்லா, ருஸ்தம், அலி, சாஞ்சி ஆகியோருடன் கடற்கரைக்குச் சென்று, சில மணி நேரம் கிரிக்கெட் மற்றும் சில விளையாட்டுகளை விளையாடினார்.

மாலையில் திறந்த வெளியில் தேநீர் விருந்து நடைபெற்றது; புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. பாபா வந்த நாளிலிருந்து சூரிய ஒளியுடன் வானிலை அற்புதமாக இருந்தது. பாபா ஒரு பூனைக்குட்டியுடன் விளையாடியது, விலங்குகள் மற்றும் இயற்கையின் மீது அன்பும், ஆர்வமும் காட்டியது அனைவரையும் கவர்ந்தது. நிதானமாக ஓய்வெடுக்கும் வேளையில், சில பெண்மணிகள் சாதாரணமாகத் தங்கள் கால்களை, பாபாவை நோக்கி நீட்டினர்; இது கிழக்கத்திய நாட்டில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று, ஒரு குருநாதருக்குக் காட்டும் அவமரியாதை என்று கருதப்படுகிறது. இருப்பினும், மண்டலி அமைதியாக இருக்க வேண்டியிருந்தது, பாபாவும் எதுவும் கூறவில்லை.

பாபா, இரவு எட்டு மணியளவில் ஹெர்பெர்ட், கிட்டி, ஸில்லா, மெரடித், மார்கரெட் ஸ்டார் இவர்களோடு திறந்த வெளியில் அமர்ந்து, தொலைதூர அலை ஓசையில் அவர்களைச் சுற்றியுள்ள தனிமையின் அழகையும், அமைதியையும் அனுபவித்து மகிழ்ந்தார். இந்த சூழ்நிலையில் பாபாவைச் சுற்றியிருந்த ஐந்து நபர்களும் திடீரென அழத் தொடங்கினர், அவர்களின் அழுகை மூன்று மணி

நேரம் தொடர்ந்தது. பாபா, இடையிடையே அவர்களின் கரங்களைப் பற்றிக்கொண்டு, அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று அடிக்கடி கேட்டார்.

அடுத்த நாள் காலையில் தாமஸ் வாட்ஸன், அவர் மனைவி, ஹெர்பெர்ட் மூவரும் டெவன்ஷரிலிருந்து புறப்பட்டுச் சென்றனர். பாபா சில அன்பர்களுடன் சிறிது தூரம் நடந்து வந்து விடை அளித்தார். பாபா ஹெர்பெர்ட்டிடம் ரயிலில் உண்ண ஓர் ஆரஞ்சு பழமும், தனது கைக்குட்டையையும் கொடுத்தார்; ஹெர்பெர்ட் பின்னர், ஆரஞ்சு பழத்தைத் தோலுடன் உண்டார்!

டெவன்ஷரில் தங்கியிருந்த வேளையில், மெரடித், தியான மையத்தின் மேலாளராக இருந்தார்; மேலும் அங்கு வருபவர்களை, அவரது விருப்பத்திற்கு இணங்கி நடக்க வற்புறுத்தினார். ருஸ்தமும் சாஞ்சியும் கூட இதற்கு விதிவிலக்கல்ல. மெரடித்தின் இந்தச் செயல் பலரை ஆத்திரமடையச் செய்தது. ஒரு முறை கிட்டி, பாபாவிடம், "கடவுளைக் காண ஓர் ஊடகம் ஏன் தேவை?" என்று கேட்டார்.

பாபா, எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைத்தார், "**இதை நான் உங்களுக்கு விளக்க ஒரு மணி நேரமாகும். ஆனால்,**" பாபா தொடர்ந்து கூறினார், "**மெரடித் உங்களிடமிருந்து வேறுபட்டவர் அல்ல, அவர் ஓர் ஊடகமும் அல்ல. நீங்கள் நினைப்பது போல் அப்படி எதுவுமில்லை. உங்கள் இலக்கை நோக்கி அழைத்துச் செல்ல மூன்றாம் நபர் ஒருவர் தேவையில்லை.**"

மெரடித் அவ்வாறு நடந்து கொண்டபோதிலும், பாபா அனைவருடனும் கடற்கரையில் நடந்து, பாறைகளில் ஏறி, கிரிக்கெட், கேரம், பிங்-பாங் போன்ற விளையாட்டுகளில் பங்கெடுத்தார். அலி, ஸில்லா, கிட்டி, கென்னத் ரோஸ் அனைவரும் விளையாட்டில் பங்கெடுத்து, பாபாவின் நேரடி பார்வையில் ஆனந்தமாக இருந்தனர்.

ஒரு நாள் பாபா படைப்பு (CREATION), மறுபிறவி (REINCARNATION), இறைநிலையை எய்துவது (GOD REALIZATION) குறித்து விரிவாக விளக்கினார். இறுதியாக இவ்வாறு கூறி முடித்தார்:

**இந்த விளக்கங்களை நினைத்து உங்கள் மூளைகளைக் குழப்பாதீர்கள். அன்பு ஒன்றுதான் உயர்ந்தது; அது ஒன்றுதான் முக்கியமானது. ஆன்மீகத்தைப் பற்றி நீங்கள் எவ்வளவுதான் கற்றறிந்தாலும், கேட்டாலும், புரிந்து கொண்டாலும், அது உங்களை இறை அறிவுக்கு எடுத்துச் செல்லாது. இறை ஞானம் என்பது முற்றிலும் வேறுபட்ட விஷயம், அதை அன்பின் மூலம் மட்டுமே அடைய முடியும் - அன்பு, தூய்மையான, உறுதியான அன்பு.**

சூரிய ஒளி பிரகாசமாக இருந்தபோதிலும் டெவன்ஷரில் காலநிலை குளிர்ச்சியாக இருந்தது, அனைவரும் கம்பளி கோட்டுகளை அணிந்திருந்தனர். ஆனால், அப்பாவி, அவதார புருஷர், கடவுள் என்பதால் குளிர் அவரைத் தாக்காது என்று அனைவரும் நினைத்தனர். பாபா தனது மெல்லிய, மஸ்லின்

ஸத்ராவில், ஒரு மணி நேரத்திற்கும் மேலாக, அவர்களுடன் புகைப்படங்கள் எடுத்து அவர்களின் ஆசையை நிறைவேற்றினார்.

அவதார புருஷர், மனித உருவில் அவரது விருப்பப்படி உலகில் வரும் வேளையில், இயற்கையின் மாறுபாடுகளால் பாதிக்கப்படுகிறார், இதர மனிதர்களைப் போலவே வெப்பத்தையும் குளிரையும் உணர்கிறார் என்பதை, காலம் அவர்களுக்கு விளக்க விரும்பியது. இயற்கையைப் பொறுத்தவரை, அவர் தனது உடலை ஒரு சாதாரண மனிதனைப் போலவே பயன்படுத்துகிறார், மேலும் அதன் மீது தனது சக்தியைப் பயன்படுத்துவதில்லை. அவதார புருஷர் அளவிறுதியற்ற கடவுள், ஆண் - மனித வடிவத்தில் வருகிறார். அவர் ஒரு மனிதன், ஒரு சாதாரண மனிதன் செய்யும் அனைத்தையும் செய்கிறார்; அதே நேரத்தில், அவர் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையும் முழுமையாக அறிந்தவர். கடவுள், மனிதன் ஆகும் இந்த மர்ம விளையாட்டில், அவரது தெய்வீக லீலை மற்றும் ஒற்றுமையின் ஒருமைப்பாடு அடங்கியுள்ளது.

மேபெல் (அப்போது வயது 41) ஒரு தென் ஆஃப்பிரிக்க நடனக் கலைஞரும், மார்கரெட் கிராஸ்க்கின் பாலே பள்ளியில் பங்குதாரரும் ஆவார். மேபெல் செப்டம்பர் 19ஆம் தேதி டெவன்ஷர் வந்தடைந்தார்.

அன்று, பாபா அனைவருடனும் கடலோரப் பாறைகளுக்குச் சென்று, பள்ளத்தாக்கின் புல்வெளிகள் வழியாக நடந்து சென்றார். மார்கரெட் கிராஸ்க், மேபெல் இருவரும் ஒரு நடன நிகழ்ச்சியை வழங்கினர், பிற அன்பர்கள் பாடல்களைப் பாடினர். இந்த இணைபிரியா அன்பர்களுக்கு, பாபா தனது நெருக்கமான சகவாசத்தை வழங்கி, அவர்களுடன் விளையாடவும் செய்தார். அன்பின் உறைவிடமான பாபா, அவரது அன்பால் அனைவரின் இதயங்களில் முத்தமிட்டார்; அந்த முத்தம், அவர்களின் இக்கால வாழ்க்கைக் கதைகளின் பக்கங்களைக் கிழித்தெறியும் ஊடகமாக அமைந்தது.

"மெஹர் பாபாவின் அந்த அன்பு முத்தத்தின் தாக்கம் என்னவாக இருந்திருக்கும்!" காலத்தின் உத்வேகம் இதை இப்படிப் பார்த்தது, 'அதன் சக்தியை ஒருபோதும் கற்பனை செய்ய முடியாது, ஏனெனில் ஒருவரின் மனப்படிவங்களைத் துடைக்க, பூமியில் வேறு எந்த சக்தியாலும் முடியாது.' பாபாவின் இறை முத்தம் மேற்கத்திய உலகின் மண்ணை, கண்ணீரால் நனைத்தது. பாபாவை அணுகும் ஒவ்வொருவரும் கண்ணீர் சிந்துவது வழக்கமாகிவிட்டது. இதயத்தின் மொழி முற்றிலும் மாறுபட்ட மொழி; அதை, கண்ணீரால்தான் இணைக்கவும், இணங்க வைக்கவும் முடியும்.

இதயம் கொழுந்துவிட்டு எரிந்த பின்பு, கண்ணீரே இதயத்தின் அவலத்தைத் தாங்க முடியாமல் நெருப்பில் கரைந்துவிடும். உதடுகளை மூடிய பின்பு, நெருப்பு, தன்னுள்ளே ரீங்காரம் செய்வதை அன்பிற்குரியவர் மட்டுமே கேட்க முடியும். பாபாவின் மேற்கத்திய அன்பர்கள், இதை இசைக்கக் கற்றுக்கொண்டிருந்தனர்.

பாபா அன்று மதிய வேளையில் கிம், மார்கரெட் கிராஸ்க், மார்கரெட் ஸ்டார் மூவரையும் தனியாக அழைத்து, சித்திரம் வரைந்து, உலகின் படைப்பைப்

பற்றி விளக்கினார். இறுதியில், பாபா இதைப் பற்றி அதிகம் சிந்திக்க வேண்டாம் என்று கூறி, **“அன்பு, அதிக அளவிலான அறிவுத்திறன் அல்லது விளக்கங்களை விடவும் மேலானது”** என்று குறிப்பிட்டார்.

1931, செப்டம்பர் 21ஆம் நாள், ஹஸ்ரத் பாபாஜான் அவரது உடலை பூனாவில் துறந்தார் என்ற செய்தி விஷ்ணுவிடமிருந்து வந்தது. 18ஆம் தேதி, அவரது விரல்களில் ஒன்று ‘ஸஸூன் மருத்துவமனை’யில் (பாபா பிறந்த இடம்) அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாகவும் தெரிய வந்தது. பாபா இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்:

**“பாபாஜான், தனது உடலைத் துறந்ததன் மூலம், பல சிரமங்கள் உருவாகும், சூழ்நிலைகள் விரைவில் மாறும். இதற்காகத்தான், நேற்று நான் திடீரெனப் பெர்சியாவிற்குச் சென்று, பின்னர் இந்தியாவிற்குத் திரும்புவது பற்றிய எனது திட்டங்களை மாற்றினேன்; அதற்கு பதிலாக, அமெரிக்கா செல்ல முடிவு செய்துள்ளேன். வட்டமேசை மாநாடு, இங்கிலாந்தின் ஆபத்தான பொருளாதாரம், ரஷ்யா, ஜப்பான், சீனாவில் ஏற்பட்ட குழப்பம், போர் பற்றிய வதந்திகள் மேலும் அனைத்து சூழ்நிலைகளும் இப்போது விரைவாக மாறும் என்பதை பாபாஜானின் மறைவு உணர்த்துகின்றது.”**

பாபாஜானுக்குப் பளிங்கு கல்லால் சமாதி அமைக்க 4000 ரூபாய் வழங்குமாறு டாக்டர் கனிக்கு பாபாஜானின் பிரியமான மகன், ஒரு தொலைத்தந்தி அனுப்பினார்.

மெஹர் பாபா, டெவன்ஷரில் தனக்கு நெருக்கமான அனைவருடனும் தனித்தனியாக நாட்களைக் கழித்தார். முதல் இரண்டு நாட்கள் ஹெர்பெர்ட்டுடனும், அடுத்த மூன்று நாட்கள் கிட்டி, ஸில்லாவுடனும் கழிந்தன. மார்கரெட் கிராஸ்க், கிம் ஆகியோரிடம் பாபா சிறப்பு கவனம் செலுத்தினார். பார்வையாளர்கள் பலர் வந்து சென்ற வேளையில், ஆகா அலி வெளியில் அமர்ந்து, கிம் அவருடைய நண்பர்களுடன் வந்ததை ‘கிம் அண்ட் கம்பெனி’ என்று குறிப்பிட்டதை, பாபா சுருக்கமாக ‘கிம்கோ’ (KIMCO) என்று பெயரிட்டு அழைத்தார்.

பாபா ஏறக்குறைய ஒவ்வொரு நாளும், சாஞ்சி, ருஸ்தம் இருவரையும் தனது அறைக்கு அழைத்து, அமெரிக்காவிற்கான பயணத்தைப் பற்றி விவாதித்தார் - மெரடித் இதை விரும்பாமல், அவர் பாபாவிற்கு மிகவும் நெருக்கமானவர் என்று கற்பனை செய்து, சாஞ்சி, ருஸ்தம் இருவரையும் புறக்கணிக்க முயற்சித்தார்.

அனைவரும் படுக்கைக்குச் சென்ற பின்னர் இரவில், சாஞ்சி தனது கட்டிலில் அமர்ந்து நாட்குறிப்பில் அன்றைய நடவடிக்கைகளை எழுதுவதை வழக்கமாகக் கொண்டார். இதனால் பல நுணுக்கமான பதிவுகள் இன்று நம் கைகளுக்கு வந்துள்ளன.

பத்து நாட்களுக்குப் பிறகு, செப்டம்பர் 24ஆம் நாள், மெஹர் பாபா டெவன்ஷரிலிருந்து லண்டன் வந்து, மீண்டும் கிட்டி டேவி வீட்டில் தங்கி

இருந்தார்; ருஸ்தம், சாஞ்சி இருவரும் அருகிலமைந்த வேறொரு வீட்டில் தங்கினர்.

ஹெர்பெர்ட், கிட்டி இவர்களின் தந்தை 'ஜான் டேவி', குடும்பத் தொழிலாக ஓர் அச்சகத்தை நடத்தி வந்தார்; அவரும், மனைவி 'ஹெலினா'வும் பாபாவின் நெருங்கிய தொடர்பில் வந்த அதிர்ஷ்டசாலிகள்.

ஹெலினா ஒரு நாள் பாபாவை அணுகி, "நான் உங்களை எப்படிப் புரிந்துகொள்வது? உங்களை எப்படி நேசிப்பது?" என்று கேட்டார்.

**"பிரார்த்தனை வேளையில், என்னுடைய புகைப்படத்தை உங்கள் முன் வைத்துக் கொள்ளுங்கள்,"** பாபா அறிவுறுத்தினார்.

"நான் பிரார்த்தனை செய்யும்போது, கிறிஸ்துவின் சித்திரத்தை எப்பொழுதும் என் முன் வைத்திருக்கிறேன்," என்று ஹெலினா பதிலளித்தார்.

**"தொடர்ந்து அப்படியே செய்யுங்கள்; அவருடைய சித்திரத்தைப் பார்த்துக் கொண்டே இருங்கள்; இரண்டும் ஒன்றுதான். கிறிஸ்துவின் அன்பு, மிக உயர்ந்த இலட்சியமாகும். நான் உங்களுக்கு உள்ளளவில் உதவுவேன்"** என்று பாபா உறுதியளித்தார்.

அடுத்த நாள், கிட்டி, லண்டனைச் சுற்றியுள்ள விக்டோரியா, ஆல்பர்ட் அருங்காட்சியகம், ரீஜண்ட்ஸ் பூங்காவில் மிருகக்காட்சிசாலை, வெஸ்ட்மின்ஸ்டர் போன்ற இடங்களுக்கு, பாபாவை அழைத்துச் சென்றார். வெஸ்ட்மின்ஸ்டரில், பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: **"நான் இங்கு வந்திருப்பதால், இங்கே புதைக்கப்பட்டவர்கள் மிகவும் அதிர்ஷ்டம் வாய்ந்தவர்கள்."** உடலை துறந்த ஆவிகள் வேறிடத்தில் இருந்தாலும், பாபாவால் அவர்களைப் பார்க்க முடிந்தது.

பாபா சுரங்கப்பாதையில் பயணிக்கும் புதுமையை அனுபவித்ததாகத் தோன்றியது, மேலும் அவர் லண்டனைச் சுற்றி நிலத்தடி 'குழாய்' - லிவர்பூல் தெரு, ஆக்ஸ்போர்டு ஸர்க்கஸ், ஷெஃபர்டின் புஷ், பிக்காடிலீ ஆகிய இடங்களுக்குச் சென்றார்.

லண்டனில் இருந்த வேளையில், பாபா அதிகாலையில் ஆறு மணிக்கு எழுந்து, காலை உணவை 7:30க்கு முடித்து, செய்தித்தாள்களைப் புரட்டிய பின்னர், ஒன்பது மணிக்குள் பார்வையாளர்களை சந்திக்கத் தயாராக இருந்தார்.

கிம், தனது கணவர் 'டெஸ்மண்ட் டோல்ஹர்ஸ்ட்', அவரது மகள்கள் 'ஃபோப் ஆன்', 'ஸூஸன் ஜேன்' ஆகியோரை செப்டம்பர் 25ஆம் நாள், பாபாவை சந்திக்க அழைத்து வந்தார். டெஸ்மாண்ட் பாபாவிடம், "நான் ஒரு தீவிர ரோமன் கத்தோலிக்கன், நேர்மையான வாழ்க்கையை வாழ விரும்புகிறேன். சில சமயங்களில் நான் தவறிழைக்கிறேன்; மீண்டும் அதைச் செய்யத் தூண்டப்படுகிறேன்; இப்படி மீண்டும் மீண்டும் தவறு செய்கிறேன். நான் மிகுந்த மத பற்று உள்ளவன், எப்பொழுதும் கடவுள் மற்றும் திருச்சபையைச் சார்ந்திருக்க விரும்புகிறேன்."

அதற்கு பாபா, **"மதத்தைச் சார்ந்திருங்கள்; அது நல்லது. ஆனால் இறுதியில் நீங்கள் ஷரியத்திற்கு அப்பால் செல்ல வேண்டும் - அதாவது**

**பாரம்பரிய சடங்கு சம்பிரதாயங்களைக் கடந்து செல்ல வேண்டும்**” என்று பதிலளித்தார்.

அப்போது டெஸ்மண்ட், பாபாவிடம், “கிறிஸ்தவ மதத்தில் உண்மையான புனிதர்களும், புனித பாதிரிமார்களும் இருக்கிறார்களா?” என்று கேட்டார்.

**“புனிதமானவர்கள் இருந்தனர், ஆனால் கிறிஸ்தவ பாதிரியார்கள் உலகெங்கிலும் இருக்கும் பிற மதங்களைச் சார்ந்த பூசாரி வர்க்கங்களைப் போலவே இருக்கிறார்கள். சுயநல பாதிரியார்கள், தங்கள் பழக்கவழக்கங்கள், கொள்கைகள், நடைமுறைகளை உருவாக்கி, பிரச்சாரம் செய்கிறார்கள், இதன் மூலம் மதத்திற்குத் தடையாக இருக்கிறார்கள். இந்தச் சடங்கு சம்பிரதாயங்கள் அனைத்தும் உலர்ந்துபோன தானியத்தின் புறத்தோலை ஒத்தது**!

அன்று மதிய வேளையில், வேறொரு புதிய நபர் பாபாவை சந்திக்க வந்தார். 46 வயதான ‘குயன்டின் டாட்’ (QUENTIN TOD) ஒரு பிரிட்டிஷ் நடிகர், நடனக் கலைஞர், நடன இயக்குனர், லண்டன் மற்றும் நியூயார்க்கில் பணிபுரிந்தார், ஆன்மீகத்தில் அதீத ஆர்வம் கொண்டிருந்தார். கடந்த வருடம் மார்கரெட் கிராஸ்க், மேபெல் ஆகியோரை சந்தித்து நண்பர்களாயினர். 1931 செப்டம்பர் மாதத்தில், மார்கரெட் டெவன்ஷர் சென்று திரும்பி வந்தபோது, அவர் மெஹர் பாபாவைப் பற்றி குயன்டினிடம் கூறினார். அந்நேரத்திலிருந்து குயன்டின், மெஹர் பாபாவை சந்திக்கும் அதீத ஆர்வத்தில் இருந்தார்.

மார்கரெட், மேபெல், குயன்டின் மூவருடன் மதிய உணவை முடித்த பின்பு, மைலோ ஷாட்டக், குயன்டினை, டேவியின் இல்லத்திற்கு அழைத்து வந்தார். பாபாவின் அறையை நோக்கிச் செல்லும் படிக்கட்டுகளில் ஏறும்போது, குயன்டின் பதற்றமடைந்தார். அவர் அறைக்குள் நுழைந்ததும், பாபா ஜன்னல் அருகிலிருந்த படுக்கையில் குறுக்காகக் கால் வைத்து அமர்ந்திருந்ததைக் கண்டார். ஆகா அலி, சாஞ்சி இருவரும் பாபாவின் அருகில் இருந்தனர். இருப்பினும், குயன்டின், பாபாவை வைத்த கண் வாங்காமல், பக்கத்தில் இருந்தவர்களையும் கண்டுகொள்ளாமல் அருகில் சென்றார். பாபா புன்முறுவல் செய்து கொண்டே, அருகில் அமருமாறு சைகையால் தெரிவித்து, அவரது கையால் குயன்டினின் தோளில் தட்டினார். குயன்டின், பாபாவிடமிருந்து வெளிப்படும் ஆழமான அன்பையும் அமைதியையும் உணர்ந்தார்; மேலும் நீண்டகாலமாக இழந்த ஒரு நண்பரைத் திரும்பப் பெறுவது போன்ற உணர்வை அனுபவித்தார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, பாபா, குயன்டினின் இடது கையை அவரது கையில் எடுத்துக் கொண்டார்; சில கணங்களில் குயன்டின் தூய்மையான அன்பின் மின்சாரம் பாய்வது போல் உணர்ந்தார். உடனடியாக குயன்டின், பாபாவிற்கு ஏதேனும் வழியில் சேவை செய்ய வேண்டும் என்ற அதிர்வலைகள், இதயத்தில் பாய்ந்ததையும் உணர்ந்தார். பாபாவின் மௌனத்திற்கு முன்னால்,

அவரது மனம் அமைதியாகி, அதிலிருந்த கேள்விகள் அனைத்தும் அவற்றின் முக்கியத்துவத்தை இழந்து மறைந்துவிட்டன.

இந்த முதல் சந்திப்பிற்குப் பிறகு, குயன்டின் பாபாவை இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "என்னை மிகவும் கவர்ந்தது, அவரை சூழ்ந்துள்ள, விளக்க முடியாத, தீவிரமான சுழற்காற்றின் உயிரோட்டம்; மேலும், அவருடைய குறிப்பிடத்தக்க கண்கள்." அப்போதிலிருந்து, குயன்டின் ஒவ்வொரு நாளும் டேவியின் இல்லத்திற்கு விஜயம் செய்தார். ஒரு சந்திப்பில், '**குயன்டின், எதிர்காலத்தில், பாபாவுக்காக மிகப்பெரிய பணிபுரிவார்**' என்று பாபா அவருக்கு உறுதியளித்தார்.

கிட்டி, தனது பியானோ வகுப்பு மாணவர்களில் ஒருவரை பாபாவிடம் அழைத்து வந்தார். அந்தப் பெண் மிகவும் பதட்டமாக இருந்தாள், ஆனால் பாபா அவளிடம் மனம் திறந்து பேசுமாறு கேட்டுக்கொண்ட பின்னர், அழுது, நடுக்கத்தில் பாபாவின் காதில் ஏதோ கிசுகிசுத்தாள். பாபா, அவளை ஆறுதல்படுத்தி தனதருகில் அமர வைத்தார்; சுமார் ஒரு மணி நேரம் அமர்ந்திருந்தாள்.

மேலுமொருவர், அவரை கிறிஸ்தவர் என்று அறிமுகப் படுத்தியதும், பாபா, "**நீங்கள் ஜீஸஸின் பெயரை மட்டும் சொல்கிறீர்கள்; ஆனால் அவரை நேசிப்பதில்லை. அவரை நேசிக்கவும் வேண்டும்**" என்றார்.

தாமஸ் வாட்ஸன், மனைவியுடன் லண்டனில், ஹோட்டலில் தங்கி இருந்தபோதும், மெஹர் பாபாவைப் பார்க்க வரவில்லை. டெவன்ஷரிலிருந்து சென்ற பின்பு, தாமஸ் வாட்ஸன், பாபாவைப் பற்றிய வேறுவிதமான, தவறான எண்ணங்களைக் கொண்டிருந்தார் என்பது தெளிவாகத் தெரிந்தது. சார்லஸ் பர்டம் அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பாபாவும் அவரது துணைவர்களும் (மண்டலி), வாட்ஸன் மற்றும் பிற நண்பர்களை சந்திக்க அமெரிக்கா வருகிறார்கள் என்று அமெரிக்க தூதரகத்திற்கு ஒரு கடிதம் எழுதுமாறு கேட்டுக்கொண்டார். அவரும், பாபாவும் வாட்ஸனின் இல்லத்தில் தங்க முடியுமா என்று மெரடித் விசாரித்த போது, வாட்ஸன் அதற்குத் தேவையான அறைகள் இல்லை என்று பதிலளித்தார்.

வாட்ஸனின் ஆரம்ப கால ஆர்வம், உற்சாகம், பக்தி அனைத்தும் குறுகிய காலத்திற்கே என்பது நிரூபணமானது. முதலில் பாபாவை சந்தித்த போது, சாதகமான மனப்போக்கைக் கொண்டிருந்த வாட்ஸன், பின்னர் அலட்சிய போக்கைக் கடைப்பிடித்தார். வாட்ஸன் தனது நாட்குறிப்பில் இவ்வாறு பதிவு செய்திருந்தார்:

ஒரு மனிதனை இப்படி வழிபடுவது முறையாகுமா? கடவுளை உணர்ந்து, அறிந்து கொள்வதற்கான தனிப்பட்ட ஒருவரின் பாதையை, பாபா, கிறிஸ்தவ தேவாலயக் கோட்பாட்டைப் போலவே தடுக்கவில்லையா? டெவன்ஷர் தியான மையத்திலிருந்த மக்கள், பாபாவிற்கு அளித்த வழிபாட்டு முறை, எனது மனதில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. என்னைப் பொறுத்தவரை நிச்சயமாக நான்

அவரை வழிபடவில்லை, அவரிடமிருந்து எந்தவிதமான நல்ல பலனையும் நான் உணரவில்லை.

மெரடித், மெஹர் பாபா இருவரும் சென்ற வாரம் லண்டனில் இருந்த போதிலும், அவர்களைப் பார்க்க எனக்கு சிறிதளவும் ஆர்வம் எழவில்லை. அவர்கள், எனக்கு வழங்க முடிகிற அனைத்தையும், நான் அவர்களிடமிருந்து பெற்றுவிட்டேன் என்று நினைக்கிறேன். என்னுடைய ஆன்மீக முன்னேற்றத்திற்காக, நான் எனது சொந்த வழியில்தான் செல்ல வேண்டும்.

ஸ்ரீ மெஹர் பாபா, என்னை ஏன் அவரிடமிருந்து விலக்கினார் என்பதன் காரணம் இன்றுதான் என் அறிவுக்கு எட்டியது. ஏனெனில், அவர் எனக்குரியவர் அல்ல - அவர் வெளிச்சமிட்டுக் காட்டும் பாதையில் செல்வதை பாபா வலியுறுத்துகிறார் - நான் பின்பற்றுவதற்கான சரியான பாதை அதுவல்ல! நான் எனது பாதையில் பயணிக்க விரும்புகிறேன்!

இதற்கு முன்பு குறிப்பிட்டது போல, சார்லஸ் பர்டம் ‘எவ்ரிமேன்’ (EVERYMAN) பத்திரிகையில் மெஹர் பாபாவைப் பற்றி **‘தி பெர்ஃபெக்ட் மாஸ்டர்’** (THE PERFECT MASTER), **‘ஒரு குருநாதரின் இன்றியமையா தேவை’** (THE NEED OF A MASTER) போன்ற கட்டுரைகளை வெளியிட்டிருந்தார்; இதைப் படித்த பல ஆங்கில மக்கள், பாபாவைப் பற்றித் தெரிந்து கொண்டனர்.

சார்லஸ் பர்டமின் நண்பர் ஒருவர் 1931 செப்டம்பர் 26 அன்று, பாபாவை சந்திக்க வந்தவர், “எவ்ரிமேன் நாளிதழில் வெளிவந்த கட்டுரைகளைப் படித்த பின்பு, நான் உங்களைப் பார்க்க வேண்டும் என உணர்ந்தேன். இது ஒரு மேலோட்டமான சிந்தனை அல்ல; உங்களைப் பார்க்க வேண்டும் என்று உள்ளளவில் உத்வேகம் ஏற்பட்டது” என்று கூறினார். வந்தவரை சந்தித்ததில் பாபா, மகிழ்ச்சியை வெளிப்படுத்தி இவ்வாறு கூறினார்.

**ஆன்மீகப் பரிபூரண நிலையை எடைபோடுவது அல்லது அந்நிலையை அடைந்த குருநாதரின் எல்லைக்குள் நுழைவது என்பது, ஒருவரின் அறிவின் வரம்பிற்குட்பட்டது அல்ல. அறிவையும் கடந்த அன்பால் மட்டுமே அதை அடைய முடியும். இந்த அன்பு, கடவுளின் உண்மையான அன்பனின் தூய இதயத்தில் உதயமாகிறது. புத்தியின் சாதனைகளால் திசை திருப்பப்பட்டவர்களின் இதயங்களில் அது ஒருபோதும் மலர முடியாது.**

**இக்காரணத்திற்காகத்தான், தெய்வீக ஞானிகள், தங்களைப் பற்றி விளக்கும்போது, புத்தியை விட உள்ளுணர்வு மற்றும் உத்வேகத்தை அதிகம் நம்பியிருக்கிறார்கள். தகுதி வாய்ந்த ஆத்மாக்களுக்கு, அவரது சகவாசத்தை வழங்கும் வேளையில், குருநாதர் அவர்களுக்குள் உணர்ச்சி வேகத்தைத் தூண்டுகிறார். மனிதனின் ஆழ் இதயம் இறைவனின் உறைவிடம்; மேலும், குருநாதருடனான நேரடி தொடர்பு, இனிமையான இதய கீதத்தை எதிரொலிக்கிறது. இந்த எதிரொலி குருநாதரின் அன்பளிப்பு. அமைதியான உள்ளுணர்வைத் தூண்டுவதன் மூலம், அவர் இறை கீதத்தை எதிரொலிக்கிறார்.**

“நான் என்ன செய்ய வேண்டும்?” வந்தவர் கேட்டார்.

“**மிக உயர்ந்த இலட்சியத்தை நினைவில் கொண்டு தியானம் செய்யுங்கள். அதுதான் அன்பு. நான் உங்களுக்கு உதவுகிறேன்**” என்று பாபா அவருக்கு வலியுறுத்தினார்.

கிறிஸ்துமஸ் ஹம்ஃபிரிஸ் (CHRISTMAS HUMPHREYS) என்பவர் லண்டன் பௌத்த சமூகத்தின் தலைவராக இருந்தார். கிம் வழியாக, பாபாவைப் பற்றித் தெரியவந்த அவர் தனது அமைப்பைச் சார்ந்த சிலருடன் பாபாவை சந்திக்க வந்தார். அவர்களின் சந்திப்பின் போது, பாபா விளக்கினார்:

**ஸூஃபி பாரம்பரியத்தில் ஷரியத் என்பது மதத்தின் அடிப்படை சட்டத்தைக் குறிக்கும், அதாவது வெளியளவில் கடைப்பிடிக்கும் சடங்கு சம்பிரதாய நடைமுறைகள். ஷரியத்திற்கு அப்பால் செல்வது சட்டவிரோதமானது என்று முஸ்லிம்கள் கருதுகின்றனர். ஆயினும் ஒரு சத்குரு** (உண்மையான குருநாதர்), **அவர் விரும்பினால், ஒருவருக்கு ஒரே நிமிடத்தில் இறை உணர்வை வழங்க முடியும்**!

மெஹர் பாபா கூறியதைக் கேட்டு தீவிர சிந்தனையில் ஆழ்ந்த ஒருவரைப் பார்த்து பாபா, ‘**அவர் என்ன நினைக்கிறார்**’ என்று கேட்டார். அவர் உடனே, “ஒரு நபர் ஒரே நிமிடத்தில் எவ்வாறு இறை உணர்வைப் பெறமுடியும்?” என்ற கேள்வியை எழுப்பினார்.

பாபா விளக்கமளித்தார், “**ஒரே நிமிடத்திற்குள் அனைத்து செயல்களையும் அழித்து, கடவுளின் அனுபவத்தை உடனடியாக வழங்க முடியும். ஒன்றுமில்லாத மாயையுடனான பிணைப்பு எப்போதும் இருக்கும், மற்றும் கர்ம வினை** (பிணைப்பு) **செயல்களால் ஏற்படுகிறது. செயல்கள் அழிக்கப்பட்டதும், பிணைப்பு இல்லாமலாகிவிடும். இந்தப் பிறவியில் நீங்கள் இறைநிலையை அடைய முடியும் என்று நினைக்கிறீர்களா**?”

“கர்ம வினை பற்றிய உங்கள் கருத்துக்களுடன் எனக்கு உடன்பாடு இல்லை. ஒருவரின் செயல்களின் விளைவுகளை ஒரே வாழ்வில் எவ்வாறு அகற்ற முடியும்?” என்று அந்த நபர் வினவினார்.

“**ஏன் இல்லை**?” பாபா புன்முறுவல் செய்தபடியே பதிலளித்தார். “**குருநாதரின் அருளால் அவை அழிக்கப்படலாம்; அவ்வாறு இல்லையென்றால், குருநாதரால் என்ன பயன்**? **ஒவ்வொருவரும் அவருடைய நேரம் வரும் வரைக் காத்திருக்க வேண்டுமாயின், இறை அருள் அர்த்தமற்றதாகிவிடாதா**?”

மெஹர் பாபா, அப்போது, அவர் இளம் வயதில் இறைநிலையை அடைந்தது குறித்து எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைத்தார்: “**நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன், ஆன்மீக உண்மை அல்லது எல்லையில்லா உணர்வு பற்றி எதுவும் தெரியாது. ஆனால்** (அந்த ஆதிகால பெண்மணி) **பாபாஜான் அதை அவருடைய ஒரே அரவணைப்பில் எனக்குப் பரிசாக வழங்கினார்**! **அதற்கு முன்னர், என்னால் ஒரு நாள் கூட உணவு உண்ணாமல் உபவாசம் இருக்க முடிந்ததில்லை**.

**“பாபாஜானின் அரவணைப்பிற்குப் பிறகு, பதினொரு மாதங்கள், நான் நீர் மட்டுமே அருந்தி, சற்றும் தூக்கமின்றி இருந்தேன். ஆனால் நான் உணவு உண்ணாமல், தூங்காமல் இருந்தேன் என்ற நினைப்பு அறவே இல்லை. இவை அனைத்தும் தன்னிச்சையாக நிகழ்ந்தவை, அதைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.”**

மெஹர் பாபா தொடர்ந்து வலியுறுத்திக் கூறினார், **“நான் அடையப்பெற்ற அந்த அனுபவத்திலிருந்து, கடந்த கால செயல்களின் விளைவுகளை வேரோடு அழிப்பது சத்குருகளின் ஒரே நிமிட வேலை என்பதை நான் உறுதிப்படுத்துகிறேன். இக்காலத்தின் புத்தர், குருநாதர், ஒரு கண்ணிமைப் பொழுதில் அதைச் செய்ய முடியும்!**

**“ஆனால் இதைப் பற்றி சிந்திக்காதீர்கள். இவற்றை நீங்கள் படிப்படியாகப் புரிந்துகொள்வீர்கள், அனைத்தும் உண்மை என்று உங்களுக்குத் தெரியும். நவம்பர் மாதத்தில் மறுபடியும் வந்து, ஆறு மணி நேரம் என்னுடன் இருங்கள்.”**

தொடர்ந்து பாபா, ‘யோக-சமாதி’ நிலையைக் குறித்து இவ்வாறு கூறினார்: **“உண்மையான இறை உணர்வை, ஒரு குருநாதரின் அருளால் மட்டுமே அடையப்பெற முடியும். யோகா பயிற்சி செய்வதன் மூலம் சமாதி நிலையை எய்தியவர்கள் பலர் உள்ளனர். ஆனால் இந்த நிலை தற்காலிகமானது. எந்த ஒரு யோகியும், சமாதி நிலையிலிருந்து வெளியே வந்ததும், சாதாரண மனிதனைப் போல், உலக உணர்வை அடைகிறார். இதன் அர்த்தம் என்னவெனில், இறை உணர்வு நிலையானது மற்றும் உண்மையான அறிவு அதிலிருந்து பெறப்படுகிறது. மிகச் சிலரே கடவுளைக் கண்கூடாகக் காணும் அறிவொளியைப் பெற முடியும். அப்படியானால், கடவுளுடனான இறுதி ஐக்கியம் - இறை உணர்வைப் பற்றி என்னென்பது?”**

கிறிஸ்மஸ் ஹம்ஃப்ரிஸ், பாபாவால் வெகுவாக ஈர்க்கப்பட்டார், பின்னர் அவரது சந்திப்பைப் பற்றி ‘அன்பின் அவதாரம்’ (LOVE INCARNATE) என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையின் சாராம்சம் பின்வருமாறு:

எனது வாழ்க்கையில் முதல் முறையாக, அவரைப் போன்ற இன்னொருவரை நான் சந்திக்கவில்லை; அவரை சூழ்ந்த ஒளி மண்டலத்தில் நான் இருப்பதைக் கண்டேன்… அவருடைய ஆழமான தெய்வீக அனுபவம் ஒரு குழந்தையின் கபடமற்ற மழலையோடு பின்னிப் பிணைந்தது போல் உணர்ந்தேன்… அவருடைய புன்னகை, அவர் மொழிந்த சொற்களைப் போலவே எங்கும் தொற்றிப் பரவியது… மேலும் அவர் மாசற்ற பாசத்தை வெளிப்படுத்திய போது, அதன் பெருமையை மட்டும் புகழ்ந்து பேசும் மதங்களைக் காட்டிலும், இப்படிச் செயலளவில் தன்னை அற்பணிக்கும் ஒருவரை சந்திப்பது, மறக்கமுடியாத அனுபவமாக இருந்ததை எண்ணி பலரும் ஆச்சரியப்பட்டனர்.

இன்று உலகில் இன்னும் பல மெஹர் பாபாக்கள் இருந்திருந்தால், காரணங்கள் எதுவுமே இல்லாத நிலையில் போர், போராட்டங்கள் அனைத்தும் ஒரு முடிவுக்கு வந்திருக்கும். இந்த அன்பான மனிதர், எல்லா மக்களுக்கும் ஒரு முன் உதாரணமாக இருக்கிறார்!

மெஹர் பாபாவை சந்தித்ததில் ஹம்ஃப்ரிஸின் இதயம் மிகவும் நெகிழ்ந்து போனாலும், புத்த மதத்தில் அதீத ஈடுபாடு உள்ளவராகையால், பாபாவின் நேரடி வழிகாட்டுதலைக் கடைப்பிடிக்க முடியாத நிலையில் இருந்தார்.

மெஹர் பாபாவை சந்தித்த மேலும் பலர் இதுபோன்ற உண்மை நிலையை உணர்ந்தனர். மாட் மக்கார்த்தி ஃபோல்ட்ஸ் (MAUD McCARTHY FOULDS) என்பவர் ஆஸ்துமா நோயால் பெரிதும் அவதிப்பட்டார். பாபாவுடனான முதல் சந்திப்பிற்குப் பின்னர், என்ன நடந்தது என்பதை அவர் ஒரு முறை விவரித்தார்:

உள் இதய ஒளியின் உறுதிப்பாட்டை இத்தனை சுலபமாகவும், சுத்தமாகவும், இயற்கையாகவும் உணரவைக்கும் பாபாவைப் போன்ற ஒருவரை, நான் இதுவரை சந்தித்ததில்லை.

நான் முற்றிலும் ஓர் அந்நியனாக இருந்தாலும், அவர் கூறிய முதல் இரண்டு வார்த்தைகள், வாழ்நாள் முழுவதும் என்னுடன் இருக்கும் பலவீனத்தைக் குறித்தன. அவருடன் 35 நிமிடங்கள் மட்டுமே இருந்தேன், என்னை குணப்படுத்த நான் அவரிடம் கேட்கவில்லை. ஆயினும்கூட, சில வாரங்களுக்கு முன்னர் எதிர்பாராத விதமாக என்னைத் தாக்கி, அச்சுறுத்திய ஆஸ்துமாவால் அவதிப்பட்டு வந்ததால், அன்று மாலை நான் அவரிடம் செல்ல மிகவும் சிரமப்பட்டேன்.

அன்றிரவு வீட்டிற்கு வந்து படுக்கைக்குச் சென்றபோது, என் அறையில் ஒரு வலுவான, விவரிக்க முடியாத, அருமையான கிழக்கத்திய வாசனை, என்னை ஆழ்ந்த தூக்கத்திலிருந்து விழிக்கச் செய்தது. நான் தரையில் அமர்ந்ததும், மெஹர் பாபா என்னுடன் இருப்பதை உணர்ந்தேன். இதை, கிட்டத்தட்ட ஓர் அச்சுறுத்தும் சக்தியாக மட்டுமே நான் விவரிக்க முடியும். ஓர் அறுவை சிகிச்சை நிபுணரின் கைகள், எனது நுரையீரல், முதுகெலும்பு மற்றும் என் உடலின் பிற பாகங்களில் இயங்குவதாகத் தோன்றியது. என் எலும்பு மற்றும் திசுக்களுக்குள் நுழைந்த அந்த அபார சக்தி, என் உடலையே மாற்றுவது போல் உணர்ந்தேன்.

மாட், வேறு சில விசித்திரமான உணர்வுகளையும் கொண்டிருந்தார். அடுத்த நாள் பாபாவை சந்தித்து, தனது அனுபவங்களை விவரிக்கத் தொடங்கியதும், பாபா அவரைத் தடுத்து நிறுத்தி, “**எனக்குத் தெரியும், நான் உங்களுக்கு உதவினேன் என்று எனக்குத் தெரியும்**” என்று குறிப்பிட்டார். இந்த அனுபவத்திற்குப் பின்னர், அந்த பெண்மணியின் உடல்நிலை மிகவும் மேம்பட்டது.

ஒரு நபர் சாஞ்சிக்கு எழுதிய கடிதத்தில்: “ஆமாம், ஒரு முறை பாபாவை சந்தித்தபோது, ஒருவரின் வாழ்நாள் முழுவதும் அந்த நிமிடத்திற்காகக் காத்திருந்தது போலத் தெரிகிறது; அதற்காக அவர் மேகங்கள் மற்றும் சூறாவளி வழியாக நம்மைப் பாதுகாப்பாக வழிநடத்தி வந்தது போலவும் தோன்றுகிறது” என எழுதியிருந்தார்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், வயதானவர் ஒருவர், திரு. ஆட்ரே (Mr. AUDREY), தனது மனைவி, குழந்தையுடன் ரஸ்ஸல் சாலையில் பாபாவின் ஆசீர்வாதத்தை நாடி வந்தார். அவர் தத்துவத்தில் ஆர்வம் உள்ளவர்; மேலும் பாபா விரும்பிய ஒரு கனிவான நபர். பாபா, ஆட்ரேயின் மகனைத் தனது மடியில் வைத்து முத்தமிட்டதைப் பார்த்த அவரது இதயம், அன்பால் பொங்கி வழிந்தது. உணர்ச்சிகளைத் தடுக்க முயன்றாலும் அவர் கண்களில் கண்ணீர் ததும்பியது.

அவரை ஆறுதல் படுத்தி, பாபா விளக்கினார், "**புத்தக அறிவு, தத்துவ ஆய்வு இவை இரண்டும் அறிவாற்றலைத் திருப்தி அடையச் செய்கிறது, ஆனால் அதுவே எல்லாம் என்று சொல்லக் கூடாது. உண்மையான விஷயம் என்னவெனில், கடவுளைப் பற்றி சிந்தித்து, உணர்ந்து, அவரை அனுபவிப்பது ஆகும். யதார்த்தமான உணர்வு, கருத்து மற்றும் அனுபவம் இருக்க வேண்டியது இன்றியமையாதது, ஏனெனில், இவை அனைத்தும் உண்மையானவை. அறிவுபூர்வமான நம்பிக்கை என்பது முதல் படியாகும், அதிலிருந்து பிறப்பது திடநம்பிக்கை, ஆனால் இதில் தொடர்ச்சியான முன்னேற்றம் இருக்க வேண்டும்.**"

அதே விஷயத்தில், பாபா ஒரு முறை சுருக்கமாகக் கூறினார்: "**கடவுளின் உண்மையான அனுபவம் இல்லாத பட்சத்தில் அனைத்து தத்துவங்களும் அர்த்தமற்றவை.**"

ஹாரி ஜே. ஸ்டரட்டன், (HARRY J. STRUTTON) 'அக்கல்ட் ரிவியூ' (OCCULT REVIEW) பத்திரிகையின் ஆசிரியர் மெஹர் பாபாவை சந்திக்க வந்தார். ஸ்ட்ரட்டன், ஏற்கனவே மெஹர் பாபாவைப் பற்றி மெரடித் ஸ்டார் மூலமாகக் கேள்விப்பட்டார்; 1929 ஜூலை மாதத்தில் பாபாவிற்குக் கடிதம் ஒன்று எழுதியிருந்தார். பாபா 'அறிவாற்றல்', 'இதயத்தின் பங்கு' பற்றி விளக்கிக் கூறினார்:

**புத்தி, இதயம் இரண்டிற்கும் இடையே ஒரு பெரிய வேறுபாடு உள்ளது. இரண்டும் மிக உயர்ந்த நன்மைக்காகப் பயன்படுத்தப்பட்டால் சிறப்பாக இருக்கும்; ஆனால் ஈரமான இதயம் இல்லாமல் புத்தி மட்டுமே இருப்பதால் பயனில்லை. இதயம், புத்தியின் மீது ஆதிக்கம் செய்வது மிகச் சிறந்தது.**

**கபட நாடகமாடும் மத வெறியர்களோடு ஒப்பிடும்போது, நேர்மையான நாத்திகர் விரும்பத்தக்கவர். சாஸ்திர நூல்கள் அனைத்தும் தானியங்களின் வெளிப்புற தோல்களை மட்டுமே தருகின்றன; உண்மையான அறிவு, இந்த நூல்களிலிருந்து வருவதில்லை. உண்மையான அறிவு என்பது குருநாதரின் அன்பளிப்பு, ஆனால், அன்பு எனும் அதற்குரிய விலையைச் செலுத்தாமல் அது வழங்கப்படுவதில்லை. அன்பிற்கு அளவிலா சக்திகள் உள்ளன, மேலும் அன்பு ஒன்றுதான் இறை உணர்வுக்கான குறுகிய மற்றும் எளிதான பாதை. அன்பின் மூலம் மட்டுமே இறை உணர்வை அடைய முடியும்.**

டெஸ்மாண்ட், கிம், மார்கரெட் கிராஸ்க், மெரடித், கிட்டி, ருஸ்தம், சாஞ்சி, ஆகா அலி ஆகியோருடன் மெஹர் பாபா 1931 செப்டம்பர் 26ஆம் நாள் மாலை லண்டன் கொலீஸியத்தில் நடைபெற்ற 'ஒயிட் ஹார்ஸ் இன்' (WHITE HORSE INN) எனும் நகைச்சுவை இசை நிகழ்ச்சியைக் காணச் சென்றார். கொர்டிலியா டெலியன், (CORDELIA DeLEON 30) என்ற பிரபல நடிகை மெஹர் பாபாவிற்கு அறிமுகமானார். "இவர் இன்றைய கிறிஸ்து" என்று அவரிடம் அறிமுகமானதும், டிலியா (DELIA), என்று அழைக்கப்பட்ட அவர், உடனடியாக பாபாவால் ஈர்க்கப்பட்டு, அவர் அருகில் வந்து அமர்ந்தார். அதற்குப் பின்னர் ஒவ்வொரு நாளும் லண்டனில், டிலியா, பாபாவை சந்தித்தார்.

நாடக ஆசிரியராகப் பணிபுரிந்த டிலியாவின் இளைய சகோதரன் ஜாக், லண்டனில் சிறிய சோதனை கியூ தியேட்டரைத் தொடங்கினார்.

மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் சோர்வடைந்து உணர்ச்சிவசப்பட்ட நிலையில், டிலியா, இதற்கு முன்னர் 1931 கோடையில் டெவன்ஷர் மையத்திற்குச் சென்றிருந்தார். அங்கே அவர் மெஹர் பாபாவைப் பற்றிக் கேள்விப்பட்டார். "இப்படி ஒரு மனிதரை ஒருபோதும் நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள்!" என்று ஹெர்பெர்ட் டேவி, டிலியாவிடம் மகிழ்ச்சி பொங்கக் கூறினார்.

மெஹர் பாபாவை முதன் முதலாக சந்தித்த டிலியாவின் வாழ்க்கை முற்றிலும் மாற்றம் கண்டது. அவர், பாபாவுடன் தான் இருந்த முதல் முக்கியமான நேரத்தை நினைவு கூர்ந்தார்:

லண்டன் கொலிஸியத்தில், நான் பாபாவின் அருகில் அமர்ந்தேன், ஆனால் அவர் என்னை கவனித்ததாகத் தெரியவில்லை. பாபா, மிகவும் பிரகாசமாக, அழகாகத் தோற்றமளித்தார். நான் முதலில் வெட்கப்பட்டு, சற்று பதட்டமாக இருந்தேன், என்னுடைய சரியான நிலைபாட்டில் நான் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. யாரோ ஒருவர் சுத்தியலை எடுத்து என்னைத் தலைக்கு மேல் அறைந்ததைப் போல் உணர்ந்தேன். பாபாவைப் பார்த்து, ஆச்சரியத்தில் நான் திகைத்துப் போனேன்!

பாபாவைப் பார்த்த அந்த நேரத்திலிருந்து, எனக்கு வேறு எதுவும் ஒரு பொருட்டாகத் தென்படவில்லை. முதல் பார்வையிலிருந்தே, அவர் மீது எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கையும், உறுதிப்பாடும் வந்தன. எனது மனதில் எந்தக் கேள்வியும் எழவில்லை.

அவரிடமிருந்து எனக்கு எந்தத் தேவையும் இருப்பதாக நான் உணரவில்லை. இயேசு பெருமானை அவருடைய சீடர்கள் நேசித்தது போல, நானும் அவரை நேசித்தேன். எனவே, எனது வாழ்க்கையை நான் அவருடைய பாதங்களில் அர்ப்பணித்தேன். என்னுடைய தேடல் இறுதியாக ஒரு நிறைவுக்கு வந்ததையும் நான் அறிந்தேன்.

டிலியாவின் இதயத்தில் இறை நாடகம் ஒன்று அரங்கேறியது, அவர் என்றென்றும் பாபாவிடம் சரணடைந்தார். அவர் இந்த நாடகத்தை இப்போது கண்டுகளிக்கும் ஆர்வத்தில் இருந்தார். எதிர்வரும் எல்லா காலங்களுக்காக,

அவர் பாதங்களில் தன்னை சமர்ப்பணம் செய்தார். 'ஸ்டார் ஆஃப் தி யுனிவர்சல் ஷோ'வுடன் (STAR OF THE UNIVERSAL SHOW) தியேட்டரில் நடந்த முதல் சந்திப்பு எவ்வளவு அருமையாக இருந்தது!

தெய்வீக நாடகத்தில் டிலியா ஒரு முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்பது விதியால் நிர்ணயிக்கப்பட்ட ஒன்று. மார்கரெட், கிட்டி போன்ற அவரது வட்ட உறுப்பினர்களில் ஒருவராக, மெஹர் பாபாவின் உலகளாவிய திரையில், அவர் தனது உண்மையான பாத்திரத்தை வகிக்கக் காத்திருந்தார்.

டிலியா, பின்னர் அவரது தங்கை அமின்டா டொலிடானோ (AMINTA TOLEDANO - **23**), சகோதரர் ஜாக் (**28**), அவரது தாய் மூவரையும் பாபாவை சந்திக்க அழைத்து வந்தார். (தந்தை பல ஆண்டுகளுக்கு முன்பு காலமானார்.) டிலியாவின் சகோதரி, மின்டா (MINTA) என்று அழைக்கப்பட்ட அவர், ஒரு முறை பாபாவுடனான தனது முதல் சந்திப்பை நினைவு கூர்ந்தார்:

எனது சகோதரி டிலியா, பாபாவைத் தியேட்டரில் சந்தித்தபோது, முற்றிலும் எதிர்பாராத பேரதிர்ச்சிக்கு உள்ளானார். 'நான் அவரை சந்திக்க விரும்புகிறேனா' என்று அவள் என்னிடம் கேட்க, நானும் 'ஆம்' என்று பதிலளித்தேன். அவரைப் போல் ஆன்மீகத்தில் எனக்கு அவ்வளவு ஈடுபாடு இல்லை என்றாலும், அவரைக் கவர்ந்த பாபாவின் அம்சங்களை எனக்கு எடுத்துக் கூறியதும், நானும் பாபாவை சந்திக்க விரும்புவதாகக் கூறினேன்.

கிட்டியின் இல்லத்தில் பாபாவை முதன்முதலில் பார்த்தபோது, நான் வெகுவாக அதிர்ந்து போனேன். ஏன் என்று என்னால் சொல்ல முடியாது; திடீரென எனது கண்களை மறைத்த கண்ணீரை என்னால் தடுக்க முடியவில்லை. அப்போது பாபா, அவரது எழுத்துப்பலகையில், "**அவர் ஏன் அழுகிறார், என்ன வேண்டும் என்று கேளுங்கள்**" என்றார்.

நான் தன்னிச்சையாக, "ஏனெனில் நீங்கள் மிகவும் அழகாக, அற்புதமாக இருக்கிறீர்கள்" என்று கூறினேன். அந்நேரத்திலிருந்து, நான் அவருடன் அமர்ந்து, அவரையே பார்த்துக் கொண்டிருக்க விரும்பினேன்; நான் எதுவும் கேட்க விரும்பவில்லை."

பாபா நீள தலைமுடியுடன் ஒரு வெள்ளை அங்கி அணிந்திருந்தார்; அவரது முகம் மிகவும் அழகாக இருந்தது. அவரைச் சுற்றி, உண்மையில் விவரிக்க முடியாத ஓர் ஒளி நிரம்பி இருந்தது. அவரோடு இருக்கையில், என்னால் வேறு எவரையும் பார்க்க முடியவில்லை; என்னால் எவரையும் அல்லது வேறு எதையும் நினைக்கவும் முடியவில்லை.

என்னுடைய சகோதரன் ஜாக், அறிவுபூர்வமாக சிந்திக்க நேர்ந்ததால் பாபாவை அணுக முடியவில்லை; தாயார் சந்தேக கண்களால் பார்த்ததால் பாபா விஷயத்தில் கலந்து கொள்ளவில்லை. நான் பாபாவை என்னால் முடிந்த ஒவ்வொரு முறையும் சந்தித்தேன்.

டிலியாவின் முதல் தனிப்பட்ட நேர்காணலில், பாபா அவரிடம், "**உங்களை இங்கு அழைத்து வந்தது தற்செயலாக நிகழ்ந்தது அல்ல**" என்று கூறினார்.

ஸில்லா க்ளூஸின் எட்டு வயது சகோதரி விர்ஜீனியா - ஜென்னி (VIRGENIA - JENNY) தனது சித்தி கிட்டியிடம் குழந்தையின் அப்பாவித்தனத்துடன் கூறினாள், "நான் பாபாவைக் கட்டி அணைத்து முத்தமிட்டிருப்பேன், ஆனால் அவரது மீசை இடையே வருகிறது. நான் பாபாவை நேசிக்கிறேன், ஆனால் அவரது மீசையை நான் விரும்பவில்லை"

கிட்டி இது குறித்து பாபாவிற்குத் தெரிவித்ததும், அவர் ஜென்னியைத் தனது அருகில் அமர வைத்து, அதிக கவனம் செலுத்தினார். ஒரு முறை பாபா சிறுமியிடம், "நான் எனது மீசையை சீர் செய்து வெட்டி விடட்டுமா?" என்று கேட்க, சிறுமி ஆம் என்றதும், பாபா அப்படியே செய்தார்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் 1960-ல், ஜென்னி க்ளூஸ் பாபாவுடனான தனது முதல் சந்திப்பை விவரித்தார்:

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததை, இன்றும் நான் தெளிவாகப் பார்க்கிறேன். பாபா ஒரு நிமிடம் என்னை அவர் அருகே அமரச் செய்து, கடிகாரத்தை முன்னால் வைத்தார். நான் பேசவில்லை, பாபாவையே உற்று நோக்கினேன். நேரம் முடிந்ததும் அவர் என்னைப் போகச் சொன்னபோது, நான் செல்ல விரும்பாமல், அழத் தொடங்கினேன். பாபாவின் அற்புதமான கண்களையும் அவற்றின் வெளிப்பாட்டையும் - நான் ஒருபோதும் மறக்கவில்லை.

கிட்டியின் தாயார் ஹெலினாவிடம் பாபா ஒரு முறை '**நீங்கள் என்னிடம் ஏதேனும் கேட்க விரும்புகிறீர்களா**' என்று கேட்டார். "நான் உங்களை எவ்வாறு அழைக்க வேண்டும்? 'பகவான் பாபா' (லார்ட் பாபா) என்றழைக்கலாமா?" என ஹெலினா கேட்டதும், பாபா புன்முறுவலுடன் சரி என்று பதிலளித்தார். ஹெலினா அப்போது, "நான் ஏழை, ஆதரவற்ற மற்றும் முதியவர்களுக்குத் தங்குமிடம் வழங்கும் ஒரு தொண்டு நிறுவனத்தின் செயலாளராகப் பணிபுரிந்து, அவர்களுக்கு சேவை செய்ய உதவுகிறேன்." என்றார்.

"**மிகவும் நல்லது**," பாபா சைகையால் தெரிவித்தார், "**அந்த சேவையைத் தொடருங்கள்.**"

"அங்கு இருப்பவர்கள் உங்களை சந்தித்து உங்கள் ஆசீர்வாதங்களைப் பெற விரும்புகிறேன்" என்று ஹெலினா கூறினார்.

"**அவர்கள் என்னைப் பார்க்க நேர்ந்தால், அது அவர்களுக்கு மிகப் பெரிய நன்மை. நான் அவர்களுக்கு அதைப் புரிய வைப்பேன்.**"

"ஆனால் அவர்களால் இங்கு வர முடியாது; அவர்கள் மிகவும் வயதானவர்கள், அவர்களில் பலர் பலவீனமானவர்கள்" என்றதும், பாபா அவர்களைப் பார்க்க வருவதாக உறுதி அளித்து ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

"உங்கள் அன்பிற்கு நான் மிகவும் நன்றியுள்ளவளாக இருக்கிறேன்" என்றார் ஹெலினா. அனைவரும் ஆச்சரியப்பட்டனர்; அப்போது பாபா விளக்கினார், "**ஏழைகள், நான் முதலில் கருத்தில் கொள்ளத் தகுதியானவர்கள். நான் மதராஸுக்குச் சென்றபோது, செல்வாக்கு மிக்க, சிறப்பு வாய்ந்த, பக்தியுள்ள மக்கள் எனது தரிசனத்திற்காக வந்தனர்.**

**ஆனால், அவர்களை விட்டுவிட்டு, வெளி வட்டாரத்தில் வாழும் தீண்டத்தகாதவர்களைப் பார்க்கச் சென்றபோது, தாழ்த்தப்பட்ட ஹரிஜன மக்களிடையே அனைவரும் என்னை ஆச்சரியத்துடன் பார்த்தனர்**."

அடுத்த நாள் காலையில் மெஹர் பாபா, துருக்கி மற்றும் அமெரிக்கா செல்லும் பயணம் தொடர்பாக, பாரசீக தூதரகம் சென்றபோது இரண்டு ஆவணங்களும் உடனடியாக வழங்கப்பட்டன. அன்று பிற்பகலில் பாபா, மெரடித்தின் தாயாரை சந்திக்கச் சென்றார்.

திரும்பி வருகையில் பாபா, கேம்பிரிட்ஜ் ஸர்க்கஸுக்கு (CAMBRIDGE CIRCUS) வெளியே, 26, மேற்குத் தெருவில் அமைந்த மார்கரெட், மேபெல் இருவரும் நடத்தும் பாலே பள்ளிக்கூடமான 'கிராஸ்க் ஸ்டுடியோ'விற்கு விஜயம் செய்தார். இளம் மாணவர்கள் ஆர்வத்துடன் பார்த்து, அவரைப் பற்றி விசாரித்து, பாபாவின் அற்புதமான முகம் மற்றும் அம்சங்களைப் பற்றிப் பேசிக் கொண்டனர். அன்றிரவு, பாபா ஓர் அனாதை மற்றும் அவளது பயனாளியைப் பற்றிய 'டாடி-லாங்-லெக்ஸ்' (DADDY-LONG-LEGS) என்ற திரைப்படத்தைப் பார்க்கச் சென்றவர், பாதியிலேயே தியேட்டரை விட்டு வெளியேறினார்.

செப்டம்பர் 29 அன்று பல லண்டன் மக்கள் - கவிஞர்கள், விஞ்ஞானிகள், அரசியல்வாதிகள், இசைக்கலைஞர்கள் மற்றும் பலர் - பாபாவை சந்திக்க டேவியின் இல்லத்திற்கு வந்தனர்.

அவர்களில் ஒரு பிரபல பத்திரிகை ஆசிரியர் விவியன் (VIVIAN) என்பவரும் வந்திருந்தார். அனைவருக்கும் பாபா, அவரது அன்பான வரவேற்பை அளித்து, "**எதிர்காலத்தில், மக்கள் உலகப்பொருட்களை, அவர்கள் இன்று பார்ப்பது போல் அல்லாமல், அதன் உண்மை தன்மையை புரிந்து கொள்ளத் தொடங்குவார்கள்**" என்றார்.

விவியன் பல கேள்விகளை எழுப்பினார், அதற்கு பாபா அவரது எழுத்துப்பலகை வழியாக பதிலளித்தார்; அவர்களின் உரையாடல் பின்வருமாறு:

"நாம் சிறந்த, மேன்மையான காலங்களில் வாழ்கிறோம். வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றம் நிகழ்ந்துள்ளது, என்னால் இயன்ற உதவியைச் செய்ய விரும்புகிறேன்" என்று விவியன் கூறினார்.

"**உங்கள் சிந்தனைகள் மிகவும் உன்னதமானவை; நீங்கள் கூறுவது அனைத்தும் உங்களுக்குத் தெரியாமலே உங்களுக்கு உதவியாக இருக்கும்**" என்று பாபா கூறினார்.

"ஐரோப்பாவின் அனைத்து நாடுகளும், ஒன்றிணைந்த ஐரோப்பாவாக உருவானால், அது மிகவும் வரவேற்கத்தக்கது என்று நான் நம்புகிறேன்."

"**இது மிகவும் நல்ல யோசனை**" என்று பாபா ஒப்புக்கொண்டார்.

விவியன் தொடர்ந்து வினவினார், "காந்தி இங்கு வருவதால், ஒற்றுமை மற்றும் ஆன்மீக சூழல் நிலவும் வாய்ப்பு உள்ளது என்று நம்புகிறேன். மஹாத்மா காந்தி குறித்து உங்கள் கருத்து என்ன?"

**"அவர் ஒரு நல்ல மனிதர். கப்பலில் பயணம் செய்யும் போது அவர் என்னிடம் வந்து எனது ஆலோசனைகளை நாடினார். அவருடைய அரசியல் வாழ்க்கைக்குப் பின்னர், அவர் என்னுடன் வந்து 'தனிமை வாழ்வு' வாழ வேண்டும் என்று கூறினேன்; அவரும் முயற்சிப்பதாகக் கூறிச் சென்றார்."**

அப்போது விவியன், "ஆன்மீக ஊழியர்கள் அரசியலில் ஈடுபடுவது நல்லதில்லையா?" என்று வினவினார்.

**"ஆமாம், ஒரு வழியில் நல்லதல்ல. இறைவனை அடையும் இலக்கு, வெகு தொலைவில் உள்ளது, அது கற்பனைக்கும், புத்திக்கும் அப்பாற்பட்டது. இறையுணர்வை எய்த, ஒருவர் அறிவுத்திறனுக்கு அப்பால் செல்ல வேண்டும். வாழ்வின் நோக்கமே அதுதான்; ஒரு சில வீரர்கள் மட்டுமே அந்த இலக்கை அடைய முடியும்"** என்று பாபா உறுதிப்பட எடுத்துரைத்தார்.

"எங்கள் பலவீனங்களையும் குறைகளையும் முறியடிக்க சில வழிமுறைகளைக் காட்ட முடியுமா?"

**"தன்னலமற்ற சேவை, பக்தி, அன்பு இவற்றின் மூலம் - ஒன்று, பிறருக்கு சேவை செய்வதில் நம்மால் இயன்றவரை சிறந்ததையே செய்வது, மற்றொன்று, உலகில் இருந்து கொண்டு பட்டும் படாமலும் பற்றற்று இருப்பது!"** என்று பாபா எடுத்துக்கூறினார்.

விவியன் உடனே, "பல்வேறு செயல்களில் ஈடுபடும் ஒருவரைப் பொறுத்தவரை, எந்தச் செயல்பாடு மிகவும் முக்கியமானது, எதைக் கைவிடுவது என்பதை எப்படித் தெரிந்து கொள்வது? நோக்கம் நல்லதாக இருந்தாலும் கூட, அதனால் அவர் கவலைப்படுகிறார்" என்று கூறினார்.

**"ஆனால் ஒருவர் ஒருபோதும் கவலைப்படக்கூடாது. உங்கள் கடமைகளைத் தன்னலமின்றி செய்து, அறிவாற்றலின் எல்லைக்கு அப்பால் செல்ல முயற்சி செய்யுங்கள். தெய்வீக உத்வேகம், கருத்து மற்றும் எல்லையில்லா உணர்வின் அனுபவம் ஆகியவற்றிற்கான தாகத்தைப் பெருக்கி, தெய்வீக கடலில் ஒன்றிணையுங்கள்!"** என பாபா அவருக்கு அறிவுறுத்தினார்.

விவியன் அவரது கேள்விகளைத் தொடர்ந்தார்:

"நான் எப்படி அத்தகைய நிலையை அடைய முடியும்?"

**"தன்னலமற்ற சேவையில் ஈடுபட்டு, தூய்மையாக வாழ்வதன் மூலம்; கடவுள் மீது காட்டும் பக்தி மற்றும் அன்பினாலும் அதை அடையலாம்"** என்றார் பாபா.

"அதை எப்படிச் செய்வது என்று எங்களுக்குக் காட்ட முடியுமா? நாமே ஏதாவது செய்ய முடியுமா? உணவு பற்றி ஏதாவது அறிவுறுத்தல்கள் உள்ளதா?"

மெரடித்தின் ஆலோசனைபடி, பாபா பதிலளித்தார், **"நீங்கள் மாமிசம் உண்பதைத் தவிர்க்க முடிந்தால், அதைச் செய்யுங்கள். ஆனால் அது உங்கள் அன்றாட நடவடிக்கைகளையும் ஆரோக்கியத்தையும் சீர்குலைக்கக் கூடாது."**

"ஒவ்வொரு நாளும் ஏதாவது செய்வதை வழக்கத்தில் கொள்ள வேண்டுமா?"

பாபா இவ்வாறு அறிவுறுத்தினார்: "**காலையில் உங்கள் முகத்தைக் கழுவி சுத்தம் செய்த பின்னர், என்னை ஐந்து நிமிடங்கள் தியானம் செய்யுங்கள். தனியாக, சலிக்காமல், தனிமைப்படுத்தப்பட்ட இடத்தில் செய்யுங்கள். நான், உங்களை ஆன்மீக ரீதியில் வழிநடத்துவேன், வார்த்தைகளால் அல்ல. நான் உங்களோடு இருப்பதை, நீங்கள் உணர்வீர்கள்.**"

இந்த சந்தர்ப்பத்தில், ஹோல்ஸ் (HOLLS) என்றழைக்கப்பட்ட இசைக்கலைஞர், சில நேரங்களில் இசையமைக்க இயலாமல் மன உளைச்சலுக்கு ஆளானார். பாபா அவரை ஆறுதல்படுத்தி, "**நீங்கள் இதை நினைத்து, கவலைப்படவோ அஞ்சவோ வேண்டாம். உண்மையில், கவலைப்பட உலகில் எதுவும் இல்லை! இது பலவீனம். ஒருபோதும் கவலைப்பட வேண்டாம். நான் உங்களுக்கு ஆன்மீக ரீதியில் உதவுவேன் - வார்த்தைகளால் அல்ல!**" என்று கூறினார்.

அதற்குப் பிறகு, ஹோல்ஸின் மனைவி இவ்வாறு எடுத்துக் கூறினார்: "நான் முதலில் சந்தேக கண்களால் பார்த்தேன், ஆனால் உங்களை சந்தித்த பிறகு, சந்தேகங்கள் மட்டுமின்றி, பல ஆண்டுகளாக என்னைத் தொந்தரவு செய்த வியாதியும் என்னை விட்டு விலகியது.

"நான் சில நேரங்களில் மனதளவில் குழப்பமாகவும், உடல் ரீதியாக உயிரோட்டம் இல்லாதது போலவும் உணர்கிறேன். மாமிசம் சாப்பிடுவதால் கூட இருக்கலாம் என்று நினைக்கிறேன்."

பாபா அந்தப் பெண்மணியிடம், "**இங்கே உணவு அல்லது மாமிசம் உண்பது குறித்த கேள்விக்கு இடமில்லை. நீங்கள் அதை உண்ணலாம். உங்கள் இதயம் தூய்மையானது, அது போதும். ஒன்றை மட்டும் செய்யுங்கள், கவலைப்படுவதை முதலில் நிறுத்துங்கள். நான் உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் உதவுவேன்**" என்று கூறினார்.

இதற்கு முன்பு குறிப்பிட்டபடி, டேவியின் மூத்த மகள் மே க்ளூஸ், (42 வயது), பல முறை பாபாவை சந்தித்தார். எதுவாயினும், ஹெர்பெர்ட், கிட்டி போலல்லாமல், மே க்ளூஸ், பாபா மீது நம்பிக்கை இல்லாமல், சந்தேகத்துடன் அவரை எதிர்கொண்டார், "எனக்கு கிறிஸ்து மீது நம்பிக்கை உள்ளது; வேறு எந்த கிறிஸ்துவும் இல்லை என்று நான் நம்புகிறேன்; மேலும் எதிர்காலத்தில் இதுபோன்ற வேறு எவரும் இருக்கவும் மாட்டார்கள். இயேசு மட்டுமே இருந்தார், என்றென்றும் அவர் ஒருவரே கிறிஸ்துவாக இருப்பார்! மேற்கத்திய நாடுகளில் கிறிஸ்தவம் பிரதானமாக இருப்பதால், அது கிழக்கிலும் உயர்ந்த மதமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது."

அதற்கு பதிலளிக்கும் விதத்தில் பாபா, எழுத்துப்பலகை வழியாக, "**இதையெல்லாம் உங்களுக்கு விளக்க நீண்ட நேரம் பிடிக்கும், ஆனால் நான் கிறிஸ்துவின் நிலையை அடைந்து விட்டேன், நானே கிறிஸ்து என்பதை உங்களுக்கு உணர்த்துவேன்**" என்று பதிலளித்தார்.

“இது அசாத்தியம்!” என்று அவர் கூச்சலிட்டார். “நான் உங்களை நம்பவில்லை. நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றும் எனக்குப் புரியவில்லை.”

பாபா பதிலளித்தார்: “**நான் அதை உங்களுக்கு விளக்குவதானால், நீங்கள் அனைத்தையும் புரிந்து கொள்வீர்கள். சத்தியம், மதத்திற்கு மேலானது. சத்தியம், புத்திக்கு அப்பாற்பட்டது; அதை, அன்பினால் மட்டுமே அடைய முடியும். கிறிஸ்து, அந்தத் தெய்வீக அன்பின் நிலையை அடைந்தார். நானும் அதே நிலையில் இருக்கிறேன் என்ற அனுபவம், என்னில் பரிபூரணமாக இருக்கிறது. நான் எப்பொழுதும் கிறிஸ்துவின் நித்திய ஆனந்த நிலையில் இருக்கிறேன்!**” பாபாவின் எளிமையான பதிலும் புன்னகையும், மே க்ளூஸின் சந்தேகத்தை அகற்றத் தொடங்கியது.

ஏராளமான மக்கள் மெஹர் பாபாவைப் பார்க்க வந்திருந்தனர்; அவர்கள் அனைவரையும் பாபா அன்புடன் ஆசீர்வதித்தார். நெருங்கியவர்கள் எந்தக் கேள்வியையும் எழுப்பாமல், அவருடைய உள் தொடர்பால் கற்றுக்கொண்ட இறை கீதத்தை இசைக்கும் ஆர்வத்தில் இருந்தனர். அத்தகைய கீதத்தை இசைக்கத் தெரியாதவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு, பாபா பொறுமையாக பதிலளித்தார். பலர் கேள்விகள் கேட்காமல், கீதங்களையும் இசைக்காமல், அமைதியாக, குருநாதர் அருகிலிருந்து இறை கீதத்தை ரசித்து, தத்தமது ‘பங்கை’ எடுத்துச் சென்றனர்.

பாபாவின் மேற்கத்திய தோட்டத்துப் பறவைகளில் மார்கரெட், கிட்டி, ஸில்லா, டிலியா, மின்டா, பர்டம், மேபெல், குயன்டின், கிம், டாம், இனிட் ஆகியோர் அடங்குவர். இந்தக் குழுவிற்கு பாபா ஒரு முறை இவ்வாறு வெளிப்படுத்தினார், “**நான் அளவிறுதியற்ற அறிவு, அன்பு, பேரின்பம் அனைத்திற்கும் ஆதாரமாக இருக்கிறேன். அன்பிற்கு ஆதாரமான என்னை நேசித்து, மகிழ்ச்சியாக இருங்கள் - கவலைப்பட வேண்டாம்.**”

லண்டனில் அவரைப் பார்க்க வந்த பல நூறு பேரில், பாபா இந்த சிலருக்கு மட்டுமே இறை கீதத்தைக் கற்றுத் தந்தார். பிறர் மனங்களில் கீதத்தைக் கேட்கும் ஏக்கத்தை உருவாக்கினார். ‘கிம்கோ’ என்றழைக்கப்பட்ட இந்த சிறிய குழு, பாபாவை சூழ்ந்த பரிபூரண நிசப்தத்தில் மூழ்கினர். கிம் நினைவு கூர்ந்தது போல், இது ஓர் அற்புதமான நேரம்: “நாங்கள் பாபாவின் ஆனந்தமான மனிதத் தன்மையின் அன்பிலும் ஒளியிலும் மட்டுமே வாழ்ந்தோம். மேலும் மௌனம், எந்த இசை, வசனம், கவிதையை விடவும் முழுமையாக இருந்தது - அன்பும் ஒளியும் நிறைந்த மௌனம், உண்மையான அர்த்தத்தை வெளிப்படுத்தியது. அன்பால் உருவாக்கப்பட்ட உடல் நம்மிடையே வாழ்ந்து வந்தது.”

பல ஆண்டுகளுக்குப் பிறகு, கிம் இந்த நாட்களைத் தொடர்பு படுத்திக் கூறியதாவது: “ஆரம்பகால ஆங்கிலேய அன்பர்கள் மீது, பாபா ஏற்படுத்திய தாக்கத்தை வெளிப்படுத்துவது கடினம். பாபாவின் முன்னிலையில் அவரது பார்வை, சுற்றியுள்ள அனைத்தையும் மூடி மறைத்து, இல்லாமல் செய்தது. சூரியனின் தாக்கத்தைக் குறித்து பிளேட்டோ கூறியது நினைவுக்கு வருகிறது.

சூரியனின் பிரகாசத்தில் ஒருவர் நட்சத்திரங்களைக் காண்பதில்லை. நாம் அனைவரும் வாழ்ந்த இந்த வசீகர உலகில் அன்பிற்குரியவரைத் தவிர வேறு எதுவும் இல்லை.

லண்டனில், ஒரு நாள், மாலை நேரத்தில், மெஹர் பாபா, 'குயின்ஸ் ஹாலில் பிபிசி சிம்ஃபொனி (BBC SYMPHONY) இசைக்குழு'வின் இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்; ஆனால், பாபா பாரம்பரிய இசையை ரசிக்கவில்லை. இடைவேளையில், அவரை சந்திக்க விருப்பம் தெரிவித்த நடத்துனர் 'ஸர் ஹென்றி ஜே. உட்' (SIR HENRY J. WOOD) என்பவரை சந்திக்க, பாபா மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஹென்றியின் இரண்டு மகள்களுக்கு கிட்டி பியானோ ஆசிரியராக இருந்தார்.

மே க்ளூஸ், தொடர்ந்து பாபாவின் மீதுள்ள சந்தேகத்தால், தங்கை கிட்டியிடம், "நீங்கள் கண்ணீர் சிந்துவதெல்லாம் என்னைப் பொறுத்தவரையில் வெறும் பாசாங்குத்தனம். பாபா மீதான உங்கள் அன்பை வெளிப்படுத்த, நீங்கள் நியாயமற்ற முறையில் அழுகிறீர்கள். இதை அன்பு என்று சொல்ல முடியாது; ஆனால் இது ஒரு போலி, கபடநாடகம்! அனைத்தும் சுத்த பாசாங்குத்தனம்! இத்தகைய காட்சிகளைக் காண எனக்குக் கஷ்டமாக உள்ளது" என்று கூறினார்.

தனது சகோதரியின் குற்றச்சாட்டுகளால் ஆத்திரமடைந்த கிட்டி, அதை பாபாவிடம் கூறினார். அக்டோபர் 1ஆம் நாள், பாபா, மே க்ளூஸை அழைத்து, "**இது பாசாங்குத்தனம் அல்ல. நீங்கள் பார்க்கும் கண்ணீர், கிட்டியின் இயல்பான அன்பின் விளைவு, அதை அவரால் தடுக்க முடியாது**" என்று விளக்கினார்.

மெஹர் பாபா, மே க்ளூஸிடம், "**நீங்களும் இரண்டு நாட்களுக்குள் என்னை நேசிக்கத் தொடங்குவீர்கள்**" என்று எச்சரிக்கை கலந்த தொனியில் கூறினார். இதைக் கேட்டு வாய் விட்டு சிரித்த மே க்ளூஸ், அவரை நம்பவில்லை. ஆனால் அன்றிரவு, அவர், பலருடன் பாபா முன்னிலையில் அமர்ந்திருந்தபோது, திடீரென, கட்டுப்படுத்த முடியாத அளவுக்குக் கண்ணீர் வழிந்தது, மூன்று மணிநேரம் தொடர்ந்தது. இந்த விவரிக்க முடியாத அனுபவம், அவரைப் பணிவுடன் இருக்கச் செய்தது.

அதே நாளில் பாபா, மார்கரெட், மேபெல் நடத்தி வந்த நடன ஸ்டுடியோவில் பாலே வகுப்பைப் பார்வையிடச் சென்றார். இந்த சந்தர்ப்பத்தில், பாபா, மார்கரெட்டிடம், "**உங்களின் இந்த நடனம் என்னுடையது**" என்று குறிப்பிட்டார்.

கிட்டியின் தாயார் ஹெலினாவிற்கு வழங்கிய வாக்குறுதியின்படி, பாபா ஏழைகளுக்கான விடுதிக்குச் சென்று முதியோர்களை சந்தித்தார். திருமதி டேவி கூறியது போல, முதியோர்களில் பலர் பார்வையற்றவர்கள், ஊமை அல்லது காது கேளாதவர்கள். குருநாதரின் வழிகள் அவருக்கே உரித்தானவை. இந்த முதியோர்களுடன் பாபா நீண்ட நேரம் '**பேசினார்**'; அவர்களுக்கான செய்திகளைத் தனது எழுத்துப்பலகை வழியாகத் தெரிவித்தார். அவர் வெளிப்படுத்தியது இறை

அன்பு; அது மௌன வார்த்தைகளை விட மேலானது. அவரது மொழி அனைவரின் இதயங்களையும் தொடக்கூடியது, மேலும் யார் ஒருவருக்காக அவர் என்ன மொழிந்தார் என்பதை அனைவரும் புரிந்து கொண்டனர்.

ஹெலினா எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார் என்பதையும், விடுதி இல்லத்தில் வயதான ஆண்கள், பெண்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள் என்பதையும் மார்கரெட் புரிந்துகொண்டார். இந்தக் கைவிடப்பட்ட ஆத்மாக்கள், கடவுளை, கடவுளின் கருணையை மட்டுமே சார்ந்து இருந்தன. கடவுளின் வருகையால், அவர்களுடைய ஏழ்மை நிலைமை சமரசம் அடைந்தது. பாபா ஒவ்வொருவருக்கும் ஆறுதலான வார்த்தைகளையும், சிலருக்கு ஒரு சில அறிவுறுத்தல்களையும் வழங்கினார். வயதான, காது கேளாத, கண்பார்வையற்ற ஒருவருக்கு, பாபா, "**இரவில், ஒரு டம்ளர் வெதுவெதுப்பான நீரை எடுத்துக் கொள்ளுங்கள், அதை அருந்தும்போது, எனது கைகளின் உணர்வை உங்கள் நினைவுக்குக் கொண்டு வாருங்கள், நீங்கள் நன்றாக உணர்வீர்கள்**" என்று கூறினார். அந்தப் பெரியவர் பின்பு படுக்கையை விட்டு எழுந்து, வீடு திரும்புவதற்கு ஆயத்தமானார். அது போல், ஒரு பெண்மணிக்கு, பாபா ரோஜா இதழைக் கொடுத்து, அதை, அவரது தலையணைக்கு அடியில் வைக்குமாறு அறிவுறுத்தினார்.

மெஹர் பாபா, டேவியின் இல்லத்திற்குத் திரும்பி வந்து கிட்டியிடம், "**நான் இங்கிலாந்தில் செய்த அனைத்திலும், இந்த ஏழைகளின் இல்லத்திற்கு விஜயம் செய்தது என்னைப் பெரிதும் மகிழ வைத்தது**" என்றார்.

இதற்கு முன்னதாக 1931 செப்டம்பர் 28ஆம் நாள், மஹாத்மா காந்தி சாஞ்சிக்கு எழுதியிருந்தார்: "ரஸ்ஸல் சாலைக்கு வருவது இப்போது என்னால் இயலாத காரியம்; அவசர வேலைகளில் மும்முரமாக இருக்கிறேன். 88, நைட்ஸ்பிரிட்ஜ் (KNIGHTSBRIDGE) முகவரிக்கு மெஹர் பாபா வருவார்களா? அவர் விரும்பினால், தயவுசெய்து வாருங்கள், அல்லது தொலைபேசியில் (ஸ்லோன் 4232) என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்.

"வட்டமேசை மாநாட்டுப் பணிகள் எனது பெரும்பாலான நேரத்தை எடுத்துக்கொள்கின்றன. உண்மையில், எனது முழு நேரமும் அதிலேயே சென்றுவிடுகிறது; ஆனால், நான் மெஹர் பாபாவைப் பார்க்க வேண்டும்; சிரமம் பாராமல் நீங்கள் இங்கு வரமுடியுமானால்... நான் பாபாவைப் பார்த்தாக வேண்டும்."

காந்தி, சாஞ்சியிடம் தொலைபேசியில் பேசினார், "நான் பாபாவைப் பார்க்க மிக்க ஆர்வமாக உள்ளேன். அது ஐந்து நிமிடங்களுக்கு மட்டுமே என்றாலும், நான் மகிழ்ச்சியடைவேன். நீங்கள் அவரை உங்கள் தோள்களில் சுமந்துவர வேண்டியிருந்தாலும் - தயவு செய்து அழைத்து வாருங்கள்!"

1931 அக்டோபர் 2ஆம் நாள், இது, காந்தியை மீண்டும் சந்திக்க வேண்டிய நேரம் என்று பாபா குறிப்பிட்டார். மாலை எட்டு மணிக்கு, ருஸ்தம், சாஞ்சி இருவருடன், பாபா லண்டன் தொழிலாளர் சங்கத்தின் கிழக்குப் பாகத்தில், 'ப்ரோம்லி-பை-பௌ' (BROMLEY-BY-BOW) -வில் அமைந்த கிங்ஸ்லி ஹால் (KINGSLEY

HALL) சமூக மையத்திற்குச் சென்றார். அவர்கள் வந்த வேளையில், காந்தியை ஏராளமான மக்கள் சூழ்ந்திருப்பதைக் கண்டனர். பாபா நுழைவதைப் பார்த்த காந்தி, எழுந்து நின்று மிகுந்த பயபக்தியுடன் வரவேற்றார், பின்னர் அவரை அனைவருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார். காந்தி, பாபாவுடன் தனிப்பட்ட முறையில் பேச விரும்பினார், ஆனால் அவர்களது சந்திப்பு அனைவரின் முன்னிலையில் மண்டபத்தில் நடந்தது; உரையாடல் பின்வருமாறு:

**"நான் பன்னிரண்டு நாட்களாக டெவன்ஷர் ரிட்ரீட்டில் தங்கி இருந்தேன், நாளை, நான் துருக்கிக்குச் செல்ல இருக்கிறேன்"** என்று பாபா குறிப்பிட்டார்.

இதைக் கேட்டு ஆச்சரியத்தில் காந்தி, "ஏன்?" என்று வினவினார்.

"**ஆன்மீகக் காரணங்களுக்காக**," பாபா பதிலளித்தார், "**துருக்கியின் சூழ்நிலைகள் மிகவும் மோசமாக உள்ளன, மக்கள் மேலும் மேலும் உலகப்பொருட்கள் பக்கம் சாய்ந்து கொண்டிருக்கின்றனர். இதில் மாற்றத்தைக் கொண்டுவர நான் அங்குச் செல்ல வேண்டியது அவசியம்.**"

மெஹர் பாபா அவரது மேற்கத்திய வருகை குறித்து கருத்துத் தெரிவிக்கையில், "**இங்கிலாந்து மக்கள் மிகவும் இனிமையாக இருப்பதைக் காண்கிறேன். இங்கு என்னிடம் வந்தவர்கள் அனைவரும் நன்றாகப் பழகினர். ஆங்கிலேயர் ஆன்மீகத்தைப் பொருட்படுத்தவில்லை என இந்தியாவில் சிலர் கூறுகின்றனர்; ஆனால் என்னிடம் வந்தவர்கள் மிகவும் உண்மையும் நேர்மையும் மிக்கவர்கள். சிலர் என்னைப் பார்த்து, கைகளைக் குலுக்கிய அடுத்த கணமே, கண்ணீர் வழிய கலங்கினர். ஓர் உயர் சமுதாயத்தைச் சேர்ந்த பெண்மணி, முதலில் நான் கைகளை நீட்டியதும், அவர் கைகளைத் தராமல் பின்வாங்கினார், ஆனால் எனது சொற்பொழிவுக்குப் பின்னர், அவர் தானே முன்வந்து, எனது கைகளைப் பற்றிக்கொண்டு கண்ணீர் வடித்தார்.**

"**ஒரு பெண் கலைஞர் என்னிடம் வந்து, 'நீங்கள் எவ்வளவு அழகாக இருக்கிறீர்கள்! நான் அழகை நேசிப்பவள், ஆனால் எனக்கு, கடவுள் மீது நம்பிக்கை இல்லை. இந்த யதார்தத்தை நான், எனது வாழ்க்கையில் ஏற்றதாகக் கருதுகிறேன். மரணத்திற்குப் பிறகு வாழ்க்கை இல்லை எனவும் நான் நம்புகிறேன்**' என்று கூறினார்.

**நான், கடவுள் உளதாயிருப்பதைக் குறித்து அவருக்கு விளக்கினேன், 'நீங்கள் அழகை விரும்புகிறீர்களா?' அவர் அதற்கு 'ஆம்' என்று கூறியதும், 'அப்படியானால், அழகிற்கெல்லாம் அழகான கடவுளை ஏன் நீங்கள் நேசிக்கவில்லை?' என்று கேட்டேன். அவர் கடவுளை நம்பாததால், அவரை எப்படி நேசிக்க முடியும்? என்று கேட்டார்.**

**'அவர் என்னை நேசிக்க முடியுமா' என்று நான் வினவியபோது, 'ஒரு முறை உங்களைப் பார்த்த பின்னர், யார்தான் உங்களை நேசிக்காமல் இருக்க முடியும்?' என்றார்.**

பாபா இவ்வாறு விளக்கினார்: "**என்னைப் பார்த்ததும் மக்களின் கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது; அவர்கள் கடவுளை நேசிப்பதில்லை என்று சொல்லும்போது கூட என்னை நேசிக்கிறார்கள்.**

"**ஏனெனில், நான் ஆசைகளிலிருந்து முற்றிலும் விடுபட்டவன், தலை முதல் கால் வரை அன்பால் நிறைந்தவன். இது என்னிடம் வரும் அனைவரையும் நேசிக்கத் தூண்டுகிறது** (இது ஒரு பெரிய விஷயம்). **சாதி, மதம், நிறம் எனும் வேறுபாடுகளை மறந்து, அவர்கள் என்னை நேசிக்கிறார்கள். பெரியவர், சிறியவர் எவராக இருந்தாலும், உங்களில் ஆசைகள் இருப்பதால், இதை நீங்கள் செய்ய முடியாது. அத்துடன் அருகருகே, உங்களிடம் நிலைகொண்டிருக்கும் அகந்தை, மக்களை உங்கள் வசம் ஈர்க்காது.**"

"**ஆசைகள் அன்பைக் கொல்லும்; நான் அன்பின் மொத்த உருவம் - தலை முதல் பாதம் வரை! அன்பைத் தவிர வேறொன்றுமில்லை. மேலும், நான் அளவிலா ஆனந்தத்தால் நிறைந்திருக்கிறேன், அதை எல்லையற்ற அளவில் அனுபவிக்கிறேன்.**

"**ஆகையால், எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. இந்த அனுபவத்தை நான் பிறருக்கு வழங்க வேண்டியிருக்கும் போதுதான் பிரச்சினை. துருக்கியிலிருந்து நான் (இங்கிலாந்து) திரும்பி வந்த பின்னர் இங்கு இருப்பதைப் பற்றி சிந்திப்பேன், ஏனெனில், இந்த அன்பின் மூலம் மக்களை விழிப்படையச் செய்ய வேண்டும். என்னிடம் வந்த அனைவரும் நேர்மையும், உண்மையும் உடையவர்களாக இருப்பதால், அவர்களை, ஆன்மீகப் பாதையில் வழிநடத்த வேண்டியது அவசியம்.**

"**இந்தியாவில் ஆன்மீகம் தழைத்தோங்கி இருந்தாலும், அங்கு நிறைந்துள்ள பண்டிதர்களின்** (பாதிரியார்கள், முல்லாக்கள்) **ஆதிக்கம், கை ஓங்கி உள்ளது. இறைவன்பால் காட்டும் அன்பு ஒருபுறம் தள்ளப்படுவது மட்டுமல்லாமல், அவரைத் தேடுவது கூட புறக்கணிக்கப்படுகிறது. இது தவிர, இந்தியாவின் ஒவ்வொரு சாலையிலும், மூலை முடுக்குகளிலும் அவர்களின் வாழ்க்கை முறையைப் பற்றிப் பெருமை பேசும் சாதுக்களை நாம் காண்கிறோம்; மேலும்** (இந்தப் போலி குருநாதர்களால்) **இதுபோன்ற மோசடித்தனம் பரவலாக இருப்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இங்கிலாந்திலும் இதுபோன்ற கபட வேடதாரிகள் உள்ளனர். மக்கள் எல்லாவற்றையும் பரிசோதிக்கிறார்கள் - மரணத்தைக் கூட!**"

"இதுபோன்ற விஷயங்கள் அனைத்தும் சில பாதிரியார்களின் சடங்கு சம்பிரதாய முறைகள் காரணமாக நிகழ்கின்றன" என்று காந்தி சுட்டிக்காட்டினார்.

"**மிகவும் உண்மை,**" பாபா ஒப்புக்கொண்டார். "**பாதிரியார் வர்க்கம்** (மதத்திற்கு) **மிகுந்த சேதத்தை விளைவிக்கிறது என்று நான் கூறி வருகிறேன். இங்கிலாந்திலும் பல பாதிரியார்கள் உள்ளனர்; ஆனால் என்னைப் பார்க்க வந்தவர்கள் பலர் பக்தியும் அன்பும் உடையவர்கள், அவர்களோடு பேசுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். எனவே, நான் திரும்பி வந்து சிறிது காலம் இங்கு இருக்க விரும்புகிறேன்.**"

பேச்சின் தலைப்பை மாற்றி, மெஹர் பாபா, காந்தியிடம் கேட்டார்: **“நம்மிடையே நடந்த முதல் பேச்சின் விளைவு என்ன?”**

“எதைப் பற்றி?” காந்தி விசாரித்தார்.

**“இந்து - முஸ்லிம் ஒற்றுமை மற்றும் தனி அல்லது கூட்டு வாக்காளர்களைப் பற்றி.”**

“நான் அதில் பணிபுரிகிறேன், ஆனால் சமரசம் நிலவும் என்பதில் எனக்கு சந்தேகம் உள்ளது. அதை எண்ணி பயமும், கவலையும் அடைகிறேன். மேலும், அடுத்து என்ன செய்வது என்றும் தெரியாமல் இருக்கிறேன்.”

**“தனி வாக்காளர் தொகுதிகள் வழங்குவதானால் அதில் என்ன தீங்கு இருக்கிறது? எதிர்காலத்தில் சில கட்சிகள் அல்லது பிறர், கூட்டு வாக்காளர்களை ஆமோதிக்கலாம் என்பது உறுதி”** என்று பாபா எடுத்துக் கூறினார்.

“நானும் அதைத்தான் விரும்புகிறேன்,” காந்தி தொடர்ந்து கூறினார், “ஆனால் அனைவரும் என்னுடன் உடன்பட வேண்டும், அப்போதுதான் நான் ஏதாவது செய்ய முடியும்.

“அவர்களின் அனைத்து கோரிக்கைகளுக்கும் (அவர்களை ஒன்றிணைக்கும் நோக்கத்தில்) நான் திறந்த மனதுடன் இருப்பதாக அறிவித்துள்ளேன். முதலில் அவர்கள் அனைவரும் ஒன்றுகூடி, பின்னர் என்னிடம் வர வேண்டும், ஆனால் அவர்கள் சிறுபான்மையில் இருப்பதாகக் கூறுகிறார்கள். சிறுபான்மையினராக இருந்தாலும், அவர்களுக்கு உரிமைகள் உள்ளன, அவற்றின் தலைவர்கள் இருக்கிறார்கள்; என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.

“தைரியமுள்ளவர் எதற்கும் அஞ்சமாட்டார். அவர்களும் நாட்டிற்காக துன்பப்பட்டு, சிறைக்குச் சென்றுள்ளனர். நாங்கள் அவர்களை எப்படித் திடீரென வெளியேற்ற முடியும்? அக்காரணத்திற்காக, நான் டாக்டர் அன்சாரியை அழைத்தேன், அவர் வரவிருக்கிறார். அவரை அழைத்திருக்காவிடில் பல தடைகள் வந்திருக்கும். கூட்டு வாக்காளரை ஆமோதிக்கும் நிபந்தனையில் நான் அவரை அழைத்துள்ளேன்.”

காந்தி இவ்வாறு கூறிமுடித்தார், “தூங்கும் ஒருவரை, அவர் மீது குளிர்ந்த நீரைத் தெளிப்பதன் மூலமோ அல்லது அவரைத் தட்டி எழுப்புவதன் மூலமோ விழிக்கச் செய்ய முடியும். ஆனால் தூங்குவது போலப் பாசாங்கு செய்யும் ஒருவரை என்ன செய்ய முடியும்? இது பயனற்றது! இது ஊழலைத் தூண்டுவது! தனி வாக்காளர்களை அவர்கள் விரும்புகிறார்கள், அதே வேளையில் ஆங்கிலேயரின் கைப்பொம்மையாக இருக்கிறார்கள்.”

மெஹர் பாபா அதற்கு பதிலளித்தார், **“ஆனால் இறுதியில், ஆங்கிலேயர்கள் எதையும் வழங்காமல், அதன் மூலம் இந்திய தலைவர்கள் மீது பழியைப் போட்டுவிட்டு, ஏகமனதான உடன்பாடு எதுவும் கிடைக்கவில்லை என்று குற்றம் சாட்டும் வாய்ப்புள்ளது.”**

“அது அப்படித்தான் நட க்கும். எவரும் ஒப்புக் கொள்ளாத போது, ஒருவர் என்ன செய்ய முடியும்?”

அப்போது பாபா கேட்டார், "**இங்கிலாந்து மக்களின் மனநிலை எப்படி உள்ளது?**"

"அரசாங்கமும் அதிகாரத்தில் இருப்பவர்களும் புத்திசாலித்தனமான யுக்தியைக் கடைப்பிடிக்கும் கொள்ளைக்காரர்களைப் போன்றவர்கள், ஆனால் சாமானிய மக்களின் மனநிலை நன்றாக இருப்பது, மிகவும் திருப்திகரமாக உள்ளது. இந்திய விவகார நிலையைக் குறித்து, அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில் சில விதைகளை விதைத்துள்ளோம்; வளர்ந்து கனி தர காலம் பிடிக்கும், அதுவரைப் பொறுமையாக இருப்பதைத் தவிர வேறு வழியில்லை."

"நாம் எதையும் பெறாமல் வெளியேறினால், இங்கு வெறுமனே சுற்றித் திரிவதற்காக வந்தோம் என்று பிரிட்டிஷ் தலைவர்கள் முடிவு செய்வார்கள். நேரம் வரும் வரை நாம் பொறுமை காக்க வேண்டும், ஏனெனில் அரசாங்கத்தில் உள்ளவர்கள் நேர்மையற்றவர்கள். ஆனால் இறுதியில், அவர்கள் நமக்குத் தரவேண்டிய உரிமையைத் தந்தாக வேண்டும். நாங்கள் இப்போது இந்தியா திரும்பிச் சென்றாலும், கைகளை இறுகக் கட்டிக்கொண்டு வெறுமனே இருக்கப் போவதில்லை. சில போராட்டங்களும், கிளர்ச்சிகளும் உருவாகும். நாங்கள் பெரும் கஷ்டங்களை சந்திப்போம், ஆனால் பொறுமையாக இருப்போம்" என்று காந்தி கூறி முடித்தார்.

மெஹர் பாபா, காந்தியிடம், "**நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், இந்தியா மேலதிகமான கஷ்டங்களைத் தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கும், ஆனால் ஆன்மீகக் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, இது மிகுந்த பலனை விளைவிக்கும். துன்பங்கள் மிகையாகும் வேளையில், நன்மைகள் அதிகமாகும்.**"

"அது உண்மை; நானும் அப்படித்தான் நினைக்கிறேன், ஏனெனில் மக்கள் அப்போது சத்தியத்தைப் பற்றி அறிந்து கொள்வார்கள். உள் குழப்பங்களுக்கு அவர்கள்தான் காரணம் என்பதை உணர்வார்கள், அதற்குப் பிறகு குழப்பங்களை விளைவிக்க எவரும் இருக்க மாட்டார்கள்."

"**முற்றிலும் உண்மை, பின்னர் ஒற்றுமை நீடிக்கும். ஆனாலும், இந்துக்கள், முஸ்லிம்களிடையே ஒற்றுமையை நிலைநாட்ட உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள். அதைச் செய்ய முடிந்தால் நல்லது; இல்லையேல் எதுவும் நடக்காது, தேவையில்லாமல் பழியை உங்கள் மீது போட்டு விடுவார்கள்**" என்று பாபா கூறினார்.

அதற்கு காந்தி பதிலளித்தார், "நான் அதைச் செய்கிறேன், அந்த நோக்கில் தொடர்ந்து முயற்சிப்பேன். நான் என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன். நாங்கள் அதிகாரத்தில் இல்லை, நமக்குப் பெயரும் இல்லை; அனைத்தும் கடவுள் சித்தம்."

பாபா தலையசைத்து பின்னர், "**ஏதாவது ஒன்றைக் குறித்து உலகம் உற்சாகத்துடனும், வெறித்தனமாகவும் இருக்கும்போது - இந்தியாவுக்கான இந்த உரிமைப்போராட்டத்தைப் போல, நீங்கள் அனைவரும் இதை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுகிறீர்கள், ஆனால், எனக்கு இது ஒரு**

**தமாஷா, கடந்து செல்லும் ஒரு நிகழ்வு, ஒரு நாடகம். நான் 'மரணத்தை' அனுபவித்ததால் அதை ரசிக்கிறேன். எனவே கவலைப்பட ஒன்றுமில்லை. ஒரு சமூகம் அல்லது தேசத்தின் நிலையை அச்சுறுத்தும் இத்தகைய முக்கியமான கேள்விகள் கூட, ஆன்மீக முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் அம்சங்களைத் தவிர, நடைமுறையில் இது அத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்றே கூறவேண்டும்"** என்று எடுத்துரைத்தார்.

**"ஆன்மீக வாழ்க்கை ஒன்றுதான் உண்மையான வாழ்க்கை. எங்கும் பேரின்பம் நிரம்பி வழிகிறது, இதைத் தவிர வேறொன்றுமில்லை. ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு மணி நேரமும், ஒவ்வொரு நாளும், நான் அதைத் தொடர்ந்து அனுபவிக்கிறேன். இந்தப் பேரின்பம் எல்லோரிடமும் இருக்கிறது. ஆனால் அது 'மூடி' வைக்கப்பட்டுள்ளது, அதன் 'திறவுகோல்' என்னிடம் மட்டுமே உள்ளது. அதனால்தான் உலகில் நடக்கும் அனைத்து நாடகங்களையும் பார்த்து நான் சிரிக்கிறேன்."**

"அப்படியானால், அந்தத் திறவுகோல்களில் ஒன்றை மட்டும் எனக்குக் கொடுத்து உதவ மாட்டீர்களா?" என்று காந்தி கேட்டார்.

**"நான் அதைத் தருவேன்."**

"இது உங்களின் வாக்குறுதியா?"

**"உண்மையில் இது உங்களுடையது, ஒரு நாள் இதை நீங்கள் அறிவீர்கள். வேறு அனைத்தையும் விட்டு விட்டு, எவ்வளவு விரைவில் முயற்சிப்பீர்களோ அவ்வளவு விரைவில் அதை அடையப் பெறுவீர்கள். உங்கள் முயற்சியில் நான் உங்களுக்கு உதவுவேன், நான் முன்பு பரிந்துரைத்தபடி அரசியலிலிருந்து ஓய்வு பெற்று, நீங்கள் என்னுடன் வந்து இணையும்போது, நான் அதை உங்களுக்கு வழங்குவேன்.**

**"ஆனால் வேடிக்கை என்னவென்றால், பேரின்பம் எல்லோரிடமும் இருந்தாலும், அதை ஒருவராலும் கண்டுகொள்ள முடியவில்லை. வெளியளவில் தேடுவதை விட்டு விட்டு, மக்களின் பார்வையை உள்நோக்கித் திருப்பி, அதை ரசிக்க வைப்பது எப்படி என்று நான் யோசித்து வருகிறேன்.**

**"அதற்காக, நான் பேசும்போது, 'புதிதாக' ஒன்றைச் சொல்வேன்!"**

"அது, நான் புரிந்து கொண்டபடியே இருக்குமா?" என்று காந்தி கேட்டார்.

**"அனைவருக்கும் புரியக்கூடிய, நம்பகமான வகையில் நான் பேசுவேன்"** என்று பாபா தெரிவித்தார்.

"ஆனால் எப்போது?" என்று காந்தி கேட்டார். "ஆறு ஆண்டுகள் ஏற்கனவே கடந்துவிட்டன."

**"இந்த ஆண்டு - ஆறு மாதங்களுக்குள்."**

"இன்னும் ஆறு மாதங்கள்? இது மிக நீண்ட தூரம்."

**"ஆறு மாதங்களுக்குள் - அதற்கு முன் அல்ல."** தொடர்ந்து பாபா, **இரண்டு முதல் ஆறு மாத காலத்திற்குள்"** என்று எழுத்துப்பலகை வழியாகத் தெரிவித்தார்.

நீங்கள் இரண்டு மாதங்களில் பேசுவது சாத்தியமானால், பரவாயில்லை, சரி. நீங்கள் பேசுவதைக் கேட்க நான் ஆவலாக உள்ளேன், பாபா!" என்றார் காந்தி.

மெஹர் பாபா கூறினார், "**நான் 1920இல் பதினொரு ஆண்டுகளுக்கு முன்பு பாபாஜானை சந்தித்தபோது, அவர் என்னைக் குறித்து, தன்னை சுற்றியுள்ள அனைவரிடம், 'என்னுடைய இந்தக் குழந்தை எதிர்காலத்தில் உலகம் முழுவதையும் ஆட்சி புரிவான்!' என்றார். பாபாஜான் ஒருபோதும் வெளிப்படையாக, தெளிவான முறையில் பேசியதில்லை; ஆனாலும், அவர் இதை மட்டும் மக்களிடம் தெளிவாக எடுத்துரைத்தார். பாபாஜான் சமீபத்தில் தனது உடலைத் துறந்தார்; அப்போது அவருக்கு வயது கிட்டத்தட்ட 120.**

"துருக்கியிலிருந்து நீங்கள் இங்குத் திரும்பி வருவீர்களா?" என்று காந்தி கேள்வி எழுப்பினார்.

"**நான் அப்படித்தான் நினைக்கிறேன்**" என்று பாபா பதிலளித்தார்.

"அப்போது நான் உங்களை நிச்சயமாக மறுபடியும் சந்திப்பேன்" என்றார் காந்தி.

"**இதற்கிடையில், இந்து, முஸ்லிம்களை, தனித்தனி வாக்காளர்களுடன் ஒன்றிணைக்க எல்லா முயற்சிகளையும் செய்து, ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வாருங்கள். நான் திரும்பி வரும்போது, உங்களைப் பார்த்து சில விஷயங்களைப் பற்றி விவாதிப்பேன்.**"

காந்தி நம்பிக்கையுடன் கூறினார், "இந்தியாவின் முன்னேற்றத்திற்காக, அனைத்து பிரச்சினையையும், அனைவருக்கும் திருப்தி அளிக்கும் விதத்தில் செவ்வனே செய்து முடித்து, நான் ஏற்றுக்கொண்ட கடமைகளின் சுமைகளிலிருந்து விடுவிக்கும் பணியை, நான் உங்களிடம் விட்டு விடுகிறேன். அதற்குப் பிறகு நான் ஓய்வு பெற்று, உங்களுடன் இருந்து, கடவுளைப் பற்றிய தியானத்தில் எனது கடைசி நாட்களைக் கழிக்க முடியும். இப்போதைய குழப்பமான சூழ்நிலையில் நான் அனைவரையும் விட்டுவிட முடியாது."

பாபா எழுத்துப்பலகை மூலம் தெரிவித்தார், "**இது இறைவனின் ஆணைப்படி நடக்கும். நீங்கள் உங்களால் முடிந்தவரை முயற்சி செய்கிறீர்கள், ஆனால் முடிவை மட்டும் கடவுளிடம் விட்டுவிடுவதை நினைவில் கொள்ளுங்கள், அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். உங்களால் இயன்றதைச் செய்ய உங்கள் உண்மையான முயற்சிகள் போதும். உங்களால் அதைவிட எதுவும் செய்ய முடியாது. முடிவுகளை எப்போதும் கடவுளிடம் விட்டுவிட்டு, கவலைப்படாமல் இருங்கள். எனக்கு நீங்கள் அளித்த வாக்குறுதியை நினைவில் கொள்ளுங்கள். பிற அனைத்தையும் நான் பார்த்துக் கொள்வேன்.**"

காந்தி தொடர்ந்து மெஹர் பாபாவிடம், "நான் என்ன எதிர்கொள்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும் - என்னுடைய வேலையின் அழுத்தம் தினமும் அதிகரித்து வருகிறது. நேற்று இரவு 2:00 மணிக்கு நான் ஓய்வெடுக்கச் சென்றேன். ஆனால் நீங்கள் வரவிருந்ததால், ஒரு முக்கியமான பணியைத் தள்ளிவைக்க வேண்டியதாயிற்று!

**“நானும் ஓய்வெடுக்கச் செல்லும் போது இரவு இரண்டு மணிவரை ஆகிவிடும்”** பாபா பதிலளித்தார்.

“ஆனால் நீங்கள் தூங்க வேண்டிய அவசியமில்லை, எனவே சிரமம் எங்கே? சாதாரண மனிதர்களாகிய நாங்கள், தூக்கமின்மையைப் பற்றிக் கவலைப்பட வேண்டியது அவசியம்.”

பாபா, காந்தியுடனான சந்திப்பை இவ்வாறு கூறி நிறைவு செய்தார், **“நான் திரும்பி வரும்போது உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.”**

”நிச்சயமாக! மிக்க நன்றி” என்றார் காந்தி.

**“மேலும், முடிந்தால், நான் உங்களைப் பார்ப்பேன்.”**

“தயவுசெய்து அவ்வாறே செய்யுங்கள். நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன்.”

பாபா அப்போது காந்தியிடம், **“இங்கிருந்து தொடர்ந்து, எப்போது, எங்கு செல்ல இருக்கிறீர்கள்?”**

அதற்கு காந்தி பதிலளித்தார், “நான் அக்டோபர் இறுதி வரை (இங்கிலாந்தில்) இருப்பேன்; பிறகு நான் ‘ரோமன் ரோலண்ட்’ (சுவிட்சர்லாந்து) செல்கிறேன். பெர்லினுக்கு வருகை தரவும் எனக்கு அழைப்பு வந்துள்ளது. முடிந்தால், துருக்கிக்கும் செல்ல வேண்டும், ஆனால் எந்த அழைப்பும் அங்கிருந்து வரவில்லை. நான் எகிப்து மற்றும் பாலஸ்தீனத்திற்கும் செல்ல விரும்புகிறேன்.”

**“பாலஸ்தீனத்திற்கு நிச்சயமாகச் செல்லுங்கள்”** என்று பாபா வலியுறுத்தினார்.

“நான் அங்குச் செல்லத் திட்டமிட்டுள்ளேன். ‘போட் ஸெட்’டிலிருந்து, கப்பல் அங்குச் சென்று தங்கும் வேளையில் பாலஸ்தீனத்திற்கு விஜயம் செய்வேன். நீங்கள் திரும்பி வந்த பிறகு, பத்து அல்லது பன்னிரெண்டு நாட்கள் நான் இங்கு இருப்பேன். அப்போது நாம் சந்திக்க முடியும் என்று நினைக்கிறேன்” என்றார் காந்தி. சரி என்று கூறி மெஹர் பாபா விடைபெற்றார்.

பாபா புறப்படும்போது, காந்தி எழுந்து நின்று, பாபாவிற்கு நன்றியுடன் வணக்கத்தைத் தெரிவித்தார். அந்த நாள் அவரது 62ஆவது பிறந்த நாள் என்பதால் காந்தி, பாபாவைப் பார்த்ததில் மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

மஹாத்மா காந்தியுடனான இந்த சந்திப்பிற்குப் பிறகு, மெஹர் பாபா டேவியின் இல்லத்திற்குத் திரும்பிச் சென்றார். பாபா, மறுநாள் காலையில் துருக்கி தேசத்தின் இஸ்தான்புல் நகருக்குப் புறப்பட இருந்தார்.

மெஹர் பாபா புறப்படுவதற்கு முன்னர், எல்ஸி (ELSIE) என்ற பணிப்பெண்களில் ஒருவர், பாபாவைத் தனியாக சந்திக்க விரும்பினார்; பாபா அதை அனுமதித்தார். எல்ஸி, பாபாவின் அன்பான அரவணைப்பை ஏற்றுக்கொண்டு, “நீங்கள் ஓர் அருமையான மனிதர்! நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன்! நீங்கள் என்னை நேசிக்கிறீர்களா?” அதற்கு ஆமாம் என்று தலையசைத்து, பாபா அந்தப் பெண்மணிக்கு நல்ல இதயம் இருப்பதாக எடுத்துக் கூறியது, எல்ஸிக்கு பெரும் மகிழ்ச்சியை அளித்தது. மற்றுமொரு பணிப்பெண்,

எட்னா பிரெயின் (EDNA BRAIN) என்பவரும் பாபாவால் வெகுவாக ஈர்க்கப்பட்டு, அவருக்கு முழு மனதுடன் சேவை செய்தார்.

கிட்டியின் சகோதரி மே க்ளூஸ், அவரது கலக்கத்தின் மத்தியில் தொடர்ந்து கண்ணீர் சிந்தினார். அன்று மாலை, அவர் இரண்டு மணி நேரம் பாபாவின் தோளில் தலையை சாய்த்துக் கொண்டு அழுதார், பிறகு பாபாவின் கால்களைப் பற்றிக்கொண்டு முத்தமளித்தார்.

பாபா அமெரிக்காவிற்குச் சென்றால், அவர் கனடாவில் தனது வீட்டிற்கு விஜயம் செய்வார் என்ற வாக்குறுதியையும் பெற்றுக்கொண்டார்.

இந்தக் கடைசி இரவில், கிட்டி, மே, டிலியா, மார்கரெட், கிம், மின்டா, குயன்டின், பர்டம் ஆகியோர் காலை ஒரு மணி வரை பாபாவுடன் விழித்திருந்தனர்; பெரும்பாலான நேரங்களில் கண்கலங்கி அழுதனர். பாபா மிகவும் அழகாகத் தோற்றமளித்தார்; அவர் காலையில் புறப்படுவதை எண்ணி வருந்தினர். மண்டலியை நோக்கி, "நீங்கள் எங்கள் அன்பிற்குரியவரை இப்படி அழைத்துச் சென்று, கொடுமைப் படுத்தாதீர்கள்! அவரை அழைத்துச் செல்ல வேண்டாம்; அவர் இங்கேயே இருக்கட்டும்" என்றனர். பால் ராப்ஸனின் பாடல்களின் பதிவுகள் இசைக்கப்பட்டன, பின்பு, பாபா ஓய்வெடுக்கச் சென்றார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, பாபா, கிட்டியை மீண்டும் தனது அறைக்கு அழைத்து, எழுத்துப்பலகை வழியாக வினவினார், "**எது பெரியது**, '**உங்கள் மீதான என் அன்பு**' **அல்லது** '**என் மீதான உங்களின் அன்பு**'?" கிட்டி சற்று தயங்கி பின்பு, பாபாவின் அன்பு பெரியது என்று கூறினார். பாபா, ஆமாம் என்று கூறிப் புன்னகைத்தார்.





மெஹர் பாபா, டெவன்ஷர் ரிட்ரீட், 1931



மெஹர் பாபா, டெவன்ஷர் ரிட்ரீட், 1931

# மேற்கத்திய நாடுகள் - இஸ்தான்புல் (துருக்கி)

**(Istanbul, Turkey)**

1931, அக்டோபர் 3 அன்று காலை 9.30 மணிக்கு, மெஹர் பாபா, இஸ்தான்புல், துருக்கியின் தலைநகரை நோக்கிப் பயணத்தைத் தொடங்கினார்; ஆகா அலி, சாஞ்சி, ருஸ்தம், மெரடித் ஆகியோர் உடன் இருந்தனர் - அதே வேளையில் மேற்கத்திய இறை கீதத்தை மீட்டும் எண்ணத்தில் அவரது அன்பான உள்ளங்களைக் கண்ணீருடன் விட்டுச் சென்றார். மார்கரெட் ஸ்டார், டிலியா இருவரும் டோவர் வரைச் சென்று வழியனுப்பி வைத்தனர். பாபா, இங்கிலீஷ் மகாநதியைப் படகு மூலம் கடந்து, காலே (CALAIS) நகரின் ஆடம்பரமான 'ஸிம்பிளான் ஓரியண்ட் எக்ஸ்பிரஸ்' (SIMPLON ORIENT EXPRESS) ரயிலில், மறுநாள் இத்தாலியின் மிலான் நகருக்கு வந்து சேர்ந்தார். இனிட், பாபாவை சந்தித்து, காலை உணவாக பழங்கள், பிஸ்கட், சீஸ், கேக்குகளை வழங்கினார். இந்த ரயில் அக்டோபர் 6ஆம் நாள் நண்பகலில் வெனிஸ் (VENICE), ட்ரியெஸ்ட் (TRIESTE), பெல்கிரேட் (BELGRADE), ஸோஃபியா (SOFIA) வழியாக, **துருக்கி** நாட்டைச் சென்றடைந்தது.

அந்த நாள் துருக்கியின் தேசிய விடுமுறை நாளாக இருந்ததால், ஒரு நீண்ட இராணுவ அணிவகுப்பு இஸ்தான்புல் நகரின் நெரிசலான வீதிகளில் சென்று கொண்டிருந்தது. பாபாவின் கார் மெதுவாக ஊர்வலத்தின் பின்னால் சென்று ஹோட்டல் கான்டினென்டல் (HOTEL CONTINENTAL) வந்து சேர்ந்தது. லண்டனைப் போலவே, இங்கும் திரள்திரளாக மக்கள் கூட்டம் அவர்களுக்குத் தெரியாமலே பாபாவை வரவேற்றது. பாபா மீண்டும் கிழக்கத்திய பாகத்திற்கு வந்ததால், தலையில் தொப்பி அணியாமல், அவரது நீண்ட தலைமுடியைத் தொங்கவிட்டது, மக்களின் கவனத்தை ஈர்த்தது. காலம் இதை இப்படிப் பார்த்தது: "மாமன்னன் மெஹர் பாபா, அவர்களில் ஒருவர் என்பது துருக்கியர்களில் எவருக்கும் தெரியாது."

மறுநாள் ருஸ்தம், சாஞ்சிக்கு ஒரு கழுத்து டை, சில கால் சட்டைகளை வாங்க பஜாருக்குச் சென்றார். பாபா இதைக் கேள்விப்பட்டதும், இதுபோன்ற ஆசைகளை மனதில் வளர்த்ததற்காக, சாஞ்சியைக் கண்டித்தார்.

லண்டன் வந்த நாளிலிருந்து, பாபா எதையேனும் ஒன்றைக் காரணம் காட்டி, சிறிய விஷயமாக இருந்தாலும், சாஞ்சியிடம் கோபத்தை வெளிப்படுத்தி, அவரது மனதைக் காயப்படுத்தினார். ஒரு முறை கிட்டி அப்பாவித்தனமாக, 'சாஞ்சி, ருஸ்தம் இருவரும் ஏன் மிகவும் சோகமாக இருக்கிறார்கள்' என்று பாபாவிடம் கேட்டதற்கு, **"இது அன்பின் வலி; அவர்கள் மீது எனக்குள்ள அன்பை அவர்களால் தாங்க முடியவில்லை"** என்று அவர் பூடகமான முறையில் பதிலளித்தார்.

மேற்கு நோக்கி மெஹர் பாபாவுடன் பயணம் செய்வது, அயல்நாட்டினருக்கு ‘வேடிக்கையான விடுமுறை நாட்களாகத்’ தோன்றலாம், ஆனால் குருநாதருடனான வாழ்க்கை, சீடர்களுக்கு நிஜத்தில் ஒரு மரண வாழ்க்கை. சில நாட்களுக்கு முன்பு, பாரிஸில் காஃபி அருந்துவதற்காக ரயிலிலிருந்து இறங்கியபோது, பாபாவின் ‘அம்பு எய்தல்’ மீண்டும் ஆரம்பமானது; சாஞ்சி தனது நாட்குறிப்பில் இவ்வாறு எழுதியிருந்தார்: “அனைவரும் பாபாவுடன் இருக்க விரும்புகிறார்கள், ஆனால் சிலருக்குத் தான் அதன் மதிப்பு தெரியும்.”

பாபாவின் உண்மையான பணி, அவரது வட்டத்து சீடர்களின் அகந்தையைச் சுக்குநூறாக்குவது ஆகும்; இது ஒரு வகையில் வேதனையான, பெரும்பாலும் அவமானகரமான செயல்முறையாகும். உதாரணமாக, சாஞ்சி அணிந்த புதிய ஆடைகளைப் பற்றி, பாபா கருத்துத் தெரிவித்ததும், சாஞ்சி அவற்றைக் கழற்றி தரையில் வீசி எறிந்து, “என்னால் இனிமேல் உங்களுடன் இருக்க முடியாது, நான் புறப்படுகிறேன்!” என்று கூறினார்.

பாபாவின் பதில் கடுமையாக ஒலித்தது, **“போய் விடுங்கள்! நீங்கள் எவருக்கு வேண்டும்? ஆனால் நான் சொல்வதை மறுக்கவோ, என்னை அச்சுறுத்தவோ வேண்டாம்; இப்படி அனைத்தையும்** (ஆன்மீகத்தை) **தூக்கி எறியுங்கள். நீங்கள் சென்றாலும் பரவாயில்லை; எல்லாவற்றையும் என்னால் பார்த்துக்கொள்ள முடியும். நான் எனது மௌனத்தைக் கலைத்து விட்டால் எழுத்துப்பலகையை எவரும் படிக்க வேண்டிய தேவையும் இராது. இந்த எழுத்துப்பலகை வழியாகப் பேசி பேசி நான் சோர்ந்து போயிருக்கிறேன். நான் இப்போது அமெரிக்கா அல்லது வேறு எங்கும் செல்வதை விரும்பவில்லை! நான் இந்தியாவிற்குத் திரும்ப உள்ளேன்! ஒருவேளை நான் அமெரிக்கா சென்றால் கூட, அதற்கு நீங்கள்தான் (சாஞ்சி) காரணமாக இருப்பீர்கள்; அது எனது விருப்பத்திற்கும் திட்டங்களுக்கும் எதிராக இருக்கும்.”**

சாஞ்சி, இதற்கு முன் நடந்திராதது போல, தனது நிலையை எண்ணி, தன்னையே சபித்து, கண்ணீர் விட்டு அழுதார்; மெஹர் பாபாவுடன் இணைந்ததற்காக தன்னைத் தானே குற்றம் சாட்டினார். அப்போது பாபா அங்கிருந்து வெளியேறி, சிறிது நேரத்தில் மீண்டும் தனது அறைக்கு வந்து, அவரை அமைதிப்படுத்த முயன்றார், **“உங்களை இப்படி நடத்துவதற்கு எனது சொந்த காரணங்கள் உள்ளன என்று உங்களுக்குத் தெரியாதா?”**

“பாபா இப்போது என்னால் தாங்கமுடியவில்லை. ஒவ்வொரு நாளும் இப்படியா நடத்துவது? தயவுசெய்து என்னிடம் கொஞ்சம் கருணை காட்டுங்கள்! என்னால் தாங்க முடியாது!”

**“இது கருணை. இது என் அருள். இப்போது அமைதியாக இருங்கள், அதைப் பற்றி சிந்திக்க வேண்டாம்”** என்று பாபா பதிலளித்தார். பாபா, சாஞ்சியை அன்பாகத் தழுவி, கண்ணீரைத் துடைத்தார். சாஞ்சி உடனே அமைதியாகி, பாபாவிடம் மன்னிப்புக் கோரினார். பாபா தலையசைத்து சிரித்தார். இதுபோன்ற சம்பவங்கள் மெஹர் பாபாவின் அரவணைப்பில் இருந்த ஒவ்வொருவருடனும் மீண்டும் மீண்டும் நிகழ்வது உண்டு.

இஸ்தான்புல் நகரில், ஒரு 'சிறந்த சிறுவனைத்' தேடும் பணி மீண்டும் தொடங்கியது. பாபா அவரது சிறப்பு பணிக்காக ஒரு துருக்கிய சிறுவனை விரும்பினார். 1931, அக்டோபர் 8ஆம் நாள், பல மொழிகள் அறிந்த, அழகிய, பதினாறு வயது இளைஞன் ஒருவனை மண்டலி கண்டுபிடித்தனர். முதல் பார்வையிலேயே அந்த இளைஞன் பாபாவால் வெகுவாக ஈர்க்கப்பட்டான். இரவு உணவு வேளையில், அந்த சிறுவனுக்கு மட்டும் அசைவ உணவு வரவழைக்கப்பட்டதை அவன் அறிந்து, பாபா, சைவ உணவு உண்பதால் அவனும் அதையே உண்பதாகத் தெரிவித்தான். பாபா, அவனிடம் இந்த குணத்தை விரும்பினார்.

அந்த நாள் ஹோட்டலில், மஹாத்மா காந்தியுடனான சந்திப்பின் முக்கியத்துவத்தைப் பற்றி விவாதித்தபோது, பாபா இவ்வாறு தெரிவித்தார், **"ஒரு குருநாதர் என்ற முறையில் எனது சக்தியே, காந்தியை 'அந்தத் திறவுகோலை' கேட்கத் தூண்டியது."**

இரண்டு நாட்களுக்குப் பிறகு, ஹோல்ஃபோன் (HOLFONE) என்ற வேறொரு புதிய இளைஞன் அழைத்து வரப்பட்டான். பாபா அனைவருடனும் 'ஹாய்யா சோஃபியா' (HAGIA SOPHIA) மசூதியைப் பார்வையிடச் சென்றார். மசூதியைச் சுற்றி அழைத்துச் செல்ல இருந்த ஹோல்ஃபோனை ஒரு வழிகாட்டி தடுத்து நிறுத்தி, கோபத்தில் கண்டித்து காவல்துறையினரை வரவழைத்து, இறுதியில் அவனை அழைத்துச் சென்றதும், பாபா, மண்டலி அனைவரும் பின்தொடர்ந்து சென்றனர்.

அங்கு, ஹோல்ஃபோன் ஒரு வழிகாட்டியாக ஈடுபடவில்லை, ஆனால் அவர்களது ஊழியராக, ஹோட்டலில் தங்கியிருப்பதாகவும், அவர்களுடன் பார்வையாளராக வெறுமனே சென்றதாகவும் போலீஸாருக்குத் தெரிவித்ததும், ஹோல்ஃபோனை விடுவித்தனர், ஆனால் பாபா மசூதிக்குத் திரும்பிச் செல்லவில்லை.

இஸ்தான்புல் நகரை, காரில் சுற்றி வரும் வேளையில், 'இஸ்லாமிய மசூதியாக மாற்றப்பட்ட ஒரு பழைய கிறிஸ்தவ தேவாலயத்தை நீங்கள் பார்க்கலாம்' என்று காரோட்டுநர் பரிந்துரைத்தார். அது வெகு தொலைவில் இருந்தாலும், மெஹர் பாபா அதைப் பார்க்க முடிவு செய்தார். 'கோரா' மடாலயத்தின் (CHORA MONASTRY) பெரும்பகுதி பாழடைந்த நிலையில் இருந்தது, ஆனால் பிரதான மண்டபத்தில், பன்னிரண்டு சீடர்களுடன் கூடிய வேலைப்பாடுகள் நிறைந்த கிறிஸ்துவின் சித்திரம் பாதுகாக்கப்பட்டிருந்தது; குழந்தை ஏசுவை கையில் ஏந்திய வண்ணம் அன்னை மேரியின் சித்திரம் ஒன்றும் சுவற்றை அலங்கரித்தது.

தொடர்ந்து, நகரத்தின் ஏழ்மையான மக்கள் வாழும் இஸ்தான்புல் புறநகர் பகுதிகளுக்குள் செல்லுமாறு, கார் ஓட்டுநருக்கு பாபா உத்தரவிட்டார். அவரது எல்லையற்ற இரக்கத்தில், பாபா சில வீதிகளில் நடந்து சென்று பின்னர் ஹோட்டலுக்குத் திரும்பி வந்தார்.

1931, அக்டோபர் 11ஆம் நாள், ருஸ்தம், சாஞ்சியுடன் சில விஷயங்களைக் குறித்து உரையாடிக் கொண்டிருந்தபோது, பாபா அவரது துருக்கிப் பயணத்தின் நோக்கத்தை வெளிப்படுத்தினார்:

**நான் மிக முக்கியமான பணிக்காக இங்கு வந்துள்ளேன்; வெளியளவில் எவரையும் சந்திக்கவில்லை என்றாலும், உள்ளளவில் நான் ஒரு பெரிய காரியத்தைச் செய்ய வேண்டி இருக்கிறது. இது ஒரு காலத்தில் பெரிய நாடாக இருந்தும், துருக்கி தற்போது மிகவும் மோசமான நிலையில் உள்ளது. ஆன்மீகம் முற்றிலும் சீர்குலைந்த நிலையில், இராணுவம் மற்றும் பொருள் ரீதியாக, துருக்கி முன்னேறி இருந்தாலும், இது பல நேர்மையற்ற, விரும்பத்தகாத நபர்களின் அடைக்கலமாக மாறி இருக்கிறது. இங்கு ஆதிக்கம் செலுத்தும் மிக வலுவான தீய சக்திகளை எதிர்கொள்ள, ஓர் ஆன்மீக சக்தி தேவைப்படுகிறது. அதற்காகத்தான், நான் நேரில் வந்துள்ளேன்.**

அடுத்த நாள், சாஞ்சி, 'தாமஸ் குக்' பயண முகவர் அலுவலகத்திற்குச் சென்று அமெரிக்காவிற்குச் செல்வதற்கான முன்பதிவைச் செய்தார். இங்கிலாந்து வழியாக அமெரிக்கா செல்ல பாபா விரும்பாததால், வேறு வழியை முடிவு செய்தனர். ருஸ்தத்தை ஒரு முக்கியமான பணி நிமித்தம் எகிப்திற்கு அனுப்பி வைத்து, அலெக்ஸாண்ட்ரியா வழியாக இந்தியாவிற்குத் திரும்பிச் செல்ல பாபா அறிவுறுத்தினார். பாபா மண்டலியுடன் இத்தாலிக்குப் பயணம் செய்ய ஆயத்தமானார்.

அக்டோபர் 13ஆம் நாள், மெஹர் பாபா, குறிப்பாக வரவிருக்கும் போர் மற்றும் அது தொடர்பான அவரது ஆன்மீகப் பணிகள் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், "**போர் குறுகியதாக இருக்கும், ஆனால் மிகுந்த அழிவை ஏற்படுத்தும். பல கேள்விக்குறியான பாகங்கள் அழிக்கப்படும். நான் அதைத் தீர்மானித்துள்ளேன். இங்கிலாந்து உட்பட ஒவ்வொரு நாடும் அழிவை சந்திக்கும்; ஆனால், இறுதி பிரச்சினைக்கு அமெரிக்கா மீண்டும் வழி வகுக்கும்.**"

1931, அக்டோபர் 14ஆம் நாள் ரயிலில் இஸ்தான்புல் நகரிலிருந்து புறப்பட்டு, இரண்டு நாட்கள் பயணம் செய்து மிலான் நகரம் வந்து சேர்ந்தனர். இனிட் ஏற்பாடு செய்திருந்த 'அல்பர்கோ இம்பீரியல்' (ALBERGO IMPERIAL) ஹோட்டலில் தங்கினர்.

அடுத்த நாள் பிற்பகல், பாபா பேருந்தில் செர்டோஸா மடாலயத்திற்குச் (CERTOSA MONASTERY) சென்றார், மிலான் நகரத்திற்கு வெளியே ஒரு மணி நேர பயணம். அமைதி மற்றும் தனிமை நிறைந்த அந்த இடத்தை பாபா மிகவும் விரும்பினார். அவர் மடம் முழுவதையும் பார்வையிட்டார். தனிப்பட்ட தியான அறைகளை பாபா பெரிதும் விரும்பினார். அவர் அரை மணி நேரம் திறந்த வெளியில், வராந்தாவில் அமர்ந்து, அங்கிருந்த ஆன்மீக சூழ்நிலையைப் பாராட்டினார்.

பிற இடங்களைப் போலல்லாமல், பாபா இங்கு அவசரம் காட்டவில்லை, மிலானுக்கு வந்ததிலிருந்து அவரது மனநிலையில் மாற்றம் தென்பட்டது. மிலானில் பாபா தனது ஆன்மீகப் பணிகளைப் பற்றி இனிட் மற்றும் அவருடன் வந்த தியோ (THEO) எனும் நண்பருக்கு விளக்கினார்:

**ஒரு சாதாரண மனிதனுக்கு எனது ஆன்மீகப் பணியைப் புரிந்துகொள்வது முற்றிலும் சாத்தியமற்றது, அவனது அறிவுக்கு அப்பாற்பட்டது. எனது வரம்பற்ற, உலகளாவிய மனதுடன், நான் பிரபஞ்சத்திற்காகப் பணிபுரிகிறேன்; எனக்காக அல்ல. நான் ஏன் எனக்காகச் செய்ய வேண்டும்? எனது பணியை, பல்வேறு ஊடகங்கள் மூலமாக நான் செய்கிறேன். அதைக் கருத்தில் கொண்டு, நான் பல்வேறு இடங்களுக்குச் செல்கிறேன், வெவ்வேறு காட்சிகளைக் காண்கிறேன், அல்லது நாடகங்கள், திரைப்படங்களுக்குச் செல்கிறேன், இதுபோன்ற நூற்று ஒரு பணிகள் புரிகிறேன். ஆனால் உங்களைப் போல நான் திரைப்படங்களையும் தியேட்டர்களையும் ரசிக்கவில்லை - அவற்றை எனது உள்ளார்ந்த ஆன்மீகப் பணியின் ஊடகமாக மாற்றுகிறேன். எனது ஒவ்வொரு மூச்சும் இந்தப் பணியைத் தொடர்ந்து செய்கிறது, வெளியளவில் நீங்கள் இந்த அந்தரங்க மர்மத்தைக் காண முடியாது.**

**மனிதகுலத்தின் நலனுக்காக நான் மிகப்பெரிய பணிபுரிய வேண்டும் - அது எனது பிரபஞ்சத்திற்கான கடமை. நெருக்கடியான நேரங்கள் என்பதால் தற்போதைய சூழ்நிலைகள் மற்றும் நடைமுறையில் இருக்கும் நிலைமைகளுக்கு ஏற்ப எனது பொறுப்பும் அதிகரித்துள்ளது.**

**நான் ஆன்மீக ராஜ்யத்தின் சக்கரவர்த்தி, ஒவ்வொரு நொடியும் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும், உள்ளளவில் 'அறிக்கைகள்' மற்றும் செய்திகள் வந்த வண்ணம் இருக்கும். நாம் எதிர்கொள்ளும் சிக்கலான காலங்களின் காரணமாக, சீனாவிற்கும், ஜப்பானுக்கும் இடையிலான மோதல் போக்கைக் கடைப்பிடிக்கும் துன்பகரமான செய்திகள் மட்டுமே வருகின்றன.**

**இதுபோன்ற செய்திகள் ஒவ்வொரு நொடியிலும் நிரம்பி வழிவதால், நான்** (எனது முகவர்களுக்கு) **உள் வழிமுறைகளை வழங்க வேண்டியது அவசியம்.**

**எவருக்கும் தெரியாத எண்ணற்ற விஷயங்களை ஒரே நேரத்தில் நிர்வகிப்பதால், இதை நீங்கள் வெளியளவில் பார்க்க முடியாது. இருப்பினும், எனது பணியின் விளைவு வெளியளவில் தோன்றும்; எடுத்துக்காட்டாக, நீங்கள் திடீரென, எதிர்பாராமல், மோசமான மனநிலையில் என்னைக் காண நேரிடும். ஒரு கணம் நான் வேடிக்கையான முறையில் மகிழ்ச்சியாக இருக்கிறேன்; அடுத்த கணம், நீங்கள் என்னை தீவிரமான மனநிலையில், கோபமாக நடந்து கொள்வதையும் காண்கிறீர்கள். இவை அனைத்தும் எனக்கு வரும் அறிக்கை மற்றும் செய்திகளைப் பொறுத்தது; அவற்றிற்கு ஏற்ப நான் எனது பணியைத் திட்டமிட வேண்டியது**

**அவசியம். மேலும் ஓர் உதாரணமாக, நான் உங்களுடன் அமர்ந்து, மகிழ்ச்சியாக தேநீர் அருந்துகிறேன் என்று வைத்துக்கொள்வோம், அந்த நேரத்தில் இந்தியாவில் யாரோ ஒருவர் பெரிய நெருக்கடியை சந்திக்கிறார் என்று எனக்கு உள்ளளவில் தெரியவரும் அதே நேரத்தில், இயற்கையாகவே நிலைமையை எவ்வாறு சமாளிப்பது அல்லது சரிசெய்வது என்பதற்கான பதில் செய்தியை அனுப்பும் கட்டத்தில், எனது மனநிலை மாறுவது மட்டுமின்றி, தற்போதைய சூழலில் நான் இல்லாதது போலத் தோன்றுவேன்.**

**என்னுள் ஏற்பட்ட இந்த திடீர் மாற்றத்தால் உங்களுக்கு ஆயிரமாயிரம் எண்ணங்கள் வரலாம்; ஆனால் உங்கள் அறியாமைதான் எனது ஆன்மீகப் பணியின் தன்மையை அல்லது எனது மனநிலையின் மாற்றத்திற்கான காரணத்தைப் புரிந்து கொள்வதிலிருந்து உங்களைத் தடுக்கிறது. நான் நடந்து கொள்ளும் முறையைக் குறித்து, நீங்கள் வேதனையடைவீர்கள், அதைப் பற்றி சிந்தித்துப் பார்ப்பீர்கள், ஒரே நொடியில் ஆயிரக்கணக்கான எண்ணங்கள் உங்கள் மனதில் அலைபாயும்! ஆனால் இவை அனைத்தும் உங்கள் அறிவுத்திறனுக்கு அப்பாற்பட்டவை; நீங்கள் ஒருபோதும் உங்கள் அறிவார்வம் மிக்க அல்லது நியாயவாதம் செய்யும் மனதின் உதவியுடன் அதைப் புரிந்துகொள்ள முடியாது.**

1931, அக்டோபர் 18 அன்று, மெஹர் பாபா இத்தாலிய ஆல்ப்ஸ் மலைக்கு அனைவருடனும் ரயிலில் சென்றார். வர்ரெஸ் (VARESE) நகரில், அவர்கள் கம்பி ரயிலுக்கு மாறி, மேலும் செங்குத்தான சாய்வு வரைச் சென்று, அற்புதமான காட்சிகளைக் கண்டு ரசித்தனர். நகரத்திற்குத் திரும்பிய பின்னர், அன்று மாலை, அவர்கள் ஓடியன் தியேட்டருக்குச் சென்று, நாடகம், திரைப்படம் மற்றும் இத்தாலிய இசை நிகழ்ச்சியைப் (ஓப்பரா) பார்வையிட்டனர். இரண்டு நாட்களுக்குப் பின்னர், ஒரு குறுகிய, அழகான கோமொ (COMO) ஏரிக்குச் சென்று தங்கினர்.

அக்டோபர் 23ஆம் நாள், ஹார்மனிலிருந்து மால்கம், ஜீன் ஸ்க்லோஸ் இருவரும், மெஹர் பாபாவிற்கு ஒரு தொலைத்தந்தியை அனுப்பி வைத்தனர். பாபா, மண்டலியுடன் அமெரிக்கா செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. பாபா, அமெரிக்காவைப் பற்றி, மெரடித்துடன் பேசிக் கொண்டிருந்த வேளையில், பாபாவின் பணியில் மெரடித் பெரிய பங்கு வகிப்பார் என்பதையும் உறுதிப்படக் கூறினார்: **"அமெரிக்காவில், உங்களுக்கு ஓய்வே இராது. அங்கு நீங்கள் செய்ய வேண்டிய வேலைகள் ஏராளம். அங்கே நான் எப்படி அதிசயங்களைச் செய்யப் போகிறேன் என்பதைப் பாருங்கள்."**

மெரடித், கனிகள் உண்பதை மிகவும் விரும்பினார், பெரும்பாலும் அவற்றை உண்ண பாபாவையும் தூண்ட முயற்சித்தார். ஆனால் பாபா, **"நான் உட்பட, பாபாஜான், உபாஸனி மஹாராஜ், சாய் பாபா எவருமே பழங்களை**

**விரும்பவில்லை. ராமகிருஷ்ணா அதைத் தொட்டதும் இல்லை"** என்று தெரிவித்தார்.

மெரடித் அதன் காரணத்தை யூகித்தார், "குருநாதர்கள் ஏற்கனவே தங்களுக்குள் கனிகளின் சிறந்த குணங்களைக் கொண்டிருப்பதால், அவற்றை உண்ணத் தேவையில்லை. அப்படித்தானே?" என வினவினார்.

"**ஆம்**," என்று பாபா பதிலளித்தார், ஆனால் பழங்கள் ஆரோக்கியமானவை, இரத்தத்திற்கு நல்லது என்று கூறினார்.

அக்டோபர் 25ஆம் நாள், பிற்பகல் பென்ஸன் அகஸ்டனியில் (PENSIONE AGOSTINI) அமைந்த இனிட் இல்லத்தில் நடைபெற்ற தேநீர் விருந்திற்குப் பிறகு, பாபா மண்டலியுடன் ரயிலில், மிலான் நகரிலிருந்து புறப்பட்டார். இரண்டு மணி நேரத்தில் ஜெனோவா வந்து 'மிலானோ டெர்மினஸ்' ஹோட்டலில் தங்கினர்.

மெஹர் பாபாவின் குழுவில் மெரடித் முக்கியத்துவம் வாய்ந்தவர் என்பதைக் காட்டும் நோக்கத்தில், அவர் அதிகாரிகள் மற்றும் ஹோட்டல் ஊழியர்களிடம், மெஹர் பாபா தனது நண்பர் மற்றும் சாஞ்சி, ஆகா அலி அவரது தனிப்பட்ட ஊழியர்கள் என்றும் கூறி வந்தார். இது பாபாவிற்கு ஒரு தலைவலியாக இருந்தது, ஏனெனில், பாபா தன்னை யார் என்று காட்டிக்கொள்ளாமல் மறைமுகமாக இருக்க விரும்பியபோது, மெரடித் தேவையின்றி பாபாவைப் பற்றி மக்களுக்குச் சொல்லி வந்தார். இதனால் சாஞ்சி பிறரின் துன்புறுத்தல்களுக்கு ஆளானார். பாபாவும் இதை சகித்துக்கொண்டார் ஏனெனில், பல முக்கியமான நபர்களின் தொடர்பிற்கு அவர் ஓர் ஊடகமாகச் செயல்பட்டார்; அந்தப் பணியும் இப்போது ஏறக்குறைய நிறைவுக்கு வந்தது.

அக்டோபர் 26 பிற்பகல், மெஹர் பாபாவுக்காக, மற்றொரு தேநீர் வரவேற்பு வழங்கப்பட்டது, அங்கு பாபா ஒரு சில நேர்மையும், அன்பும் மிக்க பக்தர்களை சந்தித்தார். அவர்களில் டக்ளஸ் (DOUGLAS) என்பவர் பாதிரியைப் போன்றத் தோற்றம் உடையவர் என்று பாபா குறிப்பிட்டார்.



மெஹர் பாபா,
அமெரிக்கா, 1931



மால்கம், சாஞ்சி, மெஹர் பாபா, ஆகா அலி, மெரடித், அமெரிக்கா, 1931

# இறை கீதத்தை மீட்டும் மேற்கத்திய நாடுகள் - நியூ யார்க் (அமெரிக்கா)

**(New York, America)**

மெஹர் பாபா, மெரடித், அலி, சாஞ்சி ஆகியோர் எஸ்.எஸ். ரோமா கப்பலில் 1931, அக்டோபர் 27 காலையில் நியூயார்க் நகரத்திற்குப் புறப்பட்டனர். அறைகள் குறுகியதாக, வசதியின்றி இருந்ததால் நேப்பல்ஸ் (NEPLES) நகரை விட்டு கப்பல் வெளியேறியதும், வெளிப்புறமாக இருந்த விசாலமான இரண்டு அறைகளுக்கு மாற்றப்பட்டனர்.

'டொரான்டோ'வைச் (TORONTO) சேர்ந்த லூயிஸ் ஸ்கைய் (LOUIS SKEY) என்ற இளம் பெண்மணியை, மெரடித், பாபாவிற்கு அறிமுகப்படுத்தி வைத்தார். லூயிஸ், பாபாவால் வெகுவாக ஈர்க்கப்பட்டு, பல முறை அவரது அறைக்கு வந்தார்.

இங்கிலாந்திலிருந்து சென்ற பின்பு, லண்டனில் வாழும் நெருக்கமான அன்பர்களுக்கு மெஹர் பாபாவின் செயல்பாடுகள் குறித்து, சாஞ்சி கடிதங்கள் எழுதினார். பாபாவைப் பிரிந்த வேதனையில் அவருடன் ஒரு நெருக்கமான தொடர்பை குறிக்கும் நோக்கத்தில் அவர்கள் பலவித சேவைகளில் ஈடுபட்டனர். அக்டோபர் 10ஆம் நாள், சாஞ்சியின் கடிதத்திற்கு, கிட்டி பதிலளித்தார்: "வாழ்க்கை வழக்கம் போல் உண்மையாகவே நடந்து கொண்டிருக்கிறது, ஆனால் வழக்கமான வழியில் அல்ல. அனைத்தும் - வேலை, விளையாட்டு, ஓய்வு அல்லது தூக்கம் - எதுவாயினும் ஏதோ ஒரு வகையில் வித்தியாசமாகவும், அனைத்தும் இப்போது பாபாவிற்காகவும் நடப்பது போலாகிவிட்டது." கிட்டி உண்மையில் அனைத்தையும் பாபாவிற்கு அர்ப்பணிக்க ஆயத்தமானார்; 1931 அக்டோபர் 27 அன்று அவர் எழுதிய கடிதமே இதற்கு சான்றாகும்:

பிரியமான பாபா,

உங்களுக்கான எங்கள் அன்பு, உண்மையிலேயே அற்புதம் வாய்ந்தது, ஆனால் இவ்வளவு ஆழமாக நேசிக்கும் சக்தியை எங்களுக்கு வழங்கியவர் யார்? பாபா, இது உங்களிடமிருந்து எங்களுக்குக் கிடைத்த தெய்வீகப் பரிசு இல்லையா? எங்களை மேலும் மேலும் இதற்குத் தகுதியுடையவர்களாக மாற்றுங்கள். இந்தக் குறுகிய காலத்தில் கூட, உங்களை நினைக்கவும், மேலும் மேலும் முழுமையாக உங்களை நேசிக்கவும் வேண்டும் என்ற ஏக்கம், ஒரு நிமிட நேரம் கூட இல்லாமல் இல்லை. கடவுளின் எல்லா பரிசுகளிலும் இது மிகப் பெரியது - அதாவது உங்களை நேசிக்கவும், உங்களுக்கு சேவை செய்யவும் - என்று நான் எப்பொழுதும் உங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

பாபாவை சந்தித்ததில் மிகவும் பாதிக்கப்பட்ட மற்றுமொரு பெண்மணி கிம். அக்டோபர் 29 அன்று அவர் சாஞ்சிக்கு எழுதிய கடிதம்:

கிட்டி, கிம் & கம்பெனிக்கு நீங்கள் எழுதிய அழகான கடிதத்திற்கு, நாங்கள் உங்களுக்கு எப்போது, எப்படி நன்றி கூற முடியும்? அன்புள்ள சாஞ்சி, நான் மீண்டும் மீண்டும் நன்றியைத் தெரிவிக்க மட்டுமே முடியும்; மேலும், நாங்கள் அதைப் படிக்கும் போது, எங்கள் கண்களிலிருந்து வழிந்த ஆனந்தமும், கவலையும் கலந்த கண்ணீர் அந்தக் கடிதத்தை ஈரப்படுத்தியது. ஆனந்தக்கண்ணீர் - எங்கள் பிரியமான பாபாவின் எல்லையற்ற இரக்கத்தால், எங்களுக்குக் கிடைத்த பெரிய ஆசீர்வாதத்திற்கான கண்ணீர், அவரைப் பிரிந்த கவலையால் வழிந்த கண்ணீர், ஏனெனில் நாங்கள் இவ்வளவு பெரிய சந்தோஷத்திற்குத் தகுதியானவர்கள் அல்ல, மேலும் பாபா மீது எங்களின் அன்பு மிகவும் பலவீனமானது.

அவரை அதிகமாக நேசிக்க, பாபா உதவ வேண்டும் என்று மட்டுமே நாம் பிரார்த்தனை செய்ய முடியும்; அவருடைய அன்பின் நெருப்பு, நம்மிடம் உள்ள அனைத்தையும் எரிக்கும் தருவாயில், நம்மில் பாபாவைத் தவிர வேறு எதுவும் இருக்கக்கூடாது.

எங்கள் அன்பிற்குரியவருடன் ஒன்றிணையும் தீவிரமான ஏக்கத்தில் இருக்கிறோம்!

அக்டோபர் 30 அன்று கிட்டி, மெஹர் பாபாவிற்கு எழுதிய கடிதத்தில், பாபா, டிசம்பர் மாதத்தில் சீனா சென்று திரும்பி வரும் வேளையில் அவரும் ஸில்லாவும் பாரிஸில் பாபாவை சந்திக்க முடியுமா என்று கேட்டார். கிட்டி, தான் பாபாவிற்குரியவர் என்பதை அறிந்திருந்தார், மேலும் அவரது அன்பின் தாக்கத்தை அவருடைய வார்த்தைகளில் காணலாம்:

பிரியமான பாபா,

உங்கள் அன்பு நாள் முழுவதும் - பணியிலும், ஓய்விலும் எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. அனைத்தும் இப்போது உங்களுக்காகவே செய்யப்படுவது போன்ற உணர்வு. அந்தப் பணியின் விளைவுகள் மட்டுமின்றி, இதயம், மனம், விருப்பம் அனைத்துமே உங்களுடையது; எல்லாம் உங்களுக்கு மட்டுமே என்ற நம்பிக்கையில் - உங்களுக்குத் திருப்பித் தரப்படும் அல்லது தேவைப்படும் போதெல்லாம் உங்கள் சேவையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நம்பிக்கையில் நிகழ்கின்றன. அன்பு, நேசம் இவை எப்போதும் செயலற்றதாக இருக்க முடியுமா? எல்லாவற்றையும் வழங்க, வழங்க மட்டுமே வேண்டும் - அன்பிற்குரியவரின் காலடியில் அனைத்தையும் இழக்க வேண்டும்.

நீங்கள் ஏற்கனவே என்னில் விழித்தெழச் செய்த, செய்யாத அனைத்து அன்புடனும், இப்பொழுது விடைபெறுகிறேன்.

இதற்கிடையில், பாபா தினமும் கப்பல் மேடையில் நடக்கச் சென்றார்; சில சமயங்களில் மாலையில் இசை, சினிமா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். இதர பயணிகள், பாபாவை யார் என்று அறிய ஆர்வமாக இருந்தனர். மேலும் ‘எமிலியோ’ என்ற சிறுவனை பாபா தொடர்பு கொண்டதால், பாபாவைப் பற்றி

அவனிடம் கேட்டறிந்தனர்; அவனோ சிதைந்து போன ஆங்கிலத்தில், "ஒரு சிறந்த, பிரபலமான மனிதர்" என்று பதிலளித்தான்.

1931, நவம்பர் 3 அன்று, பாபாவைத் தனிப்பட்ட முறையில் சந்தித்த சிலரில், அமெரிக்காவில் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்ட ஓர் இணக்கமான இத்தாலிய பொருளாதார பேராசிரியரும் ஒருவர். அவர் பாபாவை அவரது அறையில் சந்திக்க வந்தார். அதி புத்திசாலி மட்டுமின்றி, நல் இதயமும் படைத்த மனிதரை சந்தித்ததில் பாபா மகிழ்ச்சி அடைந்தார். உரையாடலின் முடிவில், பாபா அவருக்கு அறிவுறுத்தினார்: "**உலகத்தில் வாழுங்கள், அதே வேளையில் எல்லாம் உலகம்தான் என எண்ணாமல், பற்றற்றவராக இருங்கள். உங்கள் கடமைகளைத் தவறாமல் தொடர்ந்து செய்யுங்கள், ஆனால் மாயையின் பிடியில் சிக்கிவிடாதீர்கள். ஒருபோதும் கவலைப்பட வேண்டாம், எப்பொழுதும், சிரமங்களுக்கு மத்தியிலும், மகிழ்ச்சியாக இருக்க முயற்சி செய்யுங்கள். பேரழிவுகளை சந்தித்தாலும் மனநிறைவோடு இருங்கள்.**" ஐந்து நிமிடங்கள் தினமும் உண்மைப்பொருளைப் (சத்தியம்) பற்றி தியானிக்க பாபா அவருக்கு அறிவுறுத்தியதுடன், உள்ளளவில் உதவுவதாக உறுதியளித்தார்.

சுவாமி விவேகானந்தர் மேற்கத்திய நாட்டில், முதல் 'ஆன்மீக அடிப்படை பணியைச் செய்ததாகக் கூறலாம்'; அவர் தனது அமெரிக்க தலைமையகத்தை நியூயார்க் நகரில் 1895ஆம் ஆண்டு, மெஹர் பாபா பிறந்த ஒரு வருடத்திற்குப் பிறகு நிறுவினார். விவேகானந்தர் நியூயார்க் நகரை 'நாட்டின் தலையாகவும், கை மற்றும் பணப்பை' என்றும் குறிப்பிட்டார். ஒரு எழுத்தாளர் கூறியது போல, "பெரிய, அதிநவீன, பலமொழிகளைப் பேசும் மக்கள் அடங்கிய பெருநகரமானது, உண்மையில் புதிய சிந்தனைகளின் பிறப்பிடமாக விளங்கியது; இது ஆக்கப்பூர்வமாகவும், ஆர்வம் நிறைந்ததாகவும், எல்லா கலைகளின் மையமாகவும் திகழ்ந்தது; இது பணக்காரர், தாராள பிரபுக்கள் மற்றும் உயிர் சக்தியின் ஓட்டமாக உருவெடுத்தது; எல்லாமே இருந்தது; இல்லை என்ற பேச்சுக்கே இடமில்லை!"

1931, நவம்பர் 6ஆம் நாள் ரோமா கப்பல், லிபர்ட்டி சிலையைக் கடந்து, பிற்பகல் இரண்டு மணிக்கு நியூயார்க் நகர துறைமுகத்திற்குச் சென்று, டபிள்யூ 57ஆவது கப்பல் மேடையில் நின்றது.

துடுக்கான, ஆணவம் பிடித்த குடிவரவு அதிகாரி ஒருவர் எழுப்பிய பிரச்சினையால், பாபா மண்டலியுடன் வெளியில் வர இரண்டு மணி நேரமானது. மெஹர் பாபாவின் மௌனத்தைக் குறித்த சந்தேகத்தில், மெரடித் அளித்த பதில்கள் அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. மேலும் பாபாவின் எழுத்துப்பலகையைத் தானே படிக்க முயன்றார், ஆனால் முடியவில்லை.

அவர் நேரடியாக பாபாவிடம் கேட்டார், "நீங்கள் மௌனமாக இருந்து அமெரிக்க மக்களுக்குக் கற்பிக்க வந்துள்ளீர்களா? அதுவும் இந்த

எழுத்துப்பலகையுடன்? எவ்வளவு மூடத்தனம்! இந்த வேடிக்கையான யோசனையை உங்களுக்கு வழங்கியது யார்?"

**"நான் கற்பிப்பதற்காக வரவில்லை, விழிப்படையச் செய்ய வந்துள்ளேன்"** என்று பாபா அமைதியாக பதிலளித்தார். அதைக்கேட்ட அந்த அதிகாரி ஏளனமாகச் சிரித்தார்; பாபா, சாஞ்சியிடம், **"அவர் இப்போது சிரிக்கட்டும், ஆனால் நான் யார் என்பதை அவருக்குக் காட்டுகிறேன். அறிவற்ற அப்பாவி ஆத்மா. நான் அவருக்காகப் பரிதாபப்படுகிறேன்!"** என்று கூறி, அமைதியாக அவருடைய கேள்விகளுக்கு பதிலளித்தார்.

திடீரென, எதிர்பாராமல், அந்தக் கப்பலில் வெள்ளை நிற உடையணிந்த அதிகாரி ஒருவர் தோன்றி, குடிவரவு முகவரிடம், "ஏனைய பயணிகள் அனைவரும் கப்பலை விட்டு வெளியேறிய பின்னரும், ஏன் இவர்களைத் தடுத்து வைத்துள்ளீர்கள்?" என்று வினவினார்.

அவர்களின் பயண ஆவணங்கள் திருப்திகரமாக இல்லை என்றும், அதற்காக உத்தரவாதம் தேவைப்படுவதாகவும் அவர் விளக்கினார். கப்பலின் அதிகாரி ஆவணங்களைப் பார்த்து, "இதில் என்ன தவறு? அவர்கள் போகட்டும்" என்று அவருக்குரிய அதிகார தோரணையில் கூறினார்.

"ஆனால் அவர்களுக்கு உத்தரவாதம் அளிக்க இங்கு எவரும் இல்லை" என்று முகவர் எதிர்ப்புத் தெரிவித்தார்.

சாஞ்சி உடனே அவர்களிடம் மிகச் சிறந்த குறிப்புகள் இருப்பதாக விளக்கியதும் அந்த அதிகாரி, "உண்மையிலே உங்கள் அணுகுமுறையில் எந்த விவேகமும் இருப்பதாகத் தெரியவில்லை; அவர்களிடம் தேவையான குறிப்புகளும் உள்ளன. உங்களுக்கு மேலதிக உத்தரவாதம் தேவைப்பட்டால், நான் அதை வழங்குகிறேன். நான் இதோ திரும்பி வருகிறேன், அனைவரும் தரை இறங்குவதற்கான அனுமதியை நீங்கள் உடனே தயாரிக்க விரும்புகிறேன்" என்று கூறி உள்ளே சென்றார்.

இது, அந்தக் கண்டிப்பான குடிவரவு அதிகாரியை வருத்தமுறச் செய்தது; ஆனால் அவர் தரை இறங்கும் அட்டைகளை உடனடியாக வழங்கினார். கப்பலின் அதிகாரிக்கு நன்றி தெரிவிக்க சாஞ்சி உள்ளே சென்றபோது, அவரைக் கண்டுகொள்ள முடியவில்லை. அவர் யார் என்று எவருக்கும் தெரியவுமில்லை. பாபாவின் எழுத்துப்பலகையின் பின்னால் உள்ள மகா சக்தியை ஏளனம் செய்த அமெரிக்க அதிகாரிக்கு இது குருநாதரின் ஆதாரம்.

மால்கம் ஸ்க்லோஸ் அனைவரையும் கப்பலுக்கு வெளியில் சந்தித்தார். பாபா ஓர் ஆலிவ் பச்சை நிற தொப்பி அணிந்திருந்ததால், அவரது தலைமுடி மறைக்கப்பட்டிருந்தது. அமெரிக்க மண்ணில் காலடி எடுத்து வைக்கும் போது, மால்கம் அவதார புருஷருடனான தனது முதல் சந்திப்பை இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

நான் மெஹர் பாபாவைப் புகைப்படத்தில் மட்டுமே பார்த்திருந்தேன், ஆனால் நான் அவரை முதலில் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. மெஹர் பாபா, தனது பெரிய, ஒளிரும் பழுப்பு நிற கண்களால், என்னைப் பார்த்து,

புன்னகைத்து, கைகளை நீட்டியபோது, அவர் யார் என்பதை உடனடியாகத் தெரிந்துகொண்டேன்.

எனது கைகள் சற்று தயக்கத்துடன் பாபாவை நோக்கிச் சென்றன. விவேகானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ணாவை முதலில் சந்தித்த கதை நினைவுக்கு வந்தது. சத்குரு ராமகிருஷ்ணா அவரைப் பார்க்க வந்தவரின் முழங்கால்களை தனது காலால் தொட்டார்; அந்த நேரத்தில், விவேகானந்தர் தனது நினைவை இழந்தார்; அருகிலிருந்த அனைத்தும் காணாமல் போனது. நானும் அதுபோன்ற அனுபவத்தை அடைய விரும்பினேன், ஆனால் கடவுளுக்குத் தெரியும், அந்த ஆனந்தத்தை அனுபவிக்க, கப்பல் மேடை ஒரு சரியான இடமல்ல என்று!

பாபா சிரித்துக்கொண்டே, "**மால்கம் நல்ல இதயம் படைத்தவர்**" என்று சைகையால் தெரிவித்தார். மால்கம் இரண்டு கார்களுடன் வந்திருந்தார், ஒன்றை கேதரின் கார்ட்னர் (CATHARINE GARDNER) என்பவரும் மற்றொன்றை லிலியன் வார்டால் (LILLIAN WARDALL) என்ற அமெரிக்கரும் ஓட்டி வந்தனர். அவர்கள் நியூயார்க் நகரத்திலிருந்து 40 மைல் வடக்கு திசையில் **ஹட்ஸன் நதிக்கரை**யில் அமைந்த **குரோட்டன்-ஆன்-ஹட்ஸன்** (CROTON ON HUDSON) எனும் சிறிய நகரத்திற்குச் சென்றனர். அங்கு, மெஹர் பாபா, மண்டலியுடன் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பாபா மாலை 5:30 மணிக்கு அங்கு வந்து சேர்ந்தார்.

மால்கம் ஸ்க்லோஸ் (37 வயது) ஒரு கவிஞர், சத்தியத்தை நாடுபவர். அவர் நியூயார்க் நகரில் ஆன்மீக இலக்கியத்தில் நிபுணத்துவம் பெற்ற 'நார்த் நோட்' (N0RTH NODE) புத்தகக் கடையை நடத்தி வந்தார். புத்தகங்கள் பெரும்பாலும், ஆன்மீகப் பாடங்களில், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளால் விரிவுரைகள் மற்றும் கல்வி பாடங்களைக் கொண்டதாக இருந்தது. அவரது மனைவி ஜீன் (38) அவரைப் போல் ஒரு நேர்மையான இறைபற்று மிக்கவர், ஒரு பத்திரிகையாளர், அவர் மேன்ஹாட்டனில் (MANHATTAN) ஒரு பத்திரிகையின் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

1930ஆம் ஆண்டு இறுதியில் புத்தகக் கடையில், மெஹர் பாபாவைப் பற்றி மால்கமிடம் குறிப்பிட்ட முதல் நபர், பாஸ்டன் நகரில் வாழ்ந்து வந்த ரிச்சர்ட் ஐஸக் மேயர் (RICHARD ISAAK MAYER) ஆவார். மேயர் ஒரு ஜெர்மன் குடியுரிமையாளர், பருத்தி நூல் வியாபாரி, திருமணம் ஆகாதவர்.

மெரடித் ஸ்டார் மற்றும் டெவன்ஷர் ரிட்ரீட் பற்றி மேயர், மால்கமிடம் கூறினார், மேலும் தியான மையத்தில் வாழ்க்கையை விவரிக்கும் ஒரு கடிதத்தின் நகலையும் அவரிடம் விட்டுச்சென்றார். மெரடித், மால்கம் இருவரும் தத்தமது ஆன்மீகக் கவிதைகளைப் பகிர்ந்து கொண்டனர்.

1931 மே மாதம், ரிச்சர்ட் மேயர், தாமஸ் வாட்ஸன் இருவரையும் மால்கம் பாஸ்டனில் சந்தித்த அவ்வேளையில் வாட்ஸன், மேயருடன் இணைந்து இங்கிலாந்திற்குப் பயணம் செய்ய திட்டமிட்டிருந்தார், மெரடித்தின் தியான மையத்தில் சிறிது காலம் தங்கவும் விரும்பினார். ஜூன் மாதத்தில், மால்கம், ஜீன் இருவரும் தங்கள் புத்தகக் கடையை விற்றுவிட்டு, நியூ ஹாம்ஷர் (NEW HAMPSHIRE) மாகாணத்தின் ஹேன்காக் (HANCOCK) நகரத்திற்குக்

குடிபெயர்ந்தனர். ஜூலை மாதம், அவர்களது நண்பர், பிரபல எழுத்தாளர் மேரி ஆன்டின் (MARY ANTIN) என்பவர், மைலோ ஷாட்டக் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்ததாகத் தெரிவித்தார். நெருங்கிய தனிப்பட்ட நண்பராக இருந்த மேரி ஆன்டினுடன் தொடர்பு கொள்ளுமாறு தாமஸ் வாட்ஸன், மைலோ ஷாட்டக்கிற்கு அறிவுறுத்தியிருந்தார். ஷாட்டக் இதுவரை பாபாவை சந்திக்கவில்லை, இருந்தாலும் பாபாவைப் பற்றி மெரடித்திடமிருந்து கேள்விப்பட்டிருந்தார். இதை அறிந்த மால்கம், ஜீன் இருவரும் மெஹர் பாபாவால் வெகுவாக ஈர்க்கப்பட்டனர்.

டேன் ருத்யார் (DANE RUDHYAR), கேதரின் கார்ட்னர், மேக்ஸ், லிலியன் வார்டால் (இவர்கள் அனைவரும் தியோஸொ:ஃபிஸ்டுகள்) மற்றும் பிறரிடம் மெஹர் பாபாவைப் பற்றிய விபரங்களைத் தெரிவிக்க, ஷாட்டக் இரண்டாவது முறையாக ஹேன்காக்கிற்கு வந்தார். அப்போதுதான் ஜீன், மால்கம் இருவரும் டெவன்ஷர் தியான மையத்திற்குச் செல்ல முடிவு செய்தனர். ஆனால் பாபா, அமெரிக்கா வரவிருந்ததால் மால்கம், ஜீன் தம்பதிகள் தங்கள் திட்டங்களை மாற்ற வேண்டியதாயிற்று. அதற்கு பதிலாக, அவர்கள் இங்கிலாந்து பயணத்திற்காகச் சேர்த்து வைத்த நிதி, மேலும் வாட்ஸன் வழங்கிய உதவித்தொகையில், பாபாவும் குழுவினரும் ஹார்மனில் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர், மெஹர் பாபாவின் வருகைக் குறித்து 350 பேருக்குத் தகவல் தெரிவித்து, குருநாதரை சந்திக்க அழைப்பு விடுத்தனர்.

ஹார்மன் ரிட்ரீட் செல்வந்தரான ஒரு பிராட்வே நாடக ஆசிரியர் மார்கரெட் மெயோவிற்குச் (MARGARET MAYO, 49) சொந்தமானது. மால்கம், ஜீன் இருவரின் தேவையை அறிந்து, மெஹர் பாபா அதைப் பயன்படுத்தும் நோக்கத்தில், மனமுவந்து அனுமதி அளித்தார். சிவப்பு நிற ஜன்னல் சட்டங்களைக் கொண்ட பெரிய, ஒதுங்கிய நான்கு படுக்கையறைகள் அமைந்த கல் வீடு, 180 பழைய அல்பானி போஸ்ட் ரோட்டில் (தெற்கு), குரோட்டன் நதியின் கிழக்குப் பகுதியில், அடர்ந்த மரங்கள் நிரம்பிய இடத்தில் அமைந்துள்ளது. பாபாவின் அறை (இரண்டாவது மாடியில் அமைந்த பிரதான படுக்கையறை) நதியின் ஓரத்தில் நீளமாக அமைந்திருந்தது.

மெஹர் பாபாவை வரவேற்க ஜீன், ஹார்மனில் காத்திருந்தார்; மெரடித் அவரை அறிமுகப்படுத்தவே, "நீங்கள் வந்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்," என்று ஜீன் கூறினார்.

"**நானும் இங்கே இருப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்**," என்று பாபா, ஜீனை அன்புடன் அரவணைத்துக் கூறினார். ஜீன், பாபாவை அவரது அறைக்கு அழைத்துச் சென்றார். பாபா, ஜீனின் கையில் இருந்த காயத்தைப் பார்த்து, '**என்னவாயிற்று**' என்று கேட்டார். அது லேசான வெட்டுக் காயம்தான் என்று பதிலளித்தார். "**நாளை அனைத்தும் சரியாகிவிடும்**" என்று பாபா சைகையால் தெரிவித்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில், ஜீன் இவ்வாறு விவரித்தார்:

பாபாவுடனான முதல் சந்திப்பைப் பற்றிய, எனது ஆழ் இதயத்தில் பொறிக்கப்பட்ட மிகச் சிறந்த எண்ணோட்டம், எனது கண்கள் அவரை சந்தித்தபோது, பாபாவின் பார்வை, அன்பு நிறைந்த, கனிவான, அடித்தளமற்ற ஏரியில் ஊடுருவிச் சென்றது. என் இதயம், மிகுந்த உற்சாகத்துடன் துடித்தது, சிறிது நேரம் என்னால் பேச முடியவில்லை. ஏதோ விவரிக்க முடியாத வகையில், எனது வாழ்வுக்குக் காரணம் அவரே என்பதை நான் உணர்ந்தேன்; இந்தத் தருணம் வரை, நான் உண்மையில் வாழவில்லை; அவர் எனக்கு மிகவும் பரிச்சயமானவர், மதிப்புமிக்கவர், மேலும் நான் அன்னியனல்ல, அவருக்கு மிகவும் பிரியமானவள் என்பதையும் உணர்ந்தேன்.

முதல் நாள் இரவு, உணவு வேளையில், மெஹர் பாபா முன்னிலையில் இருந்த சிலர் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். மெழுகுவர்த்தியின் மென்மையான ஒளியில் பாபா மேசையின் தலைமையில் அமர்ந்தார். மால்கம் அவரை இவ்வாறு விவரித்தார், "'ரெம்ப்ராண்டின் (REMBRANDT) கைவண்ணத்தில் உருவான ஜீஸஸின் ஓவியம்' உயிர்பெற்று வந்தது போல, பாபா உலகம் முழுவதையும் ஒளிரும் கண்களால் தேடினார்."

அடுத்த நாள் காலையில், பாபா, ஜீனிடம் ஹார்மன் ரிட்ரீட்டைப் (HARMON RETREAT) பற்றி விரிவாக விசாரித்தார்; மேலும் ஜீன் அவர்கள் தங்கியிருந்த இடத்தைத் திட்டமிடுவதன் மூலம், அவர்கள் கடந்து வந்த அனைத்து சிரமங்களையும் அவர் முன் வைத்தார்; ஆனால் பின்னடைவுகள் இருந்தும், பணியைத் தொடர்வதில் உறுதியாக இருந்தனர். "**கவலைப்படாதீர்கள்**" பாபா உறுதியளித்தார். "**அனைத்தும் சரியாகிவிடும். நான் உங்களை நினைத்து மகிழ்ச்சியடைகிறேன், ஆன்மீக ரீதியில் உங்களுக்கு உதவுவேன்.**"

ஜீன் ஒரு புத்திசாலி பெண்மணி, எதையும் செய்வதற்கு முன்னர் அனைத்தையும் ஆராய்ந்து, சிந்தித்து செய்வது வழக்கம். ஆனால் பாபா அவரிடம் மேலும் விளக்கினார், "**எல்லாவற்றிலும் விவேகத்தைப் பயன்படுத்துவது நல்லது. ஆனால் எந்தவொரு முடிவுக்கும் வருவதற்கு முன்பு, 'தலையை'** (HEAD) **விட 'இதயத்திற்கு'** (HEART) **அதிக முக்கியத்துவம் கொடுங்கள். இதயத்தின் தீர்ப்பிற்கு முதலிடம் தரவேண்டும். உங்களுக்கு மேன்மையான இதயம் உள்ளது. பிறருக்கு உதவ நீங்கள் எப்போதும் ஆர்வமாக உள்ளீர்கள். என்னிடமிருந்து வரும் 'ஒளியை' அடைந்த பின்பு, நீங்கள் எல்லாவற்றையும் மிகச் சிறப்பாகச் செய்ய முடியும்.**"

காலையில் தியானம், சுவாச பயிற்சிகள் செய்வதை வழக்கமாகக் கொண்ட மால்கம், இன்று அதை விட்டுவிட்டு, அருகிலமைந்த நகரமான குரோட்டனுக்கு, வேண்டிய பொருட்களை வாங்கிவரச் சென்றார். திரும்பி வந்தபோது, அவர் தனது மனைவி ஜீன் கண்ணீருடன் இருப்பதைக் கண்டார். "நான் அழவில்லை, அதாவது வார்த்தையின் வழக்கமான அர்த்தத்தில் அழவில்லை. பாபாவுடனான எனது முதல் நேர்காணலை நான் இப்போதுதான் முடித்தேன். அவருடன் சில நிமிடங்கள் அமைதியாக அமர்ந்திருக்குமாறு பாபா என்னிடம் கூறினார். நடந்ததை நான் வார்த்தைகளால் விவரிக்க முடியாது.

நீங்களாகவே பார்த்துக் கொள்ளுங்கள். பாபா எனக்குள் மிகவும் ஆழமான ஒன்றைக் கிளறி விட்டார்; புரியும்படியாக எந்தக் காரணமும் இல்லாமல் நான் திடீரென அழுதேன் - பரவசம் நிறைந்த இதயத்தில் ஆனந்தக்கண்ணீர் பெருக்கெடுத்தது. நீங்களும் அதை அனுபவிப்பீர்கள்."

மால்கம், ஜீன் இருவரையும் பாபா அழைத்ததாகவும், மால்கம் காலையில் வெளியே சென்றதை ஜீன் விளக்கிய போது, அவர் அவ்வாறு செய்ததில் பாபா மகிழ்ச்சியாக இல்லை என்பதையும் தெரிவித்தார். இதன் மூலம், 'ஒருவர் எதையும் செய்வதற்கு முன்பு, முதலில் குருநாதரை அணுக வேண்டும்' என்று சாஞ்சி விளக்கினார். இது குருநாதரை எவ்வாறு மகிழ்விப்பது என்பதைக் குறித்து ஜீன், மால்கம் இருவருக்கும் அளிக்கப்பட்ட முதல் பாடமாகும்.

பிற்பகலில் மால்கம், விறகு வெட்டிக் கொண்டிருந்த போது, சாஞ்சி, மெரடித், அலி ஆகியோருடன் பாபா வெளியே உலாவ வந்தவர், மேலும் காடுகளின் வழியாக நடந்து செல்ல, அவர்களுடன் மால்கமும் இணைந்தார். கீழ் வானில் சூரியன் மறைந்து கொண்டிருந்தது, அருகில் நீல நதியும், அடர்-பச்சை சைப்ரஸ் மரமும் குருநாதர் முன்னிலையில் திகைப்படையச் செய்தன. ஒரு கணம் நின்று, பாபா அவரது எழுத்துப்பலகையை வெளியே எடுத்து, மால்கம் பக்கம் திரும்பி, "**நான் கடவுள்**" என்று உச்சரித்தார்.

"எனக்குத் தெரியும்," என மால்கம் அமைதியாக பதிலளித்தார்.

"**நான் ஆதிகால புருஷன்**" என்று பாபா உச்சரித்தார். அவர் வேறு வேறு வண்ணங்களில் ஒளிர்விடும் வானத்தைச் சுட்டிக்காட்டி, "**இதெல்லாம் மாயை. அனைத்தும் உங்களுக்குள் உள்ளது**" என்று சைகையால் காண்பித்தார்.

மால்கம் தனக்கு பல உள் அனுபவங்கள் இருந்ததாக பாபாவிடம் கூறினார், இது அவரை பாபாவின் கூற்றை ஏற்றுக்கொள்ள வழிவகுத்தது. பாபா சைகையால் தெரிவித்தார், "**அவை ஒரு குறுகிய நேர காட்சி மட்டும்தான்; நீங்கள் அவற்றை நிரந்தரமாக்க வேண்டும்**, **நான் உங்களுக்கு உதவுவேன்**."

ஹார்மன் ரிட்ரீட் மற்றும் அருகிலமைந்த இதர தங்கும் விடுதிகளில் பலர் தங்கியிருந்தனர். மேக்ஸ் வார்டால், அவரது மனைவி லிலியன் (பாபாவைக் கப்பல் தளத்தில் சந்தித்தவர்) இருவரும் பாபாவை சந்திக்க வந்திருந்தனர். மேக்ஸ் (52 வயது) ஒரு வழக்கறிஞராக இருந்தவர், ஆன்மீகப் பாதையில் நாட்டம் கொண்டு, கிழக்கத்திய சிந்தனை குறித்த பல கட்டுரைகளையும், புத்தகங்களையும் எழுதியிருந்தார். அவர்களின் இந்த சந்திப்பின் போது, பாபா மெதுவாக மேக்ஸின் கையைத் தொட்டு சிறிது நேரம் அழுத்தினார்.

அதற்குப் பிறகு பாபா, '**மேக்ஸ் எப்படி உணர்ந்தார்**' என்று கேட்க "நான் முழு பிரபஞ்சத்திலும் ஒருவனாக உணர்கிறேன்," என்று அவர் பதிலளித்தார். "நான் எனது தந்தை, தாய். எனக்குத் தெரிந்த அனைவரையும் உங்களில் பார்க்கிறேன்! அனைத்தும் உங்களிடம் உள்ளது. உங்கள் வருகையால் நான் மிகவும் மாறிவிட்டேன் - மிகவும் சிறப்பாக உணர்கிறேன். உங்களுடன் இருப்பது மிக்க ஆறுதலை அளிக்கிறது."

ஒரு சந்தர்ப்பத்தில், பாபா மேக்ஸிற்கு விளக்கினார்: **“ஆன்மீகப் பாதையில் நான்கு நிலைகள் உள்ளன: முதலில் நம்பிக்கை; பிறகு துறவறம், இறை அனுபவம்; நான்காவது, இயல்பான மனித உணர்வை மீண்டும் அடையப்பெறுதல். இறை உணர்வைத் தொடர்ந்து வரும் கடைசி நிலை, கிறிஸ்துவைப் போல, பிரபஞ்சத்திற்கான கடமையை உள்ளடக்கியது.”**

மேக்ஸ் ‘தியோஸொஃபிகல் மெஸஞ்சர்’ (THEOSOPHICAL MESSENGER) பத்திரிகைக்கு வழக்கமான எழுத்தாளராக இருந்தார்; மேலும் கிருஷ்ணமூர்த்தி, அன்னி பெஸன்ட் (ANNE BESANT), சார்லஸ் லெட்பெட்டர் (CHARLES LEDBETTER) ஆகியோருடன் இந்தியா முழுவதும் பயணம் செய்தார். அவர் கிருஷ்ணமூர்த்தியைக் குறித்து பாபாவிடம் கேட்டபோது, பாபா, **“சிலர் நினைப்பது போல் அவர் ஆன்மீகப் பாதையில் அந்த அளவுக்கு முன்னேறவில்லை. அவர் நல்லது செய்கிறார், ஒரு நாள் என்னிடம் வருவார்”** என்று கூறினார்.

“ஆமாம், அவருக்கு உங்கள் உதவி தேவை” என்று மேக்ஸ் பதிலளித்தார்.

**“ஆன்மீகப் பாதையில் முன்னேற நான் அவருக்கு உதவுவேன்”** என்று பாபா உறுதியளித்தார்.

கிருஷ்ணமூர்த்தி இளைஞனாக இருந்தபோது, பல தியோஸொஃபிஸ்டுகளால் நவீன உலகின் மெஸையா என்று பாராட்டப்பட்டார்; என்றாலும், அவர் அத்தகைய தவறான கூற்றுக்களை ஏற்றுக்கொள்ளவில்லை. 1931 செப்டம்பரில், பாபாவின் அமெரிக்க வருகையைக் குறித்து மால்கம், கிருஷ்ணமூர்த்திக்குக் கடிதம் எழுதினார். கிருஷ்ணமூர்த்தி ஹாலந்திலிருந்து தனது நன்றியைத் தெரிவித்து, அவர் அமெரிக்காவில் மெஹர் பாபாவை சந்திக்க மிகவும் விரும்புவதாக பதிலளித்தார். மேலும் அவர் தனது வாழ்த்துக்களையும் பாபாவிற்குத் தெரிவித்தார்.

கேத் கார்ட்னர் (CATH GARDNER, 46) சமையல், சுத்தம் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஹார்மனில் தங்கியிருந்தார். பாஸ்டன் நகரில் வாழ்ந்த அலைஸ் கிரீன் (ALICE GREEN) என்ற அவரது நண்பரும் ஒரு வாரம் தங்கியிருந்தார். கேத், அலைஸ் அவரது கணவர் செஸ்டர் (CHESTER) ஆகியோர் கலிஃபோர்னியாவின் ஓஹாயில் (OJAI) அமைந்த குரோட்டோனா தியோஸொஃபி (KROTONA THEOSOPHY) நிறுவனத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர், இதன் நோக்கம் ஆன்மீக விஷயங்களைக் கற்றறிந்து, ஓர் எளிய வாழ்க்கையை வாழும் வழிமுறைகளைத் தெரிந்து கொள்வதாகும். அவர்களின் பல்லாண்டு கால உழைப்பு, பலனை வழங்காததால், கேத் அவருக்கு வழிகாட்ட ஒரு குருநாதரைத் தேடிக்கொண்டிருந்தார். மெஹர் பாபாவின் முன்னிலையில் இருந்த வேளையில், “நான் ஒரு குருநாதருக்காகக் காத்துக்கொண்டிருந்தேன், இப்போது நான் அவரைக் கண்டுகொண்டேன்!” என்றார்.

ஒரு நாள், 'எளிய' வாழ்க்கையை நடத்துவது குறித்து பாபா, கேத்திற்கு இவ்வாறு விளக்கினார்:

**எளிமையான வாழ்க்கையை வாழ்வது பற்றிப் பேசும்போது, மக்கள் எப்பொழுதும் தவறிழைக்கிறார்கள். அத்தகைய வாழ்க்கையை வாழ்வது மிகவும் கடினம். வெளியளவில், ஒருவர் சாதாரண ஆடைகளை அணிந்து, எளிய உணவை உட்கொள்ளுவது எளிய வாழ்க்கையை வாழ்வதாகாது! ஒருவர் அனைத்து ஆசைகளிலிருந்தும் விடுபட்டு, முற்றிலும் வெளிப்படையான மனப்போக்கில், கள்ளம் கபடமற்ற வாழ்க்கையை வாழ்வதே எளிய வாழ்க்கை.**

**வெறுமனே வெளியளவில் எளிமையாக வாழ்வதால் என்ன பயன்? ஆசைகள் மற்றும் ஏக்கங்களின் ஆடம்பர உடை உடுத்தி, அகந்தையாகிய விருந்தை உண்பதால் என்ன பயன்? எளியதொரு வாழ்க்கையை நடத்துவதன் உண்மையான அர்த்தம் என்னவெனில், அறவே ஆசையற்றவனாக மாறுவது; இது கடவுள் மீதான அன்பின் உணர்வு இல்லாமல் சாத்தியமாகாது.**

மால்கம், ஜீன் இருவரின் நெருங்கிய நண்பரான ஜூலியன் லமார் (JULIAN LAMAR, 38), என்ற உருவப்பட ஓவியரும் ஹார்மனில் தங்கியிருந்தார். பாபாவைப் பார்த்ததும் அவர் ஆச்சரியத்தில், "உங்கள் கண்களில் எவ்வளவு பிரகாசம்! உங்கள் முகத்தில் என்ன ஒரு பளபளப்பு! இதை, சித்திரமாக வரையவோ, புகைப்படமாக எடுக்கவோ முடியாது! உங்கள் புகைப்படம் உங்கள் உண்மையான அழகை ஒருபோதும் பிரதிபலிக்காது. நீங்கள் எனக்காக அமர விரும்பினால் உங்கள் சித்திரத்தை வரைய முயற்சிப்பேன்" என்றார்.

பாபா சைகையால் தன்னையே சுட்டிக்காட்டி, "**இது அசல் சித்திரம் அல்ல! எனது அசலும், உண்மையுமான உருவப்படம் மிகவும் வித்தியாசமானது, அதைத் துல்லியமாகச் சித்தரிக்க, நீங்கள் உங்கள் சொந்த சித்திரத்தை அழித்தாக வேண்டும்.**"

பாபா கூறியதன் அர்த்தம் வரையறுக்கப்பட்ட அகந்தை எனும் மனதை நிர்மூலமாக்குவதாகும். "இது எனது அறிவுத்திறனுக்கு அப்பாற்பட்டது" என்று லமார் ஒப்புக்கொண்டார். "நான் உங்களைப் பார்க்கும்போது மட்டுமே சித்திரம் வரைய முடியும், ஆனால் அதற்கு உங்கள் அனுமதி தேவை." பாபா அவருக்கு அனுமதி அளித்தபோது, லமார் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

1931, நவம்பர் 9 திங்களன்று, முதன்முதலாக மெஹர் பாபாவை, நியூயார்க் நகரத்தைச் சேர்ந்த ஜேம்ஸ் கிரஹாம் ஃபெல்ப்ஸ் ஸ்டோக்ஸ், (JAMES GRAHAM PHELPS STOKES, 59) அவரது மனைவி லெட்டிஸ் (LETTICE, 38) இருவரும் சந்தித்தனர். பாபாவை சந்திப்பதில் ஆர்வம் காட்டுவார்கள் என்று நினைத்த பலரை மால்கம், ஜீன் இருவரும் தொடர்பு கொண்டனர்.

கெலாக் (KELLOGG) பரம்பரையின் வாரிசான ஜூனியர் ஸ்பென்ஸர் கெலாக் என்பவரும் இவர்களில் ஒருவர். இவரது செயலாளர் ஆன் சி. கிளார்க்

(ANN C. CLARK), ஸ்டோக்ஸின் குடும்ப நண்பர், இறை-மனிதர் (ஸ்ரீ பாபா) அமெரிக்காவிற்கு வருவதைப் பற்றி முதலில் இவர்களிடம் கூறினார். ஸ்டோக்ஸ் 1927 முதல் மால்கம், ஜீன் இவர்களின் புத்தகக் கடைக்கு வழக்கமான வாடிக்கையாளராக இருந்தார்.

கிரஹாம் ஸ்டோக்ஸ் ஓர் ஆரம்பகால இலட்சியவாத, சமூக சீர்திருத்தவாதி, நியூயார்க்கின் செல்வந்தர், சமூக மதிப்புமிக்க வங்கி குடும்பங்களில் ஒன்றைச் சார்ந்தவர். அவர் ஒரு சிறந்த விளையாட்டு வீரராகத் திகழ்ந்து, பிரபல யூத ஸோஸலிஸ்ட், பெண்ணினவாதியான ரோஸ் பாஸ்டர் (ROSE PASTOR) என்பவரை மணந்தார். பயிற்சி பெற்ற மருத்துவரான ஸ்டோக்ஸ் அந்த நேரத்தில் ஏழைகளுக்கு உதவுவதோடு, புக்கர் டி. வாஷிங்டனின் ஆரம்பகால 'உள்நாட்டு உரிமை திட்டத்திற்கு' ஆதரவளித்து வந்தார். மேலும் அவர் டஸ்கீகி (TUSKEGEE) இன்ஸ்டிடியூட்டின் குழுவில் சக பரோபகாரர் ஆண்ட்ரூ கர்னேகியுடன் (ANDREW KARNE KI) பணியாற்றினார்.

1905ஆம் ஆண்டு, ஸ்டோக்ஸ் கிழக்கத்திய சிந்தனையில் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டு, வேதாந்தா ஸொஸைட்டியின் அமெரிக்க கிளையில் இணைந்தார். 25 ஆண்டுகளாக அவர் தனது வீட்டில் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் 'கூட்டங்களை' நடத்தினார், அங்கு ஒரே தரப்பு சிந்தனையாளர்கள், ஆன்மீக ஆர்வலர்கள் சொற்பொழிவுகளை வழங்கி, தியானத்தில் ஈடுபட்டனர். 1926ஆம் ஆண்டில், இனயத் கானின் (INAYAT KHAN) அமெரிக்க பிரதிநிதி ரபியா மார்ட்டின் (RABIA MARTIN) அவருக்கு ஸூஃபியிஸத்தின் மேம்பட்ட இலக்கியங்களை அனுப்பி வைத்தார்.

1931 ஜனவரி மாதத்தில், ஸ்டோக்ஸ், விஸ்வநாத் கேஸ்கர் எழுதிய 'வாழ்க்கைத் தூண்கள்' (PILLARS OF LIFE) என்ற விரிவுரை புத்தகத்திற்கு எழுதிய முன்னுரையில் இப்படிக் குறிப்பிட்டிருந்தார்: "அனைத்து பிரபலமான கிழக்கத்திய வல்லுநர்களும், வாழ்க்கை ஒன்று என்ற தத்துவத்தை முன் வைத்தனர். மேலும் இதை உணர்ந்து, அதன் நோக்கத்தை நிறைவேற்றும் வழிமுறைகளை அறிந்து, அதன் இறுதி இலக்கான இறை உணர்வை அடைவதைப் பற்றியும் குறிக்கிறது." எனவே மெஹர் பாபாவை சந்திப்பதில் அவர் மிகவும் ஆவலாக இருந்தார். மேலும் பாபா, நியூயார்க் நகரத்திற்குச் செல்லும் போதெல்லாம் கிரீன்விச் கிராமத்தில் அமைந்த அவரது இல்லத்தில் தங்குமாறு அவரை அழைத்தார். அவரது அன்பான அழைப்பை பாபா ஏற்றுக்கொண்டார்.

இன்னுமொரு முக்கியமான நபர், இளவரசி நோரினா மாட்சபெல்லி (PRINCESS NORINA MATCHEBELLI), இளவரசர் ஜார்ஜஸ் மாட்சபெல்லியின் இத்தாலிய மனைவி, ஜார்ஜியாவின் தேசிய வீராங்கனை, ரஷ்ய புரட்சிக்குப் பிறகு, தனது நாட்டிற்காக போராடியவர். 1923 டிசம்பர் மாதத்தில், கணவன், மனைவி இருவரும் அமெரிக்காவிற்குக் குடிபெயர்ந்தனர். அங்கு நோரினா, நியூயார்க்கில் மேடை நாடகங்களை நிகழ்த்தினார்; அதேவேளையில் ஜார்ஜஸ் இளவரசர் 'மாட்சபெல்லி' வாசனை திரவிய நிறுவனத்தைத் தொடங்கினார்.

நோரினா ஓர் இளம் பெண்ணாக, அவருடைய முதல் கணவர், ஜெர்மன் எழுத்தாளர் கார்ல் வால்மொல்லர் (KARL VOLLMOELLER) எழுதிய 'தி மிராக்கிள்' (THE MIRACLE) என்ற அவரது ரோமன் ஊமை நாடகமான 'மடோனா'வில் (MADONNA) மடோனாவின் பாத்திரத்தில் நடிக்க, நோரினாவை (மரியா கார்மி - MARIA CARMI என்ற மேடைப் பெயரைப் பயன்படுத்தி) ஆஸ்திரிய மேடை இயக்குனர் மேக்ஸ் ரைய்ன்ஹார்ட் (MAX REINHART) தேர்வு செய்தார். இந்த நாடகம் 1,000 முறைகளுக்கு மேல் நிகழ்த்தப்பட்டது ஓர் அற்புதமான வெற்றியாகும். ரோமானிய கத்தோலிக்கரான நோரினா, 1914ஆம் வருடம் ரோம் நகரில் போப் அவர்களையும் நேரடியாக சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றார். அவர் 25-ற்கும் மேற்பட்ட இத்தாலிய ஊமைப்படங்களிலும் நடித்தார். அமெரிக்காவில், 'தி மிராக்கிள்' (THE MIRACLE) தயாரிப்பில் அவர் தொடர்ந்து நடித்து வந்தார். 'மடோனா' என்ற பாத்திரத்தில் நடித்ததிலிருந்து, அவர் ஓர் ஆழ்ந்த ஆன்மீக ஏக்கத்தை, தன்னுள்ளே வளர்த்துக் கொண்டார்.

நோரினா, ஜீன் அட்ரியலின் நீண்டகால தோழி. பாபாவின் வருகையைக் குறித்த அனைத்தையும் தயார் செய்ய ஜீன் ஹார்மனுக்குப் புறப்படுவதற்கு ஒரு நாள் முன்பு, நியூயார்க் இல்லத்தில் நோரினாவைப் பார்க்கச் சென்றிருந்தார். நோரினா நேரடியாக, ஒளிவு மறைவின்றி அவரிடம், "இந்த 'குருநாதர்' யார்? நீ யாருடைய பாதங்களில் வணங்கப் போகிறாய்?" என்று கேட்டதும், ஜீன் பாபாவைப் பற்றியும், இங்கிலாந்தில் தாமஸ் வாட்ஸன் அவர்களின் ஆழ்ந்த அனுபவத்தைப் பற்றியும் அவரிடம் விளக்க முயன்றார், ஆனால் நோரினா, அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

நோரினா, ஜீனிடம், "ஒரு மனிதன், தன்னை 'குருநாதர்' என்று அழைத்தாலும் கூட, எப்படி உன்னால் அவருடைய பாதங்களில் விழுந்து வணங்க முடியும்?" என்று கேட்டார். நம்மைப் போன்ற பெண்களுக்கு - ஆழமான ஆன்மீக உள் அனுபவங்களை அடையப் பெற்ற நமக்கு - கடவுளை அடையும் வழியைக் காட்ட, எந்த ஒரு மனிதனும் தேவையில்லை. இதுபோன்ற முட்டாள்தனத்திற்குள் உன்னை எப்படி இழுத்துச் செல்ல அனுமதிக்க முடியும்?" ஜீன் வெளியேறும்போது, நோரினா கிண்டலாகக் குறிப்பிட்டார், "சரி, எனது அன்பு தோழி, உன்னுடைய 'குருநாதர்' வரும்போது, நான் அவரை சந்திக்க வேண்டும். நானும் அந்த வாட்ஸனைப் போல் அழ வேண்டும்!"

ஜீன் எடுத்துரைத்த விளக்கங்கள் நோரினாவிற்கு விசித்திரமாகவும், வேடிக்கையாகவும் தோன்றியது, ஆனால் மிகுந்த குழப்பத்தில் ஆழ்ந்தார். பாபாவின் வருகைக்கு மூன்று நாட்களுக்குப் பிறகு, நோரினா, ஹார்மனில் ஜீனுடன் தொலைபேசியில் பேசினார், "என்னில் ஏதோ விசித்திரமான ஒன்று நிகழ்கிறது. மெஹர் பாபா அமெரிக்க மண்ணில் பாதங்களைப் பதித்த அந்த நேரத்திலிருந்து, நான் தொடர்ந்து அழுது கொண்டிருக்கிறேன். அவரைப் பார்க்க நீ வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும்."

ஹார்மனில் பாபாவை நோரினா சந்தித்தபோது, பரவசத்தின் கண்ணீர் அவரது கன்னங்களை நிரப்பியது; அவர், 'இளவரசி' என்ற சுய ரூபத்தை முற்றிலும் மறந்துவிட்டார். அவருடைய வாழ்க்கை பாபாவிற்குச் சொந்தமானது,

அவர் தன்னை முழுமையாக அவரது பாதங்களில் அர்ப்பணித்தார். அதற்குப் பின்னர், அந்த முதல் சந்திப்பைப் பற்றி நோரினா இவ்வாறு விவரித்தார்:

(மெஹர் பாபாவை சந்தித்த) அந்த அனுபவத்தை வார்த்தைகளில் வெளிப்படுத்த முடியுமா என்று நான் சந்தேகிக்கிறேன். நான் அவரைப் பற்றிக் கேள்விப்பட்ட வேளையில், சந்தேகம் என்னை ஆட்கொண்டது. நான் எத்தனையோ குருநாதர்களை சந்தித்து பின்பற்றிய போதும், அவர்களில் ஒருவரும் (ஆன்மீகப் பாதையைப் பற்றி) எனக்கு உறுதியளிக்கவில்லை. இறுதியில், நான் ஒரு நண்பருடன் ஹார்மனுக்குச் செல்ல ஒப்புக்கொண்டேன்.

நான் மெஹர் பாபாவின் அறைக்குள் நுழையும்போது, அவரை சூழ்ந்து சீடர்களும், பக்தர்களும் அமர்ந்திருந்தனர். அந்தத் தருணத்தில், அதிசயமும் அழகும் நிறைந்த ஓர் அனுபவம் என்னை ஆட்கொண்டது. திடீரென நான் ஓடிச்சென்று அவரது காலடியில் தரையில் விழுந்து அழுதேன், அழுதேன் அழுது கொண்டே இருந்தேன்! ஓ, நான் அப்படி அழுதது மட்டுமின்றி சிரிக்கவும் ஆரம்பித்தேன்; எனது கன்னங்களில் ஓடிய கண்ணீர் ஓடைகள், சிரிப்பின் ஒலிகள் அனைத்தும் ஒன்றாக மாறியது. நான் பாபாவின் கையில் தலையை வைத்துக் கொண்டிருந்தேன், என் உடல் முழுவதும் விடுதலை அடைந்தது போல பயங்கரமான சத்தங்களுடன் அதிர்ந்து.

இறுதியில், நான் அமைதியாக இருந்தேன். பாபா, பின்னர் எனது முகத்தை அவரது கைகளில் ஏந்தி, நீண்ட நேரம் எனது கண்களில் - ஒன்றிலும், தொடர்ந்து மற்றொன்றிலும், மறுபடியும் முதல் கண்ணிலும் - உற்று நோக்கினார்.

பின்னர் அவர் எழுத்துப்பலகை வழியாக என்னிடம் பேசினார். அவரது முதல் வார்த்தைகள்: '**நான் ஆணாக**, **பெண்ணாக**, **குழந்தையாக இருக்கிறேன்**. **நான் பாலினமற்றவன்**.' சிறிது நேர இடைவெளிக்குப் பின்னர், எனது முகத்தை அவர் அருகில் கொண்டு வந்து, '**அஞ்ச வேண்டாம்**' என்று உச்சரித்தார்.

ஒரு நம்பமுடியாத மகிழ்ச்சி என்னில் பரவியது. நான் அடுத்த அறைக்குச் சென்று ஒரு ஸோஃபாவில் சாய்ந்தேன், இடைவிடாது மகிழ்ச்சி பொங்க அழுதேன். திடீரெனக் கதவைத் திறந்து பாபா உள்ளே வந்தார். ஓர் உண்மையான குருநாதரிடம் என்னை அர்ப்பணம் செய்யாவிட்டால், எனது வாழ்நாள் முழுவதும் அர்த்தமற்றதாகிவிடும் என்று இப்போது எனக்குத் தெரியும், எனவே நான் அவரிடம், "பாபா, தயவுசெய்து என்னை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்" என்று மன்றாடினேன்.

"**இவ்வளவு விரைவில் இல்லை**" என்று பாபா கூறிய வார்த்தைகளை நான் உணர்ந்த போது, துக்கத்தில் உயிரைத் துறந்திருக்கலாம்.

ஒரு குழந்தையாக, நோரினாவிற்கு, கடவுளைப் பற்றிய அனுபவம் இருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில், அவர் இதை நினைவு கூர்ந்தார்:

எனது குழந்தை பருவத்திலிருந்தே நான் கடவுளைப் பற்றி அறிந்தேன். எனக்கு பன்னிரண்டு வயதான போது, அவர் இயேசு கிறிஸ்துவாக வந்து என்னிடம் பேசினார். என்னுள் விழிப்படையத் தொடங்கிய இந்த அன்பு, ஆன்மீக அன்பின் மிக உயர்ந்த வடிவத்தை நிறைவேற்றுவதற்கு இன்றியமையாதது என்று அவர் மேன்மைமிகு ஞான வார்த்தைகளில் எனக்கு விளக்கினார்.

அவர் மறக்க முடியாத வார்த்தைகளில் என்னிடம் பேசினார்: "நான் உங்களை முதலாவதாகவும், கடைசியாகவும் நேசிப்பவன்!"

இந்த வார்த்தைகளின் முக்கியத்துவத்தை நோரினா முதன்முதலில் மெஹர் பாபாவை சந்தித்தபோது, அவரை கிறிஸ்துவின் ஆளுமை என்று அங்கீகரித்ததை முழுமையாக உணர்ந்தார். இந்த சம்பவத்தை அவர் எந்தத் தருணத்திலும் குறிப்பிடாத போதும், பாபா, **"உங்கள் இலக்கை நோக்கி அழைத்துச் செல்ல கிறிஸ்துவின் வடிவத்தில் நானே உங்களிடம் வந்தேன்"** என்று தெளிவாக எடுத்துரைத்தார். அவர்களது முதல் சந்திப்பிலிருந்து, குருநாதர், நிபந்தனையற்ற நம்பிக்கையை நோரினா மீது நிலைநாட்டியது வாழ்நாள் முழுவதும் நீடித்தது.

மேரி ஆன்டின் (MARY ANTIN, 50) 'தி பிராமிஸ்ட் லேண்ட்' (THE PROMISED LAND) என்ற புகழ்பெற்ற புத்தகத்தின் ஆசிரியர், ஹார்மன் ரிட்ரீட்டில் ஜீனுக்கு உதவியாக இருந்தார். மேரி ஒரு நேர்மையான, அன்பான இறை பற்றுள்ள பெண்மணி, இதற்கு முன்பு பல ஆண்டுகளாக மனரீதியாக அவதிப்பட்டவர், வெவ்வேறு சுகாதார நிலையங்களில் சிகிச்சை பெற்றார்.

1923ஆம் ஆண்டு இறுதியில், 'அடிமேல் அடி வாங்கி சுக்கு நூறாக சிதைந்த வேளையில், நான் மருத்துவர்களைக் கைவிட்டு, ஆன்மீக ரீதியில் இறைவனை எண்ணி, பிரார்த்தனையில் மூழ்கினேன்.' இந்தத் தருணத்தில் தான், மேரி, மெஹர் பாபாவைப் பற்றி மைலோவிடமிருந்து கேள்விப்பட்டு, அவர் மெரடித்திற்குக் கடிதம் எழுதி, ஊக்கமளிக்கும் பதிலைப் பெற்றார். மெஹர் பாபாவின் வருகையின் போது, அவர் கண்களில் வழிந்த கண்ணீரை அவரால் விவரிக்க முடியாத நிலையில், இனம் புரியாத மகிழ்ச்சியால் மேரி கொந்தளித்தார். ஒரு நாள் அவர் தனது 24 வயது மகள் ஜோஸஃபின் கிரேபாவுடன் (JOSEPHINE GRABAU) தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அவரும் பாபாவை சந்திக்க வேண்டும் என்று கூறினார். ஜோஸஃபின், தாயைப் போல மன அழுத்தத்தால் அவதிப்பட்டார்.

1931, நவம்பர் 10 அன்று 'ஜோ' என்ற ஜோஸஃபின், பாபாவின் அறைக்குள் அழைத்துச் செல்லப்பட்ட வேளையில், தயக்கத்துடன் காணப்பட்டார். சாஞ்சி அவரிடம் அஞ்ச வேண்டாம் என்று கூற, பாபா தனது கையை அவரிடம் நீட்டினார், ஜோ, பாபாவின் காலடியில் மண்டியிட்டு அமர்ந்தார். 'அவரது ஒளிரும் கண்களில் நான் தொலைந்துவிட்டேன்,' என்று அவர் நினைவு கூர்ந்து தொடர்ந்தார், "முதல் பார்வையில் கிட்டத்தட்ட நான் அவரை அறிந்திருக்கிறேன் என்பதை உணர்ந்தேன். இங்கே, உயிரே உருவான கிறிஸ்துவை நான் கண்டேன். எனது மனதில் சிறிதளவு சந்தேகமும் இல்லை... பாபாவை சந்திப்பது, வானுலகத்திற்குச் சென்று, இறைவனை சந்திப்பது போன்றது. அவர் மென்மையானவர், கனிவானவர், அழகானவர், புனிதமானவர், அனைத்திற்கும் மேலாக, இயல்பானவர்."

அவர் ஏதேனும் கேட்க விரும்புகிறாரா என பாபா சைகையால் கேட்டார். ஜோ, உடனே மக்களுக்கு உதவ விரும்புவதாக பதிலளித்தார். "**முதலில், நீங்கள்**

**உதவுவது எப்படி என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும்**” என்று பாபா அமைதியாக எடுத்துரைத்தார்.

ஹார்மன் ரிட்ரீட்டில் ஜோ, தனது தாய்க்கு உதவியாக இருக்கும் வாய்ப்பைப் பெற்றார். மார்கரெட் மெயோவின் இதர வீடுகளில் ஒன்றில் (ரிட்ரீட்டுக்கு அருகில்) அவருக்கு ஓர் அறை வழங்கப்பட்டது. ஆனால் ஜோ அங்கு இருந்த முதல் நாள் இரவு, ஒரு மணியளவில் அந்த வீடு மர்மமாக, நெருப்புக்கு இரையாகி, தரைமட்டமாக்கப்பட்டது. வீட்டில் இருந்த எவருக்கும் காயம் எதுவும் இல்லை, வந்த விருந்தினர்களில் ஒருவரும் வருத்தப்படவுமில்லை, ஏனெனில் இது அவர்களுக்கு, பாபா தங்கியிருந்த வீட்டிற்குச் செல்ல ஒரு வாய்ப்பாக அமைந்தது. இதனால், மெஹர் பாபாவுடன் ஒரே வீட்டுக் கூரையின் கீழ் இரவைக் கழிக்க முடிந்தது.

அடுத்த நாள், 1931, நவம்பர் 11, பாபா அனைவரையும் தனது அறைக்கு அழைத்து ‘**எவரேனும் காயமடைந்தீர்களா?**’ என்று கேட்டார். ‘இல்லை, அனைவரும் நன்றாக உள்ளோம்’ என்று உறுதியளித்ததும், பாபா விளக்கினார், “**நான் செல்லும் இடத்தில் இப்படி ஏதாவது நடப்பது உண்டு!**”

மெஹர் பாபா பின்னர், எரிந்து சாம்பலான கட்டிடத்தைப் பார்வையிடச் சென்றார். பாபா, ஜீனிடம், “**நம்மை விருந்தினராக ஏற்றுக்கொண்ட வீட்டு உரிமையாளர், ஏதேனும் நிதி இழப்பை சந்திப்பாரா?**” என்று கேட்டார்.

“இல்லை, இல்லை; மாறாக, விருந்தினர் மாளிகையை விட அவருக்கு இப்போது அதிக பணம் தேவைப்படுகிறது; மேலும், காப்பீட்டு நிறுவனம் அவருக்கு வழங்கும் தொகையால் மிக்க பயனடைவார்” என்று அவர் பதிலளித்தார்.

பாபா அதைக் கேட்டுத் திருப்தி அடைந்து கூறினார், “**இந்த அனுபவத்தின் மூலம் எவரும் கடுமையாக பாதிக்கப்பட மாட்டார்கள் என்பதால், இதைக் குறித்து நாம் மகிழ்ச்சியடைய வேண்டும். இது ஒரு நல்ல அறிகுறி. தீ விபத்தில் தங்கள் பொருட்களை இழந்தவர்கள் ஒரு ‘புது’ வாழ்வைத் தொடங்குவார்கள். அவர்களில், உடைமைகளைக் காப்பாற்ற முடிந்தவர்கள், அவர்களின் ‘புது’ வாழ்வைத் தொடங்க காத்திருக்க வேண்டும்.**”

வந்தவர்களில் சிலர் தீ விபத்தில் பணத்தை இழந்ததை அறிந்த பாபா அவர்களிடம் இவ்வாறு எடுத்துரைத்தார், “**கிறிஸ்து இதைவிட அதிகம் கேட்டார். அவர் தன்னிடத்தில் வந்தவர்களிடம், ‘அனைத்தையும் விட்டுவிட்டு என்னைப் பின்பற்றுங்கள்’ என்று கூறினார்.**”

56 வயதான பெர்லி பூர் ஷீஹன் (PERLEY POORE SHEEHAN) என்ற வெற்றிகரமான நாவலாசிரியரும், திரைக்கதை எழுத்தாளரும் நவம்பர் 10ஆம் தேதி பாபாவை சந்தித்தார், மறுநாள் அவரை சந்திக்க வந்த ஆறு நபர்களில் நோரினா, அனிதா டி காரோ (ANITA DE CARO) என்ற இளம் பெண்ணையும் அழைத்து வந்தார். அனிதா ஒரு திறமையான கலைக்கல்லூரி மாணவி, அதில் நோரினா

ஆர்வம் காட்டி, நிதி உதவியும் செய்தார். ஒரு சந்தர்ப்பத்தில், அனிதா, மெஹர் பாபாவுடன் நடந்த தனது முதல் சந்திப்பை நினைவு கூர்ந்தார்:

நான் கத்தோலிக்கராக வளர்க்கப்பட்டேன். திடீரென, பாபாவைப் பார்க்கப் போகிறேன் என்று தெரிந்ததும் நான் பயந்து போனேன். நான் நினைத்தேன்: 'பாபா ஒரு பெரிய மதத்தைச் சார்ந்த மனிதர் என்றால், நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? அவருடன் நான் கைகுலுக்க முடியாது; எனவே, செய்ய வேண்டியது எல்லாம், முழங்கால்களில் நின்று, சிலுவையின் குறியை விரலால் வரைந்து, "என்னை வாழ்த்துங்கள், தந்தையே!' என்று கூறி அவருடைய கைகளில் முத்தம் பதிக்க வேண்டும் என்று தீர்மானித்தேன்.

என் இதயம் அச்சத்தால் நடுங்கியது. கதவு திறந்தது. பாபா பாரசீக பாணியில் (கால்களைக் கீழே வைத்து) அமர்ந்திருந்தார். நான் அவரைப் பார்த்தும், இனம் புரியாத சிரிப்பு என்னை ஆட்கொண்டது; நான் சிரித்துக் கொண்டே என்னை அவர் மீது வீசினாற்போல் அவரிடம் சென்றேன். "எனது வானுலகின் தந்தையே! இது நீங்களா?" என்று நான் கதறி, "நீங்களா இப்படி முகமூடி அணிந்து என்னை பயமுறுத்தினீர்கள்! இதை என்னால் நம்ப முடியவில்லை!" என்று நான் சிரித்தேன், சிரித்துக் கொண்டிருந்தேன்.

மெஹர் பாபா தனது கைகளை நீட்டி என்னை அழைத்தார். நான் உணர்ச்சிவசப்பட்டு, மெய்மறந்து நின்றேன்; ஆனால் மிகுந்த மகிழ்ச்சியில் இருந்தேன். எனது முழு உடலும் ஓர் உலை போல் உணர்ந்தேன். நடந்ததை நான் வார்த்தைகளால் விவரிக்க முடியாது. நான் எப்பொழுதுமே அறிந்த ஒருவரை சந்திப்பது போலத் தோன்றியது, நான் என் உண்மையான இருப்பிடத்திற்கு வந்ததைப் போல் ஒரு நினைப்பு. நான் ஒரு சிறப்பான அழகையும், மிகுந்த மகிழ்ச்சியையும் அனுபவித்தேன்.

அவர்களின் முதல் சந்திப்பில், பாபா, அனிதாவிடம், "**நான் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?**" என வினவினார்.

அதற்கு அவர், "நீங்கள் அனைத்து நற்குணங்களுக்கும் ஆதாரம்" என்று பதிலளித்தார். நோரினா, பாபாவைப் பற்றி ஏற்கனவே அனிதாவிடம் அனைத்தையும் விளக்கியிருந்தார், மேலும் அனிதா தொடர்ந்தார், "எனது மனதிலிருந்த பல விஷயங்களை நான் உங்களிடம் கேட்க விரும்பினேன், ஆனால் இப்போது நான் உங்கள் அருகில் இருக்கும் போது, அது என்னால் முடியவில்லை; மட்டுமின்றி அதற்கு எந்த அவசியமும் இல்லை."

பாபா உடனே, "**ஆம், என்னால் மணிக்கணக்கில் விளக்க முடியும், ஆனால் உங்களைப் போலவே விஷயங்களை ஆழமாக உணரும் ஒருவருக்கு வார்த்தைகளும் விளக்கங்களும் தேவையில்லை**" என்று பதிலளித்தார்.

பாபா, அனிதாவின் விருப்பங்களைப் பற்றி விசாரித்தார்; அதற்கு அவர் ஒரு கலைஞர் என்று சொன்னபோது, "**நீங்கள் என்னை வரைய முடியுமா?**" என வினவினார்.

அதற்கு அனிதா, "நீங்கள் மிகவும் சௌந்தர்யமாக இருக்கிறீர்கள், சித்திரம் வரைவது மிகவும் கடினம்" என்று பதிலளித்தார். ஆயினும், இரண்டு

நாட்களுக்குப் பின்னர், அவரது முகத்தை வரைவதற்கு முயன்றார். பலமுறை அதற்காக அமர்ந்த போதிலும், பாபாவின் முக பாவனைகள் மாறிக்கொண்டே இருந்ததைக் கண்ட அனிதா, சித்திரத்தை முடிக்காமல் விட்டுவிட்டார்.

அனிதா பின்னர் அந்த சம்பவத்தை இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

நான் உருவப்பட ஓவியம் வரைய உண்மையில் கற்றதில்லை, ஆனால் அதைச் செய்ய பாபா எனக்கு வழிகாட்டினார். அவரை ஓவியமாக வரைவது, ஒரு சிறந்த அனுபவமாக இருந்தது, ஏனெனில் எப்பொழுதும் மாறிக்கொண்டே இருக்கும் ஒன்றை, தடுத்து நிறுத்த முடியாது என்பதை நான் புரிந்து கொண்டேன். சித்திரம் வரைய எவ்வளவு நேரம் பிடித்தது என்றும் என்னால் சொல்ல முடியாது, ஏனெனில் அவர் முன்னிலையில் நேரத்தைப் பற்றிய உணர்வும் இல்லை. பாபா என்னைப் பார்த்தபோது நான் எல்லா நேரத்தையும் இழந்தேன். அவரைப் பற்றிய அனைத்தும் எப்பொழுதும் மாறிக்கொண்டே இருந்தன - பாபாவின் கண்கள், அவரது நிறம், வெளிப்பாடுகள் அனைத்தும்; இது எனக்கு ஒரு பெரிய மர்மமாகவே இருந்தது.

நான் பாபாவிடம், “ஒருவரால் உங்களைச் சித்திரம் வரைவது சாத்தியமற்றது, ஏனெனில் உங்கள் வெளிப்பாடு ஒவ்வொரு கணமும் மாறுகிறது. நீங்கள் ஒருபோதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை!” என்றேன்.

பாபா, சிரித்துக் கொண்டே, “**ஆமாம், நீங்கள் சொல்வது சரிதான். நான் எப்பொழுதும் மாறிக்கொண்டே இருக்கிறேன்; மாற்றம் ஒன்றுதான் எனக்கு நிலையானது**” என்று கருத்துத் தெரிவித்தார்.

‘எப்போதும் மாறிக்கொண்டே இருப்பதன்’ அர்த்தம் என்ன என்பதை நான் நீண்ட காலத்திற்குப் பின்னரே புரிந்துகொண்டேன், அதுதான் வாழ்க்கை - வாழ்வின் தெய்வீக நாடகம்!

வேறொரு சந்தர்ப்பத்தில், பாபா, ஹார்மனில் இருந்த குழுவிடம், “**நான் நித்திய மகிழ்ச்சியாக இருக்கிறேன்...**” என்று குறிப்பிட்டார்.

அனிதா இடையே குறுக்கிட்டு, “ஓ, நீங்கள் அதை எங்களுக்குச் சொல்லத் தேவையில்லை! நீங்கள், உங்களுடைய இதே முகத்தோடு இருக்கவேண்டும்; என்ன பேரின்பம்! கண்களைப் பாருங்கள், அவை, வார்த்தைகளை விட அதிகம் பேசும் - என்ன பிரகாசம்! என்ன ஓர் ஊடுருவும் தன்மை! புரிந்து கொள்ளும் கருணை நிறைந்த கண்கள் - சந்தேகத்திற்கு இடமின்றி நீங்கள் நிலையான மகிழ்ச்சியுடன் இருக்கிறீர்கள்.” அனிதா, அனைவராலும் அன்புடன் வரவேற்கும் தன்மை படைத்தவராக இருந்தார், மேலும் அவரது உயிரோட்டமிக்க மனோபாவம் பாபாவை மகிழ்வித்தது.

மெஹர் பாபா தினமும் ஹார்மனில் மேலும் பல பார்வையாளர்களை சந்தித்தார். அவர்களில் கிட்டியின் தங்கை ஏஞ்சலா லேம்பெர்ட் (ANGELA LAMBERT), லண்டனில் பாபாவைப் பார்க்க முடியாமலாயிற்று. ஹென்றி ஸ்டெய்னரும் (HENRY STEIGNER) அன்று பாபாவை சந்தித்தார்.

1931, நவம்பர் 15 அன்று, ஐரோப்பா வழியாக இந்தியா வருவதற்கான பயண ஆவணங்கள் குறித்து, பாபா மேன்ஹாட்டனுக்கு அழைத்துச்

செல்லப்பட்டார். நியூயார்க்கின் நகர கல்லூரியின் தலைவர் டாக்டர் ஃப்ரடெரிக் பி. ராபின்ஸனின் (Dr. FREDERICK B. ROBINSON) இல்லத்திற்கு விஜயம் செய்தார். அங்கு அவர் பல புதிய நபர்களை சந்தித்தார். பின்னர் அவர் 88, குரோவ் வீதியில் அமைந்த ஸ்டோக்ஸ் இல்லத்தில் இரண்டு நாட்கள் தங்கி இருந்தார். நியூயார்க் நகரில், அவர் தொடர்பில் வந்தவர்களில் மைலோ ஷாட்டக், கிரேஸ் மான், ஜூலியன் லமார், அனிதாவின் தாயார் ஜாக்குலின் டி காரோ, ஒரு தீவிரமான கத்தோலிக்கர், பாபாவை நேரில் பார்த்தபோது ஏதோ ஒரு சிறப்பான அம்சத்தை உணர்ந்தார்.

அனிதாவின் தாயார் மிகவும் உடல்நலமின்றி, மரணத்தை நினைத்து அஞ்சினார்; ஆனால், பின்னர் அவர் தனது மகளிடம், “நான் பாபாவை சந்தித்ததிலிருந்து, ஆத்மா, ஆவி இவற்றின் நிலைப்பாட்டை உணர்கிறேன்” என்று கூறினார்; மேலும் அனிதா, பாபாவிற்கு எழுதினார், “எனது தாயாரிடம் ஏற்பட்ட ஆன்மீக மாற்றம் ஆச்சரியமாக இருக்கிறது. உங்கள் பெயரை எப்பொழுதும் அவர் உச்சரிப்பதும், உங்கள் புகைப்படத்தைத் தலையணையின் கீழ் வைத்துக் கொள்வதும் வழக்கமாகிவிட்டது.”

கிட்டி, ஹெர்பெர்ட் இவர்களின், (நியூயார்க்கில் வாழும்) இரண்டு நெருங்கிய இசைக்கலை நண்பர்கள் மிஸ் வாலண்டைன் (MISS VALENTINE) மற்றும் டேவிட் ஷெர்ரி (DAVID SHERRY) பற்றியும் சாஞ்சிக்கு எழுதியிருந்தார். இருவரும், பாபா நியூயார்க் நகரத்தில் இருந்தபோது அவரை சந்தித்தனர்.

மெஹர் பாபாவின் ‘சிறந்த சிறுவனைத் தேடும் பணி’ அமெரிக்காவிலும் தொடர்ந்தது. ஜிம்மி எஸ். பார்ஸ்டவ் (JIMMY S. BARSTOW), எனும் பன்னிரெண்டு வயது சிறுவனை பாபா பெரிதும் விரும்பினார். இரண்டு வாரங்கள் அவனை உடன் வைத்துக்கொள்ள விரும்பினாலும், பள்ளிக்கூடம் செல்லும் சிறுவன் ஆகையால், விடுமுறை நாட்களில் மேலும் இரண்டு முறை பாபாவைப் பார்க்க, பெற்றோர் அழைத்து வந்தனர்.

எலிஸபெத் சேப்பின் (ELEZABETH CHAPIN - 35 வயது), கென்னத் பேட்டர்ஸன் (KENNETH PATTERSON) என்ற பிரபல நியூயார்க் பங்குச்சந்தை தரகரை மணந்தார்; மேலும் இவர் ஒரு வெற்றிகரமான காப்பீட்டு நிர்வாகத்தின் உரிமையாளராக இருந்தார். பெரும் செல்வந்தரான இவர், இந்தியா உட்பட உலகெங்கும் பயணம் செய்தார்.

எலிஸபெத் பேட்டர்ஸன் (ELEZABETH PATTERSON) சிறுவயதிலிருந்தே மதத்தில் மிக்க நாட்டம் கொண்டவர்; மால்கம், ஜீன் இவர்களின் புத்தகக் கடையின் வாடிக்கையாளராக இருந்தார். ஜீன் எழுதிய கடிதம் வழியாக, மெஹர் பாபாவைப் பற்றி முதன்முதலில் கேள்விப்பட்டார். 1931 நவம்பர் 17, காலை, ஜீன், எலிஸபெத்தைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பாபா வந்துவிட்டதைத் தெரிவித்து, அவரை சந்திக்க அழைப்பு விடுத்தார், “மெஹர்

பாபா உங்களைப் பார்க்க விரும்புகிறார்," என்றார். அதே நாள் எலிஸபெத், தனது நண்பருடன் மெஹர் பாபாவை சந்திக்கச் சென்றார்.

மெரடித் ஸ்டார், எலிஸபெத்தை பாபாவின் அறைக்கு அழைத்துச் சென்றார். எலிஸபெத் பாபாவுடனான முதல் சந்திப்பை விவரித்தார்:

பாபாவைப் பார்த்ததும், உடனடியாக என் உணர்வு, பாபா பரிச்சயமானவர், நன்கு அறிந்த ஒருவர் என்ற அங்கீகாரத்தை எனக்கு அளித்தது. அறையில், அவர் அமர்ந்திருந்த தூரத்தைக் கடக்கும் அந்தக் குறுகிய நேரத்தில், நான் இதற்கு முன்னர் அவரை எங்கே பார்த்தேன் என்பதை நினைவில் கொணர முயற்சித்தேன். இந்த உணர்வு, ஓர் அந்நிய தேசத்தில் நண்பர் ஒருவரை சந்திப்பது போன்ற நெருக்கமான ஒன்றாகும் - சிறுவயதிலிருந்தே ஒருவர் நன்கு அறிந்த ஒரு நண்பர், ஆனால், முந்தைய காலத்திலிருந்த தோற்றம் இப்போது மாறிவிட்டது.

இன்னும் நினைவுகூரும் முயற்சியில், நான் பாபா அமர்ந்திருந்த இடத்திற்கு நடந்து சென்றேன், அவருக்கு முன்னால் காலணிகளோடு கால்களை மடித்து அமர்ந்த வேளையில், அவரது அழகான கூந்தலில் சூரிய ஒளி பிரகாசித்தது; அவரது குறிப்பிடத்தக்க கண்கள், ஒரு பாரசீக அச்சு வடிவத்தை எனக்கு நினைவூட்டின; ஆனால், அவை ஆயிரமாயிரம் நடனமாடும் தீபங்களின் உயிர் பெற்று இருந்தன; இதற்கு முன்பு நான் பாபாவைப் போல் ஒருவரையும் பார்த்ததில்லை என்பதை உணர்ந்தேன். எனது உலகப் பயணங்களில் எங்குமே அவரைப் போன்ற தோற்றத்தை நான் பார்த்ததில்லை, அவர் எந்தத் தேசத்துடனும் பொருந்தும் சாயலாகவும் தென்படவில்லை.

இத்தனை அருகில் சென்று, நான் கண்டு உணர்ந்தவை அனைத்தும் மறையும் தருவாயில், அவர் அருகில் அமரும்படி புன்னகையுடன் எனக்கு சைகையால் தெரிவித்தபோது, நான் அளவிலா நிம்மதியில் இயல்பாக இருந்தேன். அவருடைய மௌனம் எனக்கு விசித்திரமாகவோ, விகாரமாகவோ தோன்றவில்லை. அவருடைய புன்னகை ஒன்றே ஒருவரை அடிபணியத் தூண்டும் விதத்தில் அமைந்தது. அவருடைய அல்லது என்னுடைய எந்தவொரு தனிப்பட்ட ஆளுமையும் எங்களைப் பிரிப்பதாக நான் உணரவில்லை.

பாபாவின் அருகில் நான் அமர்ந்திருந்ததை, இயற்கையான அமைதி சூழ்ந்த உணர்வுடன், ஒரு பெரிய மலை அடிவாரத்தில் அமைந்த அமைதியான குளத்தின் அருகில், புதிதாக பிறந்து அமர்ந்திருப்பது போல் ஒப்பிட்டுப் பார்த்தேன். இந்த உணர்வு ஒருபோதும் என்னை விட்டு விலகவில்லை.

பாபா எழுத்துப்பலகை வழியாக, அவரைப் பார்த்ததில் மிக்க மகிழ்ச்சியடைந்ததாக எடுத்துக் கூறினார். அதற்கு எலிஸபெத், "நான் உங்களை முன்பு சந்தித்த இடத்தை நினைவுகூர முயற்சிக்கிறேன்" என்று பதிலளித்தார்.

மெரடித் குறுக்கிட்டுக் கூறினார், "பாபாவை முதன்முறையாக சந்திக்கும் பலருக்கு இதுபோன்ற 'நினைவு' வருவதுண்டு, ஏனெனில், அதற்கு, அவர்களின் முந்தைய வாழ்க்கையிலிருந்த பழைய 'தொடர்புகளே' காரணம்." எலிஸபெத், பாபாவிடம் கேட்க ஏதேனும் கேள்விகள் உள்ளனவா என்று மெரடித் விசாரித்தார். நியூயார்க் நகரில் வாழும் நோய்வாய்ப்பட்ட ஒரு நண்பர், ஃபுளோரன்ஸ் லீ

(FLORENCE LEE) பற்றி எலிஸபெத் பாபாவிடம் கூறியபோது, பாபா, அதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை, இந்த விஷயத்தை அவரிடம் விட்டுவிட வேண்டும் என்றும் உறுதியளித்தார், அடுத்த முறை ஹார்மனுக்கு வரும்போது ஃபுளோரன்ஸை உடன் அழைத்து வருமாறு அவருக்கு உத்தரவிட்டார்.

மிகவும் நிதானமாக இருந்த எலிஸபெத், அவரது கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார். 'இப்போது என்னுடைய பல கேள்விகள் மனதில் தொலைந்து போயின' என்பதை பாபா புரிந்து கொண்டார். 'அவரது பதிலை எனது மனதில் நேரடியாகப் பெறுவது' போன்ற எண்ணம் எனக்கு இருந்தது, அதே நேரத்தில் மெரடித்தின் குரலில், எழுத்துப்பலகையில் வேகமாக நகரும் விரல் வழியாக வரும் பதில்கள், வெறும் எதிரொலி போலத் தோன்றியது.

பத்து நிமிடங்களுக்குப் பின்னர், எலிஸபெத்தின் முதல் நேரடி சந்திப்பு முடிவுக்கு வந்தது. அவர் பாபாவுடன் கைகுலுக்கி விடைபெற்றார், "நான் மிக்க மகிழ்ச்சியாக இருந்தேன், படிக்கட்டுகளில் இறங்கும்போது, எனது கால்கள் படிகளைத் தொடுவதாகத் தெரியவில்லை, மிகவும் இலகுவாக உணர்ந்தேன்!"

எலிஸபெத், மெஹர் பாபாவின் ஆசீர்வாதத்திற்காக மட்டுமே வந்திருந்தார், ஆனால், பாபாவைப் பார்த்ததும், அவர் வலையில் சிக்கிக்கொண்டார். பாபாவின் நேரடி தொடர்பில் வருவதன் மூலம், எலிஸபெத் ஒரு முறை, "நான் வாழ்வைப் பரிசாகப் பெற்றேன்" என்று கூறினார்.

பாபா, அமெரிக்காவிற்கு வந்த முதல் நாளிலிருந்தே, ஹார்மன் ரிட்ரீட்டில் தங்கியிருந்த ஒவ்வொருவரும் மூன்று நிமிடங்கள் பாபாவுடன் மௌனமாக அமர தனித்தனியாக அழைக்கப்பட்டனர். இந்த வேளையில், தவறாமல், அனைவருடைய கண்களிலிருந்தும் கண்ணீர், மடை திறந்த வெள்ளம் போலப் பெருக்கெடுத்து ஓடியது. மேலும் அங்கிருந்த சூழ்நிலைகள் ஆனந்தத்தால் வியாபித்திருந்ததை பலர் உணர்ந்தனர். பாபாவுடனான அந்த அரிய தருணங்களைப் பற்றி, மால்கம் நினைவு கூர்ந்தார்:

ஒரு நேரத்தில் ஒன்று, இரண்டு, அல்லது மூன்று நிமிடங்கள், நாங்கள் அவருடன் அமைதியாக இருந்தோம். அந்த மௌன நேரங்களில், நாங்கள் எப்போதுமே எட்டாத உள்ளத்தின் ஆழத்தைத் தொட்டோம். அமைதியான பரவசத்தின் கண்ணீர் எங்கள் கண்களிலிருந்து வழிந்தது. அந்த விலைமதிப்பற்ற தருணங்கள், கண்ணீரின் பரிசால் முடிசூட்டப்பட்டவை, ஆழ் இதயத்திலிருந்து மர்மமாகத் தோன்றிய கண்ணீரை அளவிடவோ, மறக்கவோ முடியாது. நாங்கள் ஆனந்தத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட போது, அவை உடலின் பிணைப்புகளை வெடிக்கச் செய்வது போலத் தோன்றும் வரை, எங்கள் இதயங்கள் பரந்து விரிந்தன. அவ்வேளையில் பாபா, அவரது எழுத்துப்பலகையில் எழுப்பிய திடீர் ஒலி நம்மை, நேரமும், வெற்றிடமுமான தற்காலிக உலகிற்கு, காரணம் மற்றும் விளைவின் நூலை மீண்டும் எடுத்து, மாற்றம் எனும் தறியில் எங்கள் தனிப்பட்ட வடிவங்களை நெசவு செய்ய, மீண்டும் அழைத்து வந்தது.

நான் எனது வாழ்க்கையில், ஒருபோதும் யாரிடமிருந்தும் உத்தரவுகளை இணக்கமான முறையில் பெற்றுக்கொண்டது கிடையாது. ஆயினும் பாபாவின்

ஒரு சிறிய ஆசை கூட, ஒரு புனிதமான நம்பிக்கை, தவிர்க்க முடியாத கட்டளையைப் போலத் தோன்றியது. இது, ஆமாம், குருநாதர் - சீடர் எனும் உறவின் அடிப்படை சிந்தனைக்கு மாற்றப்படுவதற்கு முன்னர் இருந்த மனோபாவம்.

மெஹர் பாபாவின் அன்பை அதிகமாக உணரவில்லை என்று கவலைப்பட்ட ஜீனிடம், பாபா கூறினார்: **"இதயம் அல்லது மனம் வறண்டு போனதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். இரண்டும் 'உலர்ந்து' இருப்பது நல்லது, அவற்றிலுள்ள அசுத்தங்கள் விலக்கப்பட்டு, தெய்வீக அன்பின் நீரோட்டத்தால் நிரப்பப்பட வேண்டும்."**

அன்று மாலை, அனைவரும் பாபாவின் அறைக்கு வந்து, பத்து நிமிடங்கள் பாபாவைச் சுற்றி அமைதியான தியானத்தில் அமர்ந்திருந்தனர். சாஞ்சி அவரது இயல்பாய்வுத் திறனை வகைப்படுத்தும் விதத்தில், அன்பர்களுக்கு 'ஆன்மீக மருந்து' வழங்கப்படுவது போன்ற கருத்தை எடுத்துரைத்தார். உண்மையில், சில நிமிடங்களுக்குப் பிறகு, பலர் அதன் விளைவால் மயங்கிய நிலையில் இருந்தனர்.

ஹார்மனில் தங்கியிருந்த காலத்தில், அனைவருக்கும் ஆன்மீக விஷயங்களை விளக்கிய பின்பு, பாபா, **"தூங்குவதற்கு முன்னர், உங்கள் மனதில், கடைசி எண்ணம் என்னைப் பற்றியதாக இருக்க வேண்டும், பிறகு நீங்கள் தூங்கச் செல்லலாம்"** என்று அறிவுறுத்தினார்.

1931, நவம்பர் 17 இரவு, மெரடித் ஸ்டார், மால்கமின் அறைக்கு வந்து மீண்டும் பாபாவின் செய்தியை நினைவூட்டினார். 'குருநாதர் - சீடர் உறவு' பற்றி மால்கம் இந்த நேரத்திலும் சந்தேகத்திற்குரியவராக இருந்து, பாபாவின் அறிவுறுத்தலுக்கு இணங்க மாட்டேன் என்று சபதம் செய்தார். இருப்பினும், மால்கம் தூங்கச் சென்ற வேளையில், அவரது கடைசி சிந்தனை பாபாவைப் பற்றியே அமைந்தது. அடுத்து என்ன நடந்தது என்பதை அவரது வார்த்தைகளில் சிறப்பாக விவரிக்கப்பட்டுள்ளது:

எனது கண்களில் நீர் வழிய, மெஹர் பாபாவின் உண்மையான இயல்பு மற்றும் நோக்கம் பற்றி, எனது மனதில் தோன்றிய உணர்வுடன் நான் தூக்கத்திலிருந்து விழித்தேன். இதை என்னால் ஒருபோதும் வார்த்தைகளால் விவரிக்க முடியவில்லை. சத்குரு கபீர் கூறியது போல்…

'அதை ஒருபோதும் நாவின் வார்த்தைகளால் சொல்ல முடியாது;'

'அதை ஒருபோதும் காகிதத்தில் எழுத முடியாது.'

கிருஷ்ண பெருமான் அர்ஜுனனுக்கு வெளிப்படுத்தியது போல, பாபா அவரது தெய்வீக தன்மையை எனக்கு வெளிப்படுத்தினார் - இத்துடன் எனது மனத் தடைகள் அகன்று, முழுமனதோடு பாபாவை நான் ஏற்றுக்கொண்டு சரணடைந்தேன். பாபா யார், அவருடைய பணி என்ன என்பதை நான் அறிவேன்; அவருக்கு சேவை செய்வது எனது விதி என்பதையும் நான் அறிவேன்.

மறுநாள் காலை உணவுக்குப் பிறகு நடந்த உரையாடலின் போது, மற்றுமோர் உலகப் போர் உருவாகும் என்று பாபா தெரிவித்தார்: **"போர் என்பது**

**எனது வெளிப்பாட்டிற்கும், பின்னர் அதைத் தொடர்ந்து உருவாகும் புதிய, சிறந்த உலகின் பிறப்புக்கும் தேவையான முன்னோடியாகும்.**" இது குறித்து பாபாவிடம் அங்கிருந்தவர்கள் கேள்வி எழுப்பி, விவாதம் முடிவடைந்த நிலையில், மால்கம் அறைக்குள் நுழைந்தார்.

பாபா, மால்கமை அரவணைத்து, இரவில் அவர் நன்றாகத் தூங்கினாரா என்று ஒளிரும் கண்களுடன் குறும்புத்தனமாக வினவினார். மால்கம் தலையசைத்து, "பாபா, நேற்று இரவு எனக்கு நீங்கள் தோற்றமளித்ததைப் போல், ஏன் எல்லோருக்கும் உங்களை வெளிப்படுத்தக்கூடாது? பின்பு போர் என்ற பேச்சுக்கு இடமே இராது!" என்று கூறியதும், பாபா புன்னகைத்து மீண்டும் மால்கமைத் தழுவினார்.

தூங்குவதற்கு முன்னர் அவரை நினைவில் கொள்வது பற்றிய மெஹர் பாபாவின் எளிய அறிவுறுத்தல், ஹார்மனில் தங்கி இருந்தவர்கள் இடையே இதைப்போன்ற உயர்ந்த அனுபவங்களுக்கு வழிவகுத்தது. ஜீன், நாள் முழுவதும் அவருள் ஆற்றல் மிக்க ஒளிர் கதிர்கள் ஊடுருவுவதை உணர்ந்தார். நவம்பர் 18ஆம் நாள் அவரை அறையில் ஓய்வெடுக்கும்படி பாபா கூறியிருந்தார்; அங்குப் பிரியமான பாபாவை தன்னுடன் எந்நேரமும் உணர்ந்ததாகவும், கண்களைத் திறந்து அல்லது மூடியபடி பாபாவைப் பார்க்க முடிந்தது என்றும் கூறினார்.

அத்தகைய ஓர் அனுபவத்திற்குப் பிறகு, மேரி, பாபாவிடம், "நீங்கள் புதிய படைப்பின் இறைவன், இயேசு!" என்று கூறினார்.

பாபா, '**ஆமாம்**' என உறுதி படுத்தும் விதத்தில் தலையசைத்து, "**ஆம், நான் அவரேதான்**" என்று பதிலளித்தார்.

மெஹர் பாபாவுடன் வாழ்நாள் முழுவதும் தொடர்பில் இருந்த மற்றுமொரு முக்கிய நபர், கவுண்ட் லியோ டால்ஸ்டாயின் (COUNT LEO TOLSTOY, ரஷ்ய எழுத்தாளர்) மருமகள் நதியா டால்ஸ்டாய் (NADIA TOLSTOY) ஆவார். 48 வயதான நதியா தனது கணவர் இலியாவுடன் அப்பகுதியில் வாழ்ந்து வந்தார். நதியா ஒரு ரஷ்ய குடி உரிமைக்காரர், பெட்ரோகிராட் பல்கலைக்கழகத்தில் (UNIVERSITY OF PETROGRAD) இசை பயின்றார்; பல மொழிகளை அறிந்தவர். விசித்திரமான இலக்கியம் மற்றும் ஆழ்ந்த தத்துவத்தில் ஆர்வம் கொண்ட நதியா, ஆன்மீகத்தில் உண்மையான நாட்டமுள்ளவர்; ஆனால் எத்தனையோ புத்தகங்களைப் படித்தும், அது அவருக்குத் திருப்திகரமாக இல்லை; அவர் எப்பொழுதும் இக்காலகட்டத்தில் வாழும் குருநாதரைத் தேடி அலைந்தார்.

நதியாவின் நண்பர்கள் மால்கம், ஜீன் ஆகியோர், மெஹர் பாபாவின் வருகையைப் பற்றி அவருக்கு தெரிவித்தபோது, 1931 நவம்பர் 19ஆம் நாள் அவர், ஹார்மனுக்கு வந்தார். மெஹர் பாபாவை தரிசனம் செய்த முதல் பார்வையிலேயே "என்னுடைய தேடல் முடிந்துவிட்டது!" என்று கூறினார்.

நதியா டால்ஸ்டாய் பின்பு பாபாவால் நதீன் (NADINE) என்ற செல்லப்பெயரால் அழைக்கப்பட்டார். அவரது முதல் சந்திப்பு பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

நான், பாபா இருந்த மேல் அறைக்குச் செல்லும் படிகளில் ஏறும்போது, 'ஓம்' என்று உச்சரித்தது எனக்கு நினைவிருக்கிறது. நான் அறைக்குள் நுழைந்ததும், அறையின் சற்று தொலைவில் இருந்த திவானில், அந்த மர்மமான, நீண்ட காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவர், தெய்வீக புதிரான - உண்மையான ஒருவர், கால்களை நீட்டிக்கொண்டு அமர்ந்திருந்ததைக் கண்டேன்.

எளிமையான, இலகுவான, மெல்லிய, சிறிய, ஒளிரும் இளமையுடன், மிகவும் பணிவு நயம் வாய்ந்த, ஆனால் விசித்திரமான, மர்மமான, தெளிவான தோற்றத்தில் தென்பட்டார். அவர் கிட்டத்தட்ட சிறுவயது இளமையைக் கொண்டிருந்தார், ஆனால் உயர்ந்த, தூர பார்வையுடன், புரிந்துகொள்ள முடியாத ஆழத்தில், பிரகாசிக்கும் கண்களில் தூய ஒளியுடன் புன்னகைத்தார். வெல்ல முடியாத, தனித்துவம் மிக்க வெளிப்படையான தூய்மை நிறைந்த தோற்றம்!

அவர் எனக்கு எதையோ நினைவூட்டினார், யாரோ ஒருவர், எனக்கு வெகு தொலைவில் தெரியக்கூடிய, ஆனால் பார்வையில் பிடிக்க முடியாதபடி இருந்தார். அவர் எனது ஆழமான நினைவாற்றலை சவால் செய்வது போல் உணர்ந்தேன்; அவரது முழுத் தோற்றமும், ஆளுமையும், 'உங்களுக்கு என்னை நினைவில்லையா? கடந்த காலத்திலிருந்து என்னை நினைவில் கொள்ளவில்லையா?' என்று கேட்டதை அறிந்தேன். அவர், எனது வாழ்க்கையின், எனது மறுமலர்ச்சியின் ஆதாரம் என்பதைத் தெளிவாக உணர்ந்தேன்.

**"நீங்கள் நீண்ட காலமாக எனக்காகக் காத்திருக்கிறீர்கள், இப்போது நான் வந்துவிட்டேன், நான் உங்களுக்கு உதவுவேன்"** என்று மெஹர் பாபா எழுத்துப்பலகையில் தெரிவித்தார். நதீன், தன்னைப் பற்றி பாபாவிடம் சொல்லத் தொடங்கியதும், பாபா **"எனக்கு எல்லாம் தெரியும்"** என்று கூறி, **"நான் உங்களுக்கு உதவுவேன்"** என்று மீண்டும் மீண்டும் குறிப்பிட்டார்.

நதீன் சில ஆன்மீகப் பயிற்சி முறைகளை - கிரியா யோகா போன்ற பயிற்சியை, சுவாமி யோகானந்தாவின் கண்காணிப்பில் செய்து வந்தார். பாபா மிகவும் தீவிரமான தோற்றத்துடன் அவருக்கு விளக்கினார், **"இது போன்ற பயிற்சி மேற்கத்திய நாடுகளுக்கு அல்ல - உங்களுக்காக அல்ல."** தொடர்ந்து பாபா, அவருடன் சில நிமிடங்கள் அமைதியாக அமரும்படி கேட்டுக்கொண்டார். நதீன் இதை நினைவு கூர்ந்தார்:

பாபாவுடனான அந்த குறுகிய தியானத்தின் போது, அவர் எனக்கு உதவுகிறார், என்னை ஆய்வு செய்கிறார் என எனக்குத் தெரியும். அவருடைய ஆழமான பார்வையை நான் உணர்ந்தேன்; அதையும் தாண்டி, எனது திறந்த புத்தகத்தைப் படிப்பதையும் அறிந்தேன் - பாபா எனக்குள் பணிபுரிகிறார். அவர் எனக்கு குருநாதர் என்பதும் தெரியும்.

என் ஆத்மாவை அவர் உடனடியாக அங்கீகரித்தது, முழுமையான நம்பிக்கையின் உணர்வை உருவாக்கியது. ஆறுதலளிக்கும் விதத்தில், அவர்தான் உண்மையானவர், உதவக்கூடியவர் என்று எனக்குத் தெரியும். நாம் கேள்வியே கேட்காமல் பிரகாசிக்கும் சூரியனைப் போல் அவர் இருந்தார். அவர்

எளிமையாகவும், இயல்பாகவும், எனது வாழ்விலும், கண்ணுக்குப் புலப்படாத உயிரிலும் நுழைந்தார்.

நான் அங்கிருந்து புறப்பட்டபோது, திடீரென அவர் 'கிருஷ்ண பரமாத்மா' என்பது தெளிவானது; அவரது மகிழ்ச்சியும், அமைதியான தோற்றமும், அவரது அனைத்து பாவனைகளும், 'ஏதோ' எனக்குத் தெரிந்தது போலத் தோன்றும் உணர்வும் இதை வெளிப்படுத்தியது. அவர் அன்புடன் புரிந்துகொள்ளும் உண்மை, அவரைப் பின்பற்றுவதற்காக எனக்குக் கொடுத்த அன்பு மற்றும் நடைமுறை அறிவுறுத்தல்களுடன் நேரடியான பதிலின் உடனடித் தன்மை, இவை அனைத்தும் எனக்கு இறைவனின் பரிசாக இருந்து, என் இதயத்தை அமைதியாக்கியது.

நான் இப்போது எனது பாதையைக் கண்டு கொண்டதோடு, மேன்மைமிகு குருநாதர் இங்கே இருக்கிறார் என்ற முழுமையான நம்பிக்கையும் என்னுள் பிறந்தது.

நதீன், எலிஸபெத், நோரினா ஆகியோர் சற்றும் தயக்கமின்றி, மெஹர் பாபாவிற்குத் தலைவணங்கி, அவரது சேவையில் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தனர். 'அன்பிற்குரியவரை ஒரு கணம் பார்த்ததும், அவரது இறை கீதத்தைக் கேட்கும் ஏக்கத்தில் அவர்களின் இதயங்கள் திறந்தன'. காலம் இவ்வாறு குறிப்பிட்டது: "ஒரு சில வார்த்தைகள் பரிமாறப்பட்டன, ஆனால் பாபாவின் பிரகாசமான முகம் அவர்களின் இதயங்களுடன் உரையாடத் தொடங்கியது. இந்தப் பார்வையால் பேசும் 'பேச்சு' அசாதாரணமானது, மேலும் 'பார்ப்பவர்களில்' அவரை அடையாளம் கண்டுகொள்பவர்கள் மட்டுமே, அதைப் புரிந்து கொள்ள முடியும். அனுபவித்ததை வெளிப்படுத்த, வார்த்தைகளுக்கு சக்தி இல்லை; அந்த வார்த்தைகள், அத்தகைய அற்புதத்திற்கு முன்னால் வெற்று ஓடுகளைப் போல விழுந்துவிடும்!"

கனடாவில் வாழ்ந்து வந்த கிட்டி டேவியின் சகோதரி மே க்ளூஸும் நவம்பர் 19 அன்று பாபாவைப் பார்க்க வந்தார். உள்ளூரில் வாழும் மார்கரெட் மெயோ, மெஹர் பாபாவிற்கு முறையான விருந்தோம்பல் அளித்து அனைத்து வசதிகளையும் செய்து தந்தவர், மறுநாள் ஹார்மனுக்கு வந்தார்.

இந்தியாவில், தனது பணிகளுக்கான நன்கொடைகள் குறித்து, மெஹர் பாபா, அங்கு வந்த சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களை அணுகுமாறு மால்கம், நோரினா இருவருக்கும் அறிவுறுத்தினார். நோரினா சற்றும் தயங்காமல், அந்தக் கட்டளையை ஏற்றுக் கொண்டார்; ஆனால் மால்கம், மன சஞ்சலமடைந்து, "நமது நண்பர்கள் பாபாவை சந்தித்தவுடன், அவர்களிடம் நன்கொடையாக பணம் கேட்பது நன்றாக இராது, மிகவும் தர்மசங்கடமாக உள்ளது" என்றார்.

மால்கம் கலக்கமடைந்ததைப் பார்த்து, பாபா அவரிடம் இவ்வாறு விளக்கினார், "**இது விஷயத்தில் பணம் முக்கியமல்ல; ஆனால் - கிருஷ்ணர், அர்ஜுனனிடம் அவரது உறவினர்களைக் கொல்லும்படிக் கூறியபோது,**

**அர்ஜூனன் அவருக்குக் கீழ்ப்படிந்தது போலத் தயக்கமின்றி, நீங்கள், நான் சொல்வதற்குக் கீழ்ப்படிகிறீர்களா என்பதே முக்கியம்!”**

ஹார்மனில் நிலவிய பரபரப்பான சூழ்நிலையை மால்கம் சுருக்கமாகத் தொகுத்துரைத்தார்:

பாபா, அவரது பெரும்பாலான நேரத்தை, துறவியைப் போல, தனிமையில் தியானம் மற்றும் சிந்தனையில் செலவிடுவார் என்று நாங்கள் எதிர்பார்த்தோம், ஆனால் மாறாக, தீவிரமான செயல்பாட்டின் இணையிலா மின் இயந்திரம்போல் இயங்கினார். ஒவ்வொரு நாளும் ஒரு சிலரை மட்டுமே சந்திப்பார் என நாங்கள் எதிர்பார்த்ததற்கு பதிலாக, அவர் அதிகாலை முதல் இரவு வரை பலரை சந்தித்தார். அமெரிக்கா, கனடாவிலிருந்து ஏராளமான மக்கள் வந்து குவிந்த வண்ணம் இருந்தனர். உலகின் அனைத்து பகுதிகளிலிருந்தும் கடிதங்கள், தொலைத்தந்திகள், தொலைபேசி மூலம் அழைப்புகள் வந்து கொண்டிருந்தன.

எங்கள் விருந்தோம்பல், தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வந்தது - தொலைதூர இடங்களிலிருந்து வந்த விருந்தினர்களுக்கு, தங்கும் வசதி, உணவு தயார் செய்யப்பட்டது.

பாபா, மௌனமாக இருந்த போதிலும் சூறாவளியைவிட சுறுசுறுப்பாக இருந்தார். ஐந்து அல்லது பத்து நிமிட நேரடி சந்திப்பை முடித்து வெளியே வந்த ஆண், பெண் அனைவரும் அவர்களடைந்த மேம்பட்ட உணர்வு நிலையில் அமைதியாக இருப்பதையே பெரிதும் விரும்பினர்.

கேத் கார்ட்னரின் நண்பர் ஒரு நார்வே நாட்டைச் சேர்ந்த நடிகை, அஸ்தா ஃப்ளெமிங் கேஸ் (ASTA FLEMING CASE), பாஸ்டனில் வசித்து வந்தார். அஸ்தா இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பாபாவை, ஒரு கனவில் கண்டதாகக் கூறினார்; அவர் பாபாவை, பாஸ்டனுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். 1931 நவம்பர் 21ஆம் நாள், பாபா அங்குச் சென்றார். ஜீன் (பாபா அருகில் அமர்ந்து) மே க்ளூஸ் ஆகியோர் ஹார்மனிலிருந்து ஒரு காரிலும், மற்றொரு காரில் சாஞ்சி, அலி, மால்கம் மூவரும் சென்றனர்.

பாபா மண்டலியுடன் பாஸ்டன் வெண்டோம் ஹோட்டலில் (HOTEL VENDOME) தங்கியிருந்து, அடுத்த நாள், 279 நியூபரி தெருவில் அமைந்த அஸ்தா ஃப்ளெமிங் கேஸ் இல்லத்திற்கு விஜயம் செய்தார். அந்தப் பெண்மணி தனது கணவர் (மறைநூல் அறிஞர் பால் ஃபாஸ்டர் கேஸ் (PAUL FOSTER CASE - மந்திரஜால துறையில் பயிற்சி பெற்றவர்) மற்றும் பிறரிடமிருந்து எதிர்ப்பை சந்தித்தார்; மேலும் பாபா, **“என்னைப் பற்றித் தொடர்ந்து சிந்தியுங்கள், கவலைப்பட வேண்டாம், நான் உங்களுடன் இருக்கிறேன்”** என்று வலியுறுத்தி, அஸ்தா மற்றும் அவருடைய கணவருக்கு உதவி செய்வதாக உறுதியளித்தார்.

பாபா ஏறக்குறைய ஒரு மணி நேரம் பாஸ்டன் நகரைச் சுற்றி வந்து, 11 மணிக்கு ஹோட்டலுக்குத் திரும்பி வந்தார்.

இதற்கிடையில், ஹோட்டலில், சுமார் 25 பாஸ்டன் குடிமக்கள் பாபாவை சந்திக்கக் காத்திருந்தனர். பாபா அனைவரையும் சந்தித்து, ‘**ஆத்மாவின் பிரிக்க முடியாத ஒருமைத் தன்மை**’யைக் குறித்து அனைவருக்கும் விளக்கினார்,

**“கடவுளைத் தவிர வேறு எதுவும் இல்லை. அவர் அனைவரிடமும் இருக்கிறார், அவர் உங்களுக்காக என்ன செய்கிறார் என்பதை நீங்கள் உணரவில்லை”** என்று அவர்களுக்கு வலியுறுத்தினார்.

ரிச்சர்ட் மேயர் (பாபாவைப் பற்றி முதலில் மால்கமிடம் அறிமுகப்படுத்தியவர்) அன்று மதியம் பாபாவை சந்தித்த வேளையில், “நீங்கள் எப்படித் துன்பங்களை அனுபவக்கிறீர்கள் என்பது உங்களுக்குத்தான் தெரியும்” என்று கருத்துத் தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த பாபா, **“நான் நித்தியமாக, மகிழ்ச்சியாக இருக்கிறேன், ஆனாலும் துன்பப்படுகிற அனைவருக்காகவும் நான் இரக்கப் படுகிறேன், என் அறிவு மற்றும் சக்தியின் மூலமாக அவர்களுக்கு உதவுகிறேன். இதனால், எனது கருணைதான் எனது துன்பம்”** என்று கூறினார்.

இந்தியாவைச் சேர்ந்த ஒரு துறவி, 47 வயதான சுவாமி பரமானந்தா, பாபாவை சந்திக்க அவரது மருமகள் மற்றும் மூன்று மாணவர்களுடன் வந்திருந்தார். பரமானந்தா, 1906ஆம் ஆண்டில் சுவாமி விவேகானந்தரின் இளைய சீடராக அமெரிக்காவிற்கு வந்து, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, பாஸ்டனில் வேதாந்தா மையத்தை நிறுவினார்.

பாபாவை சந்தித்தபோது, பரமானந்தா அவரை, தெற்கு கலிஃபோர்னியாவில் அமைந்த ஆனந்த ஆசிரமத்திற்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்தார். அதற்கு பாபா, **“இந்தப் பயணத்தில் அது சாத்தியமில்லை. ஆறு மாதங்களுக்குப் பிறகு நான் மீண்டும் அமெரிக்காவிற்கு விஜயம் செய்யும் போது, ஒருவேளை என்னால் முடியும்”** என்று பதிலளித்தார்.

பரமானந்தா, மெஹர் பாபாவுக்காக எடுத்து வந்த தேன் கனியை அவரிடம் அன்பு பரிசாக வழங்கினார். பாபா எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார், **“ஒன்றே ஒன்றைத் தவிர வேறொன்றும் இல்லை, அதுவே எல்லையில்லா வாழ்வு; நான் அதனுடன் ஒன்றாக இருக்கிறேன்; தொடர்ந்து நித்திய ஆனந்தத்தை அனுபவித்து, அனைத்திலும், அனைவரிடத்திலும் என்னைப் பார்க்கிறேன்.”**

**“அறிவார்ந்த நம்பிக்கை மட்டும் போதாது. உண்மைப்பொருள் என்பது ஞான ஒளி, உள் பார்வை மற்றும் அனுபவம். இவை அனைத்தும் உங்களுக்குள் உள்ளன; ஆனால் அதற்கு ‘இறப்பு’ என்பது அவசியம் - உண்மைப்பொருளில் பிறவி எடுக்க, மாயையைத் துறந்து இறந்துவிட வேண்டும்.”**

இதைக் கேட்ட பரமானந்தா ஆன்மீக அறிவைப் பற்றி எழுதிய பல புத்தகங்களை அருகிலிருந்த மேசை மீது வைத்தார். அந்தத் துறவி முதலில் அவற்றை பாபா முன்வைக்க விரும்பினார், ஆனால் அவரது கண்மூடித்தனத்தை உணர்ந்த அவர் இவ்வாறு கூறினார், “நான் தத்துவம் அறிந்து, பிறருக்கு விஷயங்களை விளக்க முடியுமென்றாலும், இறுதியில் அனுபவம் இல்லையென்றால் இந்தப் புத்தகங்கள் அனைத்தும் பயனற்ற காகிதத் துண்டுகள்.” தாழ்மையுடன் அவர், “இதை நான் இதுவரை அடையவில்லை.

உங்களைப் போன்ற ஒரு சத்குருவும், உங்கள் அருளும் எனக்குத் தேவை. நான் உங்களுக்குத் தலை வணங்குகிறேன். என்னை இந்தப் பாதையில் முன்னோக்கி எடுத்துச் செல்ல வேண்டுகிறேன் பாபா!" என்றார்.

பரமானந்தா சிரம் தாழ்த்தி, ஸாஷ்டாங்கமாக வணங்கிய போது, மெஹர் பாபா துறவியின் தலையைத் தொட்டு ஆசீர்வதித்தார். பின்னர் அவர் தனது மாணவர்கள் பக்கம் திரும்பி, "குருநாதர் இல்லாமல் ஒருபோதும் ஆன்மீக முழுமையை அடைய முடியாது. உண்மையான குருநாதர் மெஹர் பாபா, விளையாட்டுத்தனமான இந்தப் புத்தகங்களின் உள்ளடக்கத்தைக் காண்கிறார். அறிவுத்திறனால் நாம் விவாதிக்கும் இந்தப் பேரின்பத்தை மெஹர் பாபா தொடர்ந்து அனுபவித்து வருகிறார்." பரமானந்தா பல நூறு அமெரிக்க வேதாந்தவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆன்மீகத் தலைவராக இருந்தார். இதை அறிவிப்பதன் மூலம், அவரைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் மெஹர் பாபாவின் ஆன்மீக நிலையைப் புரிந்து கொண்டனர்.

தாமஸ் வாட்ஸன் அவரது மனைவி எலிஸபெத்துடன் பாபாவை அன்று சந்தித்தார், ஆனால் வாட்ஸன் பொறுப்பற்ற முறையில் எதுவும் பேசாமல் நின்றார். "நான் பாபாவை இங்கிலாந்தில் முதன்முதலில் சந்தித்தபோது நடந்ததைப் போல், அவர் என் உணர்வுகளில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை," என்று வாட்ஸன் தனது நாட்குறிப்பில் எழுதியிருந்தார். மால்கம், ஜீன், மேரி ஆன்டினின் பக்தி பற்றி, வாட்ஸன் இவ்வாறு கூறியிருந்தார்: "அவர்கள் மெஹர் பாபா மீது மிகுந்த மோகம் கொண்டவர்கள், அவரை சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரே மாதிரியான உணர்வுபூர்வமான எதிர்வினைகள் இருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். இது என்னைப் பொறுத்த வரையில், அவர்களை வயப்படுத்தும் வசீகரத்தில் சிக்க வைத்துள்ளது போலத் தோன்றுகிறது."

கேத் கார்ட்னர், நியூ ஹாம்ப்ஷயர் (NEW HAMPSHIRE) நகரின் கிரீன்ஃபீல்டில் (GREENFIELD) அமைந்த தனது 100 ஏக்கர், மரங்களால் நிரம்பிய தோட்டத்தை மெஹர் பாபாவிற்கு வழங்க விரும்பினார். மால்கம், ஜீன் தங்கியிருந்த அவரது ஹேன்காக் பண்ணைக்கு அருகில் அமைந்தது இந்த நிலம். பாபா இந்த யோசனையை விரும்பினார்; 1931 நவம்பர் 23ஆம் நாள் இரு இடங்களையும் பார்வையிட சுமார் 80 மைல் பயணம் செய்தார். இது மலைகள் மற்றும் புல்வெளிகளால் சூழப்பட்ட அழகான இடமாகும். ஹேன்காக் பண்ணையில் பத்து அறைகள் கொண்ட ஒரு பழைய வீடும் இருந்தது.

பாபாவிற்கு அப்படி ஒரு மையத்தை உருவாக்கும் எண்ணம் ஆரம்பத்தில் இருந்தாலும், அந்தத் திட்டம் ஒருபோதும் நிறைவேறவில்லை.

அன்று மாலை பாஸ்டனிலிருந்து, எஸ்.எஸ். ஜார்ஜ் வாஷிங்டன் (SS GEORGE WASHINGTON) எனும் படகில் இரவு சவாரி செய்து, நியூயார்க்கிற்குத் திரும்பி வந்தனர். பிராட்வேயில் அமைந்த ஆஸ்டர் ஹோட்டலில் (ASTOR HOTEL) நோரினா, தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார். இது, செல்வந்தர்,

செல்வாக்குமிக்க வாடிக்கையாளர்களுக்காகக் கட்டப்பட்ட சிறப்பு ஹோட்டல் என்பதால் பாபா மண்டலியுடன் தங்க ஹோட்டல் அதிகாரிகள் தயக்கம் காட்டினர். நோரினா அவருடைய செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டியதாயிற்று. அனைத்திற்கும் அதிபதி மெஹர் பாபா என்பது இந்த அதிகாரிகளுக்குத் தெரியாது.

புனித பார்த்தலோமியு தேவாலயத்தின் (ST. BARTHOLOMEW'S CHURCH), ரெக்டர் (தலைமை ஆயர்) டாக்டர் ராபர்ட் நார்வுட் (Dr. ROBERT NORWOOD) நவம்பர் 24 அன்று ஆஸ்டர் ஹோட்டலில் பாபாவை சந்திக்க வந்தார். 57 வயதான நார்வுட் கெனடிய பிரபல கவிஞர் ஆவார், அவர் இறையியலில் முனைவர் பட்டம் பெற்றவர். சத்தியத்தைத் தேடும் ஒரு பக்தியுள்ள ஆத்மா, நார்வுட் பல புத்தகங்களை எழுதியிருந்தார், மேலும் உற்சாகமான போதகராக இருந்ததால், வாரம் ஒரு முறை தேவாலயத்திற்கு மக்கள் திரள் திரளாக வந்தனர்.

ஸெயின்ட் பார்த்தலோமியு தேவாலயத்தில் நார்வுட் ஒரு முக்கிய பதவியை வகித்த போதிலும், அவர், ஒழுங்கமைக்கப்பட்ட மதத்தின் மீது அதிருப்தியை வெளிப்படுத்தினார், மேலும் எந்தவொரு சமய பிரிவு, மதவாத கொள்கை அல்லது கோட்பாடுகள் குறித்தும் அவருக்கு நம்பிக்கை இல்லை. பாபா, நார்வுட்டை நேரடியாக சந்தித்து, ஆன்மீக விளக்கங்கள் அளித்தார். அவர்களின் உரையாடல் பின்வருமாறு:

“**அன்பு ஒன்றுதான் உண்மையான மதம்**” என்று பாபா அவருக்குத் தெரிவித்தார். “**மக்கள், மதவாத கோட்பாடுகள் மற்றும் கொள்கைகளால் இப்போது சோர்வடைந்துள்ளனர். அவர்கள் உண்மையான ஒன்றை விரும்புகிறார்கள், இதை வார்த்தைகளின் விளக்கங்களால் ஒருபோதும் வழங்க முடியாது. அவர்கள் உண்மைப்பொருளை உணர்ந்து, பார்த்து, அனுபவிக்க வேண்டும். அப்போதுதான் ஒருவர் அனைத்திலும், அனைவரிடத்திலும் இணக்கமாக இருந்து, உண்மையை உணர முடியும்; ஒருவர், உலகில் வாழ்ந்தாலும், அதில் எந்தப் பற்றும் இல்லாமல் வாழ முடியும். நான் எப்போதும் அளவிறுதியற்ற ஆனந்தத்தில் இருக்கிறேன். அனைத்திலும், அனைவரிடத்திலும் என்னைக் காண்கிறேன்.**

நார்வுட், பாபாவிடம், “நீங்கள் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட மதப்பிரிவைச் சார்ந்தவரா? மேலும் மத கட்டளைகள், நல்லொழுக்க நெறியுரைகள் எதையாவது வழங்குகிறீர்களா?” என்று கேட்டார்.

“**அப்படி எதுவும் இல்லை**” என்று பாபா பதிலளித்தார். “**மதங்கள், சாதிகள், வகுப்புகள், கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் சடங்கு சம்பிரதாயங்கள் அனைத்தும், சத்தியத்தின் பாதையில் தடையாக இருக்கின்றன. உண்மைப்பொருள் எங்கும் வியாபித்து, எல்லையற்றதாக இருக்கிறது.**”

“தேவாலயத்திற்குச் செல்வதில் ஏதேனும் நன்மை உள்ளதா?” என்று நார்வுட் கேட்டார்.

**“ஆமாம், ஒரு குறிப்பிட்ட அளவிற்கு; ஆனால், அதிக அளவில் இல்லை. குறுங்குழுவாதத்தை ஆதரிக்கும், வளர்க்கும் தேவாலயம் எந்தவிதமான நன்மையையும் அளிக்காது. ஏக இறைவன் எனும் உண்மைப்பொருள் அனைத்து தேவாலயங்கள், கோயில்கள் மற்றும் மசூதிகளுக்குச் சொந்தமானது. சத்தியத்தை அடைய, எந்தவொரு தடையும், எவருடைய வழியிலும் வைக்கப்படக்கூடாது, ஆனால், இன்றைய மதங்களும் வழிபாட்டு முறைகளும் அதைத்தான் செய்கின்றன”** என்றார் பாபா.

நார்வுட் உடனே, “ஆம், அது உண்மைதான். முதலில் நான் ஒரு தேவாலயத்தில் தீவிரமாக இருந்தேன், ஆனால் நான் இதய மொழிகளை ஆதாரமாகக் கொண்ட மதத்தை நாடியதால், அதை விட்டுவிட வேண்டியதாயிற்று. இக்காலத்தில் மதமும், குறுங்குழுவாதமும் என்னை ஈர்க்கவில்லை. இன்று மேடைப்பேச்சு மட்டுமே நடைமுறையில் இருக்கும் தருணத்தில், மதத்தை விட உயர்ந்தது, உன்னதமானது என்று ஏதேனும் இருந்தால், அது பிறரிடம் காட்டும் உண்மையான அன்பு என்று நான் எப்போதும் உறுதியாக நம்புகிறேன்.”

**“ஆமாம், அதுவே சரியானது”** பாபா தொடர்ந்தார், **“நான் அடிக்கடி இதைத்தான் சொல்கிறேன். மக்கள் சத்திய வாழ்க்கையை வாழ, நான் ஒரு வழியைத் தயார் செய்கிறேன். அன்பை விட உயர்ந்த மதம் எதுவுமில்லை. சத்தியத்திற்கும், இறைநிலையை அடைவதற்கும் முக்கியமான ஒரே வழி அன்பு. மனமும் புத்தியும் மேலோட்டமான அறிவுத்திறனை மட்டுமே தருகிறது; அது காய்ந்து, உலர்ந்துபோன அறிவு. ஒருவர் கடவுளைப் பார்த்து, அவரை அனுபவிக்க வேண்டும். அதுவே உண்மையானது; அதற்குப் பிறகு, கடவுளோடு ஒன்றிணைந்து உண்மையான அனுபவத்தை அடைய முடியும். இதற்கு நீண்ட காலம் பிடிக்கும்; நெடிய தூரம் பயணிக்க வேண்டும். அன்பு ஒன்றுதான் குறுகியதும், விரைவானதுமான ஒரே வழி.”**

“மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நான் இன்னும் சில கேள்விகளைக் கேட்கலாமா?” நார்வுட் வினவினார்.

**“நிச்சயமாக.”**

“காந்தியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?”

**“ஒரு சிறந்த மனிதர், நல்ல ஆத்மா. அவர் அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர், ஆன்மீக முன்னேற்றத்திற்காக என்னுடன் வந்து இணைவதாக உறுதியளித்துள்ளார்.”**

“காந்திக்கு அதுதான் தேவை” என்று நார்வுட் ஒப்புக் கொண்டார். “அவர் கடுமையாக உழைத்து, இந்திய மக்களுக்காக அரும் பாடுபடுகிறார்; மிகவும் எளிமையானவர், நம்பகமானவர்.”

“தியோஸொஃபிஸ்டுகள், அன்னி பெஸன்ட், சார்லஸ் லெட்பெட்டர் பற்றி உங்கள் கருத்து என்ன?” என்று நார்வுட் கேட்டார்.

**“அவர்கள் சில சிறப்பான பணிகளைச் செய்துள்ளனர், ஆனால் செய்ய வேண்டியது இன்னும் ஏராளம் உள்ளது. அவர்கள் ஆன்மீகப் பாதையில்**

(ஓரளவு) **முன்னேறிய ஆத்மாக்கள்; ஆனால் ஒரு குருநாதரின் வழிகாட்டுதலும் உதவியும் இல்லாமல், ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் முன்னேறும்போது, விரோத சக்திகள் உருவாகி, இதன் விளைவாக மாயையில் மூழ்கடிக்கப்படுகிறார்கள். இது ஏடாகூடமாக மாறி, குழப்பம் உருவாகிறது.**"

"அவர்கள் அளவுக்கு அதிகம் எழுதுகிறார்கள், பேசுகிறார்கள்" என்று நார்வுட் கூறினார். "ஆனால் நீங்கள், பாபா, அழகின் மொத்த உருவம்" என்றார்.

அவர் தனது சந்திப்பை நிறைவு செய்து வெளியே வந்தபோது, நார்வுட், சாஞ்சியிடம், "நான் ஒரு சக்திவாய்ந்த மனிதரின் முன்னிலையில் இருப்பதாக உணர்ந்தேன், அது, எனது தற்பெருமையைப் பெரிதும் பாதித்தது."

சில நாட்களுக்குப் பின்னர், இந்தச் செய்தியை ராபர்ட் நார்வுட்டுக்குத் தெரிவிக்க பாபா கட்டளையிட்டார்:

**அவர் என்னை அறிந்து கொள்வார் என்று நான் சொன்னதாக அவரிடம் சொல்லுங்கள். நான் பார்த்தவர்களில், என்னைக் கவர்ந்தவர்கள் பலர் இருந்தாலும், என்னுடைய பணியை, பெரிய அளவில் செய்யக்கூடிய ஒருவரை நான் இவரில் கண்டேன்.**

**அவர் இப்போது என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது என்றும் கூறுங்கள். தற்போதைய நிதி உதவியின் தேவை, அவரிடம் வெளிப்படையாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது; மேலும் மனிதகுலத்தின் மேம்பாட்டிற்காக - அவர் ஏற்கனவே ஆன்மீக ரீதியில் முன்னேறியுள்ளதால் - தன்னால் முடிந்த அனைத்தையும் செய்ய முன்னோடியாக இருக்க வேண்டும்.**

**அவரது முதல் சந்திப்பின் மூலம், அவர் என்னைத் தெளிவாக அறிந்துள்ளார், நிச்சயமாக இதில் எந்தக் குழப்பமும் அடையக்கூடாது. உண்மையான அனுபவத்தின் மூலம், எல்லாவற்றிலும் நிலைகொண்டிருக்கும் எல்லையற்ற ஆத்மா, பரமாத்மாவைப் பற்றி, நான் திரும்பி வந்து பேசுவேன், எல்லா மனிதர்களையும் அதை உணர வைப்பேன் என்று அவர் உறுதியுடன் இருக்க வேண்டும்.**

நியூயார்க் சிம்ஃபொனியின் (NEW YORK SYMPHONY) நன்கு பிரபலமான லியோபோல்ட் ஸ்டோகோவ்ஸ்கியும் (LEOPOLD STOKOWSKI) அன்று பாபாவை சந்திக்க வந்தார். அவர்களின் உரையாடல் பின்வருமாறு:

ஸ்டோகோவ்ஸ்கி, பாபாவிடம், "கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கிடையே, குறிப்பாக, இன்றைய நிலைமைகள் முற்றிலும் முரணாக இருக்கும்போது, ஒற்றுமையை எவ்வாறு நிலைநாட்ட முடியும்?" என்று கேட்டார்.

பாபா அதற்கு பதிலளித்தார். "**நல்லிணக்கம் சாத்தியம், அதை அடைய முடியும், செய்ய முடியும், செய்யவும் வேண்டும்; நான் அதைச் செய்வேன். இது உள்ளளவில் செய்ய வேண்டிய ஒன்று; வெளியளவில் அல்ல. உண்மைப்பொருளின் அனுபவத்தின் மூலமாக, ஆத்மா ஞான ஒளியைப்**

**பெறும் தருணத்தில், சூழல் எதுவாக இருந்தாலும், அனைத்தும் இணக்கமாக இருக்கும். நிலைமைகள் எவ்வளவு மாறுபட்டதாக இருந்தாலும், எல்லாவற்றையும் ஒன்றாகக் காணவும், அனுபவிக்கவும் முடியும்.**"

"நானும் அப்படி நினைத்தேன்," ஸ்டோகோவ்ஸ்கி கூறினார். "நான் பலரிடம் இதே கேள்வியைக் கேட்டிருக்கிறேன், ஆனால் உங்களது இந்தத் தெளிவான பதிலைப் போல வேறு எவராலும் என்னைத் திருப்திப்படுத்த முடியவில்லை."

"**இது சிந்தனை அல்லது உணர்வு சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல. நான் தெரிந்து அதைச் செய்கிறேன்!**" பாபா பதிலளித்தார்.

"உட்புறத்திற்கு வெளியளவிலான அழகு அவசியமா?" ஸ்டோகோவ்ஸ்கி கேட்டார்.

"**ஒரு கலைஞராக உங்கள் நிலைப்பாட்டில் இருந்து நீங்கள் சொல்வது சரிதான். இயற்கையில் வெளிப்புறம் அழகாக இருப்பதையும், அதன் மூலம் அகமும் அவ்வாறே இருப்பதையும் நீங்கள் காண்கிறீர்கள். இது நல்லது, ஆனால் உள் புலனுணர்வு திறனை அடையப் பெற்ற பிறகு, வெளியளவில் அழகு அல்லது அழகற்றது எதுவும் ஒரு பொருட்டல்ல. அனைத்தும் ஒரே மாதிரியாக இருக்கும்.**

"**நீங்கள் ஒரு நல்ல ஆத்மா. எதிர்காலத்தில் நீங்கள் நல்ல சேவையை செய்வீர்கள். உங்கள் இசையின் மூலம் பிறருக்கு ஊக்கமளிப்பீர்கள். ஆன்மீக ரீதியில் நான் உங்களுக்கு உதவுவேன், அதை நீங்கள் உணர்வீர்கள்.**"

குயன்டினின் நண்பர் ஒருவர் தியோஸொ:ஃபியைப் பயின்று வந்தார். பாபாவை சந்தித்ததன் மூலம், அந்தப் பெண்மணி செய்தது சரியா என்பதை உரத்த குரலில் ஆச்சரியமாகக் கேட்டார். "**இங்கு வருவதன் மூலம் நீங்கள் மிகச் சிறந்த காரியத்தைச் செய்துள்ளீர்கள்**" என்று பாபா அவருக்கு உறுதியளித்தார். "**நான் உங்களுக்கு உதவுகிறேன்.**"

மெரடித் அந்தப் பெண்மணியிடம், "பாபாவின் அன்பு, அவரை சந்தித்த அனைவரின் வாழ்க்கையையும் மாற்றியுள்ளது" என்று கூறினார்.

மேன்ஹாட்டனில் (MANHATTAN) இருந்தபோது, பாபா இரவில், சில நேரங்களில், திரைப்படம் அல்லது நாடகம் பார்க்கச் சென்றார். நோரினா, எலைன், அனிதா மற்றும் சிலர் உடன் சென்றனர். 'ஓவர் தி ஹில்' (OVER THE HILL) என்ற திரைப்படம், கதீட்ரல் போன்ற அற்புதமான 'ராக்ஸி' தியேட்டரில் (CATHEDRAL-LIKE ROXY THEATRE) திரையிடப்பட்டிருந்தது. பின்னர், அருகிலிருந்த 'லோவ்ஸ் ஸ்டேட்' தியேட்டருக்கு (LOWE'S STATA THEATRE) நடந்து சென்று மார்க்ஸ் பிரதர்ஸின் (MARX BROTHERS) 'மங்கி பிஸினெஸ்' (MONKEY BUSINESS) திரைப்படத்தைப் பார்த்தனர்.

நியூயார்க் நகரில் ஐந்து நாட்கள் தங்கி இருந்தது, பலர் பாபாவை சந்திக்க வாய்ப்பாக அமைந்தது.

திருமதி எச்.பி. ஸ்டெஃபன்ஸன் (H.B. STEFFANSON) என்ற சமூக சேவகர் நவம்பர் 26 அன்று பாபாவைப் பார்க்க வந்தவர் "வாழ்க்கையின் நோக்கம் என்ன?" என வினவினார்.

**"சத்தியத்தை அடைவதற்கும் சுயத்தை அறிந்து கொள்வதற்கும்"** பாபா சுருக்கமாக பதிலளித்தார்.

"இப்போது பாதிக்கப்படும் ஏழை மக்களுக்கு உதவ சிறந்த வழி எது?"

**"பிரார்த்தனை. அவர்களின் துன்பங்களையும், உதவி செய்வதற்கான உங்கள் விருப்பத்தையும் கருத்தில் கொண்டு, தியானம் செய்யுங்கள். அதே நேரத்தில், அவர்களின் துன்பங்களைத் தணிக்க, நிதி ரீதியாக உதவும் முயற்சியை மேற்கொள்ளுங்கள். ஆனால் உண்மையாகச் சொல்லப் போனால், மேலும் பல இன்னல்கள் வர உள்ளன. இது தேவையும், நல்லதும் கூட; அதற்குப் பிறகு, நீடித்த அமைதி நிலவும்; அந்நேரத்தில் தான், நான் எனது மௌனத்தைக் கைவிடுவேன். நித்திய பேரின்பத்தை நான் அனுபவித்தாலும், இந்த ஏழை மக்களின் துன்பங்களைக் கண்டு நான் இரக்கப்படுகிறேன்."**

"நிச்சயமாக, எங்களில் எவரையும் விட அதிகமாக!" என்று திருமதி ஸ்டெஃபன்ஸன் தெரிவித்தார்.

**"இரவில் படுக்கைக்குச் செல்வதற்கு முன்பு, தினமும் என்னை நினைவில் கொள்ளுங்கள், நான் உங்களுக்கு உதவுவேன்"** என்று பாபா உறுதியளித்தார்.

நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையின் எழுத்தாளர் **ஹென்றி ஜேம்ஸ் ஃபோர்மன்** (HENRY JAMES FORMAN), மால்கமிற்கு அறிமுகமானவர், 26ஆம் நாள் ஹார்மனில் பாபாவை சந்தித்த அவர், தனது மனைவியை அழைத்து வந்தார். திருமதி ஃபோர்மன் கனவில் பாபாவை இரண்டு முறை பார்த்ததாகக் கூறி, அவரால் வெகுவாக ஈர்க்கப்பட்டார்.

வரலாற்றுப் பேராசிரியரும், கொலம்பியா பல்கலைக்கழகத்தின் வரைபடவியலாளருமான வில்லியம் ஆர். ஷெஃபர்ட் (WILLIAM R. SHEPHERD), அன்றைய தினம் பாபாவை சந்தித்தார். ஷெஃபர்ட் ஒரு அறிவார்ந்த, பணிவான, அன்பான மனிதர், பாபாவிடம், "மேற்கத்திய தேசங்களில் ஆன்மீகம் பரவலாக உள்ளதா?" என்று கேட்டார்.

அதற்கு பாபா பதிலளித்தார், **"ஆம். இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் மிக்க ஆர்வத்துடன் வரவேற்றனர். இங்கு ஆன்மீகம் உள்ளே உறைந்துள்ளது; வெளியளவில் உருவம் கொடுக்க, குருநாதரின் தலையீடு தேவைப்படுகிறது. இது மிக விரைவில் நடக்கும்... இறை ஒளியை ஒரு முறை காண நேர்ந்ததும், இந்திய வனப்பகுதியின் அமைதியையும், தனிமையையும் நியூயார்க் நகரில் வாழும்போதும் காணமுடியும்."**

ஸ்டோக்ஸ் பாபாவை மீண்டும் சந்தித்தார்; மேலும் பாபா அவர்கள் வீட்டில் தங்கி இருந்து சென்ற பின்னர், அவரும் அவரது மனைவியும் மிகவும் மேன்மையாக உணர்ந்ததாகக் கூறினார். '**அவர் (பாபா) அமெரிக்காவை விட்டு வெளியேறிய பிறகு, ஸ்டோக்ஸ் தம்பதியினருக்கு இன்னும் அதிகமான அனுபவங்கள் கிடைக்கும்**' என்று பாபா அவருக்குத் தெரிவித்தார். இரவில் தூங்கச்செல்லும் முன்பு, மேலும் பிறருக்கு உதவ விரும்பும் அரிய சந்தர்ப்பங்களிலும் பாபாவின் பெயரை சத்தமின்றி உச்சரிக்குமாறும் பாபா அறிவுறுத்தினார்.

நோரினாவின் கணவர் இளவரசர் ஜார்ஜஸ் மாட்சபெல்லி இந்த நேரத்தில் பாபாவை சந்தித்தார், ஆனால் கடவுள் மனிதனாக (அவதார புருஷர்) உலகில் வருவதை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. "**நீங்கள் உயிரைத் துறப்பதற்கு சற்று முன்னதாக, பாபா யார் என்பதை அனுபவபூர்வமாகக் கண்டுகொள்வீர்கள்**" என்று பாபா, ஜார்ஜஸிடம் கூறினார். (அவர் விரைவில் மரணத்தை சந்திக்கும் விதி படைத்தவர்.)

எலிஸபெத் பேட்டர்ஸன் மீண்டும் நவம்பர் 26ஆம் நாள் பாபாவின் சகவாசத்திற்காக வந்தார். புன்முறுவலாகிய சூரியக்கதிர்களால் பாபா, அவர் இதயத்தை மேலும் காயப்படுத்தினார். மால்கம், ஜீன், எலிஸபெத் மூவரையும் பாபா தனது அறைக்கு அழைத்தார். அங்கு நடந்ததை எலிஸபெத் பின்வருமாறு விவரித்தார்:

ஓர் இருண்ட அறைக்குள் சூரிய ஒளி ஊடுருவது போல, பிரகாசமான புன்னகையுடன் பாபா எங்களை வரவேற்றார். அருகில் அமர வைத்து, சில நிமிடங்கள் ஒன்றாக தியானம் செய்யக் கூறினார். எந்தக் குறிப்பிட்ட சிந்தனையும் இல்லாமல் அமர்ந்த வேளையில், எதிர்பாராத விதமாக, கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்ததை நான் அறிந்தேன் - ஆனால் எவ்வித சந்தோஷத்தையோ அல்லது துக்கத்தையோ உணரவில்லை. பிறர் கண்களைத் திறப்பதற்கு முன்பு, நான் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியும் என்று நம்பினேன்; ஆனால் பாபா எந்த அளவுக்கு என்னுடைய ஆழ் இதயத்தைக் கிளறிவிட்டார் என்பதை அறியமுடியவில்லை.

பாபா, ஆஸ்டரில் தங்கியிருந்தபோது, இந்தியாவில் கெ.ஜெ. தஸ்தூர் பாபாவிற்கு எதிராக, கட்டுரைகளை வெளியிடத் தொடங்கினார் என்ற கவலையூட்டும் செய்தி வந்தது. தஸ்தூரின் விரோத மனப்பான்மை குறித்து, பாபாவிற்குத் தெரிவித்தபோது, அவர் புன்னகைத்தபடி சாஞ்சியிடம், "**தஸ்தூர் மிகவும் நல்லவர், ஆனால் அதிக செல்லம் கொடுத்துக் கெட்டுப்போன குழந்தையைப் போலவே செயல்படுகிறார்**" என்றார். **அவர்தான் என்னை 'தெய்வீக மாட்சிமை மிக்கவர்' என்று அழைத்தார். இப்போது, எனக்கு எதிராகத் திரும்பியிருந்தால், அதில் என்ன இருக்கிறது? இயேசுவின் வேலையை யூதாஸ் செய்தார் - எனது நண்பரான தஸ்தூரும் அப்படித்தான்.**

**பல ஆண்டுகளாக, கிறிஸ்துவுடன் யூதாஸ் இருந்தபோதிலும், அவரைப் புரிந்து கொள்ள முடியாதது போல, தஸ்தூரும் ஆன்மீகப் பாதையின் ரகசியத்தைப் புரிந்து கொள்ளவில்லை.”**

1931, நவம்பர் 27 அன்று சாஞ்சி இக்கடிதத்தை, நாசிக் நகரில் வாழும் மண்டலிக்கு எழுதினார்:

இந்தியாவில், சகோதரர் தஸ்தூரின் எதிர்ப்புப் பிரச்சாரம் மிக்க வருத்தம் தருவதாக உள்ளது. ஸ்ரீ பாபாவிற்கு அது எப்போதுமே தெரியும் ஆகையால், அது உண்மையிலேயே நடந்தபோதும் கூட, அதில் அவர் அவ்வளவு அக்கறை காட்டவில்லை. அவரைப் பொறுத்தவரையில், ஆயிரம் தஸ்தூர்கள் அல்லது அந்நியர்கள் எதை எழுதினாலும் பேசினாலும், அவர் என்னவாக இருக்கிறாரோ அந்த நிலையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. ஆனால் ஸ்ரீ பாபா, இத்தகைய வேடிக்கையான பேச்சுக்கள் மற்றும் எழுத்துக்களால், ஏழை எளிய ஆத்மாக்கள் தவறாக வழிநடத்தப்படுவார்கள் என்ற கவலையை வெளிப்படுத்தினார்.

ஆனால் அப்படி இருந்தும், அவர் தனது பணியைத் தொடர்ந்தார்; அவர் குருநாதர் ஆகையால், அந்தத் தவறாக வழிநடத்தப்பட்ட மந்தையிலுள்ள ஆடுகளை, மீண்டும், சரியான நேரத்தில் தன்னிடம் கொண்டு வருவதில் முழு நம்பிக்கையோடு இருந்தார். அவர் அனைவரிடமும் இரக்கத்தை மட்டுமே காட்டுகிறார். இப்படித் தவறாகத் திசைத்திருப்பப்படுபவர்களும், ஏதோ ஒரு வழியில் துன்பப்படுகிறார்கள்.

ஸ்ரீ பாபா மேற்கத்திய நாடுகளில் அற்புதமாகத் தனது பணியைச் செய்து வரும் வேளையில், இந்தியாவில் அவருக்கு நெருக்கமானவர்கள், சூரியனை நோக்கிச் சேற்றை வீச முயற்சிக்கிறார்கள் என்பது உண்மையில் பரிதாபத்திற்குரியது. நிச்சயமாக, ஆயிரமாயிரம் தஸ்தூர்களால், ஸ்ரீ பாபாவின் செல்வாக்கைத் தடுக்க முடியாது; ஆனால் இந்த குழந்தைத்தனமான குறும்பு, அவர் செய்ய வேண்டிய பணிக்கு மேலும் சுமையை சேர்க்கிறது - அதனால் தான் அதைப் பற்றி நாங்கள் சற்று கவலைப் படுகிறோம். இல்லையேல், இது வெறும் அற்பமானது, முட்டாள்தனம் மற்றும் குழந்தைத்தனமானது.

மேற்கத்திய நாடுகளில் ஸ்ரீ பாபா உருவாக்கிய மிகப்பெரிய செல்வாக்கு குறித்து, ஒரு சுருக்கமான கருத்தை உங்களுக்கு வழங்க விரும்புகிறேன். அவரை சந்தித்த அனைவரும் அவரை நேசித்து, வணங்கி, வழிபட்டனர். ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், பெரியவர்கள், செல்வந்தர்கள், ஏழைகள் - அனைவருமே ஒரே மாதிரியாக நடந்து கொண்டனர். அவரை சந்திக்க அனைத்து தரப்பு மக்களும் வந்த வண்ணம் உள்ளனர். அனைவரும் அவரிடமிருந்து வெளிப்படும் தெய்வீக மகிமையால் பெரிதும் ஈர்க்கப்பட்டனர். அவர்களில் பலருக்கு ஸ்ரீ பாபாவின் மாட்சிமைக்கு முன்னால், ஒரு வார்த்தையும் சொல்ல முடியவில்லை; அவர்கள் வெறுமனே உணர்ச்சியற்ற நிலையில் ஆச்சரியத்துடன் வெகுவாகக் கவரப்பட்டார்கள். பலர் தெய்வீக அன்பின் அதிர்வலையில் கண்ணீர் வடித்தனர். மேலும், இந்த தெய்வீக அனுபவத்தில் பங்கெடுக்க மீண்டும் மீண்டும் வந்து சென்றனர். அவர்களின் முழு வாழ்க்கையும் ஒரு பெரிய மாற்றம் கண்டது; அனைவருக்கும், முன்னர் ஒருபோதும் இல்லாத

அற்புதமான அனுபவங்கள் அல்லது இதுவரை எதிர்பாராத விசித்திரமான நிகழ்வுகள், அவர்களை அன்பால் பிரகாசிக்கச் செய்தன.

ஸ்ரீ பாபாவின் தெய்வீகத் தன்மை, அவ்வளவு எளிதாக ஈர்க்க முடியாதவர்களையும் அவருடைய அதிநுட்ப செயல்திறனால், அவரை நோக்கி ஈர்த்ததற்கு, ஒவ்வொரு நாளும் வந்து குவியும் அன்பின் கடிதங்களே சாட்சியாகும்; இந்தத் திடமான சான்றுகள், தஸ்தூர் மற்றும் பிறரால் முன்வைக்கப்படும் ஆயிரமாயிரம் அவதூறான கருத்துக்களை அடியோடு மறையச் செய்யும்.

நாம் அனைவரும் 'அற்புதம்' 'அழகு', 'ஆச்சரியம்', 'அசாத்தியம்' போன்ற பல சொற்களுக்குப் பழக்கமாகிப் போனதால், இவை அனைத்தும் நமக்கான கவர்ச்சியை இழந்துவிட்டன. ஆனால், ஒரு சில நிமிடங்கள் மட்டும் ஸ்ரீ பாபாவுடன் இருந்து வெளியே வரும் அனைவரும் கூறும், "ஓ, அற்புதம்! என்ன ஓர் அதிசயம்! என்ன ஓர் ஆச்சரியம்! என்ன ஒரு கவர்ச்சி! அழகானவர்!" என்ற வார்த்தைகள் நம்மை பிரமிக்கச் செய்யும்.

இந்தச் சுருக்கமான உரைத் தொகுப்பிலிருந்து, பாபா இங்கே என்ன செய்துள்ளார் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். அவர் செய்ததைப் பற்றிப் பிறருக்கு உண்மையான கருத்தைச் சொல்ல எனக்கு வார்த்தைகள் இல்லை. அதைத் தனிப்பட்ட முறையில் பார்த்து, அனுபவிக்க வேண்டும். சிலர், 'அவர் அன்பு மற்றும் பேரின்பத்தின் நீரூற்று' என்று கூறுகிறார்கள். சிலர் அவரை இயேசு கிறிஸ்துவாகப் பார்க்கிறார்கள்; இன்னும் சிலர் 'புதிய படைப்பின் இறைவன்' என்று அழைக்கிறார்கள். அவர்கள் பாபாவிடம், "அமெரிக்க நாட்டுக்கு நீங்கள் தேவை; இங்கே நீங்கள் இருப்பது அரும்பெரும் பாக்கியம்" எனக் கூறி, எல்லோரும் அவரை முழு மனதுடன் விரும்பி, அவரை இங்கேயே இருக்க வேண்டும் என வேண்டிக்கொள்கிறார்கள்; அத்தகைய பாரமான இதயங்களை விட்டுவிட்டு அவர் இந்தியாவிற்குத் திரும்பி வருகிறார்; ஆனால் விரைவில் அவர் மீண்டும் வருவார் என்ற நம்பிக்கையான வாக்குறுதியை வழங்கியுள்ளார்.

ருமேனிய நாட்டு இளவரசி ஹென்ரியட் ஸாவா-கோயு (HENRIETTE SAVA-GOIU), லெபனான் கவிஞர் 'க(ஹ்)லில் கிப்ரான்' (KAHLIL GIBRAN) என்பவரைத் தனது வீட்டில் அழைத்து உபசாரம் செய்தவர் உட்பட, நியூயார்க்கைச் சார்ந்த பல முக்கியமானவர்கள் 1931 நவம்பர் 27, 28ஆம் தேதிகளில் 'அல் ஆஸ்டர்' ஹோட்டலில் பாபாவை சந்தித்தனர்; ஐ. ஷெல்டன் தில்னே (I. SHELDON TILNEY), ஒரு ஆட்டோமொபைல் கண்டுபிடிப்பாளர், டாக்டர் ஆல்பர்ட் கிரியர் (Dr. ALBERT GRIER), ஒரு புதிய இக்கால ஆன்மீக மந்திரி மற்றும் ஒரு கொடையாளி மின்னட் ஹர்ஸ்ட் (MINNETTE HIRST) ஆகியோரும் வந்தனர்.

வந்தவர்களில் சிலர், இதற்கு முன்னர் ஒன்று அல்லது இரண்டு முறை பாபாவை சந்தித்துள்ளனர்: மேடை நடிகை, மெர்ல் மேடர்ன் (MERLE MADDERN) (நாவலாசிரியர் ஜாக் லண்டனின் மருமகள்), பரோபகாரர், எலென் டன்லப் ஹாப்கின்ஸ் (ELLEN DUNLOP HOPKINS), (நியூயார்க் ஸ்கூல் ஆஃப் அப்ளைடு டிசைன் ஃபார் விமன் - NEW YORK SCHOOL OF APPLIED DESIGN FOR WOMEN); மஞ்சூரியன் எழுத்தாளர்,

இளவரசி டெர் லிங் (MANCHURIAN AUTHOR, PRINCESS DER LING); கவுண்டெஸ் கேஸ்டெல்லி (COUNTESS CASTELLI) இரண்டு முறை); மற்றும் வானொலி ஆளுமை ஈ. டபிள்யூ. பர்ரில் (E.W.BURRILL) இவர்களும் பாபாவைப் பார்க்க மறுபடியும் வந்தனர்.

ஒரு பிரபல நரம்பியல் நிபுணரும், கவிஞருமான டாக்டர் ஃப்ரடெரிக் பீட்டர்சன், (Dr. FREDERIC PETERSON) 72 வயது, நவம்பர் 28ஆம் நாள் பார்வையாளராக டாக்டர் ஹென்றி நைட் மில்லர் (Dr.HENRY KNIGHT MILLER) அவருடன் (சுய உதவியை மையமாகக் கொண்ட ஒரு பிரபலமான உளவியல் பத்திரிகையை நிறுவியவர்) வந்தார்.

புகைப்பட வல்லுநர் அர்னால்ட் ஜெந்தீ (ARNOLD GENTHE) இரண்டு நாட்களிலும் ஹோட்டலுக்கு வந்து பாபாவைப் புகைப்படம் எடுத்தார். அவர் எடுத்த மூன்று உருவப்படங்களும் (ஒன்று அலியுடன்) சிறப்பாக அமைந்ததை, பாபாவின் அன்பர்கள், பாபா நியூயார்க் சென்றதை நிரந்தரமாக நினைவூட்டும் சின்னமாக மதிப்பிட்டனர்.

1931 நவம்பர் 28 சனிக்கிழமை மாலை, பாபா, ஹார்மனுக்குத் திரும்பி வந்தார். நோரினா, ஸ்டோக்ஸ் இருவரும் டிசம்பர் 1ஆம் நாள் பாபாவை சந்தித்தனர்.

ஓரிரு நாட்களுக்குப் பிறகு, பாபா மூன்று மைல் தொலைவில் அமைந்த ஆஸனிங் (OSSINING) கிராமத்தில் அமைந்த 'ஸிங்-ஸிங்' சிறைச்சாலைக்கு (SING SING PRISON) அவரை அழைத்துச் செல்லும்படிக் கூறினார். அவர்கள் இரவு பத்து மணிக்கு ஹார்மனை விட்டு வெளியேறினர். சிறைச்சாலையில் இருக்கும் ஒரு குறிப்பிட்ட மனிதருடன், எதிர்கால பணிக்கு வேண்டிய தொடர்பை மேற்கொள்ள விரும்புவதாக பாபா சுட்டிக்காட்டினார். சிறைச்சாலையைச் சுற்றி வரும் வேளையில், பாபா அதை நோக்கிக் காற்றில் முத்தங்கள் அளிப்பது போல பாவனை செய்தார்.

நுழைவாயிலின் அருகே காரை நிறுத்தி பாபா, **"நான் எப்படிப் பணிபுரிகிறேன் என்பதைப் பாருங்கள்"** என்றார். அவர் சிறிது நேரம் அமைதியாக இருந்து, பின்னர், **"இந்தச் சிறையில் ஒருவர் எனது (ஆன்மீக) முகவராக இருக்கிறார், அவர் எனக்காக பல சிறப்பான பணிகளைச் செய்ய உள்ளார். நான் எனது மௌனத்தைக் கலைத்து பேசும்போது, அவருக்கு விடுதலை வழங்குவேன்"** என்று கூறினார்.

அவர்கள் ஹார்மனுக்குத் திரும்பி வந்தபோது, பாபாவின் மனநிலை சோகமாகத் தென்பட்டது. **"நான் ஏற்கனவே அந்த முகவரைத் தொடர்பு கொண்டுள்ளதால், ஸிங்-ஸிங் சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டியது எனக்கு முக்கியமல்ல"** என்று அவர் குறிப்பிட்டு, **"ஆனால் சிறைக்குள் சில நல்லவர்கள், நிரபராதிகள் அடைக்கப் பட்டுள்ளனர்"** என்றும் கருத்துத் தெரிவித்தார்.

ஹார்மனில் இருந்தபோது, டிசம்பர் 2ஆம் நாள், பாபா ஒவ்வொரு நபருக்கும் வெவ்வேறு கடமைகளை வழங்கினார்; மேலும் அவர்

அமெரிக்காவிலிருந்து சென்ற பின்பு, பின்பற்ற வேண்டிய கடமைகளின் அட்டவணை ஒன்றைத் தயார் செய்தார். பாபாவால் வெகுவாக ஈர்க்கப்பட்ட மார்கரெட் மெயோ அவரது பணிக்காக, மெஹெராஷ்ரம் என்ற பெயரில் ஒரு வருடத்திற்கு தனது வீட்டைப் பயன்படுத்த ஒப்புதல் அளித்தார்.

நோரினா, அனிதா இருவரும் இப்போது பாபாவின் சகவாசத்தில் மிகவும் நெருங்கியவர்களாயினர். நதீன், எலிஸபெத், மால்கம், ஜீன் அனைவரும் அவரது இறை கீதத்தைக் கேட்டு ரசித்தவர்கள், அதைப் பாடும் ஆர்வத்தில் இருந்தனர். அமெரிக்கா வருவதற்கான பாபாவின் நோக்கம் நிறைவுற்றது, ஏனெனில், அவருடைய அன்பர்களுக்குத் தனது மகிமையை வெளிப்படுத்தினார். காலம் இதை இப்படிப் பார்த்தது: "இந்தப் 'புதிய' மேற்கத்திய அன்பர்கள், ஏறக்குறைய உடனடியாக சரணடைந்தது மிகவும் வியக்கத்தக்கது. பூத்துக் குலுங்கிய இதயங்கள், ரோஜா இதழ்கள் போல குருநாதரின் பாதங்களில் சிதறிக் கிடந்தன."

ஹார்மனில், ஆன்மீகம் குறித்த திரைப்படம் தயாரிப்பதைப் பற்றி, முதல் முறையாகப் பேச்சு எழுந்தது. இது அடுத்தடுத்த சில ஆண்டுகளில் பாபாவின் கவனத்தை ஈர்க்கும் தலைப்பாக அமைந்தது. 'படைப்பின் நோக்கம்', 'பிரபஞ்சத்தின் விளைவு' மற்றும் 'ஆன்மீகப் பயணம்' பற்றிய பாபாவின் விளக்கங்களின்படி அமைய வேண்டும் என்பதே திரைப்படத்தின் அடிப்படை கருத்து.

மார்கரெட் மெயோ அமெரிக்க திரைப்படத் துறையுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார். அவரது பல 'பிராட்வே' (BROADWAY) நாடகங்கள் 1917ஆம் ஆண்டில் அரங்கேற்றப்பட்டன. அவரது முன்னாள் கணவர் எட்கர் ஸெல்வின் (EDGAR SELWYN), பிராட்வே தயாரிப்பாளராக இருந்தார்.

1931 டிசம்பர் 3ஆம் நாள், ஜீன், மால்கம் ஆகியோருடன் மார்கரெட் மெயோ, அவரது நண்பர் ஹாரி ஈ. எய்ட்கன் (HARRY E. AITKEN) என்பவரைப் பற்றிப் பேசினார், பிரபல இயக்குனர் டி.டபிள்யூ. கிரிஃபித் (D.W.GRIFFITH) என்பவருடன் இணைந்து பணியாற்றிய திரைப்பட தயாரிப்பாளர். அவர் ஆன்மீகத்தில் ஆர்வம் மிக்கவர் ஆகையால் அவரைப் பரிந்துரைத்தார். மேலும் பாபா, அந்த விளக்கங்களை ஒவ்வொன்றாக அளிப்பதானால், ஒரு விரிவான காட்சியை எழுத முடியும் என்று மெயோ, பாபாவிடம் விளக்கினார்.

பாபா உடனடியாக அதை ஏற்றுக்கொண்டு, ஒவ்வொன்றாக விளக்கத் தொடங்கினார். ஏறக்குறைய ஒரு மணி நேரத்தில், பாபா முழுத்திட்டத்தையும் கோர்வையாக - 'படைப்பின் தொடக்கம்' (BEGINNING OF CREATION), 'பரிணாம வளர்ச்சியின் கட்டங்கள்' (THE DEVELOPING STAGES OF EVOLUTION), 'மறுபிறவி' (REINCARNATION) மற்றும் 'மூன்று கதாபாத்திரங்களின் கதைகளுடன் இறைநிலையை அடைவது' (THE STORIES OF THREE CHARACTERS THROUGH FIVE LIFETIMES TO REALIZATION) வரை - எடுத்துரைத்தார்; அனைவரும் அதைக்கேட்டு ஆச்சரியமடைந்தனர்.

அன்று மாலை, ஹாரி எய்ட்கனை ஹார்மன் ரிட்ரீட்டில் வரவழைத்து, திரைப்படத்தின் முழுக்கதையையும் வாசித்து விளக்கப்பட்டது. இறுதியில் வெகுவாக ஈர்க்கப்பட்ட எய்ட்கன், இது ஒரு சிறந்த யோசனை என்று கூறினார். "**இதை** (ஒரு திரைப்படமாக) **சரியாக உருவாக்க முடியுமா?**" என்று பாபா அவரிடம் கேட்டதற்கு, "நிச்சயமாக," என்று எய்ட்கன் உறுதியளித்தார், (எய்ட்கன் இந்தப் படத்தை இந்தியாவில் படமாக்கப் பரிந்துரைத்தார், மேலும் தொடக்கத்தில் பாபாவும் அதில் கலந்து கொள்ள வேண்டும் எனக் கூறினார்) திரைப்படத்தின் தலைப்பு 'எ டச் ஆஃப் மாயா' (A TOUCH OF MAYA) என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

1931, டிசம்பர் 4ஆம் நாள் பாபாவை மேன்ஹாட்டனுக்கு காரில் அழைத்துச் சென்றனர். நோரினா, மால்கம், காத் மற்றும் சிலர் உடனிருந்தனர்.

நகரத்திற்குச் செல்லும் வழியில், நோரினாவின் நெருங்கிய தோழி கொரின் இன்கிரஹாமின் (CORINNE INGRAHAM) இல்லத்திற்கு பாபா விஜயம் செய்தார். கொரின் சமீபத்தில், ஒரு கார் விபத்தில் கால் உடைந்து படுக்கையில் இருந்தார்.

பாபாவின் வருகைக்குப் பிறகு மூன்று நாட்கள், தான் இனம் புரியாத பரவசத்தில் இருந்ததாகவும், பாபாவுடனான நேரடி சந்திப்பைத் தொடர்ந்து, மறுநாள், அவரது வீங்கிய கால் இயல்பு நிலைக்கு வந்துவிட்டதாகவும் கொரின், நோரினாவிடம் கூறினார்.

அன்று மதியம் கிரீன்விச் கிராமத்தில் அமைந்த ஸ்டோக்ஸின் இல்லத்திற்கு அனைவரும் வந்தனர். பாபா, எவரையும் பார்க்க விருப்பம் தெரிவிக்காதபோதும், அவர் தனது எண்ணத்தை மாற்றிக்கொண்டு, ஏறக்குறைய 25 நபர்களை சந்தித்தார்; பலர் நியூயார்க் நகரில் முதல் முறையாக வந்தவர்கள். அவர்களில் எலியட் (ELLIOT) , எலிஸபெத் ஹோல்ட் (ELIZABETH HOLT) ஆகியோர் அடங்குவர். அவர்களின் நேரடி சந்திப்பிற்குப் பின்னர், எலியட் ஜன்னல் வழியாக வானத்தை நோக்கி "என் கடவுளே, நான் இத்தகைய மனிதரை முதலிலேயே சந்தித்திருக்க வேண்டும்!" என்று ஆச்சரியத்தில் கூறியதை, சாஞ்சி தனது குறிப்புப் புத்தகத்தில் எழுதியுள்ளார்.

எலிஸபெத் பேட்டர்ஸன், நதீன் டால்ஸ்டாய் இருவருடன் பல பிரபலமான நபர்கள் பாபாவை அன்றைய தினம் ஸ்டோக்ஸின் இல்லத்தில் சந்தித்தனர்.

அடுத்த நாள் நியூயார்க் நகரிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, பாபா நியூயார்க்கின் நிதி மையமான வால் ஸ்ட்ரீட்டைச் (WALL STREET) சுற்றிவர விரும்பினார். அன்று சனிக்கிழமை ஆதலால் தெருக்கள் கிட்டத்தட்ட வெறிச்சோடி இருந்தன. காரில் இருந்தபோது, ஜீன் தனக்குள்ளே இவ்வாறு நினைத்துக் கொண்டிருந்தார்: "இந்தப் பண பைத்தியம் எவ்வளவு நிலையற்றது, உண்மையற்றது!"

அடுத்த கணம், ஜீனின் மனதில் ஓடும் எண்ணங்களை அறிந்த பாபா, வானளாவிய கட்டிடங்களைச் சுட்டிக்காட்டி, அவரைப் பார்த்து, புன்னகைத்து, "**இது எல்லாமே ஒரு நீர் குமிழி போல, சிதறடிப்பது மிகவும் எளிது**!" என்றார்.

நியூயார்க் நகரத்திலிருந்து பாபா புறப்படும் அந்த நாளில், எலிஸபெத், நதீன் இருவரும் பாபாவிடம் விடைபெற ஒன்றாக வந்தனர். இரண்டு பெண்மணிகளும் பாபாவின் அன்பால் வெல்லப்பட்டு, பின்னர் அவருடைய சீடர்களாக ஒன்றிணைக்கப்பட்டவர்கள்.

இந்தியா திரும்புவதற்கு முன்பு, பாபா அவரது இரகசிய புத்தகத்தின் கையெழுத்துப் பிரதியை, அமெரிக்காவில் ஒருவரிடம் கொடுத்து வைத்தார், அது அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அங்கேயே இருந்தது. இந்தக் 'காணாமல் போன புத்தகம்' (MISSING BOOK) என்னவாயிற்று என்பதற்கான சரியான விவரங்கள் மர்மமாகவே இருந்தன.

1931ஆம் ஆண்டில் நியூயார்க் நகரில் தங்கியிருந்தபோது, மெஹர் பாபா 350க்கும் மேற்பட்ட மக்களை, தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டார். அவர் மால்கம், ஜீன் இருவரையும் ஹார்மனில் தங்குமாறு அறிவுறுத்தினார்; '**இது அமெரிக்காவில் நிறுவ விரும்பும் ஐந்து ஆன்மீக மையங்களில் முதலாவதாகும்**' என்று அவர் விளக்கினார்.

அமெரிக்காவில் மெஹர் பாபா தங்கியிருந்த முதல் இடம் என்ற பெருமையை ஹார்மன் ரிட்ரீட் கொண்டுள்ளது. வருங்கால சந்ததியினர் இந்த வரலாற்று சிறப்புமிக்க புனித மையத்தைப் பாதுகாக்கவும் கௌரவிக்கவும் விரும்புவர் என்பதில் சந்தேகமில்லை.

மால்கம் தனது நண்பர்கள் மற்றும் நெருங்கிய பலருக்கு இவ்வாறு எழுதினார்:

கடந்த ஓரிரு மாதங்கள், ஜீனும் நானும் எங்களது ஆழமான அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்ள ஒரு வாய்ப்பாக இருந்தது. மேலும் அதன் அருளையும், அழகையும் நமது சொந்த வாழ்வின் வெளிப்பாடுகள் மூலம் உணரவும், அறியவும் முடிந்தது. இவற்றை வார்த்தைகளால் விவரிப்பது கடினம். இருந்தும், நம்முடைய அனுபவங்களை இப்படிப் பகிர்ந்து கொள்வதுதான் முறை என்று நினைக்கிறேன்.

ஸ்ரீ மெஹர் பாபாவைப் பற்றியும், அவருடனான எங்களது உறவைக் குறித்தும், ஒரு சில விஷயங்களை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்; அந்த உறவின் அன்பளிப்பாக, எங்களை வந்தடைந்த ஆன்மீக சௌந்தர்யத்தை, நாங்கள் எழுதும் சொற்களைவிட, உங்களின் புரிந்துகொள்ளும் தன்மையே சிறப்பாக எடுத்துரைக்கும் என்று நம்புகிறோம்.

தொடர்ந்து நடந்த சம்பவங்கள் அனைத்தும், இயல்பாகவே அற்புதங்கள் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை என்றாலும், ஜீனும் நானும் ஒரு மாதத்திற்கு ஸ்ரீ சத்குரு மெஹர் பாபாவின் விருந்தோம்புநர்களாக இருக்கும் வாய்ப்பைப் பெற்றோம். கிழக்கத்திய நாடுகளில் அவர் ஓர் உண்மையான குருநாதர் என்று அறியப்பட்டாலும், அவர் புது யுகத்தின் அவதார புருஷராகப் பார்க்கப்படுகிறார்.

மெஹர் பாபா, ஹார்மன் ரிட்ரீட்டில் பாதங்களைப் பதித்த அந்தத் தருணத்திலிருந்து, அவரிடமிருந்து வெளிப்பட்ட தெய்வீக அன்பு, தொற்றுநோயாகப் பரவியது. இது ஓர் அசாதாரணமான, விவரிக்க முடியாத, தெய்வீக அன்பாக இருந்தது; இது அவருடைய தொடர்பில் வந்த அனைவரின் ஆழ் இதயங்களிலும் ஊடுருவி, அதன் அழகான இயற்கைத் தன்மையைப் பிரதிபலிக்கச் செய்தது; இது அனைத்து வாழ்வின் ஒளியின் ஆதாரமாகத் திகழ்ந்தது.

ஆரம்பகால கிறிஸ்தவர்களின் ‘காதல் விருந்து’ எப்படி இருந்திருக்க வேண்டும் என்பதை நாம் முன்பே புரிந்து கொள்ளாததால், மெஹர் பாபாவுடன் வாழ்ந்த நாம், இப்போது புரிந்துகொள்ளத் தொடங்கினோம்.

நம்முடைய அன்றாட வாழ்க்கையின் சம்பவங்கள், இயேசுவிற்கும் அவருடைய சீடர்களுக்கும் இடையிலான நெருக்கம், கிருஷ்ணருக்கும் கோபிகைகளுக்கும் இடையிலான உறவு மற்றும் மஹாபாரதத்தில் நடந்த பல்வேறு சம்பவங்கள் ஆகியவற்றின் மூலம், மீண்டும் மீண்டும் நமக்கு நினைவு படுத்தப்பட்டது; இவை அனைத்தும், இக்காலத்தின் நவீன பின்னணிக்கு எதிராக, மறுபடியும் செயல்பட்டதாகத் தோன்றியது.

நாம் இதுவரை அறிந்ததை விட ஆழமான அன்பு, நம் இதயத்தில் தூண்டிவிடப்பட்டது. நாம் அனுபவித்ததை விட மகத்தான பேரின்பம் தனிப்பட்ட சுயமனிதனின் வரம்புகளைக் கடந்து, நம்மை உலகளாவிய உணர்வு நிலைக்கு எடுத்துச் சென்றது. பல ஆண்டுகளாக, நாம் இடைவிடாமல் அகற்றப் போராடிய சிந்தனை, உணர்ச்சி மற்றும் செயலின் பழக்கவழக்கங்கள், ஒரே இரவில் எந்த முயற்சியும் இல்லாமல் அகன்றுவிட்டது. நமது அன்றாட வாழ்க்கை சூழ்நிலைகளில் எழும், மிகப் பெரிய பலங்கள், பலவீனங்கள் குறித்து நாம் அறிந்தோம், ஆனாலும் சில விசித்திரமான வழிகளில் பலவீனங்களை சமாளிக்கத் தேவையான பலத்தை, பயன்படுத்துவதற்கான சக்தி நமக்கு வழங்கப்பட்டது.

ஸ்ரீ மெஹர் பாபாவிடம், வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் முழுமையின் வெளிப்பாட்டை நாம் தொடர்ந்து கண்டோம் - வாழ்க்கையின் ஒவ்வொரு தேவையையும் எதிர்கொள்ள ஒரு சக்தி விரைவாகவும் தொடர்ச்சியாகவும் பாய்வதைக் காணமுடிகிறது. பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து சக்திகளும் பாபாவின் உடல் எனும் வாகனத்தில் நிலைகொண்டு இருப்பதைப் போல் ஒருவர் உணர முடிகிறது.

கிருஷ்ணாவைப் போல், இயேசுவைப் போல, மீண்டும் கடவுள் மனிதராக இங்கே அவதரித்துள்ளார் என்பதை நாம் உணரத் தொடங்கினோம்; அவதார புருஷர், ஒருவரின் ஆத்மாவை, அதனைப் புரிந்து, கிரகிக்கும் தன்மைக்கு அப்பாற்பட்ட அன்பால் பிரமிப்படையச் செய்தார்.

மெஹர் பாபாவின் இந்தக் குறுகிய வருகைக்குக் காரணம், இங்கே சில தொடர்புகளை உருவாக்கி, அவரது இரண்டாவது வருகைக்கான வழியைத் தயார் செய்வதாகும். 1932ஆம் வருடம், உலக விவகாரங்களில் நெருக்கடி, அதன்

உச்சகட்டத்தை எட்டும் தருவாயில், அவரது சிறப்பான வெளிப்பாட்டை நிலைநாட்டி, மேற்கத்திய பயணத்தை மீண்டும் மேற்கொள்வார்.

நீங்களும், நானும், மற்றும் பலரும் அந்த உணர்வில் வளர்ந்து வருகிறோம் - அந்தப் புதிய அமைப்பை நிறுவுவதற்கு, நீண்ட காலமாக உழைத்து வருகிறோம். இப்போது நமது பொதுவான உழைப்பின் பலன்களை அடையப் போகிறோம். ஸ்ரீ மெஹர் பாபா, வசந்த காலத்தில் இந்த நாட்டிற்குத் திரும்பி வந்து, ஏழு ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வரும் மௌனத்தைக் கலைத்து, பேசத் தொடங்கும் போது, அதாவது அவரது பொது வெளிப்பாட்டின் காலத்தைத் தொடங்கும்போது, நாம் சிறிய அளவில் அனுபவித்தவை அனைத்தும், பெருமளவில் உருவெடுக்கும்.

முழு மனிதகுலத்திற்கும் மிகப்பெரிய ஆன்மீக உத்வேகம் வழங்கப்படும், மேலும் உலக அளவிலான விழிப்புணர்வு ஏற்படும். இதற்கு வழி வகுக்கும் பணியில் பங்கெடுப்பதே ஒரு பாக்கியம்.

மெஹர் பாபா இங்குத் திரும்பி வரும் வேளையில், உங்களைத் தொடர்பு கொள்ள முடியும் என நான் நம்புகிறேன். இது உங்களுக்காக காத்திருக்கும் ஓர் அரிய அனுபவம் - இந்த வாழ்வில் மட்டுமல்ல, எதிர் வரும் பல வாழ்வு காலங்களிலும் - என்று உறுதியாகக் கூற முடியும்.

மெஹர் பாபா, அமெரிக்காவிலிருந்து புறப்பட்டுச் சென்ற பின்னர், **1931**, டிசம்பர் **11**ஆம் நாள், ஜோஸஃபீன் கிரேபவ் (JOSEPHINE GRABAU) எழுதிய இந்த வார்த்தைகள் பலரின் உணர்வை பிரதிபலிக்கிறது:

ஆயிரமாயிரம் இதயங்களின் தொழுமேடையின் மீது எரியும் சுடரைப் போல நீங்கள் வந்தீர்கள், ஒவ்வொரு பீடத்திலிருந்தும் எழுந்த நறுமண புகை மேகங்கள் வானில் பறந்தன.

நீங்கள் சென்ற இடமெல்லாம் இறை ஒளியை உங்களுடன் எடுத்துச் சென்றீர்கள், மானிடனின் வாழ்க்கை புதிய அழகு ஜோதியாய் மலர்ந்தது.

இறுதியில் அன்பு என்றால் என்ன என்பதை அறிந்தோம். மனிதர்களின் இதயங்களில் இயேசுவிற்கு ஏன் இத்தகைய சக்தி என்பதையும் புரிந்து கொண்டோம். உங்களில் நாங்கள் இயேசுவைக் காண்கிறோம், அவரை நேசித்தோம், நாங்கள் உங்களை இன்னும் அதிகமாக நேசிக்கிறோம்.

அன்பு, ஆனந்தம், அழகு, அமைதி, ஒளி மற்றும் வாழ்வு - இவை அனைத்தும் உங்களில் அவதரித்ததை நாங்கள் கண்டோம். எங்கள் நம்பிக்கை மேலும் உறுதியானது. இதுவரை நாங்கள் கடவுளை நம்பினோம்; உங்களிடத்தில் அவரைக் கண்டுகொண்டதால் அவர் உளதாயிருக்கிறார் என்பதை இப்போது நாங்கள் உணர்ந்து அறிந்து கொண்டோம்.

வாழ்க்கை, சுடரின் மகிமையாகவும், ஒளிரும் அழகாகவும் தொடர்ந்து மாறியது - நீங்கள்தான் அந்த மகிமையும், அந்த அழகும்; ஒவ்வொரு கணமும் தெய்வீக ஆனந்தத்தால் நிறைந்து வழிந்தது - நீங்கள்தான் அந்த ஆனந்தம். புரிய முடியாத அன்பால் எங்கள் இதயங்கள் எரிந்தன - நீங்கள்தான் அந்த அன்பு.

நீங்கள் சூரியனைப் போல, பிரபஞ்சத்தின் மையமாக இருந்தீர்கள்; கோடைகால பூக்களாகிய நாங்கள், இயற்கையாகவே சூரியனை நோக்கித் திரும்பினோம். நீங்கள் எங்களுக்கு வேண்டிய வெப்பத்தைத் தந்து, பசியால் வாடும் ஆத்மாவிற்கு, தூய்மையான அழகைக் தந்தீர்கள்; அதுவே நீங்கள் உளதாயிருப்பதன் சாராம்சமாகும். நாங்கள் உங்கள் கைகளில் சரணடைவதைக் கண்டோம், உங்கள் முன்னிலையில் புனிதத்தன்மையையும் அடைந்தோம்.

அதற்குப் பிறகு - காற்றில் மறையும் ஒளி போல - நீங்கள் எங்களை விட்டுச் சென்றீர்கள், உங்களை இழந்து நாங்கள் அறியாமையின் இருளில் தத்தளிக்கிறோம். நாங்கள் அழகான ஒரு கனவைக் கண்டோம், அதன் சுவையையும், வாழ்வையும் இழந்த ஓர் உலகில் விழித்தெழுந்தோம், நீங்கள் இல்லாமல் வாழ்க்கை ஒன்றும் இல்லை என்பதை உணர்ந்து கொண்டோம்.

இப்போது நாங்கள் உங்களை மட்டுமே நினைவில் கொண்டு வாழ்கிறோம். எங்கள் வாழ்வின் ஒளி தீபம் அசைந்து அணையும் தருவாயில் அதைத் தூண்டிவிட்டு, உங்களைப் பற்றிய எங்கள் சிந்தனையின் நெருப்பில், அதை மீண்டும் எழுப்புகிறோம்.

உங்களருகில் நாங்கள் ஒன்றுமில்லை. மேலும், உங்களைப் போன்ற அழகுடன் நாங்கள் இருக்கவும், உங்களால் ஆசீர்வதிக்கப்பட்ட அன்பை ஆயிரம் மடங்காகத் திருப்பித் தரவும் நாங்கள் ஏங்குகிறோம்.

ஒரு மாத காலம் அமெரிக்காவில் இருந்த பின்னர், 1931 டிசம்பர் 5ஆம் நாள் சனிக்கிழமையன்று நள்ளிரவு, சாஞ்சி, ஆகா அலி, மெரடித்துடன் மெஹர் பாபா, ஃபிரான்ஸ் நகரை நோக்கிச் செல்லும் ‘வட ஜெர்மன் லாயிட் லைனர் எஸ்.எஸ். ப்ரெமன்’ (NORTH GERMAN LLOYD LINER SS BREMEN FOR FRANCE) கப்பலில் பயணத்தைத் தொடங்கினார்.

பயணத்தின் போது தனிமையை விரும்பி, பாபா பிறரின் பார்வையில் வராமல் தனது அறையிலேயே இருந்தார். பெரும்பாலும் அவரது விரல்கள் அமெரிக்க அன்பர்களின் பெயர்களை எழுத்துப்பலகையில் எழுதிய வண்ணம், அவற்றை நினைவில் கொண்டு, உள்ளளவில் அவரது அன்பை அனுப்பிக் கொண்டிருப்பது போல பாபா தோற்றமளித்தார்.

அட்லாண்டிக் பெருங்கடலைக் கடக்கும் முதல் சில நாட்களில் கடல் கொந்தளிப்பு மிகவும் அதிகமாக இருந்ததால் பெரும்பாலான பயணிகள் உள்ளேயே இருந்தனர். பாபா மற்றும் மண்டலியின் அறைகள் கப்பலின் நடுவில் அமைந்திருந்ததால், அதிக அசைவின்றி இருந்தன. அமெரிக்காவில் அவரது கடினமான பணிக்குப் பின்னர், இந்த ஐந்து நாள் பயணம் அவருக்கு நிதானமாகவும் ஓய்வாகவும் அமைந்தது. பாபா, அவர் தங்கியிருந்த அறை மற்றும் உணவைப் பெரிதும் விரும்பி மகிழ்ச்சியாகக் காணப்பட்டார்.

பயணத்தின் கடைசி நாளில், 1931 டிசம்பர் 10ஆம் நாள், ஒரு சில செய்தித்தாள் நிருபர்கள், புகைப்படக் கலைஞர்கள், பாபா கப்பலில் பயணம் செய்வதை அறிந்து, அவருடைய அனுமதியுடன் புகைப்படங்கள், காணொலிகள் எடுத்தனர்.

புகைப்பட கலைஞர், எமீல் ப்ரூனல் (EMILE BRUNEL) பின்பு பாபாவின் அறைக்கு வந்தார். நியூயார்க் நகரின் பிரபல ஓவிய, புகைப்படக் கலைஞருமான ப்ரூனல், பாபாவின் (அவர் அணிந்திருந்த வெள்ளை அங்கியுடன்) ஓவியத்தை வரைய அனுமதி கேட்டதும் ஆச்சரியப்படும் விதமாக, பாபா அதை ஏற்றுக்கொண்டார். ஓவியத்திற்காக அமர்ந்திருந்த வேளையில், பாபா அவருடன் ஆன்மீக மற்றும் மத விஷயங்களைப் பற்றி விளக்கமளித்தார்.

பாபாவின் ஓவியத்தைத் தனது புத்தகத்தில் வரையும்போது, ப்ரூனல், சாஞ்சியிடம், “உங்களுக்குத் தெரியும், அவர் கிறிஸ்துவைப் போலவே இருக்கிறார்; சாதாரண ‘மனிதர்’ அல்ல! இன்னும் ஏதோ, இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒன்று அவரிடம் உள்ளது. அவ்வளவுதான். அவருடைய அழகான, அற்புதமான அம்சங்கள் அனைத்தும் ஒரு கலைஞரின் நீண்ட காலக் கனவு.”

ப்ரூனல், பாபாவை மீண்டும் பாரிஸில் பார்க்க விருப்பம் தெரிவித்து, அவரது ஸ்டுடியோவுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். ஆனால் பாரிஸில் இருந்தபோது, பாபா எந்த வெளிநாட்டினரையும் சந்திக்க விரும்பாததால், பணிவுடன் மறுத்துவிட்டார்.

1931, டிசம்பர் 11ஆம் நாள் ‘ஷெயபாக்’ (CHERBOURG) துறைமுகத்தில் இறங்கிய பாபா அன்று மாலை பாரிஸுக்கு வந்து, 52, ‘ரியு ஃபான்ஸுவா’வில் (REU FRANCOIS) ‘பவர்ஸ்’ ஹோட்டலில் (HOTEL POWERS) தங்கினார். மார்கரெட் ஸ்டார், மார்கரெட் கிராஸ்க், டிலியா, கிம் ஆகியோர் முந்தைய நாளும், அடுத்த நாள் கிட்டியும், ஸில்லாவும் பாரிஸுக்கு வந்தனர். அன்றிரவில், அவர்கள் ‘ஆபர்ட் பேலஸ் சினிமா’விற்குச் (AUBERT PALACE CINEMA) சென்று, சார்லி சாப்ளின் நடித்த ‘சிட்டி லைட்ஸை’யும் (CITY LIGHTS), ‘லாரல் & ஹார்டி’ (LAUREL & HARDY) திரைப்படத்தையும் பார்த்தார்கள்.

பாரிஸில் இருந்தபோது, பாபா எதையேனும் கை சைகை மூலம் தெரிவிக்கும் வேளையில், மெரடித் அவருடைய தனிப்பட்ட விளக்கத்தைக் கூறி, குறுக்கிடுவது வழக்கம். “மெஹர் பாபா இதைக் குறிப்பிடுகிறார்... இதன் பொருள் இப்படி...” என்றெல்லாம் கூறியது பாபாவிற்கு எரிச்சலூட்டுவதாக இருந்தது; அவர்கள் வெளியே செல்லும் போதெல்லாம், மெரடித், பாபாவின் ஒரு பக்கமும், அவரது மனைவி மறுபக்கமும் அவருடன் நடக்க முயற்சித்தனர். இறுதியாக, பாபா ‘அவருக்கே உரிய பாணியில் அதைச் செய்ய’ முடிவு செய்தார்.

மெஹர் பாபா, மெரடித்தை நோக்கி, “**நீங்கள், உங்கள் உணர்வு நிலையில் ஒரு மாற்றத்தை சந்திக்கிறீர்கள், இங்கு, பாரிஸில் உங்களுக்கு எதிரான ஒரு சில தீய சக்திகள் உள்ளன, எனவே நீங்கள் இங்கே இருப்பது ஆபத்தானது**” என்று குறிப்பிட்டு, டிசம்பர் 13 அன்று, மெரடித், மார்கரெட் ஸ்டார் இருவரையும் இங்கிலாந்திற்கு அனுப்பி வைத்தார்.

மெரடித் ஸ்டாரைப் பொறுத்தவரையில், பாபா, அவரை மிகவும் நுணுக்கமாகக் கையாள வேண்டியது அவசியமாயிற்று. அவருடைய பழக்கவழக்கங்கள் முறையாக இல்லாதபோதிலும், பாபா அவரைக் கண்டிக்கவில்லை. சில சமயங்களில், மெரடித், பாபாவின் காலணிகளை

அணிந்தார். பாபா அதையும் கண்டுகொள்ளாதது போல் இருந்தார். ஒரு குருநாதரின் காலணிகள் இந்தியாவில் புனிதமாகக் கருதப்படுகிறது; மேலும் மெரடித்தின் மரியாதையற்ற நடத்தையைக் கண்டு, சாஞ்சி மிகவும் எரிச்சலடைந்தார். பாபாவைப் பொறுத்தவரை, அவரது பணி மிகவும் முக்கியமானதால், அவர் அமைதியாக இருந்தார். ஆனால் அந்தப் பணி முடிந்த பின்பு, பாபாவுடனான தொடர்பை மெரடித்தால் பாதுகாக்க முடியவில்லை. இதை நாம் பின்பு காணலாம்.

மெரடித் இங்கிலாந்திற்குப் புறப்பட்டுச் சென்ற பின்பு, சூழ்நிலைகள் இயல்பாகவும், இணக்கமாகவும் இருந்தன, மேலும், பாபாவின் முன்னிலையில் அனைவரும் சுதந்திரமாகவும், திறந்த மனதுடனும் காணப்பட்டனர். மெஹர் பாபா, அவருக்கே உரிய அற்புதமான முறையில் இந்த மாற்றத்தைக் கொண்டுவந்தார். டிசம்பர் 13ஆம் நாள், பாபாவுடன் ஹோட்டலிலிருந்து வெளியே செல்லும் வேளையில், பாபா, மார்கரெட் கிராஸ்க்கிடம், "**ஆமாம், இன்று நீங்கள் ஏன் உதட்டுச்சாயம் பூசவில்லை?**" என்று கேட்டதை, முதலில், அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. பாபா மூன்று முறை சைகையால் தெரிவித்த பிறகு, மெரடித் ஸ்டார் அமல்படுத்திய தடைகளை நினைவுகூர்ந்து மார்கரெட் மகிழ்ச்சியடைந்தார்.

மெரடித் நடந்துகொண்ட விதத்தைப் பற்றி பாபா ஒருபோதும் குறிப்பிட்டதில்லை; ஆனால் பாபா சூசகமாகக் குறிப்பிட்டது, ஐயப்பாடுகளை நீக்கி சுமுகமான சூழலை உருவாக்கியது. அதற்குப் பின்னர் அவர்கள் இயல்பான முறையில் நடந்து கொள்வதையே பாபா விரும்பினார் என்பதை அறிந்து கொண்டனர்.

பாபாவும் குழுவும் அன்றைய தினம், "ஈஃபில்' கோபுரத்தில் (EIFFEL TOWER) புகைப்படங்களை எடுத்து, மகிழ்ச்சியான மனநிலையில் 'ஸென்' (SEINE) நதி வழியாக உலா வந்தனர். இரண்டு நாட்களில், பாபா ஆன்மீகத்தில் ஆர்வமுள்ள சில உள்ளூர் நபர்களை சந்தித்தார் (அவர்களில் சிலரை மால்கம் ஏற்கனவே தொடர்பு கொண்டிருந்தார்). பாரிஸ் நகரில் முக்கியமான 'லூவ்' அருங்காட்சியகம் (LOUVRE MUSEUM), 'ஆர்க் தி த்ரியோம்ஃப்' (THE ARC DE TRIOMPHE), 'நாட்ர தாம்' கதீட்ரல்' (THE CATHEDRAL OF NORTE DAME), 'ஷாம்ஸ் எலிஸே' (CHAMPS ELYSEES) போன்ற சிறப்புமிக்க இடங்களை, காரில் பயணம் செய்து பார்வையிட்டனர்.

ஹோட்டலுக்குத் திரும்பி வந்த பின்பு, கிட்டி, ஸில்லா இருந்த அறையில் பாபா நள்ளிரவு வரை அமர்ந்திருந்தார். இதற்கிடையில் வேறொரு அறையில், விசித்திரமான ஏதோ ஒன்று நடந்து கொண்டிருந்தது. பாரிஸில் தூனிய சக்திகள் இருப்பதாக டிலியா, கிம் இருவரும், பாபா, மெரடித்திடம் கூறியதைக் குறித்து அவர்களிடையே பேசிக்கொண்டனர்: "இந்தத் தீய சக்திகளின் தாக்கத்திலிருந்து பாபாவை நாம் பாதுகாக்க வேண்டும்." கிம் அதைப் பற்றிக் கூறியதாவது:

டிலியாவும் நானும், இரண்டு பக்திமிக்க சிறிய இளவரசிகள், இரவு முழுவதும் அமர்ந்து, சங்கீதங்கள் பாடி, பிரார்த்தனை செய்தோம். மறுநாள் காலையில் நாங்கள் பாபாவிடம் இதைப் பற்றிக் கூறி, பெருமிதம் அடைந்தோம். பாபா அதை நினைத்து மகிழ்ச்சியடைந்தார். மார்கரெட் எங்களைப் பைத்தியம் என்று வர்ணித்தார்; உண்மையில் நாங்களும் அப்படித்தான்; மிகவும் கேலிக்குரியவர்களாகத் தென்பட்டோம், ஆனால் அது எங்களின் உண்மையான அன்பினால் செய்யப்பட்டது.

1931, டிசம்பர் 15 அன்று, மெஹர் பாபாவும் குழுவும், ஒரு ரோல்ஸ் ராய்ஸ் காரில் பாரிஸ் நகருக்கு வெளியே புறநகர் பகுதியில் அமைந்த வஹ்ஸாய் அரண்மனைக்குச் (VERSAILLES PALACE) சென்றனர். முதல் உலகப் போரை முடிவுக்குக் கொண்டுவந்து ‘வஹ்ஸாய் ஒப்பந்தம்’ (TREATY OF VERSAILLES) கையெழுத்திடப்பட்ட ‘ஹால் ஆஃப் மிரர்ஸ்’ஸையும் (HALL OF MIRRORS) அவர்கள் பார்வையிட்டனர். பின்னர் அரண்மனையின் பிற பகுதிகளுக்குச் சென்று ‘மெரி அன்டுவனெட்’ அறைக்கலத் தொகுப்பையும் (MARIE ANTOINETTE’S SUITE) பார்த்தனர். அன்று இரவில், பாபாவுடன் அவர்கள் கடைசியாக, ஹோட்டலில் தங்கியிருந்த வேளையில், அலி, ஜான், ஸில்லா ஆகியோருடன் பாபா பல விளையாட்டுகளை விளையாடினார்.

மெஹர் பாபாவால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அதிர்ஷ்டசாலிகள், ஏறக்குறைய ஒரு வாரத்திற்கு பாபாவின் கட்டுப்பாடற்ற சூழ்நிலையில் சுதந்திரத்தை அனுபவித்து, அவரது சகவாசத்தில் அளவற்ற நன்மைகளை அடையப் பெற்றனர். பாரிஸில், பாபா முதன்முறையாக ஆங்கில மக்களுக்கு ‘மறுபிறவி’ (REBIRTH), ‘பரிணாமம்’ (EVOLUTION), ‘உட்சுழற்சி’ (INVOLUTION) குறித்து விளக்கமளித்தார்.

ஆனால், பாபாவைப் பிரியும் நேரம் நெருங்கியதால், அவர்களின் மகிழ்ச்சி சோகமாக மாறியது. “இந்த வேதனையான பிரிவில்தான் மகிழ்ச்சி மறைந்திருந்தது, ஏனெனில் வேதனை இல்லாமல், மகிழ்ச்சியை அறிய முடியாது” என்று காலம் விளக்கியது.

பாரிஸ் நகரில் அவர்களின் கடைசி நாளான டிசம்பர் 16 அன்று, பாபா ஒரு சிலரை தனது அறைக்கு அழைத்து ஜன்னலருகில் நின்று, எழுத்துப்பலகையில் உச்சரித்தார்: “**என்னுடைய உண்மையான ரூபத்தை நீங்கள் பார்க்கவில்லை. இந்த உடல் நான் அல்ல; என் உண்மையான ரூபம் மிகவும் அழகாக, அற்புதமாக இருக்கும். நான் எல்லையற்ற உண்மைப்பொருள், எல்லையற்ற அன்பு, எல்லையற்ற சக்தி**.”

பின்னர் அவர், “**நித்திய, நிரந்தர வாழ்வும் நானே! நானே கிருஷ்ணா, நானே புத்தா, நானே இயேசு, இப்போது நான் மெஹர் பாபா**” என்று கூறினார்.

அன்று பிற்பகல் அனைவரின் விருப்பத்திற்கு இணங்க வெளியே செல்லாமல் ஹோட்டல் அறையிலேயே இருந்தனர். பாபாவின் வாழ்க்கைக் கதைகளை, சாஞ்சி அனைவருக்கும் விவரித்தார். இசைத்தட்டுகளில் சில

பாடல்களையும் கேட்டு ரசித்த பின்பு, பாபா அனைவரையும் தத்தமது அறைகளுக்கு அனுப்பிவிட்டு, ஒவ்வொருவரையும் தனித்தனியாக அழைத்து, சில சிறப்புச் செய்தி மற்றும் அறிவுறுத்தல்களை வழங்கினார்.

"**மகிழ்ச்சியாக இருங்கள், கவலைப்பட வேண்டாம்**" என்று கூறி "**பத்து நாட்களுக்கு ஒரு முறை எனக்குக் கடிதம் எழுதுங்கள். நான் வசந்த காலத்தில் மறுபடியும் திரும்பி வருவேன். என்னை மேலும் மேலும் நேசிப்பதைத் தொடருங்கள்**" என்று அறிவுரை வழங்கினார்.

1931, டிசம்பர் 16ஆம் நாள் மாலையில் மெஹர் பாபா, அலி, சாஞ்சி மூவரும் ஃபிரெஞ்சு மொழியை அறிந்த மார்கரெட்டுடன், பாரிஸிலிருந்து மார்ஸெயில்ஸ் நகருக்கு ரயிலில் சென்றனர். பாபாவுடன் இருந்த அனைவரும் 'கரே டி லியோன்' (GARE DE LYON) ரயில் நிலையத்திற்கு, பிரியா விடையளிக்க வந்தனர்.

பாபாவைப் பிரிந்து பாரிஸில் இருந்த அன்பு உள்ளங்களின் பரிதாப உணர்வு நிலைக்கு, கிம், சாஞ்சிக்கு எழுதிய கடிதம் ஒரு சாட்சி:

ரயில் புறப்பட்டதும் நாங்கள் எப்படி உணர்ந்தோம் என்பதை நீங்கள் யூகிக்க முடியும்; விடைபெறும் வேளையில், நாங்கள் எப்படியேனும் கட்டுப்படுத்த முயற்சித்த கண்ணீர், பாபா இனி எங்கள் முகங்களைக் காணமுடியாது என்றவுடன் சுதந்திரமாகத் தானே வழியத் தொடங்கியது.

ஹோட்டலுக்கு நாங்கள் எப்படித் திரும்பிச் சென்றோம், அல்லது பாபாவின் அறையை நாங்கள் எப்படிக் கண்டுபிடித்தோம் என்பது எதுவும் நினைவில் இல்லை, ஆனால் பாபா எங்களுடன் இருப்பதை நாங்கள் தீவிரமாக உணரத் தொடங்குவதற்கு முன்பே நாங்கள், எங்கள் கண்ணீரைத் துடைத்து, சிரித்துக்கொண்டே அவரைப் பற்றிப் பேசத் தொடங்கினோம்.

அவர் உண்மையிலேயே இன்னமும் எங்களுடன் இருப்பதாகத் தோன்றியது - அவருடைய முகம் சிரிப்பதையும், கண்கள் ஆழ்ந்த அன்போடு நம்மைப் பார்ப்பதையும் என்னால் காண முடிந்தது. நாங்கள் அழுவதை அவர் விரும்பமாட்டார் என்று எங்களுக்குத் தெரியும், எனவே பாபாவை மகிழ்விக்க அவருக்குப் பிடித்த பாடல்களைப் பாடினோம், அந்த வாரத்தின் சம்பவங்கள் குறித்துப் பேசினோம், எதிர்காலத்திற்கான பல மகிழ்ச்சியான திட்டங்களை வகுத்தோம்.

பாபா நாங்கள் ஓய்வெடுப்பதை விரும்புவார் என்று எங்களுக்குத் தெரியும், ஆகையால் நாங்கள் அனைவரும் சீக்கிரமாகவே படுக்கைக்குச் சென்றோம், டிலியாவும் நானும் பாபாவின் அறையிலும், பாபாவின் படுக்கையிலும் தூங்குவதில் மிகவும் உற்சாகமாக இருந்தோம், ஆனால் நாங்கள் தூங்குவதற்கு நீண்ட நேரமானது.

காலை ஆறு மணிக்கு நாங்கள் எழுந்து, விரைவில் தயாராகி, காலை உணவை முடித்து, எட்டு மணிக்கு முன்பு, நாங்கள் ஹோட்டல் பவர்ஸ்-ஐ விட்டு வெளியேறினோம். பாரிஸ் நகரம் நகை இல்லாத அலங்கார பேழையாகவும், வாசனை இல்லாத ரோஜாவாகவும் இருந்தது.

மெஹர் பாபாவுடன் பாரிஸில் அவர்கள் இருந்த நேரம் பற்றி, கிம் இவ்வாறு கூறினார்:

பாபா ஒரு முறை எங்களிடம், **“கிழக்கத்திய நாடுகளில், மக்கள் என்னை வழிபடுகிறார்கள், மேற்கில், மக்கள் என்னை நேசிக்கிறார்கள்”** என்று கூறினார்.

பாரிஸ் நகரில் பாபாவுடன் இருந்தபோது ஓர் அழகான, அற்புதமான சூழ்நிலை நிலவியது. நாங்கள் வெளியே செல்வதற்கு முன்னர், அவரது தலைமுடியைச் சுருட்டி, தொப்பியின் கீழ் வைத்தோம். அது அன்பால் செய்யப்பட்டது. அதற்காக நாங்கள் அவரை வணங்கவில்லை என்று கூறவில்லை; நிச்சயமாக, நாங்கள் வணங்கினோம். ஆனால் பரிபூரண அன்பு, பயத்தைத் துரத்திவிடுகிறது; அவர் அன்பின் மொத்த உருவம்; யாரோ ஒருவர் கிண்டல் செய்து, ‘ஓ, பாபா, நீங்கள் அந்தத் தொப்பியில் வேடிக்கையாகத் தோன்றுகிறீர்கள்’ என்று கூடச் சொல்லலாம். பலர் இதைத் தவறாகப் புரிந்து கொள்வது உண்டு. இது வெறும் பிரியத்தால் விளையும் விளையாட்டு; மேலும் பாபா இதை நேசித்தார், ஏனெனில் அவர் எங்களுடன் ஓய்வெடுத்து முற்றிலும் மகிழ்ச்சியாக இருக்க இது வழிவகுத்தது.

தியானம் தேவையில்லாத ஒன்று. அமைதியாக அவருடன் அறையில் இருந்தாலே போதும். அது ஒரு பேரன்பின் விருந்து; நீங்கள் அன்பாக இருக்கிறீர்கள்; பாபா அன்பின் பிறப்பிடம், அன்பின் உறைவிடம்; இது ஒன்றே போதுமானது. ஆயினும்கூட, இது ஓர் அன்பின் பரிமாற்றம் என்று நான் நினைக்கிறேன்; நாங்கள் பாபாவுடன் ஒன்றாக இருப்பதை - நகைச்சுவையாக, விளையாட்டுத்தனமாக, கேலியும், கிண்டலும் செய்து கொண்டு இருப்பதை - ஒரு சிலரே புரிந்துகொள்ள முடியும்.

“ஓ, சோக-குரு ஒரு சந்தோஷமான சத்குரு!” (OH, SAD-GURU IS A HAPPY SADGURU!) இப்படி, சின்ன சின்ன கவிதைகள் மற்றும் வேடிக்கையான, சிறிய சிறிய நகைச்சுவை நையாண்டிகள் செய்வது உண்டு. அந்த நேரத்தில், அவரது முகம் ஒளிரும், அவரது கண்கள் பிரகாசமாக மாறும். பிரியமான பாபா, எங்களுடன் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார் என்று நினைக்கிறேன். அவர் எங்களை விட்டுப் பிரிந்து சென்ற பின்னர் ஒவ்வொரு நாளும் நான் அவருக்குக் கவிதைகளை அனுப்பினேன், எங்கள் பிரிவின் துக்கத்தில் மிகுந்த வருத்தத்தை வெளிப்படுத்தினேன்.

பழைய இயல்பான நிலைக்கு வருவது எனக்கு மிகவும் கடினமாக இருந்தது, ஏனெனில் நான் உண்மையில் வேறுவோர் உலகிற்கு எடுத்துச் செல்லப் பட்டிருந்தேன். எனது கணவர் மற்றும் குடும்பத்தையும் கவனித்து, அன்றாட உலக வாழ்க்கையில் இறங்கி, நான் செய்ய வேண்டியதைச் செய்வது - எனக்குக் கடினமாக இருந்தது. ஆனால் கடமையை எவ்வாறு செய்ய வேண்டும் என்று பாபா எங்களிடம் கூறியுள்ளார், ஆதலால் என்னால் முடிந்த வரை முயற்சித்தேன். இது எளிதானது அல்ல என்றாலும், சரியானது என்று எனக்குத் தெரியும்.

1931, டிசம்பர் 17ஆம் நாள், மார்ஸெயில்ஸில், சாமான்களைக் கப்பலுக்கு எடுத்துச் சென்று, காலை உணவை முடித்த பின்பு, மார்கரெட், பாபாவை 'லேடி ஆ∴ப் தி ஸீ' (LADY OF THE SEA) என்று அழைக்கப்படும் மத்தியதரைக் கடலை நோக்கி, ஒரு மலையில் அமைந்த பழைய தேவாலயத்திற்கு அழைத்துச் சென்றார். தேவாலயத்திற்கு வெளியே இருந்த ஒரு பிச்சைக்காரனுக்கு, மார்கரெட் சிறிது பணம் கொடுக்க விரும்பினார். ஆனால் பாபா அவரைத் தடுத்து நிறுத்தி, **"என்னிடமிருந்து கொடுங்கள். நீங்கள் அதைக் கொடுத்தால், அவருடைய மனப்படிவங்கள் உங்களைத் தொற்றிக் கொள்ளும்"** என்றார்.

தேவாலயத்தில் வைக்கப்பட்டிருந்த 'பியத்தா'வின் (PIETA) சிலைக்கு முன்னால் பாபா நின்ற வேளையில், பாபாவும் சிலுவையில் அறையப்படுவாரா என்ற சிந்தனை மார்கரெட் மனதில் அலை மோதியது. பாபா உடனடியாக மார்கரெட்டை நோக்கி, எழுத்துப்பலகை மூலம் பதிலளித்தார், **"இம்முறை அது நடக்காது, ஆனால் அதற்கிணையான துன்பங்கள் மனதளவில் இருக்கும்."**

பின்னர், அவர்கள் மார்ஸெயில்ஸில் 'தி பிக் ஹவுஸ்' (THE BIG HOUSE) எனும் சிறைச்சாலையில் உள்ள கைதிகளைப் பற்றிய ∴பிரெஞ்ச் திரைப்படத்தைப் பார்க்கச் சென்றனர். இதை மார்கரெட், பாபாவிற்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். திடீரென, பாபா எதற்கும் செவி சாய்க்காதது போலத் தோன்றி, இருக்கையில் சாய்ந்து அமைதியானார். சிறிது நேரம் கழித்து எழுந்து அமர்ந்து, **"நான் வியன்னாவிற்குச் சென்றிருந்தேன்"** என்று சாஞ்சிக்கு எடுத்துரைத்தார்.

மார்கரெட் பாரிஸ் நகருக்குத் திரும்பிச் சென்ற பின்னர் அவர் பாபாவிற்கு எழுதியதாவது:

என்ன ஓர் அற்புதமான, மறக்கமுடியாத 24 மணிநேரம் - அந்த நேரத்தில் நீங்கள் என்னுடன் மட்டுமே இருந்தீர்கள். அப்படி ஒரு தெய்வீக நாள் எனக்குக் கிடைத்தது கிட்டத்தட்ட சாத்தியமற்றது. முழு உலகமும் உங்களை நேசித்து, உங்களைப் பகிர்ந்து கொள்வது எனக்கு மிகப் பெரிய மகிழ்ச்சி என்றாலும், என்னுடைய பேராசையில் உங்களை ஒரு நாளுக்காகத் திருடியது மிகவும் அருமையாக இருந்தது. நான் உயிர் வாழும் வரை, அந்த இரவும் பகலும் எனது நினைவில் நிற்கும்.



மெஹர் பாபாவுடன் (இடமிருந்து வலம்) மால்கம் ஸ்க்லோஸ், ஆகா அலி, மெரடித் ஸ்டார் & சாஞ்சி - ஹார்மன் ரிட்ரீட், 1931



ஜீன் அட்ரியல்



மெஹர் பாபா - எகிப்து **1931**



குயன்டின் டாட், மெஹர் பாபா, - எகிப்து **1931**

# எகிப்து வழியாக இந்தியா வருகை

**(Return To India)**

1931, டிசம்பர் 18ஆம் நாள் பாபா, சாஞ்சி, ஆகா அலி மூவரும் 'பி&ஓ லைன் எஸ்.எஸ். நர்குண்டா' (P & O LINE SS NARKUNDA) கப்பலில் இந்தியாவை நோக்கி பயணத்தைத் தொடங்கினர்.

டிசம்பர் 22ஆம் நாள் பாபா, போட் ஸெட் (PORT SAID) துறைமுகத்தில் இருந்தபோது கிம்கோ அனுப்பிய தொலைத்தந்தி வந்தது: "எங்களை விட்டுச் செல்வது சாத்தியமற்றது; நாங்கள் இப்பொழுதும் உங்களுடன் இருக்கிறோம்." பாபா அவரது அறையில் பால் ராப்ஸனின் இசைகளை ரசித்தார். அந்தப் பாடல்களில் ஒன்றான 'ஹியர் தி லாம்ப்ஸ் கிரையிங்' (HEAR THE LAMBS CRYING) பாடலை இசைத்த வேளையில், பாபாவின் கண்களில் நீர் ததும்பியது. ஒருவேளை அவர் விட்டு வந்த பிரியமானவர்களை நினைத்து தான் இருக்கும் என சாஞ்சி குறிப்பிட்டார்.

கப்பலில் பயணம் செய்யும் வேளையில், பாபா இங்கிலாந்து, அமெரிக்காவில் வாழும் தனது பிரியமானவர்களுக்குச் செய்திகளை அனுப்பினார். மால்கம், ஜீன் தம்பதிகளுக்கு அவர் எழுதினார்: "**உங்களிடம் என் அன்பைப் பொழியவும், அமெரிக்காவை ஆன்மீக மயமாக்கவும் நான் மீண்டும் வருவேன்.**"

கப்பலில், ஒரு முஸ்லிம் மருத்துவர், பாபா ஒரு சிறந்த ஆன்மீக ஞானி என்பதைத் தெளிவாகக் கண்டுகொண்டார். இருப்பினும், மெஹர் பாபா மறைமுகமாக எம்.எஸ். ஈரானி என்ற பெயரில் பயணம் செய்தார். அந்த நபர் அவ்வப்போது பாபாவைப் பார்த்துக் கொண்டிருந்தார்; ஒரு நாள், பாபா கப்பல் தளத்தில் இருந்தபோது, அவர் பாபாவை அணுகி, சாஞ்சிக்கு விளக்கிக்கொண்டிருந்த ஒரு சுருக்கமான உரைக்கு செவிமடுத்தார். இந்த வாய்ப்பை, கப்பலிலிருந்த இதர பயணிகளுடன் பகிர்ந்து கொள்வதை அவரால் தவிர்க்க முடியவில்லை, மேலும் அவர், பாபா, ஒரு பயணிகள் குழுவிற்கு உரையாற்றும்படிக் கேட்டுக்கொண்டார்.

முன்னூறுக்கும் மேற்பட்ட மக்கள், இந்திய குருநாதரின் உரையைக் கேட்க ஒன்றுதிரண்டனர். 15 நிமிடங்கள் மட்டுமே பேச ஒப்புக்கொண்ட பாபா, கடைசியில் பல கேள்விகளுக்கு விடையளித்து, பேச்சு ஒரு மணி நேரம் நீடித்தது.

கிறிஸ்துமஸ், புத்தாண்டு கொண்டாட்டம் ஐரோப்பிய பயணிகளால் வழக்கம் போல, கப்பலில் மிகவும் குதூகலமாகக் கொண்டாடப்பட்டது. வானொலி மூலம் உலகிற்கு ஒரு செய்தியை வழங்குமாறு கேட்டபோது, பாபா விளம்பரம் இல்லாமல் பயணம் செய்ய விரும்புவதைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்ததால் மறுத்துவிட்டார்.

1932, ஜனவரி 1ஆம் நாள் இந்தியா வந்தடைந்து, பாபா, சாஞ்சி, ஆகா அலி ஆகியோர் மும்பையில் காக்கா பாரியாவின் சகோதரி பானுமாசி இல்லத்திற்குச் சென்றனர். ஏறக்குறைய ஐந்து மாதங்களாக பாபா இந்த மேற்கத்திய பயணத்தை மேற்கொண்டார்.

அமெரிக்காவில் இருந்தபோது மெஹர் பாபாவிற்கும் காந்திக்கும் இடையே கடித பரிமாற்றம் தொடர்ந்தது. பாபா இந்தியாவிற்குத் திரும்பி வந்ததும், காந்தி அவரை சந்திக்க விரும்புவதாக ருஸ்தம், ராம்ஜூ இருவருக்கும் அறிவுறுத்தப்பட்டது. பாபாவும் காந்தியைப் பார்க்க விரும்புவதாகக் கூறியிருந்தார். இந்தியாவில் அரசியல் மற்றும் சமூக நிலைமை தீவிரமாகிவிட்டது; அரசியல் கிளர்ச்சிக்காக காந்தி எந்த நேரமும் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனவே பாபா, காந்தி இருவருக்கும் இடையேயான ஒரு சந்திப்பு விரைவில் ஏற்பாடு செய்யப்பட்டது.

1932, ஜனவரி 3 அன்று மெஹர் பாபா, சாஞ்சியுடன், இரவு 12 மணிக்கு, மும்பையின் கம்தேவி (GAMDEVI) என்ற இடத்தில் அமைந்த மஹாத்மா காந்தியின் இல்லமான மணி பவனுக்குச் சென்றார். காந்தி, பாபாவை அன்புடன் அரவணைத்து வரவேற்றார்; இருவரும் ஒன்றாக அமர்ந்து, ஒரு மணி நேரம் பல விஷயங்களைப் பற்றி விவாதித்தனர்:

“உங்களைப் பார்த்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்” என்று காந்தி கூறினார்.

”**நாம் சந்தித்ததில் நானும் மகிழ்ச்சியடைகிறேன்**” என்று பாபா பதிலளித்தார். “**நாள் முழுவதும் மும்முரமாக இருந்தேன், ஆனால் ஒரு முறையாவது உங்களைப் பார்க்க வேண்டிது அவசியமாயிற்று**.”

“ஆமாம், ருஸ்தம் உங்கள் செய்தியை எனக்கு வழங்கியிருந்தார், நான் உங்களைப் பார்க்க வேண்டும் என்று கூறி அனுப்பினேன்.”

”**அதனால்தான் நான் வந்தேன்**” என்றார் பாபா.

“நீங்கள் வரவில்லை என்றால், அது எனது வாழ்நாளில் ஒரு குறையாக இருந்திருக்கும்” என்று காந்தி கேலியாகக் கூறினார்.

“**ஒருவேளை நீங்கள் கைது செய்யப்பட்டிருந்தால், அது ஓரிரு நாட்களில் நடக்கும் என்று நான் கருதுகிறேன், இந்த சந்திப்பிற்கு வாய்ப்பில்லாமல் போயிருக்கும். ஆனால், உங்களைக் கைது செய்வது நிச்சயம் என்பதால், இரவில் தாமதமானாலும், நான் இங்கு வர முடிவு செய்தேன். நீங்கள் வர முடியாது என்பது எனக்குப் புரிகிறது**.”

“இங்கு வந்திருப்பது உங்கள் கருணை”

“**இப்போது, என்ன செய்தி**?” பாபா விசாரித்தார்.

“உங்களுக்கு அனைத்தும் தெரியும். இந்த மக்கள் (என்னைச் சுற்றி) தமது சட்டை கைகளைச் சுருட்டிக்கொண்டு தயாராக இருக்கிறார்கள். நாங்கள் ஆங்கிலேயரிடம் இறுதிவரைப் போராட வேண்டும்.”

**“நீங்கள் மீண்டும் ஒரு முறை வைஸ்ராய் லார்ட் இர்வினை** (VICEROY LORD IRWIN) **பார்த்தால் அது மிகவும் நன்றாக இருக்கும். பின்னர், இப்போது தீவிரமாக இருக்கும் உற்சாகம் வெகுவாகக் குறைந்து, நிலைமையைக் கையாள எளிதாக இருக்கும்.”**

“நான் வைஸ்ராயைப் பார்க்க விரும்புகிறேன், ஆனால் அவர், ‘இந்த விஷயத்தை விவாதிக்கக்கூடாது’, ‘அது அனுமதிக்கப்பட மாட்டாது’ இப்படிப் பல நிபந்தனைகளை முன்வைக்கிறார். அதற்கு நான் ஒப்புக்கொள்வது சாத்தியமல்ல. மேலும், கட்டளைகளைப் பற்றிய எந்தப் பேச்சும் அனுமதிக்கப்படாது என்பது பிரச்சினையின் முதல் மற்றும் முக்கிய விஷயமாகும். அவர்கள் அதைப் பற்றி பேச விரும்பாத போது, அந்த சந்திப்பு, பயனற்றதாகிவிடும்” என்றார் காந்தி.

**“ஆனால், அதையெல்லாம் கடந்து, நீங்கள் ஒரு முறை வைஸ்ராயைப் பார்க்கச் சென்றால், நீங்கள் அமைதியான சூழ்நிலையில் பணிபுரிய முடியும். இந்தியா முழுவதும் தற்போதைய தீவிர கொந்தளிப்பு குறைந்து அமைதி நிலவும்; இல்லையேல், சூழ்நிலைகள் வன்முறையை நோக்கித் தீவிரமடையும்.**

**“நான் கூற விரும்புவது என்னவெனில்”** பாபா தொடர்ந்தார், **“அஹிம்சையைப் பற்றிய உங்கள் கோட்பாடும், கட்டளைகளும் மிகச் சிறந்தவை, மேலும் இந்த ‘அஹிம்சை’ அணுகுமுறையைப் பின்பற்றிச் செயல்படுவதை நானும் விரும்புகிறேன். ஆனால், இது மிகவும் கடினம் என்று எனக்குத் தெரியும் - மாறாக சாத்தியமற்றதும் கூட. அதனால்தான் ஆட்சியாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையில் நல்லிணக்க உணர்வைக் கொண்டுவருவதற்காக, வைஸ்ராயை ஒரு முறை நேரில் சந்திக்குமாறு நான் உங்களிடம் பலமுறை கூறுகிறேன். ஏனெனில், இந்த சந்திப்பு நடக்கவில்லை என்றால், நிலைமை இன்னும் மோசமாக மாறும். மக்கள் வன்முறையில் ஈடுபட்டால், அது எல்லா வகையிலும் அழிவுகரமானதாக இருக்கும்.”**

“இது மிகவும் சாத்தியம்” என காந்தி ஒப்புக் கொண்டார். “இதுபோன்ற வன்முறைகளுக்கு நாங்கள் அஞ்சுகிறோம், இருப்பினும், நாம் நியாயத்திற்காகப் போராட வேண்டும், மேலும் ஆங்கிலேயரை வெளியேறும்படி வற்புறுத்துவதற்கான எங்கள் போரில், நாங்கள் அஹிம்சையை முழுமனதாக ஆதரிக்கிறோம், அறிவுறுத்துகிறோம். இதன் விளைவு அனைத்தும், சர்வ வல்லவரான இறைவன் கைகளில் உள்ளது!”

மெஹர் பாபா பின்பு காந்திக்கு விளக்கினார், **“என்ன நடந்தாலும் ஒன்று நிச்சயம்: இந்தியாவைப் பொறுத்தவரை இன்னும் பல துன்பங்கள் நிகழ உள்ளன. இதை நான் முன்பே உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; இன்று அதை மீண்டும் சொல்கிறேன். ஆனால், இந்தத் ‘துன்பம்’ கூட ஒளிந்திருக்கும் ஓர் உண்மையான ஆசீர்வாதம் ஆகும். மேலும் இந்தியா பொருள் ரீதியாக எவ்வளவு பாதிக்கப்படுகிறதோ, அந்த அளவுக்கு ஆன்மீக ரீதியில் சிறந்து விளங்கும். மேலும் எங்களைப் போன்ற குருநாதர்கள், ஆன்மீக நலனை மட்டுமே கருத்தில் கொள்கிறோம். போராட்டம், இடர்பாடுகள் மற்றும்**

**தியாகம் இல்லாமல் இந்தியா சுயராஜ்யத்தைப் பெறுவதானால், அது பொருள்முதல்வாதத்தின் மீது சாய்ந்திருப்பதற்கான மிகப் பெரிய ஆபத்தை வரவழைப்பது போலாகும். பொருள் வளம் என்பது ஆன்மீக முன்னேற்றத்தின் பாதையில் ஒரு சோதனையாகவும், தடையாகவும் இருக்கும்; இது எவ்வகையிலும் விரும்பத்தகாதது.**"

"நீங்கள் சொல்வது சரிதான்" என்றார் காந்தி. "ஆன்மீக வலிமை, ஆன்மீக சக்தியைப் பின்தொடர வேண்டும். அதுதான் உண்மையான பெருமை."

"**அதற்காக, ஒருவர் சிரமப்பட்டுத் தியாகம் செய்ய வேண்டும், ஆனால் அஹிம்சை மனப்பான்மையுடன் இருக்க வேண்டும். அதனால்தான் வைஸ்ராயை நேரில் சென்று சந்திக்கும்படி, நான் மீண்டும் மீண்டும் அறிவுறுத்துகிறேன்**" என்றார் பாபா.

இந்த உரையாடல் பாபாவின் சமீபத்திய ஐரோப்பிய, அமெரிக்க பயணத்தை நோக்கிச் சென்றது: "உங்கள் மேற்கத்திய சுற்றுப்பயண அனுபவங்கள் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று காந்தி கேட்டார்.

"**அமெரிக்க தேசத்தில், ஆன்மீகப் பசி தீவிரமாக உள்ளது. அதனால்தான் நான் அங்குச் சென்று ஒரு மாதம் தங்கியிருந்தேன். அங்கே அனைத்தும் பொருள் ரீதியாக உள்ளது. செல்வம், ஆய்வுத்திறன், இதயம் அனைத்தும் உள்ளன. இன்னொரு விதமாகக் கூறினால், ஆன்மீக முன்னேற்றத்திற்குப் போதுமான ஆயத்த நிலை, வளர்ச்சி அனைத்தும் உள்ளன!**"

சாஞ்சி அப்போது பாபாவின் சுற்றுப்பயணங்கள், வாழ்க்கையின் அனைத்து தரப்பு மக்களையும் அவர் சந்தித்தது, சத்தியத்திற்கான அவர்களின் நேர்மையான அபிலாஷைகள் மற்றும் மெஹர் பாபாவின் கொள்கைகளைப் பரப்பும் நோக்கத்தில், ஒரு குழுவை அமைத்தது போன்ற விவரங்களை எடுத்துக் கூறினார்.

காந்தி உடனே, "அப்போது, அமெரிக்காவில் ஆன்மீகம் குறித்து ஒரு விழிப்புணர்வு, ஆர்வம் இருக்கிறதா?" என வினவினார்.

"**ஆம், நிறைய இருக்கிறது**" என்று பாபா பதிலளித்தார். "**ஆனால் அமெரிக்க மக்களுக்கு இந்த திசையை நோக்கி வெளிச்சம்போட்டு வழிகாட்டத் தேவையான ஒரு குருநாதர் இருந்தால், அற்புதமான நிலை உருவாகும்.**"

"மேலும் இங்கிலாந்தைப் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?"

"**இங்கிலாந்தில், ஆர்வமும் ஏக்கமும் இருப்பதைப் பார்க்கிறேன், ஆனால் அமெரிக்காவைப் போலத் தீவிரமாக இல்லை. அமெரிக்க மக்கள் ஏற்றுக்கொள்ளும் முறை, மிகவும் அற்புதமானது; இப்போது கூட, மீண்டும் அங்குச் செல்லலாமா அல்லது இங்கேயே இருக்கலாமா என்று நான் யோசித்து வருகிறேன். 'விரைவில் திரும்பி வருவேன்' என்று என்னிடமிருந்து ஒரு வாக்குறுதியைப் பெற்ற பின்னரே, அவர்கள் என்னை அங்கிருந்து வர அனுமதித்தார்கள். நான் இந்தியாவிற்குத் திரும்பி வந்தேன், ஏனெனில் இங்கு ஏராளமான பணிகள் உள்ளன. அவர்களுக்கு வேண்டிய அறிவுறுத்தல்களை**

**அளித்துள்ளேன். இப்போது நான் இந்தப் பக்கத்தில் நிகழும் அனைத்து விவகாரங்களையும் கவனிக்க வேண்டியது அவசியம்.**"

"இங்கு நிலவும் எல்லா சூழ்நிலைகளையும் பார்க்கும் போது, நீங்கள் இந்தியாவில் இருக்கவேண்டியது அதிக தேவையாக உள்ளது" என்று காந்தி கூறினார். "நான் கைது செய்யப்பட்டால், நீங்கள் இங்குள்ள விவகாரங்களை கவனித்துக் கொள்ள வேண்டும்."

"**அதைப் பார்த்துச் செய்யலாம்**," என்று பாபா உறுதியளித்தார். "**இந்த மக்களாட்சி போராட்டம் ஒரு முடிவுக்கு வருவதை நான் பார்த்துக் கொள்வேன்; ஆனால் ஒரே ஒரு நிபந்தனை: இவை அனைத்தும் முடிந்த பிறகு, நீங்கள் என்னுடன் அமெரிக்காவிற்கு வர வேண்டும்.**"

காந்தி உடனே பாபாவிடம் கைகளை நீட்டி, "நான் சத்தியம் செய்கிறேன்" என்றார்.

காந்தியின் நெருங்கிய நண்பர்கள் குழு ஒன்று, இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தது. பாபாவிற்கு, காந்தி அளித்த வாக்குறுதியைக் கேட்ட வல்லபாய் பட்டேல் உரையாடலில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்:

"ஆனால் பாபுஜி, நீங்கள் வாக்குறுதிகளை அளிக்கும்போது, எங்களை நினைத்து, இந்த விஷயங்களில் எங்கள் ஆலோசனையைக் கேட்டீர்களா?"

அதற்கு காந்தி பதிலளித்தார், "சுதந்திரப் போராட்டத்திற்கு ஒரு தீர்வு கண்டதும், உங்களை அல்லது என்னை யார் கண்டுகொள்வார்கள்? பின்னர் அது பாபாவிற்கும் எனக்கும் இடையிலான கேள்வி. நான் ஏற்கனவே வாக்குறுதி அளித்துள்ளேன்! (பாபாவின் பக்கம் திரும்பி) அப்படித்தானே?" என்றார்.

"**ஆமாம், அரசியலிலிருந்து ஓய்வு பெற்றப் பிறகு, நீங்கள் வந்து என்னுடன் தங்குவதாக உறுதி அளித்துள்ளீர்கள்.**"

"ஆனால் போராட்டம் முடிந்த பின்னர்.. ஓ, அந்த நாள் எப்போது வரும்?" காந்தி பெருமூச்சு விட்டார்.

"நீங்கள் இங்கிருந்து எங்குச் செல்கிறீர்கள்?" காந்தி, பாபாவிடம் கேட்டார், "நாசிக்?"

"**ஆம், நாசிக்.**"

"அப்படியானால், என்னுடைய ஒரு வேண்டுகோள். நாசிக் நகரில் உங்களைப் பார்க்க, பல தீண்டத்தகாதவர்கள் வருகிறார்கள் என்று நான் நம்புகிறேன். கோவிலுக்குள் நுழைவதை, ஒரு பெரிய பிரச்சினையாக எடுப்பது பயனற்றது என்று தயவுசெய்து அவர்களிடம் கூறுவீர்களா? டாக்டர் அம்பேத்கர் தன்னை அவர்களுடைய தலைவராக அறிவித்துள்ளார். அவர் ஒரு படித்த மனிதர், ஆனால் காலங்காலமாக நிலவி வரும் சாதி சம்பந்தப்பட்ட தவறான எண்ணங்கள் மற்றும் அமைப்புகளின் குறைபாடு காரணமாக, இந்து சமூகம் அவரை ஊக்குவிக்கவோ அல்லது அவரிடம் அனுதாபம் காட்டவோ செய்யாமல், அவரை வெளியே தள்ளி வைக்க முயற்சித்தது. அவரது கொள்கையை நிலைநாட்டும் எண்ணத்தில் அவர் இந்தப் பிரச்சாரத்தைத் தொடங்கி, இந்துக்களுக்கு (பிராமணர்களுக்கு) எதிராக, தீண்டத்தகாதவர்களின் உணர்வுகளைத் தூண்ட முயற்சிக்கிறார்."

காந்தி தொடர்ந்து கூறினார், “நான் தீண்டத்தகாதவர்களுக்காக, எனது வாழ்க்கையின் இறுதிவரை போராடப் போகிறேன், தீண்டாமை எனும் பாரபட்சம் மிக்க தவறான எண்ணத்தை வேரோடும், கிளையோடும் அழிக்க விரும்புகிறேன். அவர்களை இந்து சமுதாயத்துடன் (இதர ஜாதிகளுடன் கலந்து) ஒன்றிணைக்கவும் விரும்புகிறேன். ஆனால், அவர்கள் இப்போது அரசாங்கத்திடம் முறையிட்டு தேர்தல்களுக்காக ‘தீண்டத்தகாதவர்கள்’ என்று ஒரு தனி வகுப்பாக நிலைநிறுத்த முயற்சிக்கின்றனர், நான் அதை அடியோடு நீக்க விரும்புகிறேன்.”

அதற்கு பதிலளித்த மெஹர் பாபா, “**இந்தத் தீண்டத்தகாதவர்களுக்கும், அவர்களுடைய தலைவர்களுக்கும் நான் ஏற்கனவே அறிவுறுத்தியுள்ளேன். அவர்களின் உரிமைகளுக்காக வன்முறையில் ஈடுபடாமல் போராடுமாறு, அவர்களுக்கு அறிவுறுத்த விரும்புகிறேன். பிராமணர்கள், தீண்டத்தகாதவர்கள் இருவரின் தலைவர்களும் என்னிடம் வருகிறார்கள்.**”

காந்தி உடனே, “அதனால்தான் நான் உங்களிடம் இதைக் கேட்கிறேன். அவர்கள் உங்கள் பேச்சைக் கேட்டு, உங்கள் ஆலோசனையைப் பின்பற்றுவார்கள் என்று நான் நம்புகிறேன். ஆகவே, அவற்றை விளக்கி, அவர்களுக்குப் புரிய வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு மகத்தான பணி. டாக்டர் அம்பேத்கர், நீங்கள் சொல்வதற்கு செவிமடுப்பார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.”

பாபா, காந்தியிடம் அவ்வாறு செய்வதாக உறுதியளித்தார்.

பாபா, காந்தியை அரவணைத்து, இதர அரசியல்வாதிகளுக்கு வணக்கம் செலுத்திவிட்டு வெளியேறினார். பாபாவை சந்தித்த மறுநாள், காந்தி, சர்தார் பட்டேல் இருவரும் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டு, ஏர்வாடா சிறையில் வைக்கப்பட்டனர்.

அடுத்தடுத்த ஆண்டுகளில், 1948ஆம் வருடம் மஹாத்மா காந்தி படுகொலை செய்யப்படும் வரை, பாபா தொடர்ந்து, குறிப்பிட்ட செய்திகளுடன் சாஞ்சி அல்லது ராம்ஜூவை காந்தியிடம் அனுப்பினார். காந்தியும் பாபாவிற்குத் தொடர்ந்து செய்திகளை அனுப்பி வந்தார், ஆனால் அவர்களிடையே தனிப்பட்ட சந்திப்பு எதுவும் நடக்கவில்லை.

சாஞ்சி, காந்தியை சந்திக்கச் சென்ற போதெல்லாம், அந்த நேரத்தில் அவர் எவ்வளவுதான் மும்முரமாக இருந்தாலும், காந்தி அனைத்தையும் விட்டுவிட்டு, சாஞ்சியுடன் பேசுவதற்காக வந்து, மெஹர் பாபா மற்றும் அவரது நடவடிக்கைகள் குறித்து விசாரிப்பது வழக்கம்.

மேற்கத்திய நாடுகளில் வெவ்வேறு மையங்களை நிறுவுவதற்கான தனது திட்டங்களை பாபா வகுத்தார்.

அவர்கள் இந்தியாவிற்குத் திரும்பி வந்ததும், ஆகா அலியை, பெர்சியாவிற்கு அனுப்பி வைத்து, அங்கு மையங்கள் நிறுவுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

பாபா இரண்டு வாரங்கள் மும்பையில் பானுமாசி இல்லத்தில்

தங்கியிருந்தார்; அங்கு வாழ்ந்த பல நெருங்கிய பக்தர்களுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது.

ஒரு முறை மும்பையில் இருந்த வேளையில், பாபா திடீரென காக்கா பாரியாவிடம், **"நான் நிமோனியாவால் பாதிக்கப் பட்டுள்ளேன்! அதற்குரிய எதிர்ப்பு ஃபிளோஸ்டைனை** (ANTI-PHLOGISTINE, சூடான களிம்பு போன்ற மருந்து) **தயார் செய்து எனது மார்பில் தடவி விடுங்கள்"** என்றார். இதைக் கேட்ட காக்கா மிகவும் ஆச்சரியப்பட்டார், ஏனெனில் பாபா நன்றாகவே இருந்தார்; இருந்தும் காக்கா அதைத் தயார் செய்தார். இரண்டு நாட்கள் கடந்தன. பச்சாமாய் தாதாசாஞ்சி, பாபாவைப் பார்க்க வந்தபோது, இரண்டு நாட்களுக்கு முன்னர், அவரது மகன் தாரா இரட்டை நிமோனியாவால் பாதிக்கப்பட்டு, உடல்நிலை சரியில்லாமல் இருந்ததாகத் தெரிவித்தார். பாபா உடனே, **"எனக்கும் நிமோனியா இருந்தது. அது என்னை தாக்காமல் இருந்திருந்தால், தாரா இறந்திருப்பார்"** என்றார்.

தாராவின் உடல்நிலை இன்னும் சரியாகவில்லை; மருத்துவர்களும் நம்பிக்கையைக் கைவிட்டனர். பாபா அவரைப் பார்க்கச் சென்ற அடுத்த நாள், தாராவின் உடல்நிலை இயல்பு நிலைக்கு வந்தது, ஆனால் கடுமையான ஜுரம் பாபாவைத் தாக்கியது. பச்சாமாய் அவரிடம், **"பாபா, நீங்கள் ஏன் இதைச் செய்கிறீர்கள்? தாரா சரியாகிவிட்டான், ஆனால் இப்போது அது உங்களைத் தாக்கியுள்ளது. அவனுடைய துன்பத்தை நீங்கள் ஏன் எடுத்துக்கொள்கிறீர்கள்? அவன் இறக்கட்டும் பாபா; நீங்கள் துன்பப்படக்கூடாது!"** பாபா அந்தப் பெண்மணியின் துணிச்சலான வார்த்தைகளைக் கேட்டுப் புன்னகைத்தார், அவருடைய அன்பின் பற்றற்ற தன்மையை எண்ணி மகிழ்ச்சி அடைந்தார்.

நவ்ஸாரியிலிருந்து (NAVSARI), ஸொராப்ஜி தேசாய் தனது மருமகள் மன்ஸாரி, பிற குடும்ப உறுப்பினர்களுடன் பாபாவின் தரிசனத்திற்காக வந்தார். ஒரு நாள் மன்ஸாரி பாபாவிற்கு சேவை செய்யும் விதத்தில் ஏதேனும் வேலையை வழங்குமாறு கேட்டுக்கொண்டார். பாபா அவரிடம், **"பஜாருக்குச் சென்று எனக்கு சிறிதளவு நாவல் பழம் வாங்கி வாருங்கள், ஆனால் அதிக தூரம் செல்ல வேண்டாம், அருகில் எங்கேயேனும் பாருங்கள்"** என்றார்.

மன்ஸாரி பஜாருக்குப் புறப்பட்டார், ஆனால் அது பருவகாலம் இல்லாததால் நாவற்பழத்தைக் கண்டுகொள்வதில் சிரமம் ஏற்பட்டது. பாபாவின் உத்தரவு இருந்தபோதிலும், அவர் பல மணி நேரங்கள் நகரத்தில் வெகுதூரம் தேடியும் கிடைக்காததால், வெறுங்கையுடன் திரும்பி வந்தார். ஒரு சில நாவல் பழத்தை எப்படியாவது கண்டுபிடிக்க முடிந்திருந்தால் அது பாபாவை மகிழ்வித்திருக்கும் என்று நினைத்தார், ஆனால் பாபா மன்ஸாரியிடம், **"பழத்தைக் கொண்டுவருவதை விட, எனது கட்டளைக்குக் கீழ்ப்படிவதே முக்கியம். எப்பொழுதும் எனக்குக் கீழ்ப்படிவதை நினைவில் கொள்ளுங்கள்.**

**நான் உங்களுக்குச் சொல்வதை அப்படியே செய்வதன் மூலம், நீங்கள் என்னை மகிழச் செய்வீர்கள்"** என்று குறிப்பிட்டார்.

கெ.ஜெ. தஸ்தூர் மேற்கத்திய பயணத்தில் பங்கெடுக்க முடியாததால் ஆத்திரமடைந்து, பாபாவிற்கு எதிராக எழுதவும், பேசவும் தொடங்கினார்; அவர் 'மெஹர் மெஸேஜ்' இதழில் கூட தனது கோபத்தை வெளிப்படுத்தினார். ஆனால் பாபா திரும்பி வந்ததும், தஸ்தூர் உடனடியாக அவரைப் பார்க்க வந்து, அவர் செய்த தவறை உணர்ந்து வருந்தினார்.

பாபா திரும்பி வந்ததும், மெமோ பூனாவிலிருந்து மணியுடன் வந்தார். இந்த சிறிய 'கதிர்' இனிமேல் எப்போதும் சூரியனுக்கு அருகில் இருக்க ஏங்கிக் கொண்டிருந்தது. ஆனால் இதர பெண் மண்டலியுடன் மணி ஆஷ்ரமத்தில் வந்திணைய, மேலும் ஒரு வருட காலம் ஆனது, மெமோ, பாபாவிடம், தனது ஒரே மகளை அவரிடம் விட்டுவைக்க ஆர்வமில்லை என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டினார்.

மும்பையிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, பாபா புதிய பாரசீக பாஸ்போர்ட்டை ஜனவரி 16ஆம் நாள் பெற்றுக்கொண்டார். அதற்காக, கையொப்பம் அல்லது கட்டைவிரல் பதிவு எதுவும் கொடுக்கப்படவில்லை. அதற்குப் பிறகு பாபா நாசிக் திரும்பி வந்தார். பாபாவைக் கண்டதும் பெண் மண்டலி அனைவரும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

மெஹர் பாபாவின் அறிவுறுத்தல்கள் படி, பெண் மண்டலி நீள கை காட்டன் ரவிக்கைகளும், பாரம்பரிய முறைப்படி தலையைத் துணியால் மறைத்தும் உடை அணிந்தனர். மேற்கத்திய பயணத்திலிருந்து திரும்பி வந்ததும், பாபா இந்த உத்தரவை தளர்த்தினார்.

பாபாவின் பொழுதுபோக்குக்காக, பெண் மண்டலி ஒரு நாடகத்தை அரங்கேற்றினர்; இது இங்கிலாந்திற்குப் புறப்படுவதற்கு முன்பு, பாபா அவர்களுக்கு வழங்கிய கதை. இந்த நாடகத்தை பாபா மிகவும் விரும்பி, அடுத்த நாள் ஆண் மண்டலியையும் அதைப் பார்க்க அழைத்தார். இதற்குப் பின்னர், ஆண் மண்டலி மெஹராவை மீண்டும் பல ஆண்டுகள் பார்க்கவில்லை.

பாபா, இப்போது மெஹராபாத்தில் வாழ்ந்து வந்த சிலரையும் நாசிக் வரவழைத்து அனைவரையும் அங்குத் தங்க வைத்தார்.

இந்தக் காலகட்டத்தில், அவ்வப்போது பாபாவை தரிசனம் செய்ய வந்த 22 வயது இளைஞர், கராச்சியைச் சேர்ந்த மினோசார் நஸர்வான் கராஸ், 22, (MINOCHAR NUSSERWAN KHARAS) என்பவர் ஆவார். மினூ (MINOO) என்று அன்பாக அழைக்கப்பட்ட அவர், காவல்துறை பயிற்சி பள்ளியில் சேர நாசிக் வந்திருந்தார். மினூ எப்போதும் கடவுளைக் கண்டுகொள்ளும் ஆர்வத்தில் இருந்தார், மேலும் வாழ்க்கையின் அர்த்தத்தைப் பற்றிய பல கேள்விகளை

எழுப்பினார். அவர் ஒரு ஸொராஸ்ட்ரியனாக வளர்க்கப்பட்டிருந்தாலும், கிறிஸ்து, ராம், புத்தர் மேலும் பல்வேறு புனித மனிதர்களின் சித்திரங்களைத் தனது அறையில் வைத்திருந்தார்.

1932 ஜனவரியில், முடிதிருத்தம் செய்யும் ஒருவர், மினூவின் அறைக்கு வந்து, அங்குத் தொங்கவிடப்பட்ட அனைத்து சித்திரங்களையும் பார்த்து, மினூவிடம், "இந்தக் காவல்துறை பயிற்சி பள்ளியில் நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" அவர் மினூவின் அறைக்கு சற்று தொலைவில் வசித்து வந்த ஒரு குறிப்பிட்ட புனித மனிதரைப் பார்க்க மினூவிடம் பரிந்துரைத்தார்.

"நீங்கள் யாரைக் குறிப்பிடுகிறீர்கள்?" மினூ வினவினார்.

"ஸ்ரீ மெஹர் பாபா" என்று வந்தவர் பதிலளித்தார்.

மினூ சில ஆண்டுகளுக்கு முன்பு, கராச்சியில் இந்தப் பெயரைக் கேள்விப் பட்டிருந்தார்; குஜராத்தி செய்தித்தாளில் பாபாவின் புகைப்படத்தையும் பார்த்திருந்தார்.

1932, ஜனவரி 17 அன்று மினூ 'ஸர்கிள் சினிமா'வில் (CIRCLE CINEMA) அமைந்த பாபாவின் இல்லத்திற்குச் சென்று, அவர் ராம்ஜூ, விஷ்ணு, சாஞ்சி ஆகியோரை சந்தித்தார். பின்னர் ஒரு பார்வையாளர் வந்திருப்பதாக பாபாவிற்குத் தெரிவித்ததும், அவர் மினூவைப் பார்க்க வந்தார். தனது முதல் சந்திப்பு பற்றி, மினூ இவ்வாறு பதிவு செய்திருந்தார்:

சில நிமிடங்களில்... மெஹர் பாபா என்று அழைக்கப்பட்ட அவர், திடீரென வாசல் அருகே வந்து என் முன்னால் நின்றார்... 'மினூ, இதோ நீ தேடும் கடவுள்' எனும் குரல் என்னுள் ஒலித்தது. இனம்புரியாத மகிழ்ச்சி... அந்தத் தருணத்திலிருந்து, எனது தேடல் முடிவுக்கு வந்ததுபோல் ஓர் உணர்வு... பாபாவின் கண்கள் என் மீது விழுந்த அந்த கணம், எனது வாழ்க்கையில் முதல்முறையாக, முழு உடலின் ஒவ்வோர் அணுவிலும் மிகவும் விசித்திரமான, விவரிக்க முடியாத ஒன்றை உணர்ந்தேன். இதைத்தான் 'முதல் பார்வையில் உருவான காதல்' என்பது!

**"உங்களுக்கு என்ன வேண்டும்?"** என்று பாபா கேட்டார்.

மினூ அமைதியாக இருந்தார், ஆனால் 'நீங்கள் உண்மையானவராக இருந்தால், நான் சொல்லத் தேவையில்லை; என் ஏக்கத்தை நீங்கள் அறிவீர்கள். உண்மையில், உங்களுக்கு எல்லாம் தெரியும்' என்று நினைத்தார்.

பாபா எழுத்துப்பலகை வழியாகக் கூறினார், "**நான் உங்களின் இதயக்குரலை முழுமையாகக் கேட்டுவிட்டேன். உங்களுடைய பிறப்பிலிருந்தே கடவுளைக் கண்டுகொள்ளும் இந்த உள்ளுணர்வு உங்களுக்குள் இருக்கிறது. கவலைப்படாமல் நான் சொல்வது போலச் செய்யுங்கள். 'நான்' என்பதை மறந்து விடுங்கள். ஒவ்வொரு இரவும் 'என்னைப் பற்றிய எண்ணங்களுடன்' தூங்கச் செல்லுங்கள்.**

**"கடந்த கால வாழ்க்கையிலிருந்து, நீங்கள் என்னுடன் இணைந்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குக் கொடுக்க வேண்டிய கடனைத் திருப்பித் தரவேண்டும். நீங்கள் மட்டும் என்னை நேசிக்கவில்லை; நானும் உங்களை மிகவும் நேசிக்கிறேன்.**" என்றார்.

இப்படி, மினூ கராஸ் குருநாதரின் தொடர்பில் வந்து, அவரால் முடிந்தவரை அடிக்கடி பாபாவைப் பார்க்க வந்தார்.

1932, பிப்ரவரி 5ஆம் நாள், மெஹர் பாபா தனது சகோதரர் பெஹராம், மற்றும் மும்பையில் வாழ்ந்த, ஷெரியார்ஜியின் உறவினர், பெரின் இருவருக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடத்தி வைத்தார்.

9ஆம் தேதி, மண்டலி, ஸர்கிள் சினிமா, ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸ் ஊழியர்களுடன், பாபா கால்பந்து விளையாடினார். விளையாட்டிற்குப் பிறகு, பாபா, "**நான் இன்றைய ஆன்மீக உலகின் பேரரசர். உலகம் எனக்கு ஒரு கால்பந்து போன்றது. நான் எங்கு வேண்டுமானாலும் அதைத் தூக்கி எறிந்து விளையாட முடியும்**" என்று குறிப்பிட்டார்.

இதற்கிடையில், ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா, பாபாவின் அறிவுறுத்தல்படி நாசிக்கில் தங்கி, 'ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸ்' அலுவலகத்தில் பணிபுரிந்து வந்தார். கே.ஜே. தஸ்தூரும் இந்த நேரத்தில் நாசிக்கில் தங்கியிருந்தார். ஃபெராம், அவ்வப்போது, பத்திரிகைக்கான கட்டுரைகளைத் தட்டச்சில் அச்சடித்து அவருக்கு உதவி வந்தார். ஃபெராம் மண்டலியின் புதிய உறுப்பினராக இருந்ததால், தஸ்தூரின் முரண்பாடான கட்டுரைகள் பற்றிய உண்மையான விபரங்களைத் தெரியாமல் இருந்தார்.

கடைசியாக, ஒரு நாள் பாபா, ஃபெராமை அழைத்து, "**தஸ்தூருக்குத் தட்டச்சில் யார் யார் உதவி செய்கிறார்கள்?**" என்று கேட்டதும், ஃபெராம், அவர் அச்சடித்து உதவுவதாக பதிலளித்தார்.

"**நீங்கள் ஏன் அதைச் செய்கிறீர்கள்?**"

"ஏனெனில் அவர் உங்கள் வேலையைச் செய்கிறார்."

"**ஆமாம், அவர் எனது வேலையைச் செய்கிறார், ஆனால் நேர்மாறாக! நீங்களும் அவருடைய வழியைப் பின்பற்ற விரும்புகிறீர்களா? முட்டாள்! சரி, சரி, உங்கள் கடமையைச் செய்யுங்கள்**" என்று பாபா கூறியது, ஃபெராமுக்கு ஒன்றும் புரியவில்லை.

பிப்ரவரி 11 அன்று தஸ்தூர், "சாபு (ஒரு சிறுவன்) ஏன் ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸிலிருந்து வெளியேற்றப்பட்டான் என்பதை அறிந்து வா" என ஃபெராமிடம் கூறினார். ஃபெராம், உடனே விஷ்ணு, புவாஸாஹேப் இருவருடன் பாபாவை அணுகிக் கேட்டபோது, பாபா தனது பாத அணியைக் கழற்றி, விஷ்ணு, புவாஸாஹேப் இருவரையும் அறைந்தார், "**இது உங்கள் கேள்விக்கான எனது பதில். நீங்கள் இருவரும் இந்தப் பிரசாதத்திற்காக, பல நாட்களாக ஏங்கிக்கொண்டு இருந்தீர்கள், இன்று நான் அதை உங்களுக்குத் தந்துவிட்டேன்!**"

பாபா தொடர்ந்து கூறினார், "**நீங்கள் என்னுடன் பல ஆண்டுகளாக இருக்கிறீர்கள்; எனது பணியைப் பற்றி 'ஏன்?' அல்லது 'எதற்காக?' எனக் கேட்கக்கூடாது என்பது உங்களுக்கு இன்னும் புரியவில்லை. ஃபெராம்**

**உங்களிடம் கேட்டாலும், அது பாபாவின் விருப்பம் என்று நீங்கள் பதிலளித்திருக்க வேண்டும். நீங்கள் ஒரு பெரிய தவறிழைத்து விட்டீர்கள், நான் அதை சரிசெய்ய வேண்டியது அவசியம். இப்படி மீண்டும் செய்ய வேண்டாம்; இது பிறருக்கும் ஒரு பாடமாக இருக்கட்டும்.”**

புவாஸாஹேப், விஷ்ணு இருவரையும் பாபா அரவணைத்து, பின்னர் ஃபெராமை அழைத்து கூறினார், “**நீங்கள் ஆமணக்கு விதைகளை சாப்பிட்ட அன்று இறந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இப்போது அடையப்பெற்ற அனைத்து தீய மனப்படிவங்களிலிருந்தும் நீங்கள் காப்பாற்றப் பட்டிருப்பீர்கள். இப்போது இந்த மனப்படிவங்கள் வாழ்நாள் முழுவதும், இறுதி தீர்ப்பு நாள்வரை, உங்களுடன் இருக்கும். எனவே நான் சொல்கிறேன், அன்று நீங்கள் இறந்திருந்தால், சிறப்பாக இருந்திருக்கும் என்று!**”

பாபா தொடர்ந்து, “**நீங்கள் விரும்பினால் எனக்கு எதிராக எழுதலாம், பரவாயில்லை! எதுவாயினும் நான் மகிழ்ச்சியாக இருப்பேன்**” என்று கூறி முடித்தார்.

ஃபெராம் மன்றாடினார், “ஆனால், பாபா, நான் தஸ்தூரின் வேலையை விரும்பவில்லை, இப்போது எனக்கு அது தேவையில்லை. அது உங்கள் வேலை என்று அவர் என்னிடம் கூறினார்.”

அதற்கு பாபா பதிலளித்தார், “**நீங்கள் இதைச் செய்தாலும் எனக்குக் கவலையில்லை. உலகம் முழுவதும் எனக்கு எதிராக எழுதினாலும், அது எவ்வாறு என்னை பாதிக்கும்? நான் நான்தான்! நான் சொல்வது என்னவென்றால், உங்கள் இதயத்தின் கட்டளைகளை நீங்கள் பின்பற்ற வேண்டும்.**”

அப்போதுதான் பாபாவிற்கு எதிரான தஸ்தூரின் விரோதப் போக்கை ஃபெராம் அறிந்து கொண்டார். அவர் தஸ்தூருக்கு உதவுவதை நிறுத்திவிட்டு, அவரது ஏமாற்றத்திற்காக வருந்தி மனந்திருந்தினார்.

கெ.ஜெ. தஸ்தூர், தனது போக்கில், சமீப காலமாக, வருத்தத்தைத் தெரிவித்த போதிலும், பாபாவிற்கு எதிராகத் தொடங்கிய தாக்குதல்களை அவர் நிறுத்தவில்லை. உண்மையில், பாபா, இந்த வேலைக்காக நிதி உதவியும் செய்து வந்தார் என்றுதான் கூறவேண்டும். தஸ்தூர் நாசிக்கில் இருந்தவரை, அவர் பாபாவிடமிருந்து தனது மாத உதவித்தொகையைத் தவறாமல் பெற்றுக் கொண்டார். தஸ்தூர் நாசிக்கை விட்டு வெளியேறிய பின்னரும், பாபாவிடம் பணம் கேட்கத் தயங்கவில்லை; பாபாவும் அதற்கு இணங்கி வந்தார்.

கெ.ஜெ. தஸ்தூர் தனது தவறான பிரச்சாரத்தை இந்தியாவில் ‘மெஹர் மெஸேஜ்’ மூலம் மட்டுமின்றி, வெளிநாடுகளிலும் செய்து வந்தார். இந்தத் தவறான விளம்பரம், ஹார்மன் மற்றும் ஹேன்காக்கில் பாபாவின் பணிகளுக்கு நிதி திரட்ட முயன்ற ஸ்டோக்ஸ், மால்கம் மற்றும் பிறருக்கு ஒரு தடையாக இருந்தது. பாபாவிற்கு எதிராக, பத்திரிகையாளர் பால் ப்ரண்டனைத் தூண்டியதும் தஸ்தூர் என்பது பின்பு புலப்பட்டது. ஆனால், காலம் இதை இப்படிப் பார்த்தது: தஸ்தூரின் வரையறுக்கப்பட்ட யோசனைகளும்,

கருத்துகளும் களிமண்ணால் உருவான பானை போல; குருநாதரின் சூளையில் சரியாகச் 'சுடப்படவில்லை.'

எவ்வாறாயினும், தஸ்தூரின் எதிர்ப்பு ஒரு தடையாக இல்லை. மாறாக, அது மெஹர் பாபாவின் பணியை மேலும் பலப்படுத்தியது. 'மெஹர் மெஸேஜ்' (அக்டோபர் 1931) இறுதி இதழின் தலையங்கத்தில், தஸ்தூர், மெஹர் பாபாவை ஒரு 'போலி குருநாதர்' எனக் கருதுவதாகக் குறிப்பிட்டிருந்தார்: "இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் (1931) மெஹர் பாபா உண்மையானவர் அல்ல என்ற முடிவுக்கு வந்தேன்; மேலும் அவரை அவதார புருஷர் என்று வெளிப்படுத்துவது அனைத்தும் அர்த்தமற்ற பேச்சாகும்."

பாபாவிற்கு எதிரான குற்றச்சாட்டுகளில் அடங்கும் அபத்தங்கள் அல்லது குறைபாடுகள் குறித்த சில விஷயங்களை, தஸ்தூர் எழுதிய கடிதத்தில் காணலாம்:

அவரை, நான் இப்படிக் கருதுவதற்கான எனது காரணங்கள் பின்வருமாறு:

ஆன்மீக முன்னேற்றத்திற்காக அவருடைய சீடர்களுக்கு அவர் அளித்த வாக்குறுதிகளை மீறியது; அவற்றின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது.

அவரிடம் கோபம் தாண்டவமாடும்; சாதாரண மனிதனைப் போல் அவரும் அவதிப்படுகிறார்; மேலும், சிறிய சிறிய விஷயங்களில் அவர் எரிச்சலடைகிறார்; மனக்கட்டுப்பாடு நம்மைவிடக் குறைவாகத் தெரிகிறது.

எடுத்துக்காட்டாக, குரங்கு தந்திரங்களைக் கையாண்டு, மண்டலி ஆன்மீகப் பாதையில் முன்னேறியவர்கள் என்று நம்ப வைத்து, பின்னர் அவர்களை முதுகின் பின்னால் விமர்சிப்பது வழக்கம். சாது லீக், மெரடித் ஸ்டார் இருவருக்கும் "நீங்கள் எனது உள் வட்டத்தின் ஒரே ஐரோப்பிய உறுப்பினர்கள்" என்ற விஷயத்தைச் சொல்வது!

முக்கியமான, முக்கியமற்ற விஷயங்களில் அவர் அளித்த பல்வேறு தீர்க்கதரிசன வாய்மொழிகளை நிறைவேற்றாதது.

தெய்வீக அன்பின் பெயரில் சிறுவர்கள், பெரியவர்கள் மீது குறும்புத்தனமான விளையாட்டுகளை விளையாடியது. தன் வயப்படுத்தும் வசீகர சக்திகளைப் பயன்படுத்தி, ஆஷ்ரம மாணவர்களின் இதயங்களில் தனக்குத்தானே தனிப்பட்ட அன்பை உருவாக்கி, தனது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத் துன்பங்களை அனுபவிக்கச் செய்தார்.

மண்டலி மற்றும் வெளியாட்களை மாயாவிலிருந்து விடுவிப்பதற்கு பதிலாக, அதனுள் ஆழமாக மூழ்கச் செய்து, 'ஸர்கிள் சினிமா' கம்பெனிக்கு வேலை செய்வதன் மூலம், அவர் அதன் உரிமையாளராகவும் மாறினார்; மேலும் அதில் மோசமான பாலியல் சார்ந்த திரைப்படங்களைத் திரையிடுவதும் வழக்கம்.

முடிவில், மெஹர் பாபா ஒரு போலி, மோசடிக்காரர் என்று எனது மனசாட்சி என்னிடம் கூறுகிறது.

தஸ்தூர் வெளியிட்ட இந்த குறிப்புகளுக்கு, மெஹர் பாபாவின் ஒரே பதில் ‘பரிபூரண அமைதி’. பாபாவின் சார்பாக விஷ்ணு ஒரு கடிதத்தில் இவ்வாறு எழுதியிருந்தார்:

மெஹர் பாபாவைப் பற்றிய உங்கள் கருத்தைப் பொறுத்தவரை, ‘அவர் ஆரம்பத்திலிருந்தே உங்களை நேசித்த அதே இதயத்தோடுதான் இப்போதும் உங்களை நேசிக்கிறார்’ என்று கூறுகிறார். நீங்கள் அவரை மதிக்கலாம், வெறுக்கலாம் அல்லது அவருக்கு எதிராகச் செல்லலாம்; எதுவாயினும் அவர் உங்களைப் பழையபடியே நேசிக்கிறார்.

தஸ்தூர், இதுபோன்ற விரோதத்தை வெளிப்படுத்த, பாபா அவருக்கு உதவினார். கர்னல் ஈரானியைப் போல, பாபாவின் ஆன்மீக செயல்முறைக்கு, தஸ்தூர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு; இதன் மூலம் பாபாவின் எதிரி அவரிடமிருந்து நேரடி உதவியைப் பெற்றார், மேலும் அவருக்கு எதிராக மோசமான செயல்களில் ஈடுபட ஊக்குவிக்கப்பட்டார்.

1932, பிப்ரவரி 13ஆம் நாள் நடந்த கலந்துரையாடலின் போது, ஒரு சில வெளிநாட்டினரின் முன்னிலையில் ‘அழகு’ என்ற தலைப்பில் பேச்சு எழுந்தது.

மெஹர் பாபா எழுத்துப்பலகை வழியாக விளக்கினார்:

**நான் அனைத்திலும் அழகை விரும்புகிறேன்; ஆனால் அழகு என்றால் என்ன? ஒருபோதும் அழியாத, உண்மையான அழகு.**

**மனித உடலைப் பாருங்கள். இது அசுத்தமும் அழுக்கும் நிறைந்தது. வாய், மூக்கு, மலக்குடல், சிறுநீர் பாதை - இவை அனைத்திலும் என்ன இருக்கிறது? அசுத்தம்! இருந்தும், ஆண்கள் அழகான பெண்களின் பின்னால் ஓடுகிறார்கள். இது அழகு அல்ல; மோசமான காமம்.**

**நீங்கள் ஒரு அழகான பெண்ணை நேசிக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம், அவள் முகம் அமிலத்தால் தாக்கப்பட்டு, உருமாறிப் போகிறது. அப்போது உங்கள் ‘காதல்’ என்னவாகும்?**

**உங்கள் இதயம் மிகவும் சுத்தமாகவும், மனம் தூய்மையாகவும் இருந்தால், நீங்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பீர்கள்; நீங்கள் ஆயிரக்கணக்கான அழகான பெண்களால் சூழப்பட்டிருந்தாலும், இது உங்களில் எந்த விளைவையும் ஏற்படுத்தாது; மேலும் நீங்கள் அழகைப் பாராட்ட முடியும்.**

**எதுவாயினும், நீங்கள் அழகை அல்ல, அழுக்கைதான் விரும்புகிறீர்கள், ஏனெனில் நீங்களே அசுத்தமானவர்கள். உங்களின் மோசமான தன்மையிலிருந்து விடுபட்டு, பின்னர் அழகு என்ன என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்! அழுக்கை வேரோடு அழிக்காமல் அழகை ஒருபோதும் ரசிக்க முடியாது.**

டாக்டர் கனி, பாபாவின் பிறந்தநாள் விழாவிற்காக நாசிக் வந்தார். பிப்ரவரி 16ஆம் நாள், அவருடன் உரையாடும் வேளையில், பாபா வருத்தத்துடன் கூறினார்:

**இதுவரை இங்கு வந்த எவரும் என்னைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டதில்லை. பலர் அப்படியே செய்வதாக உறுதி கூறுகிறார்கள், ஆனால் எவருமே அவ்வாறு செய்யவில்லை. மாறாக, அவர்கள் என்னைத் திடமாகப் பற்றிக்கொள்ள வேண்டும். ஒரு பள்ளிக்கூட ஆசிரியர், முதல் நாளிலேயே ஒரு மாணவனை பயமுறுத்தி, அவனை விரட்டியடித்தால், அதற்காக அந்த மாணவனைக் குறை கூற முடியாது. ஆனால் இங்கே, நான் அனைவரையும் பராமரித்து, பாதுகாக்கிறேன், உங்களின் சிறிய சிறிய தேவைகளையும் பூர்த்தி செய்யப் பார்க்கிறேன், உங்களை எல்லா வகையிலும் கவனித்துக் கொள்கிறேன். இருந்தும் இதயபூர்வமாக நீங்கள் என்னிடம் வருவதில்லை.**

**நான் அனைவரையும் கவனித்துக் கொண்டாலும், எவரும் என்னைப் பொருட்படுத்துவதில்லை. ஆனால் குருநாதர்களின் குருவான ஒருவரின் அருகாமையில் இருப்பது அவ்வளவு எளிதானது அல்ல. நீங்கள் லட்சக்கணக்கான பிறவிகளைக் கடந்துவிட்டீர்கள், எனவே இன்னும் ஒன்றே ஒன்றை மட்டும் பொறுத்துக் கொள்ளுங்கள். பிளீடர், குஸ்தாஜி இருவரையும் பாருங்கள். அவர்கள் எவ்வளவு துன்பம், துயரங்களுக்கு ஆளானார்கள்! இருந்தும், இன்னும் என்னுடன் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள்.**

**மேற்கத்திய நாட்டு மக்களின் ஆதிக்கம், அறிவுத்திறன் இவற்றைக் கருத்தில் கொள்ளும்போது, நான் அவர்களுக்கு அளித்த பல தவறான உத்தரவாதங்கள் மிகச்சிறந்ததாகும். மேற்கில் நான் செய்ய வேண்டியது பெருமளவில் உள்ளது; அதை நான் விரும்பிய வழியில் செய்வேன். இப்போது இது கிழக்கையும் மேற்கையும் இணைப்பதற்கான ஆரம்பம் மட்டுமே. எனது இந்திய சீடர்களை அங்கே அழைத்துச் சென்று, மேற்கத்திய சீடர்களை இங்குக் கொண்டு வருவேன். இறுதியில், எல்லாமே தலைகீழாக மாறும்போது, மௌனத்தைக் கைவிட்டு நான் பேசுவேன்.**

1932 பிப்ரவரி 17 அன்று, மெஹர் பாபாவின் 38ஆவது பிறந்தநாள், பஜனை, கீர்த்தனை, புனித நீராட்டல், ஆரத்தி மற்றும் பாபா அவரது கைகளால் பிரசாதம் வழங்குவது போன்ற எளிய நிகழ்ச்சிகளுடன் அமைதியாகக் கொண்டாடப்பட்டது. தனது அன்பர்களுடன் உரையாடும் வேளையில், பாபா திடீரென அவர்களில் ஒருவரிடம், **"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"** என வினவினார்.

"நீங்கள் அறிவீர்கள் பாபா" அந்த மனிதர் பதிலளித்தார்.

பாபா அதற்கு, **"ஆமாம், நான் அறிவேன், எதுவாயினும் என்னிடம் சொல்லுங்கள்"** என்று தலையசைத்தார். பாபா, ஏன் எப்பொழுதும் மக்களிடம் வெளிப்படையாகக் கூறும்படிக் கேட்கிறார்?, 'பேசுவது' நல்லதா அல்லது 'அமைதி காப்பது' நல்லதா? என டாக்டர் கனி வினவினார். அதற்கு பாபா பதிலளித்தார்:

**வெளிப்படையாகப் பேசுவது எப்பொழுதும் நல்லது. உங்கள் நிலைக்கு வந்து நான் உங்களோடு இருக்கிறேன். நான் அனைத்தும் அறிவேன். நீங்கள் இப்போது என்ன நினைக்கிறீர்கள், இதுவரை என்ன சிரமங்களை அனுபவித்தீர்கள் அனைத்தும் எனக்குத் தெரியும். ஆனால் நான் அதை வெளிப்படையாகக் கூறும்படிக் கேட்டுக்கொள்வதன் மூலம், உங்கள் மனதின் பாரம் நீக்கப்பட்டு, நீங்கள் பயனடைவீர்கள். அதற்காகத்தான் நான் உங்களுக்கு மனம்திறந்து பேசும்படி கட்டளையிடுகிறேன், இது உங்கள் நன்மைக்காக. நீங்கள் பதில் சொல்லாமல் அமைதியாக இருந்தாலும், எனக்குத் தெரியும்; ஆனால் நீங்கள் பேசுவதன் மூலம், நல்ல பலனை அடைவீர்கள்.**

**எனது உலகளாவிய மனம் என்பது ஒவ்வொரு தனி மனிதனின் மனதுடன் இணைக்கப்பட்டுள்ள மையமாகும். எனவே, ஒரு நபர் எங்கிருந்தாலும், அவர் ஒவ்வொரு கணமும் என்ன நினைக்கிறார், என்ன செய்கிறார் என்பது எனக்குத் தெரியும். ஒவ்வொரு நொடியிலும் ஒவ்வொரு நபரின் சிந்தனையையும், முழு உலகின் எண்ணங்களையும் ஒரே நேரத்தில் நானறிவேன். இது மட்டுமல்லாமல், நாளை அல்லது ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு நீங்கள் என்ன நினைப்பீர்கள் என்பதையும் நான் அறிவேன், மேலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் என்ன நினைத்தீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். இதுதான் எல்லையற்ற, பிரிக்க முடியாத அறிவு; இது உங்கள் கற்பனைக்கு அப்பாற்பட்டது.**

எதிர்வரும் வசந்த காலத்தில், ஒரு வாரத்திற்காக, மெஹர் பாபாவை இங்கிலாந்திற்கு அழைத்து - பாரிஸில் அவர் வழங்கிய ஒரு வார சகவாசத்திற்கு 'பதிலாக' என்று கூறி - கிட்டியும் மேலும் சிலரும் அழைப்பு விடுத்திருந்தனர். பாபா உடனடியாகத் தொலைத்தந்தி அனுப்பினார்: "**மிக்க மகிழ்ச்சி. கிம்கோவிடமிருந்து வந்த ஒரு வார அழைப்பை ஏற்றுக்கொண்டேன்.**"

பாபாவின் முதல் மேற்கத்திய பயணம், தேர்ந்தெடுக்கப்பட்ட பல அதிர்ஷ்டசாலி நபர்களை அவரது தொடர்பில் கொண்டு வந்து, அவர்கள் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர்களிடமிருந்து வந்த கடிதங்களின் சில பகுதிகள் கீழ்வருமாறு:

# "நான் உங்களை சந்தித்த அந்த நாள், எல்லா நாட்களிலும் சிறந்த நாளாக உள்ளது. ஸ்ரீ பாபாவின் அழகு, மிகவும் பொதுவான விஷயங்களைக்கூட ஊடுருவிச் செல்கிறது. நான் இன்னமும் ஊமையாகவே உள்ளேன். இதைப் பற்றி சிந்திக்கையில், நீங்கள் வாழ்க்கை எனும் மரத்தில் 'ஒளிரும் ரோஜா'வாக, தங்க நிறத்தில் தோன்றுகிறீர்கள்."

# "மெஹர் பாபா, உங்களில், அன்பின் தங்க நதி பெருக்கெடுத்துப் பாய்கிறது."

# "உங்களின் தொடர்பு, நான் இனிமேல் தனியாகப் பிரிந்து இருக்க முடியாத நிலையை அறிவுறுத்துகிறது. உண்மை உலகின் தீப்பிழம்புகள் வழியாக, உணர்வுபூர்வமான பரிபூரண அன்பில் மூழ்கும் தைரியத்தை இது எனக்குத் தரட்டும்! தயவு செய்து எனக்கு உதவுங்கள்!"

# "பிரியமான பாபா, நீங்கள் எங்கள் அமெரிக்க தேசத்திலிருந்து புறப்பட உள்ளீர்கள். உங்களை சந்திக்கும் பாக்கியத்தைப் பெற்ற பலரில் நானும் ஒருவராக இருந்து 'அமெரிக்கா உங்களால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது' என்பதை உணர்ந்து பூரிப்படைகிறேன். நீங்கள் விரைவில் திரும்பி வந்து நீண்ட காலம் எங்களுடன் இருக்க வேண்டுகிறோம்."

# "நாங்கள் கடந்த பத்து நாட்களாக மேற்கு நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கிறோம். ஒரு மணி நேரம் கூட நீங்கள் எங்கள் இதயங்களிலிருந்தும், மனதிலிருந்தும் வெளியேறவில்லை; மேலும் எங்கள் மனத்திரையில் பதிந்த உங்களின் சித்திரம், நாங்கள் செல்லும் ஒவ்வொரு இடத்தின் சுவரையும் அலங்கரித்து, நினைவு, அன்பு மற்றும் நன்றியை வெளிப்படுத்துகிறது."

# "நீங்கள் யார் என்பது சந்தேகத்தின் நிழலையும் கடந்து எனக்குத் தெரியும் என்பதை நீங்கள் அறிவீர்கள் - அன்பின் உருவான இறைவனே, நீங்கள் என் இதயத்தில் இருக்கிறீர்கள், அதே வேளையில் நீங்கள் என்னை உங்கள் இதயத்தில் வைத்திருக்கிறீர்கள் என்றும் எனக்குத் தெரியும்."

# "நீங்கள் பயணத்தைத் தொடங்குவதற்கு முன்னர், ஒரு முறை, நான் உங்களை நேசிக்கிறேன், ஆத்மாவின் ஆழத்திலிருந்து நீண்ட காலமாக நான் அன்பின் இதயத்திற்குள் நுழைய ஏங்குகிறேன் என்று உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன் - இனிமேல் அந்த அன்பை மட்டுமே நான் பிரதிபலிக்கும்படிப் பிரகாசிக்கச் செய்யுங்கள். நீங்கள் இங்கிருந்துச் சென்றாலும் என் இதயத்தில் நிலைத்திருப்பீர்கள், மேலும் நீங்கள் விரைவில் திரும்பி வருவீர்கள். அன்புக்காகத் தவிக்கும் இந்த உலகிற்கு, நீங்கள் மீண்டும் வருவீர்கள். என் இதயத்தின் கனவு என்னவென்று உங்களுக்குத் தெரியும், எனவே நான் உங்களை எப்போதும் நினைத்துக் கொள்கிறேன், நான் ஒரு நாள் ஆன்மீக அன்பைப் பிரதிபலிக்கும் ஒருவராக இருக்க வேண்டும் - உலகளாவிய அன்பு எல்லா மானிடரையும் பரிபூரணமாக்கி இறையொளியை அருளும். ஆழ்ந்த நன்றியுடன்."

# "இப்போது நான் மனித இனத்தின் மலரைப் பார்த்துவிட்டதால், வாழ்வின் குறிக்கோள் என்னவென்று அறிந்து கொண்டேன்; இனி ஒருபோதும் தடுமாறவோ அல்லது வழி தவறவோ மாட்டேன். நாங்கள் எங்கு, எப்போது வந்தாலும் அல்லது சென்றாலும், உங்களின் மேன்மையான அன்பு எங்களையும்

எங்கள் எண்ணங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும் என்பதை, நாங்கள் அறிவோம். உங்களைத் தொடர்ந்து நேசிப்பது ஒன்றே எங்கள் இலட்சியம்.”

1932, ஜனவரி 15 அன்று நோரினா, அனிதா இருவரும் இணைந்து எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தனர்:

நீங்கள் எங்களுடன் அறையில் இருப்பதைப் போல, நாங்கள் உங்களைப் பற்றி மட்டும் நினைத்துக் கொண்டிருந்தோம், நீங்கள் எங்களுடன் இருப்பதை மிகவும் தெளிவாக உணர்ந்தோம், ஒவ்வொரு நாளும் எதிர்கொள்ளும் சிறிய சிறிய பிரச்சினைகள் அனைத்தும் வெறும் நாடகங்களாகவும், எங்களை அதில் நடிக்கும் பாத்திரங்களாகவும் பார்த்தோம். எவ்வளவு மேன்மையான காலகட்டத்தில் நாங்கள் வாழ்கிறோம்! வாழ்வில் ஒவ்வொரு மணி நேரத்தையும் ஒரு புதிய எல்லைக்கல்லாகப் பார்க்கிறோம்!

ஓ, பாபா, எங்களைப் பொறுத்தவரை, உங்களின் படைப்பு என்பது சீரான வளர்ச்சியடைந்து, அதைப் புரிந்துகொண்டு, புத்துயிர் பெற்று வாழ்வதாகும் என்பதை நாங்கள் புரிந்து கொள்கிறோம்.

அந்த தெய்வீக அன்பின் அலை எங்களில் ஊடுருவிச் செல்லும் போது, அதன் தடையற்ற இறை கீதத்தை இசைத்து, நாங்கள் உங்களிடத்தில் வாழ்வோம்; அதேபோல், எங்கள் முழு வாழ்க்கையின் அதிபதி நீங்களே என்பதை நாங்கள் அறிவோம்… உங்களைப் பற்றி மட்டுமே பேசுகிறோம்; உங்களுக்கு நாங்கள் அடிபணிகிறோம். உங்களின் அன்பு, புனித ஆலயமாக எங்களை ஆட்கொள்வதைக் காண்கிறோம். எங்கள் இதயங்களை உங்களிடம் சமர்ப்பிக்கிறோம்.

கிம் இவ்வாறு எழுதினார் (1932, பிப்ரவரி 24)

எங்கள் எளிய மனங்களால் (பாபாவின் அழகு போன்ற) மிகவும் பிரமாதமான எதையும் கருத்தில் கொள்ள முடியவில்லை; உங்கள் அற்புதமான அன்பின் உருவின் ஓர் அம்சத்தை மட்டுமே காண முடிந்தால், அது எங்கள் கண்களைச் சுட்டெரிக்கும். ஆனால் உங்களை சந்தித்ததில், உண்மைப்பொருளான அற்புதத்தின் ஒரு சிறு பாகத்தைக் பார்க்க எங்களை அனுமதித்ததில், நாங்கள் திருப்தி அடைகிறோம், நீங்கள் எங்களை நேசிக்காவிட்டாலும், உங்களை நேசிப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம், முழு முயற்சியுடன் உங்களுக்கு சேவை செய்வோம், உங்களை மகிழ்விப்பதைத் தவிர வேறு எந்த வெகுமதியும் விரும்ப மாட்டோம்.

குருடர்கள், முட்டாள்கள் உங்களைப் பற்றி என்ன கூறுகிறார்கள் என்பது எங்களுக்கு ஒரு பொருட்டல்ல; நீங்கள் ஒரு குருநாதர் என்பதால் நாங்கள் உங்களை நேசிக்கவில்லை. நீங்கள் அற்புதங்கள், அதிசயங்கள் புரிவதையும் நாங்கள் விரும்பவில்லை - எங்களைப் போன்ற எளிய ஜீவராசிகளைக் கூட அரவணைத்து மன்னிக்கக்கூடிய உங்கள் அன்பையும், இரக்கத்தையும் விட, வேறு எந்த அதிசயம் அற்புதமாக இருக்க முடியும்? நீங்கள் பாபா என்பதால் மட்டுமே நாங்கள் உங்களை நேசிக்கிறோம்.

இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் மெஹர் பாபாவின் வெவ்வேறு மையங்களை நிறுவவும், அவரது பயணத்திற்கும், ஒரு வருடம் அமெரிக்காவில் தங்கியிருக்கவும் தேவைப்படும் பணத்தைத் (30000 டாலர்) திரட்டும்படி கிரஹாம் ஸ்டோக்ஸ், மால்கம் ஸ்க்லோஸ், நியூயார்க்கில் உள்ள வேறு சிலரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. சாஞ்சி, ஸ்டோக்ஸிற்கு (1932, ஜனவரி 23 அன்று எழுதிய கடிதத்தில்) இவ்வாறு விளக்கினார்:

“இது, நிதி விஷயம் பற்றிய கேள்வி அல்ல, ஏனெனில் பாபா அமெரிக்காவில் தனது பணிகளை, நிதி இருந்தாலும், இல்லையென்றாலும் செய்ய முடியும். ஆனால், பாபாவின் அறிவுறுத்தல்படி, அவருக்கு மட்டுமே தெரிந்த மிக முக்கியமான காரணங்களுக்காக, நிதி வழங்குபவர்களின் பெரும் நன்மைக்காக, அவர் இதைச் செய்ய விரும்புகிறார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.”

பாபாவின் பணிக்காகப் பங்களிக்க விரும்புவோர்க்கு அனுப்பப்பட்ட ஜனவரி 1932, ‘செய்தி அறிக்கை’யில் மால்கம் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

ஸ்ரீ மெஹர் பாபா இந்த நாட்டிற்கு மறுபடியும் வர விரும்புகிறார், ஏனெனில் இது அவரது மிகப்பெரிய செயல்பாட்டின் களமாக இருக்கும் என்று அவர் கருதுகிறார் - அமெரிக்காவில் நவீன உணர்வு உதயமாகி மலர்ந்து, புதிய நாகரிகம் பிறவி எடுக்கும். அவர் ஏப்ரல் மாதத்தில் வருகிறார், ஏனெனில் அந்த நேரத்தில், நாம் மிகப்பெரிய நெருக்கடியின் தருணத்தை எட்டியிருப்போம். அநேகமாக இரண்டாவது உலகப்போர் உருவாகும், இது நிச்சயமாக, பழமையான இறையருள் ஆட்சி முறையின் முடிவைக் குறிக்கும்; மேலும் புதிய இறையாட்சியை வெளிப்படுத்துவதற்கான வழியை வகுக்கும்.

தற்போது அமெரிக்காவில் ஸ்ரீ மெஹர் பாபாவுக்காகத் தயாராகி வரும் மையங்கள், அவர் திரும்பி வரும்போது, புதிய நாகரிகத்தை நிறுவுவதில் பங்கெடுப்பவர்களுக்கு வேண்டிய ஒளியூட்டம் மற்றும் சக்தியை வழங்க பயன்படும்... பாபாவின் வருகைக்கான இந்த மையங்களை உருவாக்குவது மட்டுமின்றி, மனித உணர்வின் மாற்றத்தை பாதிக்கும் ஒரு படைப்பின் பொருளளவிலான அடித்தளத்தை அமைப்பதற்குத் தேவையான நிதியைத் திரட்டுவதே, நமது தற்போதைய நோக்கம்; எனவே, இது உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். பாபாவை சந்தித்த மக்கள் தங்கள் சுய விருப்பத்துடன் இதில் பங்கெடுக்கவும், தங்களுக்கு நன்மை பயக்கும் என்பது மட்டுமல்லாமல், அவர்களின் தொடர்பு மூலம், பாபாவின் வருகையின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள வேண்டியதும் இன்றியமையாதது.

மெஹர் பாபா, ஒரு ‘சிறந்த சிறுவனைத் தேடும் பணி’யை இன்னும் கைவிடவில்லை. மேலும், மேற்கத்திய பயணத்தில் அவருடன் செல்ல, பொருத்தமான இளைஞனைக் கண்டுபிடிக்க விரும்பினார். ‘டைம்ஸ் ஆஃப் இந்தியா’ (TIMES OF INDIA) பத்திரிகையில் ‘சிறுவன் தேவை’ என்று விளம்பரம் செய்யுமாறு பாபா அறிவுறுத்தினார், இது 1932, ஜனவரி 27 அன்று

விளம்பரப்படுத்தப்பட்டது: “**பதினாறு வயதிற்கு உட்பட்ட ஆற்றல் மிக்க, ஆரோக்கியமான மற்றும் உலகெங்கும் குருநாதர் மேற்கொள்ளும் சுற்றுப்பயணத்தில் அவருடைய தனிப்பட்ட உதவியாளராகச் செயல்பட விரும்பும் சிறுவன் தேவை. உணவு, உடை, உறைவிடம், நல்ல ஊதியம்.**” பல விண்ணப்பதாரர்கள் நேர்காணலுக்காக அழைக்கப்பட்டனர், ஆனால் ஒருவரும் திருப்திகரமாக அமையவில்லை.

இதன் விளைவாக, பாபா தனது திட்டத்தை மாற்றி, ஒரு அறிவு கூர்மையான சிறுமியை உடன் அழைத்துச் செல்ல முடிவு செய்தார். குவெட்டாவில் வாழும் கேட்டி ஈரானியைத் தொடர்பு கொண்டபோது, தாயார் அனுமதி வழங்க மறுத்துவிட்டார். எனவே நாசிக் மற்றும் பிற இடங்களிலும் தேடும் பணி தொடர்ந்தது, ஆனால் பாபாவின் விதிமுறைகளுக்கு ஏற்ப எந்த சிறுமியையும் கண்டுகொள்ள முடியவில்லை. இறுதியாக, பிப்ரவரி 18 அன்று, பாபா மண்டலிக்கு விளக்கினார்:

**பிரபஞ்சத்தில் நான் மேற்கொள்ளும் பணியை நீங்கள் ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது. எனது, இந்த அவதார காலகட்டத்தில், நான் உலகை முழுவதுமாகத் தூய்மைப்படுத்த வேண்டும். இந்த ‘சீரமைப்பு பணி’ ஆயிரம் ஆண்டுகள் நீடிக்கும். தற்போதைய அவதார காலகட்டத்தில், கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளை ஒன்றிணைக்கும் மிகப் பெரிய பணி, செவ்வனே செய்து முடிக்கப்படும். முந்தைய காலத்தில், கிழக்கு அல்லது மேற்கத்திய நாடுகளுக்கென அவதரித்ததைப் போலல்லாமல், இந்த யுகத்தில் நான் முழுப் பிரபஞ்சத்திற்கும் அவதார புருஷனாக உருவெடுத்துள்ளேன். நான் முழுப் பிரபஞ்சத்தையும் சேர்ந்தவன்! இதனால்தான் மேற்கத்தியர்கள் எனது வலையில் எளிதாகச் சிக்கிக் கொண்டு, என்னை நேசிக்க ஆரம்பிக்கிறார்கள். நான் வலையை வீசியதும், மீன்கள் பிடிபட்டன. இப்போது இந்த மீன்கள் வலையிலிருந்து தங்களை விடுவிக்க விரும்பாமல் அனைவரும் என்னை நேசிக்கிறார்கள், அவர்கள் எனது நோக்கத்திற்கான வேலையைச் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.**

**என்னுடைய செயல்பாடுகளை நீங்கள் வெளியளவில் கவனிக்கிறீர்கள்; ஆனால் நான் உள்ளளவில் என்ன செய்கிறேன் என்பதை நீங்கள் ஒருபோதும் அறிய முடியாது! இக்காரணத்திற்காகத்தான் நான் சொல்கிறேன், ‘என்னுடன் பொறுமையாக இருங்கள், எல்லா கஷ்டங்களையும், துன்புறுத்தல்களையும் தாங்கிக் கொள்ளுங்கள், நான் சொல்வது போலத் தொடர்ந்து செய்யுங்கள்’ என்று. நான் சில ஊடகங்கள் மூலமாக எனது பணியைச் செய்கிறேன், எனது பணிக்கு ஊடகம் மிகவும் அவசியம். நீங்கள் அதை ஒருபோதும் புரிந்து கொள்ளமாட்டீர்கள்.**

**உங்கள் பார்வையில் ஒரு சிறுமி மிகவும் பொருத்தமானவளாக இருக்கலாம், ஆனால் என்னைப் பொறுத்தவரை, அவள் எனது பணிக்குப் பொருத்தமானவள் அல்ல. சில வேலைகளுக்கு முற்றிலும் சரியான ஊடகம் எனக்குத் தேவை, எனவே நீங்கள் அழைத்து வந்தவர்களைத்**

**திருப்பி அனுப்ப வேண்டியதாயிற்று. அன்பும் பக்தியும் மிக்க, தூய்மையான இதயம் படைத்த, ஒரு நல்ல சிறுமியை என்னிடம் அழைத்து வாருங்கள்.**

அடுத்த நாள், மெஹர் பாபா தொடர்ந்து கூறுகையில், "**உழைப்பின் அமைப்பு முறை, அதற்குரிய இயந்திரங்களை முழுமையாகப் பழுது பார்த்து, மாற்றியமைக்க வேண்டிய ஒரு கட்டத்தை உலகம் இப்போது எட்டியுள்ளது; இது ஏற்கனவே உயர்நிலையில் இருக்கும் வாலிகளுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளில் கொண்டுவந்த மாற்றங்களின் மூலமாக நிகழ்ந்துள்ளது.**"

முதல் வெளிநாட்டுப் பயணத்தின் போது, பல மேற்கத்திய பெண்மணிகள் பாபாவின் தொடர்பில் வந்தனர், மேலும் ஒரு இந்திய பெண்மணியையும் அவரது பணிக்காக, மேற்கத்திய நாடுகளுக்கு உடன் அழைத்துச் செல்ல பாபா விரும்பினார். விஷ்ணு தனது உறவினர் யமுனா ஹல்தங்கரை அழைத்து வந்தார்; இந்து என்று அழைக்கப்பட்ட சிறுமிக்கு பாபா ஒப்புதல் அளித்தார்; ஆனால் பயண நேரத்தில் அவள் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், அழைத்துச்செல்ல இயலாமலாயிற்று.

1932, பிப்ரவரி 21ஆம் நாள் மெஹர் பாபா, ஆதி சீனியர், குல்மாய், டாக்டர் கனி, காக்கா ஆகியோருடன் காரில் மும்பைக்குச் சென்றார், இதர மண்டலி ரயிலில் சென்றனர்.

பாபா, மும்பையில் இருந்த வேளையில், பீலாமாய் தனது மகள் ஸில்லாவுடன் பிப்ரவரி 25 அன்று அங்கு வந்தார். பீலாமாய் ஏற்கனவே மெஹராபாத் மற்றும் டோக்கா ஆஷ்ரமத்தில் தங்கி இருந்தது போல, நாசிக் நகரிலும் தங்க விரும்பினார். பாபா பல முறை கராச்சியில் பீலாமாய் வீட்டில் தங்கியிருந்தார். இறுதியில், பீலாமாய் பல ஆண்டுகள் பெண் மண்டலியோடு வாழ்ந்து வந்தார்.

மேற்கத்திய பயணத்தில் பாபாவுடன் செல்ல, பொருத்தமான இளம் நபரைத் தேடும் பணித் தொடர்ந்தது. 'டெய்லி மெயில்' (DAILY MAIL) நாளிதழில் மற்றுமொரு விளம்பரம் தரப்பட்டது. விண்ணப்பிக்க விரும்புவோர் மெஜஸ்டிக் ஹோட்டலுக்கு (MAJESTIC HOTEL) வருமாறு அறிவுறுத்தப்பட்டது. ஆதி சீனியர், ஆதி ஜூனியர் இருவரும் ஹோட்டலில் காத்திருந்தனர், ஆனால் ஒருவரும் நேர்காணலுக்காக வரவில்லை; மேலும் பல மண்டலி 'சிறப்பான சிறுவனைத் தேடும்' பணியில் மும்முரமாக ஈடுபட்டும் ஒருவரையும் கண்டுகொள்ள முடியவில்லை.

பிப்ரவரி 25ஆம் நாள் 'ஆன்மீகத்தில் ஆர்வமுள்ள' இரண்டு இளம் பெண்மணிகளை அழைத்து வந்தனர். பாபா அவர்களுக்கு அன்பைக் குறித்த கீழ்வரும் விளக்கத்தை அளித்தார்:

**வாழ்க்கையின் நோக்கம் இறை உணர்வை அடைவது. எப்படி? அன்றாட வாழ்க்கையில் மதத்தின் மிக உயர்ந்த இலட்சியத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம். எந்த ஒரு மதத்திற்கும் அன்பு ஒன்றுதான்**

**உன்னதமான இலட்சியம். அது ஒன்றுதான் சிறந்த, எளிதான பாதை - அதாவது கடவுளை மட்டுமே நேசிப்பது.**

**பொருள் சார்ந்த அன்பு நல்லது, ஆனால் அது தன்னலமற்றதாகவும், ஆசையற்றதாகவும் இருக்க வேண்டும். அதில் ஆசையின் சாயல் இருக்கக்கூடாது. காதல் (அன்பு) முற்றிலும் காமத்திலிருந்து விலகி உறுதியாகவும், மாறாமலும் இருக்க வேண்டும். உதாரணமாக நீங்கள் நல்ல மனநிலையில் இருக்கும் போது, இன்று ஒருவர் பின்னும், நாளை மற்றொருவர் பின்னும் செல்லுவது காதல் அல்ல, காமம். மனதின் போக்கு என்னவென்றால், அது எப்போதுமே மாற்றத்தைத் தேடி அலையும் - ஒன்றிலிருந்து இன்னொன்று, ஒருவரிலிருந்து இன்னொருவர், ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குத் தாவிக்கொண்டே இருக்கும். ஒருவரிடம் மட்டும் அன்பு செலுத்துங்கள்.**

மெஹர் பாபா, அந்த இளம் பெண்மணிகளைத் தேர்வு செய்யவில்லை, ஆனால் அவர்கள் பாபாவை சந்திக்க பல முறைத் திரும்பி வந்தனர். ஒரு நாள், அவர்கள் பாபாவின் தெய்வீக நிலை குறித்து, தங்களின் சந்தேகங்களை வெளிப்படுத்திய வேளையில், பாபா, அவர்களிடம் நேர்மையாகக் குரல் கொடுக்க வலியுறுத்தினார். பெண்மணிகளில் ஒருவர் கேட்டார், “மக்கள் உங்களை நேசிக்கிறார்கள் என்றெல்லாம் ஏன் அடிக்கடி கூறுகிறீர்கள்?”

பாபா விளக்கினார்:

**நான் ஏன் அப்படிச் சொல்லக்கூடாது? உண்மையை வெளிப்படையாக அறிவிப்பதில் என்ன தீங்கு உள்ளது? மன்ஸூர், ‘அனல் ஹக்** (நான் கடவுள்)’ **என்றார்; இயேசு, “நானும் எனது பிதாவும் ஒன்று”; கிருஷ்ணர், “அஹம் பிரம்மஸ்மி”** என்றார். **மன்ஸூரின் தலை துண்டிக்கப்பட்டது; இயேசு சிலுவையில் அறையப்பட்டார்; கிருஷ்ணரின் வார்த்தைகள், தற்பெருமை என்று தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டன. ஆனாலும், அவர்கள் அனைவரும் அதை உலகிற்கு பகிரங்கமாக அறிவித்தனர். அதுபோல நானும் சொல்கிறேன்.**

**நீங்கள் இருவரும் ஆன்மீகப் பாதையில் நாட்டம் உள்ளவர்கள். சந்தேகங்களைப் பொறுத்தவரை, அவை வரத்தான் செய்யும்; மனம் இருக்கும் வரை, சந்தேகங்கள் எழத்தான் செய்யும். மனம் எப்பொழுதும் அப்படித்தான் இயங்குகிறது, முதலில் ஒரு வழியில் செல்கிறது, பிறகு வேறொரு வழி. உங்களில் ஒருவித நம்பிக்கை பிறக்கும்போது அது சீராகிவிடும். என்னுடைய மண்டலி, இவர்கள் பல ஆண்டுகளாக என்னுடன் இருக்கிறார்கள், இப்போது, எனக்காக அவர்களின் தொண்டையை வெட்டவும் தயாராக உள்ளனர், ஏனெனில் என்னுடனான பல ஆண்டு சகவாசத்தால், அவர்களில் அசைக்க முடியாத நம்பிக்கைகள் உருவாகியுள்ளன. நீங்களும் ஒரு நாள் நம்பிக்கையை உணர்வீர்கள், பின்னர் அனைத்தும் சரியாகிவிடும்.**

“உங்களைப் பார்ப்பதற்கு முன்னர், எங்களுக்கு இருந்த அதிகமான நம்பிக்கை, உங்களைப் பார்த்த பிறகு குறைவாக இருப்பது ஏன்?”

**என்னைப் பார்ப்பதற்கு முன்னர் இருக்கும் அதிக அன்பும் நம்பிக்கையும், எப்போதுமே ஒருவித அசைக்க முடியாத நம்பிக்கை வரும் வரை அல்லது இயற்கையான போக்கில் அந்த நம்பிக்கை தானாகவே மீட்கப்படும் வரை, என்னைப் பார்க்கும் வேளையில் குளிர்ந்து தணிந்து விடுகிறது. பின்னர், ஒரு முறை மீட்கப்பட்டதும் கைவிடப்பட மாட்டாது. நீங்களும் ஒரு நாள் அந்தத் தகுதியை அடைவீர்கள். பயப்படவோ கவலைப்படவோ வேண்டாம். நீங்கள் என்னை, சாதகமாக அல்லது மாறாக, எப்படி நினைத்தாலும் அது எனக்கு ஒன்று போலத்தான். நீங்கள் என்னைப் பற்றி எந்த விதத்திலும் சிந்திக்கலாம். நான் விரும்புவது அதுதான். எல்லாவற்றிலும் என்னையே நான் காண்கிறேன், ஆகவே ஒருவரை நேசித்து, இன்னொருவரை எப்படி வெறுக்க முடியும்? எனது பார்வையில் அனைத்தும் சமம். எனவே கவலைப்பட வேண்டாம். என்னை நினைவில் கொள்ளுங்கள்.**

“ஆனால், பாபா, நாங்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், விரும்பத்தகாத எண்ணங்கள் மனதில் ஊடுருவுகின்றன.”

**“இதைக் கருத்தில் கொள்ளாதீர்கள். அவை வந்து போகட்டும். குறைந்தபட்சம் நான் சொல்வதைத் தவறாமல் செய்யுங்கள்: படுக்கைக்குச் செல்லும் முன் ஐந்து நிமிடங்களுக்கு என்னைப் பற்றி சிந்திக்க முயற்சி செய்யுங்கள். எனது முகத்தின் உருவத்தை உங்கள் கண்முன்னே கொண்டு வாருங்கள், ஆன்மீக ரீதியில் நான் உங்களுக்கு உதவுவேன்.”**

1932, மார்ச் 1ஆம் நாள், மெஹர் பாபா மும்பையிலிருந்து நவ்ஸாரி சென்றார். ஸொராப்ஜி தேசாய் குடும்பத்தாருக்கு ஒரே ஆச்சரியம்; அரை மணி நேரத்திற்கு முன்புதான் தொலைத்தந்தி மூலமாக, தகவல் தரப்பட்டது.

ஸொராப்ஜி தேசாய் ரயில் நிலையத்திற்கு விரைந்தார். பாபாவை, ஸொராப்ஜி குடும்பத்தினர் பக்தியுடன் அன்போடு வரவேற்றனர். முழுக் குடும்பமும் பாபாவின் அரவணைப்பில் இருந்தது.

ஸொராப்ஜி, பாபாவின் பாதங்களில் விழுந்து வணங்கினார், “எங்கள் வாழ்க்கை இன்று பூரண நிறைவைக் கண்டுள்ளது. இந்த வீட்டின் ஒவ்வொரு அணுவும், தோட்டத்தின் ஒவ்வொரு மரமும், செடியும் மகிழ்ச்சியால் துடிக்கின்றது. அதிர்ஷ்டத்தின் காற்றில் வாழ்க்கை, புத்துணர்வைப் பெற்றுள்ளது. எம்பெருமானே, உங்கள் அருளைத் தவிர உலகில் வேறு எதுவும் இல்லை! உங்களின் ஆதரவால், நாங்கள் அனைத்தையும் அடைந்துள்ளோம். இறைவனே, எங்களை எப்பொழுதும் உங்கள் காலடியில் வைத்திருங்கள்! எங்கள் உதடுகள் உங்கள் நாமத்தை உச்சரித்து, இறுதி உயிரை விடட்டும். இதுவே எங்கள் ஒரே பிரார்த்தனை.” பாபா, ஸொராப்ஜியைத் தனது கைகளால் தழுவி அணைத்தார். வயதான ஸொராப்ஜியின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. குடும்பத்தில் ஒவ்வொருவரும் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

அதற்குப் பிறகு, பாபா நீராட ஒன்பது வாளி தண்ணீர் கேட்டார். சுத்தமான ஆடைகளை அணிந்து, பாபா அமர்ந்திருக்கும் அறைக்குள் வந்த ஸொராப்ஜியின் மருமகள் பபாயிடம், **"நான் எப்படி இருக்கிறேன்?"** என்று பாபா கேட்டார்.

"மிகவும் அழகாக இருக்கிறீர்கள் பாபா," என்று அவர் பதிலளித்தார்.

**"ஏனெனில், நான் அனைவரிடமிருந்தும் அன்பைப் பெறுகிறேன்"** என்று பாபா குறிப்பிட்டார்.

பிற்பகலில் பாபா 'லுன்ஸிகுய்' (LUNSIKUI) பூங்காவிற்கு விஜயம் செய்தார், அங்கு, குழந்தைகள் கிரிக்கெட் விளையாடுவதைப் பார்த்து ரசித்தார்; பின்பு நவ்ஸாரி துறைமுகத்தையும் பார்வையிட்டார். அன்று மாலை பாபா, ஸொராப்ஜி குடும்பத்தில் ஒவ்வொருவரையும் சந்தித்து உரையாடினார். இந்த வருகையின் போது, மெஹர் பாபாவின் நெருங்கிய தொடர்பில் வந்தவர் ஸொராப்ஜியின் உறவுக்காரர் கேக்கி தேசாய் (KEKI DESAI), வாழ்நாள் முழுவதும் பாபாவின் அரவணைப்பில் இருந்தார்.

மெஹர் பாபா மறுநாள், நவ்ஸாரியிலிருந்து மும்பைக்கு ரயிலில் புறப்பட்டார்; மும்பை, தாதர் ரயில் நிலையத்தில் தற்செயலாக, வஜிப்தர், பாபாவை சந்தித்தார். ஏழு வருட இடைவெளிக்குப் பிறகு வஜிப்தர் (மன்ஸில்-இ-மீமில் தங்கியிருந்த முன்னாள் கிரிக்கெட் வீரர்) பாபாவை சந்தித்தது, மனதைக் கவரும் காட்சியாக அமைந்தது. பாபா மீண்டும் காக்கா பாரியாவின் சகோதரியின் வீட்டில் தங்கினார். அன்றிரவு பாபா மண்டலியுடன் கானக் (CARNAC) பிரிட்ஜ் (க்ரா:ஃபோர்டு மார்க்கெட், ஃப்ரீர் ரோடு சந்திப்பு - JOINING CRAWFORD AND FRERE ROAD) மற்றும் போரி பந்தர் (BORI BANDER) பகுதியைச் சுற்றி ஒரு மணிநேர நடைப்பயணம் மேற்கொண்டார். அவர்கள் இரவில் ஐஸ்கிரீம் சாப்பிட்டுவிட்டு வீடு திரும்பினர்.

வஜிப்தர் தனது குடும்பத்தினருடன் மறுநாள் மாலை மானேக்ஜியின் வீட்டிற்கு வந்து, பாபாவைத் தனது வீட்டிற்கு அழைத்தார். அடுத்த நாள் பாபா மதிய உணவிற்காக வஜிப்தரின் வீட்டிற்குச் சென்றார். 1932, மார்ச் 6ஆம் தேதி பாபா, காக்கா, ஆதி சீனியர் இருவருடன் மும்பையிலிருந்து நாசிக் புறப்பட்டார்.

நாசிக் வந்து சேர்ந்ததும், பாபாவின் இரண்டாவது மேற்கத்திய பயணத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்தப் பயணத்தில் மண்டலியில் பன்னிரண்டு பேர் அவருடன் செல்ல இருந்தனர்; ஆறு பேர் அடங்கிய இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டது: ஒரு குழு சீனாவிற்கும், மற்றொன்று இங்கிலாந்து, அமெரிக்காவிற்கு பாபாவுடன் பயணிக்கவும் திட்டமிடப்பட்டது. சீனாவிற்குச் செல்லும் ஆறு மண்டலியை, பின்னர் அமெரிக்காவிற்கு அழைப்பதாக பாபா விளக்கினார்.

சீனாவிற்குச் செல்லும் ஆறு பேர் குழுவில் குஸ்தாஜி, ஜால்பாய், பெண்டு, ராவ்ஸாஹேப், ருஸ்தம், விஷ்ணு ஆகியோர்; பாபாவுடன் அவரது இரண்டு சகோதரர்களான ஆதி ஜூனியர், பெஹராம், ஆதி சீனியர், சாஞ்சி, டாக்டர் கனி, காக்கா ஆகியோரும் செல்ல இருந்தனர்.

மெஹர் பாபா, மண்டலியின் இரு குழுக்களும் பின்பற்ற வேண்டிய பின்வரும் மூன்று நிபந்தனைகளை வகுத்தார்:

1. **உள்ளார்ந்த முழுமையான கீழ்ப்படிதல்.**
2. **ஏற்கனவே உருவாக்கப்பட்ட அன்பின் மேன்மையான சூழ்நிலையை பாதிக்கும் வகையில், (மேற்கத்திய நாடுகளில்) எந்த ஒழுக்கக்கேடான செயல்களிலும் ஈடுபடக்கூடாது.**
3. **உங்கள் மனநிலை அல்லது விரும்பத்தகாத செயல்கள், அங்கே பாபாவின் பணியை எந்த வகையிலும் பாதிக்கக்கூடாது.**

'**பயணத்தின் போது எந்தப் பெண்மணியையும் தவறான முறையில் தொடக்கூடாது**' என்று பாபா அனைவரையும் எச்சரித்தார். அவரது உத்தரவின் தீவிரத்தை வலியுறுத்துவதற்காக, "**நீங்கள் எந்தப் பெண்ணைத் தொட்டாலும், உடனடியாகத் தற்கொலை செய்து கொண்டால் நல்லது!**" என்று குறிப்பிட்டார்.

இந்தக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியுமாறு, பாபா பன்னிரண்டு பேரிடமிருந்தும் உறுதிமொழியைப் பெற்றுக்கொண்டதோடு, அவர்களின் கட்டை விரல் இரத்தத்தால் ஒப்பந்தத்தில் விரல் பதிவுகளையும் பெற்றுக் கொண்டார்.

ஆதி சீனியர், அவர்கள் புறப்படுவதற்கு முன்பு, பாபா, எவ்வளவு கண்டிப்பாக, நிபந்தனைகளை அவர்களுக்கு அறிவுறுத்தினார் என்பதை நினைவு கூர்ந்தார்:

நாங்கள் மேற்கத்திய பயணத்தைத் தொடங்குவதற்கு முன்பு, பாபாவுடன் பலமுறை அமர்ந்து அங்கு நடந்து கொள்ளும் முறை குறித்து விரிவாக விவாதித்தோம். அங்குச் செல்வது எங்கள் மனங்களில் ஒரு புரட்சியாகவும், பல வழிகளில் விசித்திரமாகவும், புதியதாகவும் இருந்தது - சூழ்நிலைகள், உணவு, பாபா எங்களைக் கையாளும் விதம் இதுபோன்ற அனைத்தும். இளைஞர்களாகிய நாங்கள், இளம் பெண்களுடன் மிக நெருக்கமாக இருக்க வேண்டாம், அதே வேளையில், அவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் அளவுக்கு அதிக தூரமும் வேண்டாம் ஆனால் காதல் சம்பந்தப்பட்ட விஷயங்கள் அறவே வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டது. இது எங்கள் முகத்தைத் திருப்பிக் கொள்ளுமாறு பாபா கூறுவதை விடக் கடினமான கட்டளையாக இருந்தது!

1932, மார்ச் 9ஆம் நாள், மெஹர் பாபா மும்பைக்குத் திரும்பி வந்தார்; இந்த முறை, சௌபாட்டியின் 'டாடிஸாட் சாலை'யில் அமைந்த 'ரேண்டர் ஹவுஸில்' (RANDER HOUSE ON DADYSATT ROAD, CHOWPATTY) தங்கியிருந்தார். பார்வையாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

இயற்கையாகவே, மும்பை பக்தர்கள் பாபாவின் தரிசனத்திற்காக ஏங்கினர்; மேலும், பாபா, மார்ச் 11ஆம் தேதி இதைப் பற்றி விவாதித்தார். சாஞ்சி, ஒரு சில மணி நேரம் தரிசனத்தை அனுமதிக்கப் பரிந்துரைத்தார், ஆனால் இதர அனைவரும் எதிராக வாக்களித்ததால், விரக்தியில், அவர் தனது நாட்குறிப்பில் இவ்வாறு பதிவு செய்தார்:

எந்தவொரு தன்னலமற்ற, விவேகமுள்ள மண்டலியும் பாபாவின் தரிசனத்திற்காக ஏங்கும் பக்தர்களை வரவேற்கும் ஆர்வத்தை வெளிப்படுத்தியிருப்பார்கள். ஆனால் இங்கு இவர்கள், பாபாவின் சகவாசத்தை அனுபவிக்கும் அதே வேளையில் பிறரைத் தவிர்க்கப் பார்க்கிறார்கள்.

பாபா வெளியாட்களை சந்திக்கவில்லை என்றாலும், மேற்கத்திய பயணத்திற்கு முன்னர், அவர் நேரடி பேட்டி ஒன்றை அளிக்க ஒப்புக் கொண்டார். ‘அஸோஸியேட்டட் பிரஸ்’ஸின் (ASSOCIATED PRESS) ஜேம்ஸ் ஏ மில்ஸ் (JAMES A. MILLS) எனும் அமெரிக்க நிருபருக்கு 25 நிமிட நேர்காணல் வழங்கப்பட்டது, 1932, மார்ச் 20ஆம் நாள், மில்ஸின் கட்டுரை அமெரிக்காவின் மிகப் பெரிய செய்தித்தாளில், ‘இந்தியன் ஸீர் ஸ்டார்ட்ஸ் ஃபார் அமெரிக்கன் டூர்’ (INDIAN SEER STARTS FOR AMERICAN TOUR) என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.

உரையாடலின் போது, மில்ஸ், பாபாவிடம், “உங்களைப் பின்பற்றுபவர்கள், நீங்கள் பல அற்புதங்களை நிகழ்த்தியதாகக் கூறுகிறார்கள்” என்றார்.

அதற்கு பதிலளித்த பாபா, **“சத்தியத்துடன்** (உண்மைப்பொருள்) **ஒருவராக இருக்கும் எவரும் எதையும் சாதிக்க முடியும்; ஆனால் ஒருவரின் ஆன்மீக சக்திகளை நிரூபிப்பதற்காக, அதிசயத்தை நிகழச் செய்வது பலவீனம். குருடர்களுக்குப் பார்வை, செவிடர்களுக்குக் கேட்கும் சக்தியையும் அளித்து, உயிர் துறந்தவர்களை மீட்டெடுத்த கிறிஸ்து, உலகின் வேதனையிலிருந்து தன்னைக் காப்பாற்ற எதுவும் செய்யவில்லை.**

**“இறைநிலையை அடைந்த பரிபூரண மனிதன் நிகழ்த்தும் ஒரே அதிசயம், பிறரையும் பரிபூரணமாக்குவதுதான். நான் அனுபவிக்கும் எல்லையற்ற நிலையை அமெரிக்க மக்களையும் உணர வைக்க விரும்புகிறேன்.”**


மெஹர் பாபா இந்தியா வருகை



மெஹர் பாபாவுடன்
சார்லஸ் பர்டம்



மெஹர் பாபா, டெவன்ஷர் **1932**

# இரண்டாவது இங்கிலாந்து பயணம் - லண்டன், டெவன்ஷர்

(**London, Devonshire**)

1932, மார்ச் 24ஆம் நாள், இரவு ஒன்பது மணிக்கு, மெஹர் பாபா தனது ஆறு மண்டலி அடங்கிய சிறிய குழுவுடன், இத்தாலிய கோன்டே ரோஸ்ஸோ (CONTE ROSSO) கப்பலில், இங்கிலாந்தை நோக்கிப் பயணத்தைத் தொடங்கினார். சீனாவிற்குச் செல்லும் ஆறு மண்டலி குழு, அதே நாளில் கொழும்பிலிருந்து ஷாங்ஹை (SHANGHAI) நகருக்கு, 'ஷென்னோஸு' (CHENONCEAUX) எனும் ஃபிரெஞ்சு கப்பலில் புறப்பட்டனர். இந்தக் குழு 'நாங்கிங்' (NANKING) நகரில் ஹெர்பெர்ட் டேவியுடன் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மெமோவும், தங்கை மணியும் பாபாவை வழியனுப்ப மும்பைக்கு வந்திருந்தனர், ஆனால் பாபாவின் தந்தை போபோ உடல் நலம் குன்றி இருந்ததால், பாபா புறப்படுவதற்கு முன்பு பூனா சென்று, தந்தை ஷெரியார்ஜியை சந்தித்தார். தனது மகனின் அன்பான முகத்தைப் பார்த்து, போபோவின் இதயம் ஆறுதல் அடைந்தது, இறை ஒளி அவரைப் பரவசமடையச் செய்தது.

மெஹர் பாபாவிற்கு நெருக்கமானவர்களில் ஏறக்குறைய 150 பேர் 'பெல்லார்ட் கப்பல் மேடை'யில் (BALLARD PIER) அன்போடு அவரை வழியனுப்பக் காத்திருந்தனர். அவர்களில் குல்மாய், அவரது கணவர் கான்ஸாஹேப், ஸரோஷ், புதும்ஜி, வஜிஃப்தர், ஸொராப்ஜி தேசாய் குடும்பத்தினர், தாதாசாஞ்சி குடும்பத்தினர், பானுபாய், மானேக்ஜி, ஜெஸவாலா குடும்பம், சதாஷிவ் பாட்டீல், மினூ கராஸ் மேலும் மும்பை, பூனா, நாசிக் பகுதியைச் சார்ந்தவர்கள் பலர் அடங்குவர்.

கடந்த ஆண்டு பாபா, தமது பயணத்தை எவருக்கும் தெரிவிக்காமல், அமைதியாக மேற்கு நோக்கி மேற்கொண்ட பயணத்தோடு ஒப்பிடுகையில், இது முற்றிலும் மாறாக இருந்தது.

பாபா, கெ.ஜெ. தஸ்தூரை அழைத்து வரக் கூறினார்; ஆனால் அவர் இந்த பயணத்தில் சேர்க்கப்படாததால், அழைத்தும் வரவில்லை. மேலும் விரோதத்தின் அனல் அவரது இதயத்தில் இன்னும் வலுவடைந்தது. 1928ஆம் ஆண்டு ருஸ்தத்தை இங்கிலாந்திற்கு அனுப்புவதற்கு முன்பு, பாபா, தஸ்தூரை அனுப்பத் திட்டமிட்டிருந்தார்; ஆனால், அந்த நேரத்தில் அவர் அதை மறுத்துவிட்டார். இப்போது அவர் பாபாவுடன் செல்ல விரும்பினார். இத்தகைய செயலால் பாபா, அவரை எங்கும் அழைத்துச் செல்ல விருப்பம் காட்டவில்லை; மேலும் நாசிக் நகரில் வாழ்ந்த இதர மண்டலியிடமிருந்து அவரைத் தனியாக வைத்திருந்தார். பாபாவின் இந்தப் பயணத்திற்குப் பிறகு, தஸ்தூர் தனது இருப்பிடத்தை மும்பைக்கு மாற்றி, பாபாவுடனான தொடர்பை இழந்தார்.

கப்பலில், பாபா, ஆதி சீனியருடன் ஒரு அறையையும், இதர மண்டலி (பெஹராம், ஆதி ஜூனியர், சாஞ்சி, டாக்டர் கனி, காக்கா பாரியா) இரண்டு

அறைகளையும் பகிர்ந்துகொண்டனர். பயணம் தொடங்குவதற்கு முன்னர், ஆதி ஜூனியர் 20 வயதான ஐலீன் நெட்டில்டன் (EILEEN NETTLETON) என்ற ஓர் ஆங்கிலோ - இந்தியப் பெண்ணை சந்தித்தார், அந்தப் பெண்ணின் பெற்றோரும் அவரை பாபாவுடன் பயணம் செய்ய அனுமதித்தனர். ஐலீன் ஓர் அழகான இளம் பெண், ஆனால் கப்பலில், ஆன்மீகம் பற்றிய பாபாவின் நீண்ட விளக்கங்களுக்கு ஐலீன் சாதகமாக பதிலளிக்கத் தவறியதால், அந்தப் பெண், பாபாவின் உதவியாளராகப் பணிபுரிய பொருத்தமற்றவர் என்று கூறினார். இந்த சூழ்நிலை, முதல் நாளிலிருந்தே பாபாவின் மனநிலையை பாதித்தது. சாஞ்சி, பாபாவின் பார்வையில், மீண்டும், ஒரு பலி ஆடாக மாறினார்.

இந்தியாவில் கோடை காலம் நெருங்கிக் கொண்டிருந்தது, கப்பலில் காலநிலை வெப்பமாக இருந்ததால் பாபா, பெரும்பாலும் தமது அறையில் இருந்தார். சில நேரங்களில் பிங்-பாங் விளையாடி, திரைப்படங்களும் பார்த்தார். பாபா, சிறிய அளவில் உணவு உண்டு, கடைசி நான்கு நாட்கள் உபவாசம் மேற்கொண்டார்.

மெஹர் பாபாவைப் பற்றிய விபரங்கள் இரகசியமாக வைக்கப்பட்டாலும், அவரைப் பார்த்த அனைவருமே, அவர் யார் என்பதை அறிய ஆவலாய் இருந்தனர். ஆனால் மண்டலி எதையும் வெளிப்படுத்த முடியாத சூழ்நிலையில், அவர்கள் பிறரோடு உரையாடுவதில் கவனமாக இருக்க வேண்டியதாயிற்று.

பாபாவால் வெகுவாக ஈர்க்கப்பட்டவர்களில் ஒரு கிறிஸ்தவ மத போதகர், பாபாவைப் பற்றிய புத்தகங்களைப் படிக்க விரும்பினார். மேலும் மேற்படிப்புக்காக ஆக்ஸ்ஃபோர்டுக்குச் (OXFORD) செல்லும் ஓர் இளைஞன், பாபாவைக் கடந்து செல்லும் போதெல்லாம், அவருக்கு மரியாதை செலுத்துவதை வழக்கமாகக் கொண்டான். கப்பலின் இத்தாலிய அதிகாரிகள், மாலுமிகள், மற்றும் பலர், குறிப்பாக பாபா இருந்ததை 'நுகர்ந்து', அவரை எப்படியேனும் பார்க்கும் நோக்கத்தில், தக்க தருணத்திற்காகக் காத்திருந்து, ஒருவருக்கொருவர் போட்டிபோட்டு முன்வந்து உதவி செய்வது போல பாசாங்கு செய்தனர்.

1932, மார்ச் 29, கடல் பயணத்தின் போது, பாபா அவரது உத்தரவுகளைப் பற்றிக் கூறுகையில், **"எதையும் விருப்பத்துடன், தயக்கமின்றி, சந்தேகத்திற்கு இடமின்றி செய்யத் தயாராக இருங்கள்"** என்று வலியுறுத்தினார். மேலும் மண்டலிக்கு, சில வழிமுறைகளை வழங்கிய பின்பு, பொது உரையாடலின் போது, பாபா தனது போதனைகள் மற்றும் செயல்பாடுகளின் சில அம்சங்களை விளக்கினார்:

**கிழக்கு, மேற்கத்திய கண்டங்கள் இரண்டிற்கும் பொருத்தமான 'புதிய சிந்தனை மையம்' ஒன்றை நிறுவ விரும்புகிறேன். எனது கடந்தகால நடவடிக்கைகள், போதனைகள் மற்றும் செயல்பாடுகளை நீங்கள் மதிப்பாய்வு செய்தால், அவை எல்லா மதங்களின் கூறுகளையும் ஏதோ ஒரு வகையில் கொண்டிருப்பதைக் காண்பீர்கள்; இயேசு, ஸொராஸ்டர், புத்தர், கிருஷ்ணா, முஹம்மது போன்ற அனைத்து பெரிய தீர்க்கதரிசிகளின் போதனைகளையும் அவை ஒன்றிணைக்கின்றன.**

எனது போதனைகள் மற்றும் செயல்பாடுகளை நீங்கள் உற்று நோக்கினால், உலக விவகாரங்களில் ஈடுபாடு, அதே வேளையில், பட்டும் படாமலும் பற்றற்று இருக்கும் தன்மை இரண்டையும் நீங்கள் காண்பீர்கள் - அதாவது விளையாட்டு, துறவறம், சைவ உணவு, சில சமயங்களில், மேற்கத்திய நவீன ஆடைகளை அணிவது மற்றும் கிழக்கத்திய சந்நியாச வாழ்க்கை வாழ்வது போன்றவை. பொருள் சார்ந்த உலகமும் ஆன்மீகமும் இரண்டறக் கலந்தவை. நான் நவீன பாணியில் மேற்கத்திய உடை அணிய சுதந்திரம் அளிக்கிறேன், மேலும் பெண்களுடன் கலந்துரையாட அனுமதிக்கிறேன், ஆனால் அவர்களைத் தொடக்கூடாது என்ற கடுமையான கட்டுப்பாட்டுடன் - என்னிடம் கேட்காமல் செய்தால் மரண தண்டனை என்ற கண்டிப்புடன் உங்களை சுதந்திரமாக இருக்கச் செய்கிறேன்.

கிழக்கு, மேற்கு இரண்டிலும் என்னுடைய செயல் விளைவுகளை ஏற்படுத்த முடியும். அண்மையில் நவ்ஸாரியில் மக்கள், என் அருகில் இருக்கத் துடிக்கும் அவர்களின் மனமலர்ச்சியைக் கண்டீர்கள். மேற்கத்திய உலகமும் என்னைப் பார்க்க அது போன்ற பக்தியும் உற்சாகமும் கொண்டிருக்கும்.

உண்மையில் அவர்கள், நாம் சந்திக்கும் நேரத்தை மணி அளவில் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்!

ஏற்கனவே எனது தொடர்பில் வந்து, மனநிலையில் பெரிய மாற்றம் கண்டவர்கள், மேலும் என்னால் ஈர்க்கப்பட்டவர்கள் அனைவரும் சமுதாயம், உலகம் இவற்றுடன் தொடர்பில்லாத துறவிகளோ, கன்னியாஸ்திரிகளோ அல்ல, பெரும் அந்தஸ்தும் செல்வாக்கும் படைத்த சமூகத்தில் நல்ல நிலையில் இருப்பவர்கள்; லண்டன், நியூயார்க் போன்ற நகரங்களில் ஆடம்பரமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்.

நாம் மேற்கத்திய நாடுகளில் இருக்கும் வேளையில், மிகவும் எச்சரிக்கையாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள், கடமைக்கான எந்த ஓர் அழைப்பிற்கும் பதிலளிக்கத் தயாராக இருங்கள். எல்லா சூழ்நிலைகளிலும், உண்ண நல்ல உணவு, தூங்க படுக்கைகள் இருந்தாலும், இல்லையென்றாலும், ஒருவேளை நீங்கள் உண்ணாவிரதம் இருக்க நேர்ந்தாலும் அந்த சூழலிலும் மகிழ்ச்சியாக இருங்கள். என் முன்னால் மிகப் பெரிய பணி உள்ளது, அதைக் குறித்து உங்களுக்கு எதுவும் தெரியாது. மேற்கத்திய நாடுகளில், எனது மாபெரும் பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரே நீங்கள்; மேலும் அங்கு வாழும் மக்கள் மிகவும் புத்திக் கூர்மையானவர்கள்.

மார்ச் 31 அன்று, இரண்டு நாட்களுக்குப் பிறகு, மெஹர் பாபா மீண்டும் விளக்கினார்:

மண்டலியில் மூன்று வகை: உதவி செய்பவர்கள், சுமையாக இருப்பவர்கள் மற்றும் தடையாக இருப்பவர்கள்.

என்னைத் தூக்கி, சுமந்து செல்வோர் சிறந்த உதவியாளர்கள். என்னை, ஒருவேளை, தூக்க முடியாமல் இருப்பவர்கள், ஆனால் எனக்கு

**அவர்களுடைய தோழமையை வழங்குபவர்கள், எனது பணியில் உதவுகிறார்கள், மேலும் பல உதவிகளையும் செய்கிறார்கள்.**

**என்னைத் தூக்க முடியாதவர் மேலும் பிடிவாதமாக இருப்பவர், ஆனால் நான் அவரைத் தூக்க அனுமதிக்க மறுப்பதும் ஒரு சுமை.**

**'தடங்கல் பேர்வழி' என்பவர், நான் அவரைத் தூக்கவும் அனுமதிக்காமல், எனக்குத் தோழமையும் வழங்காமல், அதே வேளையில், அதற்கு மாறாக எனது கையைப் பின்னாலிருந்து இழுத்து, என்னைத் தடுத்து, நான் அவரைத் தூக்க முயற்சிக்கும்போது, என்னுடன் வீண்வம்பு செய்யவும் தயங்கமாட்டார்.**

அன்று மாலை, பாபாவும் மண்டலியும் எகிப்து நாட்டின் 'போட் ஸெட்' துறைமுகத்திற்குச் சென்று, உணவகம் ஒன்றில் இரவு உணவருந்தினர். வயிற்றுக் கோளாறு காரணமாக, பாபாவால் அதிகம் உண்ண முடியவில்லை; இருந்தும் உரிமையாளர் அதிக கட்டணம் வசூலித்ததால், சிறு சலசலப்பு ஏற்பட்டது. பாபா, சற்று அதிருப்தியுடன் காணப்பட்டார். அப்போது பாபா ஒரு 'சிறந்த' சிறுவனை அழைத்து வருமாறு சாஞ்சியிடம் கூறினார். ஒரு வழிகாட்டியின் உதவியுடன் இளைஞன் ஒருவனை அழைத்து வந்தார். ஆனால் பாபா, அவனை ஏற்றுக்கொள்ளவில்லை. அன்று நள்ளிரவில் கப்பல் பயணம் தொடர்ந்தது.

மும்பையில் வழங்கப்பட்ட நேரடி பேட்டியின் விபரங்கள் குறித்த 'அஸோஸியேட்டட் பிரஸ்' (ASSOCIATED PRESS) செய்தி வெளியீடுகள் காரணமாக, மெஹர் பாபாவின் பயணம், இந்த முறை பரவலாக விளம்பரப்படுத்தப்பட்டது.

கப்பலில் பயணம் செய்த ஒரு சிலர் மெஹர் பாபாவைப் பற்றி அறிந்திருந்தனர். ஆனால் அவர் பொதுவாக எவரையும் சந்திக்கவில்லை. அவர் '**மெட்ராஸ் தியோஸொஃபிகல் ஸொஸைட்டி**'யில் (MADRAS THEOSOPHICAL SOCIETY) பணிபுரியும் பிரபல பிரிட்டிஷ் சமஸ்கிருத அறிஞர், பேராசிரியர் எர்னஸ்ட் ஈ. உட் (ERNEST E. WOOD) என்பவரை மட்டும் சந்தித்தார், அவருக்கு ஆன்மீகத்தின் கருப்பொருளை பாபா விளக்கினார். "**பரிபூரணமான நிலை நல்லது, தீயது இரண்டையும் உள்ளடக்கியது, ஆனால் இரண்டிலிருந்தும் விலகி இருப்பது. பரிபூரணம், பொருள் மற்றும் ஆன்மீக அம்சங்களைத் தழுவுகிறது, ஆனால் இரண்டிற்கும் அப்பாற்பட்டது.**"

மெஹர் பாபாவை இந்திய குருநாதர் என்று பல செய்தித்தாள்கள் குறிப்பிட்டதால், மக்கள் விரைவில் அவரைப் பற்றி (மால்கம் ஸ்க்லோஸ் மூலம்) தெரிந்து கொண்டனர். 'ஃபாக்ஸ்-ஹர்ஸ்ட்' மற்றும் பாரமவுண்ட்' (FOX-HEARST AND PARAMOUNT) திரைப்பட நிறுவனங்கள் பாபா வெனிஸ் (VENICE) நகரம் வரும்போது, அவரின் காணொளி படம் ஒன்றை எடுக்க அனுமதி கோரினர். பாபா பதில் எதுவும் அளிக்காமல், ஏப்ரல் 4ஆம் நாள், வெனிஸில் இறங்கி, அமைதியாக ஹோட்டல் இன்டர்நேஷனலுக்குப் (HOTEL INTERNATIONAL) புறப்பட்டார், அங்கு இனிட் கோர்ஃப், பாபா மற்றும் மண்டலிக்குத் தங்குமிடங்களை ஏற்பாடு செய்திருந்தார்.

பயணத்தின் போது, பாபாவைப் பற்றிய பல விஷயங்களை, இளம் பெண் ஐலீனுக்கு எடுத்துக்கூறும் முயற்சியை மண்டலி தொடர்ந்தனர். ஆனால் அவர் ஆர்வம் காட்டத் தொடங்கிய நேரத்தில், அது பயனில்லை என்று பாபா கூறினார். ஐலீன் ஒரு தூய்மையான, அப்பாவி இளம் பெண், ஆனால் சற்று மந்தமானவர்', பாபாவின் உதவியாளர் பணிக்குப் பொருத்தமற்றவர். வெனிஸிலிருந்து ஐலீனை மும்பைக்குத் திருப்பி அனுப்ப பாபா முடிவு செய்தார். பாபா இதை அறிவித்தபோது, ஆதி ஜூனியர் அந்த இளம் பெண்ணுக்காகப் பரிந்து பேசி, அவர் பொறுப்பை உணர்ந்ததாகக் கூறினார். "பாபா, நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" ஆதி, பாபாவிடம் கேட்டார். "நீங்கள் அவளுக்கு அனைத்து விஷயங்களிலும் உறுதியளித்தீர்கள்: 'நான் உன்னை உலகம் முழுவதும் அழைத்துச் செல்வேன்,' என்று நீங்கள் கூறினீர்கள். ஆரம்பத்திலிருந்தே, அவளுடைய தந்தை இதை விரும்பவில்லை. என்னை நம்பகமானவன் என்று நினைத்ததால் அவளுடைய தாயார் இதற்கு ஒப்புக்கொண்டார். இது சரியானதல்ல; குறைந்தது ஐரோப்பாவையாவது அவள் பார்க்கட்டும்."

ஆதி ஜூனியர் மிகவும் தீவிரமான தொனியில் பேசினார், இறுதியில் பாபா ஒப்புக்கொண்டார். **"ஐரோப்பாவில் எங்கே?"** என்று பாபா கேட்டார்.

"குறைந்தது பாரிஸ்," ஆதி பதிலளித்தார். "நீங்கள் அவளைத் திருப்பி அனுப்புவதற்கு முன்னர், அவள் பாரிஸ் நகரைப் பார்க்கட்டும்." எனவே சுற்றுப்பயணத்தில் டிக்கெட்டுகளை நிர்வகித்து வந்த சாஞ்சி, ஆதி ஜூனியர், ஐலீன் இருவரையும் வெனிஸ் ரயில் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, பாரிஸ் நகருக்கு நேரடியாகச் செல்லும் ரயிலில் அனுப்பிவைத்தார். பின்பு நடந்ததை ஆதி ஜூனியர் விவரித்தார்:

மிலான் (MILAN) ரயில் நிலையத்தில் நான் சந்தித்த மிகப் பெரிய சோதனை. பெரிதாக நீண்டு, அகன்ற ரயில் நிலையம். இருவரும் கடும் குளிரால் பரிதாபமாக இருந்தோம். நடைமேடை உணவகத்திலிருந்து கா∴பி வாங்கி வரும்படி ஐலீன் என்னிடம் கேட்க, நானும் கீழே இறங்கினேன், ஆனால் நான் திரும்பிவரும் முன், ரயில் நகரத் தொடங்கி, விரைவாக வெளியேறியது!

நான் கிட்டத்தட்ட இதய செயலிழப்பால் உயிரை விட்டுவிட்டேன். "என் கடவுளே! அந்தப் பெண் ரயிலில் இருக்கிறாள், அவள் எனது பொறுப்பு" என்று நான் நினைத்தேன். "அனைத்து பொருட்களும் அவளிடம் உள்ளன; எனது பாஸ்போர்ட் ஆவணங்களும் அதில்தான் இருக்கிறது." என்னிடம் பணம் எதுவும் இல்லை; இத்தாலிய மொழியும் தெரியாது. ரயில் சென்றுவிட்டது; நான் முற்றிலும் உதவியற்றவனாக உணர்ந்தேன்.

நான் நடைமேடையில் அமர்ந்து அழ ஆரம்பித்தேன். விரக்தியில், நான் பாபாவிடம், "நீங்கள் என்னை என்ன செய்கிறீர்கள்? அவள் எனது பொறுப்பில் இருக்கிறாள், இப்போது அவள் பொருட்கள் மற்றும் பணத்துடன் சென்றுவிட்டாள். நான் தவிக்கிறேன். என்னால் இத்தாலியன் மொழியும் பேச முடியாது. இப்போது நான் யாரை அணுகுவேன்?" என்று மனதளவில் வினவினேன்.

இந்த நரக வேதனையில் சுமார் பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் கடந்த பின்பு, ரயில் திடீரெனத் திரும்பி வந்தது. எப்படி, ஏன் என்று எதுவும் புரியவில்லை!

பின்னர், இரவின் நடுவில் மூன்று அல்லது நான்கு முறை ரயில்களை மாற்ற வேண்டியிருந்தது. இரவெல்லாம் சாஞ்சியை, சாபமிட்டுத் திட்டிக் கொண்டிருந்தேன்.

இருவரும் பாரிஸ் நகரைச் சுற்றிப் பார்த்த பின்னர், ஆதி ஜூனியர், ஐலீனை ரயிலில் மார்ஸெயில்ஸ் (MARSEILLES) நகருக்கு அழைத்துச் சென்று, இந்தியாவிற்குப் புறப்பட இருந்த கப்பலில் அனுப்பிவிட்டு, லண்டனில் பாபாவை சந்தித்தார். ஐலீன் நெட்டில்டன் பாபாவை மீண்டும் சந்திக்கவில்லை.

இதற்கிடையில், 1932, ஏப்ரல் 5ஆம் நாள் வெனிஸ் நகரில், மெஹர் பாபா, ஸெயின்ட் மார்க்ஸ் சதுக்கத்திற்குச் (ST. MARK'S SQUARE) சென்றார். மதிய வேளையில் அனைவரும் கிராண்ட் (GRAND) கால்வாயின் கீழே பிரபலமான காண்டுலாவில் (GONDOLA) படகு சவாரி செய்தனர். பெஹராம் பல புகைப்படங்களை எடுத்தார்.

மறுநாள் காலையில், பாபா வெனிஸிலிருந்து மிலானுக்கு ரயிலில் புறப்பட்டார், இனிட் உடன் சென்றார்.

அன்று மதியம் மிலான் நிலையத்தில் ரயில் நின்றபோது, கடந்த ஆண்டு பாபாவை சந்தித்த ஜெனோவா நகரில் வாழும் திருமதி கியூன்ஸ் (Mrs. CUNES OF GENOA), தனது மகனுடன் பாபாவை வரவேற்க வந்தார். அவர் பாபாவிடம், "இந்த மகத்தான நாளை நான் எனது வாழ்க்கையில் ஒருபோதும் மறக்க மாட்டேன். உலகில் எதற்காகவும் இதை நான் தவறவிட்டிருக்க மாட்டேன்!" என்றார். காரில் நகரை விரைவாகச் சுற்றி வந்த பின்பு, பாபாவும் மண்டலியும் அன்று பிற்பகல் ரயிலில் பயணத்தைத் தொடர்ந்தனர்.

கிட்டி டேவி, அவரது சகோதரர் எர்னஸ்ட், குயன்டின் ஆகியோர் 7ஆம் தேதி மதியம் ஃபோக்ஸ்டனில் பாபா மற்றும் மண்டலியை சந்தித்தனர். பாபா திடீரென லண்டனுக்கு ரயிலில் செல்வதற்கான பயண திட்டத்தை மாற்றினார்.

'பாரமவுண்ட் ஃபில்ம் கம்பெனி' (PARAMOUNT FILM COMPANY) மெஹர் பாபாவை, விக்டோரியா ரயில் நிலையத்தில் திரைப்படம் எடுக்க ஏற்பாடு செய்திருந்தது, ஆனால் பாபா, அதைத் தவிர்க்கும் எண்ணத்தில், ஆதி சீனியர், சாஞ்சி, பெஹராம் ஆகியோருடன் காரில் லண்டனுக்குச் சென்று, அங்கு அவர் டேவியின் வீட்டில் தங்கினார். டாக்டர் கனி, காக்கா, எர்னஸ்ட் ஆகியோர் ரயிலில் பயணத்தைத் தொடர்ந்தனர்.

காரில் செல்லும் போது, பாபா, குயன்டினிடம், "**எதிர்காலத்தில் நீங்கள் எனக்கு ஏராளமான பணிகளைச் செய்ய வேண்டும்**" என்று கூறினார்.

குயன்டின் உடனடியாக, "எவ்வளவு விரைவில்?" என்று கேட்டார்.

"**அதி விரைவில்**" என்று பாபா உறுதியளித்தார்..

வழியில் தேநீர் அருந்தி களைப்பாறும் வேளையில், இதைத் தக்க தருணம் என்று நினைத்து, குயன்டின், பாபா நேரடியாக டெவன்ஷருக்குச்

செல்லாமல் லண்டன் சென்றது குறித்து மெரடித் ஸ்டாருக்கும், பிற தோழர்களுக்கும் இடையே சற்று முறுகல் நிலை ஏற்பட்டதை விளக்கினார். பாபா, ஏப்ரல் 17ஆம் நாள், டெவன்ஷர் மையத்திற்குச் செல்வதற்கு முன்னர், ஏழு நாட்கள் டேவிஸ் இல்லத்திலும், இரண்டு நாட்கள் கிம் டோல்ஹர்ஸ்ட் வீட்டிலும் தங்கவிருப்பதைத் திட்டவட்டமாகக் கூறினார்.

அன்று இரவு ஏழு மணிக்கு, அவர்கள் லண்டன் நகரில் நேராக, ரஸ்ஸல் சாலையைச் சென்றடைந்தனர். பறவைகள் அனைத்தும் அங்கே பறந்து வந்தன. காலம் இதை இப்படிப் பார்த்தது: “அழகான பூந்தோட்டத்தில் பறவைகள் எப்போதும் திரண்டு வருகின்றன! பறவைகள் கூடி, பிரியமானவரின் இறை கீதத்தைப் பாடி, இந்த ஆங்கில தோட்டத்தின் காற்றில் கலந்தது.”

கிட்டி, ஸில்லா, மார்கரெட் கிராஸ்க், டிலியா, கிம் ஆகியோர் இங்கே தங்கியிருந்தனர், டிலியாவின் சகோதரி மின்டா, மார்கரெட்டின் வணிக கூட்டாளர் மேபெல், மார்கரெட் ஸ்டாரின் சகோதரர் கென்னத் ரோஸ், சார்லஸ் பர்டம், டாம் ஷார்ப்லி, குயன்டின் அனைவரும் தினமும் வருகைத் தந்தனர்.

ஸ்டிஃபனி (STEPHANIE), ஹால் ஹாகட் (HALL HAGGARD) என்ற தம்பதியரை, அவர்களின் சிறிய மகன் ஜானுடன் (JOHN) பாபாவை சந்திக்க டிலியா அழைத்து வந்தார். கிட்டியின் சிறு வயது தோழியும், டிலியாவின் நண்பருமான ஸ்டிஃபனி, பதினான்கு வயதில் பாபாவைக் கனவில் பார்த்ததாகக் கூறினார். அந்தப் பெண்மணியும் அவரது கணவரும் பாபாவால் பெரிதும் ஈர்க்கப்பட்டனர்.

1932, ஏப்ரல் 8ஆம் நாள் பிற்பகலில், கிட்டி, மார்கரெட், டிலியா, கிம், மின்டா, குயன்டின் மற்றும் பலர் பாபாவுக்காக வீட்டின் கீழ் மண்டபத்தில் குறுகிய நகைச்சுவை நாடகம் ஒன்றை அரங்கேற்றினர். மார்கரெட் நடனமாட, பிறர் பாபாவை, பல்வேறு வழிகளில் மகிழ்வித்தனர். பெஹராம் சித்தாரையும், ஆதி சீனியர் ஹார்மோனியமும் இசைத்தனர்.

மெஹர் பாபா லண்டனுக்கு வந்த பின்பு, திரைப்படம் எடுப்பதைத் தவிர்த்திருந்தாலும், ‘பாரமவுண்ட் ஃபிலிம் கம்பெனி’ (PARAMOUNT FILM COMPANY) அவரை விடாமல் பின்தொடர்ந்தது; இறுதியில் காணொளி நேரடி பேட்டிக்கான அவர்களின் கோரிக்கையை, பாபா ஏற்றுக்கொண்டார். அன்று மாலை 5:00 மணி முதல் 6:00 மணி வரை, டேவியின் வீட்டுத் தோட்டத்தில் படப்பிடிப்பு நடந்தது. பாபா வெள்ளை ஸத்ரா ஒன்றை அணிந்திருந்தார். படப்பிடிப்பின் போது, பாபா எழுத்துப்பலகை வழியாக வழங்கிய செய்தியை, சார்லஸ் பர்டம் எடுத்துரைப்பது போல நடித்தார். மறுபடியும் ஆதி சீனியர், பெஹராம் இருவரும் இசைக்கருவிகளை மீட்டினர்.

பாரமவுண்ட் நியூஸ் ரீலுக்கான மெஹர் பாபாவின் செய்தி பின்வருமாறு:

**நான் மேற்கத்திய நாடுகளுக்கு வருவது, புதிய மதங்கள் அல்லது ஆன்மீக சமூகங்கள் மற்றும் அமைப்புகளை நிறுவுவதற்காக அல்ல; அதே வேளையில், மதத்தை அதன் உண்மையான அர்த்தத்தில் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே அடிப்படை நோக்கம். உண்மையான மதம்**

**என்பது சரியான மனோபாவத்தை வளர்த்துக் கொள்வதில்தான் உள்ளது, இது இறுதியில் - பிரபஞ்சம் முழுவதும் எல்லையில்லா இறைவன் ஒருவன் இருப்பதையே காணும்; ஒருவர் உலகில் வாழும் வேளையில், அத்துடன் ஒன்றிவிடாமல், அனைவருடனும், அனைத்துடனும் இணக்கமாக இருக்கச் செய்யும்; ஒருவர் அனைத்து உலக கடமைகள், விவகாரங்களில் கலந்துகொள்ளும் நேரத்தில், அவற்றின் எல்லா முடிவுகளிலிருந்தும் முற்றிலும் விலகியிருக்கச் செய்யும்; கலை, அறிவியல் இரண்டிலும் ஒரே தெய்வீகத்தை ஒருவர் காணவும், மேலும் அன்றாட வாழ்க்கையில் மிக உயர்ந்த உணர்வு நிலையையும், பிரிக்க முடியாத ஆனந்தத்தை அனுபவிக்கவும் வழிவகுக்கும்.**

**உலகின் அனைத்து பெரிய, அங்கீகரிக்கப்பட்ட மதங்கள் மற்றும் மதங்களின் கட்டமைப்புகள் தடுமாறுவதை நான் காண்கிறேன். மேற்கத்திய நாடுகள் குறிப்பாக, பொருள் வளங்களை நோக்கி அதிகம் சாய்ந்திருக்கின்றன; இது, நம் அறிவுக்குத் தெரிந்து, விழிப்புணர்வை அடைந்த காலத்திலிருந்து போர்கள், கொள்ளைநோய், நிதி நெருக்கடிகளைக் கொண்டு வந்துள்ளது. பொருள்முதல்வாதத்தை நான் வெறுத்து, நிராகரிப்பதாகப் புரிந்து கொள்ளக்கூடாது; இது ஒன்றுதான் முக்கிய இலக்காகக் கருதப்படக்கூடாது, ஆனால் இறுதி இலக்குக்கு ஒரு வழிமுறையாக இருக்க வேண்டும் என்று நான் கூறுகிறேன்.**

**உலகின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், பொற்காலத்தை நிலைநாட்டுவதற்கும் 'லீக் ஆஃப் நேஷன்ஸ்'** (LEAGUE OF NATIONS) **போன்ற ஒழுங்கமைக்கப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்கத்திய நாடுகளின் சில பகுதிகளில், குறிப்பாக அமெரிக்காவில், மதத்தின் உண்மைத்தன்மையை அறிந்து கொள்ளாமல், சத்தியம் மற்றும் யதார்த்தத்தைப் பற்றி அறிவுபூர்வமாகப் புரிந்துகொள்ள முயற்சிக்கப்படுகிறது, இது இருளில் ஒன்றைத் தேடுவது போன்றது.**

**ஒரே சரத்தில் கோர்க்கப்பட்ட மணிகள் போல், அனைத்து மதங்களையும், வழிபாட்டு முறைகளையும் ஒன்றாகக் கொணர்ந்து, தனிப்பட்ட மற்றும் கூட்டுத் தேவைகளுக்குப் புத்துயிர் அளிக்க விரும்புகிறேன். இதுவே மேற்கத்திய நாடுகளுக்கான எனது பணி. கவலை கொண்டிருக்கும் இந்த உலகத்தில், நான் கூறும் அமைதியும் நல்லிணக்கமும் வெகு தொலைவில் இல்லை.**

'பாரமவுண்ட் நியூஸ் ரீல்' மூலமாக மெஹர் பாபாவின் செய்தி, உலகின் எல்லா மூலை முடுக்குகளிலும் வெளியிடப்பட்டது. இது திரையரங்குகளிலும் காட்டப்பட்டதால், அவரைப் பற்றி, பலர் தெரிந்து கொள்ள வாய்ப்பாக அமைந்தது.

அடுத்த நாள், சார்லஸ் பர்டம் பாபாவிடம் ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை அளித்தார், "உங்களை சந்தித்த பின்பு, நான் முற்றிலும் மாறுபட்ட மனிதனாகிவிட்டேன்; பிறருடன் பணிவுடன் நடந்துகொள்ள முயற்சிக்கிறேன், சாதாரண சூழ்நிலைகளில், நான் ஆத்திரத்தில் விரும்பத்தகாத விஷயங்களைச்

சொல்லியிருக்கக்கூடும். இது எனக்கு ஒரு புதிய அனுபவமாக உள்ளது, இது உங்கள் தொடர்பில் வந்த பின்பு தானாகவே நிகழ்வதுபோலத் தெரிகிறது."

அதற்கு பாபா பதிலளிக்கையில், "**கடந்த ஆண்டு நீங்கள் என்னை முதன்முதலில் சந்தித்ததிலிருந்து, நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன். நீங்கள் எனக்காகப் பணிபுரிவீர்கள். உங்களுக்கு என்னுடன் நெருக்கமான, ஆழமான தொடர்புகள் உள்ளன, அதனால்தான், நீங்கள், நேற்று மாலை எடுக்கப்பட்ட காணொளி நிகழ்ச்சியில் என்னுடன் இருந்தீர்கள்**" என்றார்.

இந்த மேற்கத்திய விஜயத்தின் போது, குறிப்பாக, செய்தித்தாள்களுக்கு இவை குதூகலமான நாட்கள்; இந்திய இரட்சகர், தீர்க்கதரிசியைப் பற்றித் தினமும் கட்டுரைகள் வெளிவந்த வண்ணம் இருந்தன. சிலர் பாபாவை நேரடி பேட்டிகள் மற்றும் புகைப்படம் எடுக்கச் செய்தியாளர்களை அனுப்பினர்.

பிரபல எழுத்தாளரும் லண்டன் ஸண்டே எக்ஸ்பிரஸ் (LONDON SUNDAY EXPRESS) பத்திரிகை ஆசிரியரும் (மதக் கட்டுரைகளில் நிபுணத்துவம் பெற்றவர்) சார்லஸ் பர்டமின் நண்பருமான ஜேம்ஸ் டக்ளஸ், 64, (JAMES DOUGLAS) மெஹர் பாபாவை சோதனைக்கு உள்ளாக்கும் பல 'தந்திரமான' கேள்விகளை உள்ளடக்கிய நீண்ட நெடிய பட்டியல் ஒன்றை தயாரித்தார். அவர் இவ்வாறு நினைத்தார்: "மெஹர் பாபாவை முன் அறிவிப்பின்றி அணுகுவது மிகவும் நல்லது, ஏனெனில் அவரை தயார் படுத்திக்கொள்ளப் போதிய நேரமில்லாமல் சிக்கலில் மாட்டி விடுவார். நான் அவரைப் பொதுமக்களுக்கு அம்பலப்படுத்துவேன், அதனால் அவர்கள் இந்திய குருநாதர்கள் என்று அழைக்கப்படும் மர்மவாதிகளிடம் எச்சரிக்கையாக இருந்து சிக்கிக் கொள்ளாமல் தப்பிவிடுவார்கள்!"

எனவே அவர் 1932, ஏப்ரல் 9ஆம் நாள், ரஸ்ஸல் சாலையில் மிகவும் எதிர்பாராத விதமாகத் தோன்றினார். பாபா முதல் மாடியில் இருந்தார், லண்டனின் ஏழை மக்கள் வாழும் பாகங்களுக்கு விஜயம் செய்யவிருந்தார். பயணம் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டு, கார்கள் தயாராகக் காத்திருந்தன. அப்போது பாபா ஆங்கில நாட்டு ஆடைகளை அணிந்திருந்தார், ஆனால் டேவிஸ் இல்லத்தில் அவர் தனது இந்திய உடையான ஸத்ரா, காட்டன் காலுறைகள் போன்றவற்றை அணிவது வழக்கம்.

மண்டலி, ஜேம்ஸ் டக்ளஸை வாசலில் சந்தித்து, பாபா வெளியே செல்லத் தயாராக இருப்பதாகவும், அடுத்த நாள் வருமாறும் கேட்டுக் கொண்டனர். ஆனால் டக்ளஸ், "நான் அவரை ஒரு நிமிடம் மட்டுமே பார்க்க விரும்புகிறேன்" என்றார்.

பாபாவிற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதும், ஆச்சரியப்படும் விதமாக, அவர் நிருபரை சந்திக்க ஒப்புக்கொண்டார். பாபா, அவர் அணிந்திருந்த ஆங்கில ஆடைகளைக் கழற்றிவிட்டு, தனது அறையில் ஒரு சாதாரண ஸத்ரா, கழுத்தில் ஒரு நீல பட்டுத் துண்டும் கட்டிக்கொண்டு அமர்ந்திருந்தார். டக்ளஸ் மேலே வந்ததும், வாசலில் நின்று, அங்குமிங்கும் பார்த்தார். எழுத்துப்பலகையை வாசிக்க பாபாவின் அருகில் நின்று கொண்டிருந்த சாஞ்சி, டக்ளஸை உள்ளே

வருமாறு அழைத்ததும், அவரை ஏதோ ஒரு சக்தி ஆட்கொண்டது. அவர் திடுக்கிட்டு, மிக்க சிரமத்துடன், பாபாவை நோக்கி உள்ளே நுழைந்தார். 'அவரது உடலில் மின்சாரம் ஊடுருவிப் பாய்வது போல் ஓர் உணர்வு' என்று பின்னர் அவர் கூறினார். நெற்றியில் ஒரே வியர்வை; அடிக்கடி தனது புருவத்தைத் துடைத்துக்கொண்டார். குளிர்காலமாக இருந்தும், உடலெல்லாம் வியர்வை, சற்று விசித்திரமாக இருந்தது.

சாஞ்சி அவரை மீண்டும் உள்ளே அழைத்தார். ஜேம்ஸ் டக்ளஸ் பேச முயன்றார், ஆனால் அவரது உதடுகள் நடுங்கின.

டக்ளஸ் தொடர்ந்து முயற்சித்தார், இறுதியாக, கைக்குட்டையால் நெற்றியைத் துடைத்த வண்ணம், "எனக்கு என்னவாயிற்று? நீங்கள் ஏதாவது சொல்ல முடியுமா?" என்றார்.

பாபா, டக்ளஸை நாற்காலியில் அமருமாறு சைகையால் தெரிவித்து, புன்னகையுடன், "**அஞ்சாதீர்கள். அருகில் வந்து அமருங்கள்**" என்றார். சூரியனின் புன்முறுவலைக் கண்டு டக்ளஸ் நடுங்கி தன்னையே மறந்துவிட்டார்.

"நான் இங்கே ஒரு மிகப்பெரிய சக்தியை உணர்கிறேன்! எனக்கு என்ன நடக்கிறது என்று தயவுசெய்து சொல்லுங்கள்? இந்த சக்தி எங்கிருந்து வெளிப்படுகிறது என்று நீங்கள் கூற முடியுமா?" என்று கதறினார்.

பாபா மீண்டும் தனது அருகில் இருந்த நாற்காலியில் அமருமாறு சைகையால் தெரிவித்தார், மேலும் ஜேம்ஸ், "எனக்கு என்ன நடக்கிறது? நீங்கள் எதுவும் சொல்லமாட்டீர்களா?" என வினவினார்.

பாபா புன்னகையுடன் பதிலளித்தார், "**அதை நான் உங்களுக்கு, பின்பு காண்பிப்பேன். முதலில் நாற்காலியில் அமர்ந்து, நீங்கள் எதையேனும் கேட்க விரும்பினால் கேளுங்கள். எல்லாவற்றையும் நான் உங்களுக்கு விளக்குகிறேன், ஆனால் முதலில் நீங்கள் ஏன் வந்தீர்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.**"

"நான் உங்களுடன் நீண்ட நேரம் பேச வந்துள்ளேன், மேலும் சில கேள்விகளைப் பற்றித் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆனால் எனக்கு என்ன நடக்கிறது?" மீண்டும் வினவினார்.

"**பயப்படாதீர்கள், நீங்கள் எதை வேண்டுமானாலும், பயமின்றி என்னிடம் கேட்கலாம், நான் உங்களுக்கு பதில் தருகிறேன்**" என்று பாபா ஆறுதலாக அவரிடம் கூறினார்.

மெஹர் பாபாவின் இந்த அன்பான வார்த்தைகளைக் கேட்டு ஜேம்ஸ் டக்ளஸ் ஆறுதலடைந்து, இருக்கையில் அமர்ந்தார். பின்னர், ஒரு வழியாகத் தன்னை சீர்படுத்திக் கொண்டு, தனது கேள்விக் கணைகளை ஒவ்வொன்றாக ஏவத் தொடங்கினார்:

டக்ளஸ் பாபாவிடம், "உங்கள் உண்மையான பெயர், தயவுசெய்து?"

"**மேர்வான் ஷெரியார் ஈரானி.**"

டக்ளஸ் சாஞ்சியிடம், "தயவுசெய்து எழுத்துப்பலகையை நீங்கள் படிக்க வேண்டாம். அதை நானே படிக்கிறேன். பாபா சொல்வதை நான் நேரடியாக அறிய விரும்புகிறேன்."

“மகிழ்ச்சியுடன்,” என சாஞ்சி சொல்லிவிட்டு, விலகி நின்றார்.

டக்ளஸ் எழுத்துப்பலகையைப் படிக்க முயன்றார். பாபா தனது விரல்களை மெதுவாக நகர்த்தி ஒவ்வொரு எழுத்தையும் சுட்டிக்காட்டி, “**எம்.எஸ். ஈரானி**” என்று எழுதினார்.

“குழப்பமாக உள்ளது,” டக்ளஸ் கூறினார்.

சாஞ்சி புன்னகையுடன் பதிலளித்தார், “என்ன குழப்பம்? பாபா அவரது பெயரை ‘எம்.எஸ். ஈரானி’ என்று ஒவ்வொரு எழுத்தாக உச்சரிக்கிறார். நீங்கள் ஏன் சந்தேகப்படுகிறீர்கள்?”

“நான் மீண்டும் முயற்சிக்கிறேன்,” என்று அவர் கூறினார்.

பாபா மீண்டும் எழுத்துப்பலகையில் தனது பெயரை எழுதினார், ஆனால் டக்ளஸால் அதைப் படிக்க முடியவில்லை. அவர் எழுந்து நின்று மீண்டும் முயற்சிக்க, பாபாவின் பின்னால் நகர்ந்தார், ஆனால் அவரால் முடியவில்லை. சாஞ்சி மீண்டும் “எம்.எஸ். ஈரானி” என்று எடுத்துக்கூறினார்.

டக்ளஸ், பாபாவிடம், “தயவுசெய்து வேறு சில வாக்கியங்களை எழுதுங்கள்” என்றார்.

பாபா உடனே, “**எனது பெயர்**...” என எழுதத் தொடங்கினார். டக்ளஸால் ‘எனது’ என்பதைத் தவிர வேறு எதையும் வாசிக்க முடியவில்லை.

”எனது பெயர் எம்.எஸ்.ஈரானி” என்று சாஞ்சி தூரத்தில் நின்றுகொண்டு வாசித்தார்.

“இவ்வளவு தூரத்திலிருந்து அவருடைய பலகையை எப்படிப் படிக்க முடியும்?” என்று டக்ளஸ் கேட்டார்.

எனக்கு அதைப் படித்த அனுபவம் உள்ளது, “என்று சாஞ்சி பதிலளித்தார்.

டக்ளஸ் உடனே சாஞ்சியின் அருகில் நின்று மீண்டும் எழுத்துக்களைப் படிக்க முயன்றார், ஆனால் முடியவில்லை.

மெஹர் பாபா மிகவும் பொறுமையாக, டக்ளஸ் படிக்கும் வரை பலகையில் விரலை நகர்த்திக் கொண்டிருந்தார், ஆனால் பல நிமிடங்கள் கடந்துவிட்டதால், அவரிடம், “**இப்போது, பலகையைப் படிப்பதில் மேலும் நேரத்தை வீணாக்காமல், விஷயத்திற்கு வாருங்கள். கொஞ்சம் நேரமே எஞ்சியுள்ளது!**” என்றார்.

டக்ளஸ் உடனே, “உங்கள் ஜாதி என்ன?” என்று கேட்டார்.

“**நான் ஓர் ஈரானி.**”

“நீங்கள் எங்கே பிறந்தீர்கள்?”

“**பூனாவில்.**”

“அதாவது இந்தியாவில். நீங்கள் எப்படி ஒரு ஈரானியாக இருக்க முடியும்?”

“**எனது பெற்றோர் பெர்சியர்கள்.**”

“நீங்கள் ஒரு ஸொராஸ்ட்ரியரா?”

“**நான் ஸொராஸ்ட்ரிய பெற்றோருக்குப் பிறந்தேன்.**”

“இன்று எந்த மதம் உயர்ந்ததாகக் கருதப்படுகிறது?”

**"ஒரே கடவுளை உணர்ந்து கொள்வதற்கான வெவ்வேறு பாதைகள் இருப்பதால், எல்லா மதங்களையும் சமமாக நான் கருதுகிறேன்!"**

"கிறிஸ்தவ மதத்தைப் பற்றி உங்கள் கருத்து என்ன?"

**"கிறிஸ்து கடவுளை உணர்ந்த ஒரு மேன்மையான ஆத்மா. எனவே அத்தகைய தெய்வீக மனிதரிடமிருந்து பெறப்பட்ட மதம், மேன்மையானதாக இருக்க வேண்டும்."**

"நீங்கள் எந்த மதத்தை நம்புகிறீர்கள்?"

**"நான் ஜாதி மதங்களுக்கு அப்பாற்பட்டவன். எல்லா மதங்களும் எனக்குச் சொந்தமானவை, ஆனால் எனக்கு எந்த ஜாதி, சமூகம் அல்லது மதத்துடனும் சிறப்பான உறவு எதுவும் இல்லை. நான் கடவுளோடு ஒன்றிணைந்து இருக்கிறேன், கடவுள் ஒவ்வொன்றிலும், ஒவ்வொருவரிடமும் இருக்கிறார்."**

"நீங்கள் ஒரு மஹாத்மாவா?"

**"மஹாத்மா என்றால் என்ன? மஹாத்மா என்று அழைக்கப்படுபவர் யார் என்று சொல்லுங்கள்? ஆத்மாவை, உண்மைப்பொருளை அறிந்த ஒருவர் மஹாத்மா என்று அழைக்கப்படுகிறார். எனக்கு உண்மைப்பொருளைத் தெரியும்; நான் அதை அனுபவபூர்வமாக அறிகிறேன். உதாரணமாக, பல ஆண்டுகளாக நீங்கள் லண்டன் நகரில் வாழ்ந்து வருவதால், நீங்கள் அதைத் தெரிந்தும், அனுபவத்தில் அறிந்தும் இருப்பீர்கள்; அதேபோல, லண்டனைப் பார்க்காத, ஆனால் அதை அறிய விரும்பும் ஒருவர் மறைமுகமாக, ஒரு ஊடகம் மூலமாக அதை அறிய முடியும். நான் கூறுவது உங்களுக்குப் புரிகிறதா?"**

"நன்றாக" என்று டக்ளஸ் பதிலளித்தார்.

ஜேம்ஸ் டக்ளஸ் அவரது கேள்விகளைத் தொடர்ந்தார், "நீங்கள் காந்தியை அறிவீர்களா?"

**"ஆம், நாங்கள் ராஜ்புத்னாவில் சந்தித்தோம்."**

"உங்களுக்கு அரசியலில் ஆர்வம் உள்ளதா?"

**"நான் எந்த நெறிமுறைகள் அல்லது அறிவியல்கள் குறித்து கவலைப்படுவதில்லை; அதுபோலத்தான் அரசியலும், ஏனெனில் இறை ஞானத்தில் அனைத்தும் அடங்கியுள்ளன. அனைத்தும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இறை அறிவைப் பெற்றவர் எல்லாவற்றையும் அடையப் பெற்றுள்ளார்."**

"காந்தியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

**"அவர் ஒரு நல்ல ஆன்மா; கீதையை ஆழமாகக் கற்றறிந்தவர்; இறை ஞானத்தை அடைய ஆவலாக இருப்பவர்."**

"நீங்கள் ஓர் இறை ஞானியா?"

**"புத்தர், ஏசு, கிருஷ்ணா ஆகியோர் கடவுளோடு ஒன்றிணைந்து ஒன்றாகிவிட்ட விதத்தில் நானும் கடவுளோடு ஒன்றாக இணைந்துள்ளேன். அதேபோல, நான் கடவுள் நிலையில் வாழ்கிறேன். அவர்கள் கடவுளை அறிந்தது போல, நானும் அவரை அறிந்திருக்கிறேன்! நீங்களும் பிற**

**அனைவரும் கடவுளை அதே வழியில் அறிந்துகொண்டு அவருடன் ஒருவராக முடியும்!"**

டக்ளஸ் மீண்டும் முகத்தின் வேர்வையைத் துடைத்துக் கொண்டார். அவரது கேள்விகளுக்கு, மிக விரைவாக பதில்கள் அளிக்கப்பட்டன; பதில்கள் மிகவும் சுருக்கமாகவும், அறிவுக் கூர்மையானதாகவும் இருந்தன, அவர் திகைத்துப் போனார். சிறிது நேரத்திற்குப் பிறகு டக்ளஸ் கேள்விகளைத் தொடர்ந்தார்:

"உலகில் தீமை இருக்கிறதா?"

"**இல்லை, தீமை என்ற எதுவும் இல்லை**" என்று பாபா பதிலளித்தார்.

டக்ளஸ் திகைத்துப்போய், சிறிது நேரத்தில் "நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"**எங்கும் ஆனந்தத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை**."

டக்ளஸ் உற்சாகமாக இருக்கையிலிருந்து எழுந்து, கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார், "அது எப்படி இருக்க முடியும்?"

"**உண்மை அதுதான்**" என்று பாபா அவருக்கு உறுதியளித்தார்.

ஜேம்ஸ் டக்ளஸ் அமைதியாகி, இருக்கையில் அமர்ந்து, மற்றுமொரு கேள்வித்தாளைக் கையில் எடுத்தார். "அப்படியானால், திருட்டு, கொலை, கற்பழிப்பு, துரோகம், நேர்மையற்ற தன்மை, ஒழுக்கக்கேடு, சித்திரவதை போன்ற ஆயிரத்து ஒரு தீமைகளை நீங்கள் எவ்வாறு விளக்குகிறீர்கள்? இந்த துர்மார்க்கங்களை, தீமைகளாகக் கருத முடியவில்லையா?"

"**அந்தத் தேவையில்லை**."

"அப்படியானால் நீங்கள் அவற்றை எப்படி அழைக்கிறீர்கள்? அவை என்னவென்று கருதப்பட வேண்டும்?"

"**அவை நல்லது எனும் அளவுகோலில் அதிக அல்லது குறைந்த அளவில் இருக்கும்**."

இப்படியும் ஒரு யோசனையா? என்று டக்ளஸ் திடுக்கிட்டு நெற்றியில் கை வைத்தார்; மீண்டும் உணர்ச்சிவசப்பட்டு எழுந்து, பின்பு மெதுவாக அமர்ந்து, "ஓ, கடவுளே! எவ்வளவு அற்புதம்! கவிஞர்களும், மனோதத்துவ வல்லுனர்களும் இதை ஏன் இப்படி நேரடியான, புத்திசாலித்தனமான முறையில் விளக்க முடியவில்லை?" சிறிது நேரம் யோசித்துக்கொண்டே அவர் அமர்ந்தார்.

பாபா மேலும் விளக்கிக் கூறுகையில், "**நான் கூறியது போல், உலகில் பேரின்பத்தைத் தவிர வேறொன்றும் இல்லை. உலகம் தீமை என்று அழைப்பது நன்மையின் மிகக் குறைந்த அம்சமாகும்**."

"நிச்சயமாக, நிச்சயமாக," டக்ளஸ் அறிவித்தார். "எவ்வளவு எளிதானது! இதுபோன்ற எளிய விஷயத்தை மக்கள் ஏன் புரிந்து கொள்ள முடியாது என்பது ஆச்சரியமளிக்கிறது! இந்த எளிய உண்மையை உலகம் எப்போது புரிந்து கொள்ளும் என்பதை நீங்கள் எங்களுக்கு அறிவிக்க முடியுமா?"

"**அதன் பார்வையின் கோணம் மாறும்போது**."

"ஆனால் எப்போது?" என்று டக்ளஸ் கேட்டார்.

"**இது உள்ளளவில் நடக்கும் விஷயம்**," என்று பாபா கூறினார்.

“கடவுளுக்கே வெளிச்சம்! உலகம் எதிர்கொள்ளும் நுண்ணிய, ஆபத்தான சூழ்நிலையைப் பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? இன்று உலகின் நிதி நிலைமை என்னவென்றால், நாடுகள் ஒன்றுக்கொன்று கழுத்தை நெரிக்கத் தயாராக உள்ளன! அமைதியின்மை எல்லா இடங்களிலும் நிலவுகிறது. இந்த ஆபத்தான காலம் எப்போது முடிவடையும்? இந்த நிலைமை எப்போது சீராகும்?”

“**இதயத்தில் மாற்றம் ஏற்படும் வரை சரியாகாது**.”

“இதயத்தில் மாற்றம்? என்ன ஓர் இறைவனின் தீர்வு! ஆனால் இதயத்தில் மாற்றம் எப்போது நிகழும்?”

“**இது சுமார் ஒரு வருடம் கழித்து தொடங்கும்**.”

“கிறிஸ்து தனது வேலையை முடிக்க மூன்று ஆண்டுகள் ஆனது. உங்கள் வேலையை முடிக்க எவ்வளவு காலம் ஆகும்?”

“**முப்பத்து மூன்று ஆண்டுகள்**.”

ஜேம்ஸ் டக்ளஸ் தொடர்ந்து வினவினார் “உங்கள் ரகசிய செய்தி அல்லது சிறப்பு அறிவுரை ஏதாவது?”

“**அகந்தையை அழித்தல்**.”

ஆச்சரியத்தில் ஆழ்ந்த டக்ளஸ், தன்னுடன் வந்திருந்த தனது நண்பர் சர் டெனிஸன் ரோஸுடன் (Sir DENISON ROSS) கலந்து ஆலோசிக்க கீழ் மாடிக்குச் சென்றார்.

மறுபடியும் திரும்பி வந்த அவர், தான் கேட்க விரும்பிய கேள்விகளை இன்னும் கேட்கத் தொடங்கவில்லை என்று கூறினார். ஆனால் அதற்கு முன்னர், அவர் மீண்டும் கேட்டார், “இந்த அறையில் வியாபித்திருக்கும் மர்ம சக்தி என்ன, அது எங்கிருந்து வெளிப்படுகிறது?”

“**உங்களின் இந்தக் கேள்விக்கு நான் இறுதியில் பதிலளிப்பேன். முதலில், உங்கள் இதர கேள்விகளை முடித்துவிடுங்கள்**,” என்று பாபா கூறினார்.

“நான் உங்களிடம் இன்னுமொரு கேள்வி கேட்கலாமா?”

“**நிச்சயமாக**.”

“நீங்கள் உலகை இரட்சிக்க வந்துள்ளீர்கள். உங்களிடம் பைபிள், குரான் போன்ற ஏதேனும் வேதநூல் உள்ளதா?... அதற்காக...”

பாபா இடையே குறுக்கிட்டு, “**நான் உபதேசங்கள் வழங்குகிறேன், மக்கள் என்னை ஒரு குருநாதராக ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் புத்தக அறிவு அல்லது கல்வி அறிவுக்கு நான் முக்கியத்துவம் வழங்குவதில்லை, ஏனெனில் (ஒவ்வொன்றிலும்) மறைந்திருக்கும் தெய்வீகத்தை நான் விழிப்படையச் செய்கிறேன்**.”

“நீங்கள் புத்தரையும் அவருடைய எட்டு கொள்கைகளையும் நம்புகிறீர்களா, அதில்...”

அவர் முடிப்பதற்குள், பாபா, “**ஆம், எந்த மதமும் இறை அறிவை நோக்கிச் செல்லும் முன்னேற்றப் பாதையின் படிக்கற்களாகும். நீங்கள் கிறிஸ்துவையும் கிருஷ்ணரையும் பற்றிக் கேட்க விரும்புகிறீர்கள், அதற்கும் பதில் ஒன்றே**” என்று பதிலளித்தார்.

ஜேம்ஸ் டக்ளஸ் ஆச்சரியத்தில் எழுந்து பாபாவைப் பார்த்தார். பாபா, அவரிடம் இருக்கையில் அமரும்படிக் கேட்டுக் கொண்டார்.

"நீங்கள் எந்தக் கடவுளை நம்புகிறீர்கள்? கிறிஸ்தவர்களின் கடவுளையா அல்லது..."

**"அனைவருக்கும் கடவுள் ஒருவரே!"**

"எந்த மதம் நீங்கள் ஏற்றுக்கொண்ட மதத்திற்கு மிக அருகில் உள்ளது? அதாவது, எந்த மதம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குத் தகுதியானது?"

**"எல்லா மதங்களும் கடவுளிடமிருந்து வந்தவை, எனவே அனைத்தும் ஒன்றுதான்."**

"இந்த வாழ்க்கைக்குப் பின்னர் எதிர்கால வாழ்க்கை என்பது உள்ளதா?" டக்ளஸ் தொடர்ந்தார்.

பாபா, **"ஆம், ஆனால் உடலுக்கு மட்டுமே. ஆத்மா ஒன்றே ஒன்று, ஒருபோதும் இறவாதது. அது ஓர் உடலை, ஒன்றன்பின் ஒன்றாக எடுத்து, கடவுள் நிலையை எய்துவது வரை மறுபிறவி எடுக்கிறது."**

"அதைத்தான் நிர்வாணா என்பதா?"

**"ஆம், ஆனால் ஆத்மாவின் அசலான, அழகிய தன்மைக்கு எந்த பாதகமும் விளைவிக்காமல்..."**

டக்ளஸ் வேறு எதையோ கேட்கவிருந்த வேளையில்,

பாபா அவரைத் தடுத்து நிறுத்தி விளக்கினார் **"ஆத்மாவின் வாழ்வின் சாராம்சம் நித்தியமானது, இந்த நித்திய வாழ்க்கை, கடவுளோடு ஒன்றானது. இந்த நித்திய வாழ்வைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள், இது ஆன்மா, மனம் அல்லது புத்தியோடு இருக்கும் நிலை. ஆத்மா, புத்தியைச் செயல்பட வைக்கிறது, ஆனால் எதுவும் ஆன்மாவைக் கட்டுப்படுத்துவதில்லை. ஆன்மா முற்றிலும் சுதந்திரமானது. புத்தி, ஆன்மாவைப் பொறுத்தது, ஆனால் ஆன்மா எந்தக் கட்டுப்பாட்டுக்கும் உள்ளானது அல்ல! புத்தி என்பது ஆன்மாவின் கருவி. அதாவது, அசலான, நித்திய வாழ்வை அடைவதற்கும் அதை அனுபவிப்பதற்கும் இது ஒரு வழிமுறையாகும். அன்பு, சேவை, பக்தி, அர்ப்பணம் இவை அனைத்தும் ஒருவர் கடவுளை அறிய வழி வகுக்கிறது."**

"இந்த அறிவை நீங்கள் எங்கிருந்து பெற்றீர்கள்? ஒரு கேள்வி எனது மனதில் எழுவதற்கு முன்னர், அது உங்களுக்கு எப்படித் தெரியும்!"

**"இதையெல்லாம் நான் மிக எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்."**

"எனது கடைசி கேள்விக்கு நீங்கள் பதிலளிக்கவில்லை. இதையெல்லாம் நீங்கள் எவ்வாறு புரிந்து கொள்கிறீர்கள்?"

பாபா சிரித்துக்கொண்டே **"ஏனெனில் நான் நித்தியமாக, நிரந்தரமாக இருப்பவன்."**

"உங்கள் பணி (அதாவது நீங்கள் செய்ய விரும்புவதும், அதன் குறிக்கோளும்) என்ன?" என்று டக்ளஸ் கேட்டார்.

**“மனிதகுலத்தில் ஆன்மீக மறு உருவாக்கம் கொண்டுவருவது - எல்லாவற்றிற்கும் மேலாக, கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளை ஒன்றிணையச் செய்வது”** என்று பாபா விளக்கினார்.

“குறிப்பாக மேற்கத்திய நாடுகளில் அதைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?”

**“நீங்கள் இப்போது என்னுடன் பேசிக்கொண்டு இருக்கிறீர்கள், நீங்கள் அவ்வாறு செய்கிறீர்கள் என்பதை எந்த அளவுக்கு நம்புகிறீர்களோ அதே நம்பிக்கையுடன்! உண்மையாக, இதே நோக்கத்துடன் நான் இந்தப் பிறவியை, இந்த மனித உருவத்தை எடுத்துள்ளேன்.”**

“உங்களை, மனிதகுலத்தின் நன்மைக்காக, அடிப்படை பணிக்காக நியமித்தவர் யார்? உங்களை அனுப்பியவர் யார்?”

**“அது எனது வாழ்க்கை; எனக்குத் தெரிந்த ஒன்று!”**

டக்ளஸ் குழப்பமடைந்து பாபாவின் வார்த்தைகளை நம்பமுடியாததாக உணர்ந்தார். மெஹர் பாபா, அன்பாக முதுகில் தட்டிக்கொடுத்து, அவரை ஆறுதல் படுத்தினார். பின்பு பாபா அவரது கைகளைப் பற்றிக்கொண்டு கண்களில் உற்று நோக்கினார். இருவரும் ஒரு கணம் அமைதியாக இருந்தனர். அவரைப் பார்த்து, பாபா சிரித்ததும் டக்ளஸ் ஆச்சரியத்தில் வினவினார்:

“நீங்கள் எப்போதும் இப்படி ஆனந்தத்தில் இருக்கிறீர்களா?”

**“நான் நித்திய ஆனந்தத்தை அனுபவிக்கிறேன், அது எனது நிலையான வாழ்வாகும்.”**

“நான் ஏன் அந்த ஆனந்தத்தை அனுபவிக்கவில்லை?”

**“ஏனெனில் இந்த மாய உலகில், நீங்கள் உங்கள் அகந்தையிலிருந்து இன்னும் விடுபடவில்லை, அதனால் அத்தகைய ஆனந்தத்தை அனுபவிக்க முடியாது. இந்த அறியாமை காரணமாக, உலகம் பரிதாபகரமான நிலையில் உள்ளது. உண்மையில், பேரின்பத்தைத் தவிர நான்கு பக்கங்களிலும் வேறு எதுவும் இல்லை.”**

ஜேம்ஸ் டக்ளஸ் தொடர்ந்து, “கடவுள் யார்? அவர் என்னவாக இருக்கிறார்? அவர் ஒரு நபரா அல்லது சக்தியா?” எனக் கேட்டார்.

**“கடவுள் உருவத்துடனும், உருவம் இல்லாமலும் இருக்கிறார். அவர் ஒவ்வோர் உயிரினத்திலும் வாழ்கிறார், ஒவ்வொன்றிலும் வியாபித்து இருக்கிறார். வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் - கலையில், இலக்கியத்தில், அழகில் - அவர்தான் இருக்கிறார்!”**

இதைக் கேட்ட டக்ளஸ் பாபாவிடம் ஏதோ கேட்க முன்வந்தார். ஆனால் பாபா அவரைத் தடுத்து, முதலில் தான் சொல்ல விரும்புவதை அவர் கேட்க வேண்டும் எனக் கூறி, தொடர்ந்தார், **“இவற்றிலிருந்து, நான் ஒரு ‘பல கடவுள் கொள்கைவாதி’ என்று நீங்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது. நான் கூறுவது எனது கருத்து அல்ல. உண்மையில், எல்லாவற்றையும் அனுபவத்தின் மூலம் நான் அறிவேன். நீங்களும் கடவுளை அறியும்போது, இதையெல்லாம் புரிந்துகொள்வீர்கள். அனைத்திலும் மிக உயர்ந்த அனுபவம், தன்னை அறிந்து கொள்வது. இதன் அர்த்தம் கடவுளுடன் ஒன்றாக இருப்பது!”**

“நீங்கள் திருமணம் செய்து கொண்டீர்களா?” டக்ளஸ் கேட்டார்.

**“நான் ஆண் பெண் இன பாகுபாட்டிற்கு அப்பாற்பட்டவன். ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் எனக்கு எந்த வித்தியாசமும் இல்லை”** என்று பாபா எடுத்துக் கூறினார்.

“இரவில் எத்தனை மணி நேரம் தூங்குகிறீர்கள்?”

**“மூன்று.”**

“இதற்குப் பின்னர் உங்கள் திட்டங்கள் என்ன?”

**“டெவன்ஷர் ஆசிரமத்தில் சிறிது காலம் தங்கிய பிறகு நான் அமெரிக்காவிற்குச் செல்ல இருக்கிறேன்.”**

“நீங்கள் இப்போது எனது முதல் கேள்விக்கு பதிலளித்து, எனது கவலைக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்களா?”

பாபா சிரித்துக்கொண்டே, டக்ளஸிடம் **“நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி”** என்று கூற, சாஞ்சியிடம் சைகையால் தெரிவித்தார்.

“இது உங்கள் கருணை.”

ஜேம்ஸ் டக்ளஸ் வெளியேற எழுந்து நின்று மீண்டும் கேட்டார், “எனது முதல் கேள்விக்கான பதில்: இந்த அறையை வியாபித்திருக்கும் சக்திக்குக் காரணம் என்ன? அது எங்கிருந்து வருகிறது?”

**“நான் இங்கு இருப்பதே இதற்குக் காரணம்.”**

ஜேம்ஸ் டக்ளஸ், மெஹர் பாபாவின் கையை, தனது கையில் எடுத்து பின்னர் அதை, கண்களில் வைக்க, பாபா அவரை ஆசீர்வதித்தார். “நான் எச்சரிக்கையாக இருந்தும், அவரது ஆளுமையின் வசியத்தில் உருகிப்போனேன்,” என்று அவர் பின்னர் எழுதினார். அவரது இதயம் பாபாவின் அன்பால் நிறைந்தது; பணிவுடன் வணங்கி விடைபெற்றுச் சென்றார். அவரது ‘ஒரு நிமிடம்’ சந்திப்பு ‘ஒரு மணி நேரம்’ நீடித்தது. அடுத்த நாள், ஜேம்ஸ் டக்ளஸ் நேரடி பேட்டியின் முழு விபரத்தையும் ‘லண்டன் சண்டே எக்ஸ்பிரஸ்’ (LONDON SUNDAY EXPRESS) பத்திரிகையின் முதல் பக்கத்தில் வெளியிட்டார். இது மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது; மேலும் மெஹர் பாபாவைப் பற்றி ஏராளமானோர் தெரிந்து கொள்ள வாய்ப்பாக அமைந்தது.

பின்னர் 9ஆம் தேதி, பாபா ஒரு பழமையான பூங்காவை, காரில் சுற்றி வந்தார். அன்றிரவு கியூ தியேட்டரில் (Q THEATRE) மின்டாவின் நாடகத்தையும் பார்க்கச் சென்றார். ஆதி ஜூனியர் அன்று இரவில் பாரிஸிலிருந்து திரும்பி வந்தவர், மிகவும் களைத்துப் போய் இருந்தார்.

1932, ஏப்ரல் 10, கிட்டி டேவி மதிய வேளையில், தனது வீட்டின் பின்புறத்தில் பாபாவுடன், குழந்தைகளுக்கு விருந்து ஒன்று ஏற்பாடு செய்தார். பாபா குழந்தைகளோடு கேக் வெட்டி, பலூன்களைப் பறக்கவிட்டு, அலங்கார தொப்பி அணிந்து, பொம்மைகளைப் பரிசாக அளித்து, குழந்தைகளுடன் தரையில் அமர்ந்து விளையாடி, அனைவரையும் மகிழ்வித்தார். முன் அறையில் தேநீர் அருந்தும் வேளையில் ஒரு குழந்தை, படு சுட்டித்தனமாகத் தொந்தரவு செய்ததைப் பார்த்து பாபா, **“அவனைத் தனியாக விட்டுவிடுங்கள். அதிக**

**அளவில் இருக்கும் அவனது சக்தியே அதற்குக் காரணம். அவன் எனக்கு மிகவும் அருகில் இருக்கிறான், பின்னர் எனக்காக, பல பணிகளைச் செய்ய உள்ளான்**” என்று கூறினார்.

‘குழந்தைகள் விருந்து’ மாலை ஆறு மணிக்கு முடிவடைந்ததும், பாபா, ஹென்றி - 8 (HENRY - 8) மன்னரின் அரண்மனையைப் பார்க்க ஹாம்ப்டன் கோர்ட்டுக்கு (HAMPTON COURT) அழைத்துச் செல்லப்பட்டார்.

அடுத்த நாள் ‘பத்து சீடர்களுடன் மெஹர் பாபாவின் குழந்தைகள்-விருந்து’ என்ற கட்டுரை லண்டன் ‘டெய்லி ஹெரால்ட்’ (DAILY HERALD) பத்திரிகையில் வெளிவந்தது:

இந்திய குருநாதர், உலகின் இரட்சகர் என்று அன்பும், மரியாதையுடனும் வணங்கப்படும் ஸ்ரீ மெஹர் பாபா, தெற்கு கென்ஸிங்டன் வீட்டில், குழந்தைகளுடன் விருந்தில் பங்கெடுத்தார்.

அவர் இங்கிருந்து அமெரிக்காவிற்குச் சென்று கொண்டிருக்கிறார், அங்கு அவர் தனது ஏழு ஆண்டுகால மௌனத்தைக் கலைத்து, தனது செய்தியை வழங்குவார்; இது ஒரு பெரிய ‘மத எழுச்சியை’ ஏற்படுத்தும் என்று அவர் நம்புகிறார்.

‘இறைவனைப் போன்ற’ ஸ்ரீ மெஹர் பாபா, தரையில் அமர்ந்து பத்து குழந்தைகளுடன் விளையாடி, ஆடி, பாடி அனைவரையும் மகிழ வைத்தார். அவரது ஆங்கில சீடர்களின் சிறு சிறு குழந்தைகளை அவர் பெரிதும் நேசித்தார். அவருடைய மென்மையான விரல்களும், அழகிய கண்களும் குழந்தைகளைத் தழுவி விளையாடியது ஒரு கண்கொள்ளாக் காட்சி.

நான் பாபாவை அணுகியபோது, அவர் அமர்ந்திருந்த ஸோஃபாவில் எனக்கும் இடம் கொடுத்தார்.

“பழங்குடி மக்கள் உங்களை ஒரு மோசமான மனிதர் என்று கூறுகிறார்கள். குழந்தைகளைக் குகைகளில் வாழ வைப்பதன் மூலம், பறவைகள் அவர்களைத் தாக்கி அழித்துவிட்டதாகக் கூறுகிறார்கள்” என்ற புகழ்பெற்ற புராண வரிகளை நான் அவருக்கு நினைவூட்டினேன்.

ஸ்ரீ பாபா குலுங்கி குலுங்கி சிரித்தார்; அவரது முகமும் உதடும் சற்றும் அசையவில்லை; ஆனால் அவரது முழு மனமும் சிரித்துக் கொண்டிருந்தது.

**“டி ஆர் எஸ் எல் எஸ் - DRSLS”** அவர் தனது எழுத்துப்பலகை வழியாகத் தெரிவித்தார். அவர் ஒரு வினோதமான சுருக்கெழுத்தைப் பயன்படுத்துகிறார். **“அன்புள்ள ஆத்மாக்கள்,” (டீயர் ஸோல்ஸ்** - DEAR SOULS) என்று ஒரு சீடர் மொழிபெயர்த்தார், **“அவர்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள், எனக்கு அவர்களுடன் பல பணிகள் உள்ளன. நான் அவற்றைச் செய்வேன்”** என்றார்.

ஏப்ரல் 11ஆம் நாள் மதியம், பாபா, பிரபல சிற்பக்கலை நிபுணர் எட்வர்ட் மெரிட் (EDWARD MERRETT) என்பவரின் ஸ்டுடியோவிற்குச் சென்றார். மெஹர் பாபா ஒரு சிற்பியை சிலை வடிக்க அனுமதித்தது இதுவே முதல் முறை. இரண்டு நாட்களுக்குப் பிறகு, சிற்பம் நிறைவுறும் நேரத்தில், பாபா கடைசி முறையாக வந்தார்.

1931ஆம் வருடம் மெஹர் பாபா அமெரிக்காவிலிருந்து வந்த பின்பு, மால்கம், இந்திய தியோஸொஃபிஸ்ட் குரு கிருஷ்ணமூர்த்திக்கு (INDIAN THEOSOPHIST GURU KRISHNAMURTI) பாபாவின் வருகை குறித்து பல பத்திரிகை செய்திகளை அனுப்பி, அவர் இந்தியாவில் பாபாவை நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறு பரிந்துரைத்தார்.

1932 மார்ச் 18 அன்று கலிஃபோர்னியாவின் ஓஹய் (OJAI) நகரத்திலிருந்து கிருஷ்ணமூர்த்தி பதிலளித்தார்:

மெஹர் பாபா தொடர்பான செய்திகளை எனக்கு அனுப்பியிருப்பதில் மிகவும் மகிழ்ச்சி. நான் அவரை இதுவரை சந்திக்காததால், அவருக்கு எப்படி எழுத முடியும் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் இந்தியாவிலோ அல்லது ஐரோப்பாவிலோ அவரை சந்திப்பேன் என்று நம்புகிறேன். இதை என்னுடைய மரியாதையற்ற செயல் என்று பொருள் கொள்ளாதீர்கள். நான் அவரை சந்திப்பேன்.

ஹென்றி ஜேம்ஸ் ஃபோர்மன், (கடந்த நவம்பர் மாதத்தில் நியூயார்க் நகரில் பாபாவை சந்தித்த 'நியூயார்க் டைம்ஸ்' - NEW YORK TIMES பத்திரிகையின் நிருபர்) மெஹர் பாபாவின் கொள்கைகள், கோட்பாடுகளை விளம்பரப்படுத்தத் திட்டமிட்டார். ஆனால் அவர் பாபாவை அவதார புருஷர், இறை மனிதர் (GOD-MAN), 'மெஸையா' (MESSIAH) எனக் குறிப்பிடக்கூடாது என்ற அவருடைய கருத்தைத் தெரிவித்தார். மால்கம் அதைக் கடுமையாக எதிர்த்தார். ஃபோர்மனுக்கு எழுதிய கடிதத்தில், மால்கம் இவ்வாறு எழுதினார்: "இது நாம் செய்ய வேண்டிய முக்கியமான ஒன்று, ஏனெனில் பாபாவைப் பற்றிய உண்மை அதுதான். நாம் ஒரு சாதாரண இந்து யோகி அல்லது பண்டிதரைப் பற்றிக் கூறவில்லை. பிரபஞ்சத்தின் இறைவன், அதை நாம் விரைவில் அடையாளம் கண்டுகொள்வது அனைவருக்கும் நல்லது."

ஒரு பிரபல எழுத்தாளரான ஃபிரடெரிக் எல். காலின்ஸ் (FREDERICK L. COLLINS) என்பவரை, பத்திரிகை பிரதிநிதியாகச் செயல்பட வைக்கும் முயற்சியில், மால்கம் அவருக்குக் கடிதம் எழுதினார்:

ஜோர்டான் நதியில் யோவான், இயேசு நாதருக்கு இறை உணர்வை வழங்கிய அந்த பொன்னான நேரத்தில், பொது வெளிப்பாட்டின் காலம் நெருங்கி வருவது குறித்து, இயேசு ஓர் அறிக்கையை முன்கூட்டியே வெளியிடும் தருணத்தில், நீங்கள் ஜெருஸலேமின் (JERUSALEM) மிகப்பெரிய வார இதழின் ஆசிரியராக இருந்திருந்தால், என்ன கூறியிருப்பீர்கள்?

அதற்கும் மார்ச் 24 அன்று ஸ்ரீ மெஹர் பாபா அமெரிக்காவை நோக்கி வருவதற்கும் இணையான செய்தி ஒன்று அதில் மூடி மறைந்துள்ளது.

1932 ஏப்ரல் 12ஆம் நாள் மாலை, கிட்டியுடன் பாபாவும் மண்டலியும் மாட் ஃபோல்ட்ஸின் (MAUD FOULDS) இல்லத்திற்குச் சென்றனர். ஆன்மீகத்தில் தீவிர ஈடுபாடு மிக்க திருமதி ஃபோல்ட்ஸ், பாபாவிற்கும் கிருஷ்ணமூர்த்திக்கும்

இடையில் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்ய ஆர்வமாக இருந்தார். “கிருஷ்ணமூர்த்தி உங்களை சந்திக்க விரும்புகிறார்,” என்று அவர் பாபாவிடம் தெரிவித்திருந்தார்.

மெஹர் பாபா ஒரு முறை நோரினாவிடம் எடுத்துரைத்தார்: **“கிருஷ்ணமூர்த்தி தனக்குள்ளே பெரும் சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளார்; அவர் சரியான பாதையில் இருக்கிறார், ஆனால் அவர் என்னைப் பார்க்க வராத வரை, அவருடைய லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ள மாட்டார் அல்லது உண்மையில் மேல்நிலையை அடையமாட்டார்.”** ஆனால் இந்த சந்திப்பு இன்னும் நடைபெறவில்லை.

1932, ஏப்ரல் 13ஆம் நாள், சிற்பி எட்வர்ட் மெரிட்டுடன் மெஹர் பாபா இறுதி முறையாக அமர்ந்திருந்த போது, ஒரு பத்திரிகை நிருபர் அங்கு வந்து பாபாவிடம் வினவினார்:

“தெய்வீக அருளை அடையப் பெறுவதில் ஒரு பெண், ஆணின் பாதையில் தடையாக இருப்பதாகக் கூறப்படுகிறது. அனைத்து புனிதர்களும்...”

பாபா குறுக்கிட்டு, **“ஓ இல்லை, இல்லை. தெய்வீக அருளைப் பெற ஒரு பெண்மணி முக்கிய பங்கை வகிக்க முடியும். அவர் ஆணுக்கு சமமானவர். அவர் தனக்கு உண்மையாக இருக்கும் வரை, எல்லாம் நலமாக இருக்கும். ஆனால் ஒரு முறை அவர் சுற்றுப்புற சூழலுக்கு சரணடைந்தால், திருமணத்தின் செயல்பாடு தோல்வியடைந்து, விவாகரத்து வரைக் கொண்டு செல்லும்.”**

“அப்படியானால் சாது, சந்நியாசிகள் மேற்கொள்ளும் பிரம்மச்சரியத்தின் சபதம் என்னாவது?” என நிருபர் கேட்டார்.

**“இது முக்கியமல்ல, சில ஆண்கள் திருமணம் செய்துகொள்கிறார்கள், சிலர் தனிமையில் இருக்கிறார்கள்; ஆனால் ஒரு மனிதன் திருமணம் செய்து கொள்வதால், ஆன்மீக ரீதியில் மிகவும் பின்தங்கியவனாகக் கருதக்கூடாது. ஒரு பெண், தன் அன்பினால் உண்மையை அறிய, அவனை ஊக்குவிக்க முடியும். அதற்காக அவள் காதலை வளர்த்துக் கொள்ள வேண்டும், காமத்தை அல்ல. இதுதான் மகிழ்ச்சிக்கான திறவுகோல்.”**

இந்த உரையாடல் எட்வர்ட் மெரிட்டின் பணிக்குத் தொந்தரவாக இருந்ததால், அவர் குறுக்கிட்டு, “தயவுசெய்து மேலே பாருங்கள், பாபா” என்று கூறினார். இது, திடீரென உரையாடலைத் தொடரவிடாமல் தடுத்தது. அந்த நேரத்தில், பாபாவின் வலது கையில் ஒரு பிளாஸ்டர் அச்சு தயாரிக்க முடியுமா என்று மெரிட் கேட்டதற்கு பாபா ஒப்புக்கொண்டார்.

காக்கா பாரியாவிற்கு ஆங்கிலம் தெரியாது ஆகையால், பாபாவைப் பற்றிய கேள்விகளைக் கேட்கும் மேற்கத்தியர்கள் மத்தியில் அவரைத் தனியாக விட்டுவிட வேண்டாம் என்று பாபாவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். ஒரு முறை பாபாவின் அறைக்கு வெளியே காவல் புரிந்த வேளையில், பல

ஆங்கிலேய பெண்மணிகள் காக்காவை அணுகி, கேள்விகள் கேட்டு, முற்றுகையிட ஆயத்தமாயினர். காக்கா என்ன செய்வதென்று தெரியாமல் கண்களை மூடிக்கொண்டு, சிலை போல நின்றார். அவர் தியானம் செய்கிறார் என்று நினைத்து, வந்தவர்கள் காக்கா 'சமாதி' நிலையிலிருந்து வெளிவருவது வரைக் காத்திருந்தனர். காக்காவின் அதிர்ஷ்டம், பாபா அவரை உள்ளே அழைத்ததால் அந்த இக்கட்டான நிலையிலிருந்து தப்பிக்க முடிந்தது.

டிக், ஆட்ரே இன்ஸ் (DICK AND AUDREY INCE) தம்பதியர் பாபாவுடன் உரையாடிக் கொண்டிருந்த போது, பிரம்மச்சரியத்தைப் பற்றிய பேச்சு எழுந்தது. மெரடித் ஸ்டார், உடலுறவு என்பது குழந்தைகளை ஈன்றெடுத்து, குடும்பத்தைப் பராமரிக்க மட்டுமே என்றும், திருமணமான போதிலும் அவர்கள் ஒருபோதும் உடலுறவு கொள்ளக்கூடாது என்றும் அறிவுறுத்தி இருந்தார். அவர்கள் இந்த ஆலோசனையை சிறிது காலம் பின்பற்றியதால், திருமண வாழ்க்கையில் பிளவு ஏற்பட்டது. அவர்கள் இதை பாபாவிடம் எடுத்துரைத்த போது, பாபா, மெரடித்தின் கூற்றை மறுத்து, '**திருமணமான பின்னர், ஒருவர் சாதாரண திருமண வாழ்க்கையை நடத்த வேண்டும்**' என்று கூறினார்.

இன்னொரு புறம், கிம் இனிமேல் தனது கணவரோடு வாழ முடியாத நிலை (கிம்மின் கணவர், பாபாவுடனான அவரது தொடர்பைத் துண்டிக்க விரும்பினார்) மேலும் பாலியலில் ஆர்வம் எதுவும் இல்லாமல் இருந்தார். இதைக் கேட்ட பாபா, "**நீங்கள் ஏற்கனவே ஒரு துறவி**" என்று கூறினார்.

அந்த நேரத்தில் மெஹர் பாபாவைப் பற்றிய மக்களின் அணுகுமுறை குறித்து கிம் மேலும் விளக்கினார்:

என்னைப் பொறுத்தவரை, பாபா, தூய்மையின் மொத்த உருவம். நாங்கள் அவரிடம் வைத்திருந்த அன்பு, பிறருக்கு உண்மையில் புரியவில்லை. நாங்கள் (கிம்கோ) கடந்த டிசம்பரில், பாரிஸுக்கு புறப்படுவதற்கு முன்னர் எனது கணவர் என்னிடம் கூறியது எனக்கு நினைவிருக்கிறது, "இது எல்லாம் சரியாக இருக்கும் என நீங்கள் உறுதியாக நம்புகிறீர்களா?" நான் சொன்னேன், "பாருங்கள், நான் நினைத்ததற்கு மாறாக, பாபா எந்த வகையிலும் நடந்திருந்தால், நான் மிகவும் மனம் உடைந்து போயிருப்பேன், மேலும் நான் என்னைக் கொன்றிருப்பேன் என்று நினைக்கிறேன்." என்னைப் பொறுத்தவரை, அவர் முற்றிலும் தூய்மையானவர். ஏதேனும் அநாகரீகத்தின் அறிகுறி இருந்திருந்தால் (நிச்சயமாக இது ஒருபோதும் இல்லை), நான் துக்கத்தில் உயிரை விட்டிருப்பேன்.

என்னைப் பொறுத்தவரை, கிறிஸ்து, மாக்டலீனுக்கு (MAGDALENE) இருந்தது போல, பாபா எனக்கும் - அன்பும், இரக்கமும், முழுமையான தூய்மையும் படைத்தவர்.

பாபா, 1932 ஏப்ரல் 13 அன்று சார்லஸ் பர்டம் அலுவலகத்திற்கு விஜயம் செய்தபோது, அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதுமாறு அறிவுறுத்தினார், பின்னர் அந்தப் புத்தகம் 'தி பெர்ஃபெக்ட் மாஸ்டர்' (THE PERFECT MASTER) என்ற தலைப்பில் வெளிவந்தது.

ஐம்பது வயதிற்கும் மேலான ஒரு கணவன்-மனைவி, வில், மேரி பேக்கெட் (WILL AND MARY BACKETT), 1931ஆம் ஆண்டில் மெஹர் பாபாவைப் பற்றி மெரடித் மூலமாகக் கேள்விப்பட்டனர்; ஆனால் பாபாவை, இங்கிலாந்திற்குச் சென்ற முதல் பயணத்தில் அவர்கள் சந்திக்கவில்லை. 1920ஆம் வருடம் இருவரும் இனயத் கானால் ஸுஃபி பாரம்பரியத்தில் (SUFISM BY INAYAT KHAN) அறிமுகப்படுத்தப்பட்டு, 1927இல் அவர் உயிர்த்துறக்கும் வரை அவரைப் பின்பற்றினர். பேக்கெட் தம்பதியர் இப்போது பாபாவை சந்திக்க ஆவலாய் இருந்தனர், மேலும் இந்த லண்டன் பயணத்தின் போது, மெஹர் பாபாவை சந்திக்கும் முதல் வாய்ப்பை அடையப் பெற்றனர். மெரடித் அவர்களை, டேவியின் இல்லத்தில் பாபாவிற்கு அறிமுகப்படுத்தினார். வில் பாபாவிற்கு, திராட்சைப்பழங்களைக் கொண்டு வந்திருந்தார்; வில் உடல்நலக்குறைவால் பாதிக்கப்படுகிறார் என்று மெரடித், பாபாவிடம் கூறிய போது, பாபா ஒரு திராட்சைப்பழத்தை உண்ணக் கொடுத்து, அவருடைய உடல்நிலை நன்றாகிவிடும் என்று உறுதியளித்தார்.

வில் அவரது முதல் சந்திப்பை ஒரு முறை நினைவு கூர்ந்தார்:

பிற்காலத்தைத் திரும்பிப் பார்க்கும்போது, அமைதியின் உருவாக அமர்ந்திருந்த பாபாவை மீண்டும் ஒரு முறை பார்க்கிறேன். முதலில் சாதாரண பார்வையாளருக்கு, அவர் ஆற்றலற்றவர் போலத் தோன்றினாலும், அவரது தோரணையில் ஏதோ ஒரு கண்டிப்பு இருந்தது, ஏனெனில் என் மனதில் பிரதிபிம்பமாக நிற்கும் அவர் தூய்மையானவர், உலகத்தால் கவரப்படாதவர், அமைதியின் சொரூபமாக, ஒரு பறவை, ஆகாயத்தில் எங்குமில்லாத அமைதியை அனுபவிப்பது போல் இருக்கிறார்.

மேரியும், பாபாவின் தடுக்க முடியாத அன்பால் ஈர்க்கப்பட்டதை, ஒரு முறை நினைவு கூர்ந்தார்:

நாங்கள் அறைக்குள் நுழைந்த போது, பாபாவின் சுறுசுறுப்பு, சக்தி மற்றும் அருளால், அவரது அனைத்து அசைவுகளையும் வகைப்படுத்தி விரைவாக முன்வந்தார். அத்தகைய மென்மையான கைகளால் எனது கையைத் தொட்டு அமருமாறு அழைத்தார். உடனடியாக, நான் எவருடனும் இதற்கு முன்னர் அனுபவிக்காத உள்ளுணர்வின் உயிரோட்டத்தை உணர்ந்தேன். நான் பல ஆண்டுகளாக ஆழ் இதயத்தில் தேடி வரும் எனது குருநாதரைக் கண்டுகொண்டேன் என்பதையும், என்னுடைய நீண்ட, நெடிய தேடல் முடிந்துவிட்டதையும் அறிந்தேன்.

30 வருடமாக ஆவலுடன் தேடி, பிறரிடமிருந்து நான் பெற்றதை விட, மூன்று நிமிட இடைவெளியில் பாபா எனக்கு அளவின்றி அள்ளிக் கொடுத்தார், ஏனெனில் அவர் வழங்கிய அருள் மற்றும் தெய்வீக அன்பின் திடமான, திட்டவட்டமான பரிசை நான் அனுபவித்தேன், பிறர் இதைப் பற்றிப் பேச மட்டும்தான் முடியும்; பாபா யார் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

வில், மேரி இருவரும் ரஸ்ஸல் சாலைக்கு வழக்கமாக வந்து சென்றனர்; மார்கரெட் கிராஸ்க்கின் இல்லத்திலும் பாபாவை சந்தித்தனர். இருவரும் மெஹர் பாபாவின் ஆழ்ந்த அர்ப்பணிப்பு மிக்க சீடர்களாயினர், மேலும்

பாபா அவர்களை ‘வில்மர்’ (WIL-MAR) என்றும், பின்னர் ‘அவருடைய இறைத்தூதர்கள் (HIS ARCHANGELS)’ என்றும் அன்புடன் குறிப்பிட்டு வந்தார்.

பாபா தங்குவதற்கான ஏற்பாடுகள், உணவு மற்றும் பல விஷயங்களில் கிட்டி காலை முதல் மாலை வரை மும்முரமாக இருந்தார். பாபா மாடியில் தனது அறையில் தனியாக உண்ணுவதும், பின்பு, கீழே நெருப்பருகில் மண்டலி மற்றும் பிறர் ஒன்றாக உண்ணும் வேளையில், உடன் இருப்பதையும் வழக்கமாகக் கொண்டார். ஆதி ஜூனியர், ஆதி சீனியர், பெஹராம் ஆகியோரின் இசை நிகழ்ச்சிகள் தினமும் நடந்தன; பாடல்களுக்கு இடையில் பாபா பக்தர்களுக்கு வெவ்வேறு ஆன்மீக விளக்கங்களை வழங்கினார்.

கிட்டியின் பெற்றோர் ஹெலீனா, ஜான் இருவரும், பாபாவும் மண்டலியும் தங்கள் வீட்டில் சௌகரியமாக இருக்கும் நோக்கத்தில் வெளியில் வேறு வீட்டில் தங்கியிருந்தனர்; பாபாவை அவ்வப்போது சந்தித்தனர். அடுத்த செப்டம்பர் மாதத்தில் ஹெலீனா காலமானதால், இம்முறை பாபாவை சந்தித்து, அவருடன் நேரத்தைக் கழிக்கும் வாய்ப்பைப் பெற்ற அதிர்ஷ்டசாலி என்று கூறலாம்.

கிம், பாபாவுடன் இருந்த நேரங்களை நினைவு கூர்ந்தார்: “பாபா அமர்ந்திருந்த ஒன்று அல்லது இரண்டு சந்தர்ப்பங்களை நான் நினைவில் வைத்துள்ளேன்; நாங்கள் அனைவரும் அவரைச் சுற்றி மௌனமாக இருந்தோம். அவ்வேளையில் காற்று கிட்டத்தட்ட அதிர்வது போல் அன்பின் ஓட்டம் இருந்தது.”

காலம் இதை இப்படி வர்ணித்தது, “பிரியமானவரின் மதுரச போதையை விவரிப்பது வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது; அதை உள்வாங்கி ருசிக்கும் இதயங்களுக்கு மட்டுமே அது தெரியும். பறவைகள் இந்த மது ரசத்தை அருந்தி, ருசித்து பின்னர் அவை பாடும் கீதங்களின் இனிமையால் நிரம்பி வழிந்தது. இம்முறை பாபாவைப் பார்க்க வந்த பலருக்கும், அவரது இறை கீதங்களின் எதிரொலியைக் கேட்கும் வாய்ப்பாக அமைந்தது.”

1932, ஏப்ரல் 15ஆம் நாள், ‘பாரமவுண்ட் ஃபிலிம் ஸ்டுடியோ’ (PARAMOUNT FILM STUDIO) பாபாவையும் அவரது குழுவையும் வில்லஸ்டனுக்கு (WILLESDEN) அழைத்து வர இரண்டு கார்களை அனுப்பியது. இதர நிறுவனங்களும் பாபாவின் படப்பிடிப்பில் ஆர்வத்தை வெளிப்படுத்தின, ஆனால் பாபா அதற்கு உடன்படவில்லை. காணொளியைப் பார்த்த பின்பு, பாபா மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

பாபா விடைபெறும் போது, ஸ்டுடியோ மேலாளர் பாபாவை அணுகி, “திரைப்படப்பிடிப்பில் மஹாத்மா காந்தி உங்களுடன் இங்கே இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும், ஆனால் காந்தி இங்கிலாந்தில் இருந்த போது,

திரைப்படம் எடுப்பதை அவர் விரும்பவில்லை. அவர் இதுபோன்ற நவீனத்தை வெறுக்கிறார்" என்று கூறினார்.

பாபா அதற்கு, "**நவீனம் அல்லது பழமை, அதில் எங்கும், எப்பொழுதும் - கலைகளில், அறிவியலில், அழகில், இயற்கையில் - வாழ்க்கையின் ஒவ்வொரு பிரிவிலும் எல்லையற்ற இறை வாழ்வே உள்ளது**" என்று பதிலளித்தார்.

பாபாவும் குழுவும் லண்டன் மிருக காட்சிசாலை (LONDON ZOO), பிரிட்டிஷ் அருங்காட்சியகம் (BRITISH MUSEUM), கியூ கார்டன் (KEW GARDENS) , லண்டன் சுரங்கப்பாதைகளைப் (LONDON SUBWAYS) பார்வையிட்டனர். அன்று பாபா, அமெரிக்க துணைத் தூதரகத்திற்கும் விஜயம் செய்தார், அங்கு அவரது அமெரிக்க பயணத்திற்கான விஸா வழங்கப்பட்டது.

பாபா அன்று மாலையில், கிம், டெஸ்மண்ட் டோல்ஹர்ஸ்டின் இல்லத்திற்கு (15, காம்பேன் கார்டன்ஸ், ஹாம்ப்ஸ்டெட்டில் - COMPAYNE GARDENS, HAMPSTEAD) விஜயம் செய்தார். கிட்டி, ஸில்லா, ஆதி ஜூனியர் ஆகியோருடன் பாபா அன்று இரவில் அங்கே தங்கியிருந்தார். கிம், அவருக்கு இந்திய உணவு தயார் செய்யத் தெரியாததால், கோஹினூர் உணவகத்தின் (KOHINOOR RESTAURANT) உரிமையாளரான கிருஷ்ணா வீரிடம் (KRISHNA VEER) , பாபா மற்றும் மண்டலிக்கு உணவு வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

டெவன்ஷர் மையத்தில், பாபா தங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மெரடித் 1932 ஏப்ரல் 16ஆம் நாள் காலையில் மெஹர் பாபாவைப் பார்க்க வந்தார். ஆதி ஜூனியர், பெஹராம், சாஞ்சி, காக்கா, டாக்டர் கனி ஆகியோர் அன்று பிற்பகல் டெவன்ஷருக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

மறுநாள் காலையில் ஆதி சீனியர், கிட்டி, ஸில்லா, கிம், டிலியா, மார்கரெட் ஆகியோருடன் பாபா டெவன்ஷர் சென்றார். ஒரு சில குறிப்பிட்ட காரணங்களுக்காக பாபா அனைத்து மண்டலியையும், மெரடித்தின் விருப்பங்களுக்கு ஏற்ப நடந்து, எந்த ஒரு குழப்பமும் நிகழாமல் பார்த்துக் கொள்ளுமாறு எச்சரித்தார். பாபா மற்றும் மண்டலி அனைவருக்கும் காலையிலிருந்து இரவு வரைக்கான திட்டமிடப்பட்ட அட்டவணையை மெரடித் தயார் செய்து, அறிவிப்புப் பலகையில் விளம்பரப்படுத்தி இருந்தார். மண்டலியும், பாபாவின் கட்டளைகளுக்கு இணங்கி, அவ்வாறே மெரடித்தின் திட்டத்தைப் பின்பற்றத் தொடங்கினர்.

டெவன்ஷரில் மெஹர் பாபாவின் வருகையை எதிர்நோக்கி நிருபர்களும் புகைப்படக் கலைஞர்களும் காத்திருந்தனர். மேலும் மெரடித் தன்னைத் தவிர வேறு எவருக்கும் முக்கியத்துவம் வழங்கப்படுவதை விரும்பாததால், பாபாவை வரவேற்க மண்டலி எவரும் தன்னுடன் வராமல் தூரத்தில் இருக்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்தினார். ஆனால் இதையெல்லாம் திட்டமிடுவதில் மெரடித் மும்முரமாக இருந்த அந்த நேரத்தில், எதிர்பார்த்ததை விட சற்று சீக்கிரமாக பாபா டெவன்ஷர் வந்து சேர்ந்ததால், மெரடித்தின் திட்டங்கள் பாழாய்ப் போனது.

மின்டா, பாபாவை வாசலில் வரவேற்றார், மேலும் கென்னத் ரோஸ் ஆர்வத்துடன் தனது பைக்குழல் இசைக்கருவியை இசைத்து, யுகத்தின் அவதார புருஷரை அழைத்து வந்தார். டெவன்ஷருக்கு வந்தவுடன் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பாபா எழுத்துப்பலகை வழியாக பதிலளித்தார்:

**“டெவன்ஷர் மையத்திற்கு வருவது, ஒருவர் தனது இல்லத்திற்கு வருவது போன்றது. இங்கே ஆன்மீகம் நடைமுறையில் செயல் படுத்தப்படுகிறது. இங்கு நிலவும் சூழ்நிலையும், பயிற்சியும் இலட்சியங்களை அடைய, வழிவகுப்பதை நான் காண்கிறேன். அறிவும், அன்பும் ஒன்றிணைந்து செல்ல வேண்டும். நிரந்தர முடிவுகளை உறுதிப்படுத்த உடல், மனம் மற்றும் ஆன்மீகம் சமநிலையை அடைய வேண்டும். தற்போதைய நெருக்கடி நிலையைக் கடந்து, மீண்டும் இயல்பு நிலைக்கு வர, மேற்கத்திய நாடுகள் ஆன்மீக வளர்ச்சியின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டும், மேலும் வாழ்க்கையின் ஒவ்வொரு பிரிவிலும் - கலை, அறிவியல் மற்றும் அன்றாட வழக்கத்தில் தெய்வீக தன்மையை உணர வேண்டும்.**

**“அந்த எல்லையற்ற உணர்வு விசாலமாக விரிவடைய வேண்டும்; அப்போதுதான், வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் அமைதி நிலவ முடியும். ஆனால், தற்போது இருப்பது போல, பொருள் சார்ந்த அம்சங்கள் மட்டுமே தொடர்ந்து வலியுறுத்தப்பட்டால், மேலும் பெரிய கருத்து வேறுபாடுகள் உருவாகி, சொல்லமுடியாத துன்பத்தை ஏற்படுத்தும்.”**

முன் மண்டபத்தில் சிலர் மௌனத்தைக் கடைப்பிடித்து அமைதியாக அமர்ந்திருந்தனர். பாபா திடீரென மண்டபத்திற்குள் நுழைந்து முன்னும் பின்னும் வேகமாக நடந்தார். இது அங்கிருந்தவர்களின் கவனத்தை ஈர்த்தது; அறையில் வீசிய அன்பின் தென்றல், அவர்களின் இதயங்களை மகிழ்வித்தது, அவர்களின் கண்கள் ஆனந்தத்தில் பாபாவை நோக்கின.

‘இல்ஃப்ராகோம்ப் க்ரோணிக்கிள்’ (THE ILFRACOMBE CHRONICLE) பத்திரிகை வெளியிட்ட அறிக்கைபடி:

டெவன்ஷர் மையத்தின் மொட்டை மாடியில் புகைப்படம் எடுத்த பின்னர் அங்கிருந்த பல பக்தர்கள் பாபாவிடம் விரைந்து சென்று கைகளைப் பற்றினர். அவர்கள் அளித்த வரவேற்பின் மகத்துவத்தில் பாபா மகிழ்ச்சியடைந்தார்.

அவரது நீண்ட (தோள்களில் புரண்ட ) கறுப்பு நிற தலைமுடி வடகிழக்கு காற்றில் அலைபோலப் பறந்தது. அவர் மிகவும் ஈர்க்கக்கூடிய, கனிவான பார்வை கொண்டவர். அவரது தோற்றம் அனைவரையும் மரியாதையுடன் வணங்கத் தூண்டும்.

எங்கள் நிருபரைக் கவர்ந்த ஒரு விஷயம், ரிட்ரீட்டில் தங்கியுள்ள அனைத்து மக்களின் வெளிப்படையான நேர்மையும் தயவான குணமும் ஆகும்.

இங்கிலாந்தின் காலநிலை இந்த ஆண்டு குறிப்பாக, கடும் குளிராக இருந்தது; டாக்டர் கனி குளிரால் மிகவும் அவதிப்பட்டார். அவரும், பாபாவும்

சிறுவர்களாக ஒன்றாகப் பள்ளியில் பயின்றதால், குழந்தைப் பருவ ஆரம்ப நாட்களைப் பற்றி அனைவருக்கும் விரிவாக எடுத்துரைத்தார்.

ஆங்கில மக்களை சைவ உணவு உண்ணுமாறு பாபா வற்புறுத்தவில்லை, மேலும் தினசரி தியான நேரத்திலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்படுவதாக, கிம்கோ குழுவிற்கு அவர் தெரிவித்திருந்தார், அந்த நேரத்தில் மெரடித், வீட்டிலும் சுற்றுப்புறத்திலும் மௌனம் கடைப்பிடிக்குமாறு உத்தரவு வழங்கியிருந்தார். ஒரு நாள் பாபா, இந்த நேரத்தில் அவர்களுடன் அமர வந்தவர், சாதாரணமாக ஒரு புத்தகத்தை அலமாரியிலிருந்து எடுத்து, அதன் தலைப்பை அனைவருக்கும் காட்டினார் - ‘ஆல் கொயட் ஆண் தி வெஸ்டர்ன் ஃப்ராண்ட்’ (ALL QUIET ON THE WESTERN FRONT) - அதைப் பார்த்து அனைவரும் அடக்க முடியாமல் சிரித்தனர்.

வேறொரு தருணத்தில், பாபா தியான நேரத்தில் மாடியில் கிம்கோவின் அறைக்கு வந்தவர், திறந்த ஜன்னல் வழியாக வெளியே பார்த்தபோது, குயன்டின் கடமை உணர்வோடு தியானத்தில் அமர்ந்திருந்ததைக் கண்டார்.

பாபா குறும்புத்தனமாக ஒரு சில சர்க்கரை துண்டுகளை எடுத்து ஒன்றன் பின் ஒன்றாக, குயன்டினின் முதுகில் அற்புதமான துல்லியத்துடன் வீசினார். குயன்டின் ஆத்திரமடைந்து பார்த்தபோது, பாபா பிற நண்பர்களுடன் ஜன்னல் அருகில் நின்று சிரிப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார்.

1932, ஏப்ரல் 18ஆம் நாள், பாபா மண்டலியிடம், “**இங்கு நிலவும் வானிலை எனக்கு உகந்ததாக இல்லை. நான் சலித்து, சோர்ந்து போயிருக்கிறேன். ஏதோ சுதந்திரம் இல்லாமல் தொடர்ந்து கட்டுண்டு இருப்பதுபோல் உணர்கிறேன். இந்தக் கடுமையான குளிரில் சந்திப்புகளும், நேரடி பேட்டிகளும் நடந்து கொண்டிருக்கின்றன. எப்படியாயினும், நாம் இதைத் தொடர வேண்டும். நான் பேசுவதற்கு முன்னால், எனக்கு ஒன்பது நாட்கள் முழுமையான விடுமுறை தேவை. எனது முதல் வார்த்தைகள், ‘நான் கிருஷ்ணா, நான் புத்தா, நான் கிறிஸ்து!’ என்பதாகும்**” என்று கூறினார்.

இங்கிலாந்தில் மிகவும் குளிராக இருந்ததால், இதைவிட வெப்பமான சுவிட்சர்லாந்திற்குச் செல்வது குறித்து பரிந்துரைக்கப்பட்டது. கிம், பாபாவை மிரட்டினார், “நீங்கள் என்னை உங்களுடன் அழைத்துச் செல்லவில்லை என்றால், நான் உயிரை விட்டு விடுவேன்! எல்லாவற்றிற்கும் மேலான இடத்தை நான் உங்களுக்குத் தந்துள்ளேன்!”

பாபா அனைவருக்கும் முன்னால் அறிவுரைக் கூறினார், “**அப்படியானால், எனது விருப்பங்களை முழுமையாக நிறைவேற்றுங்கள். என்னை கேள்வி கேட்கவோ அல்லது எனக்கு எதுவும் பரிந்துரைக்கவோ வேண்டாம். நான் குருநாதர் என்றாலும், மெரடித்தின் கட்டளைகளைப் பின்பற்றுகிறேன், நீங்களும் அவ்வாறு செய்வதில், என்ன தீங்கு இருக்கிறது? மெரடித் எனக்கு மண்டலியுடன் தொடர்பு கொள்வதற்குக்கூட நேரம்**

**தருவதில்லை; மேலும், நான் காலை ஐந்து மணிக்கு எனது மண்டலியை சந்தித்த பின்பு, மெரடித்தின் நிகழ்ச்சிகளுக்காக ஆறு மணிக்குத் தயாராக இருக்கிறேன்!"**

மாலை நேரங்களில் மெரடித் தனது கவிதைகளை, பாபாவிற்கும் குழுவினருக்கும் பகட்டு ஆரவாரத்துடன் வாசித்து வந்தார். "நான் குருநாதரின் காலடியில் உள்ள தூசி போல் இருக்கிறேன்…" மின்டா மற்றும் அவளுடைய தோழி அயலா (AYALA) இருவருக்கும், அவர்களின் சிரிப்பை அடக்க முடியவில்லை. மின்டா முகத்தை மூடிக்கொண்டு குலுங்கி குலுங்கி சிரித்தார்.

மெரடித் அவர் அழுகிறார் என்று நினைத்து, "குழந்தாய், நீ அழுகிறாய். நல்லது, நீ அழுகிறாய்!" என்ற கவிதை வரிகளை எடுத்துரைத்தார்.

டெவன்ஷரில் பாபா தங்கியிருந்த காலம் முழுவதும், மெரடித் பெருமையுடன் மண்டலிக்குக் கட்டளையிட்டார்; அவர்களும் பணிவுடன் கீழ்ப்படிவது போல நடந்து கொண்டனர். இந்த 'நாடகம்' பாபாவிற்கு ஒரு தலைவலியாக இருந்தபோதிலும், அவர் அதை சகித்துக்கொண்டார் - அனைத்துமே அவரது பணிக்காக - மேலும், மெரடித்துடன் ஒப்பிடுகையில் சாஞ்சியின் சேவையைக் கூட அவர் விமர்சித்தார்! தனிப்பட்ட முறையில், பாபா டெவன்ஷர் மையத்தில் இருந்தபோதும், மெரடித்தின் வற்புறுத்தலுக்கு ஆளாக வேண்டிய கண்டிப்பை நினைத்து, பாபா தனது அதிருப்தியைத் தெரிவித்தார். **"எனது வேலையை எனது வழியில் செய்வதற்கான சுதந்திரம் பறிக்கப்படுகிறது**," என்று பாபா விளக்கினார். விடாபிடித்தனத்தைக் கைவிட்டு, மெரடித், பாபாவிற்குக் கீழ்ப்படிய ஒப்புக் கொள்ளாவிடில், அமெரிக்காவுக்கான தனது பயணத்தை ரத்து செய்வதாக, பாபா மிரட்டினார், அதன் பின்பு மெரடித் ஒப்புக் கொண்டார்.

ஆனால், 1932, ஏப்ரல் 21 அன்று மெரடித், பாபாவிடம், "எனக்கு இறை உணர்வு வேண்டும், ஆனால் எனக்குப் பணமும் தேவை" என்று உரிமையோடு கோரினார். அதற்கு, பாபா எந்தக் கருத்தும் தெரிவிக்காமல் புன்னகைத்தார். அங்கு வந்திருந்த சில அன்பர்களின் பொருட்டு, பாபா, மெரடித்தின் நடத்தையைப் பொறுத்துக் கொண்டிருந்தார். பாபாவின் முதல் இங்கிலாந்து பயணத்தின் போது, பலர் குருநாதரின் வலையில் 'சிக்கிக்கொண்டனர்'; ஆனால் அதன் பின்பு, மெரடித் மூலமாக பாபாவை நாடி வந்த ஒரு சில புதிய பக்தர்களைத் தொடர்பு கொள்ள பாபா மீண்டும் டெவன்ஷருக்குச் சென்றிருந்தார். அந்த நேரத்தில், டெவன்ஷர் மையத்திற்கு இது பாபாவின் இறுதி விஜயம் என்பது எவருக்கும் தெரியாது.

அன்று மதிய உணவுக்குப் பிறகு மெஹர் பாபா, கடற்கரைக்கு நடந்து சென்றார். கடலைச் சுட்டிக்காட்டி, பாபா, அவருடன் இருந்த அன்பர்களுக்கு விளக்கினார்:

**உங்கள் முன்னால் நீங்கள் காணும் சமுத்திரத்தைப் போல நான் இருக்கிறேன் - நல்லது, தீயது, ஆரோக்கியமான, பிணியுற்ற, துறவி அல்லது பாவி, இப்படி அனைத்தையும், அனைவரையும் ஏற்றுக்கொள்ள நான் எப்பொழுதும் தயாராக இருக்கிறேன். நான் எதையும் எல்லாவற்றையும் உள்வாங்க முடியும்! எனவே அனைத்தையும் எனக்கு அர்ப்பணம்**

**செய்யுங்கள் - உங்கள் அனைத்து செயல்களும், நல்லது, தீயது, உங்கள் எண்ணங்கள் - அனைத்தையும் அர்ப்பணம் செய்து, சுதந்திர பறவையாகி விடுங்கள்.**

**நான் எல்லா பொருட்களின் மீதும் சமமாக விழும் சூரிய ஒளியைப் போன்றவன். ஆனால் ஒருவர் தலை மேல் குடையை வைத்திருந்தால், அவர் சூரியனின் கதிர்களால் பயனடைவதில்லை; அவர் மீது சூரியன் பிரகாசிப்பதை, குடை தடை செய்கிறது.**

**உங்கள் மனப்படிவங்களை, குடையுடன் ஒப்பிடலாம், இது குருநாதரிடமிருந்து ஒளி கதிர்களைப் பெறுவதைத் தடுக்கிறது. குருநாதரிடமிருந்து 'ஒளியைப்' பெற, நீங்கள் இந்த மனப்படிவங்கள் எனும் குடையை மூட வேண்டும். அப்போதுதான் நீங்கள் ஒளியை அடையப் பெறுவீர்கள்.**

**இதை அடைய, என்னையே நினைந்து, உங்கள் எண்ணங்களில் எப்பொழுதும் என்னை வைத்திருங்கள்.**

**எனது கருணை எனும் கடைக்கண் பார்வையின் விளைவாக 'குடை'யாகிய மனப்படிவங்கள் படிப்படியாக மூடப்படும்.**

1932, ஏப்ரல் 24ஆம் நாள், ஒரு வாரத்திற்குப் பிறகு, மெஹர் பாபா, டெவன்ஷரிலிருந்து புறப்பட்டார். ஆதி சீனியர், மின்டா, கிம், மேபெல், மார்கரெட், கிட்டி ஆகியோருடன் பாபா லண்டனுக்கு வந்து, டேவியின் இல்லத்தில் தங்கினார். இதர மண்டலி அனைவரும் ஸ்டிஃபனி ஹாகர்டின் (STEPHANIE HAGGARD) இல்லங்களில் தங்கினர். முந்தைய ஆண்டு டெவன்ஷரில் பாபாவை சந்தித்த ஃபிலிஸ் என்ற பெண்மணி உட்பட அனைத்து பறவைகளும் பாபாவிடம் தஞ்சம் புகுந்தன.

ஏப்ரல் 25 அன்று சீனாவில் இருக்கும் ஹெர்பெர்ட் டேவிக்கு, பாபா ஒரு தொலைத்தந்தி அனுப்பினார்: "**இங்கே மாபெரும் பணிகள் செய்யப்பட்டுள்ளன. அமெரிக்காவில் இதைவிட மிகப் பெரிய பணிகள் செய்யப்பட உள்ளன.**"

டாம் ஷார்ப்லியின் தாயார் 26ஆம் தேதி பாபாவை சந்திக்க வந்த**போது** அவரை, மிகவும் அதிர்ஷ்டசாலி என்று பாபா குறிப்பிட்டார், "**இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், அவர் இயேசுவிற்கு தனது வீட்டில் இரண்டு நாட்கள் அடைக்கலம் வழங்கினார்**" என்று வெளிப்படுத்தினார்.

# லுகானோ, சுவிட்சர்லாந்து

**(Lugano, Switzerland)**

1932, ஏப்ரல் 27 அன்று, பாபா, சுவிட்சர்லாந்து (SWITZERLAND) நாட்டின் லுகானோ (LUGANO) நகரத்திற்கு ஆறு இந்திய மண்டலி, கிட்டி, மின்டா, கிம், டிலியா ஆகியோருடன் புறப்பட்டு, மாலையில் பாரிஸ் (PARIS) நகருக்கு வந்த அவர்கள், ஈஃபில் கோபுரத்தைப் (EIFFEL TOWER) பார்க்கச் சென்று, பிறகு ரயில் நிலையத்திற்குத் திரும்பினர்.

சிறிது காலமாக, மின்டா, கிம் இருவரும் பாபாவின் தனிப்பட்ட உதவியாளராக இருக்க விரும்பினர். இது அவர்களுக்கு இடையே முறுகல் நிலைக்கு வழிவகுத்தது, பாபா ஒவ்வொருவருக்கும் தனித்தனி கடமைகளை வழங்கி இருந்தாலும், அவர்களின் பொறாமை குறைந்தபாடில்லை. அவர்களுடைய இயல்புகளும் முரண்பட்டதாகத் தோன்றின: கிம்மின் வேடிக்கையான உரையாடல் பாபாவிற்குப் பொழுதுபோக்காக அமைந்த அதே வேளையில், மின்டா, பாபாவின் அருகில் அமர்ந்திருப்பதன் மூலம் தனது அன்பை உணர்ச்சிவசமாக வெளிப்படுத்தினார்.

இறுதியாக, இந்த உள் கொந்தளிப்பு அனைத்தும் பாரிஸ் ரயில் நிலையத்தில் உரத்த வாக்குவாதமாக உருவெடுத்தது. மேலும், பாபா அவர்களை அமைதிப்படுத்த வேண்டியிருந்தது. அவர்கள் இருவரும் பாபாவின் எந்த வேலையிலும் மற்றொருவர் தலையிடுவதை விரும்பவில்லை. கிம், பாபாவின் தனிப்பட்ட வேலையில் ஈடுபடுவதைக் கண்டு, அதிலிருந்து தன்னை விலக்கிக் கொண்ட மின்டா, வருத்தத்தில், அமைதியாக ரயில் நிலையத்தின் மூன்றாவது மாடிக்குச் சென்று, ஜன்னலுக்கு வெளியே குதிக்கத் தீர்மானித்தார்! எவருக்கும் இது தெரியாது, ஆனால் அனைத்தையும் அறிந்தவர் ஸ்ரீ பாபா, அவரைக் கண்டுபிடிக்க உடனடியாக ஆதி சீனியரை அனுப்பிவைத்தார்.

ஆதி மூன்றாவது மாடிக்குச் சென்று, தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட மின்டாவை, பாபாவிடம் அழைத்து வந்தார்; அழுதுகொண்டிருந்த மின்டாவை பாபா சமாதானப்படுத்தி விளக்கினார்:

**ஆன்மீகப் பொறாமை முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும், அதே நேரத்தில் பொருள் சார்ந்த பொறாமை, அழிவு, வெறுப்பு போன்றவைகளுக்கு இடம் கொடுக்கும். எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள்: உலக அன்பிலோ அல்லது தெய்வீக அன்பிலோ அன்பிற்குரியவரின் மனப்பதிவுகள் உங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நீங்கள் ஒருவரை நேசித்தால், அவரது மனப்படிவங்கள் உங்களுக்குத் தெரியாமல் உங்கள் மனதில் இணைந்துகொள்ளும்; நீங்கள் வேறொருவர் மீது பொறாமை கொண்டால், இருவரின் மனப்படிவங்களும் உங்களை பாதிக்கும். அதாவது, கிம் என்னை நேசித்தால், தெய்வீகத் தன்மையுள்ள எனது மனப்பதிவுகள் அவரை பாதிக்கும்; அதே வேளையில் நீங்கள் அவர் மீது பொறாமை கொள்வதானால், எனது எல்லையற்ற மனப்பதிவுகள் மற்றும் என் மீது கிம்**

அன்பு காட்டுவதால் விளையும் மனப்படிவங்கள் இரண்டும் உங்களை பாதிக்கும்.

எனவே, உடல் மற்றும் பொருள் சார்ந்த அன்பில் பொறாமைப் படுவது நல்லதல்ல; ஆன்மீக அன்பில் பொறாமை நல்லது. அன்பு இருக்கும் இடத்தில் பொறாமை இருக்கிறது. ஒன்று தானாகவே மற்றொன்றைப் பின்தொடர்கிறது; அதை உருவாக்கத் தேவையில்லை.

உதாரணமாக, நீங்கள் என்னை நேசிக்கும்போது, நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்க விரும்புகிறீர்கள், அதே வேளையில், உங்களிடமிருந்து வேறொருவரிடம் சென்றால், நீங்கள் வேதனைப்படுகிறீர்கள்.

மற்றுமொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், என்னை நேசிப்பவர்கள் என்னுடன் துன்பப்படுகிறார்கள். இதில் எந்தக் கேள்விக்கும் இடமில்லை. அவர்கள் என்னை நேசிப்பதன் மூலம் எனது துன்பங்களில் ஒரு சிறிய பாகத்தைக் குறைக்க முடியும். நீங்கள் கஷ்டப்பட வேண்டும் என்று நான் விரும்பவில்லை, ஆனால் நீங்கள் என்னை நேசிக்கும்போது கஷ்டப்படுகிறீர்கள், இது தானாகவே எனது துன்பத்தைக் குறைக்கிறது.

பீட்டர், இயேசுவை மிகவும் நேசித்தார், ஆனால் தினமும் காலையில் இயேசு, ஜானை முத்தமிடுவது வழக்கம்; பீட்டர் இதைக்கண்டு ஜான் மீது பொறாமை கொண்டார்.

பாபா இவ்வாறு கூறி முடித்தார், “ஒரு நாள், மலை மீது நின்று, நான் யார், எப்படி பிரபஞ்சத்தை உருவாக்கினேன் என்பதை விளக்குவேன். இது இந்தியாவில் வேறுபட்ட விஷயம்; அப்போது நான் கிழக்கு, மேற்கு இரண்டையும் இணைய வைப்பேன்.”

அதற்கு பதிலளித்த மின்டா, “அமெரிக்காவில் பலர் உங்களை நேசிப்பதால், உங்கள் துன்பத்தின் சுமை மிகவும் குறைவாக இருக்கும்” என்றார்.

பாபா உடனே “எல்லையற்ற எனது துன்பம் குறித்து, உங்களுக்கு எதுவும் தெரியாது. இதுபோன்ற ஓய்வு எனக்கு இருக்காது. இனிமேல் வேலை - ஒரு முறை நான் பேச ஆரம்பித்ததும் - மகத்தான வேலை” என்று கூறி முடித்தார்.

லுகானோவிற்குச் செல்லும் ரயிலில், மெஹர் பாபா தனது முகத்தை மூடி, உள்பணிகளில் ஈடுபட்டார். கிம் இரவு முழுவதும் பாபாவின் பாதங்களில் தலையை வைத்துக் கொண்டு, ‘விவரிக்க முடியாத ஒரு பேரின்பத்தில்’ தூங்கினார். அனைவரும் 1932, ஏப்ரல் 28ஆம் நாள் லுகானோ வந்தடைந்து, ‘கிராண்ட் ஈடன்’ ஹோட்டலில் (GRAND EDEN HOTEL) தங்கினர்.

அன்று மாலை, அவர்கள் ஒரு சிறிய ரயிலில், சுற்றியுள்ள மலைகளில் ஒன்றில் ஏறி, நகரம் ஏரி இவற்றின் காட்சியை ரசித்துப் பாராட்டினர். ஓர் அருமையான, சிறிய உணவகத்தில் அனைவரும் தேநீர், சூடான சாக்லெட் அருந்தினர், அங்கு பாபா, மாண்டோலினில் இசைத்த இசைக்கு நளினத்துடன் நடனமாடினார். இரவில், மண்டலி அனைவரும் இந்திய இசை நிகழ்ச்சி ஒன்றை நடத்தினர்.

அடுத்த நாள், பாபா, லுகானோ ஏரியில் ஒரு மணி நேரம் படகில் பயணம் செய்து, பின்னர் அவர்கள் ‘லோகார்னோ அமைதி ஒப்பந்தம்’ (LOCARNO PEACE TREATY) கையெழுத்திடப்பட்ட இடத்திற்குக் காரில் சென்றனர். அங்கிருந்து, ஒரு அழகான சரணாலயம், ஊருக்கு மேலே மலைப்பாதையில் கட்டப்பட்ட ‘மடோனா டெல் ஸாஸோ’ (MADONNA DEL SASSO CHURCH) தேவாலயத்திற்கு விஜயம் செய்தனர். பாபா ஏறக்குறைய பதினைந்து நிமிடங்கள் அங்கே அமர்ந்திருந்தார். இயேசு மற்றும் சீடர்களின் டெரகோட்டா சிற்பங்கள் ஆலயத்தை அலங்கரித்தன; தேவாலயத்தின் முன்புறம் அமைந்த பலிபீடத்தின் மேல், ஒரு பெரிய சிலுவை இருந்தது. அதைச் சுட்டிக்காட்டி பாபா விளக்கினார், “**நானே தான் சிலுவையில் அறையப்பட்டேன், இக்காரணத்திற்காக, தேவாலயத்திற்குள் நுழையும்போது நான் எனது தொப்பியை அகற்றவில்லை.**” பாபா பின்னர் இயேசுவின் சீடர்களின் வெவ்வேறு குணாதிசயங்களைப் பற்றி விளக்கினார், மேலும், மேரி மாக்டலீன் (MARY MAGDALENE) மனம் வருந்தி முறையிட்டு இயேசுவிடம் காட்டிய நேசத்தைப் பற்றியும் குறிப்பிட்டார்.

கடைசி இரவு போஜன நிகழ்வுகளைச் சித்தரிக்கும் சித்திரங்களைப் பார்த்து, பாபா இவ்வாறு கருத்துரைத்தார்:

**நான் ஜானை தீவிரமாக நேசித்தேன்; ஜான், யோவான் இருவரையும் அடிக்கடி நினைத்துப் பார்ப்பது உண்டு, ஆனால் பீட்டர் மீதும் மிகையான அன்பு வைத்திருந்தேன். இயேசுவையும் அவருடைய வட்டத்தையும் பற்றி, மக்களுக்கு இன்றும் தெரியாத பல விஷயங்கள் உள்ளன, பைபிள் போன்ற புத்தகங்களில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. நான் அதைப் பின்பு விளக்குகிறேன்.**

**இந்தியாவில், நான் அணியும் வெள்ளை நிற ஸத்ராவில், எனது மௌனத்தைக் கைவிடும் போது, மக்கள் என்னை இயேசுவாகக் காண்பார்கள். நான் சிலுவையில் அறையப்பட்ட அதே கிறிஸ்து. பிறரின் நலனுக்காக, நான் அதீத துன்பங்களுக்கு ஆளாகிறேன். இப்படி முழு உலகிலும் நான் துன்பங்கள் அனுபவிப்பதால், தினமும், ஒவ்வொரு கணமும் சிலுவையில் அறையப்படுகிறேன். இப்போது கூட!**

**இயேசுவின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு நகைச்சுவையான சம்பவம் எனது நினைவுக்கு வருகிறது. மிகவும் திடகாத்திரமான ஒருவர், இயேசு சிலுவையை சுமக்கும் போது, அவரை உதைக்க முயன்றார். ஆனால் அவர் மிகவும் கொழுகொழுப்பாக இருந்தார், அவரை** (என்னை) **உதைக்க முயன்றபோது, அந்த நபர் கீழே தடுக்கி விழுந்தது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.**

**எனது வட்டத்தின் உறுப்பினர் ஒருவரை அடக்கம் செய்ய ஒரு குழி தோண்டுமாறு, இயேசு** (நான்) **கட்டளையிட்ட போது, பீட்டர் தனது விரல்களால் முழு வேலையை முடித்தார், இதனால் கைகளில் கடுமையான காயம் ஏற்பட்டது, மேலும் ஒரு விரல் முறிந்து, சதை சிதைந்தது. ஆனால் அடுத்த நாள், நான் அதை வெறுமனே ஊதி குணப்படுத்தினேன்.**

அவர்கள் தேவாலயத்தை விட்டு வெளியேறிய போது, வெள்ளை தாடியுடன் ஒரு வயதானவர், கண்பார்வை இல்லாத பிச்சைக்காரர், இருக்கை ஒன்றில் அமர்ந்திருப்பதைக் கண்டனர். பாபா அவர் அருகில் அமர்ந்து கையைப் பற்றிக்கொண்டு, **“அவர் ஒரு நல்ல ஆத்மா; நான் அவரை நன்கு அறிவேன்”** என்று கூறி, அந்த முதியவருக்கு சிறிது பணம் கொடுக்குமாறு மண்டலியில் ஒருவரிடம் கூறினார்.

அவர்கள் மாலை 7:00 மணிக்கு லுகானோவிற்குத் திரும்பி வந்தனர்.

ஹோட்டலில் பாபாவின் உணவு அவரது அறையில் பரிமாறப்பட்டது. ஆதி சீனியரும் அவருடன் உணவு உண்டார். பின்னர் ஆதி இது தொடர்பாகக் கூறியதாவது:

சுவிட்சர்லாந்தில் நாங்கள் லுகானோ நகரில், அழகான ஏரிகள் சூழ்ந்த ஹோட்டல்களில் தங்கினோம். அன்றிரவு நான் பாபாவின் அறையில் அவருடன் உணவு உண்ண அமர்ந்ததும், ஏதோ ஒரு சாக்குப்போக்கில் பாபா என்னை எழுந்து - தண்ணீர், சோடா போன்ற ஏதாவது - எடுத்து வரக் கூறினார். நான் அதைக் கொண்டு வந்ததும், பாபா, “சரி, சரி! உட்கார்ந்து, உங்கள் உணவை உண்ணுங்கள்” என்று கூறுவதும், நான் உணவை வாயில் இடுகையில், “நான் சாப்பிட்டு முடித்துவிட்டேன், எனது கைகளைக் கழுவி விடுங்கள், கைகளைத் துடைக்க துண்டைக் கொண்டு வாருங்கள், பல் துலக்க பற்பசை எடுத்து வாருங்கள், கீழே சென்று செய்தித்தாளை எடுத்து வாருங்கள்!” என்று இப்படி ஒவ்வொன்றையும் கூறுவதற்கு இடையே, என்னை உணவு உண்ணவும் உத்தரவிட்டார். நான் நேரடியாக ஏரியில் குதிப்பது போல் உணர்ந்தேன்! ஒரே நேரத்தில் இரண்டு காரியங்களைச் செய்யும்படி அவர் என்னைக் கேட்டுக்கொண்டதால், நான் மனதளவில் முற்றிலுமாகச் சோர்வடைந்தேன்: உண்ணவும் அதே நேரத்தில் உண்ணாமல் இருக்கவும், அதுபோல, குரைக்கவும் குரைக்காமல் இருக்கவும், செய்யவும் செய்யாமல் இருக்கவும் வேண்டும்.

மார்கரெட் (க்ராஸ்க்) ஏப்ரல் 30ஆம் நாள் வந்து குழுவில் இணைந்தார். அன்று பிற்பகல் அனைவரும் ‘மவுண்ட் ப்ரீ’க்குச் (MT. BRE) சென்று, தேநீர் அருந்திய வேளையில், அவர்கள் வேடிக்கையாக கிட்டிப்புள் விளையாடியதை, பாபா ரசித்தார். இடைவிடாமல் மழை பொழிந்தது; அன்று மாலை அனைவரும் திரைப்படம் பார்க்கச் சென்றனர்.

கிட்டி டேவி, சுவிட்சர்லாந்து வருகைக்கான அனைத்து பொறுப்பையும் தனது சொந்த செலவில் ஏற்றுக்கொண்டார். பாபாவை மகிழ்விக்க கிட்டி, தன்னால் இயன்ற அனைத்தையும் செய்தார், பாபாவின் சேவையில் உண்மையாக உழைத்தார்.

இதையும் மீறி, மே 1ஆம் நாள், பாபா, கிட்டியைச் சுட்டிக்காட்டி, பிறரிடம், **“ஜீன்கோ,** (நியூயார்க் அன்பர்கள்) **கிம்கோவை விட என்னை அதிகம் நேசிக்கிறார்கள், ஏனெனில் நேற்று கிம்கோ என்னைத் தனியாக விட்டு விட்டு நடக்கச் சென்றனர்.**”

பாபா கூறியதைக் கேட்டு, கிட்டி கண் கலங்கினார். பாபா, கிட்டியை ஆறுதல்படுத்தி, “**நீங்கள் ஏன் அழுகிறீர்கள்? இதை நான் ஒரு நகைச்சுவை பேச்சாகத்தான் மொழிந்தேன். இங்கே** (லுகானோவில்), **சூரியனைக் காணவில்லை, மழையும் தொடர்ந்து பெய்து கொண்டிருக்கிறது, ஒட்டுமொத்த காலநிலை மந்தமாக மனச்சோர்வடையச் செய்வது, எனக்குப் பிடிக்கவில்லை, ஆனால் கிட்டியின் அன்பு என்னை இங்கே இருக்க வைத்தது. இல்லையெனில், இந்த சூழ்நிலையில் நான் ஒரு மணி நேரம் கூட இங்குத் தங்கியிருக்க மாட்டேன்.**

“**இந்த சாதகமற்ற காலநிலையில், உங்கள் அன்புதான் எனக்கு எல்லாமே. நீங்கள் அனைவரும் என்னை எப்படி நேசிக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இதுபோன்ற ‘அம்புகளை’ அவ்வப்போது ஏவி விடுவது, எனது** பணியின் **ஒரு பகுதியாகும்; இது உங்கள் சொந்த நலனுக்காக. இதன் மூலம் நான் உங்களுக்குள் அதிக அன்பை உருவாக்குகிறேன், நீங்கள் அதைப் பற்றிக் கவலைப்படவோ அல்லது வேதனையடையவோ கூடாது.**”

அன்று பாபா, டாக்டர் கனியோடு ‘பிங்-பாங்’ மேசைப் பந்தாட்டம் விளையாடினார்.

பின்னர், அனைவரும் ஃபோனோகிராஃப் பதிவுகளை இசைத்து ரசித்தனர். பாபா, உள்ளூர்வாசிகள் சிலருக்கு முன்னால், மார்கரெட்டிடம் அந்த இடத்திலேயே நடனமாடுமாறு அறிவுறுத்தினார். பயிற்சி பெற்ற ஓப்ரா பாடகரான கிம் ஒரு சில நீக்ரோ ஆன்மீகப் பாடல்களைப் பாடினார்.

1932, மே 2ஆம் நாள், மெஹர் பாபா அனைவருக்கும் கீழ்வரும் விளக்கங்களை அளித்தார்:

**அன்பின் பாதை ரோஜா மலர்களால் அல்ல முட்களால் நிறைந்திருக்கும். நுழையும் போது, முட்களை முத்தமிடுவது பெரும் துயரத்தை உருவாக்கும். ஆனால் அது மிகவும் அவசியம். உங்களுக்குக் கொப்புளங்கள் இருந்தால், ஒரு மருத்துவ நிபுணர் அறுவை சிகிச்சை செய்து, அவற்றை வெட்டித் திறந்து, உங்களுக்கு வலியைக் கொடுப்பார்; ஆனால் இந்த வலி உங்கள் சொந்த நலனுக்காகவே. அதற்காக, உங்கள் துன்பத்தை மருத்துவர் பொருட்படுத்துவதில்லை.**

**நானும் அவ்வாறே செய்கிறேன். நீங்கள் அனைவரும் என்றென்றும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதற்காக, நான் எனக்கே உரிய முறையில் செயல்படுகிறேன். எனது பணி இந்தத் துன்பத்தையும், பொறாமையையும் உருவாக்குகிறது, ஆனால் எனது கிம்கோ இதைப் புரிந்து கொள்ளத் தவறிவிடுவார்கள் என்று நான் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. தற்போதைய நிலைமையைப் பார்க்கும்போது, உங்களுக்குப் புரியாததால், நான் எனது வழியில் செய்யக் கூடாது என்று தோன்றுகிறது.**

“ஆனால் பாபா, நாங்கள் அதைப் புரிந்து கொள்கிறோம், உங்கள் விருப்பப்படி நீங்கள் செய்வதையே நாங்கள் விரும்புகிறோம். உங்கள்

மகிழ்ச்சியே எங்களுக்கு முக்கியம், எங்களுடையது அல்ல" என அனைவரும் பதிலளித்தனர்.

இதைக் கேட்ட பாபா, மின்டாவைத் தனியாக அழைத்து, புரிய வைக்க மிகவும் சிரமப்பட்டார். பாபாவின் துணிமணிகளைத் துவைப்பது, அவரது அறையை சுத்தம் செய்வது, தலைமுடியை வாரிவிடுவது போன்ற தனிப்பட்ட வேலைகளை கிம், மின்டா இருவரும் செய்ய விரும்பியதால், ஒருவருக்கொருவர் பொறாமையுடன் இருந்தனர்.

அதன் பின்பு, பாபா அனைத்து ஆங்கில பெண்மணிகளையும் திரும்ப அழைத்து, "**நான் உங்களில் ஒவ்வொருவரையும் சோதித்து வருகிறேன், இதைச் சார்ந்த என்னுடைய எதிர்கால பணிகளுக்காக நீங்கள் அவற்றை எப்படித் தாங்கிக் கொள்கிறீர்கள் என்பதை நான் பார்க்கிறேன்**" மேலும் கிட்டியிடம், "**நீங்கள் சோதனையை நன்றாகத் தாங்கிக் கொண்டீர்கள்**" என்று குறிப்பிட்டார்.

லுகானோவில் வானிலை மந்தமாக இருந்தது; பல நாட்களாக, சூரியனைக் காணவில்லை. பாபா இவ்வாறு தெரிவித்தார், "**நான் என்னுடன் மோசமான வானிலையையும் கொண்டு வந்தது போலத் தெரிகிறது. எனது ஓய்வைத் தடுக்க, மாயா தன்னால் முடிந்ததைச் செய்கிறாள். ஆனால் நான் திறவுகோலை சுழற்றி, குறைந்தபட்சம் ஒரு நாளாவது சூரியனை வெளிவர வைப்பேன்.**"

லுகானோவின் துன்புறுத்தும் வானிலையிலிருந்து சிறிது நிவாரணம் பெற, மே 3ஆம் நாள், கிட்டி 'மவுண்ட் ஜெனரோஸோ'விற்கு (MT. GENEROSO) ஒரு படகு சவாரியை ஏற்பாடு செய்தார். மலைகள் மற்றும் ஏரியின் கம்பீரமான காட்சிகள் அழகாக இருந்தன.

படகில், ஒரு வயதான சுவிஸ் தொழிலாளி பாபாவின் எதிரில், கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் அமர்ந்து, ஒரு சிறிய துறைமுகம் வந்ததும், படகை விட்டுச் சென்றார். அவர் படகிலிருந்து இறங்கும்போது, பாபாவைத் திரும்பிப் பார்த்து சிரித்தார். '**அந்த மனிதரைப் பற்றிய அசாதாரணமாக எதையேனும் கவனித்தீர்களா?**' என்று பாபா கேட்டதற்கு, இல்லை என அவர்கள் பதிலளித்ததால், பாபா விளக்கினார்:

**"அவர் எனது முகவர் ஆவார். முழுமையான ஓய்வுக்காக நான் இங்கு வந்துள்ளதால், தற்காலிகமாக எனது பணியை வேறொருவரிடம் ஒப்படைக்க வேண்டும். அதை நான் இன்று காலை, இந்த மனிதனிடம் ஒப்படைத்தேன். அதற்காக நான் அவரை இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆன்மீகத் தளத்திலிருந்து நான்காவது மற்றும் ஐந்தாவது நிலைக்குக் கொண்டுவர வேண்டியிருந்தது, இதனால் நான் அவருக்கு வழங்கும் பணியை அவர் மேற்கொள்ள முடியும்.**

**"எனது பணியின் இத்தகைய பரிமாற்றம் ஓர் அடர்ந்த காடு, உயர்ந்த மலை, தண்ணீர் அல்லது மக்கள் கூட்டத்தில் நடக்க வேண்டும். அதனால்தான் அவர் வெளியேறும் வேளையில் என்னைப் பார்த்து சிரித்தார். படகில், அவரிடமிருந்த கழியால் எனது 'தாளத்திற்கு' எவ்வாறு பதிலளித்தார்**

**என்பதை நீங்கள் கவனித்திருக்க வேண்டும்!”** பாபா, உடனே டாக்டர் கனியிடமிருந்த கழியை வாங்கி, தாளமிட்டுக் காட்டினார். பாபா மண்டலியில் ஒருவர் மூலமாக ரொட்டி மற்றும் வெண்ணெயை அவருக்கு அனுப்பிவைத்தார்; அந்தப் பெரியவர் அதை அங்கேயே உண்டார்.

**“என்னுடைய இந்த முகவர் திருமணமானவர், ஆனால் அவரது குடும்பத்தில் எவருக்கும் அவரது ஆன்மீக அந்தஸ்தின் நிலை குறித்து எதுவும் தெரியாது. ஐரோப்பாவில் சாது, வாலி, யோகி நிலையை எய்தியவர்கள்** (மூன்று மற்றும் ஆறாவது ஆன்மீகத் தளத்திற்கு இடையில் நிலைகொண்டவர்கள்) **மிகக் குறைவான எண்ணிக்கையில் உள்ளனர். ஏழாவது தளத்தில் ஒருவர் மட்டுமே உள்ளார்; அவர் பூமியில் வாழும் 56 இறை உணர்வை எய்திய ஆத்மாக்களில் ஒருவர். ஐரோப்பாவில் ஆறாவது தளத்திலும் ஒருவர் உள்ளார். எனது வட்டத்து உறுப்பினர்களோடு ஒப்பிடுகையில் இந்த ஆன்மீக அந்தஸ்து என்பது எதுவும் இல்லை. எனது வட்டத்து சீடர்கள் அனைவரும் விரைவில் இறைநிலையை அடைந்து ஏழாவது தளத்தில் நிலைகொள்வர்; அவர்கள் அனைவரும் காலங்காலமாக எனது கட்டளைகளைப் பின்பற்றி வருபவர்கள்.**

**“இந்தக் கடைசி நான்கு நாட்களில், அடுத்த நவம்பரில் ஐரோப்பாவில் எனது பணியின் அடித்தளத்தை நிறுவ, உலகளவில் விரைவாக பணிபுரிந்து கொண்டிருந்தேன், இன்று காலை இரண்டு மணியளவில் அது நிறைவடைந்தது. இப்போது சூரியன் வெளியே வந்துவிட்டது, அதற்காக, இந்தக் கடைசி நான்கு நாட்கள் சிரமங்களை சந்திக்க வேண்டியதாயிற்று!**

**“இன்னும் நான் சோகமாக உணர்கிறேன். ஏன்? கோடிக்கணக்கான இறைநிலையை அடையாத ஆத்மாக்களில் நான் பிணைந்திருப்பதைக் காணும் போது எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடியும்? கடைசி துளி இறைநிலையை அடையும் வரை நான் மகிழ்ச்சியாக இருக்க முடியாது.**

**“இந்த நாட்டின் இயற்கைக்காட்சி அற்புதமானது”** என்று கூறி பாபா அதை, காஷ்மீருடன் ஒப்பிட்டார்.

அவர்கள் 5,600 அடி, ‘மவுண்ட் ஜெனரோஸோ’வின் (MT. GENEROSO) பனி மூடிய உச்சியை, கம்பி ரயில் வழியாகச் சென்றடைந்தனர். பிரியமானவர்களின் அன்பு கடைசியாக, சூரியனை வெளியே வரக் கட்டாயப்படுத்தியது. பாபா மிக்க மகிழ்ச்சியாகவும், விளையாட்டுத்தனமாகவும் இருந்தார்; அனைவர் மீதும் பனி பந்துகளை வீசினார்.

அதன் பின்னர், அவர்கள் மலை உச்சியில் அமைந்த ஸ்வைட்ஸர்ஹோஃப் (SCHWEIZERHOF) ஹோட்டலில் மதிய உணவை உண்டனர். நல்ல மனநிலையில் இருந்த பாபா, மேலும் ஆன்மீக விளக்கங்களை அளித்தார். புத்துணர்ச்சிப் பெற்ற குழு, அன்று மாலையில் லுகானோவிற்குத் திரும்பி வந்தது.

ஆனால் மறுநாள், 1932, மே 4ஆம் நாள் மகிழ்ச்சியான ஒன்றல்ல, ஏனெனில் 'பாபாவின் தந்தையார் ஏப்ரல் 30 அன்று அவரது 79 வயதில் காலமானார்' என்ற செய்தி வந்தது. ராம்ஜூ, லண்டனில் குயன்டின் வழியாக ஒரு தொலைத்தந்தி அனுப்பியிருந்தார், 'தந்தை ஷெரியார்ஜி நேற்று இரவு மும்பையில் காலமானார்.' இந்தச் செய்தி லுகானோவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

முன்னதாக, ஏப்ரல் 30 நள்ளிரவில், பாபா திடீரெனக் கைகளைத் தட்டி ஆதி சீனியரை அழைத்தார். பாபா தனது முகவாயைச் சுட்டிக்காட்டி, கைகளை மேல்நோக்கி வீசினார். ஆனால் ஆதியால் பாபாவின் சைகைகளைப் புரிந்துகொள்ள முடியாததால், பாபா அவரைத் திருப்பி அனுப்பிவிட்டார். இச்செய்தி வந்த பின்புதான், அந்த இரவு, பாபா வெளிப்படுத்திய சைகையின் அர்த்தத்தை ஆதி உணர்ந்தார்.

பாபா தனது சகோதரர்களான பெஹராம், ஆதி ஜூனியர் இருவரையும் ஆறுதல்படுத்தி, மரணத்தைப் பற்றி அவர்களுக்கு விளக்கினார், "**மரணம், தூக்கத்தைப் போலத் தேவையான ஒன்று! ஒரு நபர் தூக்கத்திலிருந்து விழித்ததும், அவர், தான் இருந்தது போலவே தன்னைக் கண்டுகொள்கிறார்; இறப்பிற்குப் பின்னர், ஒரு நபர் தன்னை ஒரு வித்தியாசமான சூழ்நிலையில், வேறுபட்ட உடலில் காண்கிறார். இறப்பு, பிறப்பு இரண்டும் கனவுகள். ஒரு கனவுக்காக மகிழ்ச்சியாக அல்லது பரிதாபமாக இருப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது?**

"**போபோவின் மரணம் தூக்கம் அல்ல. அவர் அதைத் தாண்டி எப்போதும் விழித்திருக்கும் நிலையை எட்டியுள்ளார்! அவர் விடுதலையாகி முக்தியை அடையப் பெற்றுள்ளார்.**"

மெஹர் பாபா, மெமோவிற்கு தொலைத்தந்தி அனுப்பினார்: "**தந்தை ஷெரியார்ஜி என் அருகில் இருக்கிறார். கவலைப்பட வேண்டாம். உங்கள் உடல்நிலையை, கவனத்தில் கொள்ளுங்கள். நான் ஆதியை அனுப்பி வைக்கட்டுமா? உடனடியாகத் தொலைத்தந்தி அனுப்புங்கள். பாபா.**"

தந்தையின் மறைவின் போது, ஆதி ஜூனியர், பெஹராம் இருவரும் பாபாவுடன் இருந்தனர், ஜால்பாய் சீனாவில் இதர மண்டலியுடன் இருந்தார். மெமோவும் மணியும் மும்பையில் போபோவுடன் இருந்தனர், அங்கு அவர் ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இப்போது, **ஷெரியார்ஜி அவரது உயிரினும் மேலான, பிரியமான மகனுடன் என்றென்றும் இருக்கிறார்! போபோ ஒரு தெய்வீக வெகுமதியைப் பெற்றார் என்றால் மிகையாகாது. மேலும் அவரது சன்யாசி வாழ்க்கை நிரந்தர முடிவுக்கு வந்தது.**

ஷெரியார்ஜியின் உடல் மும்பையில் அமைதி கோபுரத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

பாபாவின் குழந்தை பருவ நண்பர் பெய்லி, பூனாவில் போபோவை கவனிக்க மெமோவிற்கு உதவினார். அவருடைய குறிப்புப் புத்தகத்தில் எழுதியுள்ளதைப் பார்ப்போம்:

ஷெரியார்ஜியின் கடைசி காலத்தில் நோயால் அவதிப்பட்ட போது, மாதாஜி (ஷிரீன்மாய்) பூனாவில் மருத்துவர்கள் மீது அதிக நம்பிக்கை இல்லாததால், அவரை மும்பை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். ஷெரியார்ஜியை மும்பைக்கு அழைத்துச் சென்ற அந்நாளில், நான் அவரைப் படுக்கையிலிருந்து ஒரு பூவைப் போலத் தூக்கி, வீட்டின் படிகளில் இறங்கி, காத்திருக்கும் காரிலும், பின்பு ரயிலிலும் மெத்தையில் படுக்க வைத்தேன்.

அந்த நேரத்தில், என் இரு கைகளையும் அவரது மிதமான கைகளில் எடுத்து, லேசாக அழுத்தி, நான் அவருக்காக எடுத்த அனைத்து கஷ்டங்களுக்கும் ஷெரியார்ஜி மன்னிப்புக் கோரினார். நான் செய்த அனைத்து சேவைக்கும் நன்றி தெரிவித்த பின்னர், "உன்னை மீண்டும் பார்ப்பேன் என்று நான் நம்பவில்லை. மரணத்திற்கு, சரணடைவதற்காக மட்டுமே நான் மும்பை மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறேன். நான் அவரை நினைவு கூர்ந்தேன் என்று பாபாவிடம் கூறுங்கள்; என் அன்பையும் எனது வணக்கங்களையும் அவருக்குத் தெரிவிக்கவும். நீங்களும் எனது கடைசி வணக்கங்களை ஏற்றுக்கொள்ளுங்கள், எப்பொழுதும் பாபாவிடம் அன்புடனும், பணிவுடனும் இணைந்திருங்கள். அவர் மட்டுமே உங்களுக்கு உதவவும் நன்மை செய்யவும் முடியும். உங்களுக்கு எனது ஆசீர்வாதங்கள்."

பெய்லி கூறுவது போல், பாபாவின் தந்தை, தனது மகன் அடைந்த உயர்ந்த நிலையைப் பற்றி எப்போதும் அறிந்திருந்தார்:

பல ஆண்டுகளுக்கு முன்பு, ஷெரியார்ஜி, பாபாவை 'இறைநிலையை எய்திய புதல்வன்' என்று குறிப்பிடத் தொடங்கினார்; பாபாவிற்கு எழுதும் அனைத்து கடிதங்களிலும் இப்படித் தொடங்குவது வழக்கம். ஒரு சந்தர்ப்பத்தில், ஷெரியார்ஜி, அவரது இதயத்தைத் திறந்து என்னிடம் எடுத்துரைத்தார், "நான் இவ்வளவு கஷ்டங்கள் அனுபவித்து (ஆன்மீக ரீதியில்) அடைய முயன்றதை, மேர்வான் ஏற்கனவே அடைந்துவிட்டார். எனது சிறுவயது முதல், நான் திருமணம் செய்து கொள்வது வரை, எனது வாழ்க்கையில் நான் கடவுளைத் தேடுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டேன். அதற்காக நான் நிறைய கஷ்டப்பட்டேன், நிறைய அனுபவங்களை அடையப் பெற்றேன், ஆனால் அந்த இறுதி இலக்கை என்னால் எய்த முடியவில்லை. அதற்குக் காரணம் அது எனது விதியில் இல்லை, ஆனால் அது எனது குழந்தைக்கு விதிக்கப்பட்டது. நான் விதை விதைத்தேன், ஆனால் கனி எனது மகனால் அறுவடை செய்யப்பட்டது, இதை எண்ணி பெருமகிழ்ச்சி அடைகிறேன்."

ஷெரியார் தொடர்ந்து பெய்லியிடம் கூறியதாவது:

"ஒரு குடும்ப மனிதனாக இருப்பதால், இந்த மகிழ்ச்சி எனக்கு சாதாரண விஷயமல்ல. எனது 'இறைநிலையை எய்திய புதல்வன்' மூலமாக, நாங்கள், அவருடைய பெற்றோர், கடவுளோடு ஒன்றாகி, அந்த இறுதி இலக்காகிய முக்தியை அடைவோம். அவர் இப்போது எனக்கு அந்த மரணத்தையும், நித்திய அமைதியையும் தருவார். நான் அதற்காக மட்டுமே காத்திருக்கிறேன்."

ஆதிகால புருஷரின் தந்தையை, காலம் வணங்குகிறது: "அன்புள்ள ஷெரியார்ஜி, உலகம் உங்களை எப்பொழுதும் நினைவில் கொள்ளும், உங்கள்

துறவற வாழ்க்கையிலிருந்து ஒரு பாடம் கற்றுக் கொள்ளும். பாரசீகத்தை விட்டு வெளியேறி இந்தியாவிற்குக் குடிபெயர்ந்ததன் மூலம், தெய்வீகக் குரலைக் கேட்டு, அவதார புருஷரின் உலக தந்தையாக இருந்து, உங்கள் துறவற வாழ்க்கையில் அனைத்தையும் அடையப்பெற்றதன் அடையாளமாகும். உங்கள் வாழ்நாள் முழுவதும் 'எஸ்தான், எஸ்தான், எஸ்தான்' என்றழைத்து நீங்கள் அமைதியற்றவராக இருந்தீர்கள்! ஷெரியார்ஜி, உங்களுக்கு எங்கள் ஆழ்ந்த வணக்கங்கள். நீங்கள் வென்றுவிட்டீர்கள்! நீங்கள் அனைத்தையும் அடையப் பெற்றுள்ளீர்கள்! எங்கள் அன்பின் மணம் வீசும் மலரை உங்கள் காலடியில் வைக்கிறோம்!"

புவாஸாஹேப் நாசிக் நகரிலிருந்து பெர்சியாவிற்குத் திரும்பிச் செல்ல விரும்புவதாக, பாபாவிற்குக் கடிதம் எழுதியிருந்தார். பாபா சீனாவில் இருக்கும் ஹெர்பெர்ட் டேவிக்கு தொலைத்தந்தி அனுப்பி, விஷ்ணு, ராவ்ஸாஹேப் இருவரையும் நாசிக்கிற்கு, திருப்பி அனுப்புமாறு அறிவுறுத்தினார்; ருஸ்தமும் சீனாவில் இருந்ததால், ஆதி சீனியரை பாபாவுடன் அமெரிக்காவிற்கு அழைத்துச் செல்வதற்கு பதிலாக, லண்டனிலிருந்து நாசிக் திரும்பும்படி அவர் கேட்டுக்கொண்டார்.

மெஹர் பாபாவின் மேற்கத்திய சீடர்களில் சிலர் 'பாபா இரவில் தூங்குவது உண்டா?' என யோசனை செய்து கொண்டிருந்தனர்.

அவர்கள் கெடமெரியோ (CADEMARIO) கிராமத்திலிருந்து திரும்பிய போது, பாபா அனைவரையும் தனது அறைக்கு அழைத்தார். மயங்கிய நிலையில் தோற்றமளித்த பாபா கூறினார்:

**நான் தூங்குவதில்லை, ஆனால் ஆறாவது மற்றும் ஏழாவது ஆன்மீகத் தளங்களுக்கு இடையே ஒரு குறிப்பிட்ட 'சந்திப்பில்' ஓய்வெடுக்கிறேன். சில சமயங்களில் அந்த நித்திய நிலையிலிருந்து 'கீழே வருவது' மிகவும் கடினம். இந்த இடத்தில் ஓய்வெடுக்கும்போது, சிறிதளவு சத்தம் கூட இருக்கக்கூடாது, ஏனெனில் அது தீங்கு விளைவிக்கும். ஒரு முறை மெஹராபாத்தில், சில இடையூறுகள் காரணமாக, நான் அதீத கஷ்டங்களுக்கு ஆளாக வேண்டியிருந்தது. எனது கண்களில் கண்ணீர் நிரம்பியிருந்தன; நான் தரையில் உருண்டு புரளும் அளவுக்குக் கஷ்டங்களை அனுபவித்தேன்.**

**நிர்விகல்ப சமாதி (நான் கடவுள்) எனும் நிலையிலிருந்து, சாதாரண மனித உணர்வை அடைய, நான் மிகுந்த வேதனையை அனுபவிக்க வேண்டியதாயிற்று. ஸாஹஜ் சமாதி** (கடவுள் உணர்வோடு உலக உணர்வையும் கொண்டிருப்பது) **எனும் நிலையை எய்துவது எல்லையற்ற வேதனையாகும். அந்த நிலையிலிருந்து கீழே இறங்கி வர சிறிதளவு ஆசை இல்லாத போதும், உலகளாவிய கடமையின் பொருட்டு இறங்கி வர வேண்டிய கட்டாயம்.**

**எனது உலகளாவிய மனதின் மூலமாக, நான் அளவிலா துன்பங்களுக்கு ஆளாகிறேன்; எல்லையற்ற பேரின்பம் காரணமாக, நான் அளவிலா ஓய்வில் இருக்கிறேன். துன்பத்திற்கு ஆட்படுவதன் அர்த்தம் என்னவெனில், மனிதகுலத்தின் இரட்சிப்புக்காக உழைப்பதும், அந்தக் கடமைக்காக உலகில் வருவதும்** (நிர்விகல்ப சமாதி முதல் சாதாரண மனித உணர்வு வரை) **ஆகும். நான் அவதரிப்பது இந்த நோக்கத்திற்காகத்தான்!**

**இந்த 'இறை நாடகம்' நித்தியத்திலிருந்து, படைப்பு உருவான நாளிலிருந்தே நடந்து கொண்டிருக்கிறது, ஆனால் எனது அளவிலா துன்பத்தின் விளைவு, பின்னணியில் உள்ள எல்லையற்ற ஆனந்தத்தால் தணிக்கப்படுகிறது; இருப்பினும், இந்த எல்லையற்ற பேரின்பம் இருந்தபோதிலும், நான் எல்லையற்ற துன்பத்தை அனுபவிக்க வேண்டும். அதே வேளையில், நான் இரண்டையும் கடந்தும், இரண்டிற்கும் மேலாகவும் இருக்கிறேன்.**

மெஹர் பாபா தொடர்ந்து, அவருடைய ஐந்து வயதில் ஏற்பட்ட அனுபவத்தை விவரித்தார்; பல்வேறு ஒளிரும் நிறங்களில் வட்டங்களுக்குள் வட்டங்களை, தன் முன்னால் பார்த்த பிரமிப்பில் மயங்கி விழுந்தார்:

**இன்று எல்லாவற்றின் உண்மையான அனுபவமும் என்னிடம் உள்ளது, மேலும் பிரபஞ்சமும், படைப்பும் என்னிடமிருந்து வெளிப்படுவதையும், வெளிப்படுத்துவதையும் உணர்கிறேன். அப்போது நான் வெறுமனே பார்த்ததை இன்று நான் உணர்கிறேன். படைப்பு என்பது, பரிணாம வளர்ச்சி மூலமாக மறுபடியும் உருவாக்குவது. இது ஒரு முடிவில்லாத விளையாட்டு!**

**அதையெல்லாம் எனது இரகசிய புத்தகத்தில் விரிவாக விளக்கியுள்ளேன். அந்த ரகசியங்களை அறிந்து, விஞ்ஞானிகளும் ஆச்சரியப்படுவார்கள். இவை தெளிவற்ற பேச்சுகளாக இல்லாமல், விஞ்ஞான வாதங்களால் நிரூபிக்கப்பட்டு, ஆதரிக்கப்படும் உண்மைகளாக இருக்கும். இது எதிர்கால உலகளாவிய 'பைபிளாக'த் திகழும், அதன் நேரடி அர்த்தத்தில் அல்ல, ஆனால் எல்லா மதத்தையும் சார்ந்த மக்களும் புரிந்து கொள்ளும் புத்தகமாக விளங்கும்.**

கிம்கோவின் அறையில் பாபா, தனது அன்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த வேளையில், பாரமவுண்ட் நியூஸ் ரீலில் (PARAMOUNT NEWSREEL) பாபா அளித்த செய்தியை அனைவரும் பாராட்டினர்; அது லண்டன் செய்தித்தாள்களில் வெளிவந்தது. '**அனைத்து மதங்களும் ஒரே சரத்தில் கோர்க்கப்பட்ட பல மணிகள் போல்**" என்ற பாபாவின் கருத்து பெரும் பரபரப்பை உருவாக்கியது.

செய்தியை வாசித்த பின்பு, ஃபிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதி பால் டுமெர் (PAUL DOUMER) ரஷ்ய கம்யூனிஸ்டான பாவெல் கோர்குலோவ் (PAVEL GORGULOV) என்பவரால் படுகொலை செய்யப்பட்டதாகச் செய்தி வந்தது. "**எனது முகவர்கள்**

**அனைத்து விஷயங்களையும் துரிதப் படுத்துவதாகத் தெரிகிறது**” என்று பாபா கருத்துத் தெரிவித்தார்.

அவ்வேளையில் உலகப் போரின் சாத்தியம் குறித்து பேச்சு எழுந்தது, பாபா பதிலளித்தார், “**உலகப் போர் உருவாகும். அதன் தீவிரமான உடல் ரீதியான துன்பங்கள் - படுகொலைகள் போன்றவற்றின் தாக்கத்தை, நானே என் மீது எடுத்துக் கொண்டால், போரைத் தவிர்க்க முடியும். அப்படியானால், என் உடல் பாதிக்கப்பட்டு பல்வேறு நோய்களால் நான் அவதிப்படுவேன். எந்தவொரு நிகழ்விலும், எனது பணியின் முடிவு, ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். அனைவரின் துன்பத்தையும் நான் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். நான் அவ்வாறு செய்யாவிட்டால், அது உலக மக்களால் தாங்க முடியாததாக இருக்கும்.**”

(பாபாவின் உடல் துன்பத்தின் அறிகுறிகள் ஏற்கனவே தெளிவாகத் தெரிந்தன: மும்பையிலிருந்து புறப்பட்டதும், பாபா வயிற்றுக் கோளாறால் அவதிப்பட்டது, சீனாவிற்கும் ஜப்பானுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலுடன் ஒத்துப்போனது. கடந்த சில நாட்களாக, அவர் மீண்டும் மீண்டும் கடுமையான தோல் அரிப்பால் அவதிப்படுகிறார்.)

பாபாவின் வார்த்தைகள் அவர்களின் கண்களில் கண்ணீரை வரவழைத்தன. அனைவரும் அதைப் பற்றி பல நாட்கள் விவாதித்தனர்; கிம், மின்டா இருவரும் பாபாவிடம் அவர், துன்பத்தின் முழுத் தாக்கத்தையும் தாங்க வேண்டாம், ஆனால் அதில் சில பாகத்தை அவர்களுக்கும் வழங்குமாறு வேண்டினர். அதற்கு பாபா, “**எனது துன்பத்தை என்னால் மட்டுமே தாங்க முடியும். அதை எவருடனும் பகிர்ந்து கொள்ள முடியாது**” என்று பதிலளித்தார்.

எந்தவொரு நிகழ்வும் அவர்களை பாதிக்காத முறையில், பாபா அனைவரையும் உறுதியான தைரியசாலிகளாகத் தயார் செய்து கொண்டிருந்தார்.

1932, மே 7ஆம் நாள், மெஹர் பாபா தனது பணியை மூன்று பாகமாகப் பிரிக்க முடிவு செய்துள்ளதாக விளக்கினார்:

- **ஒன்று - துன்பத்தின் சில பகுதியை நான் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும்.**
- **இரண்டு - சில தவறான பிரச்சாரத்திலும், என்னைப் பற்றிய உண்மைகளைத் திரித்துக் கூறுவதிலும் செலவிடப்படும்.**
- **மூன்றாவதாக, ஆங்காங்கே ஒரு சில நாடுகளில் சிறிய சண்டை சச்சரவுகள் (போர்கள்), கிளர்ச்சிகள் போன்றவற்றில் செலவிடப்பட வேண்டும்.**

இந்த ஆறுதலான வார்த்தைகள் அனைவருக்கும் சற்று இதமாக இருந்தன. எந்தவொரு நிகழ்விலும், மனிதகுலத்தின் துன்பத்தின் முழு சுமையும், பாபா உலகளாவிய மனதைக் கொண்டிருப்பதால், அவரின் மெல்லிய தோள்களில் விழும் என்பது அவர்களுக்கு இன்னும் தெரியாது.

கிம்கோ, “பாபா, தயவுசெய்து துன்பத்தின் பெரும்பகுதியை உங்களுக்கு எதிராகத் திருப்பி, எதிர்ப்பாக மாற்றி, மீதமுள்ளதை வேறு வழியில் செலவிடுங்கள்” என்றனர்.

பாபா அதைக் கேட்டு சிரித்தார்; உண்மையில் எதிர்ப்பு ஆரம்பித்திருப்பதை அவர்கள் அறியவில்லை. லண்டன் பத்திரிகைகளில், பாபாவின் மகத்துவத்தைப் பற்றி அதிக அளவில் எழுதப்பட்டிருந்தது. ஆனால் அது பாபாவைத் திருப்தி அடையச் செய்யுமா? இல்லை, அவரது பிரியமானவர்களின் அன்பை வலுப்படுத்த, சில விமர்சனங்களும் விரோத போக்குகளும் இருக்க வேண்டும், அதற்கு வேண்டிய அடித்தளத்தையும் அவர் ஏற்கனவே அமைத்துவிட்டார்.

அவர்கள் பேசி முடித்த ஒரு மணி நேரத்திற்குள், கிட்டியின் தந்தையிடமிருந்து வந்த கடிதத்தில், சில லண்டன் செய்தித்தாள்களில் பாபாவைப் பற்றி அவதூறான, விரும்பத்தகாத அறிக்கைகள் வெளிவந்ததாகவும், அதை உடனடியாக நிராகரிக்க வேண்டும் என்றும் அவர் நினைத்தார். கெ.ஜெ. தஸ்தூரால் தூண்டப்பட்ட பால் ப்ரண்டன், பாபாவைப் பற்றிய சில தவறான கட்டுரைகளை ‘ஜான் புல்’ (JOHN BULL) என்ற வார இதழில் வெளியிட்டார், இந்தப் பத்திரிகை, சந்தேகத்திற்குரிய மோசடிகளை அம்பலப்படுத்துவதில் பெயர் போனது! மெஹர் பாபா ஒரு திரைப்பட அரங்கம் மற்றும் மோட்டார் கேரேஜ் (MOTOR GARAGE) வைத்திருப்பதாகவும், ஒரு மதுபான கடைக்குச் சொந்தக்காரர் மேலும் பெண்மணிகளையும் பணியமர்த்தி உள்ளதாகவும் ப்ரண்டன் எழுதியிருந்தார்.

இதைக் கேட்ட பாபா அவர்களை ஆறுதல்படுத்தினார், **“கவலைப்படாதீர்கள், இது ஒரு நல்ல விஷயம். இது எனது விளையாட்டின் ஓர் அம்சம், இந்த சூழ்நிலையை எதிர்கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த எதிர்ப்பை வேண்டுமென்றே, மேற்கத்திய நாடுகளில் நான் மேற்கொள்ளும் பணிக்கு, ஒரு பெரிய உந்து சக்தியை அளித்து, ஆன்மீக ‘பூகம்பம்’ மற்றும் எழுச்சிக்குத் தேவையான விளைவை ஏற்படுத்தும் திட்டத்தில், நான் உருவாக்கியுள்ளேன். ஆனால் நான் விரும்புவது என்னவெனில், அதில் நீங்கள் சற்றும் கவனம் செலுத்தக்கூடாது.**

**“என்னுடைய மண்டலி என்னையும் எனது விளையாட்டையும் அறிவார்கள்; எனவே அவர்களை எதுவும் பாதிப்பதில்லை. ஆனால் நீங்கள் சிறிதளவும் வருத்தப்படக்கூடாது என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். சில நிமிடங்களுக்கு முன்புதான், நீங்கள் எனது துன்பத்தின் பெரும்பகுதியை விரோதப் போக்கைக் கடைப்பிடிப்பதன் மூலம் விநியோகிக்கச் சொன்னீர்கள்; இப்போது அது நடந்துவிட்ட தருணத்தில், நீங்கள் ஏற்கனவே கவலைப்படத் தொடங்கிவிட்டீர்கள். இதைப் பற்றி சிறிதும் சிந்திக்க வேண்டாம்! இது எனது சுய விளையாட்டு, அதற்கு யார் பொறுப்பு என்று எனக்குத் தெரியும்.”**

மார்கரெட், பாபாவிடம், “பாபா, யார் இதைச் செய்தார்கள் என்று எங்களுக்குத் தெரிவிப்பீர்களா? செய்தித்தாள்களில், யார் இந்தக் கட்டுரையை எழுதியது என்பது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.”

பாபா சிரித்துக்கொண்டே கூறினார்:

நீங்கள் தெரிந்து கொள்ள விரும்புவதால், நான் சொல்கிறேன். இதைச் செய்தவர் ரஃபேல் ஹர்ஸ்ட் - பால் ப்ரண்டன் (RAPHAEL HURST – PAUL BRUNTON). அவர் லண்டனில் எனக்கு எதிராக எதிர்ப்பை உருவாக்குகிறார். பாவம், அப்பாவி மனிதர்; அவரைக் குறை கூறுவதை விட, நாம் பரிதாபப்பட வேண்டும். அவருக்குத் தெரியாமலே, பால் ப்ரண்டன், இந்தியாவின் கெ.ஜெ. தஸ்தூரின் கருவியாகப் பயன்படுத்தப்படுகிறார்.

உண்மையான நிலைமை, உள் விவரங்கள் மற்றும் நோக்கம் பற்றி அவருக்குத் தெரியாது. இந்தப் பகை அனைத்திற்கும் தஸ்தூர்தான் காரணம். என்ன பாசாங்குத்தனம்! என்ன கீழ்த்தரமான செயல்! அவர் எனக்கு எதிராக, தவறான பிரச்சாரங்களை உருவாக்கி வருகிறார், நான் வெளித்தோற்றத்திற்காக மட்டுமே ஆஷ்ரமங்களை இயக்குகிறேன், ஊதியம் பெறும் பெண் ஊழியர்களை வைத்திருக்கிறேன், மக்களை ஏமாற்றுவதற்காக பொது வாழ்வில் மௌனம் காப்பது போல நடிக்கும் அதே வேளையில் மண்டலியுடன் பேசுகிறேன். ஆனால் உண்மைகள் வேறுபட்டவை, அவற்றை நான் உங்களிடம் வைத்திருக்கும் அன்பால் இங்கே தெளிவுபடுத்துவேன்.

எனது நெருங்கிய சீடரான ருஸ்தம், இந்தியாவில் நிறுவியுள்ள சினிமா மற்றும் மோட்டார் கேரேஜை எனக்காக அர்ப்பணித்துள்ளார், இதில் வரும் வருமானத்தை எனது பணிக்காகப் பயன்படுத்த முடியும். மதுபானக்கடை ஒரு நெருங்கிய சீடருக்குச் சொந்தமானது, அங்கு எனது ஆரம்பகால சீடர்கள் கூடுவதும், ஆன்மீக சொற்பொழிவுகள் வழங்குவதும் வழக்கமாக இருந்தது. இதர இரண்டு குற்றச்சாட்டுகளைப் பொறுத்தவரை, என்னுடைய இரக்கமான புன்னகையே பதிலளிக்க முடியும்.

எனது மண்டலி ஆண், பெண் அனைவரும் எந்த வகையைச் சார்ந்தவர்கள்! அனைத்தையும் விட்டுவிட்டு, அவர்கள், என்னுடன் வந்து வாழ்கிறார்கள். ஊதியம் பெறும் ஊழியர்கள் எப்போதாவது இப்படிச் செய்ய முடியுமா? என்னிடமிருந்து ஒரு சைகையின் குறியீடு மட்டுமே போதும், அவர்கள் எனக்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்யவும் தயாராக உள்ளனர். அவர்களின் பற்றில்லா தன்மையைப் பற்றி யாருக்கும் தெரியாது!

எனது மௌனத்தைப் பொறுத்தவரை, நான் எப்படி அதைக் கடைப்பிடிக்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். இதைப் பற்றி நான் மேலும் எதுவும் சொல்லத் தேவையில்லை.

இதுபோன்ற பொய்யான வதந்திகளைப் பரப்புவோரைப் பார்த்துப் பரிதாபப்பட வேண்டும். இதற்குப் பின்னால் இருக்கும் தஸ்தூரைப் பொறுத்தவரை, அவரது நிலைமை பிறரை விட பரிதாபகரமானது, ஏனெனில் அவர் என்னை ‘எல்லாமே’ என்று ஏற்றுக் கொண்டவர், மேலும் அவர் தனது இரத்தத்தால் எனது கால்களைக் கழுவத் தயாராக இருப்பதாக பகிரங்கமாக அறிவித்தார். இப்போது, அவர் என்ன செய்கிறார் என்று பாருங்கள்! தஸ்தூர் என்னை நேசிக்கிறார், ஆனால் அவர் ஜூதாஸின்

பங்கை வகிக்கிறார். அவரது கடிதங்கள் என்னிடம் உள்ளன, அவற்றில் அவர் எழுதிய விஷயங்கள் என்னவென்று மண்டலிக்குத் தெரியும். எவரேனும் அவற்றைப் படிக்க நேர்ந்தால், அவருடைய தற்போதைய நடத்தையைக் கண்டு எள்ளி நகையாடுவார்.

அப்பாவி பால் ப்ரண்டனை, தஸ்தூர் ஒரு முட்டாளாக, ஒரு கருவியாகப் பயன்படுத்தியுள்ளார். ப்ரண்டன் இந்தியாவிற்குச் சென்று, நாசிக்கில் தங்கி, தனது கண்களால் அனைத்து விஷயங்களையும் கண்டறிந்தவர். அவர் எனது ஆலோசனையைக் கேட்டபோது, இந்தியாவில் சில இடங்களுக்கு யாத்திரை செய்யுமாறு கூறினேன். ஆனால் அவர் அதைச் செய்யாமல், தஸ்தூரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்து, என்னைப் பற்றி இங்கே பொய்களைப் பரப்பத் தொடங்கினார். இதன் விளைவை நீங்கள் இப்போது காண்கிறீர்கள்!

ஆனால் முடிவு முற்றிலும் எதிர்பார்க்கப்பட்டது என்று நீங்கள் எடுத்துக் கொள்ளலாம், அது எனது மூலமாக நடந்தது.

ஒரு மணி நேரத்திற்கு முன்புதான், நாம் எதிர்ப்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம், இப்போது நீங்கள் அதைப் பற்றிக் கேட்கிறீர்கள். எனவே உங்களில் எவரும் இதை நினைத்துக் கவலைப்படக்கூடாது. எதுவும் உங்களைத் தொந்தரவு செய்யக்கூடாது. இது எனது விளையாட்டு, நான் அதைப் பார்த்துக் கொள்வேன்.

"நீங்கள் 'சமநிலையற்றவர்கள்' என்ற மெரடித்தின் கருத்தைக் கண்டுகொள்ள வேண்டாம்" என்று பாபா அவர்களுக்கு வலியுறுத்தினார். "அவர் தவறாகப் புரிந்து கொண்டதற்காக நான் பரிதாபப்படுகிறேன்" என்று பாபா கூறினார். "மெரடித் என்ன சொன்னாலும் நீங்கள் அதை எண்ணிக் கவலைப்படக்கூடாது, அவர் உங்களை என்னிடம் கொண்டுவருவதில் கருவியாக இருந்தார் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் எப்போதும் எனக்குக் கீழ்ப்படிய வேண்டும், மெரடித்திற்கு அல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள்."

மெஹர் பாபா பின்னர் அவர்களின் தனிப்பட்ட குணங்களைப் பாராட்டினார்: கிட்டி - பாபாவிற்கு ஒரு தன்னலமற்ற சேவகர், எப்பொழுதும் அவரை மகிழ வைப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்; கிம் - அவருடைய ஆழ்ந்த அன்பு மற்றும் தியாகத்தில் தீர்மானமாக உள்ளார்; டிலியா - அவரின் அமைதியான விசுவாசம்; மின்டா - பாபாவுடன் எப்பொழுதும் இருக்க வேண்டும், சுய-சரணடைதலைக் கருத்தாகக் கொண்டுள்ளார்.

1932, மே 7ஆம் நாள் மாலை, லுகானோவில் தங்கி இருந்த பத்து நாட்களுக்குப் பிறகு, பாரிஸ் நகருக்கு வந்து அனைவரும் ஹோட்டல் பவர்ஸில் (HOTEL POWERS) தங்கினர். கிம், மின்டா இருவரும் மேலும் மேலும் ஒருவருக்கொருவர் கடுமையான பொறாமையை வளர்த்துக் கொண்டனர்;

தனியாக, தனது அறையில், மின்டா மீண்டும் தற்கொலைக்கு முயன்றார், ஆனால் அது தடுத்து நிறுத்தப்பட்டு, பாபா அவருக்கு ஆறுதல் கூறினார்.

பாபாவும் ஒரு சில தோழர்களும் பகல் நேரத்தில் பாரிஸ் நகரம் முழுவதும், காரில் நீண்ட நேர சவாரிக்குச் சென்றனர்.

மே 9ஆம் நாள் மெஹர் பாபா அனைவருடன் பாரிஸ் நகரிலிருந்து புலோக்ன் (BOULONGE) சென்று, ஃபோக்ஸ்டன் (FOLKESTONE) மற்றும் லண்டனுக்கு, படகு மூலம் பயணம் செய்தனர். கிம், மின்டா, டிலியா ஆகியோர் பாபாவைப் பிரிந்து செல்லும் எண்ணத்தில் கண்கலங்கி அழுதனர். 46, லான்காஸ்டர் கேட்டில் அமைந்த ஃபெல்லோஷிப் கிளப்பில் (FELLOWSHIP CLUB AT 46 LANCASTER GATE) பாபா தங்குவதற்கான ஏற்பாடு செய்ய கிட்டி, மார்கரெட் இருவரும் பாரிஸிலிருந்து சற்று முன்னரே சென்றிருந்தனர். செய்தித்தாள்களில் வெளிவந்த தவறான அறிக்கைகள் காரணமாக, இந்த முறை பாபா வேறு இடத்தில் தங்கியிருந்தால் நல்லது என்று கிட்டியின் பெற்றோர் நினைத்தனர். கிட்டி, டோவர் (DOVER) நகரில், 'லார்ட் வார்டன்' ஹோட்டலில் (LORD WARDEN HOTEL) பாபாவை சந்தித்து லண்டனுக்கு அழைத்துச் சென்றார். கிட்டி, மார்கரெட் இருவரும் பாபாவுடன் லான்காஸ்டர் கேட்டில் உள்ள உறைவிடத்தில் தங்கினர்.

மெஹர் பாபா லண்டனில் இருந்தபோது, பத்திரிகைகளில் மோசமான விளம்பரம் வெளியான போதிலும் மக்கள் அவரை சந்திக்க வந்தனர். 'ஜான் புல்' பத்திரிகையில் வெளிவந்த தவறான அறிக்கைகளை நினைத்து கிட்டி வருந்தினார், ஆனால் பாபா அவரிடம், "**இவை அனைத்தும் குப்பை. அதை முற்றிலும் புறக்கணித்து, கண்டுகொள்ளாமல் இருக்க வேண்டும்**" என்று கூறினார். மேலும், "**நான் இந்த சூழ்நிலையை மகிழ்ச்சியோடு அனுபவிக்கிறேன்; எனக்கு அது பிடிக்கும், அது எனது பணியை விரைவுபடுத்தி, ஊட்டமளிக்கிறது**" என்றார்.

அவர் மேலும் விளக்கினார், "**ஒருவர் எவ்வளவுதான் அறிவாற்றல் உள்ளவராக இருந்தாலும், அவரது வழிகளை என் மீது திணிக்க முயன்றாலும், நான் எல்லையற்ற சாமர்த்தியசாலியாக இருக்கிறேன். எனக்கு எப்போதும் எனது சொந்த வழி என்று ஒன்று உண்டு. என்னைச் சுற்றி ஒரு சிறுவனை நான் ஏன் விரும்புகிறேன்? அவர்கள் எனது பணியின் ஊடகமாகச் செயல்படுகிறார்கள். அவர்கள் அப்பாவியாக இருந்தாலும் தூய்மையானவர்கள். நான் சில பணிகளுக்கு, பெண்மணிகளையும் மேலும் சிலவற்றிற்கு ஆண்களையும் பயன்படுத்துகிறேன்.**

"**பாவிகளும் புனிதர்களும் எனக்கு ஒன்றுதான். ஆகவே ஏன் புனிதர்கள் மட்டும்? பாவிகளும் வரட்டுமே! ஓ அது சரியாக வராது! மாறாக பாவிகள் என்னிடம் அதிகமாக வர உரிமை உண்டு.**"

இதற்கிடையில் மெரடித், மார்கரெட் ஸ்டார் இருவரும் பாபாவுடன் அமெரிக்காவிற்குச் செல்ல டெவன்ஷரிலிருந்து அழைக்கப்பட்டனர், மேலும் குயன்டினும் பாபாவுடன் குழுவில் இணையுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்.

கிட்டி டேவி, பாபாவின் பணிக்காக ஒரு சிறுவனைக் கண்டுபிடித்து பாபாவிடம் அழைத்து வந்தார்; அந்த சிறுவன், பாபாவுடன் ஓர் இரவைக் கழித்த பின்பு, மறுநாள் காலையில், பாபா அவனைப் பொருத்தமற்றவன் எனக் கூறி திருப்பி அனுப்பி வைத்தார்.

அமெரிக்காவிற்கு அழைத்துச் செல்லப் பொருத்தமான சிறுவன் கிடைக்காததால், அதற்கு பதிலாக பாபா ஒரு நாய்க்குட்டியை எடுத்துச் செல்வதாகக் கூறினார். மே 10ஆம் நாள், பாபா, ஆதி சீனியர், டிலியா, மின்டா ஆகியோர் ஒரு வளர்ப்பு விலங்குகள் மையத்திற்குச் சென்று தேடினர். எதுவுமே பாபாவிற்கு உகந்ததாக அமையவில்லை.

பாபா, குயன்டின் வாங்கி வந்த ஒரு வகை கறுப்பு மோங்ரல் (MONGREL) நாய்க்குட்டிக்கு 'மிக்கோ' (MIKKO - 'கிம்கோ'விற்கு இணையாக) என்று பெயரிட்டார். அவர் அதை ஓர் இரவு தன்னுடன் வைத்திருந்து, பின்னர் அதை கவனித்துக் கொள்ள டிலியாவிடம் கொடுத்தார். (ஆறு மாதங்களுக்குப் பிறகு, மிக்கோ ஓடும் வாகனத்தில் அடிபட்டு உயிரிழந்தது. இந்த சம்பவத்திற்கு முன்னரே பாபா டிலியாவிற்கு எழுதியிருந்தார், "நினைவில் கொள்ளுங்கள், அன்புள்ள 'லெய்லா' - டிலியாவிற்கு பாபா அளித்த புனைப்பெயர், மிக்கோவைக் குறித்து எவரும் கவலைப்படத் தேவையில்லை. இது எனது பணி, மேலும் இதற்கு எனது திறவுகோல்தான் காரணம்.")

பாபா லண்டனில் இருந்தபோது, குயன்டின், போலந்து நாட்டைச் சேர்ந்த பிரிட்டிஷ் எழுத்தாளர் ரோம் லாண்டவ் (ROM LAUNDAU) என்பவரை ஃபெல்லோஷிப் கிளப்பிற்கு (FELLOWSHIP CLUB) அழைத்து வந்தார். லாண்டவ் தனது 45 நிமிட நேர்காணலின் போது, பல கேள்விகளைக் கேட்டார்; ஆனால், பாபா மீண்டும் மீண்டும் பதிலளித்தார், "**உங்கள் கேள்விக்கு இன்னும் விரிவான பதிலும் நீண்ட விவாதமும் தேவை. ஓரிரு நாட்களில் நான் உங்களுக்கு, பதிலை எழுதித் தருகிறேன்.**"

லாண்டவ் விடைபெறும்போது, பாபா அவரிடம், "**எதிர்காலத்தில் நான் உங்களுக்கு உதவுவேன்**" என்று தெரிவித்தார்.

சில நாட்களுக்குப் பிறகு, பாபா இந்தச் செய்தியை ஒரு மண்டலி மூலமாக லாண்டவிற்குத் தெரிவித்தார்:

**நீங்கள் கேட்க விரும்பிய ஆன்மீக மறுமலர்ச்சி வெகு தொலைவில் இல்லை, இதை நான் விரைவில் நிகழச் செய்வேன்; இதற்காக, அமெரிக்க தேசத்தில் மிகப்பெரிய அளவிலான, தவறாக வழிநடத்தப்படும் ஆற்றலை நான் பயன்படுத்தப் போகிறேன். நான் விரும்புவது போன்ற ஓர் ஆன்மீக எழுச்சி, வழக்கமாக ஒவ்வோர் ஏழு அல்லது எண்ணூறு வருடங்களுக்கு ஒரு முறை, ஒவ்வொரு காலச்சுழற்சியின் முடிவிலோ அல்லது தொடக்கத்திலோ நடைபெறுகிறது; இதை அவதார புருஷரின் உணர்வு நிலையை அடைந்த ஒருவரால் மட்டுமே, மக்களைத் தன் வயப்படுத்தி உலகளாவிய பணியைச் செய்யவும் முடியும். எனது பணி, அனைத்தையும் அரவணைக்கும். இது வாழ்க்கையின் ஒவ்வொரு பாகத்தையும் பாதிக்கவும்,**

**கட்டுப்படுத்தவும் செய்யும்... நான் உலகிற்கு வழங்கும் பொதுவான ஆன்மீக உந்துதலில், அரசியல், பொருளாதாரம், பாலியல் பிரச்சினைகள் போன்ற அனைத்தும் தானாகவே தீர்க்கப்பட்டு சீர்செய்யப்படும்.**

**அனைத்து கூட்டு இயக்கங்களும், மதங்களும், உள்நோக்கு சக்தியை வழங்கும் ஓர் ஆளுமையைச் சுற்றியுள்ளன; இந்த மையப்புள்ளியிலிருந்து விலகிச் செல்லும் சக்தி இல்லாமல், அனைத்து இயக்கங்களும் வெற்றியடைய இயலாது. குருநாதர்கள், அவர்களின் தனிப்பட்ட தொடர்பு மற்றும் செல்வாக்கால் ஆன்மீகத்தை வழங்குகிறார்கள், மேலும் பல்வேறு நாடுகள் அடையப்பெறும் நன்மை, நான் ஆன்மீக எழுச்சியைக் கொண்டுவரும் வேளையில், ஒவ்வொருவரும் கொண்டிருக்கும் ஆற்றலின் அளவைப் பொறுத்தது.**

**நான் யாரிடமிருந்தும் உத்தரவுகளைப் பெற்றுக்கொள்வது இல்லை. அது என் உயர்வான, அனைத்திற்கும் மேலான விருப்பம். எல்லாமே நான் இருப்பதால்தான் நிகழ்கிறது. எதுவும் எனது அறிவுக்கு அப்பாற்பட்டது கிடையாது; நான் அனைத்திலும் இருக்கிறேன். எனக்கு நேரமும் இடமும் இல்லை; ஒவ்வொருவரின் வாழ்வும் என்னைச் சார்ந்து உள்ளது. நீங்கள் உலகப்பொருட்களை எப்படிக் காண்கிறீர்களோ, அப்படி உங்கள் கடந்த காலத்தையும், எதிர்காலத்தையும் தெள்ளத்தெளிவாக நான் பார்க்கிறேன்.**

இந்த சந்திப்பைப் பற்றிய முழு விவரத்தை மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு லாண்டவ் எழுதிய 'காட் ஈஸ் மை அட்வெஞ்சர்' (GOD IS MY ADVENTURE) - 'போர்ட்ரைட் ஆஃப் எ பெர்ஃபெக்ட் மாஸ்டர் ஸ்ரீ மெஹர் பாபா' (PORTRAIT OF A PERFECT MASTER SHRI MEHER BABA) எனும் தலைப்பின் கீழ் வெளிவந்த புத்தகம் மாபெரும் வெற்றியாக மாறியது. நியூயார்க் நகரில் நோரினாவை சந்தித்த ஒரு முழுத் தொகுப்பையும் இத்துடன் இணைத்துக் கொண்டார்.

நோரினா கூறியபடி, லாண்டவ் ஒரு புத்திசாலி மனிதராகத் தோன்றினார், மேலும் அவர் உண்மைப்பொருளைக் கண்டுகொள்வதில் நாட்டம் உள்ளவர் என்றும் கருதினார்.

1932, மே 11ஆம் நாள், பிரபல பிரிட்டிஷ் இராணுவ போர் தந்திர நிபுணரும் எழுத்தாளருமான மேஜர் ஜெனரல் ஜே.எஃப்.சி. ஃ**புல்லர்**, (MAJOR GENERAL J.F.C.FULLER) பாபாவை சந்திக்க வந்தார். மேற்கு மற்றும் இந்தியாவின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து ஃபுல்லர், பாபாவிடம் கேட்டார், பின்னர் இவ்வாறு வினவினார், "உங்கள் ஆன்மீக மையத்தை ஏன் அமெரிக்காவில் நிறுவ விரும்புகிறீர்கள்?"

அதற்கு பாபா, "**ஏனெனில் நான் அங்கு சக்தியின் வெள்ளப்பெருக்கைக் காண்கிறேன்; ஆனால் அது தற்போது தவறாக வழிநடத்தப்படுகிறது**" என்று பதிலளித்தார்.

ஒரு நாள் பாபா, ஹாம்ப்ஸ்டெட்டில் (HAMPSTEAD) வாழும் மெரடித் ஸ்டாரின் தாயார் வீட்டில் தேநீர் விருந்துக்காக அழைக்கப்பட்டார். அங்கிருந்து,

அவர் மார்கரெட், மேபெலின் நடன ஸ்டுடியோ, ஒரு பாலே வகுப்பையும் பார்வையிட்டார். அன்று மாலையில் பாபா தயக்கத்துடன் ‘ஹவுஸ் ஆ.்ப் காமன்ஸ்’ (HOUSE OF COMMONS) விஜயம் செய்தார்.

மே 13ஆம் நாள் மாலையில் மெஹர் பாபாவுடன், மண்டலி மற்றும் தோழர்கள் ‘ஆங்கிலோ-சிலோன் (ANGLO-CEYLON) உணவகம்’ சென்று ‘பிரியாவிடை’ விருந்தில் பங்கெடுத்தனர்.

1932, மே 14ஆம் நாள் அதிகாலையில், வாட்டர்லூ (WATERLOO) ரயில் நிலையத்தில் பாபாவை வழியனுப்ப, கண்ணீருடன் அனைவரும் ஒன்றுதிரண்டனர்.

பாபா அமெரிக்காவிற்குப் பயணம் செய்தபோது கிம், மார்கரெட் இருவரும் கோபிகைகளின் இதயத் துடிப்பை இவ்வாறு விவரித்தனர்: “நாங்கள் படகில் இருந்து வெளியே வந்தபோது, கண்களில் கண்ணீர் ததும்பி, கிட்டத்தட்ட பார்வையற்றவர்களாக இருந்தோம்; எங்கள் இதயங்கள் எவ்வாறு வருத்தத்துடன் வலித்திருக்கும் என்பதை நீங்கள் கற்பனை செய்யலாம். நாங்கள் அனைவரும் ஒரு வரிசையில் அமர்ந்து, கன்னத்தில் கைவைத்து அழுதோம். பார்வையாளர்களுக்கு வேடிக்கையாக இருந்திருக்கலாம், நாங்கள் அதைக் கண்டு கொள்ளவில்லை. ‘எஸ்.எஸ். ப்ரேமன்’ (SS BREMAN) மெதுவாக திறந்த கடலில் நகர்ந்து செல்வதைக் கண்டோம், நாங்கள் எங்கள் இதயங்களையும் ஆன்மாவையும் மனதையும் அத்துடன் அனுப்பினோம்.”

ப்ரேமெனில் பயணம் செய்யும் வேளையில் சாஞ்சி இவ்வாறு பதிவு செய்திருந்தார்: பாபாவும் இதற்கு முன்னர் எப்போதும் உணராத சோகத்தை இப்போது உணர்கிறார்.

கப்பலில் பாபா தனிமையில் இருக்க விரும்பினார். அவர் தனது பிரியமானவர்களை எழுத்துப்பலகையில் உச்சரிப்பதன் மூலம் அவர்களை அடிக்கடி நினைவு கூர்ந்தார், மேலும் ஒருவரைப் பற்றி நினைக்கும் போது, அவரது கண்களில் கண்ணீர் நிரம்பி இருந்தது. அன்பும் ஏக்கமும் நிறைந்த தினசரி கடிதங்கள், பாபாவிற்கும் இங்கிலாந்து அன்பர்களுக்கும் இடையில் அட்லாண்டிக் கடலைக் கடந்து, பிரியமானவரின் இதய கீதத்தின் இனிமையான நாதத்தை எதிரொலித்தன.

பாபா, பெரும்பாலும், தனது அறையில் இருந்தார், எதிர்கால திட்டங்களை மண்டலியுடன் விவாதித்தார், பால் ராப்ஸன் பதிவுகளை ரசித்தார், அல்லது குயன்டின், மெரடித், மார்கரெட் ஸ்டார் ஆகியோரை தனியாக அல்லது கூட்டாக சந்தித்தார்.



மெஹர் பாபா -
அமெரிக்கா 1932




மெஹர் பாபா -
அமெரிக்கா 1932



மெஹர் பாபா -
அமெரிக்கா 1932



ஹாலிவுட்டில்
மெஹர் பாபா, 1932

# இரண்டாவது அமெரிக்கா பயணம் - நியூயார்க், ஹாலிவுட், கலிஃபோர்னியா

**(Newyork, Hollywood, California)**

அமெரிக்காவை 'எஸ்.எஸ். ப்ரேமன்' கப்பல் நெருங்கும் போது, பாபா வெளியிட்ட ஒரு புதிய செய்தி, கப்பலின் அச்சகத்தில் அச்சிடப்பட்டது. பயணத்தின் போது, பாபா ஏன் இதைச் செய்தார் என்பதை முதலில் மண்டலியில் எவரும் புரிந்து கொள்ள முடியவில்லை, ஆனால் 1932 மே 19 அன்று, நியூயார்க் நகரிலிருந்து 40 மைல் தொலைவில் இருந்தபோது, ஒரு நேரடி பேட்டியைக் கோரி செய்தித்தாள் நிருபர்கள் பாபாவின் அறைக்கு வந்தனர். பாபா அவர்களை சந்திக்காமல் ஒவ்வொருவருக்கும் சாஞ்சி, குயன்டின் மூலம் பாபாவின் புதிய செய்தியின் நகலைக் கொடுத்தார் (அவர்கள் அனைத்து கேள்விகளுக்கும் பதிலை எதிர்நோக்கி வந்தனர்). அப்போதுதான் பாபாவின் நோக்கம் புலப்பட்டது.

மெஹர் பாபா வழங்கிய செய்தி:

**நான் எந்த வழிபாட்டையும், சமூகத்தையும், அமைப்பையும் நிறுவவோ, அல்லது புதிய மதத்தை உருவாக்கவோ வரவில்லை.**

**நான் வழங்கும் மதம், அனைத்திற்கும், அனைவருக்கும் பின்னால் இருக்கும் ஒருவரைப் (இறைவன்) பற்றிய அறிவைக் கற்பிக்கும்.**

**நான் மக்களைப் படிக்க வைக்கும் புத்தகம் இதயத்தின் புத்தகம், இது வாழ்க்கையின் மர்மத்தின் திறவுகோலை உள்ளடக்கியது. சடங்கு சம்பிரதாயங்களைப் பொறுத்தவரை, மனிதகுலம் அவற்றை வெறும் வார்த்தைகளால் உச்சரிப்பதை விட, நன்மை தீமைகளை, பாகுபடுத்தும் முறை அறிந்து, வெளிப்படுத்தி, வாழக் கற்றுத் தருவேன். தலை** (அறிவு), **இதயம்** (அன்பு) **இவற்றின் மகிழ்ச்சியான கலவையை நான் கொண்டு வருவேன்.**

**சங்கங்களும், அமைப்புகளும் ஒருபோதும் உண்மைப்பொருளை அருகாமையில் கொண்டுவருவதில் வெற்றி கண்டதில்லை. சத்தியத்தை உணர்ந்து கொள்வது என்பது, முற்றிலும் தனிமனிதனின் அக்கறையைச் சார்ந்தது.**

**ஒவ்வோர் உயிரினமும், அதற்குள் ஏற்கனவே நிலைகொண்டிருக்கும் அன்பு, பேரின்பம், அறிவு, நன்மை ஆகியவற்றின் எல்லையற்ற சமுத்திரத்தை நோக்கி, ஒரு தொடக்கத்தை உருவாக்க முடியும். எந்த ஓர் ஆன்மீக குருநாதரும், மதம், இறுதியில் அது எடுக்கும் உருவிற்காக, மதத்தை உலகில் கொண்டு வருவதில்லை. அவர் பூமியில் இருப்பதே ஓர் ஆசீர்வாதம் மட்டுமின்றி, ஆன்மீகத்தைப் பிரகாசிக்கச் செய்யும். தனிப்பட்ட தொடர்பு மூலம், அவர் அதைப் பிறருக்கு வழங்குகிறார். மதங்கள் என்று அழைக்கப்படுபவை ஒரு மேன்மைமிகு தீர்க்கதரிசியின் தொடர்பை**

நினைவுகூர்ந்து, அவருடைய சூழல், சூழ்நிலைகள் மற்றும் செல்வாக்கைப் பாதுகாப்பதற்கான ஒரு முயற்சியாகும். இது ஒரு தொல்பொருள் துறை போன்றது, கடந்த காலத்தை மீண்டும் உயிர்ப்பிக்கும் விஷயங்களைப் பாதுகாக்க முயற்சிக்கிறது. தீர்க்கதரிசியின் உயிர்ச்சுடர் இல்லாததால், மதங்கள் அல்லது அமைப்புகள் படிப்படியாகத் தங்கள் ஈர்ப்பை இழக்கின்றன. இதன் விளைவாக, மதங்களுக்கு எதிரான மனக் கொந்தளிப்பு உருவாகிறது. வாழ்வின் ஆதாரத்தை நிலைநிறுத்தி, வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் அளவுக்கு கணிசமான, நடைமுறைக்கு உகந்த ஏதாவது ஒன்று தேவை.

உலகை அதன் பிடியில் வைத்திருக்கும் குழப்பத்தையும் துயரத்தையும் முடிவுக்குக் கொண்டுவருவதில் உலகளாவிய அதிருப்தியும், விவரிக்க முடியாத ஏக்கமும் இந்நேரத்தில் உள்ளது. இந்த ஏக்கத்தைப் பூர்த்தி செய்து, நான் உலகத்தை உண்மையான மகிழ்ச்சிக்கும், அமைதிக்கும் வழிநடத்திச் செல்வேன்.

விதிமுறைப்படி, ஒரு குருநாதர், தனிப்பட்ட ஒருவரின் மனோநிலை மற்றும் தகுதிக்கு ஏற்ப தனித்தனியாக உதவுகிறார்; ஆனால், இது அவதார காலகட்டமாக இருப்பதால் - அதாவது முந்தைய யுகத்தின் முடிவு மற்றும் புதிய யுகத்தின் ஆரம்பம் - எனது ஆன்மீக உதவி, மனிதகுலத்திற்கு தனிப்பட்ட அல்லது கூட்டு முறையில் இருக்கும்.

பழைய மற்றும் புதிய சுழற்சிகள் சந்திக்கும் காலம், பொதுவாக, மத சிந்தனைக்குப் புத்துணர்ச்சி ஊட்டவும், மேலும் புதிய வாழ்க்கையையும் அர்த்தத்தையும் பழைய விஷயங்களுக்குள் ஊடுருவச் செய்யவும், ஒரு தீர்க்கதரிசி மறுபடியும் தோன்றுவதைக் குறிக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு ஆன்மீகத்தின் மிக உயர்ந்த நிலையை வழங்குவதோடு, அவர் முழு உலகிற்கும் ஒரு பொதுவான உந்துதலைத் தருகிறார்.

மேற்கத்திய நாடுகள் ஒவ்வொரு விஷயத்தையும், காரணம் மற்றும் தர்க்கரீதியின் நிலைப்பாட்டிலிருந்து மட்டுமே பார்க்கின்றன, மேலும் புத்தியைத் திணறவைக்கும் விஷயங்களைக் குறித்து, சந்தேகம் கொள்கின்றன. புத்தி என்பது புரிதலின் மிகக் குறைந்த வடிவம், இது வாசித்தல், கேட்டல், நியாயப்படுத்தல் மற்றும் தர்க்கரீதியால் வளர்ச்சியடைகிறது. இந்தச் செயல்முறைகள் அறிவின் பிரம்மையை உருவாக்குகின்றன.

புரிதலின் உயர்ந்த நிலை நிரந்தர (தெய்வீக) ஒளியூட்டம், இதன் மூலம் வெளிச்சத்தை (அறிவைப்) அடையப்பெற்றவர், எல்லாவற்றையும் இருப்பது போல் அப்படியே அனுபவித்துப் பார்க்கிறார். இந்த நிலையில், ஒருவர் எல்லோரிடமும், எல்லாவற்றிலும் ஒற்றுமையையும், வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் தெய்வீகத் தன்மையையும் உணர்ந்து, பிறருக்கு மகிழ்ச்சியை அளிக்க முடிகிறது. இங்கே ஒருவர் அனைத்து கடமைகள் மற்றும் பொருள் விவகாரங்களில் ஈடுபட்டிருந்தாலும், உலகத்திலிருந்து மனரீதியாக விலகி இருப்பதாக உணர்கிறார். இதுவே உண்மையான துறவறம்.

புரிதலின் இறுதியும், மிக உயர்ந்த நிலையும் ஆன்மாவை, எல்லையற்ற பேரின்பம், அறிவு, சக்தி ஆகியவற்றின் வரம்பற்ற கடலுடன் இணைப்பதாகும். இந்த சுதந்திரத்தை அடைந்த ஒருவர், தன்னைப் போலவே ஆயிரக்கணக்கானவர்களைப் பரிபூரணமாக்க முடியும். இந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, அமெரிக்க தேசத்தின் மிகப்பெரிய ஆற்றலைப் பயன்படுத்தி, எதிர்காலத்தில் ஒரு பெரிய ஆன்மீக மறுமலர்ச்சியைக் கொண்டுவர விரும்புகிறேன். நான் கற்பனை செய்வது போன்ற ஓர் ஆன்மீக வெளிப்பாடு, பொதுவாக ஒரு கால சுழற்சியின் தொடக்கத்திலோ அல்லது முடிவிலோ நடைபெறுகிறது, மேலும் கிறிஸ்துவின் உணர்வு நிலையை அடைந்த உண்மையான குருநாதர் மட்டுமே, அத்தகைய உலகளாவிய மறுமலர்ச்சியை உருவாக்க முடியும்.

எனது பணி, அனைத்தையும் அரவணைத்து, வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்தையும் ஊடுருவிச் செல்லும். ஒரு விஷயத்தை ஏற்றுக்கொண்டு, மற்றொன்றைத் தவிர்ப்பது, முழுமையான இலட்சியத்தை அடைந்தது போல் ஆகாது. முழு உலகிற்கும் நான் வழங்கும் பொதுவான ஆன்மீக உந்துதல், அரசியல், பொருளாதாரம், பாலின உடலுறவு போன்ற சிக்கல்களைத் தானாகவே சரி செய்யும், ஆனால் இவை அடிப்படை கருப்பொருளுடன் நேரடியாக இணைக்கப்படவில்லை. இந்த நேரத்தில் தீர்வு காண முடியாமல் நிலைகுலைய வைக்கும் ஒவ்வொன்றும் புதிய மதிப்பீட்டையும், முக்கியத்துவத்தையும் அடையும்.

ஆன்மீக எழுச்சியை நான் கொண்டு வரும் வேளையில், வெவ்வேறு நாடுகளும், தேசங்களும் அடையும் நன்மைகள், பெரும்பாலும் ஒவ்வொருவரும் கொண்டிருக்கும் ஆற்றலின் அளவால் தீர்மானிக்கப்படும். அதிக ஆற்றல், எவ்வளவுதான் தவறாகப் பயன்படுத்தப்பட்டு அல்லது தவறாக வழிநடத்தப்பட்டதாக இருந்தாலும், அதற்கேற்ற பிரதிபலனை வழங்கும்.

குருநாதர் இந்த ஆக்கப்பூர்வமான சக்தியை சரியான பாதையில் திசை திருப்புகிறார். யதார்த்தமான மேற்கத்திய நாடுகளை, இலட்சியவாத கிழக்கத்திய நாடுகளோடு ஒன்றிணையச் செய்வதுதான் எனது மிகப்பெரிய அற்புதங்களில் ஒன்றாகும்; மேற்கத்திய நாடுகள், அதன் பொருட்கள் மற்றும் அறிவுசார்ந்த வளத்தின் உச்சத்தில் உள்ளன, அதே வேளையில் கிழக்கு, அவதார புருஷரை ஈன்றெடுத்து, ஆன்மீக வெளிப்பாட்டின் உச்ச நிலையில் உள்ளது.

நான் மறுபடியும் கூறுகிறேன்: பொருள்சார்ந்த உலகமும், ஆன்மீகமும் ஒன்றோடு ஒன்றாக கைகோர்த்துச் செல்ல வேண்டும். தலை (அறிவுத்திறன்) மற்றும் இதயம் (உணர்வுகளின் உறைவிடம்) இரண்டும் சீரான, சமநிலையைப் பராமரிக்க வேண்டும்; பாகுபாட்டிற்கான வழியைத் தூண்டும் தலை, உணர்வின் ஆதிக்கத்தைப் பிரதானமாகக் கொண்ட இதயம், இதன் மூலம் கலை, அறிவியல், இயல்பு தன்மை மற்றும்

**வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் எல்லையற்ற உணர்வு நிலையை அடைய முடியும்.**

**நான் அளவிறுதியற்ற மூலாதார பொருளுடன் ஒன்றாகிவிட்டேன். இதுதான் கிறிஸ்துவின் உணர்வு நிலை. மக்கள் என்னை 'மெஸையா', அவதார புருஷர், இரட்சகர், தீர்க்கதரிசி என்று எப்படி அழைத்தாலும், அது என்னை பாதிக்காது. விதிமுறைகள் மற்றும் விளக்கங்கள் ஒரு பொருட்டல்ல. உண்மையில் முக்கியமானது என்னவெனில், நான் நித்தியமாக அனுபவிக்கும் கிறிஸ்துவின் உணர்வு நிலை, என்னிடம் வரும் அனைவரையும் வழிநடத்தும். நான் மௌனத்தைக் களைந்து பேசும்போது, எனது மூலமுதலான, அடிப்படை செய்தி உலகிற்கு வழங்கப்படும்; அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.**

**அற்புதங்களைச் செய்வதற்கான திறன், உயர்ந்த ஆன்மீகத்தைக் குறிக்க வேண்டிய அவசியமில்லை. கிறிஸ்துவின் உணர்வு நிலையை அடைந்த ஒவ்வொருவரும் அவற்றைச் செய்ய முடியும். மக்கள், தங்கள் உடல் ரீதியான பலவீனங்களுக்காக அல்லது பொருள் ரீதியான நோக்கங்களுடன் மட்டுமே என்னிடம் வரக்கூடாது. தக்க நேரமும், சூழ்நிலையும் சேர்ந்து வரும் வேளையில், நான் அற்புதங்களைச் செய்வேன், வெறும் வீண் ஆர்வத்தைப் பூர்த்தி செய்வதற்காக அல்ல. ஆன்மீக வழியில் ஒன்றை சரிசெய்வது என்பது மிகப் பெரிய விஷயமாகும்; இதைத்தான் நான் வழங்க விரும்புகிறேன். அனைத்திலும் உயர்ந்ததும், உன்னதமானதும் அகத்தில் மறைந்திருக்கும், ஆனால், வெளிப்படுத்தப்பட வேண்டியது அவசியம்.**

பத்திரிகை நிருபர்கள் மெஹர் பாபாவைப் புகைப்படம் எடுக்க விரும்பினர்; அன்று மதியம் ஒரு மணி அளவில் ப்ரூக்ளின் (BROOKLYN) 58ஆவது தளத்தில், கப்பலிலிருந்து இறங்கியபோது, மெஹர் பாபா எழுத்துப்பலகையில் செய்திகள் வழங்க, புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. பாபா, அழகாகத் தோற்றமளித்தார், பட்டு ஜாக்கெட், சாம்பல் நிற கால்சட்டை மற்றும் வெண்மை நிற காலணிகள் அணிந்திருந்தார். பாபா மெதுவாக, கூட்டத்தினூடே செல்லும்போது, பலர் அவரை சூழ்ந்து கொண்டனர். "புன்னகைக்கும் சூரியனைப் பார்த்த அமெரிக்காவின் முதல் சுதந்திர நகரமான நியூயார்க்கின் இதயத்தில் இந்த சூரியன் எப்பொழுதும் புன்னகையுடன் இருக்கும்" என்று காலம் அறிவித்தது.

நோரினா, ஜீன், மால்கம், கிரஹாம் ஸ்டோக்ஸ், அனிதா, நதீன், எலிஸபெத், அவரது கணவர் மற்றும் சிலர் பாபாவை வரவேற்க வந்திருந்தனர். கென்னத் பேட்டர்ஸன் பாபாவை, கிரீன்விச் கிராமத்தில், கிரஹாம், லெட்டிஸ் ஸ்டோக்ஸ் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார், பிற அனைவரும் கார்களில் பின்தொடர்ந்தனர். ஆதி ஜூனியர், குயன்டின், மெரடித், மார்கரெட் ஆகியோர் ஸ்டோக்ஸின் இல்லத்தில் பாபாவுடன் தங்கியிருந்தனர். இதர மண்டலி (காக்கா, டாக்டர் கனி, சாஞ்சி, பெஹராம்) ஆல்பர்ட் (ALBERT) ஹோட்டலில் தங்கினர்.

மெஹர் பாபாவின் இரண்டாவது அமெரிக்க பயணத்தை விளம்பரப்படுத்த மால்கம், ஜீன் இருவரும் அயராது உழைத்தனர். அவர்களின் அஞ்சல் பட்டியலில் இருந்த சுமார் 800 பேருக்குக் கடிதங்கள் அனுப்பியிருந்தனர். பாபாவின் வருகையை விளம்பரப்படுத்தும் முயற்சியில் அவர்கள் ஆசிரியர்கள், வெளியீடு மற்றும் செய்தி நிறுவனங்களையும் தொடர்பு கொண்டனர். பாபாவின் வருகைக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு, 'டைம்ஸ்' (TIMES) பத்திரிகை பாபாவின் புகைப்படத்துடன் ஒரு கட்டுரையை வெளியிட்டது, '...எல்லையற்ற நிலை ஹார்மனுக்கு எடுத்து வரப்படுகிறது.' கட்டுரையின் ஒரு பகுதி, "ஹட்ஸனில் கடவுள்" (GOD ON THE HUDSON)" என்ற தலைப்பில் வெளிவந்தது:

"மெஹராஷ்ரம் (கருணை இல்லம்) என்று அழைக்கப்படும் ஓர் ஆன்மீக மையம், ஹார்மனில், அமைந்துள்ளது. ஸ்ரீ சத்குரு மெஹர் பாபா (இரக்கம் மிக்க தந்தை) என்று அழைக்கப்படும் 38 வயதான, மெலிந்து, மீசையுடன் கூடிய குருநாதர், அடுத்த வாரம், 1932 மே 16ஆம் நாள் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு மெஹராஷ்ரம் வருகிறார். அவரை 'இறை-மனிதன்' (GOD-MAN), 'மெஸையா' (MESSIAH) மற்றும் 'குருநாதர்' (PERFECT MASTER) என்று அழைக்கிறார்கள்..."

ஏறக்குறைய ஏழு ஆண்டுகளாக, மெஹர் பாபா எந்த வார்த்தையும் மொழியாமல் மௌனம் கடைப்பிடிக்கிறார். அவர் இங்கே தனது அமெரிக்க ஆன்மீக மையத்திற்கு வரும்போது, விழாவுடன் கூடிய நிகழ்ச்சியில் அவரது உதடுகள் திறக்கும். இதற்கிடையில் அவர் எழுத்துக்கள் அடங்கிய ஒரு சிறிய பலகையை எடுத்துச் செல்கிறார், அவர் ஏதாவது சொல்லும்போது, அதிலுள்ள எழுத்துக்களைச் சுட்டிக்காட்டித் தொடர்பு கொள்கிறார். அவர் நியூ ஹாம்ப்ஷயர் (NEW HAMPSHIRE) மற்றும் கலிஃபோர்னியாவில் (CALIFORNIA) ஆன்மீக மையங்களை நிறுவ விரும்புகிறார். மெஹர் பாபா, பல அற்புதங்களைச் செய்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது, ஆனால் இப்போது அவர் "**நான் அனுபவிக்கும் எல்லையற்ற நிலையை அமெரிக்க மக்களும் உணர வேண்டும்**" என்று மட்டுமே விரும்புகிறார். இதை நிறைவேற்றுவதற்கான அவரது முறை மிகவும் ரகசியமானது, ஆனால் "**ஆத்மா, கடவுள் எனும் வெள்ளத்தால் நிரம்பட்டும். நான் எதுவோ, நீயும் அதுவே.**"

மெஹர் பாபா, நியூயார்க் நகரில் தங்கியிருந்த மூன்று நாட்கள், நூற்றுக்கணக்கான மக்கள் அவரைப் பார்க்க விரும்பினர். பாபாவின் தரிசன நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் பொறுப்பை நோரினா ஏற்றுக்கொண்டார். அவரைப் பேட்டி காண அதிகமான நிருபர்கள் வந்தனர், மேலும் 'இந்திய இறை மனிதர்' பற்றிய பல தொகுப்புகள் உள்ளூர் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டன, இது மேலும் அதிகமான மக்களின் ஆர்வத்தைத் தூண்டி, அவரிடம் அழைத்து வந்தது. இருப்பினும், பாபா ஒவ்வொரு நபரையும் சந்திக்கவில்லை; அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு, தனிப்பட்ட நேரடி பேட்டியும், தரிசனமும் வழங்கினார்.

மால்கம் தொடர்பு கொண்ட ஃபிரடெரிக் காலின்ஸ் (FREDERICK COLLINS) எனும் பத்திரிகையாளர் ஒருவரை, மெஹர் பாபா சந்திக்க ஒப்புக்கொண்டார்.

ஒரு நாள் பிற்பகல் ஸ்டோக்ஸின் இல்லத்தில் பாபாவுடனான தேநீர் வேளையில் அவர் அழைக்கப்பட்டார். உரையாடல் தொடங்கியதும், காலின்ஸ் பாபாவிடம் அவர் திருமணமானவரா என்று கேட்டதற்கு, பாபா பின்வரும் பதிலை அளித்தார்:

**“திருமணமா? இல்லை. எனக்கு ஆண், பெண் வேறுபாடு கிடையாது. நவீன கால திருமணம் என்பது ஒரு வணிக விவகாரம். இது பெரும்பாலும் விவாகரத்திற்குக் காரணமாகிறது என்பதில் ஆச்சரியமில்லை. கணவன்-மனைவி ஒருவருக்கொருவர் முதலிடம் கொடுக்க வேண்டும். மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையில், காமத்தை விட தன்னலமற்ற அன்பு ஆதிக்கம் செலுத்த வேண்டும்.”**

“அமெரிக்காவில் எங்களுக்கு இப்போது பாலியல் தவிர வேறு பல பிரச்சினைகள் உள்ளன” என்று காலின்ஸ் குறுக்கிட்டார்.

**“ஆமாம், புரிந்து செய்யும் தன்மை இல்லாததால், இங்கே அனைத்தும் மிகப்பெரிய குழப்ப நிலையில் உள்ளது”** என்று பாபா கூறினார்.

“எங்களுடைய இந்த ‘குழப்பமான’ நாட்டிற்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?”

பாபா புன்முறுவலுடன், **“இது எனது நாடும் கூட”** என்று கூறி, மேற்கத்திய நாடுகளில் அவரது பணியைப் பற்றி விளக்கினார்.

“நீங்கள் உங்கள் மௌனத்தைக் கலைக்கும்போது, அதை எப்படிச் செய்வீர்கள்? வானொலி மூலமா?” என்று காலின்ஸ் கேட்டார்.

மெரடித் ஸ்டார் திடுக்கிட்டு, “நிச்சயமாக வானொலியில் அல்ல,” என்று உரத்த குரலில் கூறினார்.

**“ஏன் கூடாது?”** என்று பாபா கேட்டார்.

அமெரிக்காவின் பிரச்சினைகள் குறித்து கேள்வி எழுப்பியபோது, பாபா கூறினார்: **“அமெரிக்காவிற்கு மிகப்பெரிய ஆற்றல் உள்ளது, ஆனால் அதில் பெரும் பகுதி, தவறாக வழிநடத்தப்படுகிறது. இது அழிவை நோக்கி அழைத்துச் சென்று, அச்சம், பேராசை, காமம், கோபம் போன்றவற்றை உருவாக்குகிறது, இதன் விளைவாக ஆன்மீகம் மற்றும் ஒழுக்கநெறி சீரழிந்து போகிறது.”**

காலின்ஸ் அவரது கேள்விகளைத் தொடர்ந்து, “எங்களுக்கு உதவுவதில் உங்கள் நோக்கம் ஆன்மீகப் பிரச்சினைகளைப் பற்றியா அல்லது எங்கள் நடைமுறை சிக்கல்களுக்கு உதவியாக இருக்குமா?” என்று கேட்டார்.

பாபா பதிலாக, **“நமது ஆன்மீகப் பிரச்சினைகள்தான் நடைமுறை சிக்கல்கள்!”** என்றார்.

“நீங்கள் எப்படி உதவ விரும்புகிறீர்கள்?”

**“நான் வழங்கும் உதவி, ஆயிரக்கணக்கான மக்களின் இதயங்களில் மாற்றத்தை உருவாக்கி, தானாகவே, சரியான சிந்தனையை விளைவிக்கும்.”**

“அது மனச்சோர்வு பிரச்சினையைத் தீர்க்குமா?”

**“இது ஒவ்வொரு பிரச்சினையையும் தீர்க்கும்.”**

“இப்போது அமலில் இருக்கும் தடையைப் பற்றிய பிரச்சினை?”

“ஆமாம், தடைக்குப் பின்னால் இருக்கும் பிரச்சினை. நான் மது அருந்துவதை விரும்புவதில்லை; என்னைப் பின்பற்றுபவர்கள் எவரும் மது அருந்துவதில்லை. ஆனால் தடை எப்படி நடைமுறையில் இருக்க வேண்டுமோ, அப்படி இல்லை என்பதை நான் அறிவேன்.”

“எல்லாம் ஒரே நேரத்தில்?” காலின்ஸ் வினவினார்.

“ஆமாம். கடின மதுபானங்கள் தடை செய்யப்பட்டிருக்க வேண்டும், பீர் போன்ற சாதாரண மதுபானம் அல்ல. அப்படி ஒரு சட்டத்தை நடைமுறைப்படுத்தி இருக்கலாம். தற்போதைய நிலைமை, நேர்மையற்ற அதிகாரிகளுக்கு, பணம் சம்பாதிக்கவும், அனைத்து இடங்களிலும் தீமைகளை அதிகரிக்கவும் வாய்ப்பாக அமைந்துள்ளது.”

தொடர்ந்து, பாபா விளக்கினார்: “நான் சுய கட்டுப்பாட்டை நம்புகிறேன், வலுக்கட்டாயமாகச் செய்வதை அல்ல. வலுக்கட்டாயம் ஒடுக்குமுறையை அடிப்படையாகக் கொண்டது, மேலும் அச்சம் மற்றும் வெறுப்பை விளைவிப்பது. சுய கட்டுப்பாட்டுக்குத் தைரியம் தேவைப்படுகிறது, மேலும் அது அன்பினால் தூண்டப்படலாம். நாம் யாரை நேசிக்கிறோமோ, அவர்களுக்காக பல விஷயங்களைச் செய்கிறோம்; அதை நாம் சாதாரணமாகச் செய்ய மாட்டோம், ஏனெனில் அதற்கு வேண்டிய மன வலிமையும், செய்யும் சக்தியும் நமக்கு இருக்காது. அன்பால் எத்தனைப் பழக்கங்களை நாம் உடைத்துத்தள்ளி இருக்கிறோம்? அது, அன்பு இல்லாத பட்சத்தில், முடியாத ஒன்றாக இருந்திருக்கும். அன்பு, எப்போது உலகளாவிய அன்பாக உருவெடுக்குமோ, அப்போது தனிநபருக்கு அல்லது சமூக ஒழுங்கிற்கு தீங்கு விளைவிக்கும் அனைத்து பழக்கங்களும் அதன் வெளிச்சத்தில் கரைந்துவிடும்.

“இது, நீங்கள் என்னிடம் கூறிய பொருளாதார நிலைமைக்கும் பொருந்தும். ஒரு மனிதனின் தன்மைக்கும், அவனுடைய சூழ்நிலைகளுக்கும், அதுபோல் அவனது உள் எண்ணங்கள் மற்றும் ஆசைகளுக்கும் அவனது வெளிப்புற சமூக சூழலுக்கும் இடையே மிக நெருக்கமான தொடர்பு உள்ளது. ‘உள்ளே எப்படியோ, வெளியேயும் அப்படித்தான்’ என்பது நியதி.

“நமது சுற்றுப்புற சூழலில் நாம் அதிருப்தி அடைந்தால், பொதுவாக, அத்துடன் சரியாக நடந்து கொள்வது எப்படி என்பதை நாம் தெரிந்து கொள்ளாததுதான் காரணம். ‘தைரியத்தை இழந்து, மனம் உடைந்து இதிலிருந்து நான் எப்படி வெளியேறுவது’ என்று சிந்திப்பதற்கு பதிலாக, இந்த அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்ன? என்பதை ஒருவர் சிந்திக்க வேண்டும். ஏழ்மையை, மகிழ்ச்சியுடன் சகித்துக்கொண்டு, ஒருவர் இயன்றவரை முயன்று ஏதேனும் வேலையைக் தேடிக்கொண்டால் அது பணிவு, பொறுமை இரண்டையும் வளரச் செய்து, ஆன்மீக முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவும். இது குணாம்சத்தின் ஒரு சோதனை. பசியில் மகிழ்ச்சியாக இருப்பது கடினம் என்று எனக்குத் தெரியும், ஆனால் அனைத்து பயனுள்ள விஷயங்களும் கடினம்தான்.

**“கோடீஸ்வரர்கள் கூட, சரியாக சிந்திக்கவும், வாழவும் கற்றுக் கொள்ளாவிட்டால் மகிழ்ச்சியாக வாழ முடியாது”** என்று பாபா முடித்தார்.

“உங்கள் அன்பின் கோட்பாட்டை பொதுவாக ஏற்றுக்கொள்வது, செல்வத்தை நியாயமான முறையில் பகிர்ந்து கொள்வது ஆகுமா?” என்று காலின்ஸ் கேட்டார்.

**“நிச்சயமாக. நாம் அனைவரும் ஒருவரையொருவர் ஆழமாக நேசிப்பதாக வைத்துக்கொள்வோம், ஒருவரிடம் உள்ளதை பிரியமானவருடன் பகிர்ந்து கொள்வதே அன்பின் இயல்பான ஆசை. ஒருவர் அதிகமாக வைத்திருக்கும் செல்வத்தை, பிறருடன் நிபந்தனையோடு பகிர்ந்துகொள்ள விரும்பினால், அது மரியாதைக்கு பதிலாக அவமானத்தை விளைவிக்கும்.”**

காலின்ஸ் தொடர்ந்து கேட்டார், “இதை எல்லாம் ஒரே நேரத்தில் செய்யலாம் என எதிர்பார்க்கிறீர்களா?”

**“இல்லை, ஆனால் நீங்கள் நினைப்பதை விட அதி விரைவில். மக்கள் அதை ஏற்றுக் கொள்வார்கள்”** என்று பாபா பதிலளித்தார்.

“ஏன்?”

**“செய்தாக வேண்டும்.”**

பாபா கூறியதைப் பற்றி யோசித்த பின்பு, காலின்ஸ், “நீங்கள் முதலில் என்ன செய்யப் போகிறீர்கள்?” என வினவினார்.

**“முதலில், ஒரு நாளுக்காக நான் சீனா செல்ல உள்ளேன். ஆனால் திரும்பி வருவேன். கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு இடையில் ஒரு முழுமையான இணைப்புச் சங்கிலியை அமைக்க விரும்புகிறேன்.”**

ஃபிரடெரிக் காலின்ஸ், முதலில் பாபாவை, சந்தேக கண்களால் பார்த்தாலும், இறுதியில் வெகுவாக ஈர்க்கப்பட்டார். பாபாவுடனான நீண்ட உரையாடலின் பதிவுகளைப் பின்பு ‘லிபர்ட்டி’ (LIBERTY) இதழில் வெளியிட்டார்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு, பாபாவின் தரிசனத்திற்காக வந்த நதீன் டால்ஸ்டாய், இறுதியாக, மெஹர் பாபாவுடன் நேரடியாகப் பேசும் வாய்ப்பைப் பெற்றார். பாபா மீதான அவரது நம்பிக்கை மேலும் உறுதிப்படுத்தப்பட்டது, அவரிடம் நிரந்தரமாக சரணடைந்தார். “என் உள்ளுணர்வு எந்தக் கேள்விக்கும் இடமில்லாமல் உறுதியாக இருந்தது,” என்று அவர் பதிவு செய்தார். “நான், கிறிஸ்து எனக்கு எதிரில் அமர்ந்திருந்ததைப் பார்த்தேன், அவருடைய உருவம், தெய்வீகம் ஒளிரும் முகம், அவரது கண்கள் அனைத்தும் அன்பை வெளிப்படுத்துவதைப் பார்த்தேன். இது ஒரு நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட சந்திப்பின் நிறைவு, எனது வாழ்க்கையின் உச்சக்கட்டம்.”

பாபாவின் அறையிலிருந்து வெளியே வரும் வேளையில், நதீன் டால்ஸ்டாய் சத்தமாக ‘இயேசு கிறிஸ்து!’ என்று கூறியபோது, பார்வையாளர்கள் அனைவரும் அவரைத் திரும்பிப் பார்த்தனர். நதீன், பின்பு தனது அனுபவத்தை விளக்கினார், “நாசரேத்தின் இயேசு கிறிஸ்துவின் அவதாரமாக, மெஹர்

பாபாவின் இந்த அன்பான வடிவத்தில், ஏதோ ஒன்று எனக்குள் அடையாளம் காட்டியது.”

“நம்பமுடியாத ஒன்று வெளிப்படுத்தப்பட்ட உண்மையாகி விட்டது. சத்தியத்தை நேசிப்பது என்பது அதை வாழ்வது என்று தெரிந்து கொண்டதால், எனது விருப்பத்தை, அவருடைய இறை விருப்பத்திற்கும், எனது வாழ்க்கையை அவருடைய சத்தியம் மற்றும் அன்பின் நிமித்தம் அர்ப்பணம் செய்தேன்.”

நதீன் டால்ஸ்டாயின் நிதி மற்றும் பிற கஷ்டங்களைப் பற்றி அறிந்து கொண்ட பாபா அவரிடம், “**உங்கள் எல்லா துன்பங்களுக்கும் ஈடு செய்யும் விதத்தில் நான் உங்களுக்குத் திருப்பித் தருவேன். நான் உங்களுக்கு நிரந்தர ஆனந்தத்தை வழங்குவேன். எது ஒன்றையும் இப்போது இருப்பதைப் போலவே நீங்கள் காண்பீர்கள், அதுவும் இந்தப் பிறவியில். நீங்கள் ஒரு அழகான ஆத்மா, ஒரு நாள், உங்கள் மாமனார்** (லியோ டால்ஸ்டாய்) **அடைய ஏங்கிக் கொண்டிருந்ததை - இறை உணர்வை - நீங்கள் அடையப் பெறுவீர்கள்**.”

அடுத்த நாள், நதீன் தனது கணவர் இல்யா (ILYA), சிறந்த ரஷ்ய எழுத்தாளர் லியோ டால்ஸ்டாயின் மகன், அவரும் ஓர் எழுத்தாளர், அவரை பாபாவிடம் அழைத்து வந்தார். இல்யா, பாபாவிடம், “இந்த உலகில் இவ்வளவு தீமை இருக்கும்போது, ஒருவர் எப்படி நேசிக்க முடியும்?” என வினவினார்.

அதற்கு பாபா, “**நீங்கள் அன்பை உங்கள் இதயத்திற்குள் கொண்டு செல்ல வேண்டும். நீங்கள் ஒரு நல்ல மனிதர்; விரைவில் அதைப் புரிந்து கொள்வீர்கள்**” என்று பதிலளித்தார்.

இல்யாவும் பாபாவைப் பார்த்து இதயம் நெகிழ்ந்து கண்கள் கலங்கினார். வீட்டுக்குத் திரும்பி வந்த அவர், தனது நண்பர்களிடம் கூறினார், “எனது வாழ்க்கையில் முதல்முறையாக நான் இயேசுவைப் போன்ற ஒருவரை உயிரோடு, மனித உருவில் சந்தித்தேன். அவருடைய தெய்வீக அந்தஸ்த்தை நான் உணர்ந்தேன், அவருடைய உதவி உறுதி செய்யப்பட்டது. தெய்வீக அன்புள்ளம் கொண்ட ஒரு மனிதரை நான் எனது வாழ்க்கையில் முதல் முறையாக சந்தித்தேன்!” இல்யா அடுத்த ஒன்றரை வருடங்களில் உயிர் துறக்க நேரிட்டது, ஆனால், நதீன், பாபாவின் நெருங்கிய சீடராகும் விதி படைத்தவர் ஆகையால், கணவரின் மரணம் நதீனை, இந்தியாவிற்குப் பயணம் செய்து பாபாவுடன் இணைய வழிவகுத்தது.

நியூயார்க் நகரில் பாபாவை சந்தித்த மற்றுமொரு பெண்மணி ஆக்னஸ் பரோன் (AGNES BARON). “இது மிகப்பெரிய அன்பின் தருணம்” என்று அவர் பின்பு நினைவு கூர்ந்தார். அவரைப் பார்க்க உள்ளே நுழைந்த போது, பாபா சில ஊதா மொட்டுகளைக் கையில் வைத்திருந்தார். ஆக்னஸின் எண்ணங்களை அறிந்து, அவற்றை அவரிடம் கொடுத்தார். உரையாடலின் போது அவர் அறியாமல் கையுறை நழுவி கீழே விழுந்தது. ஆக்னஸ் விடைபெற

எழுந்ததும், பாபா அவரைத் திரும்ப அழைத்து, கையுறைக்கு முத்தமிட்டு அவரிடம் கொடுத்தார்.

மே 20ஆம் நாள், மெஹர் பாபா மண்டலியுடன் நியூயார்க் நகரத்தைச் சுற்றி காரில் சென்று, 'எம்பயர் ஸ்டேட்' (EMPIRE STATE) கட்டிடத்தைப் பார்வையிட்டார். நோரினா வழியாக பாபாவுடன் அறிமுகமான ஜோஸஃப் ஜான் பாஸ் (JOSEPH JOHN BASS), உட்பட பலரை அவர் அன்று சந்தித்தார். ஜான் பாஸ் பாபாவின் வாழ்நாள் சீடராக மாறினார். எலிஸபெத் பேட்டர்ஸனின் பெற்றோர்களான ஸிமியன் பி. சேப்பின் (SIMEON B. CHAPIN) மற்றும் அவரது மனைவி எலிஸபெத் ஆகியோரும் அன்றைய தினம் பாபாவை சந்தித்தனர்.

அடுத்த நாள் எலிஸபெத் பேட்டர்ஸன், பாபாவை சென்ட்ரல் பார்க் வழியாகக் காரில் அழைத்துச் சென்றார். மண்டலி மற்றும் சிலரை, ஜூலியன் லமார் (JULION LAMAR - ஒரு கலைஞர்) இன்னொரு காரில் அழைத்துச் சென்றார். முந்தைய இரவில், யாரோ ஒருவர் தனது காரில் நுழைந்து, அதிலிருந்த அனைத்து பொருட்களையும் திருடிச் சென்றதால் ஜூலியன் மிகவும் வருத்தத்தில் காணப்பட்டார். இந்த சம்பவத்தை பாபாவிடம் அவர் மீண்டும் மீண்டும் குறிப்பிட, பாபா அவரிடம், "**இந்த உலகில் உங்களிடம் இருந்தது இவ்வளவுதானா?**" என்று கேட்டதும், ஜூலியன் இல்லை என ஒப்புக் கொண்டார், மேலும் பாபா, "**நான் உங்களிலும், திருடனிலும் இருக்கிறேன்!**" என்றார்.

சென்ட்ரல் பார்க் வழியாகக் காரில் சென்று கொண்டிருந்த வேளையில், 110ஆவது தெருவில் அமைந்த ஏரியின் அருகே காரை நிறுத்துமாறு பாபா எலிஸபெத்திற்குத் தெரிவித்தார். பாபா முன்னின்று அனைவரையும் ஏரியை நோக்கி நடத்திச் சென்றார். ஒரு குழந்தையை கைவண்டியில் வைத்துத் தள்ளிச்சென்ற செவிலியரைத் தவிர வேறு எவரும் அங்குத் தென்படவில்லை. பாபா, அந்தப் பெண்மணியின் அருகில் சென்று, அவரைப் பார்த்துவிட்டு, காரை நோக்கித் திரும்பிச் சென்றார். ஒரு வருடத்திற்குப் பிறகு, ஜோஸஃபின் கிரேபவ் (JOSEPHINE GRABAU), மருத்துவமனையில் இருந்தபோது அந்த இளம் பெண் பாபாவின் புகைப்படம் அருகில் இருப்பதைக் கண்டு யார் என்று கேட்க, ஜோ அவரிடம் இது மெஹர் பாபா என்று கூறினார்; அப்போது அந்தப் பெண் இவ்வாறு குறிப்பிட்டார், "கிறிஸ்துவைப் போலவே தோற்றமளித்த அதே மனிதர், ஒரு வருடம் முன்பு பூங்கா ஏரியின் அருகில் நடந்து சென்றதை நான் கண்டேன். நான் அவருடைய முகத்தை ஒருபோதும் மறக்கவில்லை."

அன்று இரவு நோரினா ஏற்பாடு செய்த பிராட்வேயில் (BROADWAY) பாபா ஒரு திரைப்படத்திற்குச் செல்ல விரும்பினார்; 18 பேர் கொண்ட ஒரு குழு அவருடன் சென்றது. திரைப்படத்தின் இடையே பாபா அமைதியற்ற நிலையில், அரங்கத்தை விட்டு வெளியேறினார். அனைவரும் பாபாவைப் பின்தொடர்ந்தனர். நெரிசலான நியூயார்க் வீதிகளில் நடந்து செல்லும் வேளையில், திடீரென ஒரு நபர் பாபாவைத் தடுத்து நிறுத்தி, நேராக அவரது கண்களை உற்று நோக்கினார்;

பின்னர் அவர்கள் நடைபாதையில் செல்லும் வேளையில் பாபாவை மறுபடியும் திரும்பிப் பார்த்தார். ஒருவேளை இவரைப் பார்க்கத்தான் பாபா தியேட்டரை விட்டு வெளியேறியிருக்கலாம்.

ஆதி ஜூனியர் நாள் முழுவதும் எழுத்துப்பலகையைப் படித்துக் கொண்டிருந்ததால், சோர்வாக, தியேட்டரில் இருக்கையில் அமர்ந்ததும் தூங்கிவிட்டார். அவர்கள் ஸ்டோக்ஸின் இல்லத்திற்குத் திரும்பியபோது, பாபா ஒவ்வொரு மண்டலியையும், நோரினாவிற்கு முன்னால், "திரைப்படம் அருமையாக இருந்ததல்லவா?" என வினவினார். டாக்டர் கனி, "அற்புதம்" என்றார், சாஞ்சி "அழகாக இருந்தது!", காக்கா, "மிகவும் நன்றாக உள்ளது" என்று கூறினர். ஆதி ஜூனியரின் முறை வந்ததும், "என்னை, மன்னித்து விடுங்கள், பாபா. நான் தூங்கிவிட்டேன், அதைப் பார்க்கவில்லை" என்றதும், பாபா அவருக்கு ஒரு மறுக்கத்தக்க முகபாவனையைக் காண்பித்தார். பாபாவின் அந்தப் பார்வை ஆதி ஜூனியருக்குச் சிக்கலை உருவாக்கும் என்பதை அறிந்திருந்தார். நோரினா அறையை விட்டு வெளியேறிய அந்த நிமிடத்தில், பாபா, ஆதி ஜூனியரின் காதைப் பிடித்து, கன்னத்தில் அறைந்தார். அப்போதிருந்து, ஆதியின் காது சற்று மந்தமாகிவிட்டது.

"இது எதற்காக?" அழுதுகொண்டே ஆதி கேட்டார்.

"**திரைப்படம் நன்றாக இருந்தது என்று நீ சொல்லியிருக்க வேண்டும். நோரினா நீ கூறியதைக் கேட்டு மிகவும் ஏமாற்றமடைந்திருக்க வேண்டும்.**"

"பாபா, அப்படியானால் நான் உங்களிடம் பொய் சொல்லியிருக்க வேண்டுமா? நான் உண்மையைத்தான் பேசினேன்."

"**உண்மை என்று அழைக்கப்படுவதைக் காட்டிலும், பிறரை மகிழ்ச்சியடையச் செய்வது முக்கியம்!**" என்றார் பாபா.

ஒரு நாள் மதிய வேளையில், பாபா, புற்று நோயால் பாதிக்கப்பட்ட அனிதாவின் தாயாரைப் பார்க்கச் சென்று ஆறுதல் வழங்கினார், "**கவலைப்பட வேண்டாம், சுதந்திரமான பறவைகள் அவற்றின் சுதந்திரத்தை உணர்வதில்லை. கூண்டில் அடைக்கப்பட்ட பறவைகள் மட்டுமே அதைப் பாராட்ட முடியும். நீங்கள் விரைவில் சுதந்திரமாக இருப்பீர்கள்.**"

பாபா, நியூயார்க்கில் இருந்த வேளையில், பல நேரடி பேட்டிகள் மற்றும் தனியார் சந்திப்புகளில் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டார். அவர், தன்னை 'ஃபாக்ஸ் மூவிடோன்' (FOX MOVIETONE) செய்தி குழுவினர், ஸ்டோக்ஸ் இல்லத்தில் திரைப்படம் எடுக்க அனுமதித்தார். மெரடித் ஸ்டார் அருகில் அமர்ந்து எழுத்துப்பலகையைப் 'வாசித்தார்'. பாபாவிடம், "உங்கள் பணி என்ன?" என்று கேட்டதும், பாபா, "**வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொருவரையும் உண்மையை உணர வைப்பதும், சகோதரத்துவத்தை நடைமுறையில் ஓர் உண்மையாக மாற்றுவதும்**" என்றார்.

"நீங்கள் ஏன் குறிப்பாக அமெரிக்காவிற்கு வந்தீர்கள்?"

**“ஏனெனில் அமெரிக்காவில் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு அதிக ஆற்றல் உள்ளது, ஆனால் இந்த ஆற்றல் பெரும்பாலும் தவறாக வழிநடத்தப்படுகிறது. நான் அதை ஆக்கப்பூர்வமான ஆன்மீகப் பாதைகள் வழியாகத் திசை திருப்புவேன்.”**

“உங்கள் மௌனத்தைக் கைவிடும்போது என்ன நடக்கும்?”

**“நான் யாருடன் பேசுகிறேனோ அவர்கள் உடனடியாக உண்மையை நம்புவார்கள்.”**

1932, மே 22ஆம் நாள் இரவில், கிரீன்விச் கிராமத்தில் (GREENWICH VILLAGE) அமைந்த இல்லத்தில், பாபாவின் நினைவாக, ஸ்டோக்ஸ் சிறப்பான விருந்து ஒன்றை வழங்கினார்; முன்னூறுக்கும் மேற்பட்டோர் விருந்தில் பங்கெடுத்தனர். பல கறுப்பின மக்கள் கலந்து கொண்டனர்; ஒரு பெண்மணி, பாபாவிடம் தனது இன மக்களுக்கு உதவுமாறு கேட்டதற்கு பாபா, “**நான் அதை நிச்சயமாகச் செய்வேன்**” என்று பதிலளித்தார். வரவேற்பறையில், பாபா பின்வரும் செய்தியை வழங்கினார்:

**உங்களில் பலரை மீண்டும் சந்திப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உங்களில் சிலர், என்னையும் எனது பணிகள் பற்றியும் பல்வேறு செய்தித்தாள் அறிக்கைகளைப் பார்த்து அறிந்திருக்கிறீர்கள் என்பதில் ஐயமில்லை. இவற்றில் பல தவறானவை. ஆனால் ஊடகவியலாளர்கள் எனது நோக்கத்தைப் புரிந்து கொள்ளவில்லையா அல்லது பரபரப்பின் ஆவேசத்திற்கு ஆளாகிறார்களா என்று ஆச்சரியப்படத் தேவையில்லை.**

**நான் எந்த மதத்தையும், வழிபாட்டையும், சமய நம்பிக்கையையும், சமூகத்தையும் நிறுவவோ, கண்டுபிடிக்கவோ விரும்பவில்லை. இந்த அமைப்புகள் ஏற்கனவே பல உள்ளன. அன்றாட வாழ்க்கையில் மக்கள் தங்கள் இலட்சியங்களை உணர, உதவ நான் வந்துள்ளேன். இன்றைய நவீன வாழ்க்கையில் பரவலான அதிருப்திக்குக் காரணங்கள் - ஒன்று, கொள்கை, கோட்பாடுகள் மற்றும் நடைமுறைக்கு இடையிலான இடைவெளி; இரண்டு, இலட்சியத்திற்கும் பூமியில் அதை உணர்தலுக்கும் இடையிலான இடைவெளி. வாழ்க்கையில் ஆன்மீகம் மற்றும் பொருள் சார்ந்த அம்சங்கள் நெருக்கமாக ஒன்றிணைவதற்கு பதிலாக, பரவலாகப் பிரிக்கப்படுகின்றன. உயிருக்கும் பொருளுக்கும் இடையில், அல்லது நீங்கள் விரும்பினால், வாழ்க்கைக்கும் வடிவத்திற்கும் இடையில் எந்த அடிப்படை எதிர்ப்பும் இல்லை. வெளிப்படையான எதிர்ப்புக்கு, தவறான சிந்தனை, அறியாமை இவை இரண்டும் காரணமாக உள்ளன. எனவே, இதற்கான பரிகாரம், அறிவாற்றலுக்கும் ஆழ் இதயத்திற்கும் இடையிலான சமநிலையின் நிரந்தர ஒளியூட்டத்தினால் விளையும் சரியான சிந்தனையின் தொடர்ச்சியான நடைமுறையில்தான் உள்ளது. இந்த ஒளியூட்டத்தை நான் வழங்க வந்துள்ளேன்.**

கடவுள் ஒருவரே உண்மையானவர், அனைத்தும் கடவுள் என்று, தனிப்பட்ட அனுபவத்தின் மூலம் மிகப் பெரிய ஞானிகள் உணர்ந்துள்ளனர். இதன் அர்த்தம் என்னவெனில், நீங்கள் அதை அறிந்து கொள்ளாமல் இருந்தாலும், மூலமுதலான உண்மைப்பொருள் ஒவ்வொருவரிடமும் மறைந்துள்ளது. ஆனால் அதை வாழ்ந்து, உணர்வுபூர்வமாக அனுபவிக்க வேண்டுமெனில், அது வெளிப்படுத்தப்பட வேண்டும். இந்த உண்மைப்பொருளைப் பற்றிய அறிவார்ந்த நம்பிக்கை மட்டும் போதாது. உண்மையான அறிவு என்பது, முதலாவதாக ஒளியூட்டம், பின்னர் இறுதியாக உண்மைப்பொருளாகிய இறைவனுடன் ஐக்கியமாவது. இந்த இறுதி கட்டமான கிறிஸ்துவின் உணர்வு நிலையே தெய்வீக நிலை, இதுதான் எனது நிரந்தர நிலை.

ஒளியூட்டத்திற்குத் தடைகளாக இருப்பவை மனப்பாங்குகள் மற்றும் அகங்காரத்துடன் தொடர்புடைய ஆசைகள்; அவை மனப்படிவங்கள் (MENTAL IMPRESSIONS) என்று அழைக்கப்படுகின்றன. இந்த ஆசைகள் மற்றும் மனப்பாங்குகளின் கூட்டுத்தொகை ஒரு தனி வாழ்க்கையின் மாயையை உருவாக்குகிறது, அல்லது பிற நபர்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டு, முரண்பாட்டுத் தன்மையை வெளிப்படுத்துகிறது.

பரிணாமம் அல்லது பொருளுலக வாழ்க்கை, அத்தகைய ஒரு தனி சுயத்தை, 'நான்' எனும் நிலைப்பாடு உருவாகுவதை அவசியமாக்கியது. இல்லையெனில், ஆன்மீக உணர்வை, ஒருபோதும், நாம் இந்த உடலோடு வாழும்போது அடைய முடியாது.

ஆரம்பத்திலிருந்து பரிணாமம் தொடங்குவதற்கு முன்பு, நாம் அனைவரும் மூலாதார பொருளுடன் (இறைவனுடன்) ஒன்றிணைந்து இருந்தோம்; ஆனால், விழிப்புணர்வு இல்லாமல், கடலில் மீன்கள் வாழ்வது போல (ஏனெனில் ஒருபோதும் அதை விட்டு வெளியே வந்ததில்லை) வாழ்ந்து வந்தோம். பரிணாமம் என்பது மூலப்பொருளின் ஒரு பிரிவை உள்ளடக்கியது, இதன் விளைவாக, உணர்வு நிலையிலான ஏக்கத்துடன், வாழ்க்கை மற்றும் வேறு வேறு வடிவங்களின் தொடர்ச்சியாக மூலப்பொருளை நோக்கித் திரும்ப வேண்டியது அவசியம். பல பிறவிகள் எடுத்து, பல்வேறு உடல்களில் வந்து, இறுதியில் உணர்வு முழுநிலையை அடையும்போது, மூலமுதலான இறைவனோடு இணைவது சாத்தியமாகிறது.

அமெரிக்கா, வெள்ளை இனங்களின் முன்னோடியாக இருந்து அதை ஒன்றிணைப்பதைக் குறிக்கிறது, எனவே, எதிர்காலத்தில் நான் கொண்டு வரும் ஆன்மீக எழுச்சிக்கான சிறந்த அடித்தளத்தை உருவாக்குகிறது. அமெரிக்காவில் மிகப்பெரிய ஆற்றல் உள்ளது, ஆனால் இந்த ஆற்றலின் பெரும்பகுதி தவறாக வழிநடத்தப்படுகிறது. அதை ஆன்மீக மற்றும் ஆக்கபூர்வமான பாதைகளில் திசை திருப்ப விரும்புகிறேன்.

நான் இப்போது சில நாட்களுக்கு, கலிஃபோர்னியா செல்ல இருக்கிறேன். ஆன்மீகக் காரணங்களுக்காக நான், அங்கிருந்து, ஒரு நாள் பயணமாக, தூரத்து கிழக்கத்திய நாட்டுக்குச் செல்ல வேண்டும், ஆனால்

**நான் ஜூன் மாத இறுதியில் கலிஃபோர்னியாவிற்குத் திரும்பி வந்து பேசுவேன். ஒருவேளை, நான் பேசுவதில் காலதாமதம் ஏற்பட்டால், ஜூலை மாதம் திரும்பி வந்து பேசுவேன். நான் பேசும்போது, எனது ஆன்மீக ஆற்றலுக்கும், ஒளியூட்டத்தை வழங்கும் திறனுக்கும் பல சான்றுகள் இருக்கும். அனைத்து அன்பிற்கும் வாழ்விற்கும் ஆதாரமாகத் திகழும் உண்மைப்பொருள்** (இறைவன்), **வாழ்க்கையின் எல்லா துறைகளிலும் உச்சத்தை ஆட்சி செய்வதை மக்கள் பின்னர் உணர்வார்கள்.**

**எனது பணி மற்றும் நோக்கங்கள் தீவிரமான நடைமுறைக்குரியவை. ஆன்மீகத்தைப் பொருட்படுத்தாமல், பொருளுலகை மிகைப்படுத்துவது நடைமுறையில் சாத்தியமல்ல. ஆன்மீக இலட்சியங்களை நடைமுறைப்படுத்தாமல் வைத்திருப்பதும் வாழ்வின் நடைமுறைக்கு உகந்ததல்ல. அன்றாட வாழ்க்கையின் இலட்சியத்தை உணர்வது, வாழும் உயிருக்கு அழகான, போதுமான வடிவத்தை வழங்குவது, சகோதரத்துவத்தை ஓர் உண்மையாக மாற்றுவது, இவை அனைத்தும் இன்றைய உலகில் ஒரு கோட்பாடாக மட்டுமின்றி, வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் நடைமுறையில் உள்ளது.**

**எனது பணி, மிகுந்த உற்சாகத்தையும், ஒரு குறிப்பிட்ட அளவு எதிர்ப்பையும் தூண்டும். இது தவிர்க்க முடியாதது. ஆனால் ஆன்மீகப் பணி, எதிர்ப்பால் பலப்படுத்தப்படுகிறது, எனவே அது என்னுடனே இருக்கிறது. இது வில்லிலிருந்து ஓர் அம்பை, இலக்கை நோக்கி ஏவுவது போன்றது - நீங்கள் எவ்வளவு அதிகமாக வில்லின் நாணை உங்களை நோக்கி இழுக்கிறீர்களோ, அம்பு, அவ்வளவு வேகமாக அதன் இலக்கை நோக்கிப் பாய்கிறது.**

பாபாவிற்கு, மரியாதை செலுத்துவதற்காக மக்கள் வரிசையில் நின்று கொண்டிருந்தபோது, அவர் திடீரென நிகழ்ச்சியை நிறுத்திவிட்டு, மண்டலியில் ஒருவரை அழைத்தார். வரிசையில் பின்னால் நின்று கொண்டிருந்த ஒரு பெண்மணியைச் சுட்டிக்காட்டி, நோரினாவிடம் அவரை அழைத்து வருமாறு கூறினார். அந்தப் பெண்மணி தயக்கத்துடன், அவர் ஒரு நண்பருடன் வந்ததாகவும், பாபாவை சந்திக்க வரவில்லை என்றும் விளக்கினார். ஆனால் பாபா, தொடர்ந்து சைகையால் அழைத்தபோது, அந்தப் பெண்மணியின் அணுகுமுறை மாறி, பாபாவை நோக்கி நடந்து வந்தார்.

வெளிப்படையான மகிழ்ச்சியுடன் பாபா கரங்களை நீட்டி வரவேற்றார். சில இனம் புரியாத காரணங்களுக்காக அந்த ஆத்மா பாபாவை சந்திக்கும் ஏக்கத்தில் இருந்தது. குழப்பத்தில் ஆழ்ந்த அந்தப் பெண்மணியிடம் பாபா, "**கவலைப்படாதீர்கள், எனக்கு எல்லாம் தெரியும், நான் உங்களுக்கு உதவுவேன்**" என்று கூறியதும், அவர் கண்கலங்கி அழுதார். அதன் பிறகு பாபா ஒவ்வொருவரையும் சந்தித்தார்.

சுமார் ஒரு வாரத்திற்குப் பிறகு, மெஹர் பாபாவை சந்திக்க நோரினா கலிஃபோர்னியாவிற்கு எலிஸபெத்துடன் செல்வதற்கு சற்று முன்னர், அவருக்குத் தெரியாத ஒருவரிடமிருந்து தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது.

“பாபாவை சந்திக்க நீங்கள் மிகவும் அன்பாக என்னைத் தூண்டினீர்களே, அந்தப் பெண் நான்” என்று அவர் கூறினார். “நான் உங்களை வந்து பார்க்கலாமா? மிகவும் அற்புதமான ஒன்று எனக்கு நிகழ்ந்தது!” அந்தப் பெண்ணின் பெயர் மரியன் (MARIAN) என்றும் அவர் நோரினாவின் நண்பருக்கு நண்பர் என்றும் அறிந்து கொண்டார். நோரினா அவரை சந்திக்க ஒரு தேதியைத் தெரியப்படுத்தினார்.

மரியன், நோரினாவின் இல்லத்திற்கு வந்து, அவருக்கும் மகளுக்கும் இடையிலான வெறுப்பின் காரணமாக, அவரது குடும்பத்தில் நிலவிய அமைதியின்மையை விவரித்தார்:

நானும் எனது மகளும் 20 ஆண்டுகளாக ஒருவருக்கொருவர் மீதுள்ள வெறுப்பால் மிகவும் துன்பப்படுகிறோம். ஏன் இந்த வெறுப்பு என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை, என்னால் சமாளிக்கவும் முடியவில்லை. நான் அவளுக்கு ஒரு முத்தம் கூட கொடுத்ததில்லை!

பாபா அவரிடம் என்னை அழைத்தபோது, அவர் ஏன் அழைக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. எனது மகிழ்ச்சியற்ற தன்மை வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறியதால், எனக்கு உதவி தேவை என்று கூட என்னால் எண்ண முடியவில்லை. பாபா என்னை மிகவும் தயவுடன் வரவேற்றபோது, எந்த வகையிலும் ஈர்க்கப்பட்டதாக எனக்கு நினைவில் இல்லை, அவரை உன்னிப்பாகக் கூட பார்க்க முடியவில்லை. நான் ஒரு கனவில் இருந்ததைப் போல் உணர்ந்தேன், ஏதோ ஒரு நல்ல காரணத்திற்காக, கண்ணுக்கு தெரியாத ஒருவரால் எங்கேயோ கொண்டு செல்லப்பட்டதைப் போலத் திடீரென எழுந்தேன். எனக்கு என்ன நடந்தது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அடுத்த நாள் காலையில், வழக்கத்திற்கு மாறாக ஆழ்ந்த தூக்கத்திலிருந்து நான் விழித்தேன்; அன்பு மற்றும் பேரின்பத்தின் பரவசத்தில் நான் நனைவதை உணர்ந்தேன்! அது எனக்குள் மிகவும் சக்திவாய்ந்ததாக இருந்தது, அது எனது விருப்பமின்றி சிந்திக்காமல் செயல்படத் தூண்டியது. நான் தூங்கிக் கொண்டிருந்த எனது மகளின் அறைக்கு நேராக நடந்தேன், தவிர்க்கமுடியாத அன்பால் ஈர்க்கப்பட்டு, அந்த வெறுப்படைந்த குழந்தையின் அருகில் நான் சென்றேன்; எங்கள் இருவரின் வாழ்க்கையிலும் முதல் முறையாக, நாங்கள் ஒரு பிணைப்பை உணர்ந்தோம் - ஒரு தாய் மற்றும் மகளின் அன்பை விட மிகப்பெரிய ஒரு பிணைப்பு! இது கிட்டத்தட்ட மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஓர் அனுபவம். இது எங்கள் இதயங்களை ஒன்றாக இணைத்து, ஒரு புதிய வாழ்க்கையை வாழ வழிவகுத்தது. என் அனுபவம் அவளால் தொற்றுநோயாக உணரப்பட்டது, இன்று முழுக் குடும்பத்திற்கும் மகிழ்ச்சியைப் பிரதிபலிக்கும் ஒரு மென்மையான உறவை உருவாக்கியது.

பிரியமான தோழி, இந்த மனிதர் யார்? அத்தகைய அன்பின் அருளை இயேசு அளித்ததைப் போன்ற கதைகள் எனக்கு நினைவிருக்கின்றன. இவர் யார்?

நோரினா பின்பு மரியனிடம் மெஹர் பாபாவைப் பற்றி விளக்கிக் கூறினார்.

வேறொரு சந்தர்ப்பத்தில், கடுமையான மது பழக்கத்தில் இருந்த நோரினாவின் நண்பர் ஒருவர், நியூயார்க்கில் பாபாவை சந்திக்க வந்தார். பல ஆண்டுகளாக, அந்தப் பெண்மணி வேறு வேறு புகலிடங்களுக்குச் சென்று வந்தார். தன்னுடன் வாழ்ந்த தாயை அவர் வெறுத்தார், ஒவ்வொரு நாளும் கொடூரமான வார்த்தைகளால், “நீ ஏன் இன்னும் உயிரோடு இருக்கிறாய்?” என்று திட்டி வந்தார்.

நோரினா, பாபாவைப் பற்றிய ஆர்வத்தைத் தூண்டவே, கடைசியாக அவர் ‘அந்த மனிதரைப் பார்க்க’ ஒப்புக்கொண்டார். அவர் பாபாவிடம் வந்தபோது, நோரினா தனது தோழியின் பின்னணியை அவரிடம் சொல்ல முயன்றார். பாபா இடையே நிறுத்தி “**நான் அவரை நன்கு அறிவேன்**” என்று கூறினார். அந்தப் பெண்மணி அவரது காலடியில் அமர்ந்தார், சில நிமிட நட்புடன் கூடிய உரையாடலுக்குப் பிறகு, பாபா மதுபானங்கள் மற்றும் தீவிர ஆர்வத்துடன் மக்கள் குடிப்பழக்கத்தில் ஈடுபடுவதை, பொதுவாகக் குறிப்பிட்டுப் பேசினார்; பல்வேறு வகையான மதுபானங்களைப் பற்றியும், பாபா கேள்விப்பட்ட ஒரு சிறப்பான மதுவைப் பற்றியும் விவாதித்தனர். தனக்கு மிகவும் பிரியமான ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசியதில் அந்தப் பெண்மணி மிகவும் மகிழ்ச்சியடைந்தார். பாபாவுடனான அவரது சந்திப்பு மன பாரத்தைக் குறைத்ததோடு, மகிழ்ச்சியாகவும், நகைச்சுவை உணர்வோடும் இருக்கச் செய்தது.

சிறிது நேரம் கழித்து, அந்தத் தோழி நோரினா பக்கம் திரும்பி, “உனக்கு ஒன்று தெரியுமா? உங்கள் பாபா நான் நினைத்த அளவுக்கு மோசமானவர் அல்ல! அவர் உண்மையான மனிதர்!” என்றார்.

ஒரு வாரத்திற்குப் பின்னர், அந்தப் பெண்மணி நோரினாவை, தேநீருக்கு அழைத்தார். வீட்டில் நுழைந்த சிறிது நேரத்தில் நோரினா, அவர் மதுபானம் அருந்தவில்லை என்பதை கவனித்தார். அந்தத் தோழி தனது வாழ்க்கையை மாற்றுவதற்கான உறுதிப்பாட்டை உடனடியாக வெளிப்படுத்தினார், “நான் இனி மது அருந்தப் போவதில்லை, மீண்டும் அவ்வாறு செய்யமாட்டேன். நான் ஒரு முட்டாள்!

“எனது வாழ்க்கையின் சிறந்த பாகத்தையும், ஆற்றலையும் நான் வீணடித்துவிட்டேன். என்னால் இனி எவரையும் வெறுக்க முடியாது. எனது தாய்க்கு இவ்வளவு துன்பங்களைத் தந்ததற்காக வருந்துகிறேன். நான் இப்போது அவரை நேசிக்கிறேன், எனது வாழ்க்கையை அவருடைய மகிழ்ச்சிக்காக அர்ப்பணிப்பேன்.” பாபாவைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை, ஆனால், பாபாவின் பார்வை இந்தப் பெண்மணியின் இருண்ட மனதில் ஊடுருவி, அதை மேகங்களிலிருந்து ஒரு புதிய, சிறந்த வாழ்க்கைக்கு உயர்த்தி இருப்பதை நோரினா அறிந்திருந்தார்.

1932, மே 23 அன்று மெஹர் பாபா மண்டலியுடன் ஹார்மன் ரிட்ரீட்டிற்கு வந்தபோது மால்கம், ஜீன் ஸ்க்லோஸ் இருவரும் அவரை மனமார்ந்த அன்புடனும் மகிழ்ச்சியுடனும் வரவேற்றனர்.

சில காலத்திற்கு முன்பு, பாபா ஒரு சில மண்டலியுடன் ஹார்மனில் ஒரு முழு வருடம் தங்க இருப்பதாக மால்கம் மற்றும் ஜீனுக்கு அறிவிக்கப்பட்டது; மேலும், ஜீன், பாபா தங்குவதற்கான ஏற்பாடுகளைத் திட்டமிட்டிருந்தார். ஆனால், பாபாவிடமிருந்து உறுதியான திட்டம் வராதவரை, நிரந்தர ஏற்பாடுகள் எதுவும் செய்ய வேண்டாம் என்றும் அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. ஒரு வருடத்திற்கு பதிலாக, பாபா இரண்டு நாட்கள் மட்டுமே தங்கியிருந்தார், இதனால் தனது அமெரிக்க நண்பர்களுக்கு, இணக்கமான முறையில் வளைந்து கொடுக்கும் தன்மையைப் பேணுவதற்கான நடைமுறை பயிற்சியை, பாபா கற்றுத்தந்தார்.

ஹார்மனில், பாரமவுண்ட் ஃபிலிம் நிறுவனத்தின் (PARAMOUNT FILM COMPANY) பிரதிநிதி, உலகிற்கு ஒரு செய்தியை வழங்குமாறு கோரி பாபாவை அணுகினார். ஸ்டோக்ஸின் இல்லத்தில் கொடுக்கப்பட்ட செய்தியின் ஒரு பகுதியை மால்கம் வாசித்தார்; பாபா அவரை மீண்டும் திரைப்படம் எடுக்க அனுமதித்து, கீழ்வரும் செய்தியை வழங்கினார், "**நான் அமெரிக்க மக்களுக்கு என் அன்பையும் ஆசீர்வாதத்தையும் வழங்குகிறேன்**." விரைவில், இந்தத் திரைப்படம் உலகம் முழுவதும் பாரமவுண்ட் நியூஸ் ரீல் மூலம் ஒளிபரப்பப்பட்டது.

ஜோஸஃபின் கிரேபவ், அவரது தாயார் மேரி ஆன்டின், அனிதா, மைலோ ஷாட்டக் மற்றும் கிரேஸ் மான் உட்பட சுமார் 20 பேர் ஹார்மனில் பாபாவைப் பார்க்க வந்தனர். பெஹராம் சித்தாரை இசைக்க, ஜோஸஃபின் ஒவ்வொரு மாலை வேளையிலும் நடனமாடி, பாபாவிற்கு மனம் கவர்ந்த கவிதைகளை வழங்கினார்.

பிராட்வேயில் தோன்றிய ஒரு நடிகர் ஹவர்ட் எச். இன்செஸ் (HOWARD H. INCHES) என்பவரும் ஹார்மனுக்கு சில நாட்கள் வந்தார்; பின்னர் இன்செஸ் இவ்வாறு நினைவு கூர்ந்தார், "அமெரிக்காவில் கீழ்வானத்தில் ஒரு புதிய தீர்க்கதரிசி - பெரிய, பழுப்பு நிற கண்கள் மற்றும் வினோதமான தோல் கோட் அணிந்த இந்த மனிதரை நான் சந்தித்தேன். இந்தத் தற்காலிக ஹார்மன் வாழ்க்கையின் தூய்மையால் நான் வெகுவாக ஈர்க்கப்பட்டேன். ஹார்மன் நண்பர்கள் பாபாவின் பாதங்களில் வணங்குகின்றனர், விரைவில் நானும் ஒரு வழக்கமான உறுப்பினராக மாறினேன்."

மால்கம் ஸ்க்லோஸ், ஒரு கவிஞர், மெஹர் பாபாவைப் புகழ்ந்து எழுதிய பின்வரும் கவிதை, 'ஸாங் ஆஃப் தி மாஸ்டர்' (SONG OF THE MASTER), பொருள் சார்ந்த உலகின் உணர்வைச் சித்தரிக்கிறது; இது மெஹர் பாபாவின் வெளிப்பாடு மற்றும் உலகிற்கான பணியின் ஓர் அம்சத்தை வெளிப்படுத்துகிறது:

நீங்கள் வாங்க முடியாததை வழங்க நான் வந்தேன்!

உங்கள் சுகபோகங்களுடன் ஒன்றுவதானால்,
என்னை விட்டு செல் என்பேன்!
என்னுடைய பாதை புனிதர்களின் பாதங்கள் பதிந்த பாதை!
இடைவெளியற்ற இறைவனுக்குக் காலவரையற்ற பாதை!

நீங்கள் வாங்க முடியாததை வழங்க நான் வந்தேன்!
வாழ தைரியமும், சாக நம்பிக்கையும் தந்தேன்!
வாழும் போது சாக, சாகும் போது வாழச் சொல்லித் தந்தேன்!
மூச்சை விடுவதற்கு முன்பே உலகை விட்டு விடவும் கூறினேன்!

வாங்க முடியாததை வழங்க நான் வந்தேன்!
சிந்தனையை மீறும் அன்பில் ஞானம் விளைந்தது!
ஆசையை மாற்றும் அமைதியில் பேரின்பம் பிறந்தது!
ஒருபோதும் சோர்வடையாத மகிழ்ச்சியில் சக்தி நிறைந்தது!
நீங்கள் வாங்க முடியாததை நான் வழங்க முடிந்தது!

ஹார்மனில் இருந்தபோது, பாபா, மால்கமை அவருடன் இணைந்து எழுத்துப்பலகையைப் படிக்கவும், சந்திக்க வருபவர்களைத் தொடர்பு கொள்ளவும் உதவியாக இருக்கச் செய்தார். தனிப்பட்ட முறையில், மால்கம், ஜீன் இருவரையும் பாபா, அமெரிக்காவில் அவரது '**தலைமை முகவர்கள்**' என்று அறிவித்தார். இதற்கிடையில் பல வழிகளில் விலக்கப்படுவதைத் தாங்க முடியாத மெரடித்திற்கு, மால்கமின் நெருங்கிய ஈடுபாடு பெரும் அதிர்ச்சியாக இருந்தது. இந்தப் பயணத்திற்கு முன்னும் பின்னும், மெரடித், அவர் பாபாவின் வலது கரம், அவரது வழிகள் மற்றும் விருப்பங்களைப் பற்றி அனைத்தையும் அறிந்தவர் என்றும் மக்களைக் கவர முயற்சித்தார். தக்க நேரம் வரும்போது, பாபா, இப்படிப் பொய்யில் உயர்ந்து நின்ற ஒருவரை கீழே தள்ளி, நொறுக்குவது வழக்கம் - இப்போது மெரடித்தின் நேரம் வந்துவிட்டது. ஆரம்பத்தில் பாபா அவருக்கு ஒரு தளர்வான கட்டுப்பாட்டை அனுமதித்திருந்தார், ஆனால் இப்போது அவர் மெரடித்தின் அகந்தையை ஆழமாக வெட்டத் தொடங்கினார். இந்தப் பயணத்திற்குப் பிறகு, மெரடித் ஸ்டார், மெஹர் பாபாவை என்றென்றும் விட்டுவிட வேண்டிய சூழ்நிலை உருவானது.

1932, மே 24 அன்று எலிஸபெத், நோரினா, அனிதா மூவரும் ஹார்மனுக்கு வந்தனர். மதிய உணவுக்குப் பிறகு, பாபா தனது அன்பர்களை வெளியே கல் மொட்டை மாடிக்கு அழைத்துச் சென்றார். குழுவில் சிலர் முற்றத்தில் பூக்கும் ஒரு சில காட்டுப்பூக்களை எடுக்க முன் சென்றனர், ஆனால் எலிஸபெத் பாபாவுடன் இருந்தார். பாபா முன்னால் சென்று, எலிஸபெத்தைப் பின்தொடருமாறு கூறினார். பாபா, குனிந்து ஒரு சிறிய இளஞ்சிவப்பு பூவை எடுத்து, அதை எலிஸபெத்திடம் கொடுத்தார். காக்காவும் பாபாவின் அருகில் இருந்தார். எழுத்துப்பலகையில் பாபா எழுதிய வார்த்தைகளை, சாஞ்சி,

எலிஸபெத்திடம் எடுத்துக் கூறினார்: “**இன்றைய தேதியை இந்தப் பூவில் குறித்து எப்பொழுதும் உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள். ஒரு நாள் இதன் அர்த்தம் உங்களுக்குப் புலப்படும்**.”

அடுத்த நாள் மாலை, பாபா, மார்கரெட் மெயோவிடம் இது போன்ற ஒன்றைக் கூறினார். தனது அறைக்கு ஓய்வு எடுக்கச் செல்வதற்கு முன்பு, பாபா தனியாகச் சென்று அருகிலிருந்த நதியில் இறங்கினார். திரும்பி வந்ததும், மார்கரெட்டிடம், அவருடைய இல்லத்தில் அவர் என்ன பணிபுரிந்தார் என்பதை ஒரு நாள் புரிந்துகொள்வார் என்று பாபா கூறினார்.

அன்று இரவு எலிஸபெத் வீடு திரும்பியதும், தனது ‘புதிய ஏற்பாடு’ பைபிள் அட்டையின் உள்பக்கத்தில் அந்தப் பூவை ஒட்டி அதனருகில், ‘பாபா - மே 24, 1932’ என்று எழுதி வைத்தார். 1950லிருந்து 1960ஆம் ஆண்டின் இடைப்பகுதியில், அவர் பெட்டகத்தில் இருந்த புத்தகத்தை மீண்டும் கண்ட போது, அந்தப் பூவின் ஒரு பகுதியில் எழுதப்பட்டிருந்ததைப் படிக்க நேர்ந்தது; அதன் முக்கியத்துவம் உடனடியாகப் புலப்பட்டது. 1952, மே 24 அன்று ஓக்லஹோமாவின் (OKLAHOMA) ப்ராக் (PRAUGE) நகரில் நடந்த கார் விபத்திற்கு முந்தைய நாள், சரியாக 20 ஆண்டுகளுக்கு முன்பு பாபா, எலிஸபெத்திடம் அந்தப் பூவைக் கொடுத்திருந்தார், அது மட்டுமின்றி விபத்து நடந்த அந்த நாளும் எலிஸபெத் காரை ஓட்டிச்சென்றார்.

“ஆனால் அது எதிர்காலத்தில் வெகு தூரத்தில் இருந்தது.” காலம் இதை இப்படிப் பார்த்தது. “1932 வசந்த காலத்தில், இந்த நாட்கள் பரவசம், ஆனந்தம் இவற்றால் நிறைந்திருந்தன; அன்பர்களின் இதயங்கள் அவர்கள் மத்தியில் இறை-மனிதனின் பிரசன்னத்தால் நிரம்பி வழிந்தன. அவதார புருஷர் அவரது எலும்புகளை உடைத்து, இரத்தத்தை அமெரிக்க மண்ணில் சிந்த வேண்டும் என்று அவர்களுக்குத் தெரியாது.”

மே 25 அன்று நள்ளிரவில், ஜீன், மால்கம், மெரடித், மார்கரெட் ஸ்டார் மற்றும் மண்டலியுடன் மெஹர் பாபா ஹார்மனில் இருந்து ரயிலில் புறப்பட்டார். (ஐரோப்பா வழியாக இந்தியா திரும்புவதற்காக, டாக்டர் கனி ஏற்கனவே புறப்பட்டு விட்டார்.) குயன்டின் நியூயார்க் நகரிலிருந்து நேரடியாகச் செல்வதாகத் திட்டம்.

இந்தக் குழு மறுநாள் மாலை ஒஹையோ (OHIO) மாவட்டத்தின் கிளீவ்லேண்ட் (CLEVELAND) வழியாக ஷிகாகோ (CHICAGO), இல்லினாயை (ILLINOIS) அடைந்தது. ஷிகாகோவில், ஒரு மணி நேரம் ரயில் நின்றபோது, பாபாவும் மண்டலியும் விரைவாக, ஷிகாகோ நகரைச் காரில் சுற்றி வந்து, மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தனர்.

மிஸொரியின் (MISSOURI) கென்ஸஸ் (KANSAS) நகரில், மறுபடியும் ரயில் 40 நிமிடங்கள் நிறுத்தப்பட்டது. பாபா, நிருபர்களின் கேள்விகளுக்கு விடையளித்து, சுமார் அரை மணி நேரம் ரயில் நிலையத்திற்கு வெளியே உலாவினார்.

அன்றிரவு ‘கென்ஸஸ் சிற்றி ஈவினிங் ஸ்டார்’ (KANSAS CITY EVENING STAR) பத்திரிகையில் வெளியான கட்டுரைகளின் சுருக்கத்தைக் காணலாம்:

பாபா தனது மௌனத்தை விட்டுவிடப் போகிறார்.

இன்னும் சில மாதங்களில் பாபாவின் 7 வருட மௌனம் முடிவுக்கு வரும்!

அவர் ஹாலிவுட்டில் ஒரு மெஸையாவாக (MESSIAH) அறிமுகப்படுத்த உள்ளார், பின்னர் அவரது விரல்களுக்கு ஓய்வு கிடைக்கும்.

உலக மாயையைக் கடந்து, கடவுள் நிலை மற்றும் சொர்க்கத்தை அடைந்தவர், இன்று 'யூனியன்' (UNION) ரயில் நிலையத்தில் மனித உருவில் நடந்து, அகன்ற மீசையின் கீழ் அழகாகப் புன்னகைத்தார்.

ஸ்ரீ சத்குரு மெஹர் பாபா, இந்தப் புனித இறை மனிதர், இரக்கமுள்ள தந்தை, கலிஃபோர்னியாவின் ஹாலிவுட்டுக்குச் சென்று, அவரது ஏழு ஆண்டு கால மௌனத்தைக் கலைத்து, அதன் மூலம் அனைத்து மனிதர்களையும் மகிழ்ச்சி மற்றும் அமைதிக்கு அழைத்துச் செல்கிறார். மேலும் அவரது பேச்சின் மூலம், முழு மனிதகுலத்தின் உணர்வு நிலையை மாற்றுவார்.

"அவர் எந்த மதத்தையும், வழிபாட்டையும், சமய சமூகங்களையும் நிறுவமாட்டார்" என்று திரு. ஸ்டார் கூறினார். "இயேசு, புத்தர், ஸொராஸ்டர், கிருஷ்ணாவைப் போலவே அவர் உலகளாவியவர். அவர்களில் எவரும் மக்களைப் பிளவுபடுத்தும் மதங்கள், வழிபாட்டு முறைகள் அல்லது சமூகங்களை விரும்பவில்லை - அவர்கள் கற்பித்தவை, எல்லா நேரங்களிலும், எல்லா இடங்களிலும் எல்லா மக்களுக்கும் பொருந்தும்."

"மெஹர் பாபா, மக்கள் ஏற்கனவே அறிந்த உண்மையை, நடைமுறையில் வாழ்ந்து காட்ட உதவுவார்; அவர்களை, உண்மையை உணர வைப்பார்."

மற்றுமோர் ஆங்கில சீடரும் பாபாவின் செயலாளருமான குயன்டின் டாட் தனது குருநாதரைப் பற்றிக் கூறினார்: "அவர் ஓர் உண்மையான குருநாதர். அவர், நாம் ஏற்கனவே நம்பும் மதங்களைப் பின்பற்றக் கற்றுத் தருகிறார்."

உலகை, அமைதி மற்றும் ஆனந்த நிலைக்கு வழிநடத்துவதால், பாபா பொருளாதார நெருக்கடிக்கு ஒரு தீர்வாக இருப்பாரா? வேலையின்மை, முதலாளித்துவம், கம்யூனிஸம், தடையுத்தரவு போன்ற பிரச்சினைகளை அவர் எவ்வாறு தீர்க்கப் போகிறார்?

நியூயார்க் நகரின் ஹார்மனைச் சேர்ந்த திரு மற்றும் திருமதி மால்கம் ஸ்க்லோஸ், பாபாவுடன் பயணம் செய்யும் அவர்கள், ஆர்வத்துடன் பதிலளித்தனர்: "இதுபோன்ற சமூக பிரச்சினைகள் அனைத்தும் சுயநலத்திலிருந்து உருவாகின்றன. சுயநலம் என்பது சுயத்தின் உண்மையான தன்மை பற்றிய முழுநிறைவற்ற அறிவை அடிப்படையாகக் கொண்டது; சுயத்தின் உண்மை தன்மை என்பது ஒரு நித்திய யதார்த்தம், சக்தி மற்றும் வளமைகளின் எல்லையற்ற நிலை.

"நமது சமூக பிரச்சினைகள் அனைத்தும் வெளி உலகிலிருந்து அல்ல, உள்ளிலிருந்து தீர்க்கப்படும். உலகின் பரிபூரண வாழ்வோடு நீங்கள் உங்களை அடையாளம் கண்டுகொள்ளும் போது, உங்கள் சக்திகள் வரையறுக்கப்பட்டவை என்பதற்கு பதிலாக அளவிறுதியற்றவை என்பதை நீங்கள் உணர்வீர்கள்;

அவ்வேளையில் உங்களுக்கு, பயம், பேராசை, வாழ்க்கையில் எவருடனும் முரண்படுவதற்கான காரணம் எதுவும் இருக்காது; மேலும் மனிதனின் அணுகுமுறை, போட்டிக்கு பதிலாக ஒத்துழைப்பில் ஒன்றாக இருக்கும். மனிதன் ஒன்றை அடைவதற்கு பதிலாக, அவர்களிடம் இருப்பதைக் கொடுப்பதற்கு முன்வருவான். அனைவருடைய ஆர்வமும் உங்களுடையது போலவே உங்களுக்கு முக்கியமானதாக இருக்கும், ஏனெனில் நாம் அனைவரும் ஒரு சிறந்த உலகளாவிய ஒட்டுமொத்த சுயத்தின் தன்மை படைத்தவர்கள்."

அடுத்த நாள் காலையில், ரயில் டெக்ஸஸ் (TEXAS) மாகாணத்தின் எல் பாஸோ (EL PASO) நகருக்கு வந்து சேர்ந்தது. அரிஸோனாவின் (ARIZONA) டஸ்கென் (TUSCAN) நகருக்குச் செல்வதற்கு முன்பு, பாபா சுமார் அரை மணி நேரம் அங்கேயே நடந்தார்.

1932, மே 29ஆம் நாள், ஞாயிற்றுக்கிழமை, லாஸ் ஏஞ்சலஸை (LOS ANGELES) வந்தடைந்த பாபா, ஹாலிவுட்டின் (HOLYWOOD) 2400, நார்த் கோவர் (NORTH GOVER) வீதியில் அமைந்த 'பிரிஸில்லா மற்றும் மார்க் எட்மண்ட் ஜோன்ஸ்' (PRISCILLA AND MARC EDMUND JONES) ஆகியோரின் இல்லத்திற்குச் சென்றார். ஜோன்ஸ், 43, ஒரு முன்னாள் திரைக்கதை எழுத்தாளர் மற்றும் ஒரு பிரபலமான ஜோதிடரும் ஆவார்; அவர் ஆன்மீக ஆய்வுக் குழுவான 'ஸெபியன்' என்ற அமைப்பை (SABIAN ASSEMBLY) நிறுவினார். அவரும், அவர் மனைவியும் உண்மையான இறைபக்தி மிக்கவர்கள். 1920 ஆண்டுகளில் நியூயார்க் நகரில் மால்கம் ஸ்க்லோஸ் ஜோதிடம் கற்றுத் தந்தபோது, ஜோன்ஸ் அவருடைய தொடர்பில் வந்து இருவரும் நல்ல நண்பர்களாயினர். கடந்த ஆண்டு ஹார்மனில் பாபாவை சந்திக்க மால்கம், ஜோன்ஸை அழைத்திருந்தார், ஆனால் ஜோன்ஸ் இந்தப் பயணத்தை மேற்கொள்ள முடியாததால், அதற்கு பதிலாக பாபா கலி:ஃபோர்னியா வரும் வேளையில் அவரைத் தனது இல்லத்திற்கு விருந்தினராக அழைப்பு விடுத்தார். பாபாவும் அதை ஏற்றுக்கொண்டார்.

பாபாவின் வருகைக்கு முன்பு, ஜோன்ஸ், பாபாவிற்குக் கடிதம் எழுதினார்:

நீங்கள் எங்களோடு தங்கி இருக்கும் காலத்தில் நாங்கள் மகிழ்ச்சியுடன் உங்களுக்கு சேவை புரிய காத்திருக்கிறோம் - ஓர் உண்மையான செயலாக்கம் இல்லாததால், சோகமாக சிதைந்து போய் இருக்கும் உலகில், அமைதி மற்றும் சக்தியின் வருகைக்கு வழிவகுக்கும் உங்களுக்கு சேவை புரிய விரும்புகிறோம்.

'மேன்மையான முழுநிறை இலட்சியத்திற்கு' நீங்கள் உங்களின் ஆசீர்வாதத்தைக் கொண்டு வருவீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம், மேலும் அதை முன்னோக்கி எடுத்துச் செல்லத் தேவையான ஆன்மீக சக்தியும், உடல் ஆற்றலும் உங்களின் வருகையால் மட்டுமே சாத்தியமாகும். தெற்கு கலி:ஃபோர்னியா நகரை உங்கள் அறிமுகத்தால் புனிதப்படுத்துவது எங்கள் பாக்கியமாக இருக்கலாம், மேலும் இதன் மூலம் உங்களின் அருமையான பணியில் நாங்களும் ஏதேனும் உதவியாக இருக்க முடியும் என்றும் நம்புகிறோம்; உங்கள் வருகையை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுகிறோம்,

அதற்காக நாங்கள் பக்தி மற்றும் வைராக்கியத்துடன் கூடிய எதிர்பார்ப்புடன் தயாராகி வருகிறோம்.

மெஹர் பாபா கலிஃபோர்னியா வந்ததும் அவர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்: “**ஒளியூட்டம் தெளிவாக இருந்தால், நீங்கள் எவரிடமும் குற்றங்குறை கண்டுகொள்ள மாட்டீர்கள். அமெரிக்கா ஆன்மீகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது**” என்று கூறினார்.

சாஞ்சி, குயன்டின், மெரடித் ஆகியோர் பாபாவுடன் ஜோன்ஸ் இல்லத்தில் தங்கினர். காக்கா, ஆதி ஜூனியர், பெஹராம் ஆகியோர், அருகிலிருந்த ஜோன்ஸின் மாணவர் ஒருவரின் குடியிருப்பில் இருந்தனர். ஜீன், மால்கம், மார்கரெட் ஸ்டார் மற்றும் பாபாவால் அழைக்கப்பட்ட பிற அனைவரும் மிஷன் ஹோட்டலில் (MISSION HOTEL) தங்கியிருந்தனர்.

பாபா, ஹாலிவுட்டில் இருந்த ஏழு பரபரப்பான நாட்களும் நேர்காணல்கள், வரவேற்புகள் நிறைந்ததாக இருந்தன. நோரினா, எலிஸபெத் இருவரும், குறிப்பாக, பாபாவின் கால அட்டவணையை ஏற்பாடு செய்ய நியூயார்க்கிலிருந்து வந்தனர்.

பாபாவின் வருகையை, பல செய்தி நிறுவனங்கள் எதிர்பார்த்திருந்தன; பிற்பகலில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், பாபா பின்வரும் செய்தியை வழங்கினார்:

**அனைத்திலும் உயர்ந்த உணர்வு நிலை** (HIGHEST CONSCIOUSNESS) **மற்றும் இறை உணர்வு பற்றி பெருமளவில் கூறவும், எழுதவும் பட்டுள்ளது; ஆனால் அதை அடையும் சரியான செயல்முறையின் உடனடி சாத்தியம் குறித்து, மக்கள் ஒன்றும் தெரியாமல் திகைத்துப் போகிறார்கள். தத்துவ ஞானத்தை நாடும் மனம், அத்தகைய இலக்கியங்களைத் தேடித் துருவுவதன் மூலமாக, அறிவுசார்ந்த மல்யுத்த முறைகளை மட்டுமே கற்றுக்கொள்ள முடிகிறது. ஆக்கப்பூர்வமான உணர்வின் மிக உயர்ந்த நிலை, எல்லாவற்றிலும் மறைந்திருக்கும். தேவகுமாரன் ஒவ்வொரு மனிதனிலும் இருக்கிறார், ஆனால் வெளிப்பட வேண்டியது இன்றியமையாதது.**

**இந்த மகத்தான உணர்வு நிலையை அடைவதற்கான முறை, நடைமுறைக்கு உரியதாகவும், உலகின் தற்போதைய மனம், பொருள் சார்ந்த நிலைமைகளுக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். மாறாக, பாதிரி, பூசாரி வர்க்கங்கள் நிறைந்த தேவாலயங்களால் நிறுவப்பட்ட சடங்கு சம்பிரதாயங்கள், இந்த முறையை மிகவும் வறண்டதாக மாற்றியுள்ளன; இது உலகெங்கிலும் பொதுவாக மத விஷயங்களைச் சார்ந்த ஆர்வமின்மைக்குக் காரணமாகும். இந்தியா, ஆன்மீகத்தின் உயர்ந்த நிலையில் இருந்தபோதிலும், இன்றைய காலகட்டத்தில், சாதி சமயங்களைச் சார்ந்துள்ளது, ஏனெனில் பல்வேறு வழிபாட்டு முறைகள் மற்றும் சடங்குகள் பெருமளவில் அமல்படுத்தப்படுவதால், அவை உருவ வழிபாடுகளைப் பராமரித்து, உயிரோட்டம் மிக்க ஆன்மாவைக் கொல்கின்றன. உருவ**

வழிபாடுகளும் சம்பிரதாயங்களும், அகந்தையைக் குறைப்பதற்கு பதிலாக, அதை பலப்படுத்துகின்றன. அகந்தை வலுவாக வலுவாக, அது மிகவும் ஆக்ரோஷம் மிக்கதாக மாறுகிறது. “நானே சரியானவன்... நானே விரும்பத்தக்கவன்... எனக்கு மட்டுமே வாழ உரிமை உண்டு...” போன்ற எண்ணங்கள் மூலம் ஒரு தனித்துவத்தை உணர வேண்டும் என்ற கவலையில் ஒருவர் அழிவை நோக்கிச் செல்கிறார்.

தீவிரமாக ஆயுதங்களைத் தாங்கும் கிறிஸ்தவ உலகம், ஒரு கன்னத்தில் அறைந்தால், மறு கன்னத்தையும் காட்ட வேண்டும் என்ற இயேசுவின் கட்டளையை முற்றிலும் புறக்கணித்துவிட்டது; இது, ‘அகந்தை’ என்று நான் சொல்வதைத் தெளிவுபடுத்தும் ஓர் எடுத்துக்காட்டு. கனிமம், காய்கறி, அதைத் தொடர்ந்து விலங்கு வாழ்க்கையிலிருந்து பரிணாம வளர்ச்சியில், மனித வடிவத்தில் முழு உணர்வு அடையும் வரை மறைந்திருக்கும் மனம், படிப்படியாக விரிவடைகிறது. இந்த உண்மை தன்மையை உருவாக்க, அறிவு மற்றும் பேரின்பத்தின் எல்லையற்ற பெருங்கடல் - அதாவது முழுமையான கடவுளிடமிருந்து பிரபஞ்சம் வெளிப்பட்டது.

எவ்வாறாயினும், மனித வடிவத்தில், (மனதை முழுமையாக வளர்த்துக் கொண்டதால்) உருவான சிக்கலைத் தீர்ப்பதற்காக, தீர்க்கதரிசிகளும், இறை ஞானிகளும் அவ்வப்போது இந்தப் பூவுலகுக்கு விஜயம் செய்கின்றனர். முந்தைய வாழ்க்கை நிலைமைகளின் விளைவாக மனித வடிவத்தில் முழு உணர்வோடு இணைந்து, ‘நான்’ எனும் அகந்தையும் உருவாகியுள்ளது.

நிறைவேறிய மற்றும் நிறைவேறாத ஆசைகளால் நிறைந்த இந்த ‘நான்’ எனும் அகந்தையானது, மேலும் வரையறுக்கப்பட்ட, பலவீனமான, மகிழ்ச்சியற்ற உணர்வின் மாயையை உருவாக்குகிறது. இனிமேல், ஆன்மா இந்த வரையறுக்கப்பட்ட அகந்தையின் பொதுவான அடக்குமுறையைக் கடந்து, அதை, தெய்வீக அகந்தையாக மாற்றி, அதேவேளையில் மனித உருவில் அடையப்பெற்ற முழு உணர்வையும் தக்க வைப்பதன் மூலம் மட்டுமே முன்னேற முடியும்.

இறை உணர்வின் இந்தப் பரிபூரண நிலையை மனிதன் அடையும்போது, அவன் அனைவரிடமும் தன்னைக் கண்டுகொள்வதோடு, அனைத்து நிகழ்வுகளையும் தனது சொந்த உண்மையான சுய வடிவங்களாகப் பார்க்கிறான்.

‘நான்’ எனும் அகந்தையைக் கடந்து, இறை உணர்வை அடைவதற்கான மிகச் சிறந்த, எளிதான செயல்முறை என்னவெனில், அன்பை வளர்த்து, எந்த சூழ்நிலையிலும் மனிதகுலத்திற்கு, தன்னலமற்ற சேவையை வழங்குவதாகும். அனைத்து நெறிமுறைகளும், மத நடைமுறைகளும் இறுதியில் இதற்கு வழிவகுக்கும். நாம் பிறருக்காக எவ்வளவு அதிகமாகவும், நமக்காக எவ்வளவு குறைவாகவும் வாழ்கிறோமோ, அவ்வளவு குறைவான அளவுக்கு, தரம் தாழ்ந்த, ஈனமான

ஆசைகள் நீக்கப்பட்டு, 'நான்' எனும் அகந்தை மீது வினைபுரிந்து, அதை அடக்கி, உயர்நிலையை அடைய வழிவகுக்கும்.

'நான்' எனும் அகந்தை கடைசி வரை நீடிக்கும். ஆன்மீகப் பாதையில் அமைந்த ஏழு முக்கிய தளங்களில், ஆறு தளங்களில் பயணித்து, இறை உணர்வு நிலையை, அதாவது உச்சக்கட்டத்தை அடையும் வரை, ஏழாவது தளத்தில் தெய்வீக அகந்தை தோன்றும் வரை, 'நான்' எனும் சாதாரண அகந்தை அகற்றப்பட மாட்டாது. இயேசு குறிப்பிட்ட 'கிறிஸ்து உணர்வு நிலை'யில் "நானும் எனது தந்தையும் ஒன்று" என்று அவர் சொன்னபோது, அது பரிபூரண எல்லையற்ற இறைநிலை மற்றும் அதே நேரத்தில் வரையறுக்கப்பட்ட உலக உணர்வு நிலையையும் உள்ளடக்கியது ஆகும்.

மேற்கூறியவை இம்மண்ணில் உயிர் வாழும் குருநாதர் ஒருவரின் உதவி இல்லாமல் தனது சொந்த முயற்சியில் செயல்படும் ஒருவருக்கான சாதாரண நடைமுறை. இறைநிலையை அடைந்த குருநாதரின் உதவியுடன், முழு விவகாரமும் பெரிய அளவில் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. பரிபூரண குருநாதரின் விருப்பத்திற்கு முழுமையாக சரணடைந்து, அவரது கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலம், ஆயிரம் ஆண்டுகளாக உலகின் அனைத்து நெறிமுறைகளையும் கடுமையாகக் கடைப்பிடித்து அடைவதைக் காட்டிலும், விரைவாக அடைய முடிகிறது.

அசாதாரண ஆன்மீக அந்தஸ்தைப் பெற்ற சத்குரு, உலகளாவிய மனதைப் படைத்தவராக இருப்பதால், அவர் ஒவ்வொரு மனிதனின் மனதிலும் இருக்கிறார்; எனவே ஒவ்வொரு நபரிடமும் மறைந்திருக்கும் மிக உயர்ந்த ஆன்மீக அந்தஸ்தை விழிப்படையச் செய்வதற்குத் தேவையான குறிப்பிட்ட உதவியை மட்டுமே வழங்க முடியும். இருப்பினும், பரிபூரணமான சத்குரு, பொருள்வளம் மிக்க இவ்வுலகில் அவரது உதவியை வழங்க, மனிதனோடு நேரடித் தொடர்பும், நகைச்சுவை உணர்வையும் கொண்டிருக்க வேண்டியது அவசியம்.

கிறிஸ்துவின் உணர்வு நிலையை நான் நித்தியமாக அனுபவிக்கிறேன், மேலும், விரைவில் நான், எனது மௌனத்தைக் கலைத்து, பேசும்போது, எனது உண்மையான சுய ரூபத்தை வெளிப்படுத்துவேன். முழு உலகிற்கும் ஓர் ஆன்மீக உந்துதலைத் தவிர, என்னிடம் வரும் அனைவருக்கும் ஒளியூட்டம் வழங்கி, சத்தியத்தை நோக்கி அழைத்துச் செல்வேன். சுருக்கமாகச் சொன்னால், இதுவே உலகத்திற்கான எனது பணி.

மாலை 7 மணி அளவில் சுமார் 200 நபர்கள் பாபாவை சந்திக்க அழைக்கப்பட்டனர். பார்வையாளர்கள் தனித்தனியாக 50 பேர் அடங்கிய குழுவாக அறிமுகப்படுத்தப்பட்டனர். பாபா வெள்ளை நிற ஸத்ராவில் அற்புதமாகத் தோன்றி, ஒவ்வொருவரையும் நோக்கி கைகளை அசைத்து அன்புடன் வரவேற்றார்.

பின்னர் அவர் தனது அறைக்குச் சென்றார், பார்வையாளர்களுக்கு தேநீர் மற்றும் சிற்றுண்டி வழங்கப்பட்டது, ஆதி ஜூனியர், பெஹராம் இருவரும் அவர்களை இந்திய இசையுடன் மகிழ்வித்தனர்.

அன்று இரவு படுக்கைக்குச் செல்வதற்கு முன்பு, பாபா குயன்டினிடம் கூறினார், "**நான் இங்கே மகிழ்ச்சியாக இல்லை**." வெளியளவில் பாபா அமைதியற்றவராகவும், உடல்நிலை சரியில்லாமலும் இருந்தார். தனது அசௌகரியத்திற்கு நடுவே, பாபாவின் அறையில் தூங்க அனுமதிக்க வேண்டும் என்று மெரடித் வலியுறுத்தினார். பாபா அதை விரும்பவில்லை என்றாலும், இரண்டு இரவுகள் தனது அறையில் இருக்க அனுமதித்தார்.

குயன்டின், ஒரு திறமையான நடிகராக இருந்ததால், ஹாலிவுட்டில் பாபாவின் பல தொடர்புகளை ஏற்பாடு செய்வதில் எந்த சிரமமும் இல்லை. 1932இல் மெஹர் பாபாவின் ஹாலிவுட் நிகழ்ச்சிகளின் முழு விபரங்களையும், மே 29ஆம் நாளிலிருந்து ஒரு வாரத்திற்கு, தயார் செய்தார்.

மெஹர் பாபா ஹாலிவுட் நிகழ்ச்சிகளில், அந்தக் குறுகிய சில நாட்களில், மும்முரமாக இருந்தார்; அவருடன் மண்டலி இரவில் நான்கு மணி நேரத்திற்கும் மேலாக தூங்கவில்லை.

மே 30ஆம் நாள் பாபா, சுற்றியுள்ள கிராமப்புறங்களைப் பார்க்கச் சென்றார்; மேலும் திரைப்படத் துறையில் முக்கியத்துவம் வாய்ந்தவர்களுடன் தொடர்பு கொள்ள 'பெவர்லி ஹில்ஸ்' (BEVERLY HILLS) என்ற குடியிருப்பிற்குச் செல்ல ஆர்வமாக இருந்தார். அவர் சந்தித்த முதல் நபர், குயன்டினின் நண்பரான மே பீட்டி, 52, (MAY BEATTY) நியூசிலாந்து (NEW ZEALAND) நடிகை, அன்று மாலை அவரைப் பார்க்க வந்தார்.

அதே நாளில் 'லாஸ் ஏஞ்சலஸ் டைம்ஸ்' (LOS ANGELES TIMES) பாபாவுடன் ஒரு நேரடி பேட்டியை நிகழ்த்தியது, "அமெரிக்காவில் நீங்கள் என்ன சாதிக்க முடியும் என்று நம்புகிறீர்கள்?"

பாபா பதிலளித்தார், "**ஒரு பொதுவான விழிப்புணர்வு முழு மனிதகுலத்தையும் ஆதிக்கம் செய்யும் அதே வேளையில், இன்று உலகில் நிலவும் மனச்சோர்வு, அதிருப்தி இரண்டையும் அகற்றும்**."

அடுத்த நாள், மெஹர் பாபா, குயன்டின் மற்றும் மண்டலியுடன் 'பாரமவுண்ட் ஸ்டுடியோ'விற்கு (PARAMOUNT STUDIO) விஜயம் செய்தார். ஜோன்ஸின் நண்பரான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 'லால் சந்த் மெஹ்ரா'வும் (LAL CHAND MEHRA) அவர்களுடன் சென்றார். ஓர் இடத்தில், 'தி டெவில் அண்ட் தி டீப்' (THE DEVIL AND THE DEEP) படமாக்கப்பட்டது. அமெரிக்க நடிகை தல்லுலா பேங்க்ஹெட் (TALLULAH BANKHEAD) மற்றும் நடிகர் சார்லஸ் லாட்டன் (CHARLES LAUGHTON) ஆகியோரை பாபாவிற்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அவர்கள் பாபாவை மற்றுமொரு நடிகரான கேரி கூப்பருக்கும் (GARY COOPER) அறிமுகப்படுத்தினர். ஓரிரு காட்சிகள் படமாக்கப்படுவதைப் பார்க்க பாபா காத்திருந்தார், தொடர்ந்து தல்லுலாவுடன் புகைப்படம் எடுக்கப்பட்டது. இந்த சந்திப்பு, கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் நீடித்தது. ஒரு செய்தித்தாள் இவ்வாறு வெளியிட்டது: பாபா வந்ததற்கு ஒரு காரணம், '**ஹாலிவுட்டில்,**

**ஆன்மீகம் மற்றும் பொருள் சார்ந்த சக்திகளுக்கு இடையில் சரியான சமநிலை நிலவியது**' என்று பாபா, தல்லூலாவிடம் எழுத்துப்பலகையில் தெரிவித்தார்.

மதிய உணவுக்குப் பிறகு, பாபா மேலும் சிலரும் 'ஃபாக்ஸ் அன்ட் யுனிவர்சல் ஸ்டுடியோ'விற்குச் (FOX AND UNIVERSAL STUDIOS) சென்றார். பாபா தங்கியிருந்த அரை மணி நேரத்தில், அவர் கவ்பாய்-நடிகர் டாம் மிக்ஸையும் - COWBOY – ACTOR TOM MIX (பாபாவுடன் புகைப்படம் எடுத்தவர்) மற்றும் எஸ்ரா மிர் (EZRA MIR) என்ற இந்திய திரைப்பட இயக்குநரையும் சந்தித்தார். தொடர்ந்து குயன்டினுடன் பாரமவுண்ட் ஸ்டுடியோவிற்குச் சென்றார். அன்று மாலை (30 வயதான) தல்லூலா பேங்க்ஹெட், பாபாவுடன் நீண்ட நேரம் உரையாடினார், மேலும் அவர், நடிகை கிரெட்டா கார்போவைப் (GRETA GARBO) பார்க்கப் போவதாகவும், பாபாவைப் பற்றித் தெரிவிப்பதாகவும் கூறினார்.

அன்று இரவு 8:30 மணிக்கு ஹாலிவுட்டின் 'நிக்கர்பாக்கர்' (KNICKERBOCKER) ஹோட்டலில் ஏறக்குறைய ஆயிரம் பேருக்கு, மிகப்பெரிய வரவேற்பு அளிக்கப்பட்டது. லாஸ் ஏஞ்சலஸ் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த பலர் இந்த அரிய அற்புதமான கூட்டத்திற்கு வந்தனர். ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் வரிசையில் நின்று, பாபாவை சந்திக்கக் காத்திருந்தனர். ஒரு நாடக அமைப்பில், மெஹர் பாபா உயரமான இருக்கை ஒன்றில், நான்கு கிழக்கத்திய மண்டலி ஒரு புறமும், ஆறு மேற்கத்தியர்கள் மறுபுறமும் அரை வட்டத்தை அமைத்தனர். பாபாவின் பின்னால், தேவதூதர்களைப் போல வீணை மீட்டுபவர்கள் இருவர் மென்மையாக இசைத்தனர்.

பார்வையாளர்கள் மண்டபத்தின் ஒரு பக்க கதவு வழியாக அனுமதிக்கப்பட்டனர். பாபா, ஒளிரும் புன்னகையுடன் ஒவ்வொருவரின் கைகளைக் குலுக்கி வரவேற்றார். அறிமுகத்திற்கு பின்பு, பக்கத்துக் கதவு வழியாக வெளியே சென்றனர்.

மண்டபத்தின் ஒளிரும் விளக்குகளில், பாபா, அவரது வெள்ளை ஸத்ராவில் தலைமுடியை தோள்வரை தொங்கவிட்டு, தெய்வீக அழகுடன் தோற்றமளித்தார் - அனைவரின் இதயங்களையும் கவர்ந்தார்.

பார்வையாளர்கள் கேள்விகள் கேட்காமல், கைகளைக் குலுக்கிய பின்னர் அமைதியாக வெளியே செல்ல வேண்டும் என்று பாபா அறிவுறுத்தினார்.

ஆனால், பலர் ஆச்சரியத்தில், உணர்விழந்து மயங்கியர்கள் போல் அரங்கத்தை விட்டு வெளியேறாமல் அங்கேயே இருந்தனர். அவர்களின் அதிசய வார்த்தைகள் எங்கும் எதிரொலித்தன:

"கிறிஸ்து இன்று உயிரோடு இருந்திருந்தால், அவர் இவரைப் போலவே இருப்பார்."

"அவர் முகத்தில் என்ன ஒரு தெய்வீகப் பளபளப்பு!"

"அவர் இந்த உலகத்தைச் சார்ந்தவர் போலத் தெரியவில்லை."

"எந்த மனிதனும் இவ்வளவு அழகாக இருக்க முடியுமா!"

“அவர் உயிர் வாழும் கிறிஸ்து!”

“அவரது தெய்வீக ஈர்ப்பு எவ்வளவு அற்புதமானது.”

“நான் எப்பொழுதும் அவரைப் பார்க்க வேண்டும் போல் உணர்கிறேன்!”

“எனது கண்கள் அவரது அழகைக் கண்டு திகைக்கின்றன.”

“நான் அவரை விட்டு வெளியேற முடியாது.”

“எனது வாழ்க்கையில் முதல் முறையாக, நான் தெய்வீகத்தைக் கண்டேன்!”

“என்ன இனிமையான முகம்!”

“அவருடைய தெய்வீக தூய்மை எவ்வளவு பரிசுத்தமானது!”

“அவரைப் பற்றி எதுவும் சொல்ல முடியாது. எனது நாக்கு செயலிழந்துவிட்டது.”

“அவர் கையைத் தொட்டதும் மின்சாரம் பாய்வதுபோல் ஓர் அதிர்ச்சியை என்னுள் உணர்ந்தேன்.

“என் கடவுளே! நான் உணர்வற்று இருந்தேன்.”

“என் இதயத்தில் என்னதான் நடக்கிறது?”

“ஓ, அவரது தோற்றம் எவ்வளவு அற்புதமானது.”

“என்ன ஒரு பிரகாசம்! என்ன அழகு! என்ன ஒரு புன்னகை!”

“நான் ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிட்டேன்!”

ஒவ்வொருவரையும் தனித்தனியாக வரவேற்று, கைகளைக் குலுக்கி, மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்த இரண்டு மணி நேரம் ஆயிற்று! அதன் பின்பு மெஹர் பாபா கீழ் வரும் செய்தியை வழங்கினார்:

**அமெரிக்காவிற்கு வந்ததிலிருந்து, இப்போது நீங்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளுக்கு என்ன தீர்வு கொண்டு வந்துள்ளேன் என்று என்னிடம் பலமுறை கேட்கப்பட்டுள்ளது - தனிநபர்களுக்கும் நாடுகளுக்கும் இடையிலான மோதல்களை அகற்றவும், வேலையின்மை, தடையுத்தரவு மற்றும் குற்றம் போன்ற பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் நான் என்ன வழங்க உள்ளேன்? மேலும் ஒரு கலக்கமான உலகில் அமைதியை நிலைநாட்டும் நிவாரணத் தைலம் என்னிடம் உள்ளதா?**

**பதில் மிகவும் எளிமையானது, அதைப் புரிந்துகொள்வது கடினம்.**

**நம்முடைய எல்லா - தனிநபர் மற்றும் சமூக - பிரச்சினைகளுக்கும் மூல காரணம் சுயநலம்.**

**இது** (சுயநலம்), **எடுத்துக்காட்டாக, ஊழல் நிறைந்த அரசியல்வாதிகள் லஞ்சம் வாங்குவதற்கும், எந்த மக்களுக்கு சேவை செய்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ அந்த மக்களை ஏமாற்றமடையச் செய்வதற்கும் அடிப்படை காரணமாகிறது; இது திருட்டு மதுபான வணிகம் செய்பவர்களின் சொந்த இலாபத்திற்காக, தேசத்தின் நலன் கருதி கட்டமைக்கப்பட்ட சட்டத்தை மீறுவதற்கும் காரணமாகிறது; இது, அவர்களின் சுய இன்பத்திற்காக, சட்டத்தை மீறுவதற்கும் உடந்தையாக இருக்கச் செய்கிறது; இதனால் பொதுவாக, சட்டத்திற்கு அவமரியாதை ஏற்படுகிறது மேலும் குற்றங்கள் பெருமளவில் அதிகரிக்கிறது; இது தனிநபர்கள் அல்லது**

கூட்டமைப்புகளால் தனிப்பட்ட லாபத்தை எதிர்பார்த்து மக்களைச் சுரண்டி கொள்ளையடிப்பதற்கும் தூண்டுதலாக இருக்கிறது; சுயநலம் புதிய கண்டுபிடிப்புகளைத் தடுத்து நிறுத்துவதன் மூலம், நாகரீகத்தின் முன்னேற்றத்தைத் தடைசெய்கிறது, இதனால் மனிதகுலத்தின் நலனுக்குப் பெருமளவில் பாதகம் ஏற்படுகிறது, ஏனெனில் அவற்றின் பயன்பாடு தற்போதைய பழைய உபகரணங்களை அகற்றுவதைக் குறிக்கும்; இந்த சுயநலம், மக்கள் பசி, பட்டினியால் தவிக்கும்போது, சந்தை விலையைப் பராமரிக்கும் நோக்கத்தில், பெரிய அளவிலான உணவை அழிக்க விரும்புகிறது; இது உலகின் நலனுக்காக, புழக்கத்தில் இருக்கவேண்டிய தங்கத்தைப் பெருமளவில் பதுக்கி வைக்கும் நிலையை ஏற்படுத்துகிறது.

ஆனால் சுயநலத்தை நீக்குவது, அதை நிறைவேற்ற, ஒரு தனிநபருக்கு வேண்டிய உண்மையான விருப்பத்தைப் பெறுவது கூட அவ்வளவு எளிதானது அல்ல, ஒரு சத்குருவின் உதவி இல்லாமல் ஒருபோதும் முழுமையாக அதை அடைய முடியாது. சுயநலம், ஆத்மாவின் உண்மையான இறை தன்மையைப் பற்றிய தவறான கருத்திலிருந்து நீரூற்று போல் உருவாகிறது, இந்தக் கருத்தை முதலில் ஒழிக்க வேண்டியது இன்றியமையாதது.

நான், எனது மௌனத்தைக் கலைத்து, பேசும்போது, உன்னதமான, அனைத்திலும் ஒன்றறக் கலந்திருக்கும் ஆத்மாவை, அதாவது உண்மையான சுய தன்மையை வெளிப்படுத்த விரும்புகிறேன். இது நிறைவேறிய அடுத்த கணமே, ஒரு வரையறுக்கப்பட்ட, 'நான்' எனும் சுய எண்ணம் மறைந்துவிடும், அதனுடன் சுயநலமும் மறைந்துவிடும். மக்களிடையே தோன்றும் ஒத்துழைப்பு, போட்டி மனப்பான்மையை விலக்கிவிடும்; உறுதியானது, பயத்தை விரட்டிவிடும்; பெருந்தன்மை, பேராசையை அகற்றிவிடும்; ஏமாற்றி சுரண்டுவது மறைந்துவிடும்.

ஏழு ஆண்டுகளாக நான் ஏன் மௌனமாக இருக்கிறேன், எழுத்துப்பலகை மூலமாகத் தொடர்புகொள்கிறேன், விரைவில் எனது மௌனத்தை ஏன் கலைக்க விரும்புகிறேன் என்று திரும்பத் திரும்ப கேட்கப்பட்டது. இப்போது நான் உங்களுக்கு விளக்கியதைப் பார்க்கும்போது, மனிதனின் உணர்வு நிலையில் ஏற்படும் மாற்றத்திற்கும், எனது பேச்சுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்று கேட்கலாம்.

மானிடன், தற்போதைய அமைப்புப்படி, எண்ணங்களை வெளிப்படுத்த மூன்று வாகனங்களைப் பயன்படுத்துகிறான்; மேலும் உணர்வின் மூன்று நிலைகளையும் அனுபவிக்கிறான். இந்த மூன்று வாகனங்கள்: ஒன்று, ஆழ்மன உடல் (மனம்), இதில் கடந்த கால அனுபவங்களின் வினைப்பதிவுகளின் விளைவாக எண்ணங்கள் எழுகின்றன. இந்த எண்ணங்கள் ஆழ்மன உடலில் விதைகளாக மறைந்திருக்கலாம், அல்லது அவை வெளிப்படலாம்.

அவை வெளிப்படும் வேளையில் ஆசையின் முதல் வடிவங்களை எடுத்து, முதலில் சூட்சும (ஆசை) உடலின் வழியாகச் செல்கின்றன; இது

ஐந்து மன புலன்களால் ஆனது. கனவுகள் அல்லது நிறைவேறாத ஆசை போன்றவற்றைப் போல் அவை அங்கேயே ஓய்வெடுக்கலாம், அல்லது அவை உடல் ரீதியான ஐந்து உடல் புலன்களுடன் மேலும் வெளிப்படலாம்.

குறிப்பிடப்பட்ட மூன்று வாகனங்களுடன் தொடர்புடைய உணர்வின் மூன்று நிலைகள்: ஒன்று - ஆழ்ந்த, தூக்கத்தைப் போலவே மயக்க நிலையில் இருக்கும் உணர்வு (ஆழ்மன உடல்); இரண்டு - கனவுகள் அல்லது தெளிவற்ற, வடிவமைக்கப்படாத மற்றும் நிறைவேறாத ஆசைகளைப் போன்ற உணர்வு நிலை (சூட்சும உடல்); மூன்றாவதாக, சுறுசுறுப்பான அன்றாட வாழ்க்கையைப் போலான விழிப்புணர்வு (பௌதீக உடல்).

ஆழ்மனதிலிருந்து நுட்பமான சூட்சும உடல் மற்றும் பௌதீக உடல் வழியாக வெளிப்படும் சிந்தனையின் செயல்முறை, மனித விருப்பத்தின் வெளிப்பாடு என்று அழைக்கப்படும்.

அந்த சிந்தனை, திறம்பட வெளிப்படுத்தப்பட வேண்டுமாயின், அதன் வெளிப்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படும் மூன்று வாகனங்களும் முற்றிலும் தெளிவாகவும், அவற்றினிடையேயான தொடர்பு இணக்கமாகவும் இருக்க வேண்டும். தலை (அறிவு), இதயம் (அன்பு) இரண்டும் ஒன்றுபட்டும், புத்தியும் உணர்வும் சீரானதாகவும் இருக்க வேண்டும், மேலும் பொருட்கள் சார்ந்த வெளிப்பாடு ஆன்மீக உணர்வால் பக்குவம் அடைந்ததாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

இறை-மனிதன் சிந்திப்பதும் இல்லை, எதையும் விரும்புவதும் இல்லை. அவருடைய தெய்வீக விருப்பம், தவிர்க்க முடியாமல், சரியான வெளிப்பாடாக ஆன்மீக உடலிலிருந்து நேரடியாகச் செல்கிறது; இது, சாதாரண மனிதனில் வளர்ச்சியடையாத, உடல் வெளிப்பாடாக இருக்கிறது. இறை-மனிதனைப் பொறுத்தவரை, ஆழ்மன உணர்வு நிலை என்பது உணர்வின் இயல்பான நிலை. அவரிடமிருந்து, எல்லையற்ற அன்பு, ஞானம், மகிழ்ச்சி, அமைதி, சக்தி அனைத்தும் தொடர்ந்து பாய்ந்தோடுகின்றன.

அவர் பேசும்போது, சத்தியம், மிக சக்தி வாய்ந்ததாக வெளிப்படும்; ஆனால் அதை வெளிப்படுத்த, பார்வை அல்லது ஸ்பரிசத்தைப் பயன்படுத்தும் வேளையில், சக்தி, குறைந்த அளவில் இருக்கும். அந்தக் காரணத்திற்காக, அவதார புருஷர்கள் வழக்கமாக பல ஆண்டுகள் நீடிக்கும் மௌனத்தைக் கடைப்பிடிக்கின்றனர். முழு பிரபஞ்சத்திற்கும் உண்மையை வெளிப்படுத்த விரும்பும் போது மட்டுமே மௌனத்தைக் கைவிடுகிறார்கள். எனவே, நான் பேசும்போது, தெய்வீக விருப்பத்தை வெளிப்படுத்துவேன், மேலும் உலகளாவிய உணர்வில் மாற்றத்தைக் கொண்டுவருவேன்.

அங்கிருந்த மக்கள் கூட்டம் கலைந்து செல்லும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது, ஆனால் எவரும் வெளியே செல்லாமல், முணுமுணுத்துக் கொண்டே, மெஹர் பாபாவைப் பார்த்தபடி நின்றனர்; பின்பு, கனமான இதயங்களுடன் பாபாவைப் பார்த்துக் கொண்டே பின்னோக்கி நகரத் தொடங்கினர்; இந்த வார்த்தைகள் ஒலித்தன:

"ஓ, இதுபோன்ற முகத்தை மீண்டும் எப்போது பார்ப்போம்?"

“ஒருவரின் வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே இதுபோன்ற அசாதாரண அனுபவம் கிடைக்க வாய்ப்பு உண்டு!”

“பாபா டார்லிங், நாங்கள் உங்களை மீண்டும் பார்க்க அனுமதிப்பீர்களா?”

1932, ஜூன் 1ஆம் நாள், கேத் கார்டனர், மேக்ஸ் மற்றும் லிலியன் வார்டால் வந்தனர். அதே நாளில் பாபா ‘மெட்ரோ கோல்ட்வின் மேயர் பிலிம் ஸ்டுடியோ’விற்கு (METRO GOLDWYN MAYER FILM STUDIOS) விஜயம் செய்தார்; மீண்டும் லால் சந்த் மெஹ்ராவுடன், நடிகர் லூயிஸ் ஸ்டோன் (LEWIS STONE) நிகழ்ச்சியைப் பார்வையிட்டார். பாபா, விர்ஜீனியா புரூஸை (VIRGINIA BRUCE) சந்தித்து, நடனக் கலைஞர் ‘மாதா ஹாரி’யின் (MATA HARI) படப்பிடிப்பு அமைப்புகளையும் பார்த்தார், அதில் கிரெட்டா கார்போ (GRETA GARBO) அப்போதுதான் நடித்து முடித்திருந்தார்.

பாபாவின் இந்த வருகையின் போது, ஹாலிவுட்டில் பல திரைப்பட நட்சத்திரங்களை சந்தித்தார்; இவர்களில் போரிஸ் கார்லஃப் (BORIS KARLOFF), ஜான் கில்பர்ட் (JOHN GILBERT), ஃப்ளாரன்ஸ் விடோர் (FLORENCE VIDOR), ஜானி மேக் பிரவுன் (JONNY MACK BROWN), ஹெலன் ஃப்ரீமேன் (HELEN FREEMAN) மற்றும் கெரி கிரான்ட் - CARY GRANT (‘ப்ளாண்ட் வீனஸ்’ - ‘BLONDE VENUS’ திரைப்படத்திலும் தோன்றினார்) மிகவும் புகழ் வாய்ந்தவர்கள்.

இந்த நடிகர், நடிகைகளில் சிலர் ஜூன் 1ஆம் தேதி மாலை பாபாவை மறுபடியும் சந்தித்தனர், அப்போது ஹாலிவுட்டின் முன்னணி, மிகவும் கவர்ச்சியான ஜோடி - டக்ளஸ் ஃபேர்பேங்க்ஸ் (DOUGLAS FAIRBANKS) மற்றும் மேரி பிக்ஃபோர்ட் (MARY PICKFORD) - 1143 ஸம்மிட் டிரைவில் (SUMMIT DRIVE) பாபாவிற்கு வரவேற்பு அளித்தனர். மார்க் ஜோன்ஸ் அன்று இரவு எட்டு மணிக்கு பாபா, மெரடித், மார்கரெட், பிரிஸில்லா (PRISCILLA) மற்றும் குயன்டின் ஆகியோரை ‘பெவர்லி ஹில்ஸ்’க்கு (BEVERLY HILLS) அழைத்துச் சென்றார்

பாபாவின் மண்டலி மற்றொரு காரில், நோரினா மற்றும் எலிஸபெத்துடன் சென்றனர்.

இந்தியாவிலிருந்து வரும் வேளையில், ஆண் மண்டலி ஒவ்வொருவரும் இரண்டு ஜோடி கோட் சட்டைகள் மற்றும் ஒரு ஜோடி காலணிகளை மட்டுமே கொண்டு வர அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் தொடர்ந்து அணிய வேண்டியிருந்ததால் அவை போதுமானதாக இல்லை. பாபா அடிக்கடி தனது உடையை மாற்றிக்கொண்டார், மேலும் ‘பிக்ஃபெயர்’ (PICKFAIR) வரவேற்பு நிகழ்ச்சிக்காக, பாபா ஒரு அழகான ‘பாம் பீச்’ (PALM BEACH) உடையை அணிந்திருந்தார். இதற்கு நேர்மாறாக, மண்டலி மிகவும் எளிமையான தோற்றத்தில் இருந்தனர். ஆதி ஜூனியரின் காலணிகளும் சீரில்லாமல் சிதைந்து இருந்ததால் கயிற்றால் கட்டி வைத்திருந்தார். இருப்பினும், பாபா ஒரு புதிய ஜோடி காலணிகளை வாங்க அனுமதிக்கவில்லை. சாதாரண உடையணிந்தவர்களின் கூட்டம் பிக்ஃபெயர் மாளிகையில் ஒன்றிணைந்தது, ஒரு மூலையில் பதுங்கி இருந்தனர். ஆதி வெட்கத்தில், அணிந்திருந்த காலணியை மூடி மறைக்க முயன்றார்.

அன்றைய வரவேற்புக்கு அழைக்கப்பட்டவர்களில் ஸிஸல் பி. டிமில் (CECIL B. DeMILLE), கெரி கிராண்ட் (CARY GRANT), கேரி கூப்பர் (GARY COOPER), சார்லஸ் ஃபெர்ரல் (CHARLES FARRELL), லாட்டி பிக்ஃபோர்ட் - LOTTIE PIKFORD (மேரியின் சகோதரி) மற்றும் மேரி பிக்ஃபோர்டின் திரைக்கதைகளை எழுதிய ஒரு பெண்மணி ஆகியோர் அடங்குவர். கௌன்டெஸ் டென்டைஸ் டி ஃப்ரெஸோவும் (COUNTESS DENTICE DE FRASSO) கலந்து கொண்டார். பாபா வரவேற்பறையில் இரண்டரை மணி நேரம் தங்கியிருந்தார். மேரி பிக்ஃபோர்ட் மாளிகையின் வாசலில் பாபாவை வரவேற்று, அவரை விசாலமான மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்.

காலம் அன்றைய காட்சியை வியக்கத்தக்கதாக வர்ணித்தது: “அதிகாலையின் உதய சூரியனால் இரவின் இருள் அகற்றப்படுவது போல, பாபாவின் முன்னிலையில் இந்த ஒளிரும் மாளிகை மேலும் மெருகூட்டப்பட்டது. படிக சரவிளக்கிலிருந்து வந்த ஒளி பிரகாசித்தாலும், அது ஒளி அல்ல, பாபாவின் முன்னிலையில் இருளாகவே தென்பட்டது. சூரியனின் பிரகாசமான ஒளி கூட, இறைவனின் உண்மையான ஒளியுடன் ஒப்பிடும்போது இருளே ஆகும்!”

ஜீன் பின்னர் எழுதியது போல: “காக்காய் பொன் (TINSEL STARS) நட்சத்திரங்களுக்கு மத்தியில் பாபா ஓர் ஒளிரும் கிரகம் போலப் பிரகாசித்தார்...”

மேரி, பாபாவை ஒரு சோஃபாவில் அமரவைத்து, அவர் பாபாவின் கால்கள் அருகில் கம்பளத்தின் மீது அமர்ந்தார். பிற அனைவரும் பாபாவைச் சுற்றி கம்பளத்தின் மீது அமர்ந்தனர். அன்பின் மது எல்லா இதயங்களுடனும் பேசத் தொடங்கியது. டக்ளஸ் ஃபேர்பேங்க்ஸ் தனது மனைவியுடன் பாபாவிற்கு அருகில் வந்து இணைந்த போது, பாபா தெரிவித்தார்:

**எனது திரைப்பட உலகமான முழுப் பிரபஞ்சத்தின் கட்டமைப்பை நான் உருவாக்கியுள்ளேன்; ஆனால், பார்வையாளர்கள் திரையில் ஒரு நாடகத்தைப் பார்க்கும் வேளையில், அதை முற்றிலும் உள்வாங்கி, உணர்ச்சிகளோடு ஒன்றி, அவர்களின் உணர்வுகளை அதன் ஆதிக்கத்தால் திசை திருப்பவும், அது உண்மையானதல்ல என்பதை மறக்கும்படியும் செய்கிறது - அதைப்போல், உலக பார்வையாளர்களும் உலக திரைப்பட நிகழ்ச்சியால் கவரப்பட்டு, தங்களை மறந்து அதை உண்மையானதாக எடுத்துக்கொள்கிறார்கள்!**

**எனவே உலக சினிமாவில் மூழ்கி இருக்கும் அனைவருக்கும் இது உண்மையல்ல என்பதைக் கூறவே நான் வந்துள்ளேன்.**

**நான் அவர்களின் கவனத்தை, உண்மைப்பொருளை நோக்கித் திருப்ப வந்திருக்கிறேன். கடவுள் மட்டுமே உண்மையானவர், இதர அனைத்தும் வெறும் திரைப்படம்!**

ஆன்மீகத்தில் நாட்டம் மிக்க மேரி பிக்ஃபோர்ட், பாபாவின் வார்த்தைகளை கவனமாகக் கேட்டார். பாபா இந்தத் துறையில் உள்ள அனைவருடனும் இரவு உணவிற்காக சுமார் 40 நிமிடங்கள் அமர்ந்திருந்தார். ஆன்மீக இலக்குகளை நோக்கி மக்களை திசை திருப்புவதில், திரைப்படங்களின் தாக்கத்தையும் அவற்றின் மதிப்பையும் பாபா வலியுறுத்திக் கூறினார்:

திரைப்படங்களை உருவாக்க, அவற்றில் அங்கம் வகிப்பவர்களைத் தொடர்புகொள்வதற்கான வாய்ப்பின் காரணமாக, கலிஃபோர்னியாவிற்கு வருவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன், இந்த சந்திப்பை இன்றிரவே ஏற்பாடு செய்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

திரைப்படங்களைத் தயாரித்து விநியோகம் செய்பவர்களின் கைகளில் இருக்கும் சக்தி அல்லது அந்த சக்தியைப் பயன்படுத்தத் தேவையான பொறுப்புகளில், அவர்கள் முழுமையான உணர்வுடன் இருக்கிறார்கள் என்பதில் எனக்கு எந்த ஐயமும் இல்லை. பொது ஜனங்களின் கற்பனையைத் தூண்டுபவர், அவர் விரும்பும் எந்தத் திசையிலும் அவர்களைத் திருப்ப முடியும், மேலும் திரைப்படங்களை விட, அவர்களின் கற்பனையைத் தூண்டுவதற்கான சக்திவாய்ந்த கருவி வேறு எதுவுமில்லை.

மக்கள் திரைப்படங்களைப் பார்த்து, மகிழ தியேட்டருக்குச் செல்கின்றனர். தீவிரமான காட்சிகள் அவர்களின் உணர்வு நிலையை உருமாறச் செய்யும். அவர்கள் தங்கள் இதயங்களையும் மனங்களையும் ஆசிரியர், தயாரிப்பாளர், இயக்குனர் மற்றும் நட்சத்திரங்களுக்கு அர்ப்பணிக்கிறார்கள், மேலும் அவர்கள் தங்கள் கண்களுக்கு முன்னால் சித்தரிக்கப்பட்ட எடுத்துக்காட்டுகளை நிஜ உணர்வுகளுக்கும் மேலாகப் பின்பற்றுகிறார்கள்.

பத்திரிகை, வானொலி இரண்டுமே மக்களின் சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இருந்தாலும், நேரடி காட்சிகள் மூலமாகப் புலப்படும் உதாரணத்தின் சக்தியை இழக்கின்றன. காணொளி, செயலுக்கு மிகப்பெரிய தூண்டுதலாகும், மேலும் இது வேறு எந்த ஊடகத்தையும் விட இப்போது சிறந்ததாக அமைந்துள்ளது.

உலகளாவிய மனச்சோர்வின் மத்தியில் இன்று நாம் அல்லல் படுகிறோம்; இது செல்வந்தர் மற்றும் ஏழை அனைவரையும், ஒரே மாதிரியாக பாதிக்கிறது, மேலும் அனைவருமே இதிலிருந்து தப்பமுடியாமல் தவிக்கிறார்கள். திரைப்பட நிறுவனங்கள், தியேட்டர் நிர்வாகிகள் மற்றும் நட்சத்திரங்கள் எல்லாமே இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. மனச்சோர்வை முடிவுக்குக் கொண்டுவர, அவர்கள் உதவ முடியுமானால், அனைவரும் மகிழ்ச்சியடைவார்கள் என்று நான் நம்புகிறேன். இந்த விஷயத்தில் திரை உலகம் இப்போது எப்படி உதவமுடியும்?

முதலாவதாக மனச்சோர்வு, தற்செயலாக விளைந்த ஒரு விபத்து அல்ல, மேலும் அதிக உற்பத்தி மற்றும் பணவீக்கத்தின் விளைவும் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அவை, உடனடியாகத் தோன்றும் காரணங்களாக இருந்தாலும், மனச்சோர்வை விளைவிக்கப் பயன்படுத்தப்பட்ட கருவிகள் மட்டுமே ஆகும். மனிதகுலத்தின் வளர்ச்சிக்குப் பொறுப்பாகவும், தூண்டுதலாகவும் இருப்பவர்களால் மனச்சோர்வு ஏற்பட்டது. மனிதன் தனது உண்மையான அனுபவத்தின் மூலமாக, அவனது அடிப்படை தன்மையான ஆன்மீக அந்தஸ்து, பொருள் உலகம் அல்ல என்பதை உணரும்

அளவுக்கு, மனிதனின் பொருள் உடைமைகளைப் பறிக்க வேண்டியது அவசியம். அப்போதுதான், அவன், நான் கொணர்ந்த உண்மைப்பொருளை, சத்தியத்தை அடையப் பெறத் தயாராக இருப்பான்.

மனிதன், காலம், இடம் மற்றும் பழக்கவழக்கங்களின் மாயையால் பிணைக்கப்பட்டு ஒரு வரையறுக்கப்பட்ட, தனி மனிதனாக இருப்பதற்கு பதிலாக, இந்த உண்மைப்பொருளை, அவனது இயல்பில் நித்தியமானதாகவும், அவனுடைய வளங்களில் எல்லையற்றதாகவும் காண வேண்டும். உலக மாயை என்பது அவனது கற்பனையின் ஒரு கனவு; அவனது உணர்வின் அரங்கத்தில் இயற்றப்பட்ட ஒரு நாடகம் - ஒரு நகைச்சுவை, அதில் அவன் ஒரே நேரத்தில் ஆசிரியர், தயாரிப்பாளர், இயக்குனர் மற்றும் நட்சத்திரமாக இருக்கிறான். ஆனால் அவன் இயக்குவதற்காகத் தேர்ந்தெடுத்த பாத்திரத்தில் முற்றிலும் மூழ்கி இருப்பதால், அவனது உண்மையான சுயத்தை மறந்து, அவன் உருவாக்கிய பாதையின் வழியாக ஓர் உயிரினமாக இப்போது தடுமாறுகிறான்.

மனிதன், அவனுடைய உண்மையான தன்மையின் விழிப்புணர்வை அடைய வேண்டும். எல்லா பொருட்களின் வெளிப்பாடும் ஒரு ஆன்மீக ஜீவனைப் பொறுத்தது மற்றும் அதிலிருந்து உருவாகிறது என்பதை அவன் காண வேண்டும். பின்னர் அவன் எல்லா சூழ்நிலைகளிலும் உறுதியும் அமைதியுமாக இருப்பான்; மனச்சோர்வுக்கு இடமே இருக்காது, அது மறைந்துவிடும்.

இப்போது, இந்த உணர்வு நிலையை அடைய திரைப்படங்கள் எப்படி உதவ முடியும்? திரைப்படத்தின் தன்மையை மாற்ற வேண்டிய அவசியமில்லை. காதல், காதற் செய்கை, சாகசம் இவை மூன்றும் இதற்கு அடிப்படை. அவை விறுவிறுப்பாகவும், பொழுதுபோக்காகவும், முடிந்தவரை உற்சாகமாகவும் சித்தரிக்கப்பட வேண்டும்; மாற்ற வேண்டியது என்னவெனில் வலியுறுத்திக் காட்டுவது மட்டுமே! உதாரணமாக, தைரியம் ஒரு பெரிய நல்லொழுக்கம், ஆனால் அது தவறாகப் பயன்படுத்தப்பட்டால், அது ஒரு களங்கம் ஆகலாம். அது போலத்தான் காதலும், வாழ்வின் உயிர்நாடியான இது, இறை உணர்வின் உச்சத்திற்கு அல்லது விரக்தியின் ஆழத்திற்கு எடுத்துச் செல்லும். இயேசுவை சந்திப்பதற்கு முன்பும் பின்பும் மாக்டலீன் மேரி செய்ததை விட, அன்பின் இரு துருவங்களின் விளைவுகள் குறித்து இதைவிட சிறந்த உதாரணம் எதுவும் இருக்க முடியாது.

இந்த இரண்டு உச்ச நிலைகளுக்கும் இடையில் பல வகையான காதலின் (அன்பின்) பரிமாணங்கள் உள்ளன, இவை அனைத்தும் நல்லவை, ஆனால் அவற்றில் சில மற்றவைகளை விட சிறந்தவை. 'நல்ல' மற்றும் 'சிறந்த' என்ற சொற்களைப் நான் பயன்படுத்துவதன் காரணம், அவை எந்த அளவுக்கு வெளிப்படுகிறது என்பதைப் பொறுத்தது. உடலளவிலான ஆசைகள் மூலம் ஒருவர் வெளிப்படுத்தும் அன்பு கூட, தனிப்பட்ட ஆசைகள் மற்றும் விருப்பு வெறுப்புகளிலிருந்து ஒருவரை விடுவிக்கும் அளவிற்கு

நல்லது, அனைத்திற்கும் மேலாக, அவர் நேசிக்கும் ஒருவருக்கு சேவை புரிய விரும்புகிறார்.

ஒவ்வொரு மனித உறவும் ஏதோ ஒரு விதத்தில் அன்பை அடிப்படையாகக் கொண்டது, மேலும் அந்த அன்பு நித்தியமானதும், நிஜமானதுமாக இருந்தால் நல்லிணக்கத்துடனும் அல்லது தற்காலிக தன்மை கொண்டதானால் உறவு பிளவு படுவதுமான சூழ்நிலைக்கும் வழிவகுக்கிறது. உதாரணமாக, திருமண வாழ்க்கையில் அன்பு எந்த அளவுக்கு ஊக்கத்துடன் நிலைநிறுத்தப் படுகிறதோ அதைப் பொறுத்து வாழ்க்கை மகிழ்ச்சியானதாக அல்லது மகிழ்ச்சியற்றதாக, உயர்வாக அல்லது தாழ்வாக, நீடித்த அல்லது குறுகியதாக அமையும்.

பாலியல் ஈர்ப்பை அடிப்படையாகக் கொண்ட திருமணங்கள், நிரந்தமாக நீடிக்க முடியாது; அவை, தவிர்க்க முடியாமல் விவாகரத்து அல்லது இன்னும் மோசமான நிலைக்கு எடுத்துச் செல்லும். மாறாக, திருமணங்கள், பரஸ்பர விருப்பத்தின் அடிப்படையில் சேவை செய்து, ஒருவரையொருவர் ஊக்குவித்து, தொடர்ந்து செழுமையிலும் அழகிலும் வளர்கின்றன; மேலும் அவை அனைத்தையும் அறிந்த அனைவருக்கும் ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

ஆண்களையும் பெண்களையும் இறை உணர்வின் உச்சிக்கு அழைத்துச் செல்ல, 'அச்சம், பேராசை, கோபம், ஆர்வம்' ஆகியவற்றைக் கடக்க நாம் அவர்களுக்கு உதவ வேண்டும். ஒருவர் அவருடைய சுயத்தை, வரையறுக்கப்பட்ட தனி உடல் அமைப்பாகப் பார்ப்பதுடன், ஒரு திட்டவட்டமான உடல் தொடக்கத்தையும், முடிவையும் கொண்டிருந்தாலும், அச்சம், பேராசை, கோபம், ஆர்வம் இவை நான்கும், அவரது வாழ்நாள் முழுவதும் வாழ்வின் தேவையைப் பாதுகாப்பதன் விளைவாகும்.

சுயமான ஆன்மா, உண்மையில், எல்லையற்ற, பிரிக்க முடியாத ஆன்மீக அந்தஸ்து - அதன் இயல்பில் நித்தியமானது மற்றும் அதன் வளங்களில் எல்லையற்றது. எல்லையற்ற மாற்றத்தின் மத்தியில் இந்த நித்திய யதார்த்தத்தைக் கண்டுபிடிப்பதே வாழ்க்கையில் மிகப்பெரிய காதற்செயலாகும். ஒரு நபர் இதை அனுபவித்த அந்த கணத்தில், வாழும் எல்லாவற்றிலும் தன்னைப் பார்க்கிறார். ஒருவர் எல்லா வாழ்க்கையையும் தனது வாழ்க்கையாகவும், ஒவ்வொருவரின் நலன்களையும் தனது சொந்தமாகவும் அங்கீகரிக்கிறார். மரண பயம், சுய பாதுகாப்பிற்கான ஆசை, பொருளைக் குவிப்பதற்கான தூண்டுதல், நலன்களின் மோதல், முறியடிக்கப்பட்ட ஆசைகளின் கோபம் ஆகியவை நீங்கிவிடுகின்றன. அவர் இனி கடந்த கால பழக்கவழக்கங்களுடன் கட்டுப்படுவதில்லை, எதிர்கால நம்பிக்கையால் இனிமேல் திணறப் போவதில்லை; ஒவ்வொரு தற்போதைய தருணத்தையும் வாழ்ந்து முழுமையாக அனுபவிக்கிறார். இதைச் சித்தரிக்க திரைப்படங்களைத் தவிர சிறந்த ஊடகம் வேறு எதுவுமில்லை.

மக்களை அதிக அளவில் புரியவைத்து, உண்மையான உணர்வுகளை அளித்து, சிறந்த வாழ்க்கையை வாழ ஊக்குவிக்கும் மேடை

**நாடகங்களுக்கும், மதம் என்று அழைக்கப்படும் அமைப்பிற்கும் எந்தவித தொடர்பும் இல்லை. நம்பிக்கை, சடங்கு, கோட்பாடு, சொர்க்கம், நரகம், பாவம் ஆகியவை சத்தியத்தின் விபரீதங்கள்; மேலும் அவை விஷயங்களைத் தெளிவுபடுத்துவதற்கும் ஊக்கப்படுத்துவதற்கும் பதிலாக குழப்பமும், திகைப்பும் அடையச் செய்கின்றன. தூய்மையான அன்பு, தன்னலமற்ற சேவை, இறைநிலை இவற்றைப் பிரதிபலிக்கும் கதைகள், நம் அன்றாட வாழ்க்கையின் பணிவான சூழ்நிலைகளின் வழியாக உணரப்பட்டு, பயன்படுத்தப்பட்டு, அவற்றின் பன்மடங்கு வெளிப்பாடுகளாக, வீடு மற்றும் வணிகம், பள்ளி மற்றும் கல்லூரி, ஸ்டுடியோ மற்றும் ஆய்வகம் ஆகியவற்றின் மூலம் உண்மையான ஆன்மீகம் சிறப்பாக சித்தரிக்கப்படுகிறது. எல்லா இடங்களிலும் மகிழ்ச்சி ஆரவாரங்கள், தூய்மையான அன்பு, மிகப் பெரிய சக்தி - ஆனந்தத்தின் நிலையான ஒருங்கிணைக்கப்பட்ட இசையை உருவாக்குகிறது.**

**இதுவே மிக உயர்ந்த நடைமுறைக்கு உகந்த ஒன்று. இத்தகைய சூழ்நிலைகளைத் திரையில் சித்தரிப்பதன் மூலம், ஆன்மீக வாழ்க்கை என்பது வாழ வேண்டிய ஒன்று, பேசப்படுவதற்கு மட்டுமல்ல என்பதையும், அது மட்டுமே, நாம் நிலைநிறுத்த முற்படும் அமைதியையும் அன்பையும் ஒற்றுமையையும் உருவாக்கும் என்பதையும் நம் வாழ்வில் மக்களை உணர வைக்கும்.**

இரவு உணவிற்குப் பிறகு, பாபா மூன்று முறை எழுந்து விடைபெற ஆயத்தமானார். ஆனால் மேரி பிக்ஃபோர்ட் (MARY PICKFORD) அவரைச் செல்ல அனுமதிக்காமல் உடன் இருக்க விரும்பினார். இறுதியாக, பாபா எழுந்து நின்றபோது, அனைவரும் அவரை சூழ்ந்தனர். தனது எழுத்துப்பலகை வழியாக, அவர்களுடன் தொடர்ந்து உரையாடினார். சில நிமிடங்களுக்குப் பின்னர், அறையின் வெகு தொலைவில் தனிமையில் நின்று கொண்டிருந்த ஓர் இளம் பெண்மணி மீது பாபாவின் விறுவிறுப்பான பார்வை விழுந்தது. பாபா, அந்தப் பெண்மணியை அருகில் அழைத்தார். ஆனால், அவர் பாபாவை ஏறிட்டுப் பார்த்து இருந்த இடத்திலேயே இருந்தார். மீண்டும் அழைக்கப்பட்ட போது, மெதுவாக முன்னால் வந்து, சற்று தூரத்தில் நின்றார். நோரினா உடனே, “வாருங்கள் குழந்தாய், வந்து பாபாவுடன் கை கொடுங்கள்” என்றதும், அந்த இளம் பெண் ஒதுங்கியே நின்றார். பின்னர், எலிஸபெத் அவரிடம், “அன்பே, நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? அருகில் வந்து பாபாவைப் பாருங்கள்” என்றார்.

அந்தப் பெண்மணி உடனே, “நான் எப்படி அவரைத் தொட முடியும்” என்று வினவினார்.

“ஏன் இல்லை?” நோரினா கூறினார், “அனைவரும் பாபாவைப் பார்க்கலாம்.”

இது அவர் கண்களில் கண்ணீரை வரவழைத்தது, அந்தப் பெண்மணி பரிதாபமாகக் கேட்டார், “ஆனால் நான் ஒரு பாவி! அவரைப் போன்ற தூய்மையான ஒருவரை நான் எப்படித் தொட முடியும்?”

பாபா அவர் அருகில் சென்று, தனது கையை அவர் தலை மற்றும் தோள்கள் அருகில் நகர்த்தியதும், அந்தப் பெண்மணி அழத் தொடங்கினார்; பாபா அவரிடம், "**நான் முற்றிலும் தூய்மையானவர். நான் மிக மோசமான பாவியையும் தூய்மைப்படுத்த முடியும். உங்கள் தவறுகளை நீங்கள் உணர்ந்து கொண்டீர்கள், பிறர் முன்னிலையில் அவற்றை உண்மையாக ஒப்புக் கொண்டீர்கள், எனவே நீங்கள் மன்னிக்கப்படுகிறீர்கள். இந்த இதயபூர்வமான வருந்துதல் ஒன்றே போதுமானது, நீங்கள் இப்போது சுத்திகரிக்கப்பட்டுள்ளீர்கள். இப்போது, அஞ்ச எதுவும் இல்லை. உங்கள் கடந்த கால தவறுகளை மீண்டும் செய்ய வேண்டாம். எனது ஆசீர்வாதங்களை நான் உங்களுக்கு வழங்குகிறேன்!**" அந்தப் பெண்மணி தொடர்ந்து வருந்தி அழுதார், பாபா அன்பாக அவரைத் தழுவினார். பாபாவின் அன்பால் அந்தப் பெண்மணியின் இதயத்திலிருந்து ஈர்க்கப்பட்ட கண்ணீர், பாவங்களை எல்லாம் துடைத்தது.

இதைக் கண்கூடாகப் பார்த்தவர்கள் மனம் நெகிழ்ந்து போயினர்; அவர்களின் இதயங்கள் கண்ணீரால் நிரம்பி வழிந்தன. புறப்படுவதற்கு முன்பு, பாபா மீண்டும் அனைத்து விருந்தினர்களையும் அரவணைத்து, அந்தப் பெண்மணியின் தலையில் கை வைத்து, "**நீங்கள் முழுமையாக மன்னிக்கப்பட்டுவிட்டீர்கள்! கடந்த காலத்தை மறந்துவிடுங்கள், கவலைப்பட வேண்டாம்**" என்று ஆறுதல்படுத்தினார். அந்தப் பெண்மணி, பாபாவின் கைகளைத் தனது கண்களில் தொட்டு முத்தமிட்டார்.

மேரி பிக்ஃபோர்டு, டக்ளஸ் ஃபேர்பேங்க்ஸ் அவர்களின் திரைப்படங்களில், ஆழ்ந்த மனித அன்பின் காட்சிகளைச் சித்தரித்துள்ளனர், ஆனால் மெஹர் பாபாவிடமிருந்து வெளிப்பட்ட தூய தெய்வீக அன்பின் இந்தக் காட்சியைக் கண்டது உண்மையில் ஓர் அரிய அனுபவமாகும். அவர்களின் இதயங்கள் நிரம்பி வழிந்தன. "பல காலங்களுக்குப் பின்னரே உலகம் இத்தகைய வாய்ப்பைப் பெறுகிறது," என்று காலம் பறைசாற்றியது, "அன்பிற்குரியவரை அடையாளம் கண்டு, அவரது பாதங்களைப் பற்றிக் கொண்டவர்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்!"

ஆதி ஜூனியர் கூறியபடி, மெஹர் பாபா புறப்பட ஆயத்தமானபோது, தல்லூலா பேங்க்ஹெட், ஆதி ஜூனியரிடம், மறுநாள் மதிய உணவுக்காக அவர் தனது வீட்டிற்கு வர முடியுமா என்று கேட்டார், ஏனெனில் அவரிடம் ஒன்றைக் கூற விரும்புவதாகக் கூறினார். அது சாத்தியம், ஆனால் பாபாவிடம் கேட்க வேண்டும் என்று ஆதி கூறி, அவர் பாபாவை அணுகியபோது, பாபா, "**பரவாயில்லை**" என்று பதிலளித்து, பின்னர் ஒரு கடுமையான தொனியில், "**ஆனால் அவரைத் தொடக் கூடாது; அவரும் உன்னைத் தொட அனுமதிக்கக் கூடாது**" என்று எச்சரித்தார். அப்படித் தவறான எண்ணம் எதுவும் இல்லை என்று ஆதி அவருக்கு உறுதியளித்தார்.

ஆதி, மறுநாள் பிற்பகல் தல்லூலாவின் வீட்டிற்குச் சென்று (மற்றுமொரு மண்டலியும் உடன் இருந்தார்). அவரை சந்தித்தபோது, முதலில் "நான் இங்கு

இருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன், ஆனால் தயவுசெய்து என்னைத் தொடாதீர்கள்" என்று திடீரென உளறினார். அவர் வெட்கத்தில் 'உங்களை எவ்வகையிலும் சங்கடத்திற்குள்ளாக்க மாட்டேன்' என்று கூறினார். மதிய உணவின் போது, ஆதி அவரிடம் என்ன பேச விரும்புகிறீர்கள் என்று கேட்க, அவர் ஒரு குறிப்பிட்ட மனிதனை காதலிப்பதாகவும், ஆனால் அந்த மனிதன் அவரை நேசிக்கவில்லை, அவரிடம் எந்தப் பாசத்தையும் காட்டவில்லை என்றும் தல்லுலா கூறினார். ஆதி தனது சகோதரனிடம் (பாபா) அந்த மனிதனின் மீது ஒரு 'காதல்-மந்திரத்தை' வீசக் கேட்டுக்கொள்ள வேண்டுமென அவர் விரும்பினார். ஆதி அதிர்ச்சியடைந்து, பாபா அத்தகைய செயல்களைச் செய்யக் கூடியவர் அல்ல, பாபாவின் ஆன்மீக அந்தஸ்தைப் பற்றி, அவர் பெரிதும் தவறாகப் புரிந்து கொண்டார் என்றும் எடுத்துரைத்தார். ஆயினும் கூட, தல்லூலா, ஆதி தனது சகோதரரிடம் அவருக்காகப் பேச வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆதி அவ்வாறே செய்வதாகக் கூறினார், ஆனால், பாபா அத்தகைய காரியத்தைச் செய்வாரா என்று சந்தேகிப்பதாக மீண்டும் விளக்கினார்.

ஆதி ஜூனியர், ஜோன்ஸின் இல்லத்திற்குத் திரும்பிய பின்பு, தல்லுலாவுடனான சந்திப்பு குறித்து, பாபாவிடம் எடுத்துரைத்த வேளையில், பாபா, தனது வெளிப்படையான வெறுப்பைக் காட்டி, "**ஹாலிவுட்**! **ஹாலிவுட்**!" என்று குறிப்பிட்டார்.

பல திரைப்பட நட்சத்திரங்களிடையே, மெஹர் பாபாவைப் பற்றிய பொதுவான அபிப்ராயம் என்னவெனில், அவர் ஓர் உயர் நிலையை அடைந்த யோகி அல்லது சுவாமி, அவர் அசாதாரண சக்திகளைக் கொண்டிருந்ததால் மக்களின் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார். அதனால்தான் தல்லூலா பேங்க்ஹெட் அத்தகைய கோரிக்கையை முன்வைத்தார். ஹாலிவுட் நடிகர்கள், நடிகைகள், பிரபலமான நபர்கள், ஆகியோரின் வாழ்க்கை நன்கு விளம்பரப்படுத்தப்பட்டது, இந்த வருகையின் போது பாபா செய்தித்தாள்களில் மிகவும் பிரசித்தி பெற்றதால், அவர்கள் அவரை ஒரு பிரபலமான இறை ஞானி என்று வரவேற்றனர்.

மாயையில் சிக்கித் தவிக்கும் பெரும்பாலான மக்களைப் போலவே, ஹாலிவுட்டில் பிரபலமானவர்களும் உண்மையான ஆன்மீகத்தைப் புரிந்துகொள்ளாமல் அல்லது மெஹர் பாபாவின் அவதார நிலை உண்மையில் எதைக் குறிக்கிறது என்பதைப் பற்றிய அதிக ஆழமான கருத்து எதுவும் இல்லாமல் இருந்தனர்.

அன்று பிற்பகலில், மேரி பிக்ஃபோர்ட் ஒரு தனியார் நேரடி சந்திப்புக்காக, பாபாவைப் பார்க்க வந்து, ஐந்து நிமிடங்கள் பாபாவின் முன்னிலையில் தியானத்தில் அமர்ந்தார். பாபா, மெரடித், சாஞ்சி, குயன்டின் ஆகியோர் பின்பு 'ஸான்டா மோனிகா' (SANTA MONICA) எனும் திரைப்பட நிறுவனத்திற்கு, இயக்குனரும் தயாரிப்பாளருமான எர்ன்ஸ்ட் லூபிட் - ERNST LUBITSCH, (மிகச் சிறந்த,

நேர்மையான மனிதர்) என்பவரால் அழைத்துச் செல்லப்பட்டனர், மேலும் அவருடன் அவரது இல்லத்தில் தேநீர் விருந்தில் கலந்து கொண்டனர்.

அன்று மாலையில் பாபா, குயன்டினுடன் தல்லுலா பேங்க்ஹெட்டின் இல்லத்திற்கு இரவு உணவிற்காகவும், 26 வயதான கிரெட்டா கார்போவை (GRETA GARBO) சந்திக்கவும் சென்றார். இருப்பினும், கார்போ கடைசி நிமிடத்தில் தொலைபேசியில் தொடர்புகொண்டு, அவர் உடல்நலக்குறைவால் வர முடியாததைத் தெரிவித்தார். கார்போ, ஹாலிவுட் நட்சத்திரங்களில் '**மிகவும் உயர்ந்த ஆன்மீக நிலையை எட்டியவர்**', **முந்தைய பிறவியில் ஒரு யோகியாக இருந்தார்**' என்று கூறி, பாபா அவரை சந்திக்க முடியாததில் வெளிப்படையாக ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார்.

அன்றிரவு பாபா அனைவரையும் 'கிராவ்மன் சீன அரங்கிற்கு (GRAUMAN'S CHINESE THEATRE) அழைத்துச் சென்றார், அங்கு அவரை மேலாளர் ஸிட்னி கிராவ்மன் (SIDNEY GRAUMAN) வரவேற்றார். திரைப்படத்தைப் பார்ப்பதற்கு முன்பு குறிப்பாக, நகைச்சுவை நடிகர் வில் மஹோனியின் (WILL MAHONEY) நடிப்பை பாபா ரசித்தார். கிரெட்டா கார்போவின் சமீபத்திய 'கிராண்ட் ஹோட்டல்' (GRAND HOTEL) எனும் திரைப்படத்தைப் பார்த்து, பாபா அவரது நடிப்பைப் பெரிதும் பாராட்டினார்.

நியூயார்க்கின் புரூக்ளின் (BROOKLYN) பகுதியைச் சேர்ந்த ஸாம் கோஹென் (SAM COHEN), நிக்கர்பாக்கர் (KNICKERBOCKER) வரவேற்பறையில் பாபாவை சந்தித்தார். ஸாம் நீண்டகாலமாக ஆன்மீகப் பாதையைத் தேடுவதில் மிக்க ஆர்வம் கொண்டிருந்தார். கலிஃபோர்னியாவிற்குச் செல்வதற்கு முன்னர் அவர் தியோஸொஃபிஸ்டு இயக்கத்தில் இணைந்தார், அங்கு அவர் முதலில் பாபாவைப் பற்றிக் கேள்விப்பட்டார். ஸாம் அவரது சிந்தனைகளை இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

நான் அறைக்குள் நுழைந்ததும், மிகவும் மகிழ்ச்சியாகவும் புன்னகையுடனும் ஒரு நபர் என் முன் அமர்ந்திருந்ததைக் கண்டேன். முழுமையான கருணையும் அன்பும் ஒன்றிணைந்ததாக இருந்தது. ஒரு புனிதமான தெய்வீக ஞானி, எனது கைகளைப் பற்றிக்கொண்டு, என்னை உற்று நோக்கினார். ஆன்மீக குருநாதர் ஒருவரின் கைகளைப் பற்றிக்கொள்வது என்பது சாதாரணமானது அல்ல; அதுபோல், ஒருவரை உற்று நோக்குவது வெறுமனே நோக்குவதும் அல்ல; ஆனால் அவரது தொடுதலாலும், தோற்றத்தாலும் ஒருவருடைய 'முகத்திரையை' மெல்லியதாகச் செய்கிறார்; அல்லது சில நேரங்களில் மனிதனை தெய்வீகத்திலிருந்து பிரிக்கும் 'முகத்திரையை' முழுவதுமாக அகற்றுகிறார்.

ஹாலிவுட்டில் பாபாவின் கடைசி நாளான 1932 ஜூன் 4 அன்று, 801 ஆல்பைன் டிரைவில் (ALPINE DRIVE) அமைந்த மேரி டிரஸ்லரின் (MARIE DRESSLER) இல்லத்திற்கு மதிய உணவுக்காக அழைக்கப்பட்டார். 63 வயதான மேரி, சார்லி சாப்ளினுடன் பல திரைப்படங்களில் இணைந்து நடித்த, பிரபல நடிகை மற்றும் குயன்டினின் நீண்ட கால நண்பர். (முந்தைய ஆண்டு சிறந்த நடிகைக்கான

அகாடமி விருதை வென்றார், மேலும் 1932இல் மீண்டும் பரிந்துரைக்கப்பட்டார்.) மேரியின் மிகையான புத்திசாலித்தனம் மற்றும் நகைச்சுவை உணர்வை, பாபா முழுமையாக ரசித்தார். அவர்கள் கதைகளைப் பகிர்ந்துகொண்டு பழைய நண்பர்களைப் போலக் கேலி செய்து உரையாடினர். மதிய உணவுக்கு நடுவில், மேரி அறிவித்தார், "பாபா, நீங்கள் என்னை அனுமதித்தால், நான் உங்களைக் காட்டிற்கு அழைத்துச் சென்று, உங்களுடன் நடனமாட விரும்புகிறேன். மேலும் நீங்கள் என்னிடம் சில வார்த்தைகளைக் கூற விரும்பினாலும், நான் அதை வெளியே சொல்ல மாட்டேன் என்று சத்தியம் செய்கிறேன்!"

பாபா தெரிவித்தார், "**எனது மௌனத்தைக் கலைப்பதற்கு முன், நான் சீனாவிற்குச் செல்லவேண்டியது அவசியம். நான் திரும்பி வந்து, ஜூலை 13 அன்று எனது மௌனத்தைக் கைவிடுவேன்.**"

மேரி உடனே, "நீங்கள் உங்கள் மௌனத்தைக் கலைக்கும்போது, நான் உங்கள் அருகில் இருப்பேன்" என்றார்.

இந்த அமெரிக்க பயணத்தின் போது பாபா, தனது மௌனத்தைக் கலைக்கப் போவதாக அடிக்கடி குறிப்பிட்டது, பாபா உண்மையில் 'பேசுவார்' என்ற ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது; மேலும், பாபா பேசும் போது, அவரது குரல் வானொலி வழியாக உலகம் முழுவதும் கேட்கும் வகையில் ஏற்பாடுகள் தொடங்கிவிட்டன. மார்க் ஜோன்ஸ் இந்த நிகழ்விற்காக 'ஹாலிவுட் பவ்லை' (HOLYWOOD BOWL) முன்பதிவு செய்திருந்தார்; மேரி பிக்ஃபோர்ட் அவரை அறிமுகப்படுத்த இருந்தார். குயன்டின், உற்சாகத்தில், சிலருக்கு புதுப்பாணியில் அமைந்த 'சிறப்பு' உடைகளையும் உருவாக்க ஏற்பாடு செய்தார்.

பாபா ஒருபோதும் அப்படிச் செய்ய மாட்டார் என்று ஆதி ஜூனியருக்குத் தெரியும்; ஒரு நாள், சந்தேக மனநிலையில் ஆதி, பாபாவிடம், "பாபா, நீங்கள் உங்கள் மௌனத்தைக் கலைக்கப் போவதில்லை. வானொலி மற்றும் செய்தித்தாள்களுடன் ஏன் இந்த வம்புக்கு உள்ளாக வேண்டும்? இது போன்ற பிரச்சினையெல்லாம் தேவையா? நீங்கள் பேசாவிட்டால் மக்கள் வருத்தப்படுவார்கள், உங்களிடம் கோபப்படுவார்கள். நீங்கள் நிச்சயமாகப் பேச மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும்!"

"**இல்லை, இல்லை, உனக்குத் தெரியாது! அமைதியாக இரு! இந்த நேரத்தில், நான் அதைச் செய்யப் போகிறேன்!**" என்று கடுகடுப்புடன் பாபா, ஆதியிடம் கூறினார்.

மெஹர் பாபாவின் திருவிளையாடலில் இது என்ன வகையான மேடை நாடகம்? ஹாலிவுட் மக்கள் எவ்வளவு அப்பாவிகள். அவதார புருஷரின் குரல், உலகம் முழுவதும் ஒலிப்பதற்கு, இது போன்ற வழிமுறைகளைப் பயன்படுத்த வேண்டிய தேவைதான் என்ன? ஆனால் இது ஏதோ ஒரு வகையில் மகிழ்ச்சி ஊட்டும் தெய்வீக நாடகம், கடவுளின் லீலை என்றுதான் கூற வேண்டும். எல்லாவற்றையும் அறிந்த அவர், எதுவும் தெரியாதது போலப் பாசாங்கு செய்கிறார்; இப்படி, ஓர் அருமையான தந்திரத்தைக் கையாளுகிறார்.



மெஹர் பாபா - 1 ஜூன் 1932

மெஹர் பாபாவின் பணி அற்புதமானது, ஆனால் புரிந்துகொள்ள முடியாதது. அவரது தெய்வீகப் பணியில், அவர் ஒருபோதும் எந்த நோக்கமும் இல்லாமல் எதையும் செய்வதில்லை; ஹாலிவுட்டில் அவரது அறிக்கைகள் வெளிப்படுத்திய ஆர்வம், அநேகமாக அவதார புருஷர் மற்றும் அவரது அந்தஸ்தைப் பற்றி மக்களுக்கு, உண்மையான விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, அவருடைய அறிக்கைகள் எப்போதாவது நிறைவேறினாலும் இல்லாவிட்டாலும் அவருடன் ஒட்டிக்கொண்டிருப்பது ஆகும்.

காலம் இவ்வாறு ஒப்புதல் அளித்தது: "மெஹர் பாபா ஹாலிவுட்டில் 'பேசுவார்' என்பது உறுதி; அங்கிருந்து அவரது வார்த்தையின் மெல்லிசை, திரைப்படங்கள் மூலமாக உலகம் முழுவதும் பரவுகிறது. ஹாலிவுட் மட்டுமே பாபாவின் வாழ்க்கைக் கதையை உலகிற்கு விளக்கமாக எடுத்துரைக்க முடியும், அது இறை கீதத்தின் அதிர்வுகளோடு அவரின் பேச்சைக் கேட்கும். அவரது பாடல், எதிரொலிக்காததாக இருந்தாலும், உலகின் அனைத்து எதிரொலிகளையும் தனக்குள்ளேயே இணைக்கிறது!"

ஹாலிவுட் விஜயத்தின் போது, மெஹர் பாபா அவரது இலட்சியத்தை நிறைவேற்றும் ஓர் அங்கமாக (இந்தியாவில் தேடப்பட்ட சிறுவர்களைப் போலவே) அமெரிக்காவிலும் பொருத்தமான ஒரு சிறுவனைத் தேடுவதில் மண்டலியை ஈடுபடுத்தினார். அவர் ஒரு சிறுவனை, சீனாவிற்கு உடன் அழைத்துச் செல்ல ஆர்வமாக இருந்தார். அத்தகைய சிறுவனை அழைத்துச் செல்வதன் நோக்கம், '**மேற்கத்திய நாடுகளைக் கிழக்கோடு இணைப்பதாகும்**' என்று பாபா கருத்துத் தெரிவித்தார். பல அமெரிக்க இளைஞர்கள் ஜோன்ஸின் இல்லத்திற்கு அழைத்து வரப்பட்டு, பாபா நேரடியாகப் பேசினார். இறுதியில் கார்ல் ஃபிலிப் (CARL PHILIPP) என்ற பழுப்பு நிற முடியுடன் கூடிய பன்னிரண்டு வயது சிறுவன், ஆனால் பாபாவுடன் சீனாவிற்குச் செல்ல அவனுடைய பாஸ்போர்ட்டை சரியான நேரத்தில் ஏற்பாடு செய்வது சாத்தியமில்லை என்பதால், ஹொனலுலு - HONOLULU (ஓர் அமெரிக்க பிரதேசமாக இருந்ததால்) வரை அவனை பாபாவுடன் அழைத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

ஆரம்பத்தில், ஸ்க்லோஸ், ஸ்டார் ஆகியோர் பாபாவுடன் ஹவாய் (HAWAII) செல்லவிருந்தனர், ஆனால் பாபா, தனது திட்டங்களை மாற்றினார். மெரடித், மெஹர் பாபாவிற்குத் தொந்தரவாக இருந்ததால், அவரை விடுவிப்பதற்காக, மீண்டும் ஒரு தந்திரத்தைக் கையாண்டு ஸான்டா பார்பராவிற்கு (SANTA BARBARA) அனுப்பி வைத்தார்.

மெஹர் பாபா, ஸான் ஃபிரான்சிஸ்கோ (SAN FRANCISCO) நகருக்கான தனது பயணத்தை ரத்து செய்தார் (அங்கு ஜீன், மால்கம் ஸ்க்லோஸ் இருவரும் அனுப்பப்பட்டனர்). அவர் இதர மேற்கத்திய தோழர்களுக்குத் தனது பணியைப் பற்றி அறிவுறுத்தியதுடன், அனைவரையும் தத்தமது இல்லங்களுக்கு அனுப்பி வைத்தார். குயன்டின் டாட், பாபா மற்றும் மண்டலியுடன் செல்ல இருந்தார்.

1932, ஜூன் 4ஆம் நாள் மாலை, மார்க் ஜோன்ஸ், பாபாவையும் மண்டலியையும் கப்பல் துறைமுகத்திற்கு அழைத்துச் சென்றார். பாபாவை வழியனுப்ப ஒரு பெரிய கூட்டம் பின் தொடர்ந்தது. முதல் பயணத்திற்குத் தயாராக இருந்த கப்பல் 'மான்டரே'யில் (MONTEREY) பாபாவும் மண்டலியும் அன்று இரவு பதினொரு மணிக்கு ஹொனலுலு புறப்பட்டனர்.

கப்பலில், மெஹர் பாபா தனது அறையை, சிறுவன் கார்ல் ஃபிலிப்புடன் பகிர்ந்து கொண்டார். குயன்டின் மற்றும் இதர இந்திய மண்டலி வேறு வேறு அறையில் பயணம் செய்தனர். இந்தப் பயணம் அவ்வளவு இனிமையானதாக இல்லை. சிறுவன் கார்ல் ஃபிலிப்பின் நடவடிக்கைகளும் விரும்பத்தகாததாக இருந்ததால் பாபா அவனை உடன் அழைத்துச் செல்வதில் விருப்பம் காட்டவில்லை. அடுத்த முதல் சந்தர்ப்பத்தில் அவனைத் திருப்பி அனுப்பி வைக்க முடிவு செய்தார்.

கப்பலில் இருந்த பல பயணிகள் பாபாவை சந்திக்க வந்தனர். இம்முறை ஆச்சரியப்படும் விதத்தில் அவர் அனைவரையும் சந்தித்தார். நான்கு நாள் பயணத்திற்குப் பின்னர், அவர்கள் 9ஆம் தேதி காலை எட்டு மணிக்கு ஹொனலுலுவிற்கு வந்து, இரண்டு நாட்கள் 'கலகவ்வா அவென்யூ'வில் (KALAKAUA AVENUE) அமைந்த பிரமாண்டமான 'மோன' (MOANA) ஹோட்டலில் தங்கினர். சீனாவிலிருந்து அழைக்கப்பட்ட ருஸ்தம், பாபாவைக் கப்பல்மேடையில் சந்தித்தார். 'மான்டரே' பயணம் முதல் முறையாக இருந்ததால், ராயல் ஹவாய் பேண்ட் (ROYAL HAWAIIAN BAND) மற்றும் நீராவி கப்பல் அதிகாரிகள் உட்பட அனைவரும் கப்பலை வரவேற்கக் காத்திருந்தனர்.

பாபாவுடனான ஒரு தனிப்பட்ட சந்திப்பிற்குப் பிறகு, ருஸ்தத்தை, அன்று இரவு மான்டரே கப்பல் வழியாக ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்திற்கு அனுப்ப பாபா முடிவு செய்தார்.

ஹோட்டலில் இரண்டு மணி நேரம் ஓய்வெடுத்த பின்பு, பாபாவும் குழுவும் ராயல் ஹவாயன் ஹோட்டலின் (ROYAL HAWAIIAN HOTEL) தோட்டங்களில் அமைந்த தேங்காய் தோப்புக்குச் சென்று, ஹவாய் நடனக் கலைஞர்கள் மற்றும் பாடகர்களின் அற்புதமான நடிப்பைக் கண்டு மகிழ்ந்தனர். தொடர்ந்து, நகரத்திற்கு வெளியே, சில அன்னாசி பழத்தோட்டங்களுக்கு ஒரு நீண்ட நடைப்பயணத்தை மேற்கொண்டனர், அங்கு அவர்கள் ஏராளமான அன்னாசி பழரசம் அருந்தினர்.

ஹோட்டலுக்குத் திரும்பி வந்ததும், பாபா, குயன்டினை தனது அறைக்கு அழைத்து கூறினார்: **"கார்லின் நடத்தை சரியாக இல்லாததால், நான் அவனை, சனிக்கிழமை லாஸ் ஏஞ்சலஸுக்கு அனுப்பி வைக்கிறேன். அவன் அங்குத் திரும்பிச் சென்றதும் எனக்கு எதிராகப் பேசுவான்! அதே நேரத்தில், நீங்கள் கலிஃபோர்னியாவிற்குத் திரும்பிச் சென்று, எனது திட்டங்களில் ஏற்படும் மாற்றங்களை அனைவருக்கும் தெரிவிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**

**"நான் சீனாவிலிருந்து இந்தியாவிற்குத் திரும்பி, பின்னர் இத்தாலிக்குச் செல்ல உள்ளேன், அங்கு நீங்கள் சென்று நான் தங்குவதற்கு ஒரு வில்லாவை ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் நான் விரும்புகிறேன்.**

**ஜூலை இறுதியில் வருவேன். அங்கு, கோபியர்களையும் ஒன்று திரட்டுங்கள்.**

**“மெரடித் நியூயார்க்கிற்குத் திரும்புவதற்கான பயணச்சீட்டு மற்றும் அவருக்கும் மார்கரெட்டுக்கும் இங்கிலாந்து திரும்புவதற்காக 500 டாலர் பணமும் கொடுங்கள். டெவன்ஷரில் அவரது பணியைத் தொடர நான் விரும்புவதாக அவர்களிடம் கூறுங்கள்.**

**“மேலும் கலி:ஃபோர்னியாவில் அனைவருக்கும் ஹாலிவுட்டில் அறிவித்தபடி, நான் மௌனத்தை இப்போது கைவிடப் போவதில்லை என்றும் தெரியப்படுத்துங்கள்.”**

குயன்டினுக்கு இது கடினமான கடமையாக இருந்தது, ஆனால் பாபா மீதான அவரது நம்பிக்கை மேலும் ஆழமாக வேரூன்றியது. குயன்டின் தனக்குத்தானே நினைத்துக் கொண்டார்: “எந்த ஒரு சாதாரண மனிதரும் இப்படி நடந்து கொள்ள மாட்டார்.” இதன் விளைவு எதிர்பார்த்தது போலவே இருந்தது: குயன்டின், பாபாவின் செய்தியை தெரிவித்தபோது, குறிப்பாக மெரடித் ஸ்டார், மார்க் ஜோன்ஸ் ஆகியோருக்கு ஏமாற்றமாக இருந்தபோதிலும், மால்கம், ஜீன் போன்றவர்கள், எந்த வகையிலும் நம்பிக்கை இழந்ததாகத் தெரியவில்லை. முக்கிய காரணம் என்னவெனில், பாபாவின் இறை அன்பு, சிலரைத் தனக்கு நெருக்கமாக ஈர்த்தது, அவருடைய அன்பு அவர்களை வழிதவற விடாது.

அன்று இரவு, மான்டரே கப்பலில் ருஸ்தத்தை வழி அனுப்பி வைத்த பின்பு, பாபாவும் மண்டலியும் இரவு உணவு உண்டனர்.

1932, ஜூன் 10ஆம் நாள், எலிஸபெத்தின் நண்பர் திருமதி ஹச்சின்ஸ் (Mrs. HUTCHINS) தனது சகோதரியுடன் பாபாவை சந்திக்க வந்தார். பாபா அன்று மதிய வேளையில் ஹொனலுலு வழியாகக் காரிலும், ஹோட்டல் நியுமாலு (HOTEL NIUMALU) மற்றும் வைகிக்கி மீன்காட்சி அரங்கத்திற்கும் (WAIKIKI AQUARIUM) சென்றார். மாலையில் பாபா லிபர்ட்டி (LIBERTY) தியேட்டருக்குச் சென்று கிளாடிஸ் ஜார்ஜை (GLADYS GEORGE) ‘எ சர்ச் மவுஸ்’ (A CHURCH MOUSE) என்ற மேடை நாடகத்தில் பார்த்தார்.

ஜூன் 11 அன்று, சாஞ்சி, குயன்டின் இருவருடன் பாபா, காலை உணவுக்கு, திருமதி வால்டர் டில்லிங்ஹாமின் (Mrs. WALTER DILLINGHAM) அரண்மனை ‘வில்லா, லா பியத்ரா’விற்குச் (VILLA, LA PIETRA) சென்றார். “பாபா அங்குச் செல்ல விரும்பவில்லை” என்று குயன்டின் தனது நாட்குறிப்பில் பதிவு செய்திருந்தார், ஆனால் அழைப்பை ஒத்திவைக்க மிகவும் காலதாமதமானது. அவர்கள் திரும்பி வந்ததும், கார்ல் ஃபிலிப்பை கப்பலில் அனுப்பிவைக்கச் சென்றனர்; பாபாவை விட்டுச் செல்வதால் கார்ல் சோகமாகத் தோன்றினான், ஆனால் பாபா கூறியதற்கிணங்க அந்த சிறுவன் அமெரிக்கா திரும்பிச் சென்றபோது பாபாவிற்கு எதிராகப் பேசியது பின்பு தெரியவந்தது.



மெஹர் பாபா -
ஹொனலுலு, 1932




மெஹர் பாபா - சீனா, 1932

# ஹொனலுலு, ஜப்பான், சீனா வழியாக இந்தியா வருகை

(**Japan, China & India**)

1932, ஜூன் 11ஆம் நாள் நண்பகலில், காக்கா, சாஞ்சி, பெஹராம், ஆதி ஜூனியர் நால்வரும் மெஹர் பாபாவுடன், ஜப்பானின் 'எம்பரஸ்' (EMPRESS) கப்பலில் சீனாவிற்கு, பதினொரு நாள் பயணம் மேற்கொண்டனர். அவர்களுக்கு விடையளிக்க வந்திருந்த குயன்டின், பாபாவின் பிரிவின் வேதனையை உணர்ந்தார். "நான், பாபா மற்றும் மண்டலியுடன் ஒரு மணிநேரம் இருந்தேன், பின்னர் அனைவரின் மனச்சோர்வையும் சோகத்தையும் உணர்ந்த நான் அவர்களிடமிருந்து விடைபெற்றுச் சென்றேன். நான் விரைவில் பாபாவை சந்திக்க இருந்தாலும், அவர் என்னை விட்டுச் செல்வதை எண்ணி மிகவும் வருந்தினேன். ஆன்மா என்னிலிருந்து வெளியேறியதைப் போல் உணர்ந்தேன்."

கப்பலில் இருந்த அனைத்து ஊழியர்களும் கிட்டத்தட்ட ஜப்பானியர்கள். ஹொனலுலு துறைமுகத்திலிருந்து கப்பல் புறப்பட்டதும், ஒரு ஜாஸ் (JAZZ) இசைக்குழுவின் இசை நிகழ்ச்சி ஆரம்பமானது, அதில் ஹவாய் பெண்மணிகள் பாடி நடனமாடினர். மக்கள் கைக்குட்டைகளை அசைத்து, பூக்களை வீசி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். 'படைப்பின் சக்கரவர்த்தி' ஜப்பான் 'எம்பரஸ்' கப்பலில் பயணிப்பது அவர்களுக்குத் தெரியாது!

பாபா, தனது அறையில், கிம்கோவின் கடிதங்களை மீண்டும் மீண்டும் படிக்குமாறு கேட்டுக்கொண்டார். அவரிடமிருந்து பிரிந்தவர்கள் அனுபவித்த வேதனையை விவரிக்கும் அன்பான வார்த்தைகளைக் கேட்ட வேளையில் அவரது கண்களில் கண்ணீர் நிரம்பியது.

ஒரு வாரத்திற்குப் பிறகு குயன்டின் கலிஃபோர்னியா திரும்பியதும், கீழ்காணும் செய்தி, ஜூலை 14ஆம் நாள், செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டது. 'அஸோஸியேட்டட் பிரஸ்' (ASSOCIATED PRESS) நாளிதழ் தலைப்புச் செய்தி இவ்வாறு குறிப்பிட்டது:

'மௌன இந்து, தனது வானொலி பேச்சைத் தள்ளிப் போடுகிறார்.'

சமீபத்தில் இங்கு வந்த ஸ்ரீ மெஹர் பாபா, கிழக்கிந்திய 'புனித மனிதர்' என்று அறிவிக்கப்பட்டவர், ஏழு ஆண்டுகளாக ஒரு வார்த்தை கூட பேசவில்லை என்று கூறப்படுபவர், ஹாலிவுட்டிலிருந்து ஒரு தேசிய ஒளிபரப்பு தொடர்பாக, நாளை தனது 'செய்தியை' உலகிற்கு வழங்க மாட்டார். 'சூழ்நிலைகள் சாதகமாக இல்லை' என்பதால், அடுத்த பிப்ரவரி வரை, பேசுவதைத் தள்ளிவைக்க ஸ்ரீ பாபா முடிவு செய்ததாக, ஸான்டா பார்பராவிலிருந்து செயலாளர் குயன்டின் டாட் தொலைத்தந்தி அனுப்பியுள்ளார்.

இதற்கிடையில், மெஹர் பாபா பத்திரிகைகளிலிருந்து அத்தகைய பதிலை எதிர்பார்த்தார்; மேலும் இந்த விளம்பரத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று தனது அன்பர்களுக்கு ஒரு செய்தியை அனுப்பியிருந்தார்:

**“நான் பேசும்போது இயேசு திரும்பவும் வருவதை முழு உலகமும் அறிந்து அதை வரவேற்கும்.”**

இருப்பினும், அதுவரை, பல தோழர்கள் பாபாவின் முடிவை தவறாக எடுத்துள்ளனர். கவின் ஆர்தர் (GAVIN ARTHUR) பின்பு விவரித்தபடி: “மெஹர் பாபா (மௌனத்தைக் கலைக்காமல்) ஹவாய், ஹாங்காங் வழியாக இந்தியாவிற்குச் சென்றார். இது ஒரு சீற்றத்தைத் தூண்டும் வாக்குறுதியை மீறுவதாகப் பலர் நினைத்தனர், மேலும் அவரைப் பின்பற்றும் பலரை அவர் இழந்தார்” என்று குறிப்பிட்டிருந்தார்.

1932 ஜூன் 19ஆம் நாள், கப்பல் யோக்கஹாமா (YOKOHAMA, ஜப்பான்) துறைமுகத்தைச் சென்றடைந்தது. பாபா மண்டலியுடன் கப்பலிலிருந்து இறங்கி, ஜப்பானின் இரண்டாவது பெரிய நகரத்தைச் சுற்றி வந்தார். ஒரு மணி நேர கார் பயணத்திற்குப் பின்னர், அவர்கள் சிற்றுண்டியை முடித்துவிட்டு, நெரிசலான வீதிகளில் நடந்து சென்றனர். மதியம் கப்பலுக்குத் திரும்பி வந்து, இரண்டு மணிக்குப் பயணத்தைத் தொடர்ந்தனர்.

அடுத்த நாள் காலை எட்டு மணி அளவில், ஜப்பானின் கோபே (KOBE) துறைமுகத்தைச் சென்றடைந்ததும், பாபாவும் மண்டலியும் மீண்டும் நகரம் முழுவதும் உலா வந்தனர். கப்பல் பிற்பகல் மூன்று மணிக்கு மறுபடியும் புறப்பட்டுச் சென்றது.

1932, ஜூன் 22ஆம் நாள், இரண்டு நாட்களுக்குப் பிறகு, சீனாவின் ஷாங்ஹாய் (SHANGHAI) நகரில் அவர்களை ஹெர்பெர்ட், ஜால்பாய் இருவரும் சந்தித்தனர். பாபா ஓர் அருமையான கோட்டும், பனாமா தொப்பியும் அணிந்திருந்தார். ‘ஹுவாங்பு’ (HUANGPU) நதிக்கரையில் அமைந்த பாலஸ் (PALACE) ஹோட்டலில் அனைவரும் தங்கினர்.

தேநீர் அருந்தியதும் பாபா, ஹெர்பெர்ட்டிடம், “**நான் வெளியே சென்று சீன மக்களுடன் கலக்க விரும்புகிறேன், எனவே என்னை மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்**” என்று கூறினார்.

ஹெர்பெர்ட், பாபாவை ஒரு சில இடங்களுக்கு அழைத்துச் சென்றார், ஆனால் பாபா எதிர்பார்த்த அளவிற்கு நெரிசல் இல்லை. பாபா, தொடர்ந்து கை ரிக்‌ஷா மூலம் ஷாங்ஹாயின் சேரிகளுக்கு விஜயம் செய்தார்; பாதைகள் குறுகி இருந்ததால் பாபா மூன்று மணி நேரம் கால்நடையாக அந்தப் பகுதியைக் கடந்து, மேலேயும் கீழேயும் பார்த்துக் கொண்டே வேகமாகச் சென்றார்; அங்கு வாழும் ஏழை மக்கள் பாபாவை ஆர்வத்துடன் நோக்கினர்.

ஷாங்ஹாயின் பின்புற பகுதிகள் வழியாக வேகமாக நடந்து சென்றதால் ஹெர்பெர்ட் மிகவும் சோர்வாக இருந்தார். பாபாவின் வழிகளையும், முறைகளையும் பற்றி அறியாதவர் ஆகையால், பாபா சீனாவில் தங்கியிருந்த காலத்தில், ஹெர்பெர்ட் தனது சுய விருப்பத்திற்கு ஏற்ப அனைத்தையும் ஏற்பாடு செய்ய முனைந்தார்; இதை பாபா சில நேரங்களில் விரும்பவில்லை. பாபாவும் அவரது எண்ணங்களையும், திட்டங்களையும் மாற்றிக் கொண்டே இருந்ததால்,

அது ஹெர்பெர்ட்டுக்கு ஆச்சரியத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தி, மனம் அல்லல்படத் தொடங்கியது.

1932, ஜூன் 23ஆம் நாள், பாபாவைப் பற்றி ஹெர்பெர்ட் மூலமாக அறிந்த சிலர், அவரை ஹோட்டலில் சந்திக்க வந்தனர்.

இந்தியா திரும்புவதற்கான திட்டத்தில் பாபா மும்முரமாக இருந்தார்; பயணச்சீட்டுகளை முன்பதிவு செய்ய ஹெர்பெர்ட், சாஞ்சி இருவரையும் அனுப்பி வைத்தார். கலிஃபோர்னியாவிற்குத் திரும்புவதற்கான முதல் திட்டம், பல வாரங்களாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு, பின்னர் அது ரத்து செய்யப்பட்டதால், நாள் முழுவதும் ஒன்றிலிருந்து மற்றுமோர் அலுவலகத்திற்கும், அங்கும் இங்கும் மாறி மாறி செல்ல வேண்டிய கட்டாயத்தில், எரிச்சலடைந்த ஹெர்பெர்ட், அவர்கள் ஹோட்டலுக்குத் திரும்பிக் கொண்டிருந்த வேளையில், சாஞ்சியிடம் சினத்துடன் வினவினார், “பாபா ஏன் இப்படி நடந்து கொள்கிறார்? இது, அவரே அவரது மனதை அறியாத பரிதாபமாகத் தோன்றுகிறது! ஆரம்பத்திலிருந்தே செய்ய வேண்டியது என்ன என்பது அவருக்குத் தெரியாதா? இந்தத் திட்ட மாற்றத்தால் என்னென்ன இடர்பாடுகள் ஏற்பட்டது! நான் வாழ, சம்பாதிக்க வேண்டும் என்று பாபா உணரவில்லை; இன்று எனது இதர அலுவலக பணிகள் மிகவும் முக்கியமானவை, தள்ளிப்போட கிட்டத்தட்ட சாத்தியமற்றது.”

ஹெர்பெர்ட் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் சாஞ்சி, பாபாவிற்கு எடுத்துரைத்த போது, பாபா அவரைத் திட்டினார்: **“என்னைப் பற்றி நீங்கள் இப்படி நினைப்பதானால், எனக்காக வேலை செய்வதில் எந்த பயனும் இல்லை!”** ஹெர்பெர்ட் பதில் கூறாமல், புத்திசாலித்தனமாக அமைதி காத்தார்; பாபா அவரை மன்னித்தார்.

அன்று மாலை, பாபாவும் மண்டலியும் அவரது அழைப்பின் பேரில், மிஸ்டர். சுங் (Mr. CHUNG) உணவகத்திற்குச் சென்றனர். முதல் முறையாக ஒரு ஜோடி மரகுச்சிகளுடன் உண்ண முயற்சித்தது பார்த்த பாபாவிற்கு, அது ஒரு வேடிக்கையான அனுபவம். பின்னர் அவர்கள் ‘கேத்தே’ (CATHAY) தியேட்டரில் ‘பீஸ்ட் ஆஃப் தி சிட்டி’ (BEAST OF THE CITY) திரைப்படத்தைப் பார்த்தனர். தொடர்ந்து, அனைவரும் ரயில் நிலையத்திற்குச் சென்று இரவில் ‘நான்கிங்’ (NANKING) செல்லும் ரயிலில் பயணம் செய்தனர்.

மறுநாள் காலை ஏழு மணிக்கு அவர்கள் நான்கிங் நகரம் வந்தபோது, பாபாவை வரவேற்க பெண்டு, குஸ்தாஜி இருவரும் ரயில் நிலையத்தில் காத்திருந்தனர். அனைவரும் அங்கிருந்து ஹெர்பெர்ட் வீட்டிற்குச் சென்றனர். பாபாவின் உத்தரவுபடி, பெண்டு, குஸ்தாஜி, ஜால்பாய் ஆகியோர் மூன்று மாதங்களாக சீனாவில் காத்திருந்தனர்.

சிற்றுண்டி அருந்திய பின்பு, ஹெர்பெர்ட், பாபாவை நான்கிங் நகரில் ‘க்ரேட் வால்’ (GREAT WALL) அமைந்த இடத்திற்கு அழைத்துச் சென்றார். அருகிலிருந்த நீளமான ஏரி வழியாக நெடுந்தூரம் பாபா நடந்து சென்றார். நான்கிங் ஓர் இனிமையான நகரம்; பாபா மற்றும் மண்டலி அனைவருக்கும் உடனே பூனாவின் நினைவு வந்தது. புரட்சிகர தலைவர் ‘ஸன் யாட்-ஸென்’ (SUN YAT-SEN) நினைவிடத்தைக் காண மதியம் பாபா ‘பர்ப்பிள் மலை’க்குச் (PURPLE

MOUNTAIN) சென்றார். சாலைகள் கடினமானவை என்றாலும், பாபா சுற்றுப்புற சூழ்நிலையைப் பெரிதும் விரும்பினார்.

மாலையில் அனைவரும் பாபாவைச் சுற்றி, அவரது அறையில் அமர்ந்து இசையைக் கேட்டு ரசித்தனர். அதன் பிறகு, பாபா, தனது திட்டங்களில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறித்து அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் இந்தியாவிற்கு, தொலைத்தந்திகளை அனுப்ப சாஞ்சிக்கு அறிவுறுத்தினார்.

ஹெர்பெர்ட், பேராசிரியராகப் பணிபுரிந்த தேசிய மத்திய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பல சீன மாணவர்களும், வயதான ஆண்களும் பெண்களும் மெஹர் பாபாவை நான்கிங்கில் சந்திக்க வந்தனர்.

ஹெர்பெர்ட், நான்கிங்கில் பாபாவை பல இடங்களுக்கு அழைத்துச் சென்றார். இங்கும் பாபா, ஏழை மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளுக்கு விஜயம் செய்த வேளையில், சீன விவசாயிகள் பாபாவை ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

பல்கலைகழகத்தில் ஹெர்பெர்ட்டின் பேராசிரியர் பணி இப்போது முடிவுக்கு வந்தது. பாபாவிற்கு சேவை செய்ய விரும்பிய அவர், "லண்டனுக்குத் திரும்பிச் செல்லும் வழியில், பாபா விரும்பினால், நான் டைரன் - DAIREN (தாலியன் - TALIEN), மஞ்சூரியா (MANCHURIA), ஸைபீரியா (SIBERIA), மாஸ்கோ (MOSCOW), வார்ஸா (WARSAW) நகரங்கள் வழியாகப் பயணம் செய்ய முடியும்" என்பதை, பாபாவிற்குத் தெரிவித்தார்.

அதற்கு பாபா, "**சரி. அப்படியானால் மஞ்சூரியா, ரஷ்யா வழியாக மார்ஸெயில்ஸ் நகருக்குச் சென்று, ஜூலை 20 அன்று அங்கு என்னை சந்திக்கவும்**" என்று கூறினார்.

1932, ஜூன் 26 அன்று பாபா 'நேஷனல் சினிமா'வில் (NATIONAL CINEMA) ஒரு திரைப்படத்தைப் பார்க்கச் சென்றார், நகரின் நெரிசலான பாதைகள் வழியாகக் காரில் சென்று, 'கன்ஃபியூஸஸ்' (CONFUCIUS) கோவிலுக்கு விஜயம் செய்தார். அந்த நாள் பாபா அங்கிருந்து புறப்பட இருந்தார், ஹெர்பெர்ட் அவருக்கு 'மைல் ஃபோ'வின் (MILE FO) அரக்கு சிலை ஒன்றை வழங்கினார், இது சீனர்கள் 'எதிர்கால புத்தர்' என எண்ணி பயன்படுத்திய பெயர்.

நான்கிங்கில் மூன்று நாட்கள் தங்கிய பின்பு, பாபா ஷாங்ஹாயிலிருந்து (SHANGHAI) ஜூன் 28ஆம் நாள், எஸ்.எஸ். கைஸர்-ஐ-ஹிந்த் (SS KAISER-I-HIND) கப்பலில் மும்பையை நோக்கி பயணத்தைத் தொடங்கினார். ஹெர்பெர்ட் டேவி ஆறு நாட்களுக்குப் பிறகு ரஷ்யாவிற்குச் செல்லும் வழியில் டைரன் - DAIREN (சீனாவின் வடக்கு திசையில் அமைந்த துறைமுகம்) புறப்பட்டார்.

ஜூலை 1ஆம் நாள், ஹாங் காங் (HONG KONG) நாட்டில் ருஸ்தம் ஈ தேசாய் என்பவர் மெஹர் பாபாவை சந்தித்து, பாபா, மண்டலி அனைவரையும் அவரது இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்; அங்கு தேசாயும் அவரது மனைவியும் இந்திய உணவுகளைத் தயார் செய்திருந்தனர்.

உணவுக்குப் பின்னர், அவர்கள் அனைவரும் ஹாங் காங் நகரைச் சுற்றி வந்தனர். அன்று மாலை, குயின்ஸ் (QUEEN'S) தியேட்டரில் 'ஸ்கின் டீப்' (SKIN DEEP) திரைப்படத்தைப் பார்த்த பிறகு, பாபாவும் மண்டலியும் படகில் தங்கள் கப்பலுக்குத் திரும்பினர்.

மறுநாள் கவுலூன் (KOWLOON) வழியாகப் பயணித்து, தேசாயின் நண்பரான ருஸ்தம் எஸ் பெஸ்தோன்ஜியை சந்தித்து, நகரில் ஒரு மணி நேரம் சுற்றி வந்து, அவர் இல்லத்திற்கு விஜயம் புரிந்த பின்பு, பாபாவும், மண்டலியும் கைஸர்-ஐ-ஹிந்தில் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

ஜூலை 6 காலை 7:00 மணிக்கு சிங்கப்பூரை வந்தடைந்து, நகரத்தைப் பார்வையிட்ட பின்னர், அவர்கள் 'கேபிடல் சினிமா'வில் (CAPITAL CINEMA) 'டாக்டர் ஜெகில் மற்றும் மிஸ்டர் ஹைட்' (Dr. JEKYLL AND Mr. HYDE) திரைப்படத்தைப் பார்க்கச் சென்று, இரவில் கப்பலுக்குத் திரும்பி வந்தனர்.

இரண்டாவது நாளும் சிங்கப்பூரில் கழிந்தது. ஜூலை 8 அன்று ஸ்ரீ லங்கா (SRI LANKA) நாட்டின் கொழும்பு (COLOMBO) நகரை நோக்கி பயணத்தைத் தொடர்ந்தனர். மறுநாள் 9ஆம் தேதி 'பினாங்க்' (PENANG) துறைமுகத்தை வந்தடைந்து, அங்கு, பாபா, புத்தர் கோவில், பாம்பு கோவில்கள் என்ற இரண்டு சிவாலயங்களைப் பார்வையிட்டார்.

பாபாவும் மண்டலியும் இலங்கையின் (CEYLON) தலைநகரான கொழும்புக்கு ஜூலை 13ஆம் நாள் வந்து சேர்ந்ததும், ஆதி சீனியர், நவ்ரோஜி தாதாசாஞ்சி ஆகியோருக்கு, தொலைத்தந்திகளை அனுப்பினர். கொழும்பு நகரத்தைக் காரில் சுற்றி வந்தனர்.

மேலும் இரண்டு நாட்கள் கடல் பயணத்திற்குப் பின்னர், 1932 ஜூலை 15 அன்று மும்பை வந்து சேர்ந்தனர். நாசிக்கில் தங்கியிருந்த பெண் மண்டலி, தங்கள் அன்பான இறைவனை மீண்டும் கண்டு மகிழ்ச்சியடைந்தனர். பாபா, குறிப்பாக மெஹராவைப் பார்த்து, தனது உலக சுற்றுப்பயணத்தைப் பற்றி அவரிடம் சொல்ல விரும்பினார்.

ஆதி சீனியர், புவா ஸாஹேப், ராம்ஜூ, ராவ்ஸாஹேப், விஷ்ணு ஆகியோர் நாசிக் நகரிலிருந்தும், பலர் மும்பையிலிருந்தும் வந்திருந்தனர். அஹமதுநகரிலிருந்து குல்மாயும் வந்திருந்தார். ஸெயிலர், சிது, சகன் மூவரும் மறுநாள் காலையில் பாபாவை சந்தித்தனர். அதே கப்பலில் ஐரோப்பாவிற்குத் திரும்புவதற்கு, பாபா திட்டமிட்டிருந்தார், எனவே அவர் அந்த நாளில் ஆண், பெண் ஒவ்வொருவருக்கும் அவரது அறிவுறுத்தல்களை வழங்கினார்.



மெஹர் பாபா -
போர்டஃபினோ , 1932



மெஹர் பாபா -
வெனிஸ் , 1932

# மூன்றாவது ஐரோப்பிய பயணம் போர்டஃபினோ, ஸான்டா மார்கரிட்டா (இத்தாலி)

**(Portofino. Santa Margarita – Italy)**

இந்தியாவில் தரையிறங்கிய 24 மணி நேரத்திற்குள், மெஹர் பாபா 1932 ஜூலை 16 அன்று பிற்பகல் மும்பையிலிருந்து புறப்பட்டு, அதே கப்பல், கைஸர்-இ-ஹிந்தில் மார்ஸெயில்ஸ் நகருக்குப் பயணத்தைத் தொடங்கினார். அவருடன் இம்முறை சாஞ்சி, காக்கா இருவர் மட்டுமே சென்றனர்.

கப்பல் பயணத்தின் போது, சாஞ்சி இந்தத் தொலைத்தந்தியை, கிட்டிக்கு அனுப்பினார்:

கப்பல் மும்பையில் பன்னிரண்டு மணி நேரம் மட்டுமே நின்றது. பாபாவின் வருகை, உணர்ச்சிகளின் தனித்துவமான வெளிப்பாட்டை ஏற்படுத்தியது. அன்பர்களும், பக்தர்களும், அவரை எங்கள் குடும்ப இல்லத்தில் சந்தித்தனர். மனமார்ந்த வாழ்த்துக்களை அனைவருக்கும் தெரிவித்த பின்பு, பாபா, உடனடியாக வெளியேற இருந்த செய்தி அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. மெஹரா, குல்மாய் போன்ற அன்பான இதயங்கள் கடுமையாகக் கதறின. வலிமிகுந்த பிரிவைத் தழுவும் காட்சிகளுக்கு மத்தியில், அனைவரும் விரைவில் திரும்பி வருமாறு அவரைக் கேட்டுக்கொண்டனர். பாபா, ஜெனோவாவிற்கு வரவிருப்பது குறித்து ஸ்டிஃபனிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

காலம் பாபாவின் சகிப்புத்தன்மையையும், வேகத்தையும் கண்டு வியப்பில் ஆழ்ந்தது: “பாபா கடந்த நான்கு மாதங்களாக ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் தூர கிழக்கு நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்; இப்போது அவர் மீண்டும் புறப்படுகிறார்! பிரியமானவர், மேற்கில் வாழும் தனது அன்பர்களின் இதயங்களைக் கைப்பற்றி, இறை கீதங்களை மீட்டக் கற்றுத் தந்தார்; ஆனால் இப்போது அவர், மேலும் அந்த கீதங்களுக்கு மெருகூட்ட அங்குத் திரும்ப வேண்டிய கட்டாயம்.”

இந்தக் காலகட்டத்தில், மதராஸைச் சேர்ந்த சம்பத் ஐயங்கார் ‘மெஹர் கெஸட்’ (MEHER GEZETTE) என்ற பெயரில் பத்திரிகை ஒன்றை பாபாவிற்கு அர்ப்பணமாக வெளியிட்டார். ஏதன் நகரிலிருந்து ஜூலை 20 அன்று ஐயங்காருக்கு எழுதிய கடிதத்தில், கடந்த மாதங்களின் சில சிறப்பு அம்சங்களைப் பற்றி சாஞ்சி எழுதினார்:

கடந்த நான்கு மாதங்களில், மெஹர் பாபாவின் பயண நடவடிக்கைகள் தொடர்பாக, பெரும் முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இந்த

நேரத்தில், கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிகள், ஓர் இடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்கு, விரைவாக நகர்ந்து கொண்டு இருந்ததால், தினசரி நாட்குறிப்புகளைக் கூட நான் புதுப்பித்த நிலையில் வைத்திருக்க முடியவில்லை. சுமார் நான்கு மாத காலத்திற்குள், பாபா உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்; இத்தாலி, இங்கிலாந்து, ஃபிரான்ஸ், சுவிட்சர்லாந்து, நியூயார்க், கலிஃபோர்னியா, ஹொனலுலு, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளுக்குச் சென்று, இந்தியா வந்தபோது சில மணி நேரங்களுக்கு மட்டுமே அங்கு இருக்க முடிந்தது. இப்போது அவருடைய முக்கியமான பணிகளுக்காக, மீண்டும் ஐரோப்பாவிற்குச் சென்று, செப்டம்பர் தொடக்கத்தில் இந்தியாவிற்குத் திரும்ப உள்ளார்.

மேலும், இது பாபாவின் பணிக்கான பயணம், உல்லாசப் பயணம் அல்ல, ஏறக்குறைய முழு உலகையும் உள்ளடக்கிய பணி - அதி விரைவில் எதிர்காலத்தில் நிகழவிருக்கும் பெரும் எழுச்சிக்கான முன்னேற்பாடு. இந்த அனைத்து இடங்களுக்கும் பாபா மேற்கொண்ட 'பறக்கும்' பயணத்தின் போது, அவர் தனது பக்தர்களும் அன்பர்களும் அளித்த பொது வரவேற்புகளில், ஆயிரக்கணக்கான மக்களைத் தனிப்பட்ட முறையில் சந்தித்தார். ஓய்வு, உணவு அனைத்தையும் ஏறக்குறைய புறக்கணித்து, ஒரு நாளைக்குப் பன்னிரண்டு மணி நேரத்திற்கும் மேலாக, இங்கிலாந்து, அமெரிக்கா நாடுகளின் முக்கிய நபர்களுக்கு அவர் தனிப்பட்ட நேர்காணல்களை வழங்கினார்.

நாங்கள் தொடர்ந்து பயணம் மேற்கொண்டதால், லண்டன், லுகானோ தவிர இதர இடங்களில் ஒரு சில நாட்களுக்கு மேல் தங்கியிருக்கவில்லை; மேலும் அடுத்தடுத்த நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு ஏற்பாடு செய்யவேண்டி இருந்தது.

'ஜான் புல்' இதழில் வெளியான தவறான அறிக்கைகளிலிருந்து, யாரோ அங்கேயும் குறும்பு செய்திருக்கிறார்கள்; ஆனால் இது இங்கிலாந்து அல்லது அமெரிக்காவில் எந்தத் தீங்கையும் விளைவிக்கவில்லை; ஏனெனில், இந்த 'ஜான் புல்' எந்த வகையான 'குப்பை' பத்திரிகை என்பதை அனைவரும் அறிவார்கள், முக்கியத்துவம் வாய்ந்தவர்களைப் பற்றிய இத்தகைய தவறான குற்றச்சாட்டுகளுக்கு, அதன் ஆசிரியர் பல முறை தண்டிக்கப் பட்டுள்ளார். விவேகமுள்ளவர்கள் அதைப் படிப்பதில்லை! ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்தியாவில் மக்களுக்கு இது தெரியாது, மேலும், பாபாவிற்கும் அவரது பணிக்கும் எதிராக குறும்பு செய்வதே வாழ்க்கையின் ஒரே நோக்கமாகும்; (கெ. ஜெ.) தஸ்தூர்ஜி, இந்த அவதூறான அறிக்கைகளை வெளியிட்டு, மக்கள் மனதில் வெறுப்பை உருவாக்க அவர் செய்யாதது எதுவும் இல்லை.

ஆனால், பாபா இந்த விஷயத்தில் மிகவும் அலட்சியமாக இருக்கிறார்; மாறாக, அவருக்கே உரித்தான வழியில் இவற்றை அனுபவிக்கிறார்; அல்லது இன்னும் தெளிவாகச் சொல்வதானால், அவர் தனது வேலைக்கு அத்தகைய எதிர்ப்பை வரவழைக்கிறார், அவராகவே உருவாக்குகிறார்.

கடந்த ஏப்ரல் மாதம், நாங்கள் லுகானோவில் இருந்தபோது, ஒரு நாள், பாபா உலகின் பேரழிவைத் தவிர்ப்பது பற்றி விளக்கினார் - ஒரு பெரிய

உலகளாவிய யுத்தத்திற்கான ஏற்பாடுகள், அனைத்து பக்கங்களிலும் நடந்து கொண்டிருப்பதாகவும் - மனிதகுலத்தை இது போன்ற பேரழிவு மற்றும் கொடுமைகளிலிருந்து காப்பாற்றுவது பற்றியும் விளக்கினார்.

**இதைத் தவிர்க்க, மூன்று விஷயங்கள் முக்கியமானவை:**

**முதலில், தனக்கு எதிராக, பெரிய அளவில் ஓர் எதிர்ப்பை உருவாக்குவது!**

**இரண்டாவதாக, தன்னைத்தானே உடல் ரீதியான துன்பங்களுக்கு ஆளாக்குவது!**

**மூன்றாவதாக, உலகளாவிய, அழிவை விளைவிக்கும் போருக்கு பதிலாக, இங்கேயும் அங்கேயும் சில சிறிய மோதல்களை ஏற்படுத்துவது!**

தனிப்பட்ட துன்பங்களுக்காக, பாபா தனக்குத்தானே எதையும் அனுபவிக்கத் தயாராக இருப்பதாகக் கூறினார். ஆனால் அவர் உருவாக்கும் எதிர்ப்புகளால், தனது அன்பர்கள் தவறாக வழிநடத்தப்படவோ அல்லது அவர்கள் வருத்தப்படவோ கூடாது என்று எச்சரித்தார். அவர் அனைவரையும் எச்சரித்த அடுத்த கணமே, ஜான் புல்லின் கட்டுரை வெளிவந்தது. ஆனால் அது எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

அதன் பின்பு பாபா, அனைவரையும் ஒரு சிறந்த சோதனைக்கு உள்ளாக்கினார். ஜூலை 13ஆம் நாள் ஹாலிவுட்டில் தனது மௌனத்தைக் கலைக்கப் போவதாக, இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் வாழும் அனைத்து அன்பர்களுக்கும் பகிரங்கமாக அறிவித்தார்.

ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு நடக்கும் இந்த சம்பவத்திற்கு, பெரிய அளவில் விளம்பரமும், இதைக் கொண்டாட விரிவான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

அமெரிக்காவின் மிகப்பெரிய ஒலிபரப்பு நிறுவனங்களில் ஒன்று, பாபாவின் முதல் பேச்சு மற்றும் செய்தியை, அதன் உலகளாவிய ரேடியோ கிளைகள் மூலமாக உலகிற்கு ஒலிபரப்ப முன்வந்தது. ஒரு பிரபலமான மருத்துவர் மற்றும் விஞ்ஞானியின் செய்தித்தாள் அறிக்கைபடி, ஒரு மனிதர் ஏழு ஆண்டு மௌனம் கடைப்பிடித்த பின்னர், அவர் பேசுவது என்பது உடல் ரீதியாக சாத்தியமற்றது என்று கூறி, விஞ்ஞான ஆராய்ச்சி குறித்த தனது வாதங்களைக் கடுமையான சந்தேகத்துடன் வெளிப்படுத்தினார்.

ஜூலை 13 அன்று அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தனர்... பின்பு வந்ததோ அதிரடி செய்தி.... சில முக்கியமான பணிகளை முடித்து, சீனாவிலிருந்து திரும்புவதாக உறுதியளித்த பாபா, அங்கிருந்து ஒரு தொலைத்தந்தியை அனுப்பினார்: ஆன்மீகக் காரணங்களுக்காக, பிப்ரவரி 1933ஆம் ஆண்டு தனது அடுத்த பிறந்த நாள் வரை, பேசுவதை ஒத்திவைப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இது அமெரிக்காவில் அனைவருக்கும் - அவருடைய அபிமானிகள், அன்பர்கள், பக்தர்கள் பொதுவாக இதர மக்களுக்கும் - அளித்த ஏமாற்றத்தை நீங்கள் நன்கு கற்பனை செய்யலாம். மனதில் கடுமையான சந்தேகங்களை வளர்த்தவர்களுக்கும், இந்த (ஆன்மீக) விஷயங்களை நம்பாதவர்களுக்கும், அவர்

இல்லாத நேரத்திலும், அவருக்குப் பின்னாலும், அவர்கள் விரும்பும் எதையும் எழுத, இது ஒரு நல்ல விவாதப் பொருளாக அமைந்தது. பாபாவை உண்மையாக நேசித்தவர்கள் மற்றும் அவரைப் பின்பற்றுபவர்கள், கவனமாக, பொறுப்புடன் எதிர்கொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலையை சந்தித்தனர்.

பாபா இதை, அனைவரையும் விட நன்றாக அறிவார், ஆனாலும் அவர் அதை குறிப்பிட்ட நோக்கத்துடன் செய்து, எதிர்வரும் விளைவை எண்ணி அகமகிழ்ந்தார். ஏனெனில், '**இது அவருடைய ஆன்மீகப் பணிக்குத் தேவையான எதிர்ப்பையும், அதி நுட்பமான சூழ்நிலையையும் உருவாக்குவதாக**' அவர் கருதினார். அவர் விளக்கியது போல, "**வில்லின் சரம் எவ்வளவு பின்னால் இழுக்கப்படுகிறதோ, அவ்வளவு அதிக தூரம் பாய்ந்து செல்ல, அம்புக்கு சக்தி இருக்கிறது; அதிக அளவிலான எதிர்ப்பு, எனது பணிக்கு அதிக சக்தியைத் தருகிறது; மனிதகுலத்தின் நலனுக்காக, நான் இதைச் செய்யவேண்டியது அவசியம்**." அவருடைய அடுத்தக் கட்ட பணியை மனதில் கொண்டு, அமைதியாக, சீனாவிலிருந்து ஐரோப்பாவிற்குப் புறப்பட்டுச் சென்றார்.

ஐரோப்பா செல்லும் வழியில், அவர் இந்தியாவில் இருந்த குறுகிய நேரத்தில், நெருங்கிய ஆண், பெண் மண்டலியை சந்தித்து, அனைத்தையும் விளக்கிக் கூறி, செப்டம்பர் மாதத்தில் திரும்பி வருவதாகத் தெரிவித்தார். அன்பிற்குரிய பாபாவைத் திடீரென எதிர்பாராமல் சந்தித்ததில் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர். அனைவரும் இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்து வழி அனுப்பி வைத்தனர்.

பாபா லண்டன், நியூயார்க், அல்லது ஹாலிவுட்டில் எங்குச் சென்றாலும், அனைவரையும் அன்பால் ஈர்த்து அரவணைத்தது, அவர்களைப் பிரியும் வேளையில் தாங்கொணா வலியை ஏற்படுத்துவது எல்லா இடத்திற்கும் பொதுவானது.

பல்லாயிரக்கணக்கானோர் அவரைப் பார்த்து, போற்றி, வணங்கி, முன்பு வேறு எவரையும் நேசிக்காத அளவுக்கு அவரை நேசித்தனர். அவரது அழகான உருவம், அற்புதமான ஆளுமை மற்றும் அவரிடமிருந்து வெளிப்படும் ஆன்மீகம், அனைத்து இதயங்களையும் கவர்ந்தன. இது கடந்து செல்லும் கண்மூடித்தனமான காதல் அல்ல, ஆனால் திறந்த, நேர்மையான, அன்பான இதயங்களுடன் அவரை அணுகிய அனைவரின் வாழ்க்கையையும், வழிமுறைகளையும் உண்மையில் மாற்றியமைக்கும் ஒரு தெய்வீக உத்வேகம்; அவர்களின் அனுபவங்கள் வாய்மொழியாகவும், வார்த்தைகளால் வெளிப்படுத்தப்பட்ட தெய்வீக அன்பின் உணர்வுகள் நிறைந்த கடிதங்களாலும் நிரூபணமாகின்றன.

அவை வாசகர்களை அவர்களின் உணர்வின், அன்பின் ஆழத்தில் மூழ்கச் செய்யும்.

ஏழை விவசாயிகள் முதல் திறமையான கலைஞர்கள், கவிஞர்கள், தத்துவவாதிகள், விஞ்ஞானிகள், அரசியல்வாதிகள், விளம்பரதாரர்கள், ஊடகவியலாளர்கள் வரை மக்கள் கிட்டத்தட்ட எல்லா தொழில்களிலிருந்தும், வாழ்க்கைத் துறைகளிலிருந்தும் வந்தனர். அவரை சந்தித்து அவருடன்

பேசியதற்கும், அவர்கள் அனைவரும் மிகவும் நன்றி உணர்வோடு நடந்துகொண்டனர்; பலர் அவரை வார்த்தைகள் இல்லாமல் மௌனமாக சந்தித்தனர். அனைவரும் பாபாவின் அளவிலா அன்பால் வெகுவாக ஈர்க்கப்பட்டனர். சிலர் அவரை 'உயிருடன் நடமாடும் இயேசு!' சிலர் 'புதிய படைப்பின் இறைவன்!' மற்றும் பலருக்கு அவர்களின் 'இதயங்களில் வீற்றிருக்கும் சிலையாகவும்' அல்லது 'தெய்வீக அன்பிற்குரியவர்' என்றும் வர்ணித்தனர். மேலும், 'இதற்கு முன்னர் இப்படி ஒரு நபரை இந்த யுகத்தில் கண்டதில்லை' என்று அன்புடன் அறிவித்தனர்.

ஆன்மீகத்தை அரிதாகப் புரிந்து கொள்ளும், மேலும் அதைப் பொதுவாக அவதூறாகப் பேசும், ஆங்கில, அமெரிக்க பத்திரிகைகள் கூட, பாபாவின் மேற்கத்திய வருகையை எதிர்நோக்கி வெறிபிடித்தவர்களாக இருந்தனர். அவரது போதனைகள், சந்திப்புகள், செயல்பாடுகள் பற்றி பத்திரிகைகளில் சிறப்பாக விமர்சித்துள்ளனர். அவருடனான தனிப்பட்ட நேர்காணல்களுக்குப் பிறகு நிருபர்கள் வெகுவாக ஈர்க்கப்பட்டனர். நிருபர்களின் மனநிலையையும், அணுகுமுறையையும் அறிந்தவர்கள், பாபா மற்றும் அவரது நடவடிக்கைகள் குறித்து, அவர்கள் எவ்வாறு இவ்வளவு சாதகமாகப் பேசியிருக்கிறார்கள் என்பதை நினைத்து மிகவும் ஆச்சரியப்பட்டனர்; தொடர்ந்து மூன்று மாதங்களுக்கும் மேலாக அவரது நேர்காணல்கள் புகைப்படங்களுடன் வெளிவந்த வண்ணம் இருந்தன.

'கடந்த காலங்களில் எந்தவோர் ஆன்மீக ஞானிக்கும் இதுபோன்ற வரவேற்பும், விளம்பரமும் வழங்கப்பட்டதா, அல்லது எல்லா நாடுகளின் அனைத்து வகுப்பு மக்களுக்கும் பரவலாகத் தெரிந்தவரா' என்று நினைத்து அனைவரும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.

மெஹர் பாபா பேசாமல் இருந்தாலும், பிறருக்கு அது ஒரு குறைபாடாகத் தோன்றவில்லை. அவரது மௌனம் புத்துணர்வு ஊட்டி, ஈர்க்கக்கூடியதாகவும், ஊக்கமளிக்கும் விதத்திலும் இருந்தது. ஏழு ஆண்டுகளாக பாபா பேசவில்லை என்று நாங்கள் சிலருக்கு விளக்கும்போது, அவர்கள், "ஆனால், அவர் பேசத் தேவையில்லை! அவருடைய கண்களைப் பாருங்கள் அவைப் பேசிக்கொண்டே இருக்கின்றன! அவருடைய முகத்தைப் பாருங்கள், அது அனைத்தையும் வெளிப்படுத்துகிறது!" என்றனர்.

அவர் தனது எழுத்துப்பலகை வழியாக, ஆயிரமாயிரம் பேருக்கு சொற்பொழிவு வழங்கியுள்ளார் என்று நாங்கள் தெரிவித்த போது, பிறரால் அதை நம்ப முடியவில்லை. "எவ்வளவு அற்புதம்" என்று அனைவரும் ஆச்சரியமடைந்தனர். "அற்புதம்.. ஆச்சரியம்.. பிரம்மாதம்..!" இவை அனைத்தும் கிட்டத்தட்ட அனைவரும் கூறும் பொதுவான சொற்கள்; இவற்றின் தாக்கம் நம் இதயங்களில் பதிக்கப்பட்டுள்ளது."

இவை, அவரைப் பார்க்க வந்து, நேசித்த பல இதயங்களிலிருந்து தன்னிச்சையாக வெளிப்பட்ட வார்த்தைகள். "அவரைப் பார்ப்பது என்பது, ஒருவருக்கு இதயம் இருந்தால் அவரை நேசிப்பது போலாகும்" என்று ஒருவர் கூறினார். சத்தியத்தை விரும்பும் பல நேர்மையானவர்களுக்கு, அவர்

உண்மையான நண்பராகவும், வழிகாட்டியாகவும் இருக்கிறார். அவர் அறிவுறுத்தியபடி சில நிமிட தியானம், ஆன்மீகப் பாதையில் முன்னேறும் உந்துதலை அளித்ததாகப் பலர் உணர்ந்தனர். பாபாவின் உதவியின் மூலம் அவர்களின் ஆன்மீகக் கருத்தாக்கத்தின் வளர்ச்சியை அவர்கள் உணர முடிந்தது. மேலும் அவர்கள் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கவும், அவரை முழுமனதாகப் பின்பற்றத் தயாராகவும், மிக்க நன்றியுள்ளவர்களாகவும் இருந்தார்கள்.

13 நாட்கள் கடினமான கடல் பயணத்திற்குப் பிறகு, கைஸர்-இ-ஹிந்த் 1932, ஜூலை 29 அன்று மார்ஸெயில்ஸ் துறைமுகத்தை வந்தடைந்தது. பாபாவை, கிட்டி டேவி, சீனாவிலிருந்து திரும்பி வந்த அவரது சகோதரர் ஹெர்பெர்ட் இருவரும் சந்தித்தனர். 'இத்தாலிய ரிவியரா' (ITALIAN RIVIERA) வழியாக 'ஸான்டா மார்கரிட்டா'வை (SANTA MARGHERITA) நோக்கி அவர்கள் ரயிலில் பயணம் செய்தனர். அடுத்த நாள், குயன்டின் டாட், பாபா திட்டமிட்டதை விட முன்னதாக வந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தார்.

ஸான்டா மார்கரிட்டா, பராக்ஜி (PARAGGI) எனும் இரு குறுநகரங்களுக்கு இடையே, பாபா மற்றும் மண்டலிக்காக 'ஃபியொரென்ஸா' (FIORENZA) என்ற ஒரு தனி வில்லாவை குயன்டின் வாடகைக்கு எடுத்திருந்தார்; பாபா, இதைப் பெரிதும் விரும்பினார்.

மெஹர் பாபாவின் வருகைக்கு முன்னரே, மார்கரெட் கிராஸ்க், மேபெல், டிலியா, மின்டா, ஸ்டிஃபனி, கிம் ஆகியோர் வந்தனர்.

ஸான்டா மார்கரிட்டாவின் சுற்றுப்புற சூழ்நிலைகள் இயற்கை வளம் மிகுந்து அருமையாக இருந்தது - இளம் சூரியன், நீல கடல், அற்புதமான கடற்கரை காட்சிகள்.

அவர்களின் வீட்டின் பின்னால் திராட்சைத் தோட்டங்களும், காடுகள் வழியாக நிழலாடிய பாதைகளைக் கொண்ட பச்சை மலைகளும் இருந்தன. குழுவிலிருந்த அனைவரும் காலையில் பாபாவுடன் 'கால்டோ பெடல்' (GALTO PEDALE) பாறைகள் சூழ்ந்த கடற்கரைக்குச் செல்வது வழக்கம். காக்கா, கடற்கரையில் பாபாவின் தலைக்கு மேல் ஒரு பெரிய குடையைப் பிடித்திருந்தார். பலர் கடலில் நீந்தி மகிழ்ந்தனர்; பாபா தண்ணீரில் அலையோடு நடந்து அலைந்தார். இரண்டு முறை பாபாவை ஒரு சிறிய படகில் கடலுக்குள் அழைத்துச் சென்று அவரைச் சுற்றி நீந்தி வந்தனர்.

பல உள்ளூர் இத்தாலிய மக்கள் பாபாவைப் பற்றி அறிந்து, அவர் முன்னிலையில் அமைதியாக அமர்ந்திருக்க வீட்டிற்கு வந்தனர். மீனவர்களும் படகுகளில் பாபாவை வெளியே அழைத்துச் செல்ல ஆர்வமாக இருந்தனர்; பாபாவும் அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார்.

"கோபியர்களும் தங்கள் கிருஷ்ணனின் பிரிவைத் தாங்கமுடியாமல் அவதியுற்றனர்; பாபாவை மீண்டும் சந்தித்ததும், இறை கீதத்தின் இனிமையான எதிரொலிகள் இத்தாலிய வில்லா முழுவதும் எதிரொலித்தன" என்று காலம் பறைசாற்றியது.

பாபாவின் அறைக்கு வெளியே இருந்த பால்கனியிலிருந்து கடலும்,

சுற்றியுள்ள பாறைகளின் காட்சியும் கண்ணைப் பறித்தன. அனைவரும் பெரும்பாலும் பால்கனியில் இரவில் அமர்ந்து, இசைத்தட்டுகளை ரசிப்பதும், கேரம் விளையாடுவதும் வழக்கம். சில மாலைகளில், திரைப்படங்கள், இத்தாலிய மொழியில் இருந்தாலும், பாபா அனைவரையும் உள்ளூர் திரையரங்கிற்கு அழைத்துச் செல்வதுண்டு. பாபா திரைப்படம் பார்க்க அனைவருடன் செல்ல விரும்புவதற்கான சிறப்புக் காரணங்கள் இருந்தன; திரள் திரளான கூட்டத்தினரிடையே எப்பொழுதும், பாபா அவரது ஆன்மீகப் பணியை வெகு இலகுவாகச் செய்து முடிக்கிறார். இதர வேளைகளில், அவர்கள் வளைகுடாவின் திறந்த வெளியில் அமைந்த லீனா கஃபேக்குச் (LINA'S OPEN-AIR CAFÉ) சென்று காஃபி அருந்துவது அல்லது ஐஸ் கிரீம் சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டனர். இங்கு தங்கியிருந்த போது, பல வருட கடுமையான சைவ உணவுக்குப் பிறகு காக்கா, சாஞ்சி இருவரையும் மீன் உண்ண பாபா அனுமதித்தார்.

"இது நெருக்கமான உறவைப் பிரதிபலிக்கும் அற்புதமான விடுமுறை," டிலியா நினைவு கூர்ந்தார், "உண்மையில் இதை ஒரு சகவாசம் என்று கூறலாம். இது ஓர் அசாதாரணமான சூழ்நிலையாக இருந்தது" என்று சாஞ்சி குறிப்பிட்டார்; ஏனெனில் அதுவரை, இந்தியாவில் நெருங்கிய சில பெண் மண்டலிக்கு மட்டுமே இத்தகைய சகவாசத்தை, பாபா வழங்கினார்.

மார்கரெட் நினைவு கூர்ந்தார், "இது பாபாவுடனான எங்களின் மிக அழகான, இனிமையான நேரம். முதலில், பாபா எந்தவிதமான 'சிக்கலையும்' தூண்டவில்லை; எங்களை மிக இலகுவாக நடத்திச் சென்றார்; எங்களிடம் கடுமையான ஒழுக்கத்தைக் கோரவில்லை. அவர் வற்புறுத்திய சில கட்டுப்பாடுகளை நாங்கள் இலகுவாக வெல்ல முடிந்தது.

"எங்களுக்கு எல்லாமே ஒரு சொர்க்க உலகின் கனவு போல் இருந்தது. பாபாவுடன் மணல் மீது அமர்ந்து, அவருடன் காடுகளில் அலைந்து திரிந்தது, நீல நிற மத்தியதரைக் கடலின் படிகங்களின் அழகை ரசித்தது - இவை அனைத்தும் பாபாவின் இனிமையால் நிறைந்த கனவு போல் இருந்தது."

இந்த நேரத்தில் பாபா, வழக்கத்திற்கும் மாறான விதிவிலக்காக, மிக்க மகிழ்ச்சியாகத் தோன்றினார்; மேலும் **'என்னை நேசியுங்கள், கவலைப்பட வேண்டாம்'** என்றும் குழுவிடம் திரும்பத் திரும்பக் கூறினார். அவர் தனது அன்பர்களை எண்ணற்ற வழிகளில் அவருடன் நெருங்கி பழகச் செய்து, அவர்களின் விளையாட்டுத் தோழர், நண்பர், குழந்தை மற்றும் தந்தையாக மாறினார். அதே வேளையில், ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் அவருக்குச் 'சிறப்பு' மிக்கவர் போல் உணர முடிந்தது. "இது எங்களை உடன்பிறப்புகளாக வாழத் தூண்டுவதற்கான அவரது சிறப்பான வழி என்று நான் நினைக்கிறேன்" என மின்டா குறிப்பிட்டார்.

மின்டா, இதர நண்பர்கள் வருவதற்கு முன்பு, மாடிக்குச் சென்று, சில நிமிடங்கள் பாபாவுடன் தனியாக இருப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவர், கோபியர்களில் இளையவர், இந்தப் பயணத்தில் சற்று அதிகமாகவே எதிர்பார்க்கத் தொடங்கினார். உதாரணமாக, காக்கா இரவு கண்காணிப்பாளராக

இருந்தபோது, அவருடன் தானும் அறையில் இருக்க விரும்புவதாகக் கோரி பாபாவைத் தொந்தரவு செய்தார். கடைசியாக, பாபா ஒப்புக்கொண்டார். ஆனால் அவர் உள்ளே அமர்ந்து, தூக்கத்தைத் தவிர்க்க காக்காவுடன் உரையாட முயன்றது, பாபாவிற்கு மேலும் தொந்தரவாக இருந்தது. சில மணி நேரம் கழித்து, பாபா அவரை, அறைக்குச் செல்லுமாறு கூறினார். மின்டா இதை, அதிக சலுகையை அடையப் பெற்றதாக உணர்ந்து மகிழ்ச்சி அடைந்தார்.

ஆட்ரே வில்லியம்ஸ் (AUDREY WILLIAMS) என்ற திறமையான, பதினெட்டு வயது மாணவி மார்கரெட்டின் நாட்டிய குழுவில் இருந்தார்; இவரை இத்தாலிக்கு வரக்கூறி பாபா தொலைத்தந்தி அனுப்பியிருந்தார். கடந்த மே மாதம் லண்டனிலிருந்து ஸவுத்ஹாம்டன் (SOUTHAMPTON) செல்லும் ரயில் பயணத்தின் போது (பாபா அமெரிக்காவிற்குச் சென்று கொண்டிருந்தார்) ஆட்ரேயைப் பற்றி, மார்கரெட், பாபாவிடம் குறிப்பிட்டார். அந்த நேரத்தில், பாபா, "**ஆமாம், நீங்கள் என்னிடம் அழைத்து வர வேண்டியவர் அவரே! நான் அவரைத்தான் பார்க்க வேண்டும்!**" என்றார். ஆட்ரேயை பாபா அழைப்பதற்கான மற்றொரு காரணம், ஸான்டா மார்கரிட்டாவில் தன்னுடன் இருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை பன்னிரண்டாக இருப்பதை பாபா விரும்பினார்.

புதியவர் என்றாலும், ஆட்ரே விரைவில் தெய்வீக அன்பின் அரவணைப்பில் ஈர்க்கப்பட்டார். 'மெஹர் பாபாவைப் பற்றி எனது மனதில் எழுந்த முதல் எண்ணம், அவர் மிகுந்த இரக்கமும், மக்களைப் பிரியப்படுத்தி மகிழ்ச்சியடையச் செய்யும் குணமும் படைத்தவர்' என்று அவர் நினைவு கூர்ந்தார். பின்னர், "அவரிடம் 'ஈர்க்கும் சக்தி' இருந்தது, அதாவது, அவர் ஒருபோதும் கட்டளை இடவில்லை என்றாலும், அவருடைய விருப்பங்களை நிறைவு செய்ய நீங்கள் கட்டுப்பட்டவராக உணர்ந்தீர்கள். (ஒவ்வொரு நாள் இரவும் பத்து மணிக்கு, படுக்கைக்குச் செல்லும்படி அவர் என்னிடம் கூறியதை நான் தானாகவே செய்கிறேன்!)"

பாபாவின் இந்தப் பயணத்திற்கான ஒரு காரணம், அவர் இத்தாலியில் எங்கேயேனும் 24 மணிநேரம் ஏகாந்தவாசம் மேற்கொள்ள விரும்பினார்; மேலும் ஸெயிண்ட் ஃபிரான்ஸிஸ் (SAINT FRANCIS) உடனான தொடர்பு காரணமாக, அஸிஸியை (ASSISI) இந்த நோக்கத்திற்காகத் தேர்வு செய்தார். ஹெர்பெர்ட் டேவியிடம் பாபா, 1932, ஆகஸ்ட் 1 அன்று ஏகாந்தவாசத்திற்கு உகந்ததாக ஒரு குகையைத் தேடிக் கண்டுபிடிக்க அங்கு அனுப்பி வைத்தார். இதற்கிடையில், பாபா, ரெப்பாலோ (RAPALLO), போர்டஃபினோ (PORTOFINO) மற்றும் ஸான்டா மார்கரிட்டாவிற்கு (SANTA MARGHERITA) அருகிலுள்ள பிற இடங்களையும் பார்வையிட்டார்.

கிட்டி டேவி, பாபாவை அஸிஸிக்கு காரில் ஆகஸ்ட் 6 அன்று அழைத்துச் சென்றார். பாபாவுடன் சாஞ்சி, காக்கா, குயன்டின், ஸிக்னொர் பவேஸ் (வில்லா

ஃபியொரென்ஸாவின் – VILLA FIORENZA உரிமையாளர், வாகனம் ஓட்டியவர்) ஆகியோர் தேவையான பொருட்களையும் எடுத்துச் சென்றனர்.

பாபா புறப்படும் வரை அவருக்கு ஒரு நிமிட நேரம் கூட ஓய்வில்லை. குழுவில் ஒவ்வொருவருக்கும் அவர் வலியுறுத்த வேண்டிய அறிவுறுத்தல்கள் பல இருந்தன. அனைவரையும் தனது அறைக்கு அழைத்து, விழித்திருக்கச் சொன்னார். கண்களில் தொலைதூர பார்வையுடன், பாபா கைகளால் காற்றில் தொடர்ந்து சைகை செய்துகொண்டே படுக்கையில் படுத்திருந்தார். (அவரது விரல்கள் இப்படி நகரும்போது, அவர் ஒரு முறை விளக்கியதற்கிணங்க, உத்தரவில் தனது 'முத்திரையைப்' பதிப்பதற்கு சமம் என்று விளக்கினார்.)

அஸிஸியில் அவரது பணியைத் தொடங்குவதற்கு முன்னர், இரண்டு விஷயங்களில் ஏதாவது ஒன்று நடக்கும் என்று பாபா அங்கு இருந்தவர்களுக்கு விளக்கினார்: "**ஒன்று, புயல் வரலாம் அல்லது நான் நோய்வாய்ப்படலாம்**." அவரது வார்த்தைகளுக்கு இணங்க, பாபா அதீத வயிற்று வலியால் அவதிப்பட்டார், இரவு முழுவதும் அமைதியின்றி படுக்கையில் ஒரு புறத்திலிருந்து மறு புறத்திற்கு வேதனையில் உருண்டு புரண்டார். காலம் இதை இப்படிப் பார்த்தது: "அவதார புருஷர் அனுபவிக்கும் துன்பம் விவரிக்க முடியாதது! அவர் பிரபஞ்சத்திற்காக எத்தனை துன்பத்தைத் தாங்கிக் கொள்கிறார் என்பதை நாம் எவ்வாறு புரிந்து கொள்ள முடியும்?" அன்பிற்குரியவர் துன்பப்படுவதைக் கண்டு, அவரது அன்பர்களின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

பாபா அனுபவித்த வலி மேலும் அதிகரித்தது, "**நான் தாங்கிக் கொண்டிருக்கும் வலி, ஒரு தாய் குழந்தையை ஈன்றெடுப்பதைப் போன்றது**" என்று குறிப்பிட்டார். பாபாவின் முகத்தில் தோன்றிய வெளிப்பாடு, இயேசு சிலுவையில் துன்பப்படுவதைத் சித்தரிக்கும் ஓவியங்களை அவர்களுக்கு நினைவூட்டியது.

அவர்களில் சிலர், "பாபா, உங்கள் வலியை எங்களுக்குக் கொடுங்கள்; நாங்கள் உங்களுக்காகத் துன்பப்பட தயாராக உள்ளோம்!" என்றனர். ஆனால் அவதார புருஷர் மட்டுமே அத்தகைய வலியைத் தாங்கிக்கொள்ள முடியும், அவர் முழுப் படைப்பிற்காகவும் அதைத் தன் மீது ஏற்றுக்கொள்கிறார்! ஆனாலும், அன்பர்களின் இருதயங்களிலிருந்து வெளிப்பட்ட இந்த ஏக்கம், அவருக்கு மகிழ்ச்சியை அளித்ததோடு, அவருடைய துன்பத்தின் தீவிரத்தைத் தளர்த்தியது.

மெஹர் பாபா மண்டலியுடன் காரில் சென்று கொண்டிருந்த போது, பாபாவின் வலி படிப்படியாகக் குறைந்தது; ஆனால் குயன்டினும், சாஞ்சியும் உடல் நலம் இல்லாமல் ஆயினர்; பாபாவின் அருளால் இரண்டு முறை விபத்து தவிர்க்கப்பட்டது. ஆகஸ்ட் 6ஆம் நாள் காலையில் பீஸா (PISA) நகரின் 'சாய்ந்த' கோபுரத்தைக் (LEANING TOWER) கடந்து சென்றனர். மதியம் இரண்டு மணியளவில், அவர்கள் 'ஸியனா'வை (SIENA) சென்றடைந்தனர்.

மாலை ஐந்து மணிக்கு அஸிஸி (ASSISI) வந்து, மவுண்ட் நகரத்திற்கு வெளியே, ஸெயின்ட் ஃபிரான்சிஸ் பயன்படுத்திய உண்மையான குகையைக் கண்டுபிடித்த ஹெர்பெர்ட் அவர்களை சந்தித்தார். 'ஸுபாஸியோ' மலையில் (MT.

SUBASIO) பல குகைகள் இருந்தன, ஆனால் ஹெர்பெர்ட் இந்தக் குறிப்பிட்ட குகையை மறுபடியும் அடையாளம் காணவும், பிறர் அதை ஆக்கிரமிப்பதைத் தடுக்கவும், மரக் கிளைகளால் மூடி மறைத்திருந்தார்; அதில், பாபாவின் வருகைக்கு முன்னதாக தினமும் நான்கு மணி நேரமும், முந்தைய நாளில் எட்டு மணி நேரமும் ஏகாந்தவாசம் கடைப்பிடிக்குமாறு அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. மாலை 7 மணியளவில் ஹெர்பெர்ட் அவர்களை அந்தக் குகைக்கு அழைத்துச் சென்றார்.

சூரியன் மறைந்து கொண்டிருந்தது, பறவைகள் கூடுகளை நோக்கிப் பறந்தன. பாபா உடனடியாகக் குகைக்குள் நுழைய வேண்டும், ஆனால் அதற்கு முன்னர், '**அவரை எவரும் பார்க்க வேண்டாம், அனைத்திற்கும் மேலாக அவரை எவரும் தொடக்கூடாது**' என்று தனது தோழர்களுக்கு அறிவுறுத்தினார். மெஹர் பாபா, அவருடன் புனித ஃபிரான்சிஸின் ஜெப மாலையை எடுத்துச் சென்றார்.

சாஞ்சி, ஹெர்பெர்ட் ஆகியோர் குகைக்கு வெளியே இரவு பாது காவலர்களாகவும், காக்காவும் குயன்டினும் காலையில் அவர்களை விடுவிக்கவும் முடிவு செய்யப்பட்டது. காக்கா, குயன்டின் இருவரிடமும் நகருக்குத் திரும்பி வந்து, கத்தோலிக்க வெகுஜன பிரார்த்தனை கூட்டத்தில் பஸிலிக்காவின் (BASILICA) சமாதியில் காலை 7 மணிக்குச் சென்று, ஸெயின்ட் ஃபிரான்சிஸின் கல்லறையை முத்தமிட்டு, பின்னர் ஒன்பது மணிக்குள் குகைக்கு வரவேண்டும் என்று பாபா அறிவுறுத்தினார். ஸிக்னொர் பவேஸ் (SIGNOR PAVESE) என்பவர் அவர்களின் உடைமைகளை கவனிக்க வேண்டும். ஒருவரும் எதுவும் உண்ண வேண்டாம் எனவும், பாபா குகையிலிருந்து வெளியே வரும் வேளையில் உபவாசத்தை முடித்துக் கொள்ளலாம் எனவும் கட்டளையிடப்பட்டது. நள்ளிரவில், சாஞ்சி, ஹெர்பெர்ட் இருவரும் பாபாவிற்கு, தேநீர் தயார் செய்து, குகையின் நுழைவாயிலுக்கு அருகில் வைத்தனர்.

அடுத்த நாள், ஆகஸ்ட் 7, ஞாயிற்றுக்கிழமை, காக்காவும் குயன்டினும் பத்து மணிக்கு, கண்காணிப்புப் பணியைத் தொடர குகைக்கு வந்ததும், சாஞ்சி, ஹெர்பெர்ட் இருவரும் ஓய்வெடுக்க ஹோட்டலுக்குச் சென்றனர். நண்பகலில், குயன்டின் ஒரு திடுக்கிடும் சத்தத்தைக் கேட்டு, பாபாவின் எச்சரிக்கையை மறந்து, குகையை நோக்கிப் பார்த்தார். உள்ளே, பாபா கண்களை மூடிக்கொண்டு, சூரியனை எதிர்கொண்டு விசித்திரமான ஓசைகள் எழுப்புவதைக் கண்டார். ஓர் அற்புதமான அதிர்வு காற்றை நிரப்பியது. பாபாவின் உத்தரவை நினைவில் கொண்டு, குயன்டின் உடனடியாகக் பார்வையை விலக்கிக் கொண்டார்.

மதிய வேளையில் அனைத்தும் அமைதியாக இருந்தது. பின்னர் ஒரு மணிக்கு, பாபா கைகளைத் தட்ட, காக்காவும் குயன்டினும் குகைக்கு முன்னால் இருந்த கிளைகளை அகற்றினர். பாபா, காக்காவை அஸிஸிக்குச் சென்று சாஞ்சி, ஹெர்பெர்ட் இருவரையும் 4:30 மணிக்கு வருமாறு அறிவிக்கக் கூறினார். குகையிலிருந்து வெளியே வந்த பாபா, குயன்டினிடம் '**அவருக்கு அருகில் வரவோ, அவரைத் தொடவோ கூடாது**' என்று கட்டளையிட்டார்.

குயன்டின் பின்னால் நடந்து செல்ல, பாபா மறுபடியும் குகைக்குள் நுழைவதற்கு முன்னர், அரை மணி நேரம் மலையடிவாரத்தைச் சுற்றி வந்தார்.

கோடை தினம், அதிக வெப்பமாக இருந்தாலும், காற்று வீசியது. காக்கா, சாஞ்சி, ஹெர்பெர்ட் மூவரும் மாலை 4:30 மணிக்கு வந்தனர். ஒரு மணி நேரம் கழிந்ததும், அறிவுறுத்தல்களின்படி, குயன்டின் பாபாவை அழைத்தார். பாபா வெளியே வந்த போது, மயக்க நிலையில் உடல் உணர்வற்றவர் போலத் தோற்றமளித்தார். சில கணங்களுக்குப் பிறகு, பாபா அவர்களை நோக்கி அடியெடுத்து வைத்து, **“என்னுடைய இந்த ஏகாந்தவாசத்திற்குப் பிறகு, முதலில் என்னோடு பேசிய நீங்கள் அனைவரும் மிகவும் அதிர்ஷ்டசாலிகள்”** என்று சைகையால் தெரிவித்தார்.

பின்பு பாபா அவர்களை குகைக்குள் அழைத்துச் சென்று விளக்கினார்:

**ஆன்மீக ரீதியில், ஆன்மீக உறுப்பினர்களின் ஒரு பெரிய கூட்டம் இங்கு நடைபெற்றது. இது உலகிற்கு வரவிருக்கும் மிகப்பெரிய எழுச்சியின் காரணமாகும். இது எல்லா காலங்களிலும் மிகப்பெரிய எழுச்சியாக இருக்கும்.**

**இந்தக் கூட்டத்தில் எனது ‘அசலும், உண்மையுமான சுயத்தில்’ வெளிப்படுவேன், அடுத்த பிப்ரவரியில் பேசுவேன் என்றும் முடிவு செய்யப்பட்டது. எல்லா இடங்களிலும் பெரிய அளவில் மாற்றங்கள் ஏற்படும். ஏற்கனவே உருவாகியுள்ள எனது வட்டத்து சீடர்கள், இறைநிலையை எய்துவார்கள்; அவர்களின் கடமைகள் வெவ்வேறு திசைகளில் ஆரம்பமாகும். இதுவரை இல்லாத மிகப்பெரிய ஆன்மீகப் புரட்சி ஏற்படுவதால், அனைத்து மாற்றங்களும் உலகில் இதுவரை இல்லாத ஓர் எழுச்சியை ஏற்படுத்தும்.**

**எனது வட்டத்தின் உறுப்பினர் ஒருவர்** (குஸ்தாஜி) **இறைநிலையை அடைந்து உடலைத் துறந்துவிடுவார்.**

**குருநாதர்கள், அவதார புருஷர்கள் அனைவருக்கும் அவர்களின் சொந்த வட்ட அமைப்புகள் உள்ளன. அவதார புருஷரின் வட்ட அமைப்பு எப்போதுமே ஒரே மாதிரியானது** (ஒரே வகையைச் சார்ந்தது), **அவரது முந்தைய அவதார தோற்றங்களின் போது, அவருடன் தோன்றி பணிபுரிந்த அதே வட்ட அமைப்பு; அவதார புருஷர்கள் இருப்பதைப் போலவே சீடர்களும் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு பெயர்களைக் கொண்டுள்ளனர். உதாரணமாக, நான் இயேசுவாக இருந்தபோது, குயன்டின், ஹெர்பெர்ட் இருவரும் வகிக்கும் பாகத்தை வேறு இருவர் செய்தனர். நான் கிருஷ்ணராக இருந்தபோது, இந்த இருவரும் நாரத், சுதாமா என்ற பெயர்களில் இருந்தனர். சில வட்ட உறுப்பினர்கள் ஒரே ஆளுமை, முகத்தோற்றம், உருவம், வடிவம் கொண்டவர்களாகவும், ஆனால் அவர்களின் பெயர்கள், வெவ்வேறு அவதார காலங்களில் வேறுபட்டும் இருக்கின்றன.**

**ஆனால் சத்குருக்களின் வட்ட அமைப்புகள் எப்போதும் வேறுபட்டவை. ஒரு சத்குருவின் வட்டம் 12 உறுப்பினர்களை உள்ளடக்கும்**

**வேளையில், அவதார புருஷரின் வட்டம் 13 உறுப்பினர்களால் ஆனது; அதிகமான ஒருவர் அவரது 'இருண்ட பக்கம்' என்று அழைக்கப்படுகிறார். அவதார புருஷரும் அவரது இருண்ட பக்கமும் வெவ்வேறு ஆளுமைகளைக் கொண்டிருந்தாலும், அவர்களின் கடமைகளும் பணியும் ஒன்றே.**

**இதைத் தவிர, அவதார புருஷரின் திருத்தூதர்கள்** (APOSTLES), **உண்மையில் ஐந்து பேர் உள்ளனர், ஆனால் ஒருவர், ஒரு ஜோடி இரட்டையர்களாக** (**ஹெர்பெர்ட், குயன்டின் இருவரையும் சுட்டிக்காட்டி**), **இருப்பதால் வட்டத்து உறுப்பினர்கள்** 14 **ஆவர். இந்த இரட்டை திருத்தூதர்கள், அனுபவத்தில் இரண்டு வெவ்வேறு தனி நபர்களாக இருந்தாலும், அவர்களின் பணியில் இருவரும் ஒன்றுதான்; இதன் பொருள் என்னவெனில், அவர்கள் ஒரே பணியைச் செய்கிறார்கள், ஒரே கடமைகளைக் கொண்டுள்ளனர்.**

**ஒவ்வொரு சத்குரு, அவதார புருஷர் வட்டத்திலும் முறையே நான்கு திருத்தூதர்களும் எட்டு உறுப்பினர்களும் உள்ளனர். எனது மூன்று திருத்தூதர்கள் இப்போது என்னுடன் இருக்கிறார்கள்: காக்கா, சாஞ்சி இருவருக்கு சமம், மற்றும் ஹெர்பெர்ட், குயன்டின் இருவரும் இரட்டையர்களைக் குறிப்பதால் ஒன்றாகக் கருதப்படுகிறார்கள்.**

இயற்கையாகவே, பாபாவின் விளக்கம் குயன்டின், ஹெர்பெர்ட் ஆகியோரின் அர்ப்பணிப்பு, அன்பு மற்றும் பாபாவுக்கான சேவையைப் பெரிதும் ஊக்குவித்தது.

எவ்வாறாயினும், பாபா தனது வட்டத்தின் உறுப்பினர்களாக, அதே ஆத்மாக்கள் திரும்பி வருவதைக் குறிக்கவில்லை, ஆனால் ஒரே வகையான ஆத்மாக்கள் மட்டுமே என்பதை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். அவதார புருஷர் வட்டத்தில் 12 பேர் 10 மடங்காகப் பெருக்கப்படுகிறார்கள், இப்படி 120 உறுப்பினர்கள்; மொத்தம் 122 உறுப்பினர்களைக் கொண்ட இரண்டு 'பின் இணைப்புகள்' (மெஹரா மற்றும் மணி) என்று பாபா பின்பு விளக்கினார்.

குருநாதர் தனது வாக்குறுதிகளை எவ்வாறு வழங்குகிறார், நிறைவேற்றுகிறார் என்பது பற்றி, பாபா அவர்களுக்கு விளக்கினார்:

**குருநாதர்கள் வழங்கும் வாக்குறுதிகள், ஒருபோதும் தெளிவற்றதாகவோ அல்லது நிறைவேறாமலோ இருக்காது. அவை எப்போதும் சரியான நேரத்தில், உண்மையாகி நிறைவேறும். ஆனால் அந்த நேரத்தைப் பற்றிய கேள்வி, அவை வழங்கப்படும் நிலைமைகள் அல்லது சூழ்நிலைகளைப் பொறுத்தது. குருநாதர்கள் தங்கள் வாக்குறுதிகளை வழங்கும்போது, அவை ஆழ்மன, அல்லது சூட்சும** (பிராணம்) **அல்லது பௌதீக உடல் தளங்களிலிருந்து வழங்கப்படுகின்றன, இதனால் அவை நிறைவேறும் நேரமும் வேறுபடுகின்றன.**

**எடுத்துக்காட்டாக, முழு வேகத்தில் ஓடும் ஒரு ரயிலை நிறுத்த, அதன் பிரேக்குகளைப் பயன்படுத்தினால், வேகத்தின் காரணமாக, ரயில் உடனடியாக நிற்காமல் படிப்படியாக வேகம் குறைகிறது. அதுபோல், எனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான காலம், இந்த வேகத்தைப்**

**பொறுத்தது. பௌதீகத் தளத்திலிருந்து நான் ஒரு வாக்குறுதியை வழங்கினால், அது குறிப்பிடப்பட்ட நேரத்தில் சரியாக நிறைவேற்றப்படும். சூட்சும தளத்திலிருந்து வழங்கப்பட்டால், வேகம் அல்லது நிறைவேற்றும் சக்தி பாதியாகி, வாக்குறுதி ஒரு குறிப்பிட்ட அதிக நேரத்தை எடுக்கும், ஏனெனில் அது மேல்நிலை தளத்திலிருந்து வழங்கப்பட்டது. அதே வேளையில், ஆழ்மன தளத்திலிருந்து ஒரு வாக்குறுதி வழங்கப்பட்டால், அது நிறைவேற இன்னும் அதிக நேரம் பிடிக்கும்.**

**இதனால்தான் வெவ்வேறு காலங்களில் நான் அளித்த வாக்குறுதிகள் நிறைவேறும் காலங்களும் வேறுபடுகின்றன. அறியாமை, மேலும் அதன் பின்னால் உள்ள ரகசியத்தைப் புரிந்து கொள்ளும் இயலாமை ஆகியவற்றால், நீங்கள் எனது பணிபுரியும் வழியைத் தவறாகக் கருதுகிறீர்கள். எனது சக்தி மற்றும் நான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் திறன் குறித்து, சிலருக்கு சந்தேகம் இருப்பதற்கு இதுவே காரணம். அவர்கள் பொதுவான அல்லது தனிப்பட்ட முறையில் என்மீது குற்றம் சாட்டுகிறார்கள், என்னைக் கேலி செய்கிறார்கள், அவதூறாகப் பேசுகிறார்கள். ஆனால் நான் எனது பணியை, எனது சொந்த வழியில் செய்து கொண்டிருக்கிறேன், நான் அதைச் செய்யும் முறையை விளக்கவோ வெளியிடவோ மறுக்கிறேன்.**

பேச்சின் தலைப்பை மாற்றி, பாபா தொடர்ந்து விளக்கமளித்தார்:

**ஒரு சத்குரு அல்லது அவதார புருஷர் ஓரிடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்குச் செல்லும்போது, அவர் மக்களுக்கும் இடங்களுக்கும் இடையிலான தொடர்பை விரும்புகிறார், நிறுவுகிறார். சில சமயங்களில் ஆன்மீக ரீதியில் அவர் இதைச் செய்யும்போது, பௌதீக அளவிலான செயல்கள், உதாரணமாக, தகவல் தொடர்புகள் - தொலைத்தந்திகள், கடிதங்கள் மூலமாகவும் அதைச் செய்கிறார். அதனால்தான் சில நேரங்களில் நான் ஓரிடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்கு நீண்ட தொலைத்தந்திகளை அனுப்புகிறேன், அதற்கான எந்தவொரு காரணத்தையும், அவசியத்தையும் நீங்கள் வெளிப்படையாகக் காண முடியாததால், அனைத்தும் முற்றிலும் வீண் என்று நினைத்துக் கொள்கிறீர்கள்! ஆனால் இதன் பின்னணியில் இருக்கும் உண்மையான நோக்கம் யாருக்குத் தெரியும்?**

குகைக்கு வெளியே தரையில் அமர்ந்து, அவர்கள் ரொட்டி, வெண்ணெய், சீஸ், ஸாலட் மற்றும் பழங்களை உண்டனர். துனியைப் போலவே, ஒரு குழி தோண்டி, நெருப்பு வளர்த்தப்பட்டது. துனியிலிருந்து சாம்பல், குகையின் அருகிலிருந்த இலைகள், கிளைகள், கற்களும் சேகரிக்கப்பட்டு, அவர்களுடன் எடுத்துச் செல்லப்பட்டன. பாபா தனது ஆன்மீகப் பணியின் தாக்கத்தில் முற்றிலும் சோர்ந்துபோய், **“குகையில், நான் அனைத்து சத்குருக்கள், புனிதர்கள் ஆகியோருடன் ஒரு சந்திப்பில் இருந்தேன். ஆகவே, மிக உயர்ந்த ஆன்மீகத் தளத்திலிருந்து, பௌதீகத் தளத்திற்கு இறங்குவது என்பது இப்போது எனக்குக் கடினமாக உள்ளது.”**

ஹெர்பெர்ட், குயன்டின் இருவரின் தோள்களில் சாய்ந்து, பாபா மெதுவாக மலையிலிருந்து இறங்கினார், அவர் மயக்கத்தில் இருந்ததைப் போல நடந்து சென்றார். கீழே செல்லும் வழியில், அவர்கள் இருபுறமும் பாபாவைத் தாங்க வேண்டியிருந்தது, இது அவருடைய ஆன்மீகப் பணியின் சுமை, அவரை உடல் ரீதியாக எவ்வளவு பாதித்தது என்பதற்குப் போதுமான சான்றாகும். இருவரின் ஆதரவு பாபாவிற்கு எந்த நிவாரணமும் அளிக்கவில்லை; பாபா அவர்களுக்குத் தெரிவித்தார், **"எனது கால்கள் தரையைத் தொடவேண்டியது அவசியம், நான் நடக்க வேண்டும், ஏனெனில் அப்போதுதான் நான் மிக உயர்ந்த ஆன்மீகத் தளத்திலிருந்து, சாதாரண பௌதீகத் தளத்திற்கு வர முடியும்."**

மலையிலிருந்து கீழே வரும் வேளையில், பாபா உணர்வின் உயர் நிலையில் மயக்கமாகத் தோன்றினார். அவர்கள் அஸிஸியை வந்தடைந்த நேரத்தில், பாபா மிகவும் சாதாரணமாகத் தென்பட்டார். ஹெர்பெர்ட், பாபாவை, அஸிஸி நகரத்தைச் சுற்றிக் காரில், ஸெயின்ட் ஃபிரான்சிஸுடன் தொடர்புடைய முக்கிய இடங்களுக்கு அழைத்துச் சென்றார். பாபா, ஃபிரான்சிஸின் முதல் சீடரான ஃபெர்னார்டோவின் (BERNARDO) வீட்டைக் கடக்கும் வேளையில், வீட்டிற்கு வெளியே இருந்த பாறையைச் சுட்டிக்காட்டி, **"புனித ஃபிரான்சிஸ் இங்கே அமர்ந்து என்னை** (கிறிஸ்துவை) **தியானம் செய்த இடம் இது, இரவு முழுவதும் கிறிஸ்துவின் மீதுள்ள பிரியத்தால் அழுது கொண்டிருந்தார்"** என்றார்.

ஸெயின்ட் ஃபிரான்சிஸின் பஸிலிக்கா (BASILICA) அருகே, ஏறக்குறைய ஒரு மணி நேரம் அமர்ந்து, பின்னர் அஸிஸியிலிருந்து புறப்பட்டனர்.

ஸிக்னர் பவேஸின் நம்பிக்கையற்ற நடைமுறைகளால், பாபா அவரை 'நீர்க்கோழி' (THE WET HEN) என்று செல்லமாக அழைத்தார். திரும்பி வரும் வழியில், ஒரு கார் எதிர் திசையிலிருந்து வேகமாக வந்ததால், மலைச் சரிவுகளில் மீண்டும் ஒரு விபத்து தவிர்க்கப்பட்டது. இதைக்கண்டு ஸிக்னர் பவேஸ் பயந்துபோனார், ஆனால், பாபாவின் ஊக்கத்தோடு, மீண்டும் காரை ஓட்டிச் சென்றார்.

ஆகஸ்ட் 8ஆம் நாள் காலை ஐந்து மணியளவில், அவர்கள் ஃபுளோரன்ஸ் (FLORENCE) நகரைச் சென்றடைந்தனர். தேநீர் அருந்திய பின்பு, பாபா, **"ஜீஸஸ் முதன் முதலில் ஸெயிண்ட் ஃபிரான்சிஸுக்கு, அவரது உண்மையான ரூபத்தில்` காட்சியளித்த இடம், ஒரு நீரூற்றுக்கு அருகில் அமைந்துள்ளது; அதைக் கண்டு பிடிக்க விரும்புகிறேன்"** என்று கூறி, ஒரு வரைபடத்தில் அந்த இடத்தைச் சுட்டிக்காட்டி, **"போர்குண்டோ** (BORGUNTO) **கிராமத்திற்குச் செல்ல விரும்புகிறேன்"** என்று அவர்களுக்கு விளக்கினார்.

பாபா, காக்கா, சாஞ்சி, ஹெர்பெர்ட், குயன்டின் ஆகியோர் போர்குண்டோ மலைக்குச் சென்று, ஓர் உயரமான மலையை நோக்கி வேகமாக முன்னேறினர். இது 'மவுண்ட் மான்டே ஸெஸெரி' (MONTE CECERI) என்று அழைக்கப்பட்டது, ஃபுளோரன்ஸ் நகரம் மலை உச்சியிலிருந்து தெரிந்தது. மலையின் முகப்பிலிருந்து, பாபா ஓர் இடத்தைச் சுட்டிக்காட்டி, ஹெர்பெர்ட்டிடம், **"நான்**

**இந்தியாவிற்குச் சென்ற பின்னர், ஐந்து நாட்கள் நீங்கள் இங்குத் திரும்பி வந்து தங்க வேண்டும்"** என்று அறிவுறுத்தினார்.

பாபா வேறு ஓர் இடத்தைச் சுட்டிக்காட்டி, **"ஸெயின்ட் ஃபிரான்சிஸின் காலத்தில், அங்கே ஒரு நீரூற்று இருந்தது. அதைத் தேடி கண்டுபிடியுங்கள்"** என்று கூறினார்.

ஹெர்பெர்ட், தங்குவதற்கு ஏற்ற இடத்தைத் தேடி அனைவரும் மலையிலிருந்து இறங்கி வரும் வழியில், ஒரு முதியவர் தோன்றினார். பாபா குயன்டினை அனுப்பி விசாரித்த போது, ஆச்சரியப்படும் விதத்தில், அங்கு ஒரு வில்லா வாடகைக்கு இருந்ததைத் தெரிந்து கொண்டார். வில்லா ஆல்பைன் (VILLA ALPINE) என்ற கட்டிடத்தில் பாபா உள்ளே சென்று, அதைப் பார்வையிட்டு அங்கீகரித்தார், பாபா ஐரோப்பாவை விட்டு வெளியேறிய பின்னர், ஐந்து நாட்களுக்கு ஹெர்பெர்ட் அங்கே தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. விரைவில், அனைவரும் நேரடியாக, ஃபுளோரன்ஸ் திரும்பி வந்து ஸான்டா மார்கரிட்டா வந்து சேர்ந்தனர்.

இதற்கிடையில் கிம்கோ கோபிகைகள் உணவு தயார் செய்து, பாபாவின் வருகையை ஆவலுடன் எதிர்நோக்கி இருந்தனர். களைப்பாக இருந்தாலும், இரவு உணவிற்குப் பிறகு பாபா அவர்களுடன் அமர்ந்து, நீண்ட நேரம் ஆன்மீக விளக்கங்களை அளித்தார்.

முழுக் குழுவினருடனும், பாபா 'ஸான் ஃப்ருட்டுஸோ'வைப் (SAN FRUTTUOSO) பார்வையிட்டார், அங்கு மோட்டார் படகில் கடலில் பயணம் செய்தனர். அடுத்த நாள், அவர்கள் 'போர்டஃபினோ வெட்டா'வில் (PORTOFINO VETTA) சுற்றுலா சென்று, இரண்டு குதிரை வண்டிகளில் மலையை நோக்கிப் பயணித்தனர். இந்தப் பயணத்தை, காலம் இப்படிக் குறிப்பிட்டது, "பாபா அவர்களின் இறைவன், அதேவேளையில் குருநாதராக இருந்தபோதிலும், அவர் அனைவரின் நண்பரும், துணைவரும் ஆவார்; அவர்களுடன் அனைத்திலும் கலந்து, உரையாடி மகிழ்ச்சியாக இருந்தார்." தோழர்கள் ஆடி, பாடி, உற்சாகமாக நடந்து சென்று சாலையோரங்களில் பூக்களை சேகரித்து, குதூகலமாக இருந்தனர். ஓர் இடத்தில், மதிய உணவுக்காக, காரை நிறுத்த விரும்புவதாக, பாபா சுட்டிக்காட்டினார். ஆனால் குயன்டின் முட்டாள்தனமாக, பாபா கூறியதற்கு உடன்படாமல், இன்னும் சிறிது தூரம் நடக்க வேண்டும் என்று கூறினார். குயன்டினின் ஆலோசனையால் எரிச்சலடைந்த பாபாவின் இனிமையான மனநிலை சிறிது நேரம் மாறியது. "கீழ்ப்படிதல் பற்றி எங்களுக்கு பாபா அளித்த முதல் சிறிய, மென்மையான குறிப்பு இதுதான்" என்று டிலியா நினைவு கூர்ந்தார். "உண்மையில், இத்தாலியில் பாபா எங்களுக்குக் கற்றுத்தர முயன்ற முக்கியமான ஒன்று - ஒருவர் குருநாதருக்குக் கீழ்ப்படிதல் முற்றிலும் அவசியமானது, இன்றியமையாதது என்பதை விளக்கும் பல நடைமுறை உதாரணங்கள் எங்களிடம் இருந்தன."

மெஹர் பாபாவின் விருப்பங்களைப் புரிந்து கொண்டு, அவரை மகிழ்விக்கும் எண்ணத்தில் அவர்கள் இசைத்தட்டுகளை இசைத்து, ஹவாய், ஸ்பானிஷ் போன்ற பதிவுகளையும், பால் ராப்ஸனின் பாடல்களையும் ரசித்தனர்.

பாபா அவர்களுக்கு அருந்துவதற்காக மதுவை ஊற்றித் தந்தார். ஒரு குருநாதர் மதுவை வழங்குவதில் சிறப்பு முக்கியத்துவம் இருப்பதாகக் கூறினார்.

1932 ஆகஸ்ட் 11ஆம் நாள், 'போர்ட:ஃபினோ'வில் (PORTOFINO) அனைவரும் மற்றுமொரு சுற்றுலா வந்தனர். அவரது கோபியர்களைப் பொறுத்தவரை, ஸான்டா மார்கரிட்டாவில் இருந்த காலம், அன்பிற்குரியவரின் சகவாசத்தில் இருந்த மகிழ்ச்சியான, சுவாரஸ்யமான நாட்கள். இது பாபாவுடன் மிகவும் நெருங்கி பழகிய காலகட்டம். ஒவ்வொரு நாளும், பாபா, கடலோரப் பாறைகளில் அமர்ந்து, சூரிய ஒளியில் நனைந்து, உரையாடிக் கொண்டிருந்தார். ஒரு முறை, அவர்கள் புத்தகங்களைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தபோது, பாபா சிரித்துக் கொண்டே, "**என்னைப் படிக்கக் கற்றுக் கொள்ளுங்கள், ஏனெனில் நீங்கள் என்னைப் புரிந்து கொள்ளும்போது, அனைத்தையும் புரிந்துகொள்வீர்கள்!**" என்றார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில், டிலியா, மார்கரெட் இருவரும் ஃபியோரென்ஸாவின் பின்புறத்தில் உள்ள தோட்டத்தில் அமர்ந்திருந்தனர். திடீரென சாஞ்சியுடன் தோன்றிய பாபாவை, இருவரும் எதிர்பார்க்கவில்லை. பாபா அவர்களிடம் '**நாம் என்ன செய்ய வேண்டும்**' என்று கேட்க, மார்கரெட், "உலகை மறந்து மகிழ்வோம்!" என்றதும், பாபா ஒரு குழந்தையைப் போலப் புன்னகைத்து, மகிழ்ச்சி பொங்க விளையாட்டுத்தனமான மனநிலையில் மார்கரெட்டின் முதுகில் குதித்தார். மார்கரெட்டும் அவரை சிறிது தூரம் தூக்கிச் சென்றார், பின்பு பாபா அவர்களிடம் ஒரு விளையாட்டை விளையாடுவதாகச் சுட்டிக்காட்டினார்.

தனது முதல் நடனப் பயிற்சி வகுப்பிற்காக மார்கரெட்டிடம் வரும் ஒரு சிறுவனாக பாபா நடிப்பதாக ஒரு காட்சி.

பாபா விளக்கியபடி, சாஞ்சி, பாபாவின் கையைப் பிடித்து 'வகுப்பிற்கு' அழைத்துச் சென்றார்; அவரை, நடன பயிற்சிகளைக் கற்றுக் கொள்ள விரும்பும் அவரது மகன் 'தாமஸ்' என்று அறிமுகப்படுத்தினார். "தாமஸ் என்னுடன் வாருங்கள்" என்று மார்கரெட் சிறுவனின் கையைப் பிடித்து அழைத்துச் சென்றார். பின்பு நடந்ததை மார்கரெட் நினைவு கூர்ந்தார்: "நடன வகுப்பறையில், நான் அவருக்கு எளிய 'இரண்டு-மூன்று' மற்றும் 'ஒன்று-இரண்டு-மூன்று' நடன முறைகளைச் செய்து காட்டினேன். எந்தத் தடைகளும் இல்லாமல், அவர் அதை ஒரே நேரத்தில் செய்ய முன்வந்து, கைகளைப் பற்றிக்கொண்டு, நாங்கள் தோட்டத்தை சுற்றிப் பறந்தோம். நான் உண்மையில் பறந்தேன் என்றால் நம்பமாட்டீர்கள்; அவரும் எளிதாகப் பாய்ந்து நகர்ந்தார் - மகிழ்ச்சி, ஆனந்தம், சற்றும் அங்கும் இங்கும் தவறாத தாளத்துடன் நகர்ந்தார். இப்படி நடனமாடுவதை நான் ஒருபோதும் ரசித்ததில்லை என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்! இது அற்புதம்... மிகவும் அசாதாரணமானது... உண்மையிலேயே மறக்கமுடியாத நேரம். மேலும் 'நடனம் என்பது கடவுளின் ஒரு பகுதியாக இருக்கும் என்பதை அறிவுபூர்வமாக அறிவுறுத்தினார்' என்பதும் எனக்குத் தெரியும்."

மெஹர் பாபா ஒரு முறை தொலைதூர கடற்கரைக்கு நடக்க விரும்பினார். அவர்கள் புறப்பட்டதும், ஒவ்வொருவரும் ஆங்காங்கே அவரவர் போக்கில் சென்றனர். இதை விரும்பாத பாபா, அவர்களை ஒன்றாக அழைத்து, அழகான கூடாரம் இருக்கும் குறிப்பிட்ட திசையைச் சுட்டிக்காட்டி, அந்தக் கடற்கரைக்குச் செல்ல விரும்புவதாகக் கூறினார். ஹெர்பெர்ட் அங்கிருந்த ஓர் அறிக்கையை கவனித்து, "இது ஒரு தனியார் கடற்கரை, உரிமையாளர் இங்கு வர வாய்ப்புள்ளது. நாம் அத்துமீறி அங்கே செல்வது நல்லதல்ல; எந்த ஆங்கில மனிதரும் அப்படி நடந்து கொள்ள மாட்டார்!" என்றதும், அவரது சகோதரி கிட்டி, 'பாபாவின் சிறிய விருப்பத்தைக் கூட பின்பற்ற வேண்டும் என்று கூறினார்; உரிமையாளர் திரும்பி வந்தால் என்ன?' என்று கேட்டதும், மிகவும் கோபமடைந்த ஹெர்பெர்ட், கடற்கரைக்குச் செல்லும்போது, பாபாவின் நேரடி உத்தரவை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

அவர்கள் நடந்து சென்ற வழியில், நீண்ட தலைமுடியும் தாடியும் கூடிய ஒரு முதியவர், சிறுவன் ஒருவனைக் கையால் வழிநடத்தி, எதிர் திசையில் வந்துகொண்டிருந்தார். வித்தியாசமான முறையில், வயதானவர் காக்காவை இந்திய முறைப்படி கைகளைக் கூப்பி வரவேற்றார். வயதானவர் பாபாவைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே நடந்து சென்றார்.

இறுதியில், ஹெர்பெர்ட் மீண்டும் பாபாவுடன் வந்து இணைந்தார். பாபா கூடாரத்திற்குள் சென்றதும், அனைவரும் அவரைச் சுற்றி அமர்ந்தனர். அனைவருக்கும் முன்னால் பாபா, ஹெர்பெர்ட்டை, கடுமையாகக் கண்டித்தார், **"உங்களின் சுய மகிழ்ச்சிக்காக மட்டுமே, நான் உங்களை இங்கு அழைத்து வந்தேன் என்று நீங்கள் நினைத்தீர்களா? நீங்கள் சாலையில் அமர்ந்திருக்கும் வேளையில், நீங்கள் பார்க்க வேண்டும் என்று நான் விரும்பிய எனது முகவர்களில் ஒருவர் வந்து சென்றார். நீங்கள் ரஷ்யாவிற்குச் செல்லும் போது வார்ஸாவில் தொடர்பு கொள்ள வேண்டிய எனது முகவரின் அதே தோற்றத்தில் இருந்ததால், அவரை இங்கே பார்க்காததன் மூலம், அங்கு நீங்கள் மேற்கொள்ளும் பணி மிகவும் கடினமாக இருக்கும்."**

ஹெர்பெர்ட் தனது தவறைப் புரிந்து கொண்டு, "நிச்சயமாக நாங்கள் எங்கள் பொது அறிவைப் பயன்படுத்த வேண்டும், மேலும் நீங்கள் மேற்கத்திய நாட்டில் உங்களை ஆபத்திற்குள்ளாக்கும் போது எச்சரிக்க வேண்டியது கடமை" என்று எடுத்துரைத்தார்.

பாபா ஒப்புக் கொண்டார், **"என்னை எச்சரிப்பது உங்கள் கடமை, ஆனால் நான் வற்புறுத்தும்போது நீங்கள் விட்டுக் கொடுக்க வேண்டியது அவசியம்."**

இத்தாலிய ரிவியராவில் (ITALIAN RIVIERA) பயணம் செய்து இரண்டு வாரங்களுக்குப் பின்னர், 1932 ஆகஸ்ட் 17 அன்று ஸான்டா மார்கரிட்டாவிலிருந்து (SANTA MARGHERITA) ரயிலில் புறப்பட்டு, மறுநாள் காலையில் வெனிஸ் (VENICE) வந்து அனைவரும் 'ஹோட்டல் இன்டர்நேஷனலில்' (HOTEL INTERNATIONAL) தங்கினர்.

வெனிஸில் பாபா தங்கி இருந்த அடுத்த இரண்டு நாட்களில் இயன்றவரை அவருடன் இருப்பதற்கு அனைவரும் குறிப்பிடத்தக்க அக்கறை எடுத்துக் கொள்ளுமாறு பாபா அறிவுறுத்தினார்.

அடுத்த நாள் காலை 11 மணி அளவில் ஸெயின்ட் மார்க்ஸ் (SAINT MARKS) சதுக்கத்திற்கு விஜயம் செய்தனர்; கோபிகளின் விருப்பத்திற்கிணங்க, கதீட்ரலுக்குள் (CATHEDRAL) நுழைய முடிவு செய்யப்பட்டது. வெளியே, பாபா தேவாலயத்தின் கட்டிடக்கலை மற்றும் அதன் ஆன்மீக முக்கியத்துவத்தை விளக்கினார். அங்கிருந்த தூண்கள், குவிமாடங்கள் மற்றும் வளைவுகளின் எண்ணிக்கையை கணக்கிட்டு எழுதக் கூறினார்; அவை, சரியாக 120 ஆக இருந்ததை பாபா சுட்டிக்காட்டினார், **"இந்த தேவாலயம் ஐரோப்பாவின் நான்கு பெரிய ஆன்மீக மையங்களில் ஒன்றாகும். முழுக் கட்டமைப்பும் அவதார புருஷரின் 12 உள்வட்ட சீடர்களுக்கும், மற்றும் வெளி வட்டங்களின் 108 சீடர்கள் உட்பட மொத்தம் 120."**

பாபா அப்போது மேலும் வெளிப்படுத்தினார், **"நான் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் எனது** (இயேசுவாக) **இரண்டு சீடர்களுடன் இங்கு இருந்தேன்; பின்பு புனித மார்க்ஸ் கட்டப்பட்டதும் அங்கு அமர்ந்தேன்."** பாபா ஆண்களுடன் தேவாலயத்திற்குள் நுழைந்தார், ஆனால் பெண்கள் உள்ளே நுழைய அனுமதி இல்லை.

மதிய உணவிற்குப் பிறகு, மாலை நான்கு மணிக்கு மீண்டும் ஸெயின்ட் மார்க்ஸ் சதுக்கத்திற்குச் சென்றனர். அனைவரின் வேண்டுகோளுக்கு இணங்க புகைப்படங்கள், குறிப்பாக பாபா, புறாக்களுக்கு உணவு அளிக்கும் புகைப்படங்கள் எடுக்கப்பட்டன.

ஹோட்டலுக்குத் திரும்பி வந்தபோது, மெஹர் பாபா வெளிப்படையாக மகிழ்ச்சியற்ற மனநிலையில் காணப்பட்டார். அவர் அனைவரையும் அழைத்து, **"நீங்கள் ஏன் எனது வாக்குறுதியை மீறினீர்கள்?"** அவர்கள் திகைத்துப்போய், ஒன்றும் புரியாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தனர். பாபா தொடர்ந்து கூறினார், **"தவறாமல் எப்பொழுதும் என்னுடன் இருக்கும்படி நான் உங்களுக்குக் கூறியிருந்தும், திரும்பி வரும்போது, வெனிஸின் அழகையும், கடை ஜன்னல்களில் வைக்கப்பட்ட அழகு பொருட்களையும் பார்க்க நீங்கள் பின்னால் இருந்தீர்கள். எனது வழிமுறைகளைப் பற்றி நீங்கள் கவலைப்படவில்லை. உங்களை ஒன்றுக்கு இரண்டு முறை அழைக்க நான் பலரை அனுப்ப வேண்டியிருந்தது.**

**"உலகில் வாழ வேண்டும்; அதேவேளையில் அதன் ஈர்ப்பில் வீழாதீர்கள் என்று நான் எத்தனை முறை அறிவுறுத்தினேன்? ஆனால், நீங்கள் எனது விருப்பங்களைப் புறக்கணிக்கும் அளவிற்கு, உலகம் உங்களிடம் அவ்வளவு ஈர்ப்பைக் கொண்டுள்ளது. மேலும் நம்மிடம் மிகக் குறைவான நேரம் மட்டுமே உள்ளது!"**

பாபாவின் கண்டனம் கோபிகளின் கண்களில் கண்ணீரையும், கீழ்ப்படியாமையின் வலியையும் வரவழைத்தது. பின்னர் அவர் அன்பாக

விளக்கினார், “**இப்போது கவலைப்பட வேண்டாம், மகிழ்ச்சியாக இருங்கள். ஆனால் இதுபோன்ற தவறுகளை மீண்டும் செய்யாதீர்கள். உலக ஈர்ப்பு என்பது விஷத்தை அருந்துவதைப் போன்றது; உப்பு நீரை** (அவர்களின் கண்ணீரை) **அருந்த செய்வதன் மூலம் அதன் தீங்கு விளைவிக்கும் விஷத்திலிருந்து நான் உங்களைக் காப்பாற்றுகிறேன்!**”

தொடர்ந்து, பாபா கூறினார், “**நான் இந்தியாவில் ஒரு முறை மண்டலியை வெகுவாகக் கண்டித்தேன், அவர்களில் ஒருவரான ‘ஆர்’** (ருஸ்தம் அல்லது ராவ்ஸாஹேப்) **என்பவர் ஒரு டம்ளர் விஷத்தை விழுங்கினார். ஐந்து மணி நேரத்திற்குள் அவர் இறந்துவிடுவார் என்று மருத்துவர்கள் அறிவித்தனர். நான் கோபம் வரும் அளவுக்கு அவரை மேலும் திட்டினேன். அவரை மீண்டும் உயிர் பிழைக்கச் செய்ய, ஒரு டம்ளர் உப்பு நீரை அருந்தும்படி நான் அவருக்கு அறிவுறுத்தினேன். இது, விஷத்தை வெளியேற்ற உதவியது, இவ்வண்ணம் அவர் மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்றப்பட்டார்.**

“**எனக்கு எல்லாம் தெரியும்; தெரிந்தும், நான் எனது வழிகளைக் கையாளுகிறேன். உண்மையில், எதுவும் எனக்கு மகிழ்ச்சி அல்லது வருத்தத்தை அளிப்பதில்லை. ‘ஆர்’ என்பவர் இறக்கப்போவதில்லை என்று எனக்குத் தெரியும், ஆனால் அவரை மரணத்திலிருந்து காப்பாற்ற, இந்த விளையாட்டை விளையாடினேன். நான் ஒருபோதும் கவலைப்படுவதில்லை அல்லது எதுவும் என்னை பாதிப்பதில்லை. எனக்கு உலகளாவிய மனம் உள்ளது; அது ஒவ்வொரு கணமும் எல்லையற்ற, நித்திய ஆனந்தத்தை அனுபவிக்கிறது. இந்தப் பேரின்பம் நான் எடுத்துக்கொண்ட எல்லா துன்பங்களையும் சரி செய்கிறது. நான் அனைத்திற்கும் அப்பாற்பட்டவன், எதனுடனும் சேராதவன், எனவே மகிழ்ச்சியும் சோகமும் உங்களை பாதிப்பதுபோல் என்னை பாதிப்பதில்லை.**”

அன்று இரவு அனைவரும் காண்டுலாவில் (GONDOLAS) சவாரி செய்தனர். “இது தெய்வீகமானது, உண்மையில் தெய்வீகமானது” என்று மார்கரெட் கூறினார். “பாபா, ஆதி ஜூனியர், நான் மூவரும் ஒரு காண்டுலாவில் ஒரு மணி நேரம், மேலும் கீழும், நிலா ஒளியின் கீழ் சவாரி செய்தோம். காண்டலியர் இத்தாலிய மொழியில் பாடினர். இது எனது வாழ்க்கையின் அற்புதமான இரவுகளில் ஒன்றாகும்.”

ஆகஸ்ட் 19ஆம் நாள், பாபா ‘**நெருக்கமாக இருங்கள்**’ என்ற அதே அறிவுறுத்தலை மீண்டும் மீண்டும் குறிப்பிட்டார். அவர்கள், ‘லிடோ’ (LIDO) எனும் நாகரீகமான கடற்கரை பொழுது போக்கு ஸ்தலத்திற்குச் சென்றனர். அன்று குறிப்பாக, நீச்சல் குளத்தில் நீந்த வேண்டாம் என்று பாபா அவர்களுக்கு உத்தரவிட்டார்; இருந்தும் வானிலை மிகவும் வெப்பமாக இருந்ததால், குயன்டின், மேபெல் இருவரும் பாபாவின் அனுமதியைக் கோரினர். பாபா விருப்பமில்லாமல் அனுமதி வழங்கினார். அவர்கள் கிட்டத்தட்ட ஒரு மணி நேரமாகியும் திரும்பி வராததால், மார்கரெட், டிலியா இருவருடன் அவர் திரும்பிச் சென்றார்.

கிட்டி, சாஞ்சி இருவரும் ஹோட்டலில் பாபாவை, ஏமாற்றமடைந்த மனநிலையிலும், மார்கரெட், டிலியா இருவரையும் கண்களில் கண்ணீரோடும் கண்டனர். பாபா ஆட்சேபனைத் தெரிவிக்கும் விதத்தில் தலையை அசைத்து, **"கிழக்கு கிழக்குதான், மேற்கு மேற்குதான்! கிழக்கு எனது காலடியில் அமரத் தயாராக இருக்கும் அதேவேளையில், நான் மேற்கின் காலடிகளில் இருக்க வேண்டும் என்று அது விரும்புகிறது.**

**"மேற்கு எனக்காகப் பணிபுரிய வேண்டும் என்று நான் விரும்பினேன், ஆனால் இப்போது எனது திட்டங்களை மாற்ற வேண்டும், உங்களில் எவரையும் பயன்படுத்திக் கொள்ள முடியாது. மேற்கத்திய நாடுகள் கிழக்கத்திய நாடுகளைப் போல நடந்து கொள்ளும் என்று நான் எதிர்பார்க்க முடியாது. இது உங்கள் தவறு அல்ல. நீங்கள் அனைவரும் என்னை நேசிக்கிறீர்கள், வணங்குகிறீர்கள், ஆனால், உங்களால் அதைச் செய்ய முடியாது. நான் வேறு வழியில் எனது பணியைச் செய்ய வேண்டியிருக்கும். நான் செய்ய வேண்டியதை நானே செய்வேன், ஆனால் ஒரே நேரத்தில், முற்றிலும் மாறுபட்ட முறையில்."**

பாபா இவ்வாறு கூறி முடித்தார்: "**நீங்கள் இன்று ஓய்வெடுக்கலாம், ஆனால் நாளை முழு நேரமும் என்னுடன் இருங்கள்.**" பாபாவின் வார்த்தைகள் அவர்கள் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. பின்பு, பாபா அவர்களை ஆறுதல்படுத்தினார்; ஆனால் முழுமையாகக் கீழ்ப்படிதலின் மதிப்புமிக்க பாடத்தை அவர்களுக்குக் கற்றுத்தந்த பின்னரே, அவர்களை மீண்டும் சிரிக்கவும் மகிழ்விக்கவும் செய்தார். மார்கரெட் அவரது குறிப்புப் புத்தகத்தில் எழுதியிருந்தார்: பாபாவிற்குக் கீழ்ப்படியாமல் நீச்சலுக்குச் சென்றவர்கள், பின்னர் ஹோட்டலுக்குத் திரும்பி வந்து, பாபாவிற்குப் பூச்செண்டுளை வழங்கினர்; ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை.

இரவில், அவர்கள் மக்கள் கூட்டங்களைப் பார்க்கவும், ஸெயின்ட் மார்க்ஸ் சதுக்கத்தில் ஒரு இசை நிகழ்ச்சியைக் கேட்கவும் சென்றனர். "**நான் 620 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு வந்தேன்**" என்று பாபா குறிப்பிட்டார்.

அவர் சோகமாக மேலும் கூறினார், "**நான் நித்தியமாக, சிலுவையில் அறையப்படுகிறேன், என்னுடைய சுமை, குறிப்பாக அதிகமாக இருக்கும்போது, சில சமயங்களில் எனது சீடர்கள் அதைப் பகிர்ந்து கொள்ள அனுமதிக்கிறேன், ஒவ்வொருவரும் தாங்கும் அளவுக்கு வழங்குகிறேன்.**" பாபாவின் மனநிலை மாறியது, அனைவரும் சார்லி சாப்ளின் திரைப்படமான 'தி கோல்ட் ரஷ்' (THE GOLD RUSH) பார்க்கச் சென்றனர்.

வெனிஸில் இருந்த வேளையில், பாபா தனது அன்பர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கிழக்கத்திய புனைப் பெயரை வழங்கினார்: ஆட்ரே - **ஷிரின்**; மேபெல் - **ஃபிரோஸ்**; டிலியா - **லெய்லா**; மார்கரெட் - **ஸுலேகா**; ஹெர்பெர்ட் - **ஸுதாமா**; மின்டா - **ஷாலிமார்**; கிம் - **ஆயிஷா**; குயன்டின் - **நாரத்**; கிட்டி - **சரோஜா**; மற்றும் ஸில்லா - **மும்தாஜ்**. நோரினாவிற்கு, **நூர்ஜஹான்** என்ற பெயர் வழங்கப்பட்டது; எலிஸபெத் - **தில்ரூபா**; அனிதா - **சுச்சுலி**; நான்னி - **கெமாலி**; ரானோ - **மெரானோ** (ஒரு மலர்); ஐரீன் (பில்லோ) -

**பத்மினி** (தாமரை). பல ஆண்டுகளுக்குப் பிறகு, பாபா தனது நெருங்கியவர்களை இந்தப் பெயர்களால் அழைத்தார் அல்லது குறிப்பிடுவது பழக்கம்; அவர்களும் தங்கள் கடிதங்களில் புனைப் பெயரில் கையெழுத்திட்டனர்.

1932, ஆகஸ்ட் 20 அன்று ஹெர்பெர்ட் காண்டுலா (படகு) மூலம் ரயில் நிலையத்திற்குச் சென்றார்; பாபாவும் ரயில் நிலையத்திற்கு உடன் சென்று, போலந்தின் வார்ஸா (WARSAW) நகருக்குச் செல்லுமாறு அறிவுறுத்தினார்.

ஹெர்பெர்ட் வார்ஸாவிற்கு வந்தபோது, அந்த வயதான மனிதரைக் கண்டுகொள்வதில் சிரமப்பட்டார், ஸான்டா மார்கரிட்டாவில் அந்த இரட்டையரின் அடையாளத்தைத் தவறவிட்டதால், இப்போது சிரமமாக இருந்தது. அங்கும் இங்கும் தேடி அலைந்து அவர், கடைசியாக ஒரு பிச்சைக்காரரைக் கண்டுகொண்டார், அவர் பாபா வழங்கிய விளக்கத்தோடு பொருத்தமானவராகத் தென்பட்டார். பாபா கூறியபடி, ஹெர்பெர்ட் அவரிடம் ஒரு சில நாணயங்களைக் கொடுத்து, மேலும் ஒரு புதிய மேல்சட்டை வாங்குவதற்கு வேறு ஒருவரிடம் போதுமான பணத்தையும் அளித்தார்.

மெஹர் பாபா ஆகஸ்ட் 20ஆம் நாள், வெனிஸிலிருந்து எகிப்து (EGYPT) நாட்டின் அலெக்ஸாண்ட்ரியா (ALEXANDRIA) நகருக்கு, காக்கா மற்றும் சாஞ்சியுடன் கப்பலில் பயணம் செய்ய இருந்தார். மாலை நான்கு மணிக்கு பாபா 'ஆஸோனியா' (AUSONIA) கப்பலில் ஏறுவதைப் பார்த்த மேற்கத்திய அன்பர்கள், அவர் புறப்பட்டபோது பரிதாபமாகக் கண்ணீர் விட்டு அழுதனர். கப்பல் புறப்பட்ட நேரத்தில், பாபாவின் கண்களும் குளமாக நிரம்பின. காக்காவும் சாஞ்சியும், பாபா, புறப்படும் வேளையில் இவ்வளவு சோகமாக இருப்பதை எப்போதும் பார்த்ததில்லை. அவரது ஆங்கிலேய அன்பர்கள், பாபா கப்பலில் பயணித்த வேளையில், அவருக்கு ஒரு தொலைத்தந்தியை அனுப்பினர், பாபா அதை அவரது உதடுகளிலும் கண்களிலும் அழுத்தி, கண்ணீரால் நனையச் செய்தார். அன்று இரவு பத்து மணிக்கு ஓய்வு பெறும் வரை பாபாவின் கண்கள் ஈரமாகவே இருந்தன. வேதனையில் இருப்பது போல, பாபா ஓர் அமைதியற்ற, தூக்கமில்லாத இரவைக் கழித்தார், மேலும் அவர் ஏன் இவ்வளவு சிரமப்பட வேண்டும் என்று காக்காவும் சாஞ்சியும் ஆச்சரியப்பட்டனர். காலமும் அதே ஆச்சரியத்தில் ஆழ்ந்தது: "உலகளவிலான மகிழ்ச்சி, துயரம் அனைத்திற்கும் மேலான பரமானந்தத்தை அனுபவிக்கும் ஒரு குருநாதரை, எந்த வகையான அன்பு அமைதியற்றவராக இருக்கச் செய்யக்கூடும்? அந்த அன்பு எவ்வளவு மேன்மையானதாக இருக்க வேண்டும்!"

அடுத்த மூன்று நாட்களுக்கு, பாபா எவரையும் சந்திக்கவோ அல்லது கப்பலின் தளத்தில் உலாவவோ ஆர்வம் காட்டவில்லை. விட்டுச் சென்ற ஒவ்வொருவரையும், அவர்களின் அன்பான வழிகளையும் முறைகளையும் அவர் தொடர்ந்து நினைவு கூர்ந்தார். அவர் எழுத்துப்பலகையில் இவ்வாறு எழுதினார்: **"கிம்கோ, என் இதயம். அவர்கள் அனைவரும் என்னை எப்படி நேசிக்கிறார்கள்!"** இந்தக் குறுகிய கவிதையை பாபா அவர்களுக்கு அனுப்பி வைக்கக் கூறினார்.

கிம்கோ, எனது உள்ளம், இப்போது, எப்போதும் போல,
மேலும் எப்போதும், இப்போது உள்ளது போல!
நான் உங்களை எவ்வளவு நேசிக்கிறேன்!
சொல்வதானால் அதைவிட, காணாமல் தவிக்கிறேன்!
எதிர்நோக்கிக் காத்திருங்கள், நான்கே மாதங்கள்!
அதுவரை, நான் வழங்கும் அன்பின் முத்தங்கள்!



மெஹர் பாபா, குயன்டின் டாட்,
ஹெர்பெர்ட் டேவி - 1932



மேற்கத்தியருடன் மெஹர்
பாபா, இத்தாலி - 1932



ஷிரீன்மாய், மணி, மெஹர் பாபா

காக்கா பாரியா, மெஹர் பாபா - எகிப்து



# கெய்ரோ – எகிப்து வழியாக இந்தியா வருகை

(**Cairo – Egypt, India**)

அலெக்ஸாண்ட்ரியா துறைமுகத்தில் கப்பல் ஆகஸ்ட் 23ஆம் நாள் வந்து சேர்ந்தது. பாபா, காக்கா, சாஞ்சி மூவரும் நேரடியாக ரயிலில் கெய்ரோ (CAIRO) நகருக்குச் சென்று, இரவு திரும்பி வந்து லூனா பார்க் (LUNA PARK) ஹோட்டலில் தங்கினர்.

1932, ஆகஸ்ட் 24 அன்று, பாபா, கீஸா (GHIZE) எனும் இடத்தில் அமைந்த பிரமிடுகள் மற்றும் ஸ்பின்க்ஸ்களைப் பார்வையிட (PYRAMIDS AND SPHYINX) கழுதை மீது சவாரி செய்தார், மேலும் உள்ளூர் உயிரியல் பூங்காவையும் பார்வையிட்டார். கெய்ரோவில் இருந்தபோது, பாபா, காக்காவிற்கும் சாஞ்சிக்கும் இதை வெளிப்படுத்தினார், "**ஹெரோதிலிருந்து** (HEROD) **தப்பி ஓடிய மேரி, ஜோஸஃப் இருவரும் தங்கியிருந்த குகை, காப்டிக் தேவாலயத்தில்** (COPTCI CHURCH) **உள்ளது. நான் இதைப் பார்வையிடத்தான் எகிப்து நாட்டிற்கு வந்துள்ளேன்**" என்றார்.

பாபாவின் தலைமையில், அவர்கள் மறுநாள் காப்டிக் தேவாலயத்திற்கு விஜயம் செய்தனர். தேவாலயத்தின் வழியாக நடந்து செல்லும்போது, பாபாவின் முகம் மகிழ்ச்சியுடன் பிரகாசித்தது. "**இது எனது அன்பான பழைய இடம்**" என்று அவர் நினைவு கூர்ந்தார், இயேசுவும் இங்கு வந்து தனது சீடர்களுடன் தங்கியிருந்தார்.

பாபா குகையின் கீழே அமைந்த சிறிய, இருண்ட அறைக்குச் சென்றார். தேவாலயத்தின் பொறுப்பாளர் அதைத் திறக்க விரும்பவில்லை, ஆனால் பாபா வலியுறுத்தியபோது, அவர் இறுதியாக ஒப்புக்கொண்டார். கிறிஸ்துவிற்கு 930 ஆண்டுகளுக்குப் பின்னர், இந்தக் குகை மீது தேவாலயம் அமைக்கப்பட்டுள்ளதாக அவர்களிடம் கூறப்பட்டது.

தொடர்ந்து பாபா எகிப்திய அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டார், அது கெய்ரோவில் உள்ள சுல்தான்களின் அடையாளச் சின்னங்களைக் காட்சிப் பொருளாக வைத்திருந்தது.

இதற்கிடையில் ஆகஸ்ட் 26ஆம் நாள் ஒரு தொலைத்தந்தி வந்தது: "அன்பான இனிய இதயத்தை உடைய நீங்கள், எங்களின் இதயங்களையும், ஆத்மாக்களையும் திருடிவிட்டீர்கள்! அனைத்து அன்புடன், கிம்கோ." பாபா அன்பாக, தொலைத்தந்தியைத் தனது உதடுகளிலும் கண்களிலும் தொட்டு, பின்னர் அதைப் படித்து, கண் கலங்கினார். அத்தகைய அற்புதமான மனநிலையில் இருந்த பாபாவை, காக்காவும் சாஞ்சியும் கைகளால் அணைத்து, அவரின் அன்பான அரவணைப்பைப் பெற்றுக்கொள்ளும் பாக்கியத்தைப் பெற்றனர்.

ஆகஸ்ட் 27 அன்று மெஹர் பாபா, கெய்ரோவிலிருந்து 'போட் ஸெட்' (PORT SAID) துறைமுகத்திற்குப் புறப்பட்டார். எகிப்தில் இருந்த ஐந்து நாட்களுக்குப் பிறகு, பாபா, காக்கா, சாஞ்சி மூவரும் 1932 ஆகஸ்ட் 29 திங்கள் அன்று, எம்.வி. விக்டோரியாவில் (MV VICTORIA) இந்தியாவிற்குப் பயணம் செய்தனர். கப்பலில் அறைகள் சிறப்பாக இருந்தன, பயணம் சௌகரியமாக இருந்தது, ஆனால் பாபா, பெரும்பாலான நேரம் அறையிலிருந்து கோபியர்களையும், கிம்கோ, ஹெர்பெர்ட் அல்லது குயன்டின் ஆகியோரை தொடர்ந்து நினைவில் கொண்டார். அவ்வப்போது, எவரும் இல்லாத வேளையில் நடக்கச் சென்றார்.

ஒரு வாரத்திற்குப் பிறகு செப்டம்பர் 5 அன்று பாபா மும்பைக்கு வந்து சேர்ந்தார். மும்பையில், அவரது அன்பர்கள் அனைவரும் மிக்க மகிழ்ச்சியுடனும் அன்புடனும் பாபாவை வரவேற்றனர். காக்கா, சாஞ்சியுடன், பாபா நாசிக் நகருக்கு உடனடியாக ரயிலில் புறப்பட்டுச் சென்றார்.

நாசிக் நகரிலும், பிரியமான பாபா, திரும்பி வருவதை அனைத்து மண்டலியும், குறிப்பாக பெண்மணிகள் வரவேற்றனர். கடந்த ஆறு மாதங்களாக, பெண் மண்டலி - மெஹரா, நாஜா, பெரிய கோர்ஷெத், ஸூனாமாசி, சிறிய கோர்ஷெத், தவ்லத்மாய் - அனைவரும் பாபாவின் வருகைக்காக ஏக்கத்துடன் காத்திருந்தனர். அவர்கள் எளிய, கடினமான வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர்; செல்வாக்குமிக்க குடும்பங்களிலிருந்து வந்தவர்கள் என்றாலும், தங்கள் அன்பிற்குரியவர் மீதான அன்பு மட்டுமே, இந்த வகையான வாழ்க்கையை வாழ அவர்களுக்கு உதவியது. காலம் இதை இப்படி வர்ணித்தது: "அன்பின் பொருட்டு, அன்பிற்குரியவருக்காக, ஒருவர் அனைத்து உலக இன்பங்களையும் தியாகம் செய்யலாம்; இந்த அன்பின் முன்னால், உலகின் மிகையாக இன்பம் தரும் பொருளுக்கு எந்த மதிப்பும் இல்லை."

பெண் மண்டலி பிரியமான பாபாவிற்கு மனமார்ந்த வரவேற்பு அளித்தனர்; இந்த நிகழ்வைக் கொண்டாட ஒரு சிறிய நாடகத்தையும் அரங்கேற்றினர்.

ஸூனாமாசி பெண்கள் ஆஷ்ரமத்தின் மேலாளராக இருந்தார், ஆனால் அவர் தனது கணக்குகளில் பிழைகள் இழைப்பது வழக்கம். பஜாரில் பொருட்கள் வாங்கும் போது, பணத்தைக் கையாளுவதில் மிகவும் சிரமப்பட்டார்; அது இதர பெண்களுக்கு வேடிக்கையான சம்பவங்களாக அமைந்தது; பெண் மண்டலி அவற்றை பாபாவுடன் நகைச்சுவையாகப் பகிர்ந்துகொண்டனர்.

மெமோ, மணி இருவரும் நாசிக் வந்த வேளையில், போபோவின் மரணம் மற்றும் மெமோவை நன்கு கவனித்துக் கொள்வதை உறுதிப்படுத்த என்ன செய்ய வேண்டும் என்று அவர்கள் விவாதித்தனர். பாபா, மணியை அவருடன் ஆசிரமத்தில் தங்க வைக்க விரும்பினார், ஆனால் மெமோ வேறுவிதமாக நினைத்தார். பூனாவில் ஒரு குடும்ப உறுப்பினர் தன்னுடன் இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். இதன் விளைவாக, பாபா தனது சகோதரர் பெஹராமை, பெரின் (PERIN) எனும் உறவு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளும்படி அறிவுறுத்தினார். பெஹராம் தயங்கினாலும், அவர் பாபாவிற்குக் கீழ்ப்படிந்து திருமணம் செய்து, மெமோவுடன் வாழ

ஒப்புக்கொண்டார். இது மணியை, ஆஷ்ரமத்தில் பெண் மண்டலியுடன் சேர்ந்து வாழ வழி வகுத்தது.

நாசிக் நகருக்குத் திரும்பி வரும் வேளையில், பாபா, ருஸ்தத்தின் குழந்தைகளான மெஹரு (MEHERU), நாகு (NAGGU), மெஹ்லு (MEHLU), ஃபாலு (FALU), மேலும் நவல் தலாட்டியின் (NAVAL TALATI) குழந்தைகள் ஜெரூ (JEROO), கர்ஷெட் (CURSHED) ஆகியோருடன் கிரிக்கெட், கிட்டிபுள் போன்ற பல விளையாட்டுகளை விளையாடுவது வழக்கம். ஒரு முறை விளையாடும் போது, பாபா அடித்த பந்து மெஹருவைத் தாக்கிக் காயப்படுத்தியது. அவரது தாயார் ஃபிரீனி, இந்த சம்பவத்தை பாபாவின் பிரசாதமாக எடுத்துக் கொண்டார், ஆனால் சிறுமி மெஹரு அழுது கொண்டே இருந்தார். பாபா அன்பாக அவள் முகத்தில் இருந்த காயத்தைத் துடைத்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். உண்மையில், இது பாபாவின் பிரசாதம், ஏனெனில், ருஸ்தம், ஃபிரீனியின் ஆறு குழந்தைகளில், மெஹரு மட்டுமே தனது கல்வியை முடித்த பின்பு, பாபாவின் பெண் மண்டலியின் நிரந்தர உறுப்பினராக வாழ முடிந்தது.

பாபா ஒரு முறை மெஹரு, ஃபாலு இருவருக்கும் ஒரு மை பேனாவையும் பென்சிலையும் கொடுக்க விரும்பினார்; ஆனால் இதர சகோதரர்களும் சகோதரியும் உடன் இருந்ததால், ஒரு லாட்டரி நடைபெற்றது. பலவித சித்திரங்களை வரைந்த மெஹரு பேனாவை வென்றார். ஃபாலுவும் பாபாவிடமிருந்து எதையாவது பெற விரும்பினார், எனவே இரண்டாவது லாட்டரி நடைபெற்றது, அவர் பென்சிலையும் வென்றார். இப்படி, பாபா குழந்தைகளின் நெருக்கமான உறவை அனுபவித்து, தனது விலைமதிப்பற்ற சகவாசத்தை அவர்களுக்கு வழங்கினார்.

இதற்கிடையில், 1932, செப்டம்பர் 6ஆம் நாள், மெஹர் பாபாவை சந்திக்கும்படி, மஹாத்மா காந்தி வலியுறுத்திய தாழ்த்தப்பட்டவர்களின் தலைவரும், செய்தித் தொடர்பாளருமான டாக்டர் பி. ஆர். அம்பேத்கரிடம் (DR. B.R. AMBEDKAR - **41**) பாபா, டாக்டர் நீலுவை (நீல்காந்த் கோட்ஸே - NILKANTH GODSE) அனுப்பிவைத்தார்.

நீலு அப்போது மும்பையில் மருத்துவ கல்லூரியில் பயின்று வந்தார், அவ்வப்போது நாசிக் நகரில் பாபாவைப் பார்க்க வருவது வழக்கம். மெஹர் பாபாவைக் குறித்து நீலு, அம்பேத்கருக்கு தகவல் தெரிவித்தபோது, உடனடியாக, பாபாவைப் பார்க்க அம்பேத்கர் ஒப்புக்கொண்டார். எனவே பாபா அவரை சந்திக்க மும்பைக்குத் திரும்பினார். செப்டம்பர் 13 மாலை நடந்த உரையாடலின் தொகுப்பைக் கீழே காணலாம்:

“**உங்களை சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்**,” என்று பாபா தொடங்கினார். “**நான் உங்களை நீண்ட காலமாகப் பார்க்க விரும்பினேன்**.”

“நானும் உங்களைப் பார்க்க ஆவலாக இருந்தேன், ஆனால் என்னால் அதைச் செய்ய முடியாமலாயிற்று” என்று அம்பேத்கர் பதிலளித்தார்.

தொடர்ந்து பாபா அவரிடம், “நான் ஏன் உங்களைப் பார்க்க விரும்பினேன், நீங்கள் என்ன செய்ய வேண்டும் என நான் விரும்புகிறேன் என்பதை விரிவாக விளக்குகிறேன். முதலில், எனக்கும், அரசியலுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது தெளிவாக இருக்கட்டும். என்னுடைய செயல்பாடு, இந்த விஷயத்தில் முற்றிலும் ஆன்மீகக் கண்ணோட்டம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கான எனது மரியாதை மற்றும் உணர்விலிருந்து வெளிப்படுவதாகும். எந்தவோர் அரசியல் ஈடுபாடும் இல்லாமல், நான் ஏற்கனவே மெஹராபாத்தில் இருந்த காலத்தில், அவர்களுக்காக நிறைய செய்திருக்கிறேன், அங்கு நான் உயர் வகுப்பு பிராமணர்களை, தீண்டத்தகாதவர்களுடன் என் ஆஷ்ரமத்தில் வாழவும், ஒன்றிணைந்து உணவு உண்ணவும், அது மட்டுமின்றி, எனது பிராமண சீடர்களை, நான் செய்தது போலவே, தீண்டத்தகாத சிறுவர்களை நீராட்டவும் செய்ய வைத்தேன். என் இதயத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப் பற்றிய ஆர்வம் மிகையாக உள்ளது; அவர்கள் சார்பாக நீங்கள் எடுக்கும் முயற்சிகளையும் நான் புரிந்துகொண்டு மிகவும் பாராட்டுகிறேன்.

“இப்போதைய நிலைமை என்னவென்றால், இந்தியாவுக்கான சுயராஜ்யத்தின் தீர்வு, தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் கூட்டு அல்லது தனி வாக்காளர்களைப் பற்றிய நுட்பமான கேள்வியில்தான் உள்ளது. இந்தத் தாழ்த்தப்பட்டவர்களின் உரிமைக்காகப் போராடுபவர்கள், வேலைநிறுத்தம் செய்ய வேண்டிய சரியான நேரமும் சந்தர்ப்பமும் இப்போது உருவாகி உள்ளது. ஆகவே, ஏழை எளிய தீண்டத்தகாதவர்களுக்கு இந்தப் பொன்னான வாய்ப்பின் நேரம் வந்துவிட்டால், நான் விளக்கவிருக்கும் காரணங்களுக்காக உங்களுக்குக் கூறுகிறேன், கூட்டு வாக்காளர்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய உரிமைகள் பற்றிய விவரங்களை, காந்தி மற்றும் பிற தலைவர்களுடன் பேசித் தீர்க்க வேண்டும்.

“காந்தி, கைது செய்யப்படுவதற்கு ஒரு நாள் முன்பு, நான் அவருடன் இது சம்பந்தமாக நீண்ட நேரம் பேசினேன். அவர் விஷயங்களை விளக்கி, உங்களுக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் இதர தலைவர்களுக்கும், ஒரு கூட்டு வாக்காளரை ஏற்றுக்கொள்ளக் கூறும்படி, என்னிடம் கேட்டுக்கொண்டார். நீங்களும் பிற தலைவர்களும் அதற்கு இணக்கம் தெரிவித்தால், அவர் உங்களை சந்தித்து, தீண்டத்தகாதவர்களின் உரிமைகளுக்காகப் பரிந்துரைப்பார்; அனைத்து அரசியல் தலைவர்களிடமும் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, புதிய ஏற்பாட்டில் நீதியை உறுதி செய்வார் என்று அவர் எனக்கு உறுதியளித்தார்.

“நீங்கள் ஒரு கூட்டு வாக்காளரை ஏற்றுக்கொண்டு, காந்தியுடன் இதில் இணையவும் நான் விரும்புகிறேன் என்பதற்கான காரணங்கள் உள்ளன. தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் தனி வாக்காளர்களுக்கு இப்போது அரசாங்கத்தின் உதவியைப் பெறுவதன் மூலம், நீங்கள் இந்து சமுதாயத்துடன் என்றென்றும் மோதிக் கொள்ளும் அபாயத்தை உருவாக்குகிறீர்கள். தீண்டத்தகாதவர்கள் என்ற முத்திரை நிரந்தரமாகப்

**பதிக்கப்பட்ட ஒரு தனி வகுப்பாக உங்களை நிலைநிறுத்துவது, சற்றும் விரும்பத்தக்க விஷயம் ஆகாது. தீண்டாமையின் களங்கம் முற்றிலும் அகற்றப்பட வேண்டும், மேலும் அனைத்து வகுப்பினரும் ஒன்றுபட வேண்டும். இதுவே, உங்கள் இந்து அல்லாத சகோதரர்களிடம் எடுத்துக்கூற சரியான நேரம், தக்க தருணம், பொன்னான ஒரு வாய்ப்பு; ஒடுக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் அனைத்து நியாயமான உரிமைகளையும் கொடுத்து, இந்து சமுதாயத்தோடு ஒன்றிணையச் சொல்லுங்கள், அல்லது அவர்களை என்றென்றும் எதிரிகளாக மாற்றுங்கள்; இதை இந்து சுதந்திரத்தின் எந்தவொரு நலம் விரும்பிகளும் விரும்ப மாட்டார்கள்.**

**“எனவே, காந்தியுடன் கைகோர்த்து, அவருடன் ஒரு கூட்டு வாக்காளருக்காக இணைந்து செல்லுங்கள். புதிய அரசாங்கத்தில் அவர்களின் பிரதிநிதித்துவம் மற்றும் உரிமைகளுக்காக, தன்னால் முடிந்த அனைத்தையும் செய்வதாக, அவர் ஏற்கனவே உறுதியளித்துள்ளார். காந்தி நேர்மையானவர், அவருடைய வார்த்தையைத் தவறமாட்டார், அவருடைய செல்வாக்கு இதர வகுப்புகளுடன் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான உங்கள் போராட்டத்தில் நான் உள்ளளவில் உதவுவேன், அவர்கள் எப்பொழுதும் என் இதயத்தின் அருகாமையில் இருப்பவர்கள்.”**

அதற்கு பதிலளித்த டாக்டர் அம்பேத்கர், “நீங்கள் சொல்வதை நான் புரிந்துகொள்கிறேன், நீங்கள் சொல்வது போலச் செய்யவும் விரும்புகிறேன், ஆனால் என்னால் மட்டுமே அதைச் செய்ய முடியாது என்பதை நான் விளக்க விரும்புகிறேன். நான் செயல்படுவதற்கு முன்பு கட்சி, மாகாண மற்றும் அகில இந்திய அளவில் எனது சக ஊழியர்களை அணுக வேண்டும்.”

**“ஆனால் நீங்கள் அவர்கள் மீது உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்த முடியும், நான் உங்களுக்கு உள்ளளவில் உதவுவேன்.”**

“நான் செய்வேன்; ஆனால் அவர்கள் அதை ஏற்றுக்கொள்வார்களா இல்லையா என்று என்னால் சொல்ல முடியாது” என்று அம்பேத்கர் பதிலளித்தார்.

**“நீங்கள் கவலைப்படத் தேவையில்லை”** என்று பாபா அவருக்கு உறுதியளித்தார். **“நான் உங்களிடம் கூறியதை நீங்கள் நினைவில் வைத்தால் போதும். உங்கள் கட்சியில் உள்ளவர்களை இணங்கச் செய்து, உங்கள் செல்வாக்கின் மூலம் அவர்களை வெல்ல முயற்சி செய்யுங்கள். இதர அனைத்தையும் நான் பார்த்துக் கொள்வேன். நீங்கள் அவ்வாறு செய்வீர்களா?”**

“ஆம், நான் செய்வேன்” என்று டாக்டர் அம்பேத்கர் கூறியதும், பாபா அவரிடம் உறுதி அளிக்குமாறு கூறினார்; டாக்டர் அம்பேத்கர் அவ்வாறே செய்தார்.

**“நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்,”** என்று பாபா முடித்தார். **“நீங்கள் உங்கள் மக்களுக்காக மிகப் பெரிய சேவையைச் செய்வீர்கள். எனவே,**

**நினைவில் கொள்ளுங்கள், உங்களைப் பார்த்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.**"

"நானும் அப்படித்தான்" என்றார் அம்பேத்கர்.

அதன் பின்பு டாக்டர் அம்பேத்கர் விடைபெற்றுச் சென்றார். அவரது சக தோழர்களுடன் கலந்துரையாடி, அனைவரும் கூட்டு வாக்காளர்களை ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டனர்; ஆனால் நிகழ்வுகளின் காலப்போக்கில், அது நடக்க நீண்ட காலம் பிடித்தது.

மும்பையில் அம்பேத்கரை சந்தித்த பின்பு, பாபா நாசிக் திரும்பிச் சென்றார். சில நாட்களில், பூனா ஏர்வாடா (YERWADA) சிறைச்சாலையில் இருந்த மஹாத்மா காந்தியை சந்தித்துப் பேச ருஸ்தத்தை அனுப்பிவைத்தார்.

ருஸ்தம் காந்தியை சந்திக்க முடியவில்லை, ஏனெனில் அந்த நேரத்தில் தனிப்பட்ட சந்திப்பு அனுமதிக்கப்படவில்லை.

விரைவில், பிரிட்டிஷ் அரசாங்கம் நேரடி சந்திப்பிற்கான கட்டுப்பாடுகளை நீக்கியது; **1932** செப்டம்பர் **21** அன்று, காந்தியைப் பார்க்க நாசிக்கிலிருந்து சாஞ்சி, ராம்ஜூ இருவரையும் பாபா அனுப்பி வைத்தார். சிறைச்சாலையின் திறந்த வெளியில் ஒரு படுக்கையில் அமர்ந்து, காந்தி கை ராட்டினத்தில் நூல் நூற்றுக் கொண்டிருந்தார். காந்தி, அவர்களை அன்புடன் வரவேற்று அருகில் அமர வைத்தார். அவர்களின் உரையாடல் பின்வருமாறு:

காந்தி அவர்களிடம், "மெஹர் பாபா திரும்பி வந்துவிட்டதாக, இன்று காலை (மும்பை) 'குரோனிக்கிள்' (CHRONICLE) பத்திரிக்கை மூலம் அறிந்தேன். நான் செய்தித்தாள்களை கவனமாகப் படிப்பதில்லை, ஆனால் சர்தார் (பட்டேல்) அவற்றை ஒரு மூலையிலிருந்து கடைசி மூலை வரைப் படிக்கிறார், அவர் இதைப் பற்றி என்னிடம் கூறினார். பாபா எப்போது திரும்பி வந்தார்?" என்று கேட்டார்.

"பாபா செப்டம்பர் **5**ஆம் தேதி இந்தியா திரும்பினார்" ராம்ஜூ பதிலளித்தார்.

காந்தி உடனே, "அவரைப் பற்றி செய்தித்தாள்களில் இவ்வளவு காலமாக எந்த செய்தியும் இல்லை, அவர் திரும்பி வருவது கூட வெளியிடப்படவில்லை? பாபா ஐரோப்பாவிற்குச் சென்ற போது, அதைப் பற்றி இந்திய பத்திரிகைகளில் படித்தேன்" எனக் கூறினார்.

"காரணம், பாபாவின் வருகை தனிப்பட்டதாக வைக்கப்பட்டது" என்று சாஞ்சி பதிலளித்தார்.

ராம்ஜூ உடனே, "குரோனிக்கிள் பத்திரிகையில் வெளிவந்த செய்திகள் கூட, பாபாவால் அங்கீகரிக்கப்படவில்லை. உங்களை சந்திக்க அனுமதி மறுக்கப்பட்டதால், அடுத்த நாள் ருஸ்தம் அதை வெளியிட்டார்" என்றார்.

காந்தி, "மெஹர் பாபாவிடம் இருந்து ஏன் செய்தி எதுவும் இல்லை என்று நான் அடிக்கடி விசாரித்து வந்தேன். அவரைப் பற்றி ஒவ்வொரு நாளும் இங்கு சில பேச்சுக்கள் எழும், அவருடைய பெயர் எங்கள் உரையாடல்களில் எப்படியேனும் ஊடுருவி விடும். அவர் பேச ஆரம்பித்துவிட்டாரா?" என்று கேட்டார்.

“பாபா, அமெரிக்காவில் தனது மௌனத்தைக் கலைக்க இருந்தார், ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை” என்று ராம்ஜூ பதிலளித்தார்.

“அவரது முதல் உரையை, வானொலியில் ஒலிபரப்ப விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டன, ஆனால் பாபா, அவற்றை தள்ளிவைத்தார், அவர் மௌனத்தை இன்னும் கைவிடவில்லை” என்று சாஞ்சி விளக்கினார்.

ராம்ஜூ, “இது அவரது மௌனத்தின் எட்டாவது வருடம். ஜூலை மாதம் தனது ஏழாம் ஆண்டை நிறைவு செய்தார்” என்றார்.

காந்தி, “ஆமாம், அவர் தனது மௌனத்தைக் கலைப்பதற்கான ஏற்பாடுகள் பற்றிப் படித்தேன். ஆனால் உண்மையில், இப்போது அவர் அதை வெகுதூரம் எடுத்துச் செல்கிறார்!”

அப்போது ராம்ஜூ, “பாபா, சீனா மற்றும் ஜப்பானுக்கும் சென்றுள்ளார்” என்று கூறினார்.

ஆச்சரியத்துடன் காந்தி, “ஓ, அவர் அமெரிக்கா, சீனா மற்றும் ஜப்பான் அனைத்து நாடுகளுக்கும் சென்று வந்தாரா? அவர் அமெரிக்காவில் எத்தனை நாட்கள் தங்கியிருந்தார்?” என வினவினார்.

பாபாவுடன் தானும் சென்றதாக, சாஞ்சி விளக்கினார், “பாபா சுமார் பதினைந்து நாட்கள் அமெரிக்காவிலும், ஜப்பானில் ஒரு நாளும், சீனாவில் ஒரு வாரமும் தங்கியிருந்தார். அவர், திட்டமிட்டபடி அமெரிக்கா திரும்புவதற்கு பதிலாக, ஐரோப்பாவிற்குப் புறப்பட்டுச் சென்றார்; மும்பையில் ஒரு முழு நாள் கூட தங்கவில்லை.”

ராம்ஜூ, காந்தியிடம், “கடந்த ஜனவரி மாதம், நீங்கள் கைது செய்யப்படுவதற்கு சற்று முன்பு, பாபா உங்களை சந்தித்தபோது, உங்களுக்கு நினைவிருக்கும், தாழ்த்தப்பட்டவர்களின் தலைவர்களை சந்திப்பதாகவும், தனது செல்வாக்கைப் பயன்படுத்தி கூட்டு வாக்காளர்களை ஏற்றுக் கொள்ள வைப்பதாகவும் அவர் உங்களுக்கு உறுதியளித்தார். அதன்படி, அவர், அயல்நாட்டுப் பயணத்தைத் தொடங்குவதற்கு முன்பு, சில உள்ளூர் தலைவர்களை சந்தித்தார், ஆனால் டாக்டர் அம்பேத்கரால் வரமுடியவில்லை, பாபா பின்னர் ஐரோப்பாவிற்கும் அமெரிக்காவிற்கும் புறப்பட்டார்.

“பாபா திரும்பி வந்ததும், அவர் உங்கள் கைது பற்றி அறிந்து, டாக்டர் அம்பேத்கரை அழைத்தார், அவருடன் அரை மணி நேரம் பேசினார். பாபா அவரிடம் தெளிவுபட விளக்கினார், அவர் எந்த அரசியலிலும் பங்கேற்கவில்லை என்றாலும், சமாதானத்தை நிலைநாட்ட விரும்பினார்; தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இடம் மற்றும் பிற உரிமைகளை ஒதுக்கீடு செய்வதன் மூலம், கூட்டு வாக்காளர்களை ஏற்றுக்கொள்வது அவர்களின் சொந்த நலனுக்காக என்றும், இல்லையெனில், அவர்கள் தங்களைத் தாங்களே தங்கள் விருப்பப்படி ஒரு தீண்டத்தகாத குழுவாக உருவாகி, விரைவில் அல்லது பின்னர் அரசியலில் மட்டுமல்ல, மதம், ஆன்மீகம் போன்றவற்றிலும் அப்படியே அழைக்கப்படும் நிலையில் உள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

“அம்பேத்கர், அவர் பாபாவின் ஆலோசனையை மனதில் வைத்துக் கொள்வார், ஆனால், முதலில் அவர் தனது குழு உறுப்பினர்களுடன்

கலந்தாலோசிக்க வேண்டும், பின்பு முடிவுகளை, பாபாவிற்குத் தெரியப்படுத்துவதாகவும் கூறினார். நீங்கள் வாக்காளர் பிரச்சினையின் இந்தத் தீர்வுக்காகத் தொடங்கிய உண்ணாவிரதத்திற்கு விரைவில் தீர்வு காணுங்கள், ஆனால், பாபா, நீங்கள் 40 நாட்கள் உண்ணாவிரதம் இருப்பதை விரும்புகிறார். பாபாவுடன் ஓர் இரவைக் கழிப்பதற்கான உங்கள் விருப்பத்தையும், 'திறவுகோலைக் கோருவது' பற்றியும் குறிப்பிடுகிறார்... "

காந்தி குறுக்கிட்டு, "திறவுகோல்?" என வினவினார்.

"இது லண்டனில் பாபாவை சந்தித்த வேளையில் நீங்கள் அவரிடம் கோரியது" என்று சாஞ்சி குறிப்பிட்டார்.

ராம்ஜூ இவ்வாறு கூறி முடித்தார், "உண்ணாவிரதத்திற்குப் பிறகு, நீங்கள் நாற்பதாவது இரவை, பாபாவுடன் கழிக்க வேண்டும், அப்போது அவர் உங்களை, இறைநிலையை உணரச் செய்வார்."

அப்போது காந்தி, "இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வந்தால் நான் உண்ணாவிரதத்தை நிறுத்திவிடுவேன் என்ற நிபந்தனையின் கீழ் இதைத் தொடங்கினேன். அவ்வாறான நிலையில், நான் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தால், எனது வார்த்தைக்கு எதிராகச் சென்றது போல் ஆகிவிடும்" என்று விளக்கினார்.

"அதனால்தான் 'முடிந்தால்' உண்ணாவிரதத்தைத் தொடரும்படி நாங்கள் உங்களிடம் கேட்டுக்கொண்டோம்" என்று ராம்ஜூ பதிலளித்தார்.

காந்தி தொடர்ந்து, 'முடிந்தால்' என்பதை இரண்டு வழிகளில் விளக்கலாம் என்றார், "முதலில், உடலில் சகிப்புத்தன்மை இருந்தால்..."

ராம்ஜூ அமைதியாகக் குறுக்கிட்டு, "பாபாவின் ஆலோசனைப்படி நீங்கள் உண்ணாவிரதத்தை நீடித்தால், உடல் ரீதியாக எந்தத் தீங்கும் இராது என்று உங்களுக்கு உறுதியளிப்பதாக, பாபா அறிவுறுத்தி உள்ளார். பாபாவின் மண்டலியில் ஒருவர் (பிளீடர்) கடந்த மூன்று வருடங்களாக, திரவ ஆகாரம் உண்டு, உண்ணாவிரதம் இருந்து வருகிறார். மற்றொரு சீடர் பன்னிரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு விரதத்தைத் தொடங்கினார், மேலும் அவர் 40 நாட்கள் தண்ணீர் மட்டுமே அருந்துமாறு பாபாவால் அறிவுறுத்தப்பட்டார். உங்களின் நீடித்த உண்ணாவிரதம் அறிவிக்கப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே பாபா இந்த அறிவுறுத்தல்களை வழங்கியது, இப்போது மிகவும் குறிப்பிடத்தக்கதாகத் தெரிகிறது."

காந்தி கூறினார், "பாபாவின் சீடர், நோன்பைப் பொறுத்தவரை அதை முழுமனதாக வரவேற்று, மிகவும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்! நிச்சயமாக, ஒருவர் நோன்பை, நீண்ட நாட்களுக்காக வைக்கும் நோக்கத்துடன் தொடங்கினால், ஒரு பேச்சுக்காக 90 நாட்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள், இதற்கிடையில் அவர் உடலைத் துறந்துவிட்டால், அவருடைய நோன்பு பூரணமானதாகக் கருதப்படுகிறது. அது மட்டுமல்லாமல், இந்த விஷயத்தில், கடைசி மூச்சு வரை ஒருவர் உண்ணாவிரதம் கடைப்பிடிப்பதாக இருந்தால், அடுத்த பிறவியிலோ அல்லது அடுத்த உலகத்திலோ, அவர் ஆசையிலிருந்து நிரந்தரமாக விடுபட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்.

“‘முடிந்தால்’ என்பதன் மற்றொரு அர்த்தம் என்னவெனில், ஒரு இயல்பான தூண்டுதல் அல்லது இதுவரை செய்தவை அனைத்தும் பயனற்றவை என்று ஒருவர் உணர வேண்டும். அல்லது பாபா விரும்பியபடி நோன்பு அனுசரிக்க, அல்லது இதைச் செய்ய கடவுள், ஒருவரின் காதில் கிசுகிசுத்து தூண்டுகிறார் என்ற ஏதாவது சூழ்நிலை இருந்தால், ஆன்மீக முடிவை நோக்கி, அதைச் செய்ய முடியும். இங்கேயும் லண்டனிலும் இந்த விஷயத்தில் ஒரு தீர்வை எட்டியதாக உறுதி செய்ததும் (அதை நான் சந்தேகிக்கிறேன்), நான் இந்த விரதத்தைக் கைவிட்டாலும், முழுத் தீர்வு கிடைக்காவிட்டால் நான் மீண்டும் நோன்பைத் தொடங்குவேன் என்று சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அறிவிப்பேன். அப்படி ஒரு போலி நாடகம் ஆடுவதானால் நான் அவ்வாறே செய்வேன். தாழ்த்தப்பட்டவர்களுக்கான கூட்டு வாக்காளர் பிரச்சினையில், நான் மிகுந்த ஆர்வமாக இருப்பது மட்டுமல்லாமல், அவர்களுக்கு வேண்டியதை முடிப்பதில் உறுதியாக இருக்கிறேன். தீண்டாமை மறைந்து போக வேண்டும்; அது நடக்காவிடில், எனது உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பேன்.”

அப்போது ராம்ஜூ, காந்தியிடம், “ராஜ்புத்னாவிலும் பின்பு லண்டனிலும் பாபா உங்களை சந்தித்ததிலிருந்து, பத்திரிகைகளில் கணிசமான அளவு தவறான தகவல்கள் வந்துள்ளன. இது, பத்திரிகை நிருபர்களால் இருக்கலாம், பாபாவை நேரடியாகப் பேட்டி காணும் போது, உங்களுடன் அவர் கொண்டிருந்த தொடர்பு குறித்து பலமுறை கேள்வி எழுப்பினர். உங்களைப் பற்றிய சில குறிப்புகள் நிருபர்களிடம் கூறப்பட வேண்டியிருந்தது, ஆனால் பாபா கூறியதைத் தவறாக எடுத்துக் கொண்டதாகத் தெரிகிறது.”

சாஞ்சி உடனே குறுக்கிட்டு, “இந்தியாவை விட்டு வெளியேறுவதற்கு முன்பு, பத்திரிகைகளுக்கு அளித்த ஒரு நேரடி பேட்டியில், எனக்கு நினைவிருக்கிறது, பாபா குறிப்பாக உங்களைப் பற்றி எதுவும் குறிப்பிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். ஆயினும் தனிப்பட்ட முறையில் நீங்கள் உங்கள் அரசியல் பணிகளை முடித்த பின்னர், அவருடன் அமெரிக்கா செல்வதாக உறுதியளித்தக் கருத்தை, பாபா பகிர்ந்து கொண்டார்” என்றார்.

ராம்ஜூ மேலும் கூறுகையில், “இது ‘காந்திஜியின் ஆன்மீக குரு’ போன்ற பரபரப்பைத் தூண்டும் தலைப்புச் செய்திகளாகத் திசை திருப்பப்பட்டது; பாபாவின் வெளிநாட்டுப் பயணம் குறித்த செய்தித்தாள் துணுக்குகளின் குறிப்பேடுகளில் இதைக் காணலாம்” என்று விளக்கினார்.

செய்தித்தாள் கட்டுரைகளைப் பார்த்து, காந்தி, “இவை பெரும்பாலும் ஆங்கில பத்திரிகைகளிலிருந்து வந்தவை என்று நான் நினைக்கிறேன்” என்றார்.

“ஆமாம், அமெரிக்க பத்திரிகைகளின் தொகுப்புகள் இங்கே சேர்க்கப்படவில்லை, ஆனால் அந்த நாட்டில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது” என்று சாஞ்சி உறுதிப்படுத்தினார்.

ராம்ஜூ கூறினார், “ஹாலிவுட்டில் கூட, பொருள்முதல்வாதம் அதன் உச்சகட்டத்தில் இருப்பதாகக் கூறினாலும், திரைப்பட நட்சத்திரங்களான மேரி பிக்ஃபோர்ட், டக்ளஸ் ஃபேர்பேங்க்ஸ், தல்லூலா பேங்க்ஹெட் மற்றும் பலர்

பாபாவால் பெரிதும் ஈர்க்கப்பட்டனர். லிபர்ட்டி பத்திரிகையின் இந்தக் கட்டுரை பக்கச்சார்பற்றதாக மிகவும் சிறந்த முறையில் எழுதப்பட்டிருக்கிறது. ஆயினும், அதை எழுதியவர் (ஃபிரடெரிக் காலின்ஸ்) உங்களைப் பற்றி இங்கே ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளார். நீங்கள் அதைப் படிக்க வேண்டுகிறேன், நான் அதன் நகலை உங்களுக்கு அனுப்புகிறேன்."

காந்தி, "ஆமாம், நான் அதைப் படிப்பேன். ஆனால் உங்களுக்கு ஏன் தொந்தரவு? உங்களிடம் இருக்கும் பதிவை என்னிடம் விட்டுச் செல்லுங்கள், பின்பு நான் அதை உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன்" என்று கூறினார்.

ராம்ஜூ மேலும் கூறுகையில், "பத்திரிகைகளில் தவறாகச் சித்தரிக்கப்படுவது குறித்து, அதை, பாபாவின் கவனத்திற்குக் கொண்டு வந்ததும், தாதாசாஞ்சியிடம் (சாஞ்சி) அதை சரி செய்யுமாறு கூறினார். அதைப் பற்றி உங்களுக்குத் தெரிவிக்க லண்டனிலிருந்து தகவல் வந்ததும், அதன்படி நான் உங்களுக்கு எழுதினேன்."

அதற்கு காந்தி, "உங்கள் கடிதம் எனக்குக் கிடைத்ததாகத் தெரியவில்லை. என்னிடமிருந்து உங்களுக்கு ஏதாவது பதில் வந்ததா?"

"இல்லை," என்று ராம்ஜூ கூறி, "ஆனால் நான் பதிலை எதிர்பார்க்கவில்லை. உங்களுக்குத் தகவல் கொடுக்க மட்டுமே எழுதினேன்."

"ஆனால் அந்தக் கடிதம் ஒருபோதும் எனது கைக்கு வரவில்லை" என்று காந்தி கூறினார். "இந்த வகையான தவறான சித்தரிப்பு, இரண்டு வழிகளில் செய்யப்படுகிறது. சிலர் இது எல்லாம் பொய் என்பதை அறிந்திருந்தும் அதை எழுதுகிறார்கள். சிலர் அறியாமல், அதை உண்மை என நம்பி செய்கிறார்கள். எனது வீழ்ச்சியைக் காண ஆங்கிலேயர்கள் மிகவும் ஆர்வமாக உள்ளனர்; அதை அவர்கள் எப்படியாவது கொண்டுவர முயற்சிக்கிறார்கள், ஆனால் ஒருவரை இந்த வழியில் வீழ்த்த முடியாது. நான் என்னைத் 'தாழ்த்திக் கொள்ள' விரும்பினால், அது எனது நோக்கத்தை நிறைவேற்றுவதாகும்; அதேபோல, நான் என்னை 'உயர்த்த' விரும்பினால், நானும் எனது சொந்த நோக்கத்திற்காக, சேவை செய்து சில இலட்சியங்களை நிறைவேற்றுகிறேன்."

அப்போது மாலை ஆறு மணி. விஷயங்கள் அனைத்தையும் விவாதித்த பின்பு சாஞ்சி, ராம்ஜூ இருவரும் புறப்பட ஆயத்தமாயினர். காந்தியும் சிரித்துக்கொண்டே விடையளித்தார்.

ராம்ஜூ, "நாங்கள், உங்களுக்கு பாபாவின் செய்தியை வழங்கியுள்ளோம், ஒவ்வொரு நாளும் சிறையில் பாபாவைப் பற்றிய சில பேச்சுக்கள் எழும்புவதை அவரிடம் தெரிவிப்போம்" என்று கூறினார்.

"ஆமாம், அதை அவரிடம் சொல்லுங்கள்," என்று காந்தி அவர்களின் கைகளைக் குலுக்கியபடிக் கூறினார்.

ராம்ஜூவும் சாஞ்சியும் நாசிக் திரும்பி வந்து காந்தியுடனான சந்திப்பை, பாபாவிற்கு விரிவாகத் தெரிவித்தனர்.

1932 செப்டம்பர், அடுத்த ஓரிரு மாதங்களில், பாபா அவ்வப்போது மெஹறாபாத், பூனா, மும்பை, ஒரு முறை பஞ்ச்கனிக்கும் சென்று, தனது பிரியமானவர்களை சந்தித்தார். நாசிக்கில், தரிசனத்திற்காகப் பெருமளவில் மக்கள் வரத் தொடங்கினர். பெரும்பாலும், பாபா, மண்டலியின் தனிப்பட்ட தேவைகளில், குறிப்பாக, கவனம் செலுத்தவும், அவர் இல்லாத நேரத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்கவும் வேண்டியிருந்தது, மேலும் நவம்பர் மாதத்தில் மேற்கு நோக்கி மறுபடியும் பயணம் மேற்கொள்ள இருப்பதால், மேலும் பல அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இதற்கிடையில் கடிதங்கள், தொலைத்தந்திகள், அவரது ஆங்கிலேய, அமெரிக்க அன்பர்களுக்கு தினமும் அனுப்பப்பட்டன. இந்த நேரத்தில் மெஹர் பாபா, மும்பைக்குச் சென்ற சுருக்கமான ஆனால் பரபரப்பான நிகழ்வுகளைப் பற்றிய விபரங்களை, செப்டம்பர் 17 அன்று ஆங்கிலேய அன்பர்களுக்கு எழுதிய கடிதத்தில் சாஞ்சி விவரித்திருந்தார்:

இந்த வருகைகளின் காட்சிகளை எந்த ஒரு பேனாவாலும் விவரிக்க முடியாது - ஆயிரக்கணக்கான நேர்மையான, அன்புள்ளம் படைத்த ஆத்மாக்கள், அவரது ஒவ்வொரு நகர்வையும் கவனித்து, ஆசிகளைப் பெறும் தருணத்திற்காகக் காத்திருந்தன!

கண்ணீர் மட்டுமே தங்கள் கதைகளைக் கூற முடியும் - அவர் மட்டுமே அன்பின் கண்ணீரைத் தூண்டவும், தெய்வீக அன்பின் காதலர்கள் அதைப் பாராட்டவும் முடியும். இதயத்தின் அமைதியான மொழியில் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த ஆயிரக்கணக்கானோர் அவரிடம் வருவது மட்டுமே இதயத்தை நெகிழ வைக்கும் அளவுக்கு அற்புதமானது!

இந்தக் கண்ணீரின் வெளிப்பாடு மிகவும் தனித்துவமானது!

பாபா, அவரது பணிக்காக, மும்பை போன்ற ஒரு பெரிய நகரத்தில் கூட, ஓர் இடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்கு - ஒரு நாளைக்குப் பலமுறை செல்ல வேண்டும். அவர் வீடு திரும்பும் ஒவ்வொரு முறையும், மக்கள் கூட்டம் அலைமோதும், சில நேரங்களில் நீண்டநேரம் காத்திருக்கிறார்கள், அவரைப் பார்க்க அவ்வளவு ஆவலுடன் இருக்கிறார்கள். அதுபோல் ஒவ்வொரு முறையும் இப்படி நடந்த வண்ணம் இருப்பது எங்களுக்கு ஆச்சரியமாக உள்ளது, ஏனெனில், பாபாவின் வருகைக் குறித்து எந்த ஒரு அறிவிப்பும், எவருக்கும் தரப்படுவதில்லை.

மேற்கத்திய நாடுகளில் வாழும் பல்வேறு அன்பர்களுக்கு, சாஞ்சி எழுதிய நான்கு கடிதங்களைப் பார்க்கலாம்:

நாசிக்,

18 செப்டம்பர் 1932

பிரியமுள்ள ஜீன்கோ,

பாபா இங்கு வந்ததிலிருந்து அவருடைய பணியில் மும்முரமாக இருக்கிறார்; மேற்கத்திய நாடுகளில் அவர் மேற்கொள்ள வேண்டிய பெரிய

பணிக்காக மீண்டும் அங்குச் செல்வதற்கு முன்னர், இங்குள்ள அனைத்து விஷயங்களையும் ஏற்பாடு செய்கிறார். அவர் எவ்வளவு விறுவிறுப்பாக இருக்கிறார் என்பதை நீங்கள் யூகிக்கக் கூட முடியாது, ஆனால் அவர் முகம் மலர்ந்த புன்னகையுடன், நேரத்தையும் பொருட்படுத்தாமல் - இரவு பகல் பாராமல், உதவி, உறைவிடம் மற்றும் ஆலோசனையைப் பெற, தன்னிடம் வரும் பெரும் கூட்டத்திற்கும் செல்கிறார்.

ஆனால் இந்தப் பணியின் மிகப்பெரிய அழுத்தத்தின் மத்தியிலும், தினசரி நூற்றுக்கணக்கான மக்களால் சூழப்பட்டிருந்தாலும், அவர் அடிக்கடி அவர்களிடமிருந்து வெளியே வந்து - எங்கேயேனும் தொலைவில் - அவரது இதயத்திற்கு மிகவும் அருகில் மற்றும் எண்ணங்களில் எப்போதும் குடியிருக்கும் பிரியமானவர்களின் அழைப்பிற்கு பதிலளிக்கும் விதத்தில் தனியாக இருப்பதையும் காணலாம். ஒரு தாய், துயரத்தில் அழுதுகொண்டே பாதுகாப்பை நாடி வரும் தனது குழந்தையிடம் விரைந்து வருவது போல், உலகின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் அன்பை வெளிப்படுத்தி அழுகிற ஆத்மாவிற்கு அவர் பதிலளிக்க வேண்டும். சில இதயங்களை வெதுவெதுப்பாக்கவும், பிரிவைத் தாங்கமுடியாமல் கூக்குரலிடும் சில ஆத்மாக்களை ஆறுதல்படுத்தவும், அவர் அதையெல்லாம் அன்பாகச் செய்கிறார். அத்தகைய அன்பு உள்ளங்கள் யார் என்பது அவருக்கும், அவரது அரவணைப்பை உணர்பவர்களுக்கும் மட்டுமே தெரியும்.

கடிதங்கள் மற்றும் செய்திகளின் இயல்பான தகவல் தொடர்புக்கு அதிக மதிப்பு இல்லை என்று தோன்றும் அளவுக்கு இது அடிக்கடி நிகழ்கிறது. இருப்பினும், நீங்கள், ஜீன்கோ, எப்போதும் அவரது எண்ணங்களில் இருப்பதால், அவர் உங்களிடம் மிகவும் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைகிறார் என்று என்னிடம் எழுதக் கூறுகிறார் - பிரியமான அன்பர்களாகிய நீங்கள் - குறிப்பாக மிகவும் கடினமான சூழ்நிலைகளில், அவரது விருப்பத்திற்கு இணங்கி, அமைதியாக அடிபணிவது அவருக்குப் பெருமகிழ்ச்சியை அளிக்கிறது.

நீங்கள் பாபாவின் சோதனைக்கு உண்மையாக இருப்பதை நிரூபித்துள்ளதைக் கண்டு அவர் மிகவும் மகிழ்ச்சியடைகிறார்; அவருடைய விருப்பத்திற்கு நீங்கள் முழுமையாக சரணடைந்ததன் மூலம் அவருக்கு மிகுந்த நிம்மதியை அளித்து, எல்லா வகையிலும் அவருடைய அறிவுறுத்தல்களுக்குக் கட்டுப்படுகிறீர்கள். இதற்காக அவர் உங்கள் அனைவரையும் நேசிக்கிறார்! அவர் தொடர்ந்து உங்களை நினைவில் கொள்கிறார்! உங்களைப் பற்றியும் உங்கள் அன்பைப் பற்றியும் மீண்டும் மீண்டும் மண்டலிக்கு எடுத்துக் கூறுகிறார்!

இங்கிலாந்தின் கிம்கோவும், அமெரிக்காவின் ஜீன்கோவும் அவரது இதயத்தில் நிரந்தரமாகத் தங்கியுள்ளனர்.

அதே நாளில் இனிட் கோர்ஃபிற்கு எழுதிய கடிதத்தில், சாஞ்சி இப்படிக் குறிப்பிட்டிருந்தார்:

நீங்கள் இப்போது அவருடைய பிரியமானவர்களில் ஒருவராக இருக்கிறீர்கள்; அவர் இதயத்தில் மிக நெருக்கமாகவும், அவர் மீது வைத்திருக்கும்

அன்பின் மூலம், அவருடைய எண்ணங்களில் எப்போதும் நிறைந்திருக்கிறீர்கள். உங்களின் விழிப்புணர்வால் அனைத்து குறைபாடுகளையும் தவிர்த்து, உங்கள் அன்பால் நீங்கள் மிகவும் வளர்ந்து, அவருக்கு மிக அருகாமையில் இருப்பதில் பாபா பெருமகிழ்ச்சியடைகிறார், மேலும் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளும் திறந்த, நேர்மையான இதயம் உங்களிடம் உள்ளது - மனித தன்மையின் சிறப்பான இந்தப் பண்பை அவர் பெரிதும் விரும்புகிறார்.

அதனால்தான், அவர் உங்களை மிகவும் நேசிக்கிறார், மேலும் அவர் மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்கான மாபெரும் பணியில் உங்கள் பங்கை வழங்குமாறு, தம்மில் ஒருவராக நினைத்து, அன்புடன் அதைக் கேட்டார். பங்களிப்புக்கான அவரது அழைப்புக்கு நீங்கள் உடனடியாக, பதிலளித்ததில் அவர் மகிழ்ச்சியடைகிறார்.

அன்புள்ள இனிட், நான் உங்களுக்கு விளக்க முயற்சிப்பது என்னவெனில், பாபா எப்பொழுதும் விரும்பும், உயர்வாக மதிப்பிடும் ஒரே விஷயம் அன்பு மட்டுமே.

ஆனால் பாபா, எப்பொழுதும் தன் இதயத்தில் குடியிருக்கும் மனிதகுலத்திற்காக, தன்னலமற்ற, தூய்மையான அன்பினால் செய்யப்படும் சில 'தியாகங்களை' அவர் விரும்புகிறார்; வாழ்க்கையில் இதுவே அவரது முக்கிய பணி. அதனால்தான், அவரது சிறந்த, நேர்மையான அன்பர்கள், அவருக்கு அளிக்கும் அனைத்து அன்பையும் அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொருவரும் 'தியாகம்' செய்ய வேண்டும் என்று அவர் கோருகிறார். மனிதகுலத்தின் இந்தக் குறிக்கோளை அடைவதற்காக, அவர் தனது அன்பர்களின் தவறான புரிதல்களையும், 'சந்தேக பார்வை'யையும் எதிர் கொள்ளும் அபாயம் ஏற்படுகிறது.

ஏழைகளின் நலனுக்காக, தன்னலமற்ற, நற்பண்புள்ள மனப்பான்மையுடன் காட்டும் அன்பு, பல ஆண்டுகளாக மலைகளில் அல்லது ஏகாந்தவாசத்தில் இருந்து புரியும் யோகா அல்லது தியானத்தை விட மிகவும் சிறப்புமிக்கது, குறிப்பாக இந்தத் தியாகத்தின் கோரிக்கையை இறைநிலையை அடைந்த ஒரு குருநாதர் விடுக்கும் போது - ஏனெனில், ஒரு குருநாதர் கடந்த காலத்தில் தன்னுடன் ஆழமான தொடர்புகளை வைத்திருந்த அன்பர்களிடமிருந்து மட்டுமே அந்தத் தியாகத்தைக் கோருகிறார், வேறு எவரிடமிருந்தும் ஒருபோதும் எதிர்பார்ப்பதில்லை; மேலும் குருநாதரின் சிறப்புமிக்க அருளால் தியாகம் புரியும் அன்பர்களை, உன்னதமான உச்சத்திற்கு எடுத்துச்செல்ல விரும்புகிறார்; இது மிகவும் அரிதானது மட்டுமின்றி, தகுதியானவர்களுக்கு மட்டுமே அளிக்கப்படும் வெகுமதி.

நீங்கள் இவர்களில் ஒருவராக இருக்கிறீர்கள், ஆகவே இவ்வளவு அன்பும், அன்பிற்கான கோரிக்கையும். நீங்கள் இப்போது புரிந்துகொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

**1932, அக்டோபர் 2ஆம் நாள், நாசிக்கிலிருந்து சாஞ்சி, இங்கிலாந்து (கிம்கோ) பெண்மணிகளுக்கு எழுதிய கடிதம்:**

பிரியமுள்ள கோபியர்களுக்கு,

பரபரப்பான மற்றுமொரு வாரம், ஏற்கனவே பதில் எழுதக் காத்திருக்கும் நீண்ட பட்டியலை மேலும் நீளமாக்குகிறது. பகலும் இரவும் வந்து செல்கின்றன; எப்படி, எப்போது, என எண்ணுவதற்கு எங்களுக்கு நேரமில்லை.

மேற்கிலிருந்து கடிதங்கள் மற்றும் தொலைத்தந்திகள் - ஐரோப்பாவிலிருந்து, அமெரிக்காவிலிருந்து - கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் குவிந்த வண்ணம் உள்ளன; ஒவ்வொன்றிலும் ஒரே தொனி, ஒரே இசை - இதய கீதம்: "ஓ, நாங்கள் உங்களை எப்படி நேசிக்கிறோம், பாபா, மற்றும் உங்களோடு வாழ விரும்புகிறோம், நீங்கள்... உங்கள் சேவை, தியாகம், துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள... உங்கள் பிரிவின் வேதனையைத் தீவிரமாக உணர்கிறோம், ஆனாலும் எங்கள் ஆழ் இதயங்களில் நீங்கள் இருப்பதை உணர்கிறோம். நாங்கள் உங்களுடன் இருக்க விரும்புகிறோம், உங்களின் உடலளவிலான சகவாசமும் தொடர்பும், உங்கள் அருகில், அரவணைப்பில் இருக்கவும் ஆவலாய் உள்ளோம். என்றாலும், பிறர் உங்களின் சகவாசத்தைப் பகிர்ந்து கொள்ளவும், அனுபவிக்கவும் வேண்டும் என்ற எண்ணத்தில் நாங்கள் திருப்தியுடன், பிறரின் சிந்தனையில் மகிழ்ச்சி அடைகிறோம்.

ஆனால் இந்த அனைத்து கடிதங்கள் மற்றும் தொலைத்தந்திகளில் உங்களிடமிருந்து வந்தவற்றை மட்டுமே அவர் தன்னுடன் வைத்திருக்கிறார் - அவருடைய பிரியமான கிம்கோ.

இப்போது, இங்கே பாபா மேற்கொள்ளும் பணியைப் பற்றி என்ன சொல்வது? விவரங்கள் தேவையற்றதாக இருந்தாலும், நீங்கள் இப்போது அவருடைய வட்டத்து மண்டலி உறுப்பினர்களாக இருப்பதால் - அவர் பிறருக்காகப் பணிபுரிகிறார் என்று சொல்வது போதுமானது. ஆயிரக்கணக்கான மக்கள் அவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு, அவரிடம் வந்து முறையிடுகிறார்கள்! அது தவிர, மேற்கத்திய நாடுகளுக்கான தனது மாபெரும் பணியைத் தொடரும் நோக்கத்தில், மீண்டும் புறப்படுவதற்கு முன்னர், இங்கு அனைத்தையும் சீர்செய்வது, தனது இந்திய மண்டலியுடன் இதர விவகாரங்களைக் கலந்து ஆராய்வது - இவை அனைத்தும் மிகப்பெரிய சிரமத்தை ஏற்படுத்துகின்றன. ஆனால் அவரது எல்லையற்ற சக்திகளைப் பொறுத்தவரை, வேறு யாராக இருந்தாலும் உண்மையில் தாங்க முடியாமல் தவித்துவிடுவார்கள்.

ஆனால் அதையெல்லாம் செய்யும்போது, அவர் தனது கிம்கோவின் பெயரைக் குறிப்பிடாத நாளே இல்லை. இந்த அன்பான பெயர், தினசரி விவாதத்திற்கும், இனிமையான பேச்சுக்கும் ஒரு முக்கிய அங்கமாக உருவெடுக்கிறது. மேலும், உங்களைப் பற்றிய இந்த உற்சாகமான, அருமையான பேச்சும், இனிமையான உங்கள் அன்பும், தினசரி வழக்கமான வேலைகளுக்கு இடையில் ஒரு வகையான பொழுதுபோக்காக அமைகிறது.

ஆமாம், உண்மையில் நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள்! ஆனால், டார்லிங் பாபா, உங்களைக் குறித்து அவர் உள்ளத்தில் வைத்திருக்கும்

ஒவ்வொரு எண்ணத்திற்கும் நீங்கள் உண்மையிலேயே தகுதியானவர்கள்! இதை எண்ணி நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்!

இப்போது, நான் முடிப்பதற்கு முன்பு, சில நல்ல செய்திகள் - அவருடைய மேற்கத்திய பயணத்தைப் பற்றி! நிகழ்வுகளின் போக்கிலிருந்து பார்த்தால், அவர் நவம்பர் தொடக்கத்தில் இத்தாலிக்குப் புறப்படலாம் என்று தோன்றுகிறது, பின்பு... ஜனவரி மாதத்தில் இனிமையான கனவுகள் நனவாகும்! ஆகவே, உங்கள் இதயத்தில் அன்பின் உருவாகத் திகழும் ஸ்ரீபாபா, உங்கள் முன்னிலையில் உடல் ரீதியாக நிற்கும்போது, அன்பின் சிறப்பான கனவுகளில் நீங்கள் வாழ வழிவகுக்கிறது. ஓ, அந்த ஆனந்தமான எண்ணங்களின் சங்கிலியை நான் உடைக்க விரும்பவில்லை!

எனவே, அடுத்த மாதம் மீண்டும் சந்திக்கும் வரை, அன்புடன்...

ஏறக்குறைய இரண்டு வாரங்களுக்குப் பிறகு, லண்டனில் வாழும் ஆங்கிலப் பெண்மணிகளுக்கு, சாஞ்சி மீண்டும் எழுதினார்:

**நாசிக், அக்டோபர் 15, 1932**

அன்பான கிம்கோ,

உலகம் 'அன்பிற்குரியவரை' விரும்புகிறது, உண்மையின் உருவான ஒருவரை அடையத் தவிக்கிறது; அவர் மிகவும் அரிதானவராகவும், எளிதில் கண்டுகொள்ள முடியாதவராகவும் இருக்கிறார். அத்தகைய ஒருவரைக் காணும்போது, லட்சக் கணக்கானவர்கள் அவரின் இனிமையான அன்பை நாடி ஓடுகிறார்கள் - அனைவரும் அவருடைய தொடர்பில் வருகிறார்கள். ஆனால் ஒரு சிலர் - மிக, மிகச் சிறிய அளவில் ஒரு சிலர் - பிரியமானவரின் இதயத்தில் இடத்தைப் பிடித்து, அவருடன் நெருங்கிய தொடர்பு கொள்கிறார்கள். இவர்களில் கூட, அவருடைய இதயத்திற்கு இன்னும் மிக நெருக்கமாக இருப்பவர்கள், உலகம் உண்மையாக ஏங்கித் தவிக்கும் 'அந்த உண்மைப்பொருளாகிய அன்பைக் கண்டு கொள்பவர்கள்' இன்னும் மிகக் குறைவாகவே உள்ளனர்.

நீங்கள், கிம்கோ, உலகின் மிக இனிமையான அன்பின் பொக்கிஷத்தைக் கண்டுபிடித்து, உங்கள் இதய கதவுகளைத் தட்டிய அதிர்ஷ்டசாலிகள். அவர் உங்களுக்கு உலகில் மிகச் சிறந்ததை - அவருடைய எல்லையற்ற அன்பை - வழங்குவதில் மகிழ்ச்சியடைந்தார் - நீங்கள் அனைவரும் மிகவும் அற்புதமாக பதிலளித்தீர்கள், அவர் தனது அன்பான இதயத்தில் மிக மென்மையான இடத்தை உங்களுக்கு வழங்கியுள்ளார். நீங்கள் அனைவரும் அவரை உங்கள் முழு இதயத்தோடு நேசித்தீர்கள், அவருக்காக வாழவும் அல்லது உயிரை விடும் அளவுக்கு நேசித்தீர்கள், இதன் விளைவாக, இங்கு, அவருக்கு பலதரப்பட்ட செயல்பாடுகள் மற்றும் இயக்கங்கள் இருந்தபோதிலும், அவருடைய மனதிலும் இதயத்திலும் நீங்கள் எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறீர்கள்.

அவர் தனது நேரத்தின் ஒவ்வொரு நொடியிலும் மிகவும் மும்மரமாக, கிட்டத்தட்ட ஓய்வின்றி இருந்தாலும், அவர் எப்பொழுதும் தனது கிம்கோவின்

இனிமையான பெயரை இதயத்தில் உச்சரிக்கிறார் என்று ஒருவர் உங்களுக்கு எப்படிச் சொல்ல முடியும்?

பாபாவும், நாங்கள் அனைவரும் அடிக்கடி பேசி மகிழும் ஒரே பெயரும், வெளிநாட்டுப் பொருளும் இதுதான். ஒவ்வொரு வாரமும் கடிதங்களை இங்கிருந்து வான் வழி உங்களுக்கு அனுப்புவதில், அவ்வளவு குறிப்பாக இருப்பதைக் காண்பதே சிறப்பு. இரண்டு மூன்று வாரங்கள் உங்களிடமிருந்து கடிதங்கள் வராமல் இருந்தால், பாபா மிகவும் வருத்தப்படுகிறார். ஷிரின் (ஆட்ரே) மற்றும் மும்தாஜ் (ஸில்லா) ஆகியோர் உணர்ச்சியற்று, பதிலளிக்காமல் இருப்பது, மாறாக அவரைப் பொருட்படுத்தாதது அவரது வருத்தத்தை அதிகமாக்கியுள்ளது. இதனால் பாபா எவ்வளவு வருத்தமடைகிறார் என்பது உங்களுக்குத் தெரியாது!

ஆனால், ஷாலிமார் (மின்டா) ஒவ்வொரு வாரமும் பாபா அருகில் இல்லாமல் தவிப்பதாகவும், வாழ்க்கை 'உயிரற்று' இருப்பதாகவும் உணர்கிறார். லெய்லாவின் (டிலியா) விசுவாசமும் அன்பும் அவரது வாராந்திர கடிதங்கள் வழியாக வெளிப்படுகின்றன; ஸுலேகா (மார்கரெட்) மற்றும் ஃபிரோஸ் (மேபெல்) ஆகியோருக்கு பாபாவை எப்பொழுதும் மகிழ்விக்கும் வார்த்தைகளை அள்ளி வீசுவதைத் தவிர வேறு எதுவும் தெரியாது; சரோஜாவின் (கிட்டி) அன்பு எப்போதுமே, எப்படி இருக்க வேண்டுமோ அப்படியே, தன்னலமற்றதாக உள்ளது. அனைவரும் ஜனவரி மாதத்தில் பாபாவைப் பார்க்க அன்புடனும், உற்சாகத்துடனும் காத்திருக்கிறார்கள்.

இதுபோன்ற பிரகாசமான அனுபவங்கள் மற்றும் மகிழ்ச்சியான, ஆறுதலான வார்த்தைகள் அவரை மிகவும் உற்சாகப்படுத்துகின்றன.

ஆகஸ்ட் மாத இறுதியில் பாபாவை வெனிஸிலிருந்து அனுப்பிவிட்டு, மார்கரெட், டிலியா, கிட்டி ஆகியோர் லண்டனுக்குத் திரும்பினர். அமெரிக்காவிலிருந்து நோரினா வரும் வரை, பல்கலைக்கழகத்தில் படிக்க குயன்டின், பாபாவால் இத்தாலியின் ஸியானாவிற்கு அனுப்பப்பட்டார். நோரினா, குயன்டின் ஆகியோர் ஜெர்மனிக்கும், ஐரோப்பாவின் பல்வேறு இடங்களுக்கும் சென்று, பாபாவைப் பற்றி மக்களுக்கு எடுத்துக் கூறி, அவர்களின் ஆர்வத்தைத் தூண்ட முயற்சிக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

1932, செப்டம்பர் 26ஆம் நாள் நோரினா ஜெனோவாவிற்கு (GENOA) வந்தார். அங்கிருந்து அவரும் குயன்டினும் இணைந்து அல்லது தனித்தனியாக வெனிஸ் (VENICE), ஃபுளோரன்ஸ் (FLORENCE), அர்ஜென்டா (ARGENTA), வெரோனா (VERONA), மியூனிக் (MUNICH), பாஸல் (BASEL), ஸூரிக் (ZURICH), ஹாலே (HALLE), பெர்லின் (BERLIN), புடாபெஸ்ட் (BUDAPEST) ஆகிய இடங்களுக்குச் சென்றனர். டிசம்பர் இறுதிக்குள் அவர்கள் வெனிஸுக்குத் திரும்பி வந்து, பாபாவின் குழுவில் இணைய இருந்தனர். பாபா ஐரோப்பாவில் அனைத்து இடங்களுக்கும் பயணம் செய்யவிருந்தார், ஆனால் அவருடன் அடிக்கடி நடந்ததைப் போலவே, திட்டங்களில் மாற்றங்கள் நிகழ்ந்தன. பாபாவின் 'மௌன செய்திகள்' அவரது சீடர்கள் விஜயம் செய்த நாடுகளில் உண்மைப்பொருளின் விதைகளை

வேரூன்றச் செய்தன. குயன்டின், நோரினா மற்றும் ருஸ்தம் (ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து தேசங்களுக்கு சென்று வந்தார்) பாபாவின் உள் பணிகளின் வெளிப்புற ஊடகங்கள். அவற்றின் மூலம், இந்த வெவ்வேறு நாடுகளுடன் தனது ஆன்மீகப் பணிக்கான இணைப்பை அவர் உருவாக்கினார்.

நோரினா, குயன்டின் இருவரும் பயணம் செய்த வேளையில், அவர்களின் தொடர்புகளில் மிகவும் குறிப்பிடத்தக்கவை - அக்டோபர் இறுதியில் சுவிட்சர்லாந்தில் வாழும் மனநல மருத்துவர், டாக்டர் கார்ல் ஜங் (Dr. CARL JUNG), நாடக தயாரிப்பாளர் மேக்ஸ் ரெய்ன்ஹார்ட் - MAX REINHARDT (நோரினாவை 'தி மிராக்கிள்' – THE MIRACLE மேடை நாடகத்தில் இயக்கியவர்) மற்றும் பெர்லினுக்கு வெளியில் இயற்பியலாளர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் (ALBERT EINSTEIN) ஆவர். ஐன்ஸ்டீனின் வளர்ப்பு மகள் மார்கோட் (MARGOT) நோரினாவின் தோழி. நோரினா ஒரு முறை ஐன்ஸ்டீனுடனான சந்திப்பை இவ்வாறு விவரித்தார்:

பெர்லின் பல்கலைக்கழகத்தின் (UNIVERSITY OF BERLIN) சமஸ்கிருத பேராசிரியர் லுடர்ஸின் (LUDERS) தாட்சண்யம் காரணமாக, ஐன்ஸ்டீனை சந்திக்க எனக்கு அசாதாரண வாய்ப்புக் கிடைத்தது. நான் 'அசாதாரணம்' என்று சொல்லக் காரணம், அவர் எந்தவோர் ஆர்வமிக்க பார்வையாளரையும் சந்திக்க விரும்புவதில்லை, ஏனெனில் அவர்கள் வருவதற்கான நோக்கத்தில் அவருக்கு நேரடி ஆர்வமும் பலனும் இல்லையென அவர் கருதினார். பெர்லினில் பாபாவிற்கு விருந்தோம்பல் அளிக்க வேண்டும் என்று விரும்பிய பேராசிரியர் லுடர்ஸ், பன்னிரண்டு மணி நேர அறிவிப்புக்குள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். தனிப்பட்ட முறையில் அவருடைய விருப்பத்தைத் தூண்ட சுவாரஸ்யமான எந்தவித காரணமும் இல்லாததால், 'பாபா' என்ற வார்த்தை வருகைக்கான கதவைத் திறந்து வைத்தது.

அடுத்த நாள் மதியம் இரண்டு மணிக்கு, 'உலகின் மிக புத்திசாலி மனிதரின்' வாசலுக்கு முன்பாக நான் நின்றேன். கபூத் (KAPUTH) நகரில் அமைந்த அவரது நவீன பங்களாவின் கண்ணாடி கதவு வழியாக, அவரைக் காண முடிந்தது, அவரது அலுவலகத்தில் ஒரு குறுகிய மேஜையில் கையெழுத்துப் பிரதிகளின் குவியலுக்கு முன் அமர்ந்து தீவிரமாக எழுதிக்கொண்டிருந்தார். மணி ஒலித்ததும், அவர் எழுந்து வந்து கதவைத் திறந்தார்.

எங்கள் சந்திப்பு உடனடியாக நெருக்கமாகவும் அன்பாகவும் மாறியது. அவர் சொன்னார், "எனது மகள் உங்களை மிகவும் நேசிக்கிறாள், நான் உங்களை உங்கள் நற்பெயரால் அறிவேன். ஒரு பெரிய ஆன்மீக மனிதனைப் பற்றி நீங்கள் என்னிடம் ஏதோ சொல்ல விரும்புவதாக, லுடர்ஸ் மூலம் நான் கேள்விப்படுகிறேன்." எனது வருகையின் முக்கிய விஷயத்தைத் தொடங்குவதற்கான இந்த நேரடி வழி எனக்கு நிம்மதியை அளித்தது. சில நொடிகளில், பாபா எங்கள் உரையாடலின் தலைப்பாக இருந்தார்.

ஐன்ஸ்டீனின் இயங்கியல் மொழியைப் புரிந்து கொள்வது மிகவும் கடினம். இது மிகவும் நுட்பமான, அதிநவீன, சிக்கலான ஒன்று. அவரைப் பொறுத்தவரை மிகவும் புதிராகத் தோன்றிய முதல் விஷயம்: மௌனமாக இருக்கும் ஒருவர், பிறரிடம் தனது செல்வாக்கை எப்படி நிலைநாட்ட முடியும்?

அவர் கூறினார், “எனது விஞ்ஞானத்துடன், எனது தத்துவத்தில், நான் வெளிப்படுத்திய அனைத்தும், வாய்மொழியால் வெளிப்படுத்தப்பட்ட சிந்தனை சக்தியின் மூலமாகவே இருந்தன. மனதைத் தவிர மற்ற நபர்களிடமும் அவர் வேறு எதைத் தொட முடியும்? இயேசு, புத்தர், கிருஷ்ணா, பிளேட்டோ மனிதனின் மனதில் வார்த்தைகளை விட்டுச் சென்றனர். இந்த வார்த்தைகள் சிந்தனைகளை உருவாக்கியது; சிந்தனைகள் மனிதனை உருவாக்குகின்றன!”

அவர் கூறியதைக் கேட்டு நான் “மனிதன் தனக்குள்ளேயே உள்ளார்ந்த கடவுளை எப்போதாவது உணர்ந்திருக்கிறானா? புத்தகங்கள், சொற்கள் அல்லது சிந்தனைகள் மூலம் உண்மைப்பொருளை எப்போதாவது அனுபவித்து இருக்கிறானா?” என்ற எனது அமைதியான பதிலை அளித்தேன்.

‘கடவுள் இருக்கிறார்; அவரை உணர்வுபூர்வமாக அறிய வேண்டும், அடைய வேண்டும்’ என்ற பழங்கால கூற்றைக் கேட்டு அவர் சற்றே ஆச்சரியமாக, ஆனால் பயபக்தியுடன் காணப்பட்டார். சில கணங்கள் அமைதியாக இருந்து பின்பு வினவினார், “அத்தகைய மனிதரை நீங்கள் எவ்வாறு அடையாளம் கண்டுகொள்கிறீர்கள்? இயேசு அவருடைய காலத்தில் பிரபலமாக இருந்தாரா?”

“அத்தகைய மனிதர் உண்மையை வெளிப்படுத்துகிறார்,” நான் பதிலளித்தேன். “இந்த மகான்கள் ஓர் ஆழமான, மறுசீரமைக்கும் ஒழுங்கின் உண்மைகளை உருவாக்குகிறார்கள். உண்மைகள் முடிவுகள். இந்த சர்வஞானமும், சர்வ வல்லமையுள்ள தூய்மையான ஞானிகள் உருவாக்கிய முடிவுகள் நீடித்து நிற்கும். உண்மைப்பொருளே அதன் சுயமான சாட்சி.”

ஐன்ஸ்டீனின் நகைச்சுவை உணர்வு திடீரென சிந்தனையின் போக்கை மாற்றியது. இக்கட்டான சூழ்நிலையை சமாளிக்கத் தெரிந்த ஒரு புத்திசாலி குழந்தையைப் போலப் புன்னகைத்து, “அப்படியானால், பறவைகளை உண்ணும் உள்ளுணர்வைக் கொண்ட எனது பூனையின் உணர்வுநிலையை அவர் மாற்ற முடிந்தால், நான் அவரை நம்புவேன்!” என்றார்.

நாங்கள் சிறிது நேரம் பேச்சைத் தொடர்ந்தோம். உலகில் படைக்கப்பட்டவை அனைத்தும் கடவுளின் அன்பினால் உருவானவை, மேலும் ஒருவர் கடவுளோடு ஒன்றாகி, கடவுள் நிலையை அடைவது வரை தூய்மையான, சர்வ வல்லமையுள்ள மற்றும் எங்கும் நிறைந்த சக்தியை கொண்டிருக்க முடியாது என்பதை ஐன்ஸ்டீன் உணர்ந்தபோதும், அவர் இந்த விஷயத்தைப் புரிந்து கொள்வது அவர் அறிவுக்கு அப்பாற்பட்டது என்பதைக் கண்டுகொண்டார். அவர் திடீரெனத் திரும்பி தனது புதிய புத்தகத்தின் கடைசி பக்கத்தை முடிக்க வேண்டியதற்காக மன்னிப்புக் கோரினார். எவ்வாறாயினும், அறையை விட்டு வெளியேறுவதற்கு முன்னர், “உலகின் ஒரு பகுதியிலுள்ள ஒரே ஊரில், ஒரே இடத்தில் இருக்க எங்களுக்கு எப்போதேனும் பாக்கியம் கிடைத்தால், மெஹர் பாபா என்னைப் பார்க்க வருவார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?” என்று கேட்டபோது, நான், “நீங்கள் விரும்பும் போது… அவர் வருவார்!” என்று கூறினேன்.

திருமதி. எல்ஸா ஐன்ஸ்டீனின் (Mrs. ELSA EINSTEIN) மிகவும் அன்பான குழந்தையாக இருக்கும் அவரது மகள் மார்கோட் (ஒரு வளர்ப்பு மகள் என்றாலும்), நாங்கள் ஆழ்ந்த பாசமுள்ள நண்பர்களாக இருந்த ஒரு காலகட்டத்தை நினைவு கூர்ந்தோம்.

1932 செப்டம்பர், அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில், மெஹர் பாபா, மஹாத்மா காந்தி இருவருக்கும் இடையே கணிசமான அளவுக்கு நடந்த கடிதப் போக்குவரத்தை முற்றிலுமாக சாஞ்சி கையாண்டார். ஏர்வாடா சிறையில் ராம்ஜூவும் சாஞ்சியும் காந்தியை சந்தித்த இரண்டு நாட்களுக்குப் பிறகு, சாஞ்சி இந்தக் கடிதத்தை காந்திக்கு அனுப்பினார்:

நாசிக், செப்டம்பர் 23, 1932

அன்புள்ள காந்திஜி,

உங்களுடனான எங்கள் நேரடி பேச்சின் விபரங்களை அறிந்து பாபா மிகவும் மகிழ்ச்சியடைந்தார்; குறிப்பாக (ஏர்வாடா சிறையில்) ஒவ்வொரு நாளும் அவரைப் பற்றி ஏதேனும் பேச்சு எழும்புவதாக நீங்கள் குறிப்பிட்ட செய்தியை வழங்கியபோது, இது மிகவும் இயல்பானது என்று அவர் கூறினார்; ஏனெனில் அவர் உங்களை எப்பொழுதும் அன்புள்ளம் படைத்தவர்களில் ஒருவராக மனதில் வைத்திருக்கிறார். உங்களைப் பற்றி மேலும் குறிப்பிடுகையில், **"நான் அவரை மிகவும் நேசிக்கிறேன்"** என்றும் கூறினார்.

அவரது மௌனத்தைத் தொடர்வது குறித்த உங்கள் கருத்தான, 'அவர் இப்போது அதை வெகுதூரம் கொண்டு செல்கிறார்' என்பதை எடுத்துக் கூறியபோது, பாபா புன்னகைத்து, சைகையால், '**நான் எதிர்காலத்தில் பேசப் போகிறேன்; நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, அவர் என் அருகில் இருக்க விரும்புகிறேன்**' என எடுத்துரைத்து, புன்னகையுடன், '**குஜராத்தி மொழியில் எனது புத்தகங்களை எழுத உதவுவதாக காந்தி எனக்கு உறுதியளித்தார், மேலும் அவர் தனது அரசியல் மற்றும் சமூக சேவைகளை முடித்ததாகக் கருதும்போது, அவர் என்னுடன் அமெரிக்காவிற்கு வருவார்**' என்றும் கூறினார்.

எப்படியிருந்தாலும், நீங்கள் விடுதலையான பின்னர், உங்கள் வசதிக்கேற்ப அவரை மீண்டும் ஒரு முறை சந்திப்பதை, பாபா விரும்புகிறார். கூட்டு மற்றும் தனி வாக்காளர்களின் பிரச்சினை தவிர, தீண்டாமை என்ற கேள்வியைக் குறித்த உங்கள் எண்ணத்தை நாங்கள் பாபாவிடம் கூறியபோது, '**விரைவில் அல்லது பின்பு, தீண்டாமை என்பது ஒட்டுமொத்தமாக வேரோடு மறைந்துவிடும்**', என்று அவர் கூறினார். அது அப்படியே நடந்தாக வேண்டும்!

ஸ்ரீபாபா, உங்களுக்கு எடுத்துரைத்த உண்ணாவிரதம் குறித்து அவருடைய புனிதத்தன்மையுடன் ஒரு சுவாரஸ்யமான, நீண்டநேர கலந்துரையாடல் நடந்தது. இங்கே, அதைக் குறிப்பிடுவதில் எனக்கு இருக்கும் ஒரே தயக்கம், உங்கள் ஆரோக்கியத்தின் மீதுள்ள அக்கறை மட்டுமே. இருப்பினும், நான் சுருக்கமாக எழுத இருப்பதை, தயவு செய்து, உங்கள் வசதிக்கேற்ப வாசிக்க வேண்டுகிறேன்.

பாபாவுடனான எனது பத்து வருட கால சகவாசத்தில், நான் அவரை, பல்வேறு மனநிலைகளில் பார்த்திருக்கிறேன், மேலும் அவர் பல விசித்திரமான விஷயங்களைச் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். ஆயினும், 40 நாட்கள் உண்ணாவிரதத்திற்கு ஈடாக 'ஈஸ்வர தரிசனம்' (கடவுளை நேருக்கு நேர் காண்பது) உங்களுக்கு பாபா அளித்த நேரடி மற்றும் திட்டவட்டமான சலுகையின் முக்கியத்துவத்தைக் குறித்து என்னால் கேட்காமல் இருக்க முடியவில்லை, ஏனெனில், அது ஒரு பல்பொருள் அங்காடியில் விற்பனைக்கு வைத்திருக்கும் தொப்பி அல்லது சட்டை போலவா? இந்தத் தூண்டுதலான கேள்வியைத் தொடர்ந்து நடந்த விவாதத்தின் போது, அவரது அமைதியான சமிக்ஞைகளின் சாராம்சம், அதேபோல் உங்கள் தற்போதைய உண்ணாவிரதத்திற்கு முரண்பாடான அறிவுறுத்தல், இவற்றைப் பற்றி பாபா கூறியது பின்வருமாறு.

**"ஈஸ்வர தரிசனம் மிகவும் கடினமான ஒன்று. ஒரு வீராதி வீரன் மட்டுமே அதை அடைய முடியும். 40 நாள் உண்ணாவிரதத்தில் என்ன இருக்கிறது! உண்ணாவிரதம் இருப்பதன் மூலம் இறை உணர்வை அடைய முடியும் என்று எந்தச் சட்ட புத்தகமும் கூறவில்லை... உங்களில் சிலர்** (மண்டலி) **பல ஆண்டுகளாக உண்ணாவிரதம் இருக்கவில்லையா? இது விரதங்கள், சடங்கு அல்லது வேறு சில கொள்கைகளை மட்டுமே சார்ந்தது அல்ல. ஆனால் தெய்வீக அனுபவத்தைப் பெற்ற பரிபூரண நபர்களின் அறிவுறுத்தல்களின் கீழ், சில கொள்கைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பதன் மூலம், விரும்பிய முடிவை அடையப்பெற முடியும்** (இறை உணர்வை எய்தல்) **மேலும் பிறருக்கும் இதை வழங்க முடியும்.**

**"உண்மை என்னவெனில், அவரது அனைத்து அரசியல் மற்றும் சமூக நடவடிக்கைகளுக்கு இடையே, காந்தி, தெய்வ தரிசனத்திற்காக தனது இதயத்தில் ஏங்குகிறார். அவர் சந்தேகத்திற்கு இடமின்றி மிகவும் நேர்மையானவர், உத்தமர். ஆகவே, அவர் என் அருகில் ஓர் இரவைக் கழிக்க விரும்புவதாகவும், லண்டனில் இருந்த வேளையில், நான் அவருக்கு அந்தத் 'திறவுகோலை'** (ஈஸ்வர தரிசனம்) **வழங்க வேண்டும் என்றும் அவர் விரும்பினார்; அவர் கூறியதில் அர்த்தம் உள்ளது. அதற்கான கடந்தகால தயார் நிலையை அவர் ஏற்கனவே அடைந்துள்ளார். ஈஸ்வர தரிசனம் பற்றிய செய்தியை நான் அனுப்பிய போது, நானும் அதை அர்த்தப்படுத்திக் கூறினேன்."**

**"இறைநிலையை வழங்குவது எனது நோக்கம். ஆகவே, அதைப் பற்றித் தெளிவுறப் பேச, நான் ஏன் தயங்க வேண்டும்? பிறர் விரும்புவதை அவர்கள் சிந்திக்கட்டும். ஆனால் காந்திஜி இதைப் புரிந்துகொள்கிறார், எனவே உண்மையைச் சொல்வதில் என்ன தீங்கு இருக்கிறது?**

**"...நிச்சயமாக, ஏற்கனவே தொடங்கிய உண்ணாவிரதம் குறித்த தனது வாக்குறுதியை அவர் மீற வேண்டும் என்று நான் ஒருபோதும் அர்த்தப்படுத்தவில்லை. நான் முன்வைத்ததை ஏற்றுக்கொள்வது என்பது தாழ்த்தப்பட்ட வகுப்பினரைக் குறித்த கேள்விக்குத் தீர்வு கிடைக்காததே**

**ஆகும். தற்போதைய விரதம் நாற்பது நாட்கள் தொடர்ந்தால், அந்தக் கடைசி இரவை அவர் என்னுடன் கழிப்பார் என்று நான் எதிர்பார்க்கிறேன். ஆனால் தற்போதைய விரதம் 40 நாட்களுக்கு முன்னதாக நிறுத்தப்பட்டால், அவர் 40 நாட்களுக்கு ஒரு புதிய உண்ணாவிரதத்தைத் தொடங்க வேண்டும். ஈஸ்வர தரிசனம் பற்றிய எனது செய்தி, தற்போதைய விரதத்தைச் சார்ந்து இருக்க வேண்டிய அவசியமில்லை. எதிர்காலத்தில் இப்படி ஒரு விரதம் முடிந்தால் இது சாத்தியமாகும். ஆனால் நான் 'முடிந்தால்' என்று கூறும்போது, உடலுக்கு நிகரும் எந்தவித ஆபத்தையும் குறித்தது அல்ல, ஏனெனில் எனது வாக்குறுதி உடல்ரீதியான தீங்குகளுக்கு எதிரானது என்ற முழுமையான உத்தரவாதத்தைக் கொண்டுள்ளது. ஆன்மீக முடிவை நோக்கி எதையும் செய்ய, ஓர் இயல்பான தூண்டுதல் அவசியம் என்று காந்திஜி கூறுவது மிகவும் சரியானது.**

**"தெய்வீகப் பார்வையை வழங்க ஒரு கண நேரம் போதுமானது! இது சடங்கு சம்பிரதாயங்கள், சேவை, பக்தி அல்லது விரதங்களை மட்டுமே சார்ந்து இருக்க வேண்டிய அவசியமில்லை."**

ஸ்ரீ பாபாவின் செய்தி, பத்திரிகைகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து ஏன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதைக் குறித்து, நீங்கள் கூறிய கருத்துக்கள் சம்பந்தமாக, உண்மையான நிலைப்பாட்டை விளக்க விரும்புகிறேன். முதலில், ஸ்ரீ பாபா விளம்பரத்தை விரும்புவதில்லை; இரண்டாவதாக, அவர் இந்தியாவில் இருந்த பதினைந்து நாட்களில், பலதரப்பட்ட விவகாரங்கள் மற்றும் அவற்றின் இயல்பான விளைவுகளில் மிகவும் மும்முரமாக இருந்தார், அவரைப் பற்றிய சமீபத்திய, குறிப்பாக மேற்கத்திய நாட்டுச் செய்திகளுக்காக அவரது ஆதரவாளர்கள், அபிமானிகள் ஏராளமானோர் காத்திருக்கிறார்கள்.

ஸ்ரீபாபாவைப் பற்றியும், இங்கிலாந்து, அமெரிக்க நாடுகளில் அவருடைய பணிகளைப் பற்றிய விபரங்களை அறியும் ஆர்வம், நாளுக்கு நாள் வளர்ந்து வருவதால், மேற்கத்திய நாடுகளில் அவர் மேற்கொண்ட 'ஆன்மீக அறப்போர்' குறித்த நிகழ்வுகளை வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது; தற்செயலாக, உங்களுக்கும் ஸ்ரீ பாபாவிற்கும் இடையில் ஏற்பட்ட தொடர்பைக் குறித்தும், எதுவாயினும் அது இப்போது ஒரு வெளிப்படையான ரகசியம், ஓர் அறிக்கை வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ பாபாவுடனான உங்கள் தொடர்பின் உண்மையான முக்கியத்துவத்தை, உலகம் எப்போதுமே யூகித்து வந்தது; ஆனால், எங்களைப் பொறுத்தவரையில், நீங்கள் விரும்ப மாட்டீர்கள் என்று நினைத்து இதுவரைத் தவிர்த்து வந்தோம்.

இப்போது எல்லாமே நிறைவடைந்துவிட்டது; பத்திரிகைகள் ஏன் மௌனமாக இருக்கின்றன என்று நீங்களே ஆச்சரியத்தை வெளிப்படுத்தியுள்ளீர்கள்; ஸ்ரீ பாபாவுடனான உங்கள் தொடர்பு குறித்த விரிவான, உண்மையான விபரங்கள் விரைவில் வெளியிடப்படும். எவ்வாறாயினும், உங்களுடன் தொடர்புடைய எதுவும் உங்கள் ஒப்புதலும், திருத்தமும் இல்லாமல் பத்திரிகைகளில் அதன் வழியைக் கண்டுகொள்ள

முடியாது என்பதால், அது சம்பந்தமான தொகுப்பு உங்களிடம் முறையாக சமர்ப்பிக்கப்படும்.

தங்கள் உண்மையுள்ள,
எஃப்.எச். தாதாசாஞ்சி

இரண்டு வாரங்களுக்குப் பிறகு, சாஞ்சி, காந்திக்கு மற்றுமொரு கடிதம் எழுதினார்:
அக்டோபர் 8, 1932.
அப்துல்லா ஹாரூன் ஜாஃபர், - கவனிப்பில்.
ஸைஃபி லேன், கிழக்குத் தெரு, பூனா

என் அன்பான மஹாத்மாஜி,

உங்கள் 6-வது அஞ்சலட்டை எனது கைகளுக்கு வந்தது, 23ஆம் தேதி நான் எழுதிய நீண்ட கடிதத்திற்கு இரண்டு முதல் மூன்று நாட்களில் பதிலளிக்க உத்தேசித்துள்ளீர்கள் என்பதை அறிந்து மகிழ்ச்சி.

இதற்கிடையில் மேலே குறிப்பிட்டுள்ள உங்கள் அஞ்சலட்டையில் அறிவுறுத்தப்பட்டபடி, நான் உள்துறை உறுப்பினரை அணுகினேன்; ஆனால் அவருடன் நான் நடத்திய உரையாடலிலிருந்து, ஒரு நேர்காணலை வழங்குவதற்கான அதிகாரம், இந்திய அரசாங்கத்திடம் உள்ளது என்று தெரிய வந்தது. நான் அந்த நீளத்திற்குச் செல்ல விரும்பாததால், பதில் வருவது வரைக் காத்திருக்க விரும்புகிறேன். பத்திரிகைகளில் வெளியிட சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், உங்கள் ஆய்வு, திருத்தம் மற்றும் ஒப்புதலுக்காக 23ஆம் தேதி எனது கடிதத்தின் கடைசி பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பர விஷயத்தின் நகலை நான் இத்துடன் இணைத்துள்ளேன். உங்கள் விருப்பப்படி, திருத்தங்கள் அல்லது மாற்றங்கள் செய்ய உங்களுக்கு முழு உரிமை உண்டு என்பதைக் கூற விரும்புகிறேன்.

ஸ்ரீ பாபாவே பொதுவாக எல்லா விளம்பரங்களையும் வெறுக்கிறார் என்பதை நான் சேர்க்கலாம், ஆனால் செய்தித்தாள்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து வரும் கோரிக்கைகளின் அழுத்தத்தாலும், உண்மைக்கு மாறான அறிக்கைகளால் பொதுமக்களின் மனதில் ஏற்கனவே அலைபாயும் அனைத்து தவறான புரிதல்களையும் சரிசெய்ய வேண்டியது அவசியம். ஆகையால், ஸ்ரீ பாபாவின் மேற்கத்திய பயணங்களின் போது, ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள சமூகங்கள், பத்திரிகைகள், பொதுமக்களுடனான நேரடி பேட்டிகள் பற்றிய ஒரு சிறு தொகுப்பையும், ஆன்மீக விஷயங்களில் உங்கள் சந்திப்புகள் மற்றும் அவருடன் பேசிய விவரங்களையும் வெளியிடுவது நல்லது என்று நாங்கள் கருதுகிறோம். பத்திரிகைகள், அதை சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதுகின்றன.

தவிர்க்க முடியாத இந்த சூழ்நிலைகளை நீங்கள் நன்கு அறிவீர்கள்; இந்தச் சிக்கலை நான் உங்களுக்குக் கொடுத்ததற்காக, தயவுசெய்து மன்னிக்க வேண்டுகிறேன்.

உங்கள் வசதிக்கு இணங்க, இந்தக் கடிதங்களைத் திருப்பி அனுப்புமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நேர்மையுடன்,

எஃப். எச். தாதாசாஞ்சி

உங்கள் கவனத்திற்கு: நான் நாளை பூனாவிலிருந்து புறப்படுகிறேன்; எனவே உங்கள் அனைத்து கடிதங்களையும் கீழ்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்.
'ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸ், லிமிடெட், நாசிக்.'

அதைத் தொடர்ந்து, ஏர்வாடா மத்திய சிறையிலிருந்து காந்தி, சாஞ்சிக்கு எழுதிய பதில் கடிதம் பின்வருமாறு:

அக்டோபர் 10, 1932
(கண்காணிப்பாளர்)
ஏர்வாடா மத்திய சிறை, பூனா - கவனிப்பில்.

சகோதரர் தாதாசாஞ்சி,

இது நீங்கள் 23ஆம் தேதி எழுதிய கடிதத்திற்கு பதில். பாபா தொடர்பாக எனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். கடவுளைக் காண ஒருவர் இன்னொருவருக்கு உதவ முடியும் என்று நம்புவது மிகவும் கடினம். இந்த யோசனையை என் இதயம் ஏற்க மறுக்கிறது. இருப்பினும், பாபா அத்தகைய கூற்றை முன்வைக்கும் போது, அவர் என்னைக் கடவுளைப் பார்க்கச் செய்தால் அவருடைய உதவியை நான் வரவேற்கிறேன் என்று மட்டுமே அவரிடம் சொல்ல முடியும். ஒருவர் கடவுளைக் கண்டார் என்று சொன்னால் மட்டுமே அவர் பார்த்திருக்க வேண்டும் என்று நாம் நம்ப வேண்டியதில்லை. அத்தகைய கூற்றைக் கூறும் பல நபர்கள் மாயையின் தாக்கத்தால் அவதிப்படுவதாகத் தோன்றுகிறது. பல சந்தர்ப்பங்களில், கூற்று ஒருவரது சொந்த விருப்பங்களின் எதிரொலி மட்டுமே. கடவுளைப் பார்ப்பது என்பது வெளியளவிலான சில சக்தியைக் காண்பது என்று நான் நிச்சயமாக நம்பவில்லை, ஏனெனில் அவர் நம் அனைவரின் இதயத்திலும் வாழ்கிறார் என்று நான் நம்புகிறேன். ஆனால் ஆயிரங்களில் ஒருவர் மட்டுமே அவரை இருதயத்தின் மூலம் அறிவார். ஒருவரின் அறிவால் கடவுளை அறிவது போதாது. இந்த அர்த்தத்தில் கடவுளைப் பார்க்க எந்தவொரு நபரும் மற்றொருவருக்கு உதவ முடியாது என்று நான் நினைக்கிறேன்.

கடவுளைக் காண வேறொருவரின் வற்புறுத்தலின் பேரில் ஒருவர் உண்ணாவிரதம் மேற்கொள்ள முடியாது. என் ஆழ் இதயத்திலிருந்து ஓர் ஆர்வம், ஏக்கத்தை உணரும்போதுதான் நான் அவ்வாறு செய்வேன். அத்தகைய ஆர்வமும், ஏக்கமும் இருக்கும் போது, வேறு எவரும் அந்த நிலையிலிருந்து

என்னைத் தடுக்க நான் அனுமதிக்க மாட்டேன். கடவுளைக் காண உண்ணாவிரதம் எனக்கு உதவும் என்று கருதுவதற்கு எந்த காரணமும் இல்லை. நான் 40 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தால் கடவுளைப் பார்க்க, பாபா எனக்கு உதவ முடியும் என்று என்னால் நம்ப முடியவில்லை. அப்படியானால், அது ஓர் எளிதான கொடுக்கல் வாங்கல் ஆகிவிடும். கடவுளை அவ்வளவு எளிதில் காண முடிந்தால், அந்த அனுபவத்திற்கு எந்த மதிப்பும் இல்லை என்று நான் கருதுகிறேன்.

பாபா, வாழ்க்கையைத் தனித்தனி துறைகளாகப் பிரிக்கவில்லை என்று நான் நினைத்தேன். தர்மம், அரசியல், பொருளாதாரம் மற்றும் பலவற்றிற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நபருக்கு, இவை அனைத்தும் தர்மத்தின் அம்சங்கள், அவற்றில் எதையும் அவர் விட்டுவிட முடியாது. என்னைப் பொறுத்தவரை, தர்மத்தை வாழ்க்கையின் பல செயல்களில் ஒன்றாகக் கருதும் ஒருவருக்கு, தர்மம் என்னவென்று தெரியாது. ஆகையால், ஒரு நாள், நான் அரசியல், சமூக சீர்திருத்தம் மற்றும் பிற அதுபோன்ற நடவடிக்கைகளை கைவிடுவேன் என்று நினைத்துப் பார்க்க முடியாது. நான் அரசியல், சமூக சேவை, மற்றும் பல துறைகளில் தர்மத்திற்காக நுழைந்தேன்.

பாபாவின் எழுத்துக்களை குஜராத்தி மொழியில் மொழிபெயர்ப்பதாக நான் உறுதியளிக்கவில்லை. மாறாக, நான் பாபாவிடம் ஆங்கில மொழியின் குறைபாடுகளிலிருந்து வெளியே வர வேண்டும், எழுத வேண்டாம், அல்லது அவருக்காக ஆங்கிலத்தில் எழுத எவரையேனும் கண்டுபிடித்து, அவரது கருத்துக்களை அவருக்கு நன்றாகத் தெரிந்த குஜராத்தி, அவரது தாய்மொழி அல்லது பாரசீக மொழியில் எழுதவும் விளக்கவும் நான் பரிந்துரைத்தேன். ஆமாம், குஜராத்தி மொழியில் என்னை மிகவும் கவர்ந்த எந்த எழுத்துக்களையும் நான் நிச்சயமாக மொழிபெயர்ப்பேன்.

சுருக்கமாக, நான் பாபாவின் கருத்துக்களைப் பயிலும் மாணவன். நான் ஒரு தூய ஆத்மாவாகக் கருதும் ஜாம்ஷெட் மேத்தாவிடமிருந்து தொலைத்தந்தியைப் பெற்ற பின்பு பாபாவை சந்தித்தேன். நான் எப்போதும் கடவுளின் பக்தர்களை (நேசிப்பவர்கள்) தேடிக்கொண்டிருக்கிறேன், பாபாவும் அதில் ஒருவர் என்று நினைத்து நான் அவரை சந்தித்தேன்.

வந்தேமாதரம்
(தாய்நாட்டிற்கு வணக்கங்கள்)
மோகன்தாஸ் காந்தி.

ஒரு வாரத்திற்குப் பிறகு, சாஞ்சிக்கு, காந்தியிடமிருந்து மற்றுமொரு கடிதம் வந்தது:
18 அக்டோபர் 1932
ஏர்வாடா கோயில்.

சகோதரர் தாதாசாஞ்சி,

உங்கள் கடிதம், தொலைத்தந்தி இரண்டையும் பெற்றுக் கொண்டேன்.

அதிர்ஷ்டவசமாக, சகோதரர் மஹாதேவ் (தேசாய்) செப்டம்பர் 23ஆம் தேதி உங்களுக்கு அனுப்பிய எனது பதிலின் நகலைப் பாதுகாப்பாக வைத்திருந்தார். எனவே, எனது பதிலின் நகலை உங்களுக்கு இங்கு அனுப்ப முடிகிறது.

பத்திரிகைகளுக்கு அறிக்கையை வழங்காததில் நீங்கள் என்னுடன் உடன்படுவதால், இது விஷயத்தில் மேலும் எழுத எதுவும் இல்லை. மேலும் எனது ஆய்வு மற்றும் ஒப்புதலுக்காக நீங்கள் அனுப்பிய விரிவான அறிக்கையில் நான் உங்களுக்குச் சுட்டிக்காட்டவும் எதுவும் இல்லை. ஆனால் ஒரு நாள், நாம் சந்திக்கும் வேளையில், மெஹர் பாபா மற்றும் காந்தி இடையே நடந்த சந்திப்புகளைக் குறித்து, நீங்கள் தயாரித்த விரிவான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகளில் நான் உணர்ந்ததையும் தவறாக சித்தரிப்பதையும் நான் உங்களுக்கு விளக்க முயற்சிப்பேன். தயவுசெய்து நான் சொல்வதை தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்; இதுபோன்ற தவறான விளக்கங்களுக்கு எவரையும் நான் குறை கூறவில்லை, ஆனால் நான் சொல்வது என்னவெனில், ஒரு திட்டவட்டமான தவறான கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

இது மிகவும் இயல்பானது, இரண்டு நபர்களுக்கிடையில் நடக்கும் உரையாடல்களை நினைவில் கொண்டு, பின்பு விரிவாக்கம் செய்யும் போது, பிழைகள் வருவது சகஜம் என்பதை நான் அனுபவத்தில் பலமுறை கண்டிருக்கிறேன்.

இந்தக் கடிதம் வந்து சேர்ந்ததும் எனக்குத் தெரியப்படுத்துங்கள்.

வந்தேமாதரம்,
மோகன்தாஸ் காந்தி.

அடுத்த நாள் காந்தியிடமிருந்து மூன்றாவது கடிதம் வந்தது:
19 அக்டோபர் 1932
சகோதரர் தாதாசாஞ்சி,

நீங்கள் 8ஆம் தேதி எழுதிய கடிதம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட பக்கங்கள் எனது கைகளுக்கு வந்தன. முழுவதையும் படித்த பின்னர், அதை வெளியிடுவது சரியாக இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. இதில் ஒரு பெரிய விஷயமும் சொல்லப்படவில்லை, மேலும் அதில் நீங்கள் இணைத்துள்ள பகுதிகளும், அதைக் குறிப்பிடும் விதமும், மக்கள் அதைத் தவறாகப் புரிந்துகொள்ள வாய்ப்புள்ளதாக எனக்குத் தோன்றுகிறது.

எனவே, அதன் எந்தப் பகுதியையும் வெளியிட வேண்டாம் என்ற கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். பாபாவிற்கும் எனக்கும் இடையிலான உறவு, குரு மற்றும் சீடனுடைய உறவு அல்ல, ஆனால் இரண்டு நெருங்கிய நண்பர்களின் உறவுதான் என்பதைக் குறிப்பிடுவது அவசியம்; மேலும் எங்களுக்கிடையில் நடந்த பெரும்பாலான உரையாடல் ஆன்மீக விஷயங்கள் தொடர்பானது. எனவே, இங்குள்ள அல்லது மேற்கத்திய நாட்டு மக்கள், எங்கள்

சந்திப்பு அல்லது உரையாடலுக்கு எந்த முக்கியத்துவத்தையும் இணைக்கத் தேவையில்லை.

மேற்கூறியவற்றில் எதையும் அச்சிட அல்லது எடுத்துச் சொல்ல எந்த அவசியத்தையும் நான் காணவில்லை.

மோகன்தாஸ் காந்தி

காந்திக்கு சாஞ்சி அளித்த பதில் பின்வருமாறு:
**24 அக்டோபர் 1932**

அன்புள்ள காந்திஜி,

உங்கள், 19 அக்டோபர், கடிதம் மும்பைக்கு வந்து சேர்ந்தது.

உங்கள் பதிலைப் படித்து நான் மகிழ்ச்சியடைந்தேன், ஏனெனில் இந்த விவகாரத்தை பகிரங்கப்படுத்தும் யோசனையை நீங்களும் விரும்பவில்லை என்பதை, சம்பந்தப்பட்ட பலரிடம் சொல்வதில் எனது நோக்கமும் நிறைவேறும்.

நிச்சயமாக, ஸ்ரீ பாபாவிடம் இதற்கு எந்த ஆட்சேபனையும் இருக்க முடியாது, ஏனெனில், இந்த விவகாரம் தொடர்பாக எந்தவிதமான விளம்பரத்தையும் அவர் விரும்பவில்லை அல்லது இதில் வேறு எந்த விவகாரமும் இல்லை. எனவே, இப்போதைக்கு, இந்த விஷயத்தை கைவிடுவது சிறந்தது என்று நானும் நினைக்கிறேன்.

உங்கள் தற்போதைய கடிதத்தில் குறிப்பிடப்பட்ட கருத்துகள் குறித்து, எனது அடுத்த கடிதத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இதற்கிடையில், எனது முந்தைய கடிதத்திற்கான உங்கள் பதிலை நான் இன்னும் பெறவில்லை என்பதை நீங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறேன், உங்களுடைய இந்தக் கடைசி கடிதத்தில், நீங்கள் பதிலளித்ததாகச் சுட்டிக்காட்டியதால் இதைத் தெரியப்படுத்துகிறேன்.

பாபா அடுத்த மாதம் ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்கிறார், அவரது ஆன்மீகப் பணி தொடர்பாக, பல்வேறு இடங்களுக்குச் செல்ல இருக்கிறார். இதற்கான ஏற்பாடுகள் இப்போது தொடங்கப்பட்டுள்ளன.

அவசரத்தில் எழுதுகிறேன்.
உங்கள்,
எஃப். எச். தாதாசாஞ்சி.

அவர்களுக்கு இடையேயான விஷயங்களைத் தெளிவுபடுத்துவதற்காக, மூன்று நாட்களுக்குப் பிறகு, காந்திக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினார்:
**27 அக்டோபர் 1932**
நாசிக்.
அன்புள்ள காந்திஜி,

19ஆம் தேதி நீங்கள் எழுதிய கடிதம் மும்பையில் 23ஆம் தேதி என்னிடம் வந்தது.

உங்கள் கடிதத்தைப் பெறுவதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன், ஏனெனில் அதன் உள்ளடக்கங்கள் இப்போது தகவல்களைத் தேடும் நபர்களுக்கு பதிலளிக்க உதவும். இந்தப் பேச்சுக்கள் தொடர்பான எதையும் பொதுவில் வெளியிடுவது தற்போது பொருத்தமாகாது என்று நீங்கள் கருதுவதாக நான் இப்போது அவர்களுக்கு வெளிப்படையாகச் சொல்ல முடியும். நிச்சயமாக, பாபாவும் அதை விரும்பவில்லை. இந்த விஷயத்தில் அவர் எதையும் 'சொல்ல' விரும்பவில்லை. பத்திரிகைகளில் வரும் விஷயங்களில் அவர் மிகவும் அலட்சியமாக இருக்கிறார்; அது தவிர, அவர் விளம்பரத்தையும் விரும்புவதில்லை.

நிருபர்கள், செய்திகளுக்காக எங்கள் கதவுகளைத் தட்டி, பாபாவைத் தொந்தரவு செய்வதைத் தவிர்க்கும் நோக்கத்தில், பத்திரிகைகளுக்கு, இதுவரை மிகக் குறைந்த அளவிலான விஷயங்களை அளிக்க வேண்டியதாயிற்று.

மேலும், அவரது அன்பர்களில் சிலர், அவரது அன்பு மற்றும் உண்மை பற்றிய செய்தியைப் பரப்புவதில் மிகுந்த ஆர்வத்துடன் இருப்பதால், அவர்கள் செய்தியாளர்களுக்கு நேரடி பேட்டிகள் வழங்குமாறு பாபாவிற்கு அழுத்தம் கொடுத்தனர். இந்த விளம்பரங்கள் அனைத்தும் குழப்பத்தை உருவாக்கியுள்ளது, ஏனெனில் நிருபர்கள் உண்மைகளைத் தவறாகச் சித்தரித்து, பத்திரிகைகளில் வெளியிட்டனர்.

நிருபர்களின் வழிகளையும், முறைகளையும் நன்கு அறிந்த பாபா, இந்தியாவில் இறங்குவதற்கு முன்னர், அனைத்து நேரடி பேட்டிகளையும் தடை செய்தார். இதனால், பாபாவின் நகர்வுகளை மக்கள் அறிய முடியவில்லை. நான் உங்களை முதல் முதலில் சந்தித்த போது, நீங்களும் இது குறித்து மிக கவனமாக இருந்தீர்கள். பாபாவும் அத்தகைய கட்டுப்பாடுகளை ஆரம்பத்திலிருந்து அமல்படுத்தினார்.

இப்போது, ஸ்ரீ பாபா பின்வரும் காரணங்களுக்காக, பத்திரிகைகள் மூலம் விளம்பரம் தொடர்பாக, அவர் விதித்த கடுமையான கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டியிருந்தது:

1. மேற்கத்திய நாடுகளிலிருந்து பாபா திரும்பியதும், அவரது பக்தர்கள், பிற அன்பர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவரது நடவடிக்கைகளின் அட்டவணையைப் பரப்புவதில் அவர்களுக்கு சில சுதந்திரங்களை வழங்குமாறு அழுத்தம் கொடுத்தனர்.
2. பத்திரிகை நிருபர்கள் பாபாவை நேரடியாக சந்தித்து, தகவல்களை வெளியிடுமாறு அவரிடம் முறையிட்டனர்.
3. ஸ்ரீ பாபா உங்களுடனும் உங்கள் அரசியல் நடவடிக்கைகள் குறித்து டாக்டர் அம்பேத்கருடனும் பேசியதால், சில செய்தித்தாள்கள் பாபாவை மறைமுகமாக அரசியலுக்குள் இழுக்க முயன்றன. இந்த சூழ்நிலை, உண்மை நிலையைத் தெளிவுபடுத்துவதற்கான அவசரத்தேவையை உருவாக்கியது.

4. மேலும், மெஹர் பாபா, காந்தி இருவரும் சந்தித்துப் பேசியதற்கும், குருநாதர் - சீடர் உறவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை பொதுமக்களிடம் சொல்ல வேண்டிய அவசியம் இருந்தது; பேச்சுவார்த்தைகள் இதை அடிப்படையாகக் கொண்டவை அல்ல, அதே நேரத்தில் உங்களில் ஒருவரும் அதைக் குறித்து ஒரு வார்த்தையும் குறிப்பிடவில்லை.
5. நீங்கள் பேசிய அனைத்து பேச்சுக்களும் பெரும்பாலும் ஆன்மீக இயல்புடையவை.
6. எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்கள் (நமது கடைசி சந்திப்பில்) எங்களிடம் "இந்த நாட்களில் பாபாவைப் பற்றி, பத்திரிகைகள் ஏன் அறிக்கைகள் வெளியிடுவதில்லை?" என்று கேட்டதை, பாபாவிற்குத் தெரிவித்தபோது, பாபா தனது அன்பர்கள் மற்றும் பக்தர்களுக்கு உதவியாக இருக்கும் என்ற நோக்கத்தில், பத்திரிகைகளைப் பயன்படுத்தத் தேவையான சுதந்திரத்தை அளித்து, "**நீங்கள் நினைப்பதை செய்யுங்கள், ஆனால் காந்திஜியைப் பற்றி பத்திரிகைகளில் வரும் கருத்துக்களுக்கு அவருடைய அங்கீகாரம் முதலில் தேவை**" என்ற கடுமையான அறிவுறுத்தல்களுடன், பாபா தனது அனுமதியை எங்களுக்கு வழங்கினார்.

அதன்படி, செய்திக் குறிப்புக்குத் தயாரிக்கப்பட வேண்டிய விரிவான அறிக்கையில், பாபாவுடனான உங்கள் சந்திப்பு, சில தெளிவுபடுத்தப்பட்ட பேச்சுக்கள் மற்றும் பாபாவின் மேற்கத்திய பயணம் குறித்த அறிக்கைகள் ஆகியவற்றை இணைப்பது சிறந்தது என்று பாபாவின் பக்தர்கள் நினைத்தனர்.

ஆனால் ராஜ்புத்னா கப்பலில் பாபாவுடனான உங்கள் மூன்று சந்திப்புகள், மேலும் அடுத்தடுத்து நடந்த நிகழ்வுகள் குறித்து, பக்தர்களுக்கு எந்தத் தகவலும் கொடுக்கப்படவில்லை. இயற்கையாகவே, அவர்கள் என்னை அணுகியபோது, நான் அவர்களுக்கு சில துண்டு செய்திகளைக் கொடுத்தேன், ஏனெனில் கூட்டங்களின் போது பரிமாறிக் கொள்ளப்பட்டவை அனைத்தும் பத்திரிகைகளுக்காக அல்ல.

சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், சக பக்தர்கள், பத்திரிகை வெளியீட்டிற்கான ஒரு விரிவான அறிக்கையின் தோராயமான பிரதியை உருவாக்கினர்; மேலும் மெஹர் பாபா, காந்தி சந்திப்புகள், உங்கள் ஆய்வு, திருத்தங்கள், சேர்த்தல் மற்றும் மாற்றங்களுக்கான பேச்சுக்கள் சம்பந்தப்பட்ட அறிக்கையின் ஒரு பகுதியை மட்டுமே நான் உங்களுக்கு அனுப்பினேன்.

பாபாவின் நடவடிக்கைகள், உங்கள் சந்திப்புகள் பற்றிய பரபரப்பான செய்திகளை வழங்குவதில் மகிழ்ச்சியடைந்த பத்திரிகைகளால் உருவாக்கப்பட்ட தவறான எண்ணங்களைப் போக்கும் நோக்கத்தில், பத்திரிகைகளுக்கான அறிக்கையாக வழங்க முடிவு செய்யப்பட்டவை அனைத்தும், இப்போது உங்கள் வசம் உள்ளது.

எங்கள் நோக்கம் எவ்வளவு வெளிப்படையானதோ அதுபோல் எளிமையானது! ஆனால் உங்கள் கடிதத்திலிருந்து, அது தவறாகக் கருதப்பட்டு, ஒருவித தவறான புரிதலுக்கு வழிவகுத்தது என்பதை நான் காண்கிறேன்.

உங்கள் கடிதத்தில் 'அதிக அளவில் விஷயங்கள் விடுபட்டுள்ளன' என்று நீங்கள் குறிப்பிடுகிறீர்கள், இதை நான் ஒப்புக்கொள்கிறேன், ஏனெனில் சந்திப்பின் போது நடந்த அனைத்தையும் பகிரங்கப்படுத்த வேண்டாம் என்ற எண்ணத்தில் எல்லாவற்றையும் பொது அறிக்கையில் இணைக்கவில்லை. ஆனால் உங்கள் கடிதத்தில் 'பொருள் மாறிவிட்டது' என்று நீங்கள் குறிப்பிடும்போது, இதுபோன்ற எந்த அடையாளத்தையும் என்னால் கண்டுகொள்ள முடியவில்லை; அது அவ்வாறு இருப்பதாக நான் கருதவுமில்லை, ஏனெனில் பிழைகள் இல்லாமல் இருப்பதற்கான விசேஷ கண்காணிப்பும், கவனமும் நான் எடுத்துள்ளேன். இவற்றையெல்லாம் மீறி, நீங்கள் சந்தேகங்களை எழுப்பியுள்ளீர்கள்; எனவே, அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு சமர்ப்பிக்கும் விஷயத்தை நான் கைவிட்டேன் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

எதிர்காலத்தில் எப்போதாவது நாம் சந்திக்க நேரிடும் போது, இதைப் பற்றிப் பேசுவோம். இதற்கிடையில் இந்த விஷயத்தில் மௌனமாக இருப்பது நல்லது என்று நான் கருதுகிறேன், உங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உங்கள் விருப்பத்தின்படி, நாங்கள் எந்தவொரு அறிக்கையையும் பத்திரிகைகளுக்கு வழங்க மாட்டோம் என்று நீங்கள் உறுதியாக நம்பலாம்.

தற்போது, பாபாவின் அடுத்த மேற்கத்திய நாட்டு பயணத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம்; பயணம் அடுத்த மாத ஆரம்பத்தில் அல்லது இறுதியில் நடைபெறும்.

உங்கள் கடிதத்தில் நீங்கள் பதில் கடிதம் அனுப்பியதாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். அது இன்னும் எனது கைகளுக்கு வரவில்லை; ஆவலாகக் காத்திருக்கிறேன்.

நவம்பர் 01, 1932,
நாசிக்.
அன்புள்ள மஹாத்மாஜி,

நீங்கள் 28ஆம் தேதி எழுதிய கடிதத்தைப் பெற்றுக்கொண்டேன். அதைப் படித்த பின்பு, பாபாவின் கவனத்திற்கு கொண்டுவராமல் என்னால் இருக்க முடியவில்லை. பாபா அதைப் படித்துவிட்டு புன்னகையுடன் கூறினார்:

**"இது உண்மைதான்; உண்மைகளைத் தவறாகச் சித்தரிப்பதன் மூலம்** (மூன்றாம் நபரால் அனைத்தையும் நினைவு கூர்ந்து எழுதப்படும் போது), **தவறாகப் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பு அதிகம். இப்போது நான் சொல்வதை எழுதுங்கள்."**

உங்களுக்கு நேரடி பதிலாக, பாபா தனது எழுத்துப்பலகை மூலம் குஜராத்தியில் எடுத்துரைத்தார்:

**"இறைநிலையை அடைந்ததாக, போலியான நம்பிக்கையில் இருப்பவர்கள் பலர் உள்ளனர். வேதாந்தம் மற்றும் ஸூஃபி**

**இலக்கியங்களைப் படித்த பின்பு, பலர் 'நான் கடவுள்'** (அஹம் பிரம்மாஸ்மி' அல்லது 'அனல் ஹக்') **என்ற நிலையை அடைந்துவிட்டோம் என்று உண்மையாக நம்புகிறார்கள். இருந்தும், இதுபோன்ற பிரம்மைகள், இந்த உலகமும் அதன் விவகாரங்களும் நித்தியமானவை, உண்மையானவை என்று நம்பும் மனிதகுலத்தின் அனுமானங்களை விட மிகச் சிறந்தவை, மட்டுமல்லாமல் சகித்துக் கொள்ளக் கூடியவை. நான் சொல்வது என்னவெனில், 'நான் பரமாத்மாவைத் தவிர வேறு எதுவும் இல்லை' என்று திடமாக நம்புவது, 'நான் ஒரு தூசி மட்டுமே, நான் ஒரு பாவி, நான் பலவீனமாக இருக்கிறேன்' என்று நம்புவதைவிட மிகச் சிறந்தது.**

**"ஆனால் சில ஆன்மீக வீரர்கள் தங்களுக்குள்ளேயே தொடர்ந்து இறைநிலையை அனுபவிப்பதோடு, இதர அனைத்திலும் நித்தியமானவர் மட்டுமின்றி, எல்லா நேரத்திலும் அனைத்து மாயைகளிலிருந்தும் விடுபட்டு இருக்கிறார்கள். சத்தியத்தை உணர்ந்து, நித்திய அனுபவத்தை அடையப் பெற்றவர்கள், அவர்கள் அடைந்த நித்தியத்தின் அனுபவத்தைப் பிறருக்கும் அளிக்கிறார்கள்; ஏனெனில், உண்மைப்பொருளை உணர்ந்தவர்களுக்கு, உலகெங்கும் பரவியிருக்கும் அறியாமை எனும் திரையை அகற்றுவதன் மூலம், நிலையான ஒன்றை வெளிப்படுத்துவதைத் தவிர, செய்வதற்கோ அல்லது கொடுப்பதற்கோ எதுவும் இல்லை; ஒன்றாக, நித்தியமாக இருக்கும் ஆத்மா அவர்களிலும், பிற அனைவரிலும் சமமாக வாழ்கிறது."**

இதைக் கூறி முடித்ததும், ஸ்ரீ பாபா புன்னகையுடன் எழுத்துப்பலகையில் சுட்டிக்காட்டினார், **"தோஸாஜியிடம்** (ஒரு வயதானவரை அன்பாக அழைக்கும் சொல்) **எனது குஜராத்தி எப்படி இருக்கிறது என்பதை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!"** என்றார்.

பாபா தொடர்ந்தார்: **"அரசியல், சமூக நலன், பொருளாதாரம், இது போன்ற மற்றும் பல, ஒரே பொருளின் வெவ்வேறு ஆன்மீக அம்சங்கள் - ஏனெனில் இவை ஒவ்வொன்றும் ஒருவரின் இறை ஞானத்தில் இணைந்துள்ளன. ஆன்மீகம் எல்லாவற்றையும் உள்ளடக்கியது - அரசியல், பொருளாதாரம், நெறிமுறைகள், சமூக நலன், குடிமக்கள் மற்றும் அனைத்து வகையான சேவைகள். சூரியனின் கதிர்கள் சூரியனிடமிருந்து வேறுபடுவதில்லை என்பது போலவே, இந்தப் பிரிவுகளும் ஒவ்வொன்றும் ஒரே நித்தியத்தின் வேறுவேறு கிளைகள்தான்.**

**"இவ்வண்ணம் மறைமுகமாக, ஆன்மீகக் கண்ணோட்டத்தில் பார்த்தால், எல்லாவற்றிலும் நான் எப்போதும் எனது பங்கை வகிக்கிறேன், அதை நான் அப்படியே சொல்கிறேன், நான் எப்போதும் பிறரை அவ்வாறே செய்யவும் வைக்கிறேன். வித்தியாசம் இதுதான்: அறியாமையில் இருப்பவர்கள் மாயாவை அனுபவித்து, 'இதையும் அதையும்' விரும்புகிறார்கள், அதேவேளையில் இறை ஞானி** (இறைநிலையை அடைந்தவர்) **மாயாவைக் கூட கடவுளின் வெளிப்பாடாகக் கருதி, அதை அனுபவிக்கிறார்."**

**“நம்மிடையே, குருநாதர்-சீடர் உறவு என்ற கருத்தை மேற்கத்திய நாட்டில் ஒரு குறிப்பிட்ட செய்தித்தாள் முன்வைத்தது** (ஆனால் இது குறித்து உடனடியாக ஒரு திருத்தம் அனுப்பப்பட்டது). **மாறாக, இப்போது நீங்கள் பாபாவின் மாணவர் என்று எழுதுகிறீர்கள். இந்த இரண்டு விஷயங்களையும் நான் மிகவும் வித்தியாசமாகப் பார்க்கிறேன். அதாவது, நான் உங்களை எனது ‘பிரியமான நண்பராக’** (பிரேமி மித்ராவாக) **எடுத்துக்கொள்கிறேன்; ஏனெனில் ஒவ்வொன்றிலும், என்னைத் தவிர வேறு எவரையும் நான் காணவில்லை. இந்த அர்த்தத்தில், நான் யார் ஒருவருடைய ‘குருவாக’ இருக்க முடியும், மேலும் ‘சீடர்’ எங்கே இருக்க முடியும்! என்னைப் பொறுத்தவரை, எல்லா நண்பர்களிலும், சத்தியத்திற்காக எல்லையற்ற அமைதியற்றவராக இருப்பவர் மட்டுமே எனது பிரியமான நண்பர்!”**

**“ஆனால் தோஸாஜியிடம் எனது கட்டுரைகளை குஜராத்தியில் மொழி பெயர்க்க உதவுவதாக அவர் அளித்த வாக்குறுதியை மீற முடியாது என்று சொல்லுங்கள், ஏனெனில் குஜராத்தி மொழியில் வழங்கப்பட்ட அனைத்து கட்டுரைகளையும் சரிபார்த்து, திருத்தம் செய்ய வேண்டிய உதவியை அளிப்பதாகக் கூறியிருந்தார். இதை அவர் மறந்திருக்க முடியாது!**

**“நாங்கள் மீண்டும் சந்திக்க நேரிடும் போது, இன்னும் வேடிக்கையாக இருக்கும் என நம்பலாம்!”**

ஸ்ரீ பாபா தனது எழுத்துப்பலகையின் மூலம் தெரிவித்ததை, வார்த்தைக்கு வார்த்தையாக நான் எழுதிக்கொண்டேன்.

இப்போது என்னுடைய ஒரு வேண்டுகோள்: அதாவது இந்தக் கடிதத்திற்கு நீங்கள் தயவுசெய்து பதிலளிக்க வேண்டுகிறேன், ஏனெனில் நீண்ட கடிதங்களைப் பரிமாறிக் கொள்ளும் போது, கடந்த காலங்களில், தவறாகப் புரிந்துகொள்வதற்கான சந்தர்ப்பங்களை சந்தித்ததாக நான் நம்புகிறேன். இதன் விளைவாக, பாபா ஓரளவு வேதனை அடைந்துள்ளார் என்ற உணர்வு எனக்கு உள்ளது.

பாபா ஒருபோதும் என்னைக் குறை கூறி, குற்றம் சாட்டவில்லை என்றாலும், அது சில காலமாக எனக்கு மன சஞ்சலத்தை ஏற்படுத்தியது; மேலும் இக்கடிதத்திற்கு நீங்கள் வழங்கும் பதில், இந்த உணர்விலிருந்து என்னை விடுவிக்கும் என்று நான் நம்புகிறேன். உங்களுடன் தனிப்பட்ட சந்திப்பிற்கான சந்தர்ப்பம் வரும்போது, நாம் இருவரும் விபரங்களைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுவோம்.

ஸ்ரீ பாபா ஏறக்குறைய 20 நாட்களுக்காக இந்தியாவிலிருந்து மேற்கத்திய நாடுகளை நோக்கிப் பயணம் செய்ய இருக்கிறார் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

உங்கள்,
எஃப். எச். தாதாசாஞ்சி

சாஞ்சியின் கடிதத்திற்கு காந்தி எழுதிய பதில் கடிதம்:

**3 நவம்பர் 1932**
ஏர்வாடா கோவில்.
சகோதரர் ஸ்ரீ தாதாசாஞ்சி,

இன்று உங்கள் கடிதத்தைப் பெற்றுக் கொண்டேன். "பாபா கூறினார்..." என்று நீங்கள் எழுதி, சொன்ன வார்த்தையின் கீழ் மிகவும் அடர்த்தியான சிவப்பு நிற பென்சிலால் கோடிட்டு வரைந்துள்ளீர்கள்.

பாபா எழுத்துப்பலகை மூலம் 'சொல்லாமல்' அவர்களின் 'நாவால்' சொல்லி இருந்தால், பாபாவின் மௌனத்தைக் கலைக்கும் அளவுக்கு எனது கடிதத்திற்கு சக்தி இருந்ததாக நான் எடுத்துக் கொள்ள முடியுமல்லவா? ஆகவே, 'அற்புதங்களின் காலம்' இன்னும் கடந்துவிடவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள ஒருவர் தூண்டப்படுகிறார்!

எழுத்துப்பலகை வழியாக, குஜராத்தியில் பாபா எடுத்துரைத்தது அனைத்தும் இனிமையானது என்பதை தயவுசெய்து பாபாவிடம் சொல்லுங்கள்! குஜராத்தியில் பாபா 'சொன்ன' (எழுத்துப்பலகை மூலம்) அனைத்திற்கும் நான் உடன்படவில்லை; ஒரு நாள் நாங்கள் தனிப்பட்ட முறையில் சந்திக்கும் போது, கடவுள் விரும்பினால், ஒரு சூடான விவாதத்தை நடத்துவேன் என்று நம்புகிறேன், ஏனெனில் இதுபோன்ற விவாதம் ஒரு கடிதத்தின் மூலம் சாத்தியமில்லை.

'தோஸாஜியின்' வாக்குறுதி வீணாகாது என்றும் பாபாவிடம் சொல்லுங்கள். பாபா குஜராத்தியில் எழுதியதற்கு நான் ஒப்புதல் அளித்திருந்தால், நிச்சயமாக நான் அவருடைய எழுத்துக்களைத் திருத்துவேன். இது ஒரு நிபந்தனை ஆகாதா?

அரசியல், பொருளாதாரம், நெறிமுறைகள், சமூக மற்றும் பிற அனைத்து வகையான சேவைகளும் - ஆன்மீகத்தில் உள்ளடங்கியது என்று பாபா கூறி இருப்பது எனக்குப் போதுமானது.

நீங்கள் முன்வைக்கும் நட்பின் கூற்றை நான் விரும்புகிறேன். ஆனால் 'அன்பான நண்பர்' என்ற வார்த்தைகளால் நட்பைப் பெறுவது தேவையற்றது என்று நான் உணர்கிறேன், ஏனெனில் அன்பில்லாமல் நட்பு நீடிக்காது.

நீங்கள் சோகமாக உணர எந்தக் காரணமும் இல்லை. தவறாகப் புரிந்துகொள்வது அடிக்கடி நிகழும் ஒன்று; ஆனால் தவறாகப் புரிந்துகொள்வதை, சரி செய்யும் விருப்பம் இருக்கும் வரை, எந்தவொரு தடையும் உருவாகவோ அல்லது தீங்கிழைக்கவோ முடியாது.

மேற்கத்திய நாடுகளுக்கான இந்தப் பயணத்தில் நீங்கள் அனைவரும் எங்கெங்கு செல்கிறீர்கள்? எவ்வளவு காலம்? இந்தப் பரபரப்பான சுற்றுப்பயணத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று பாபாவிடம் கூறுங்கள்!
மோகன்தாஸ் காந்தி.

காந்திக்கு பதிலளிக்கும் வகையில், சாஞ்சி இவ்வாறு எழுதினார்:
**நவம்பர் 8, 1932**

நாசிக்

அன்புள்ள மஹாத்மாஜி,

3ஆம் தேதி நீங்கள் அனுப்பிய கடிதம் வந்து சேர்ந்தது. ஸ்ரீ பாபா அதன் உள்ளடக்கங்களைப் படித்து மகிழ்ச்சி அடைந்தார்.

அதற்கு பதிலளித்த ஸ்ரீ பாபா, உங்களுடன் ஒரு சந்திப்பு நடைபெறும் வேளையில், உங்களைப் பற்றி அவர் கூற விரும்பும் சுவாரஸ்யமான விஷயங்களை, தனிப்பட்ட முறையில், சிறப்பாகச் செய்ய முடியும் என்பதை, உங்களுக்குத் தெரிவிக்கும்படி எனக்கு அறிவுறுத்தியுள்ளார். கடிதங்கள் மூலம் தொடர்பு கொள்வதில் இத்தகைய வெளிப்பாடுகள் வறண்டு காணப்படுவதோடு, எழுதப்பட்ட சொற்கள் ஆர்வத்தையும் கவர்ச்சியையும் இழக்கின்றன; தனிப்பட்ட முறையில் பரிமாறிக் கொள்ளும் போது அவை ரசிக்கும்படியாக இருக்கும். எனவே, ஸ்ரீ பாபாவும் உங்களுடன் உடன்படுகிறார், நீங்கள் அவருடன் சிறிது நேரம் இருக்கும் தருணத்தில், அது ஒரு சிறப்பான நேரத்திற்குரிய சந்தர்ப்பத்தை வழங்கும் என்று கூறுகிறார்.

இந்த நேரத்தில், எங்கள் மேற்கத்திய பயணம் சுமார் ஆறு மாதங்கள் நீடிக்கும் வாய்ப்பு உள்ளது. 21ஆம் தேதி இத்தாலி, ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு மும்பையிலிருந்து புறப்பட உள்ளார். அதன் பின்னர், அவர் அமெரிக்காவிற்கும் விஜயம் செய்ய விரும்புகிறார்.

ஸ்ரீ பாபாவைப் பின்பற்றும் அன்பர்கள், கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில் பெரிய அளவில் அதிகரித்து வருவதால், அவர்களின் அன்பையும் பக்தியையும் கருத்தில் கொண்டு, அவர் அங்கு இருக்கவேண்டிய தேவை உருவாகிறது. இவை முற்றிலும் அவசியமாகிவிட்டன என்பதே இத்தகைய பரபரப்பான உலக பயணங்களுக்கான காரணம். உண்மையான அன்பின் 'குறியீடு' முற்றிலும் மாறுபட்டது மற்றும் தனித்துவமானது!

ஸ்ரீ பாபா, கிழக்கில் ஆண்டுக்கு ஆறு மாதங்களும், மேற்கில் ஆறு மாதங்களும் செலவிட வேண்டியிருக்கும். கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு இடையில் ஓர் ஆன்மீக இணைப்பை நிறுவும் அவரது பணிக்கான அனைத்து வெளிப்புற அறிகுறிகளிலிருந்தும் இது தவிர்க்க முடியாததாகத் தோன்றுகிறது, மேலும் இந்த ஆன்மீக ஒருங்கிணைப்பு, அவரது ஆன்மீகப் பணிக்கு அடிப்படையாக பலப்படுத்தப்படுகிறது.

எனது கடைசி கடிதத்தில், பாபா சொன்ன வார்த்தைகளை, அப்படியே நான் உங்களுக்கு எழுதியதை மீண்டும் தவறாகப் புரிந்து கொண்டது போலத் தோன்றுகிறது. பாபா தனது 'நாவால்' பேசினார் என்று அர்த்தப்படும்படி இதை எடுத்துக்கொள்ளக்கூடாது. பாபா அவற்றை எழுத்துப்பலகையின் உதவியுடன் கூறியது போலப் புரிந்து கொள்ள வேண்டும். மௌனத்தைக் கலைக்காமல் பேசுவது எப்படி? இந்தப் பல ஆண்டுகளில் பாபாவைப் பற்றி பிறருடன் உரையாடுவது அல்லது அவருடன் தொடர்பு கொள்வது இப்போது ஒரு வழக்கமான விவகாரமாக உள்ளது 'ஸ்ரீ பாபா கூறினார்' அல்லது 'ஸ்ரீ பாபா கூறுகிறார்' என்பது, பாபா தனது எழுத்துப்பலகை மூலம் கூறியது போல் எப்போதும் புரிந்து கொள்ளப்படுகிறது.

இந்த விளக்கங்கள் அனைத்தும், நீங்கள் தெரிய விரும்பியதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வைக்கும் என்று நம்புகிறேன்.

**உங்களின்,**

எஃப். எச். தாதாசாஞ்சி

மேலும், உங்களுக்கு எழுதிய கடிதத்தில், பாபா உங்களை '**பிரேமி மித்ரா**' - ஒரு '**பிரியமான நண்பர்**' என்று குறிப்பிட்டுள்ளார். இது குறித்து பாபா கூறுகையில், தனது 'மிக அருமையான' குஜராத்தி மொழியில் 'டீயர் ஃபிரண்ட்' (DEAR FRIEND) என்ற இரண்டு ஆங்கில வார்த்தைகளை வழங்கியுள்ளார். பாபா உங்களை தொடர்ந்து இப்படியே குறிப்பிடுவார் என்றும் கூறுகிறார், ஏனெனில் உங்களை தனது நண்பராக எடுத்துக் கொண்டதால், அவர் உங்களை '**கடவுளின் பிரேமியாகப்** (காதலனாகப்) **பார்க்கிறார்**.'

**ஸ்ரீ பாபா அவரது அன்பையும் ஆசீர்வாதத்தையும் வழங்குகிறார்**.



**அனைத்து**

**மதங்களும்**

**ஒரே சரத்தில்**

**கோர்க்கப்பட்ட**

**மணிகள்**

**போல!**



அவதார் மெஹர் பாபா